# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான
ஏழாவது சட்டமன்றப் பேரவையின்
நான்காவது கூட்டத்தொடர்

1982 பிப்ரவரி 12, 13, 15 மற்றும் 16 ஆம் நாட்கள்

(தொகுதி XXVIII - எண்கள் 1 முதல் 4 வரை)

©
தமிழ்நாடு அரசு
1983

சட்டமன்றப் பேரவைத் துறை
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600009.
விலை ரூ. 2]

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### நடவடிக்கைகளின் அட்டவணை.

---

### இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத் தொடர்.

---

*1982 பிப்ரவரி 12, 13, 15 & 16 ஆம் நாட்கள்*

*(தொகுதி 28 எண்கள் 1-4)*

உள்ளடக்கம்.


| | பக்கங்கள் |
|---|---|
| (i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | |
| (ii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் | |
| (iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பெயர் பட்டியல் (தொகுதிகள் உள்பட அகரவரிசையில்). | |
| **அரசினர் சட்ட முன்வடிவுகள்—** | |
| எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 | 181—191 |
| சென்னை பல்கலைக் கழக, அண்ணாமலைப் பல்கலைக் கழக, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 | 191—228 |
| தமிழ் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு, 1982 | 228—229 |
| பொது விற்பனை வரி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981 | 160—181 |
| **அரசினர் தீர்மானங்கள்—** | |
| "பால் கமிஷன்" அறிக்கை மீதும் அரசு எடுத்த நடவடிக்கை குறித்தும் விவாதம் | 42—91, 93—157 |
| விதி 31-ஐத் தளர்த்தல் | 43—44 |
| **அறிக்கை அளித்தல்—** | |
| மேட்டூர் கால்வாயிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் வழங்குவது | 159—160 |


D 7 A 230—1

| | பக்கங்கள் |
|---|---|
| **அறிவிப்பு—** | |
| தமிழ் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு, 1982 | 229 |
| **கவன ஈர்ப்புகள்—** | |
| சிமெண்ட் கிடைக்காமல் பலர் அல்லற்படுவது | 204—215 |
| தீப்பெட்டி தொழிற்சாலை தீ விபத்தில் ஆறு பேர்கள் இறந்துள்ளது | 196 |
| நீலகிரி மாவட்டக் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் நட்டத்தில் இயங்குவது | 151—156 |
| நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், கோ-ஆப்-டெக்ஸ் தொகை செலுத்தாமை, நெசவாளர்கள் பாதிப்பு | 37—40 |
| பேரளம் ஆதித்திராவிட மாணவர்கள் தங்கும் விடுதி | 41—42 |
| மருந்தியல் பட்ட மேற்படிப்பிற்கு (எம்.டி.) பட்டயப் படிப்புடையோரை மட்டுமே அனுமதிக்கும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு | 157—159 |
| **தகவல் கோரல்—** | |
| அமைச்சர்கள் பங்கேற்கிற நிகழ்ச்சிகளுக்கு அந்தந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்பெறுதல் | 147—151 |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் | 146—147 |
| காவிரி நீர்ப் பிரச்சினை | 93, 195 |
| தொகுதிகள் குறித்து | 36—37 |
| விருதுநகரில் எதிர்க்கட்சித் தலைவர் பேசயிருந்த கூட்டத்திற்கு அனுமதி அளிப்பது | 146—147 |
| பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 91, 157, 239, 264 |
| **வினாக்கள்—விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1—36 107—145, 159—195 |


## அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையைப் பயன்படுத்தும் முறை.

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப்பெறுகிறது. முக்கியத் தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப் பெறுகின்றன, துணைத் தலைப்புகள் முக்கியத் தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்க அச்சிடப்பெறுகின்றன.

வினாக்கள் தவிர, மற்ற நடவடிக்கைகளைக் குறித்த பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கியத் தலைப்பின் கீழ் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கத்தினை அடுத்து அடைப்புக்குள் அச்சிடப்பெறுகின்றன. எடுத்துக்காட்டாக, (தீ) என்று போடுவது தீர்மானத்தையும், (க.ஈ) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ.தீ) என்று போடுவது ஒத்திவைப்புத் தீர்மானத்தையும், (அ) என்று போடுவது அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பெற்றிராத பொருள் விளக்கம் வினாக்களைச் சுட்டும் எனினும், சட்ட முன்வடிவுகள், நிதி அலுவல்களைப் பொறுத்த வரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே அவற்றைத் தெளிவாக்கும்.

எல்லாச் சட்ட முன்வடிவுகளும் "சட்ட முன்வடிவு" என்ற முக்கியத் தலைப்பின் கீழ் அகர வரிசைப்படி முறைப்படுத்தப்பெறுகின்றன.

குழுக்கள், மன்றங்கள், வாரியங்கள், உள்ளாட்சிகள் போன்ற அமைப்புக்கள் அனைத்தும், 'குழு(க்கள்)', உள்ளாட்சிகள் ஆகிய முக்கியத் தலைப்புகளின் கீழ் தொகுக்கப் பெறுகின்றன.

கல்விக் கூடங்கள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலையங்கள் குறித்த பல்வேறு விரிந்த பொருள்களும், அத்தகைய முக்கியத் தலைப்புகளின் கீழேயே அகர வரிசைப்படி காட்டப்பெறுகின்றன.

பேரவை முன் வைக்கப்பெறுகின்ற ஏடுகளின் பக்கங்கள் இத்தலைப்பின் கீழ் கொடுக்கப்பெறுகின்றன.

தலைவர் மற்றும் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் "தலைவர்" என்ற தலைப்பின் கீழ் வரிசைப்படுத்தப் பெறுகின்றன.

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப்பெற்றுள்ள சில சுருக்கங்களின் விளக்கப் பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப்பெற்றுள்ளது :

| | | |
|---|---|---|
| அ. | .. | அறிக்கை |
| அறிவி. | .. | அறிவிப்பு |
| அ. வி. | .. | அரை மணி நேர விவாதம் |
| கு. வி. | .. | குறுகிய கால விவாதம் |
| பொ. வி. | .. | பொது விவாதம் |
| ஆ. உ. | .. | ஆளுநர் உரை |
| உ. பி. | .. | உரிமைப் பிரச்சினை |
| ஒ. பி. | .. | ஒழுங்குப் பிரச்சினை |
| க. ஈ. | .. | கவன ஈர்ப்பு |
| க. ஈ. அ. | .. | கவன ஈர்ப்பு அறிக்கை |
| ச அ. நி. | .. | சட்ட முன்வடிவின் அறிமுக நிலை |
| ச ஆ. நி. | .. | சட்ட முன் வடிவின் ஆய்வுநிலை— |

இந்நிலையில்,

1) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப் பெறும் தீர்மானம்.
2) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பவேண்டுமென்ற திருத்தம்.
3) சுற்றுக்கு அனுப்பப் பெறுவதற்கான திருத்தம்
4) ஆய்வு/கூட்டாய்வுக் குழு அறிவித்தபடி ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கான தீர்மானம்
5) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம் முதலியன.

| | | |
|---|---|---|
| ச பிரி. ஆ. | .. | சட்ட முன்வடிவு—பிரிவு வாரியாக ஆய்தல் |
| ச. பே. | .. | சட்டமன்றப் பேரவை |
| ச. மே. | .. | சட்டமன்ற மேலவை |
| த. கோ. | .. | தகவல் கோரல் |
| த. வி. | .. | தன்னிலை விளக்கம் |
| தீ. | .. | தீர்மானம் |
| உ. தீ. | .. | உரிமைத் தீர்மானம் |
| ஒ. தீ. | .. | ஒத்திவைப்புத் தீர்மானம் |
| த. தீ. | .. | தனித் தீர்மானம் |
| து. மா. கோ. | .. | துணை மானியக் கோரிக்கை |
| மி. மா. கோ. | .. | மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை |
| பே. அ. | .. | பேரவையின் அலுவல் |

## தமிழநாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. சாதிக் அலி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், திட்டம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப்பாகு கழிவு, தொல்பொருள் இயல்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)—நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன்வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின்துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகு கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் அமைச்சர்)—கிராம குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த்துறை அமைச்சர்)—வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு இராம எம். வீரப்பன் (செய்தி அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)—தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி, கைத்தறி.

8. மாண்புமிகு திரு. க. காளிமுத்து (வேளாண்மைத்துறை அமைச்சர்)-வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்,

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு-சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள் மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள், பதிவு கடன் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம்; கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம், பூமி தானம், கிராம தானம் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்)—தொழிலாளர் வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம். புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நகர அமைப்பு, இட வசதிக் கட்டுப்பாடு.

12, மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.—மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது (நீர்ப் பாசானத்துறை அமைச்சர்)—வேளாண்மைப் பணி, கூட்டுறவு சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், வஃபு.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி—(போக்குவரத்துத் துறை அமைச்சர்)—அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில் அமைச்சர்)—பெருந்தொழில்கள், சுரங்கங்கள், கனிப்பொருள்கள். நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன். கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர்)—கதர், மது அனுமதிச் சீட்டு வழங்கல் நீங்கலாக மது விலக்கு, பயண இசைவு சீட்டு. பொதுப்பணித் துறை மற்றும் பொதுப்பணித் துறை அலுவல்கள் சம்பந்தமாக.

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத்து அமைச்சர்)—அரிசன நலம், எழுது பொருள்-அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு. மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத்துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடைப் பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள். வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

*Governor of Tamil Nadu*

THIRU SADIQ ALI.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. HON. THIRU M.G. RAMACHANDRAN (Chief Minister)—Public, General Administration, Indian Administrative Service, Distric Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corrpution Planning, Molasses Archaeology. Publiec Works Department.

2. HON. Dr. V. R. NEDUNCHEZHIYAN (Minister for finance) Finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. HON THIRU. S. RAMACHANDRAN (Minister for Electricity)—Electricity, Iron and Steel Control.

4. HON. THIRU K. A. KRISHNASAMY (Minister for Rural Industries) – Rural Industries including Village, Cottage and Smal Industries, Milk, Dairy Development, Registration. and Stamp Act.

5. HON. THIRU S. D. SOMASUNDARAM (Minister for Revenu, —Revenue, Commercial Taxes, Excise and Census.

6. HON. THIRU R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)— Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchonal and Grant of Liquor Permits.

7. HON. THIRU C. ARANGANAYAGAM (Minister for Education)—Education including Technical Education Official language. and Handloom.

8. HON. THIRU K. KALIMUTHU (Minister for Agriculture)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. HON. THIRU C. PONNAIYAN (Minister for Co-operation and Law)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Deb. Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. Hon. Thiru P. KULANDAIVELU (Minister for Local Administration) — Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. Hon. Thiru S. RAGHAVANANDHAM (Minister for Labour)—Labour, Housing Slum-Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation control.

12. Hon. Dr H. V. HANDE (Minister for Health)—Health.

13. Hon. Thiru K. RAJA MOHAMMED (Minister for Irrigation)—Agro-Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. Hon. Thiru S. THIRUNAVUKKARASU (Minister for Industries)—Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. Hon. Thiru S. N. RAJENDRAN (Minister for Public Works and Khadi)- Handlooms, Khadi, Prohibition excluding grant of Liquor Permit, Passports., public works Department and Establishment Matters relating to public works Dapartmen .

17. Hon. Thiru. M. VIJAYASARATHI (Minister for Adi Dravidar Welfare)—Adi Dravidar Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Traning.

18. Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare)—Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas Refugees and Evacuees and Correctional Administration.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர்

* மாண்புமிகு திரு. க. இராசாராம்.

பேரவைத் துணைத் தலைவர்

* மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. திரு. வி. பி. பாலசுப்பிரமணியம்,
2. திரு. ப. வெங்கட சுப்பிரமணியம்,
3. திரு. துரைமுருகன்,
4. திரு. இல. பலராமன்,

சட்டமன்றப் பேரவை செயலாளர்

திரு. கி. மு. அழகர்சாமி, பி. ஏ., பி. எல்.

துணைச் செயலாளர்கள்

திரு. த. இராதாகிருஷ்ணன்,

திரு. இரா. பாலகுரு, பி. ஏ.,

திரு. பி. எம். பத்மநாபன் நம்பியார், பி. ஏ., பி. ஜி. எல்.,

குழு அலுவலர்.

திரு. சு. சீனிவாசன், பி. எஸ். சி.

சார்புச் செயலாளர்கள்

திரு. வி. சீதாராமன். பி. காம்.,

திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி. ஏ, பி. எல்.,

திரு. செ. சு. ஜானகிராமன், பி. ஏ., பி. எல்.,

திரு. பெ. பாலகிருஷ்ணன், பி. காம்.,

திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி. ஏ.,

திரு. டி. எஸ். துளசிராம் (எஸ்டேட் அதிகாரி).

பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்

திரு. பி. கோதண்டராமன்

தலைமை நிருபர்

திரு. மா. சந்திரசேகரன்

விவாதப் பதிப்பாளர்

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி. லிட்.

* [illegible]–6–1980 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.

2–2–1982 அன்று நியமனம் செய்யப் பெற்றார்கள்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண் | உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 1 | அங்குசாமி, திரு. ச. | திருவாடானை |
| 2 | அண்ணாதாசன், திரு. எம். | திருவரும்பூர் |
| 3 | அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 4 | அப்பாதுரை, திரு. மு. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 5 | அம்பிகாபதி, திரு. மு. | மன்னார்குடி |
| 6 | அரங்கநாதன், திரு. எஸ், | தர்மபுரி |
| 7 | அரங்கநாதன், திரு. மு. | கூனூர் (செ.வ.) |
| 8 | அரங்கநாயகம், திரு. செ. | கோவை (மேற்கு; |
| 9 | அரங்கராசன், திரு. வெ. | உப்பிலியாபுரம் |
| 10 | அருணகிரி, திரு. இரா. | திருப்பத்தூர் |
| 11 | அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ.) |
| 12 | அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி |
| 13 | அன்பழகன், திரு. க. | புரசைவாக்கம் |
| 14 | அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 15 | அன்பில் தர்மலிங்கம், திரு. | லால்குடி |
| 16 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 17 | ஆண்டித்தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 18 | ஆறுமுகம், திரு. எம். | அவினாசி (செ. வ) |
| 19 | சேலம் ஆறுமுகம், திரு. மு. | சேலம்-2 |
| 20 | ஆறுமுகம், திரு. த. | அரியலூர் |
| 21 | ஆனூர் ஜெகதீசன், திரு. பு. கோ. | செங்கல்பட்டு |
| 22 | இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 23 | இராசகுமார், திரு. மெ. அ. | மருங்காபுரி |
| 24 | இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம் |
| 25 | இராசரத்தினம், திரு. து. | பூந்தமல்லி |
| 26 | இராசாம்பாள், திருமதி, தா. | தலைவாசல் (செ.வ.) |
| 27 | இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 28 | இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம் |



| தொடர் எண் | உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 29 | இராசு, திரு. ஜே. எஸ். | பெரம்பலூர் (செ.வ.) |
| 30 | இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி |
| 31 | இராமச்சந்திரன், திரு. எம். ஜி. | மதுரை (மேற்கு) |
| 32 | இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 33 | இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி |
| 34 | இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந. | செஞ்சி |
| 35 | இராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 36 | இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம் |
| 37 | இராமசுப்பிரமணியன், திரு. இ. | ஸ்ரீ வைகுண்டம் |
| 38 | இராமலிங்கம், திரு. ஏ. | காட்டுமன்னார் (செ.வ.) |
| 39 | இராமலிங்கம், டாக்டர். கே. பி. | இராசிபுரம் |
| 40 | இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர் |
| 41 | இராஜசேகரன், திரு. வெ. | இராதாகிருஷ்ணநகர் |
| 42 | இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி |
| 43 | இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | ஆண்டிப்பட்டி |
| 44 | இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ.வ) |
| 45 | ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம் |
| 46 | உகம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தகம் |
| 47 | உச்சி, திரு. கே. | கூடலூர் |
| 48 | உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 49 | உமாநாத், திரு. ரா. | நாகை |
| 50 | கண்ணன், திரு. ம. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 51 | கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 52 | கணேசன், திரு. இ. | இடப்பாடி |

| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர் |
|---|---|---|
| | (1) | (2) |
| 53 | கணேசன், திரு. சி. .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 54 | கந்தசாமி, திரு. கா. வே. .. | கிணத்துக்கடவு |
| 55 | கந்தசாமி. திரு. பி. .. | பொங்கலூர் |
| 56 | கபாலி, திரு. டி. கே. .. | மைலாப்பூர் |
| 57 | கருணாநிதி, டாக்டர், மு. .. | அண்ணாநகர் |
| 58 | கருப்பசாமிப் பாண்டியன், திரு. வி. .. | பாளையங்கோட்டை |
| 59 | கருப்பையா, திரு. இரா. .. | குளித்தலை |
| 60 | கருப்பையா, திரு. ஏ. டி. .. | வால்பாறை |
| 61 | கல்லன், திரு. கே. .. | உதகமண்டலம் |
| 62 | கலிதீர்த்தான், திரு. சோ. .. | சங்கராபுரம் |
| 63 | கலியமூர்த்தி, திரு. பெ. .. | மங்களூர் (செ. வ.) |
| 64 | நன்னிலம் கலையரசன், திரு. அ .. | நன்னிலம் (செ.வ.) |
| 65 | காளிமுத்து, திரு. கா .. | திருப்பரங்குன்றம் |
| 66 | கிட்டப்பா, திரு. என். .. | மாயவரம் |
| 67 | கிருஷ்ணசாமி, திரு. கா. கோ... | காங்கேயம் |
| 68 | கிருஷ்ணசாமி திரு கே. ஏ. .. | ஆயிரம்விளக்கு |
| 69 | கிருஷ்ணமூர்த்தி. திரு சா. .. | ஆண்டிமடம் |
| 70 | கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. | நெல்லிக்குப்பம் |
| 71 | கிருஷ்ணராஜ், திரு. ஜி. .. | சேலம்-1 |
| 72 | கிருஷ்ணன், திரு. ரா. .. | வாசுதேவநல்லூர் |
| 73 | குப்புசாமி, திரு என். .. | மொரப்பூர் |
| 74 | குப்புசாமி, திரு. கே. .. | ஓட்டன்சத்திரம் |
| 75 | குப்புசாமி, திரு. செ. .. | வந்தவாசி (செ.வ.) |
| 76 | குமரி அனந்தன், திரு. .. | திருவொற்றியூர் |
| 77 | குருசாமி, திரு. ப. .. | அந்தியூர் (செ.வ.) |
| 78 | குலசேகர், திரு. ஏ. டி. .. | சிங்காநல்லூர் |
| 79 | குலசேகரப் பாண்டியன், திரு. ந. .. | வாணியம்பாடி |
| 80 | குழந்தைவேலு, திரு. ப. .. | உடுமலைப்பேட்டை |
| 81 | கேசவ ஆதித்தன், திரு. சி. .. | திருச்செந்தூர் |
| 82 | கோபால், திரு. சி. .. | சோளிங்கர் |
| 83 | கோபால்கிருஷ்ணன், திரு. கா... | பெரியகுளம் |
| 84 | கோபாலன், திரு. ஆர். டி. .. | கம்பம் |
| 85 | கோமதி சீனிவாசன், திருமதி... | வலங்கை (செ. வ.) |
| 86 | கோவேந்தன், திரு. எம். ஆர்... | பேராவூரணி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 87 கோவைத்தம்பி, திரு. | .. | பேரூர் |
| 88 சக்கரபாணி, திரு. ஆர். | .. | பொன்னேரி |
| 89 சங்கரய்யா, திரு. என். | .. | மதுரை (கிழக்கு) |
| 90 சட்டநாத கரையாளர், திரு. கி. | .. | தென்காசி |
| 91 சண்முகம், திரு. இரா. | .. | திருத்தணி |
| 92 சண்முகம், திரு. ஏ. சி. | .. | ஆரணி |
| 93 சத்தியமூர்த்தி, திரு. வ. | .. | கடலாடி |
| 94 சந்திரசேகரன், திரு. ஏ. | .. | சோழவந்தான் |
| 95 சபாபதி, திரு. சி. | .. | அரூர் (செ. வ.) |
| 96. சமரசம், டாக்டர். கே. | .. | காவேரிப்பட்டணம் |
| 97 சாகுல் ஹமீது, திரு. ஏ. | .. | கடையநல்லூர் |
| 98 சாமிக்கண்ணு, திரு. தா. | .. | செங்கம் |
| 99 சித்தன், திரு. என். எஸ். வீ. | .. | திருமங்கலம் |
| 100 சிதம்பரம், திரு. சி. த. | .. | காரைக்குடி |
| 101 சிவசாமி, திரு. செ. | .. | இளையான்குடி |
| 102 சிவஞானம், திரு. ந. | .. | திருவோணம் |
| 103 சிவப்பிரகாசம், திரு. சீ. | .. | சேந்தமங்கலம் (செ.வ.) |
| 104 சிவபெருமான், திரு. மு. | .. | ஓமலூர் |
| 105 சிவராமன், திரு. எ எஸ். | .. | சின்னசேலம் |
| 106 சின்னசாமி, திரு எம். | .. | கரூர் |
| 107 சின்னதுரை, திரு ஏ. | . | மேல்மலையனூர் |
| 108 சின்னராசு, திரு. க. இரா. | .. | கிருஷ்ணகிரி |
| 109 சின்னராசு, திரு. மா. | .. | தொண்டாமுத்தூர் |
| 110 சுந்தரம், திரு. கே. ஆர். | .. | குடியாத்தம் |
| 111 சுந்தரம், திரு. ப. | .. | திருப்பத்தூர் |
| 112 சுந்தரம், திரு. மு. | .. | ரிஷிவந்தியம் |
| 113 சுந்தரமூர்த்தி, திரு. ஆர். | .. | முகையூர் |
| 114 சுந்தரராஜ், திரு. நா. | .. | திருமயம் |
| 115 சுந்தரராஜன், திரு. மு. | : | விருதுநகர் |
| 116 சுப்பிரமணியன், திரு. உ. | .. | சிவகங்கை |
| 117 சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். | .. | போடிநாயக்கனூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 118 | சுப்பிரமணியன், திரு. மா. .. | திருவையாறு |
| 119 | சுப்பிரமணியன், திரு. வி. .. | திருநாவலூர் |
| 120 | சுப்பிரமணியன், திரு. ஜி. கே. .. | பவானிசாகர் |
| 121 | சுவாமிநாதன், திரு. வி. வி. .. | புவனகிரி |
| 122 | செங்கோட்டையன், திரு. கு. அ. .. | கோபிச்செட்டிப் பாளையம். |
| 123 | செம்மலை, திரு. செ. .. | தாரமங்கலம் |
| 124 | செல்லமுத்து, திரு. எம். .. | திருவாரூர் (செ.வ.) |
| 125 | செல்வராசன், திரு. அ. .. | துறைமுகம் |
| 126 | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. .. | அரவக்குறிச்சி |
| 127 | சேதுராமன், திரு. ஏ. எம். .. | ஆற்காடு |
| 128 | சொக்கலிங்கம், திரு. கே. .. | திருப்போரூர் |
| 129 | சோமசுந்தரம், திரு. எஸ். டி. .. | பட்டுக்கோட்டை |
| 130 | சோமு, திரு. என். வி. என். .. | பூங்கா நகர் |
| 131 | சௌந்திரராசன், திரு. கே. .. | திருச்சி—2 |
| 132 | டாக்டர் சௌரிராஜன், திரு. கே. .. | தி. நகர் |
| 133 | தங்கமணி கவுண்டர், திரு. கே. எம். .. | திண்டிவனம் |
| 134 | தங்கராசு, திரு. ஏ. .. | குறிஞ்சிப்பாடி |
| 135 | தங்கவேல்ராஜ், திரு. பி. எம். .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 136 | தங்கவேலு, திரு. பி. .. | செயங்கொண்டான் |
| 137 | தவசி, திரு. ஆர். .. | பரமக்குடி (செ.வ.) |
| 138 | தனபால், திரு. ப. .. | சங்கரி (செ.வ.) |
| 139 | தனுக்கோடித் தேவர், திரு. கே. .. | முதுகளத்தூர் |
| 140 | தாமரைக்கனி, திரு. இரா. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 141 | தியாகராசன், திரு. ஆர். .. | விருத்தாசலம் |
| 142 | திருச்சி சௌந்திரராசன், திரு. ஆர். .. | ஸ்ரீரங்கம் |
| 143 | திருநாவுக்கரசு, திரு. எஸ். .. | அறந்தாங்கி |
| 144 | திருமாறன், திரு. பெ. .. | ஆலங்குடி |
| 145 | திருமான், திரு. இரா. .. | ஏற்காடு (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 146 | திருவேங்கடம், திரு. பெ. சு. .. | கலசப்பாக்கம் |
| 147 | தீர்த்தராமன், திரு. ப. .. | பென்னகரம் |
| 148 | துரைசாமி, திரு. பி. எஸ். .. | பர்கூர் |
| 149 | துரைமுருகன், திரு. .. | ராணிப்பேட்டை |
| 150 | துரை ராமசாமி, திரு. .. | வெள்ளக்கோவில் |
| 151 | துரைராஜ், திரு. பி. .. | சங்கரநாயினார் கோவில் (செ.வ |
| 152 | தேவராஜ், திரு. வி. எம். .. | வேலூர் |
| 153 | நடராசன். திரு. எஸ். .. | தஞ்சாவூர் |
| 154 | நரசிம்மன், திரு. பூ. மு. .. | பள்ளிப்பட்டு |
| 155 | நல்லப்பன், திரு. தி. கா. .. | பெருந்துறை |
| 156 | நவநீத கிருஷ்ண பாண்டியன், திரு. .. | ஆலங்குளம் |
| 157 | நாச்சிமுத்து, திரு. கே. பி. .. | மேட்டூர் |
| 158 | நாராயணசாமி, திரு. கே. .. | திருவண்ணாமலை |
| 159 | நாராயணன், திரு. பி. ஜி. .. | பவானி |
| 160 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. .. | திருநெல்வேலி |
| 161 | நெடுமாறன், திரு. ப. .. | மதுரை (மத்திய) |
| 162 | பக்கீர் முகம்மது, திரு. இ. எஸ். எம். .. | கும்பகோணம் |
| 163 | பட்டாபிராமன், திரு. செ. .. | திருவள்ளூர் |
| 164 | பம்மல் நல்லதம்பி. திரு. .. | தாம்பரம் |
| 165 | பரமசிவ கவுண்டர், திரு. பி. என். .. | பல்லடம் |
| 166 | பலராமன், திரு. இல. .. | போளூர் |
| 167 | பழனிசாமி, திரு. சு. .. | மேட்டுப்பாளையம் |
| 168 | பழனிமுத்து, திரு. சி. .. | ஆத்தூர் |
| 169 | பழனியப்பன், திரு. கு. ப. .. | விழுப்புரம் |
| 170 | பழனிவேல், திரு. என். .. | பழனி (செ.வ.) |
| 171 | பாண்டியன். திரு. பி. எச். .. | சேரன்மாதேவி |
| 172 | பாபு கோவிந்தராஜன், திரு. .. | கடலூர் |
| 173 | பாபு ஜனார்த்தனன், திரு. .. | செய்யாறு |
| 174 | பாரமலை, திரு. க. .. | மானாமதுரை (செ.வ.). |
| 175 | பாலகிருஷ்ணன், திரு. ச. .. | மொடக்குறிச்சி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 118 | சுப்பிரமணியன், திரு. மா. | திருவையாறு |
| 119 | சுப்பிரமணியன், திரு. வி. | திருநாவலூர் |
| 120 | சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர் |
| 121 | சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |
| 122 | செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டிப் பாளையம். |
| 123 | செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 124 | செல்லமுத்து, திரு. எம். | திருவாரூர் (செ.வ.) |
| 125 | செல்வராசன், திரு. அ. | துறைமுகம் |
| 126 | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. | அரவக்குறிச்சி |
| 127 | சேதுராமன், திரு. ஏ. எம். | ஆற்காடு |
| 128 | சொக்கலிங்கம், திரு. கே. | திருப்போரூர் |
| 129 | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை |
| 130 | சோமு, திரு. என். வி. என். | பூங்கா நகர் |
| 131 | சௌந்திரராசன், திரு. கே. | திருச்சி—2 |
| 132 | டாக்டர் சௌரிராஜன், திரு. கே. | தி. நகர் |
| 133 | தங் மணி கவுண்டர், திரு. கே. எம். | திண்டிவனம் |
| 134 | தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிபபாடி |
| 135 | தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 136 | தங்கவேலு, திரு. பி. | செயங்கொண்டான் |
| 137 | தவசி, திரு. ஆர். | பரமக்குடி (செ.வ.) |
| 138 | தனபால், திரு. ப. | சங்கரி (செ.வ.) |
| 139 | தனுக்கோடித் தேவர், திரு. கே. | முதுகளத்தூர் |
| 140 | தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 141 | தியாகராசன், திரு. ஆர். | விருத்தாசலம் |
| 142 | திருச்சி சௌந்திரராசன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம் |
| 143 | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 144 | திருமாறன், திரு. பெ. | ஆலங்குடி |
| 145 | திருமான், திரு. இரா. | ஏற்காடு (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 146 | திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம் |
| 147 | தீர்த்தராமன், திரு. ப. | பென்னகரம் |
| 148 | துரைசாமி, திரு. பி. எஸ். | பர்கூர் |
| 149 | துரைமுருகன், திரு. | ராணிப்பேட்டை |
| 150 | துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 151 | துரைராஜ், திரு. பி. | சங்கரநாயினார் கோவில் (செ.வ.) |
| 152 | தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 153 | நடராசன். திரு. எஸ். | தஞ்சாவூர் |
| 154 | நரசிம்மன், திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 155 | நல்லப்பன், திரு. தி. கா. | பெருந்துறை |
| 156 | நவநீத கிருஷ்ண பாண்டியன், திரு. | ஆலங்குளம் |
| 157 | நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர் |
| 158 | நாராயணசாமி, திரு. கே. | திருவண்ணாமலை |
| 159 | நாராயணன், திரு. பி. ஜி. | பவானி |
| 160 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | திருநெல்வேலி |
| 161 | நெடுமாறன், திரு. ப. | மதுரை (மத்திய) |
| 162 | பக்கீர் முகம்மது, திரு. இ. எஸ். எம். | கும்பகோணம் |
| 163 | பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 164 | பம்மல் நல்லதம்பி. திரு. | தாம்பரம் |
| 165 | பரமசிவ கவுண்டர், திரு. பி. என். | பல்லடம் |
| 166 | பலராமன், திரு. இல. | போளூர் |
| 167 | பழனிசாமி, திரு. சு. | மேட்டுப்பாளையம் |
| 168 | பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர் |
| 169 | பழனியப்பன், திரு. கு. ப. | விழுப்புரம் |
| 170 | பழனிவேல், திரு. என். | பழனி (செ.வ.) |
| 171 | பாண்டியன். திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 172 | பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர் |
| 173 | பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு |
| 174 | பார்மலை, திரு. க. | மானாமதுரை (செ.வ.). |
| 175 | பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 176 | பாலகிருஷ்ணன், திரு. வி. .. | சிவகாசி |
| 177 | பாலசுப்பிரமணியன், திரு. க. .. | சீர்காழி (செ.வ.) |
| 178 | வேடசந்தூர் பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. .. | வேடசந்தூர் |
| 179 | பாலன். திரு. சு. .. | பெரம்பூர் (செ.வ.) |
| 180 | பாலுச்சாமி, திரு. ஏ. .. | சமயநல்லூர் (செ.வ.) |
| 181 | பிச்சை, திரு. எம். .. | அருப்புக்கோட்டை |
| 182 | பிரபாகரன், திரு. ஜே. சி. டி. .. | வில்லிவாக்கம் |
| 183 | புருஷோத்தமன், திரு. து. .. | சைதாப்பேட்டை |
| 184 | பூங்காவனம், திரு. என். ஏ. .. | காட்பாடி |
| 185 | பெரியசாமி, திரு. ஏ. .. | தாராபுரம் (செ.வ.) |
| 186 | பெரியசாமி, திரு. ரா. .. | தொட்டியம் (செ.வ.) |
| 187 | பெருமாள், திரு. என். .. | வரகூர் (செ.வ.) |
| 188 | பெருமாள், திரு. ரா. கு. .. | விளாத்திகுளம் |
| 189 | பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். .. | நிலக்கோட்டை (செ.வ.). |
| 190 | பொன்னுரங்கம், திரு. ப. .. | ராயபுரம் |
| 191 | பொன்னையன், திரு. சி. .. | திருச்செங்கோடு |
| 192 | மணி, திரு. டி. .. | விளவங்கோடு |
| 193 | மணிமாறன், திரு. ஆர். .. | திருப்பூர் |
| 194 | மாணிக்கம், திரு. எம். எஸ். .. | வேதாரண்யம் |
| 195 | மாரிமுத்து, திரு. த. .. | குளத்தூர் (செ.வ.) |
| 196 | முகம்மது இஸ்மாயில், திரு. பீ. .. | பத்மநாபபுரம் |
| 197 | முசிறிப்புத்தன், திரு. பி. .. | திருச்சி-1 |
| 198 | முத்துகிருஷ்ணன், திரு. சு. .. | கன்னியாகுமரி |
| 199 | முத்துசாமி, திரு. சு. .. | ஈரோடு |
| 200 | முத்துராமலிங்கம், திரு. இ. .. | ராதாபுரம் |
| 201 | முத்துவேல், திரு. என். .. | வானூர் (செ. வ.) |
| 202 | முத்தையா, திரு. இரா. .. | சேடப்பட்டி |
| 203 | முனிரத்தினம், திரு. இரா. சா. .. | கும்மிடிபூண்டி |
| 204 | முனுசாமி, திரு. மு. ப. .. | பாலக்கோடு |
| 205 | மூர்த்தி, திரு. ஜீ. .. | பேரணாம்பட்டு (செ.வ.). |
| 206 | மொக்கையன், திரு. பி. .. | ராஜபாளையம் (செ.வ.). |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயர். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 207 | யசோதா, திருமதி டி. .. | ஸ்ரீ பெரும்புதூர் |
| 208 | ரகுமான்கான், திரு. அ. .. | சேப்பாக்கம் |
| 209 | ரங்கசாமி, திரு. ஆர். .. | சத்தியமங்கலம் |
| 210 | ரங்கசாமி, திரு. க. .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.). |
| 211 | ரமணி, திரு. கு. .. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 212 | ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டைமான் திரு. .. | புதுக்கோட்டை |
| 213 | ராஜமாணிக்கம், திரு. எம். கே. .. | முசிறி |
| 214 | ரெத்தினராஜ், திரு. எஸ். .. | குளச்சல் |
| 215 | வரதராஜன், திரு. என். .. | திண்டுக்கல் |
| 216 | விசயலட்சுமி, செல்வி வி. .. | வீரபாண்டி |
| 217 | வின்செண்ட், திரு. மி. .. | நாகர்கோவில் |
| 218 | விஜயசாரதி, திரு. எம். .. | அரக்கோணம் (செ.வ.) |
| 219 | விஜயபாலன், திரு. என். .. | பூம்புகார் |
| 220 | விஜயராகவன், திரு. பொ. .. | கிள்ளியூர் |
| 221 | விஸ்வநாதன், திரு. கோ. .. | அணைக்கட்டு |
| 222 | வீராசாமி, திரு. த. .. | ஒரத்தநாடு |
| 223 | வீராணம்பலம், திரு. க. வெ. .. | மேலூர் |
| 224 | வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. .. | காஞ்சி |
| 225 | வெங்கடரெட்டி, திரு. டி. .. | ஓசூர் |
| 226 | வெங்கடேசன். திரு. பி. எம். .. | பெரணமல்லூர் |
| 227 | வெள்ளைச்சாமி, திரு. அ. .. | ஆத்தூர் |
| 228 | வேணுகோபால், திரு. த. .. | தண்டராம்பட்டு |
| 229 | வேலப்பன், திரு. சி. வி. .. | கபிலர்மலை |
| 230 | ஜகத்ரட்சகன், திரு. எஸ். .. | உத்திரமேரூர் |
| 231 | ஜான் வின்செண்ட், திரு மு. .. | நாங்குனேரி |
| 232 | ஜெயராமன், திரு. வே. இரா. .. | தேனி |
| 23 | ஹாஜா செரீப், திரு. கே. எஸ். ஜி. .. | திருவல்லிக்கேணி |
| 234 | ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. | திருவட்டார் |
| 235 | மார்க்ரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி. .. | நியமன உறுப்பினர் |

### பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்—அமைச்சர்.
2. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்.
3. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்.
4. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது—அமைச்சர்.
5. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

## நடவடிக்கைகளின் அட்டவணை.

---

### இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத்தொடர்.

---

1982 பிப்ரவரி 12, 13, 15 & 16 ஆம் நாட்கள்
(தொகுதி 2 8 எண்கள் 1-4)

பக்கங்கள்

### அ


**அப்பாதுரை திரு. மு.—**

ஐ.டி.ஐ மாணவர்களுக்கு தமிழில் வினாத்தாள் வழங்குதல் — 193—194

சென்னைப் பல்கலைக் கழக, அண்ணாமலைப் பல்கலைக்கழக பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழக (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1982 — 218—220

'பால் கமிஷன்' அறிக்கை மீதும் அரசு எடுத்த நடவடிக்கை குறித்தும் விவாதம் (தீ) — 44—50

**அம்பிகாபதி, திரு. மு.—**

காவிரி நீர்ப் பிரச்சினை (த.கோ.) — 195

தஞ்சை இ.எஸ்.ஐ. மருத்துவமனை, சொந்தக் கட்டிடம் மற்றும் அலுவலர் குடியிருப்பு கட்டுதல் — 31

**அரங்கநாதன், திரு. மு.—**

கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள், நீலகிரி மாவட்டம், சிறு விவசாயிகள் நிலைமை (க.ஈ.) — 151—156

**அ—தொடர்ச்சி.**


| | பக்கங்கள் |
|---|---|
| **அரங்கநாயகம், திரு. செ.—** | |
| சென்னைப் பல்கலைக் கழக, அண்ணாமலைப் பல்கலைக் கழக, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழக (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1982 | 191,192,203 204,205, 222—228 |
| தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு, 1982 | 228 |
| நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், கோ-ஆப்டெக்ஸ் தொகை செலுத்தாமை, நெசவாளர்கள் பாதிப்பு (க.ஈ.அ.) | 37—40 |
| **அரசினர் தீர்மானங்கள்—** | |
| 'பால் கமிஷன்' அறிக்கை மீதும் அரசு எடுத்த நடவடிக்கை குறித்தும் விவாதம் | 42—61, 98—157 |
| "முருகேசன் கமிஷன்" பரிந்துரைகள் மீதும் அரசு எடுத்த நடவடிக்கை குறித்தும் விவாதம் | 214—264 |
| விதி 31-ஐத் தளர்த்தல் | 43—44 |
| **அலுவலர்கள்—** | |
| ஒன்றியப் பணியாளர்கள் 1974-க்கு முன் ஓய்வுபெற்றவர்கள் ஓய்வூதியம் | 131—133 |
| பொதுப்பணித்துறை அமைச்சுப் பணியாளர்கள், பதவி உயர்வு | 143 |
| **அழகர்சாமி, திரு. சோ.—** | |
| தீப்பெட்டித் தொழிற்சாலையில் தீ விபத்தினால் ஆறு பேர்கள் இறந்தது குறித்து (க.ஈ.) | 196,200 |




**அ—தொடர்ச்சி.**


| | பக்கங்கள் |
|---|---|
| **அன்பழகன், திரு. க.—** | |
| அமைச்சர்கள் கலந்து கொள்ளும் பொது நிகழ்ச்சிகளில் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு (ஒ.பி.) | 149,150 |
| **அன்பழகன் திரு. தி.—** | |
| தெரு விளக்குகள், பியூஸ் யூனிட் | 110—113 |
| **ஆட்சிமொழி—** | |
| அரசு அலுவலகங்கள், தமிழில் அலுவல்கள் | 11—14 |


**ஆ**


| | |
|---|---|
| **ஆண்டி அம்பலம், திரு. மெ.—** | |
| தென்னை வளர்ப்பு | 125—127 |
| மலைப்பகுதி மீன்காட்சிசாலை, அரும் பொருட்காட்சி நிலையம், மத்திய அரசு உதவி | 1—3 |
| **ஆண்டித்தேவர், திரு. எஸ்.—** | |
| அரசின் பல அலுவலகங்களின் எழுத்தர்களுக்கு சப்-மாஜிஸ்ட்ரேட்டுகளாக நியமிப்பதில் சிறப்புக் காரணம் குறித்து | 22—24 |
| பால்கமிஷன் அறிக்கை மீதும், அரசு எடுத்த நடவடிக்கை குறித்தும் விவாதம் (தீ) | 94—96 |
| பொதுப்பணித் துறை அமைச்சுப் பணியாளர்கள், பதவி உயர்வு | 143 |
| **ஆதிதிராவிடர் நலன்—** | |
| தஞ்சை, பேரளம் ஆதி திராவிட மாணவர்கள் விடுதி சுகாதார நிலை | 41—42 |
| ...டாளம் கிராமம், பழங்குடியினருக்குக் கொடுத்த வீடுகள் | 34—36 |
| பண்டாரத்தார் சமூகம், தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க கோரிக்கை | 33—34 |

பக்கங்கள்

**ஆதி திராவிடர் நலன்—தொடர்ச்சி.**

பள்ளப்பாளையம் குடியிருப்புகள், தீ விபத்து — 94—198

**ஆறுமுகம், திரு. எம்.—**

தீப்பெட்டித் தொழிற்சாலையில் தீ விபத்தினால் ஆறுபேர்கள் இறந்தது குறித்து (க.ஈ) — 196,202—203

தொழிலாளி வேலை நேரத்தில் விபத்தில் மாண்டால் குடும்பத்திற்கு உதவி — 28—30

## இ

**இயற்கைச் சீற்றங்கள்—**

தீப்பெட்டித் தொழிற்சாலையில் தீ விபத்தினால் ஆறுபேர்கள் இறந்தது குறித்து (க.ஈ) — 196—204

**இராகவானந்தம், திரு. எஸ்.—**

'பால் கமிஷன்' அறிக்கை மீதும் அரசு எடுத்த நடவடிக்கை குறித்தும் விவாதம் (தீ) — 89

**இராசகுமார், திரு. மே. அ.—**

மருங்காபுரி தொகுதி, சாலைப் பராமரிப்பு — 128—130

**இராசாம்பாள், திருமதி தா—**

ஏழைகளுக்கு வழங்கப்படும் இலவச சட்ட உதவி — 177—178

**இராசாராமன், திரு. எஸ்.—**

சணல் சாகுபடி — 125

சமஸ்கிருதம் பயில வசதிகள் வழங்குவது — 172

சென்னை வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள், வாடகை உயர்வு — 81



பக்கங்கள்

**இராமச்சந்திரன், திரு. எம். ஜி.—**

'பால் கமிஷன்' அறிக்கை மீதும் அரசு எடுத்த நடவடிக்கை குறித்து விவாதம் (தீ) — 137, 156—157

விதி 31-ஐத் தளர்த்தல், (தீ.) — 43—44

**இராமலிங்கம், திரு. செ.—**

தஞ்சை, போளம் ஆதி திராவிடர் மாணவர்கள் விடுதி, சுகாதார நிலை — 41—42

மாமேறும் தொழிலாளர் குடும்பங்களுக்கு நிவாரணம் — 164—166

**இராஜா முகமது, திரு. கே.—**

பாசனத்திற்கு தண்ணீர் விடுதல், (அ.) — 159—160

**இளையபெருமாள், திரு. எல்.—**

சென்னைப் பல்கலைக் கழக, அண்ணாமலைப் பல்கலைக் கழக, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 — 220,221

பொது விற்பனை வரி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981 — 165—166

## ஈ

**ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.—**

எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 — 186

சிமெண்ட் கிடைக்காததால் ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து (க.ஈ.) — 204,210—211

தமிழக அரவை ஆலைகள், மத்திய அரசின் கோதுமை ஒதுக்கீடு — 6—9

தமிழகத்தில் திறந்த வெளிச் சிறைச் சாலைகள் ஆரம்பிப்பது — 172—176

## உ

**உகம்சந்த், திரு. எஸ். டி.—**

படாளம் கிராமம், மதுராந்தகம் வட்டம், பழங்குடியினருக்குக் கொடுத்த வீடுகள் 34—36

**உணவு தானியங்கள்—**

அரவை ஆலைகள், மத்திய அரசின் கோதுமை ஒதுக்கீடு 6—8

**உணவுப்பொருள்கள்—**

அரிசி கொள்முதல் அளவு, 1981—82 3—6

உப்பு உற்பத்தி 187—189

**உத்திராபதி, திரு. பொ.—**

தீப்பெட்டித் தொழிற்சாலையில் தீ விபத்தினால் ஆறு பேர்கள் இறந்தது குறித்து (க.ஈ.) 196, 202

தொழிலாளி வேலை நேரத்தில் விபத்தில் மாண்டால் குடும்பத்திற்கு உதவி 28—30

**உம்ராநாத், திரு. ரா.—**

சிமெண்ட் கிடைக்காததால் ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து (க.ஈ.) 204, 212

சென்னை பல்கலைக் கழக, அண்ணாமலைப் பல்கலைக் கழக, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 201, 206—211

முகவை மாவட்டம், திருப்பத்தூர் அர்பன் கோவாப்பரேட்டிவ் பாங்க், விவரம் 24—25

'முருகேசன் கமிஷன்' பரிந்துரை மீது அரசு நடவடிக்கைப் பற்றி விவாதம் (தீ.) 214—225

**உள்ளாட்சிகள்—**

பெருந்துறை, கருமாண்டி, செல்லிபாளையம் பேரூராட்சிகள், நகராட்சியாக்குதல் 183—184

**ஏடுகள்—**

பேரவை முன் வைக்கப்பெற்றவை 91, 254, 229, 157

## க

**கணபதி, திரு. கே. ஆர்.—**

தென்னாற்காடு மாவட்டம், பெயர் மாற்றம் 11

**கணேசன், திரு. இ—**

மிருகக்காட்சிசாலை, வண்டலூருக்கு மாற்றுதல் 117—120

**கருணாநிதி, டாக்டர் மு.—**

பால் கமிஷன் அறிக்கை மீதும், அரசு எடுத்த நடவடிக்கை குறித்தும் விவாதம் (தீ.) 106—124

**கருப்பையா, திரு. இரா—**

தீப்பெட்டித் தொழிற்சாலையில் தீவிபத்தினால் ஆறுபேர்கள் இறந்தது குறித்து (க.ஈ) 196,201

பொது விற்பனை வரி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981 163—173,178

'முருகேசன் கமிஷன்' பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றி விவாதம் (தீ.) 239—240

**கருப்பையா, திரு. ஏ. நு—**

தொழிலாளர்களின் வைப்பு நிதித் தொகை, விவரம் 31—33

**கல்லன், திரு. கே—**

நீலகிரி மாவட்டம், கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள், சிறு விவசாயிகள் நிலைமை (க.ஈ.) [illegible]—154

## க—தொடர்ச்சி


**கல்வி—**

சமஸ்கிருதம் பயில வசதிகள் வழங்குவது 172

**கல்விக்கூடங்கள்—**

ஐ.டி.ஐ. மாணவர்களுக்கு தமிழில் வினாத்தாள் வழங்குதல் 193—194

காட்பாடி உயர்நிலைப்பள்ளி, கட்டிட வசதி 20—22

சென்னை, கல்லூரி, பள்ளிகளின் அலுவல் நேரங்களை மாற்றியமைத்தல் 17—20

பள்ளி, கல்லூரிகளில் கபாடியை கட்டாய பாடமாக்குவது 170—172

**கலையரசன், திரு. நன்னிலம், அ.—**

மாயவரம், வேதாரண்யம், கோடம்பாக்கம், பெயர்கள் மாற்றம் 166—169

**கவன ஈர்ப்புகள்—**

கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள், நீலகிரி மாவட்டம், சிறு விவசாயிகள் நிலைமை 151—156

சிமெண்ட் கிடைக்காமல் பலர் அல்லல்படுவது 204—216

தஞ்சை, பேராவூரணி ஆதி திராவிட மாணவர்கள் விடுதி, சுகாதார நிலை 41—42

தீப்பெட்டித் தொழிற்சாலையில் தீவிபத்தினால் ஆறு பேர்கள் இறந்தது குறித்து 196—204

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் செலுத்த வேண்டிய தொகை 37—41

மருந்தியல் பட்டமேற்படிப்பு, அனுமதி 157—159

**கனிமங்கள்—**

வேப்பநல்லூரில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு 176—187

**கால்நடைகள்—**

வறட்சிப் பகுதிகளில் உள்ளவை, நோய்த் தடுப்பு 144—145

**கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ—**

கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள், நீலகிரி மாவட்டம், சிறு விவசாயிகள் நிலைமை (க.ஈ.அ.) 151—153, 155,156

முருகேசன் கமிஷன் பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைப்பற்றி விவாதம் (தீ.) 214

**கிருஷ்ணன், திரு. ரா—**

உப்பு உற்பத்தி 187—189

தீப்பெட்டித் தொழிற்சாலையில் தீ விபத்தினால் ஆறுபேர்கள் இறந்தது குறித்து (க.ஈ.) 196

'பால் கமிஷன்' அறிக்கை மீதும், அரசு எடுத்த நடவடிக்கை குறித்தும் விவாதம் (தீ) 50—57

**குடிநீர்—**

காவிரி நீர்ப்பிரச்னை (த.கோ) 194

குழாய்கிணறுகள் அமைக்கும் பணியை தனிப் பிரிவின் கீழ் கொண்டு வருதல் 181—183

நரிக்குடி ஒன்றியப் பகுதிகளில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் 180—181

பள்ளப்பட்டிக்கு குடிநீர் வழங்கும் திட்டம் 179—180

**குப்புசாமி, திரு. செ—**

வடஆர்க்காடு மாவட்டம், வந்தவாசி வட்டம், அரசுப் புட்டா சந்தா, விவரம் 8

க—தொடர்ச்சி

பக்கங்கள்

குமரி அனந்தன், திரு.—

குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணியை தனிப்பிரிவின் கீழ் கொண்டு வருதல் 181—183

மயில்கள், பாதுகாப்பு 123—125

குழந்தைவேலு திரு. ப.—

அமைச்சர்கள் கலந்து கொள்ளும் பொது நிகழ்ச்சிகளில் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு (ஒ.பி.) 148—150

கூட்டுறவு—

கோவை வழக்கறிஞர்கள் கூட்டுறவுச் சங்கம் துவங்குவது 173

தேயிலைத் தொழிற்சாலைகள், நீலகிரி மாவட்டம், சிறு விவசாயிகள் நிலைமை (க.ஈ.) 151—[illegible]

நிலவள வங்கி, விவசாயிகளுக்குப் புதுக்கிணறு வெட்ட கடன் 27—35

நிறுவனங்களின் பொது நல நிதியைப் பயன் படுத்துதல் 25—27

நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், கோ-ஆப்டெக்ஸ் தொகை செலுத்தாமை, நெசவாளர் பாதிப்பு (க.ஈ.) 37—40

முகவை மாவட்டம், திருப்பத்தூர் அர்பன் கோவாப்பரேடிவ் பாங்க், விவரம் [illegible]—28



பக்கங்கள்

சங்கரய்யா, திரு என்—

பால் கமிஷன் அறிக்கை மீதும், அரசு எடுத்த நடவடிக்கை குறித்தும் விவாதம் (தீ.) 97—100

சட்டநாத கரையாளர், திரு. இ.—

பால் கமிஷன்' அறிக்கை மீதும் அரசு எடுத்த நடவடிக்கை குறித்தும் விவாதம் (தீ) 74—78

சட்ட முன்வடிவுகள்—

எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்டமுன்வடிவு, 1982 :

ஆ.நீ. 190—191

தி, பிரி.ஆ.. 190—191

நிறைவேற்றுதல் 191

சென்னை பல்கலைக் கழக, அண்ணாமலைப் பல்கலைக் கழக, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 :

ஆ.நீ. 181—190

பிரி.ஆ. 190—191

நிறைவேற்றுதல் 228

தமிழ் பல்கலைக் கழக சட்டமுன்வடிவு, 1982

ஆளுநர் இசைவு (ஆ.நி.) 228

பொது விற்பனை வரி (மூன்றாவது திருத்த) சட்ட முன் வடிவு, 1981—

ஆ.நி. 160—180

பிரி.ஆ. 180

நிறைவேற்றுதல் 181

சண்முகம், திரு. ஏ. சி.—

நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், கோ-ஆப்டெக்ஸ் தொகை செலுத்தாமை, நெசவாளர்கள் பாதிப்பு (க.ஈ.) 37—40

## ச—தொடர்ச்சி.


பக்கங்கள்

**சமரசம், டாக்டர் கே.—**

'பால் கமிஷன்' அறிக்கை மீதும் அரசு எடுத்த நடவடிக்கை குறித்தும் விவாதம் (தீ) 84—85

**சமூக நலன்—**

ஏழைகள், இலவச சட்ட உதவி 177—178

**சாலைகள்—**

மருங்காபுரி தொகுதி, பராமரிப்பு 129—130

**சிமெண்ட்—**

சிமெண்ட் கிடைக்காமல் பலர் அல்லற்படுவது (க.ஈ) 204—213

**சிவசாமி திரு. செ.—**

எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 187

**சிறைச்சாலைகள்—**

தமிழகத்தில் திறந்தவெளிச் சிறைச் சாலைகள் ஆரம்பிப்பது 173—176

**சின்னசாமி, திரு. எம்.—**

ஏழைகளுக்கு வழங்கப்படும் இலவசமாக சட்ட உதவி 177—178

சிமெண்ட் கிடைக்காததால் ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து (க.ஈ.) 204,213

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கோ-ஆப்டெக்ஸ் தொகை செலுத்தாமை, நெசவாளர்கள் பாதிப்பு (க.ஈ.) 37—40

பண்டாரத்தார் சமூகம், தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க கோரிக்கை 33—34

பள்ளி, கல்லூரிகளில் கபாடியை கட்டாய பாடமாக்குவது 170—172

**சின்னராசு, திரு. மா.—**

சங்கனூர் பள்ளம், பாலம் கட்டுதல் 131—131

பக்கங்கள்.

ச— தொடர்ச்சி.


**சுந்தரம், திரு. கே. ஆர்.—**

பொது விற்பனை வரி (மூன்றாவது திருத்த) சட்ட முன் வடிவு, 1981 160—163

சுந்தரராஜ், திரு. நா.—

பால் கமிஷன் அறிக்கை மீதும் அரசு எடுத்த நடவடிக்கை குறித்தும் விவாதம் 161—166

முருகேசன் கமிஷன் பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைபற்றி விவாதம் (தீ.) 252—253

**சுப்பிரமணியன், திரு. மா.—**

கால்நடைகள், வறட்சிப் பகுதிகளில் உள்ளவை, நோய்த் தடுப்பு 144—145

மாயவரம், வேதாரண்யம், கோடம்பாக்கம் பெயர்கள் மாற்றம் 166—169

**சுவாமிநாதன், திரு. வி. வி.—**

இராணிப்பேட்டை, பாரத் கனரக மின் நிறுவனம். புதிய தொழிற்சாலைகளுக்கு அரசிடம் நிலம் கோரல் 9—10

கால்நடைகள், வறட்சிப் பகுதிகளில் உள்ளவை, நோய்த் தடுப்பு 144—145

மாயவரம், வேதாரண்யம், கோடம்பாக்கம், பெயர்கள் மாற்றம் 166—169

**செம்மலை, திரு. செ.—**

அரசின் பல அலுவலகங்களின் எழுத்தர்களுக்கு சப்-மாஜிஸ்ட்ரேட்டுகளாக நியமிப்பதில் சிறப்புக் காரணம் குறித்து 22—24

கூட்டுறவு நிறுவனங்களின் பொது நல நிதியைப் பயன்படுத்துதல் 25—27

தாலுகா மருத்துவமனைகள், முடம்நீக்கு சிகிச்சை நிலையங்கள் 135—138

வேளாண்மை பொறியியல் பணிக் கூட்டுறவு மையங்கள் 184—18

பக்கங்கள்.

ச—தொடர்ச்சி.

**செல்லமுத்து, திரு. எம்.—**

தஞ்சை மாவட்டம், மினி பஸ் வசதி — 138—140

**செல்வராசன், திரு. அ—**

தொகுதிகள் குறித்து (த.கோ.) — 36—37

**சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ.—**

கூட்டுறவு நிலவள வங்கி. விவசாயிகளுக்கு புறக்கணைறு வெட்ட கடன் — 27—28, 40

பள்ளப்பளையம் ஆதித்திராவிடர் குடியிருப்புகள் தீ விபத்து — 194—195

**சோமசுந்தரம், திரு. எஸ். டி.—**

பொது விற்பனை வரி (மூன்றாவது திருத்த) சட்ட முன் வடிவு, 1981 — 160, 173—181

**சௌரிராஜன், டாக்டர் கே.—**

'பால் கமிஷன்' அறிக்கை மீதும் அரசு எடுத்த நடவடிக்கை குறித்தும் விவாதம் (தி) — 83—91

மருந்தியல் பட்டமேற்படிப்பு, அனுமதி (க.ஈ.) — 157, 159

த

**தகவல் கோரல்—**

காவிரி நீர்ப் பிரச்சனை — 108

தொகுதிகள் குறித்து — 86—87

**தலைவர்—**

அறிவிப்புகள்—

நிதிநிலை அறிக்கை அளிக்கப்பெறும் தேதி — 155



பக்கங்கள்.

த—தொடர்ச்சி

**தலைவர்—தொடர்ச்சி.**

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—

கவன ஈர்ப்புகள்—

அமைச்சரின் அறிக்கைக்குப் பின் ஒழுங்குப் பிரச்னை என்ற முறையில் அமைச்சருக்கு உறுப்பினர் பதில் சொல்ல முடியாது — 213

அமைச்சரின் அறிக்கைக்குப் பின் சுருக்கமாகக் கேள்வி கேட்க வேண்டும் — 154, 203, 204

தகவல் கோரல்—

எப்பிரச்னை குறித்தும் முன்னறிவிப்புக் கொடுக்காமல் திடீரென்று அவையில் எழுந்து கேட்கக் கூடாது — 147

பத்திரிகையில் வந்த செய்தியை வைத்து எந்தப் பிரச்னையையும் அவையில் கேட்க முடியாது, அது பற்றி எழுதிக் கொடுங்கள். பிறகு அந்தப் பிரச்னையை எடுத்துக் கொள்ளலாம் — 33,39

நடைமுறை—

அமைச்சரவைக்கு கூட்டுப் பொறுப்பு இருப்பதால் ஓர் அமைச்சரின் பெயரில் உள்ள தீர்மானத்தை அவையில் உள்ள வேறு எந்த அமைச்சரும் மொழியலாம் (தி.) — 214

பேசும் முறை—

உறுப்பினர் நேரிடையாக அவையில் அமைச்சருடன் பேசக்கூடாது (க.ஈ.) — 209

தனிப்பட்ட முறையில் யாரையும் குறிப்பிட்டு பேசுதல் கூடாது (அ.ச.மு.) — 201, 203

பேசும்போது யோசித்து வார்த்தைகளை உபயோகிக்க வேண்டும் (க.ஈ.) — 154

பேரவை முன்னுள்ள பொருள் குறித்து மட்டும் பேச வேண்டும் (அ.ச.மு.) — 201, 205, 218

த—தொடர்ச்சி.

**தலைவர்—தொடர்ச்சி.**

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

**வினாக்கள்-விடைகள்—**

போடப்பட்டு பதிலளிக்கப்பட்ட வினாவே திரும்பவும் கேட்கப் பெற்றபோது அனுமதி மறுக்கப்பெற்றது (து.வி.) 140

மூலக் கேள்வியை ஒட்டியதாக இருக்க வேண்டும். (து.வி.) 21, 116

மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லை என அனுமதி மறுக்கப் பெற்றது (து.வி.) 192

**தாமரைக்கனி, திரு. இரா.—**

கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள், நீலகிரி மாவட்டம், சிறு விவசாயிகள் நிலைமை (க.ஈ.) 151, 156

சென்னை, கல்லூரி பள்ளிகளின் அலுவல் நேரங்களை மாற்றியமைத்தல் 17—20

தீப்பெட்டித் தொழிற்சாலையில் தீ விபத்தினால் ஆறு பேர்கள் இறந்தது (க.ஈ.) 196, 204

தொழிலாளி வேலை நேரத்தில் விபத்தில் மாண்டால் குடும்பத்திற்கு உதவி 28—30

நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், கோ-ஆப்டெக்ஸ் தொகை செலுத்தாமை, நெசவாளர்கள் பாதிப்பு (க.ஈ.) 37—40

நெல் உற்பத்தி 127—129

மேட்டூர் அணை, மீன்குஞ்சுகள் உற்பத்தி 161—162

**திருநாவுக்கரசு, திரு. எஸ்.—**

சிமெண்ட் கிடைக்காமல் பலர் அல்லற்படுவது (க.ஈ.அ.) 205—213

**திருவேங்கடம், திரு. பெ. சு.—**

அரிசி கொள்முதல் அளவு, 1981-82 3—6

அரசுச் செய்திப் படங்கள் 120—123

தொழில் வளர்ச்சிக் குழு அமைத்தல் 189—190



த—தொடர்ச்சி.

**திரைப்படங்கள்—**

அரசுச் செய்திப்படங்கள் 120—123

**துரைமுருகன், திரு.—**

எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 181—185

சென்னை பல்கலைக் கழக, அண்ணாமலைப் பல்கலைக் கழக, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 191,192—205

பொது விற்பனை வரி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981 160—163, 179,180

**தொழில்கள்—**

தொழில் வளர்ச்சிக் குழு, அமைத்தல் 189—190

மருந்துகள், தனித் தொழிற்பேட்டை 115—117

**தொழிலாளர்கள்—**

தொழிலாளர்களின் வைப்பு நிதித்தொகை, விவரம் 31—33

மரமேறும் தொழிலாளர் குடும்பங்களுக்கு நிவாரணம் 164—166

வேலை நேரத்தில் விபத்தில் மாண்டால் குடும்பத்திற்கு உதவி 28—30

**தொழிற்சாலைகள்—**

கால்நடைத் தீவனம், ஈரோடு 113—115

ந

**நரசிம்மன், திரு. பூ. மு.—**

குசஸ்தலி ஆற்றின் குறுக்கே அணை கட்டுவது 108

**நல்லப்பன், திரு. தி. கா.—**

தீப்பெட்டித் தொழிற்சாலையில் தீ விபத்தினால் ஆறு பேர்கள் இறந்தது குறித்து (க.ஈ.) 196,203

பெருந்துறை, கருமாண்டி, செல்லிபாளையம் பேரூராட்சிகள், நகராட்சியாக்குதல் 133—134

பக்கங்கள்

ந—தொடர்ச்சி


நவநீதகிருஷ்ணபாண்டியன், திரு. ஆர்.—

தீப்பெட்டித் தொழிற்சாலையில் தீ விபத்தினால் ஆறு பேர்கள் இறந்தது (க.*.) 196—199

தொழிலாளி வேலை நேரத்தில் விபத்தில் மாண்டால் குடும்பத்திற்கு உதவி 28—30

'முருகேசன் கமிஷன்' பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைபற்றி விவாதம் (அ.நீ.) 253—254

நிலங்கள்—

இராணிப்பேட்டை, பாரத் கனரக மின் நிறுவனம், புதிய தொழிற்சாலைக்கு அரசிடம் நிலம் கோரல் 9—10

வட ஆற்காடு மாவட்டம், வந்தவாசி வட்டம், அரசுப் பட்டா ரத்து. விவரம் 9

நீக்கங்கள்— 154

நீதிமன்றங்கள்—

அரசின் பல அலுவலகங்களின் எழுத்தர்களுக்கு சப்-மாஜிஸ்ட்ரேட்டுகளாக நியமிப்பதில் சிறப்புக் காரணம் குறித்து 22—24

நூலகங்கள்—

சீர்திருத்தம், சுப்பராயன் குழு பரிந்துரைகள் 14—17

நெடுஞ்செழியன், டாக்டர் இரா.—

அமைச்சர்கள் கலந்து கொள்ளும் பொது நிகழ்ச்சிகளில் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு (ஒ.பி) 150—151

எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்டமுன்வடிவு, 1982 181,187—191

தீப்பெட்டித் தொழிற்சாலையில் தீ விபத்தினால் ஆறு பேர்கள் இறந்தது குறித்து (க.ஈ.அ.) 196—204

விதி 31-ஐத் தளர்த்தல் (நீ.) 43—44




பக்கங்கள்

ந—தொடர்ச்சி


நெடுமாறன், திரு. ப.—

சிமெண்ட் கிடைக்காததால் ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து (க.ஈ.) 204

சென்னைப் பல்கலைக் கழக, அண்ணாமலை பல்கலைக் கழக, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு 1982 211—215

'பால் கமிஷன்' அறிக்கை மீதும் அரசு எடுத்த நடவடிக்கை குறித்தும் விவாதம் (தீ.) 57—70


ப


பழனிவேல், திரு. என்.—

நூலகங்கள் சீர்திருத்தம், சுப்பராயன் குழு பரிந்துரைகள் 14—17

வேலையில்லா பட்டதாரிகளுக்கு நிவாரண உதவிக்காக பதிவு செய்யும் காலத்தை குறைத்தது 190—193

பறவைகள்—

மயில்கள், பாதுகாப்பு 123—125

பாசனம்—

குசஸ்தலை ஆற்றின் குறுக்கே அணை கட்டுவது 183

மேட்டூர் கால்வாய், தண்ணீர் விடுதல் (அ) 159—160

பாபு ஜனார்த்தனன், திரு.—

தீப்பெட்டித் தொழிற்சாலையில் தீ விபத்தினால் ஆறு பேர்கள் இறந்தது குறித்து 196,198

பாரமலை, திரு. க.—

சிமெண்ட் கிடைக்காததால் ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து (க.ஈ.) 204,209—210

நரிக்குடி ஒன்றியப் பகுதிகளில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் 180—181

பாலகிருஷ்ணன், திரு. ச.—

தமிழகத்தில் திறந்த வெளிச் சிறைச்சாலைகள் ஆரம்பிப்பது 173—176

பெரியார் மாவட்டம், குடிசைகளுக்கு மின்சாரம் 107—110

பக்கங்கள்

ப—தொடர்ச்சி

பாலங்கள்—

சங்கனூர் பள்ளம், கட்டுதல் 130—131

பாலசுப்பிரமணியன், திரு. வேடசந்தூர் வி. பி.—

அரசு அலுவலகங்கள், தமிழில் அலுவல்கள் 11—14

தமிழகத்தில் திறந்தவெளிச் சிறைச்சாலைகள் ஆரம்பிப்பது 173—176

வேடசந்தூர், பொது மருத்துவமனை அமைத்தல் 134—135

வேடசந்தூரில் மேற்கொள்ளப்பட்ட கனிமங்கள் ஆய்வு 185—187

பாலன், திரு. சு.—

சிமெண்ட் கிடைக்காததால் ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து (க.ஈ.) 204—205,208

பிரபாகரன், திரு. ஜே. சி. உ.—

விரைவுப் பேருந்துகள், திரைப்படம் காண்பித்தல் 140—142

புருஷோத்தமன், திரு. து.—

அமைச்சர்கள் கலந்து கொள்ளும் பொது நிகழ்ச்சிகளில் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு (ஒ.பி.) 147—148

ஏழைகளுக்கு வழங்கப்படும் இலவச சட்ட உதவி 177—178

தொழிலாளி வேலை நேரத்தில் விபத்தில் மாண்டால் குடும்பத்திற்கு உதவி 28—30

பூங்காவனம், திரு. என். ஏ.—

காட்பாடி, அரசினர் உயர்நிலைபள்ளி, கட்டிட வசதி 20—22

பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ்.—

பள்ளப்பட்டிக்கு குடிநீர் வழங்கும் திட்டம் 179—180



பக்கங்கள்

ப—தொடர்ச்சி.

பொன்னுரங்கம், திரு. ப.—

சென்னைப் பல்கலைக் கழக, அண்ணாமலைப் பல்கலைக் கழக, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு. 1982 216—218

தீப்பெட்டித் தொழிற்சாலையில் தீ விபத்தினால் ஆறு பேர்கள் இறந்தது (க.ஈ.) 196—198

பொன்னையன், திரு. சி.—

முருகேசன் கமிஷன் பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைபற்றி விவாதம் (தீ.) 254—264

போக்குவரத்து—

தஞ்சை மாவட்டம், மினிபஸ் வசதி 138—140

விரைவுப் பேருந்துகள், திரைப்படம் காண்பித்தல் 140—142

ம

மணி, திரு. டி.—

தீப்பெட்டித் தொழிற்சாலையில் தீ விபத்தினால் ஆறு பேர்கள் இறந்தது (க.*.) 196,199

மருத்துவம்—

மருந்தியல் பட்டமேற்படிப்பு, அனுமதி (க.ஈ.) 157—159

மருத்துவமனைகள்—

தாலுகா, முடம் நீக்கு சிகிச்சை நிலையம் 135—138

வேடசந்தூர், பொது மருத்துவமனை அமைத்தல் 134—135

தஞ்சை E.S.I. மருத்துவமனை, சொந்தக் கட்டடம் மற்றும் அலுவலர் குடியிருப்பு கட்டுதல் 31

மாணிக்கம், திரு. எம். எஸ்—

மாயவரம், வேதாரண்யம், கோடம்பாக்கம், பெயர்கள் மாற்றம் 168—169

பக்கங்கள்

ம—தொடர்ச்சி

மாவட்ட நிர்வாகம்—
தென்னாற்காடு மாவட்டம், பெயர் மாற்றம் 11
மாயவரம், வேதாரண்யம், கோடம்பாக்கம், பெயர் மாற்றம் 166—169

மிருகக்காட்சிசாலை—
சென்னை, வண்டலூருக்கு மாற்றுதல் 117—120

மின்சாரம்—
தெரு விளக்குகள், பியூஸ் யூனிட் 110—115
பெரியார் மாவட்டம், குடிசைகளுக்கு வழங்கல். 107—110

மீனளம்—
சின்னமுட்டத்தில் மீன்பிடித் துறைமுகம் 159—161
மலைப்பகுதி மீன்காட்சி சாலை, அரும் பொருட்காட்சி நிலையம், மத்திய அரசு உதவி 1—3
மேட்டூர் அணை, மீன் குஞ்சுகள் உற்பத்தி 161—164

முகமது இஸ்மாயில், திரு. பி.—
சென்னைப் பல்கலைக் கழக, அண்ணாமலைப் பல்கலைக் கழக பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 222,223

முத்துராமலிங்கம், திரு. இ.—
சென்னைப் பல்கலைக் கழக, அண்ணாமலைப் பல்கலைக் கழக, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 221,222
தீப்பெட்டித் தொழிற்சாலையில் தீ விபத்தினால் ஆறு பேர்கள் இறந்தது (க.ஈ.) 196



பக்கங்கள்

ர

ரகுமான்கான், திரு. அ.—
முருகேசன் கமிஷன்' பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைப்பற்றி விவாதம் (.தீ.) 226—238

ரமணி, திரு. கு.—
ஈரோடு, கால்நடைத் தீவனத் தொழிற்சாலை 113—115
வழக்கறிஞர்கள் கூட்டுறவுச் சங்கம், கோவையில் துவங்குவது 173

வ

வின்சென்ட், திரு. மி.—
'பால் கமிஷன்' அறிக்கை மீதும், அரசு எடுத்த நடவடிக்கை குறித்தும் விவாதம் (தீ) 40—43

விஜயசாரதி, திரு. எம்.—
தஞ்சை, பேராவூரணி ஆதி திராவிட மாணவர்கள் விடுதி, சுகாதார நிலை 41—42

விஜயராகவன், திரு. பொ.—
சின்னமுட்டத்தில் மீன்பிடித் துறைமுகம் நிறுவுதல் 159—161
'பால் கமிஷன்' அறிக்கை மீதும், அரசு எடுத்த நடவடிக்கை குறித்தும் விவாதம் (தீ) 78—84

வீட்டு வசதி—
சென்னை, வீட்டுவசதி வாரிய குடியிருப்புகள், வாடகை உயர்வு 31

வீரப்பன், திரு. ஆர். எம்.—
'பால்கமிஷன்' அறிக்கை மீதும் அரசு எடுத்த நடவடிக்கை குறித்தும் விவாதம் (தீ) 67—68,83
124—157

வீராசாமி, திரு. தா.—
இராணிப்பேட்டை, பாரத் கனரக மின் நிறுவனம், புதிய தொழிற்சாலைக்கு அரசிடம் நிலம் கோரல் 9—10
மாயவரம், வேதாரண்யம், கோடம்பாக்கம், பெயர்கள் மாற்றம் 166—169

பக்கங்கள்

வ—தொடர்ச்சி.

வெங்கட சுப்பிரமணியம், திரு. ப.—

மருந்துகள், தனி தொழிற்பேட்டை 115—117

வெங்கடரெட்டி, திரு. டி.—

'பால் கமிஷன்' அறிக்கை மீதும், அரசு எடுத்த நடவடிக்கை குறித்தும் விவாதம் (தீ) 70—74

வேணுகோபால், திரு. த.—

ஒன்றியப் பணியாளர்கள், 1974-க்கு முன் ஓய்வு பெற்றவர்கள், ஓய்வூதியம் 131—133

வேலைவாய்ப்பு—

வேலையில்லா பட்டதாரிகளுக்கு நிவாரண உதவித் தொகைக்கு பதிவு செய்யும் காலத்தைக் குறைத்தல் 190—193

வேளாண்மை—

சணல் சாகுபடி 125

தென்னை வளர்ப்பு 125—127

நெல் உற்பத்தி 127—129

வேளாண்மை பொறியியல் பணிக் கூட்டுறவு மையங்கள் 184—185

ஹ

ஹண்டே, டாக்டர் எச். வி.—

மருந்தியல் பட்டமேற்படிப்பு, அனுமதி (க.ஈ.அ.) 157—159

ஹேமச்சந்திரன், திரு. ஜே.—

தீப்பெட்டித் தொழிற்சாலையில் தீ விபத்தினால் ஆறு பேர்கள் இறந்தது (க.ஈ.) 196

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1982 பிப்ரவரி 12

தை 30 துன்மதி, திருவள்ளுவர் 2013

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்:

"ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்

காத்து ஓம்பல் சொல்லின்கண் சோர்வு".

நன்மை பயக்கும் வாழ்க்கைச் சிறப்புகளும் தீமை உண்டாக்கும் கேடுகளும் சொல் ஆற்றலாலேயே உண்டாகின்றன. எனவே, ஒன்றைச் சொல்லும் பொழுது தவறு உண்டாகாமல், கருத்தாகச் சொற்களைப் பயன்படுத்துக.

### 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### மலைப் பகுதியில் மீன்காட்சி சாலை அருங்காட்சி சாலை அமைக்கும் திட்டம்

* வினா எண் 161—திரு. மெ. ஆண்டிஅம்பலம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மலைப்பகுதியில் மீன்காட்சிசாலை, அரும் பொருட்காட்சி நிலையம் அமைக்க மத்திய அரசிடமிருந்து நிதி உதவி அளிக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(ஆ) மலைப்பகுதி மேம்பாடு திட்டத்தின்கீழ் உதகமண்டலத்தில் ஒரு மீன்காட்சி மற்றும் அரும்பொருட்காட்சி சாலை நிறுவ இதுவரை ரூ. 2,68,000 அளிக்கப்பட்டுள்ளது. இந்த மீன் காட்சி மற்றும் அரும்பொருட்காட்சி நிலையம் 18.10.81 முதல் பொதுமக்களின் பார்வைக்குத் திறந்துவிடப்பட்டுள்ளது.

திரு. ரா. கிருஷ்ணன்: பேரவை துணைத் தலைவர் அவர்களே, கடலிலே வாழ்கின்ற மீனைக் கொண்டுபோய் மலைப்பகுதியில் கண்காட்சியாக வைக்க வேண்டிய அவசியம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, மீனை எங்கெங்கே பார்க்க வசதியற்று வாழ்கிறார் களோ அங்கே எல்லாம் இந்த மீன்களைப் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான் இத்தகைய கண்காட்சிகள் அமைக்கப்படு கின்றன. மேலும் உதகமண்டலம் ஒரு சுற்றுலா கேந்திரமாக இருப்பதால், அங்கே பல நாட்டவரும் வந்து பொழுது போக்கு கின்ற காரணத்தாலும் இப்படிப்பட்ட கண்காட்சி நிலயங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. சென்னையிலே கூட கடற்கரையிலே இப்படிப்பட்ட ஒரு கண்காட்சி இருக்கின்றது. இந்த சுற்றுலா மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பயன்படுகின்ற வகையிலே, இந்த நாட்டு மீன்கள் மட்டுமல்லாமல் பல நாட்டு மீன்களையும் வண்ண வண்ண மீன்களையும் காட்சிப் பொருளாக வைத்திருக்கிறார்கள்.

திரு. என். பழனிவேல்: துணைத் தலைவர் அவர்களே, இந்த மீன் கண்காட்சிசாலைகள் சுற்றுலாப் பகுதிகளில் இருக்கக்கூடிய வகையிலே வைத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இன்றைக்குக் கொடைக்கானல் ஒரு சிறந்த சுற்றுலா மையமாக திகழ்கின்ற காரணத்தால் அங்கேயும் இது மாதிரி அமைக்க அரசு முன் வருமா?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, சுற்றுலா பகுதிகள் அத்தனைக்கும் வைக்கப்படும் என்று குறிப்பு இருப்பதாக நான் சொல்லவில்லை. உதகமண்டலம் ஒரு சுற்றுலா இடமாக இருப்பதன் காரணமாக இந்த மேம் பாட்டுத் திட்டத்தின் கீழ் வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப்போன்று கொடைக்கானலும் இதுபோன்ற கண்காட்சி வைப்பதற்கு ஏற்ற இடம்தான். அதைப் பற்றிச் செயற்குறிப்பு இல்லை. யோசிக்கலாம்.

திரு. செ. செம்மலை: துணைத் தலைவர் அவர்களே. இந்த அரும் பொருள் காட்சி நிலையம் சேலம் மாவட்டத்தில் அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் எடுத்துக் கொண்ட முயற்சியினால் அங்கே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று மாவட்டம் தோறும் அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, தனியாக ஒரு செயற்குறிப்பு கல்வித் துறையிலே இருக்கிறது.

1981-1982ல் கொள்முதல் செய்யவிருக்கும் அரிசி, நெல் அளவு

*வினா எண். 162— திரு. பெ. சு திருவேங்கடம்: மாண்புமிகு நிதிஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு நடப்பாண்டில் (1981—1982ல்) கொள்முதல் செய்ய இருக்கும் அரிசி எவ்வளவு?

(ஆ) கொள்முதல் செய்ய உத்தேசித்திருக்கும் நெல் அளவு எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ)&(ஆ) நடப்பாண்டில் ஆறு இலட்சம் டன்கள் அரிசி கொள்முதல் செய்ய வேண்டும் என்று மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது இதை அடை வதற்கு அரசு தீவிரமாக கொள்முதல் செய்து வருகிறது.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, கொள்முதல் வெற்றிகரமாக நடப்பதற்கு இடையூறாக இருப்பது கொள்முதல் விலைதான். இந்த சர்க்கார், மத்திய சர்க்கார் நிர்ணயித்த விலையை விட கூடுதலாக கொடுக்குமா என்று கேட்டபோது, மாண்புமிகு முன்னவர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், சொன்ன பதில் மத்திய அரசு சொன்னதற்கு மீறிப்போனால், பிளாக் லிஸ்ட் பண்ணி

விடுவார்கள், ஆகவே எந்தத் திட்டத்திற்கும் பணம் கிடைப்பது கஷ்டம் என்று சொன்னார்கள். நான் கேட்க விரும்புவது, கர்நாடக மாநில அரசு-மத்திய அரசினுடைய ஆளுங்கட்சியைச் சேர்ந்த அரசு அவர்கள் மேலே 10 ரூபாய் கூட்டிக் கொடுக்கிற போது, அவர்களை பிளாக் லிஸ்ட் பண்ணவில்லை. அப்படி இருக்கும்போது நாம் ஏன் அந்த கர்நாடக அரசு கொடுப்பதைப் போல, நம்முடைய விவசாயிகளுக்கு கூடுதல் பணம் கொடுக்காமல் இருக்க வேண்டும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, இது பற்றி நான் ஏற்கனவே பலமுறை தெரிவித்து இருக்கிறேன், கொள்முதல் ரூ. 115 என்கிற அடிப்படையில் வாங்குவதற்குத் தான் ரிசர்வ் வங்கியும், மத்திய அரசும் நமக்குப் பணம் தருகிறது. மேற்கொண்டு கொடுக்கவேண்டும் என்று சொன்னால் அது மாநில அரசு நிதியில் இருந்து தான் தர வேண்டும். நம்முடைய மாநில அரசு கூடுதலாகக் கொடுக்க வேண்டும் என்று எண்ணினாலும், அதையும் தரக்கூடாது என்று மத்திய அரசும், ரிசர்வ் வங்கியும் வலியுறுத்துகிறார்கள். இப்போது கர்நாடக மாநிலத்தில் கொடுத்து விட்டார்களே தவிர, ரிசர்வ் வங்கி தருகின்ற அந்த ரூ. 615ஐத் தருவதற்குத் தகராறு இருந்து கொண்டு இருக்கிறது. இன்னும் தரவில்லை. இப்படிப் பட்ட இக்கட்டான நிலைமைகள் இருக்கின்ற காரணத்தால் தான் அந்த ரூ. 115 என்று வைத்து இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போல் நாம் இப்போது ரூ. 10 அல்லது ரூ.15 கூடுதலாகக் கொடுத்தாலும், வெளி மார்க்கெட்டில் தற்போது ரூ.150, ரூ.155, மற்றும் ரூ.160 என்று இருப்பதால் எந்த விதமான பலனும் ஏற்படப்போவது இல்லை. ஆரம்பக் கட்டத்தில் வேண்டு மானால் அதற்கு வரவேற்பு இருந்து இருக்கலாம். ரூ.10 அதிக மாக கொடுப்பதில் இத்தகைய இடையூறுகள் இருப்பதால் தான் கொடுக்கவில்லை. கருநாடக மாநிலத்தில் கொடுத்துள்ளதால் ரிசர்வ் வங்கி இன்னும் அந்தப் பணத்தை ரிலீஸ் செய்யாமல் இருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே மத்திய அரசு 6 லட்சம் டன் கொள்முதல் செய்ய வேண்டும் என்று இலக்கு நிர்ணயித்துள்ளதாக சொல்லப்பட்டது. இந்தக் கொள்முதலில் கடுமையான முறையில் அரசு ஈடுபட்டுள்ளதால் விவசாயிகள் மிகப்பெரிய பாதிப்புள்ளாகி இருக்கிறார்கள். வெளிக்கு மார்க்கெட்டில் ஒரு குவிண்டால் ரூ.150 முதல் ரூ.160 வரை விற்கிறது. அந்த விலைக்கே அரசு வங்கி, அரைவைக் கூலி, மற்ற செலவுகள் எல்லாம் ரூ.20 வைத்தாலும் கூட, ரூ. 150 பிளஸ், ரூ 20



என்று கணக்கிட்டாலும்—1½ குவிண்டால் நெல்லில் ஒரு குவிண்டால் அரிசி கிடைக்கும்—ஆகவே, ரூ255 தான் ஒரு குவிண்டால் அரிசி அரிசி பின் விலை வருகிறது. ஆகவே ஒரு கிலோ அரிசி ரூ.2.55 என்கிற விலையில் அரசு மக்களுக்கு நியாயமான முறையில் வழங்கமுடியும். ஆகவே, இந்த மாதிரி ஒரு தகவலை மத்திய அரசுக்குத் தெரிவித்து, அவர்களின் ஒப்புதல் பெற்று, விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்வும், பொதுமக்களுக்கு நியாயமான விலையில் அரிசி கிடைக்கவும் அரசு முயற்சிகளை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்பு இது குறித்துத் தெளி வாக விளக்கியிருக்கிறேன். விவசாயிகளிடத்திலிருந்தோ அல்லது உற்பத்தியாளர்களிடத்தில் இருந்தோ நாம் எந்தவிதமான லெவி யும் வாங்கவில்லை. மொத்த வியாபாரிகளிடத்தில் இருந்து தான் நாம் கொள்முதல் செய்கிறோம். நான் லெவிக்குக் கொடுக்கும் தொகை ரூ 115 தான் என்றாலும், விவசாயிகள் இந்த மொத்த வியாபாரிகளிடத்தில் கொடுக்கின்றபோது வெளி மார்க்கெட் விலையான ரூ.150 அல்லது ரூ 160 வரை பெற்றுக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. இந்த விலைக்கு அந்த மொத்த வியாபாரி கள் வாங்கினாலும்; அரசாங்கத்திற்கு அவர்கள் ரூ.115க்குத் தான் கொடுக்கிறார்கள். இந்த இழப்பை அவர்களிடமுள்ள மீதி சரக்கை வெளி மார்க்கெட்டில் அதிக விலைக்கு விற்பனை செய்து கொள் வதன் மூலம் ஈடு செய்து கொள்ளமுடிகிறது. நான் அடிக்கடி எடுத்துச் சொல்வது போல், நமக்குக் கிடைக்கின்ற அடக்க விலையிலேயே 85 காசு குறைத்து ஒவ்வொரு கிலோவிற்கும் நாம் நியாயவிலைக்கடைகள் மூலம் வழங்க வேண்டிய நெருக்கடி இருக்கிறது. மத்திய அரசு 6 லட்சம் டன் கொள் முதல் செய்ய வேண்டும் என்று நிர்ணயித்துள்ளதற்குக் காரணம் இங்கேயிருக்கும் உற்பத்தி மற்றவைகளைக் கணக்கிட்டுத்தான் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன். அப்படிப் போதுமான அளவிற்கு நாம் செய்யவில்லையென்றால், மத்திய அரசு இடத்திலே இருந்து இதே லெவி விலைக்கு அவர்களிடத்தில் வாங்கவேண்டும். ஆகவே தான் 6 லட்சம் டன் வசூலிக்கிறோம். விவசாயிகளைப் பொறுத்த வரையில் எந்தச் சங்கடமும இல்லை. அப்படி எங்காவது சங்கடம் ஏற்பட்டு இருக்கிறது தனிப்பட்ட முறையில் என்று சொன்னால், அதற்கு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக் கிறோம் என்று தெரிவித்து இருக்கிறேன். வியாபாரிகளிடத்தில் இருந்து கூட, நம் எண்ணுகிற டார்கெட் அளவு முடிந்து விட்டால், கொள்முதல் செய்வதை, லெவி வசூலிப்பதை எடுத்து விடலாம் என்று கூட சொல்லியிருக்கிறேன்.

திரு செ. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, கொள்முதல் செய்யப்படுகின்ற நெல்லுக்கு கூடுதல் விலை கொடுக்கா விட்டாலும், வண்டிச் சத்தம் என்கிற முறையில் கூடுதலாக ஒரு

10 ரூ. கொடுக்க அரசு முன் வருமா? 1981-82-ல் கொள்முதல் செய்த நெல்லுக்கு அரிசியாக திருப்பிக்கொடுக்கிறபோது கிலருக்கு 25%க்கு மேல் கணக்கிட்டு தள்ளுபடி கொடுத்துள்ளதாகச் சொல்லப்படுகிறதே அது உண்மையா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே நான் முதலிலே குறிப்பிட்ட மாதிரி இந்த லெவி முறையிலே நாம் தொடர்ந்து வசூலித்துக்கொண்டு வருகிறோம். கூடுதலாகக் கொடுக்கக்கூடாது என்று மத்திய அரசு ரிசர்வ் வங்கி செல்கிறது. அதற்கான காரணத்தையும் நான் விளக்கிக் காட்டினேன். இப்போது 10 ரூ. 15ரூ. அதிகமாக நாம் கொடுத்தாலும் கூட வெளி மார்க்கெட் விலை அதிகமாக இருப்பதால், அவர்கள் நம்மிடம் கொடுக்க ஆர்வம் காட்டமாட்டார்கள் என்று கருதுகிறேன். 25% தள்ளிக்கொடுக்கும் சூழ்நிலை இல்லை. ஈரப்பதம் ஓரளவிற்கு 22% வரை இருக்கலாம் என்று ஒப்புக்கொண்டு இருக்கிறோம். குறுவைப்பயிரில் மட்டும் விவசாயிகளுக்குக் கஷ்டம் இருக்கக்கூடாது என்பதற்காக மத்திய அரசிடம் சொல்லிவிட்டு, 25% ஈரப்பதம் வரை இருந்தால் வாங்கிக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறோம். தள்ளிக்கொடுக்கவில்லை என்பதைத் தெளிவுப்படுத்துகிறேன்.

### தமிழகத்திற்கு ஒதுக்கப்படும் கோதுமையின் அளவு

*வினா எண் 163 திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) தமிழகத்திலுள்ள கோதுமை அரவை ஆலைகளுக்கு மத்திய அரசு ஒதுக்கும் கோதுமை எவ்வளவு?

(ஆ) கோதுமை கோட்டாவை எவ்வளவு உயர்த்துமாறு மாநில அரசு கோரியுள்ளது?

(இ) மத்திய அரசின் பதில் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன்: (அ) தமிழகத்திலுள்ள கோதுமை உருளை மாவு ஆலைகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்கென மத்திய அரசு மாதம் ஒன்றுக்கு 30,000 டன்கள் கோதுமையை வழங்கி வருகிறது.

(ஆ) கோதுமை உருளை மாவு ஆலைகளுக்கு வழங்கும் கோதுமையின் அளவை மாதம் ஒன்றுக்கு 50,000 டன்களாக உயர்த்துமாறு இவ்வரசு தொடர்ந்து கேட்டுவருகிறது.

(இ) மத்திய அரசு நம் கோரிக்கையை ஏற்க இயலாது எனத் தெரிவித்து விட்டது.



(முற்பகல் 9-10)

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: துணைத் தலைவரவர்களே, ஏற்கெனவே 50,000 டன் கோதுமை கேட்டும் கூட இல்லை என்று சொல்லிவிட்டார்கள். மீண்டும் பெறுவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா? மத்திய அரசு கொடுக்கக்கூடிய 30,000 டன் கோதுமை எந்த அடிப்படையில் அரைவை ஆலைகளுக்கு அரைவை செய்வதற்காக விநியோகிக்கப்படுகிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவரவர்களே, 1979 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வரை நம்முடைய மாநிலத்திற்கு மாதம் ஒன்றுக்கு 65,000 டன் கோதுமை ஒதுக்கீடு செய்தார்கள். அதன்பிறகு மத்திய அரசு உணவு கார்ப்பரேஷன் கோதுமையின் அளவு குறைந்துவிட்டது என்றும் உள்நாட்டுத் தேவைக்கே போதாமல் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது என்றும் சொல்லி எல்லா மாநிலங்களுக்கும் கோதுமை விநியோகத்தின் அளவை பாதியாக குறைத்துவிட்டார்கள். அந்த வகையில் நமக்கு 30,000 டன் தந்தார்கள். நாம் நம்முடைய தேவை முழுவதையும் பூர்த்தி செய்யாவிட்டாலும் 50,000 டன்னாவது தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். அவர்கள் 30,000 டன்தான் தந்துகொண்டிருக்கிறார்கள்.

ஆலைகளுக்கு அரைவைக்காக விநியோகம் செய்வதைப் பொறுத்த வரையில் 3 ஆண்டு காலத்தில் அவர்கள் எந்த அளவுக்கு அரைத்தார்கள், அவர்களுடைய லைசென்ஸ் கபாசிட்டி என்ன என்பதை கணக்குப் பார்த்து, அதன் அடிப்படையில் 69 சதவீதம் அல்லது 70 சதவீதம் தான் கொடுக்கப்படுகிறது. அவர்கள் 100 சதவீதம் வேண்டுமென்றாலும் கொடுக்க முடியாது. காரணம் நமக்கு கிடைப்பது 30,000 டன் மட்டும்தான்.

திரு. ரா. உமாநாத்: துணைத் தலைவரவர்களே, 65,000 டன் கோதுமை கொடுத்தற்குப் பதிலாக இப்போது 30,000 டன் தான் கொடுக்கிறார்கள் என்ற விவரத்தை 'ஒயிட் பேப்பர் டிஸ்கஷன்' வந்த போதே சொன்னார்கள், தொடர்ந்து அதிகம் பெற முயற்சி செய்வோம் என்றும் சொன்னார்கள். அப்படியிருந்தும் அவர்கள் அதைத் தருவதாக தெரியவில்லை. ஆகவே 'பர்சுவேடு' பண்ணுவதில் பயனில்லை; அதிகம் தரமுடியாது என்ற பதில்தான் வரும். அதனால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே இருக்கின்ற நிலைமையை எடுத்துச்சொல்லி மக்கள் பாதிக்கப்படாமல் இருக்க, நம்முடைய கோட்டா முழுவதையும் வற்புறுத்திப்பெற முயற்சி எடுக்கப்படுமா? அதோடு மில்களுக்கு அரைவை கெபாசிட்டியைப் பார்த்து, அந்த அடிப்படையில் விநியோகம் செய்வதாகச் சொன்னார்கள்; அந்த கணக்கு பார்க்கும் சமயத்தில் 'கரண்டு கட்' இருந்தது. ஆகவே, அந்தக் கணக்கைப் பார்க்காமல் கரண்டு கட் இல்லாதபோது இருந்த கெபாசிட்டியைப் பார்த்து அந்த அடிப்படையில் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** துணைத் தலைவரவர்களே, 15 நாட்களுக்கு முன்னால்கூட வற்புறுத்தி கேட்டு எழுதியிருக்கிறோம்; பிரதம அமைச்சருக்கும் எழுதியிருக்கிறோம். மைதா ரவை போன்றவை மக்களின் அத்தியாவசியத் தேவையான பன், ரொட்டி போன்றவை தயாரிப்பதற்காக ஒதுக்கிட வேண்டியிருக்கிறது. கோதுமை ஒரு இன்றியமையாத உணவுப் பொருளாக இருப்பதால் நம்முடைய தேவையைக் கருதி, கூடுதலாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். பொது விநியோகத்திலும் நமக்கு 10,000 டன் கேட்டாலும் இப்போது அவர்கள் 3,000 டன்தான் கொடுக்கிறார்கள், இதையும் அதிகரிக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறோம். எந்த வகையிலே கோதுமையின் அளவை அதிகரித்துப் பெறுவது என்று ஆலோசித்து, அதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்:** துணைத் தலைவரவர்களே, மில்களுக்கு அரவைக்காக லைசென்ஸ் டெபாசிட் அடிப்படையில் விநியோகிப்பதாகச் சொன்னார்கள். இப்போது நாம் ஒரு பக்கத்தில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். இந்த நேரத்தில் மில்களிலே தவறு நடைபெற்றால் அவர்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம், லைசென்சை ரத்து செய்வது அல்லது பறிமுதல் செய்கின்ற அதிகாரம் மாநிலத்திற்கு இருப்பதை சமீபத்தில் மத்திய அரசு பறித்துக்கொண்டது என்பது உண்மையா? அது உண்மை என்றால் மீண்டும் அதை நம்முடைய மாநில அதிகாரப் பட்டியலிலே கொண்டுவர மாநில அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்,

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** துணைத் தலைவரவர்களே, இந்த ஆலைகளை கட்டுப்படுத்துவது, லைசென்ஸ் கொடுப்பது போன்ற அதிகாரங்கள் மத்திய அரசிடம்தான் இருக்கின்றன. இதுபற்றி அண்மையில் ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக ஏற்கெனவே திரு. உமாநாத் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதன்பிறகு அதுபற்றி விளக்கம்பெற ஏற்பாடு செய்திருக்கிறோம். தனிக்கேள்வி போட்டால் அதற்கான விளக்கங்களைப் பெற்றுத் தருகிறேன். நம்முடைய உரிமையை விட்டுக் கொடுக்கக்கூடாது என்பதுதான் நம்முடைய நோக்கம். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் இருந்தால்தான் இப்படிப்பட்ட சங்கடங்கள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும் என்பதை வற்புறுத்துகிறோம். சூழ்நிலைகளை அறிந்து, இந்த அரசு மத்திய அரசுக்கு கருத்து தெரிவிக்கும்.

**திரு. ப. நெடுமாறன்:** துணைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டுக்கு அளிக்கப்பட்டு வந்த கோதுமை கோட்டா குறைந்ததற்குக் காரணம் 'ஃபுட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா' கோதுமை உபரியாக விளையும் பஞ்சாப், அரியானா போன்ற மாநிலங்களில் கொள்முதல் செய்வதில் தங்களுக்கு அந்த மாநிலங்கள் ஒத்துழைப்புத் தரவில்லை; அதனால் அதிகமாகக் கொள்முதல் செய்யமுடியவில்லை; எனவே தமிழ்நாட்டுக்கு விநியோக அளவு



குறைந்துவிட்டது என்ற குற்றச்சாட்டு இருக்கிறது, அது உண்மையா? அப்படியானால் தமிழக அரசு நேரடியாக பஞ்சாப், அரியானா போன்ற உபரி மாநிலங்களில் கோதுமையை கொள்முதல் செய்ய தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்று அந்தச் செய்திகளைச் செய்தித் தாள்களின் மூலமாக நாமும் அறிந்தோம். ஆனால், அதிகாரபூர்வமாக அரசுக்கு அப்படிப்பட்ட தகவல்கள் வரவில்லை. ஹரியானா, பஞ்சாப் போன்ற மாநிலங்களுக்குச் சென்று தனியாக நாம் கோதுமையை வாங்கினால் விலை அதிகமாக இருக்கும். லெவி விலைக்கு கிடைக்காது. ஆகவே வெளிச் சந்தை விலைக்கு வாங்கிக் கொண்டு வந்து இங்கே அரைத்து விற்றால் ரவா கோதுமை போன்றவற்றின் விலை அதனால் மிக அதிகமாகிவிடும். மேலும் ட்ரான்ஸ்போர்ட் செலவுகளை எல்லாம் சேர்த்தால் விலை பல மடங்கு உயர்ந்து விடும். அதனால்தான் வெளிச்சந்தையிலே வாங்காமல் லெவி விலையிலேயே கூடுதலாக ஒதுக்கித் தரவேண்டும் என்று வற்புறுத்துகிறோம்.

**மங்கலம் மாமண்டூர் கிராமத்தில் வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்கள்.**

*வினா எண். 164—திரு. செ. குப்புசாமி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) வடாற்காடு மாவட்டம், வந்தவாசி வட்டம் மங்கலம் மாமண்டூர் 116பி. சர்வேக்கு அரசு சார்பில் கொடுக்கப்பட்ட பட்டா ரத்து செய்யப்பட மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவு பிறப்பித்துள்ளாரா?

(ஆ) ஆம் எனில் அது நடைமுறைக்கு வரவில்லை என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) மற்றும் (ஆ): வீட்டுமனை கொடுக்கப்பட்ட 22 நபர்களில் பலர் முறை தவறாக அதைப் பயன்படுத்தியதால் அதை ரத்து செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றது.

**இராணிப்பேட்டையில் பாரத் கனரக மின் நிறுவனம் மூலம் புதிய தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டம்**

*வினா எண். 165—திரு. த. வீராசாமி, மற்றும் திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் இராணிப்பேட்டையில் பாரத் கனரக மின் நிறுவனம் புதிய தொழிற்சாலை தொடங்குவதற்கு அரசிடம் இலவசமாக நிலம் அளிக்கும்படி கேட்டுள்ளதா?

(ஆ) அவ்வாறெனில், தமிழக அரசு எவ்வளவு நிலம் அந்த நிறுவனத்திற்கு அளித்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) ஆம்

(ஆ) 319 ஏக்கர்.

திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, பாரத் கனரக மின் நிறுவனம் போன்ற மத்திய அரசின் பொது நிறுவனங்கள் அதாவது பப்ளிக் செக்டார்களுக்கு தமிழகத்திலே அரசு வேறு எங்கேயாவது இடம் கொடுத்திருக்கின்றதா? எந்த இடத்தில் கொடுத்திருக்கின்றது? எவ்வளவு நிலம் கொடுத்திருக்கின்றது? இலவசமாகக் கொடுத்திருக்கின்றதா? பணம் வாங்கிக் கொண்டு கொடுத்திருக்கின்றதா? இப்படி பொது நிறுவனங்களுக்காக மத்திய அரசு கேட்டு தமிழக அரசு இடம் தந்திருக்கின்றதா அல்லது மறுத்திருக்கின்றதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, இந்தியப் பேரரசோ அல்லது மத்திய அரசின் பொது நிறுவனங்களோ நிலங்களைக் கேட்கின்ற போது தமிழக அரசு மிக விரைவாக நடவடிக்கை எடுத்து நிலங்களை ஒப்படைத்து வருகின்றது. இதேபோன்று போஸ்டல், இரயில்வே போன்ற பலவிதமான நிறுவனங்கள் நிலங்களைக் கேட்டு இருக்கின்றது. 78,79,80 ஆகிய ஆண்டுகளில் மட்டுமே தமிழக அரசு ஏறக்குறைய 5,203 ஏக்கர் நிலங்களைக் கொடுத்திருக்கின்றது. அதிலே இலவசமாகக் கொடுக்கப்பட்ட நிலம் 3,664 ஏக்கர். 1,418 ஏக்கர் நிலம் பணம் வாங்கிக் கொண்டு கொடுக்கப்பட்டிருக்கின்றது. இனாமாகக் கொடுக்கப்பட்ட நிலத்தினுடைய கிரயம் சுமாராக 4 கோடி ரூபாய் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, மத்திய அரசின் பொது நிறுவனங்களுக்காக ஏறக்குறைய 3,664 ஏக்கர் நிலம் இலவசமாகக் கொடுக்கப்பட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் தமிழக அரசுக்குத் தேவையான நிலங்கள் மத்திய அரசிடம் இருந்தால் அந்நிலங்கள் தமிழக அரசுக்குத் தேவை என்று கேட்கின்றபோது அவர்கள் கொடுக்கவேண்டும் என்ற வகையிலே மாநில அரசு ஏதாவது ஏற்பாட்டினைச் செய்திருக்கின்றதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, நிலங்களைப் பொறுத்தவரை—they are vested with the State Government—எந்த நிலங்களாக இருந்தாலும் அது மாநில அரசுக்குத்தான் சொந்தம். மத்திய அரசுக்கு எங்கேயாவது சொந்தமான நிலம் இருந்தால் மாநில அரசிடம் முதலிலேயே அவர்கள் வாங்கி இருக்கவேண்டும். மாநில அரசுக்குத் தேவைப்படுகின்றபோது அவர்களுக்குத் தேவையில்லை என்றால் அவர்கள் கொடுப்பார்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் தேவைப்படுகின்றபோது எடுக்கப்படும்.



தென்னார்க்காடு மாவட்டத்திற்கு பெயர் மாற்றம் செய்யும் திட்டம்.

*வினா எண். 166—திரு. கே. ஆர். கணபதி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னார்க்காடு மாவட்டத்திற்கு வள்ளலார் மாவட்டம் என்று பெயர் மாற்றம் செய்யும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இல்லை.

திரு. கே. ஆர். கணபதி: மாண்புமிகு தலைவரவர்களே, தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையை அமல்படுத்தி வருகிறார்கள். அவர்களின் பெயரிலே மாவட்டம் கூட அமைத்திருக்கிறார்கள். அதேபோன்று பகுத்தறிவுக் கொள்கையை பரப்பிவந்த வள்ளலாரின் பெயரை தென்னார்க்காடு மாவட்டத்திற்கு வைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, நான் முதலிலேயே பதில் சொல்லிவிட்டேன். மீண்டும் கேட்கிறார்கள். இல்லை.

அரசு அலுவலகங்களில் நடைபெறும் பணிகளில் தமிழை முழுமையாகச் செயற்படுத்தும் திட்டம்.

*வினா எண். 167—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தலைமைச் செயலகம், மாவட்ட, வட்ட அலுவலகங்களில் அலுவல்கள் முழுமையும் தமிழ் ஆட்சி மொழியிலேயே அமைய காலவரையறை நிர்ணயிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆம். மூன்றாண்டுக்குள் ஆட்சிமொழி மூவாண்டு முனைப்புத் திட்டம் (1981–83) மூலம் தமிழை முழுமையாக செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

(முற்பகல் 9.20)

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அலுவலகங்களிலே கோப்புகளை முழுவதுமாக தமிழிலே எழுதுவதை ஊக்குவிக்கும் முறையில் கொடுக்கப்படும் பரிசுகள் ஒரு மாவட்டத்திற்கு 2 என்ற வீதத்தில்தான் கொடுக்கப்படுகிறது. இந்தத் திட்டம் முறையாக செயல்படவும், இன்னும் நல்ல முறையில் தமிழில் கோப்புகளை உருவாக்கவும் ஒவ்வொரு துறைக்கும் பரிசு என்ற வகையில் அல்லது வட்ட அளவிலாவது பரிசு கொடுக்கப்படும் என்ற வகையில் அரசு இதனை மாற்றி அமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவர் அவர்களே, அரசு அதைப் பரிசீலிக்கும்.

திரு. என். வரதராஜன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழியை ஆட்சி மொழியாக விரைவிலே அமுல் நடத்துவது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது ஒரு 10 ஆண்டுக் காலமாக சர்ச்சையில் இருக்கக் கூடிய முக்கியமான விஷயம். ஆகவே, இதை மாவட்ட அளவில், வட்ட அளவில், மாநில அளவில் என்ற வகையில் படிப்படியாக நிறைவேற்றுவதற்கான செயற்குறிப்பு ஏதாவது அரசிடம் உள்ளதா? மொத்தமாக 3 ஆண்டுக்காலத்தில் என்று சொன்னால் எப்படி முறையாக அமுல் ஆகும்? ஆகவே, அதற்கான திட்டங்கள் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கடந்த 24 ஆண்டுகட்கு மேலாக இத்திட்டம் நிறைவேற்றுவதற்காக அரசு பல்வேறு முயற்சிகளையும் எடுத்து வந்திருக்கிறது. இருந்தபோதிலும் எதிர் பார்த்த அளவு முன்னேற்றம் விளையவில்லையாதலால் அரசு அலுவலகங்களில் ஆட்சிமொழித் திட்டம் நிறைவேற்றப்படுவதில் காணப்படும் மெத்தனமான நிலையைப் போக்கவும் அரசு அலுவலகங்களில் ஆட்சிமொழித் திட்டம் செம்மையாகவும் முழுமையாகவும் நிறைவேற்றப்படவும் "ஆட்சிமொழி மூவாண்டு முனைப்புத் திட்டம்" ஒன்றுக்கு அரசாணை நிலை எண். 432, கல்வி, நாள் 10-3-1981 மற்றும் கல்வித் துறையின் 2-6-1981 நாளிட்ட கடித எண். 43050/S1—1க்கும் அரசு ஒப்பு அளிப்பு வழங்கி 1-4-1981 முதல் இம்மூவாண்டு முனைப்புத் திட்டம் தற்போது செயற்பாட்டில் இருந்து வருகிறது.

இது முதலிலே 17 துறைகளில் அமுலாக்கப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டு முதல் வேறு துறைகளிலேயும் அமுலாக்கவும், முழுமையான அளவுக்கு தமிழைப் பயன்படுத்துகின்ற ஒரு திட்டமாகவும் இது இருக்கும். இந்த திட்டத்தை கடந்த ஒரு ஆண்டு கால அனுபவத்தில் பார்க்கிறபோது மகிழ்ச்சித் தரக்கூடிய அளவுக்கு வெற்றி பெற்றிருக்கிறது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இந்த 3 ஆண்டு முனைப்புத் திட்டம் செயல்பட்டு நிறைவேறுகிறபோது, மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்புகிற அளவுக்கு தமிழ் ஆட்சிமொழியாக செயல்பட்டுக் கொண்டிருக்கும்.

திரு. பு. கொ. ஆனூர் ஜெகதீசன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு செயலாளர்களையும், சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களையும் கொண்ட மாநாடு 6-6-1981 அன்று, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய தலைமையில் தமிழ் வளர்ச்சி வளாகத்தில் நடைபெற்றது. அந்த மாநாட்டில், இந்த 3 ஆண்டு முனைப்புத் திட்டத்தை செயல்படுத்துவது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அத்தனை பேரும் முழுமையாக ஏற்றுக் கொண்டார்கள். ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு, இடைக்காலத்தில் ஏற்பட்ட பலன் என்ன



அல்லது போடப்பட்ட திட்டங்கள் என்ன என்பதையும், அத்தோடு அந்த தமிழ் வளர்ச்சி இயக்கத்திற்கு தேவையான அத்தனை அதிகாரிகளும் போடப்பட்டிருக்கின்றனரா, தேவையான தளவாடங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவா என்பதையும் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் விளக்கமாக முன்பு பதில் சொல்லியபோது சொன்னேன். 3 ஆண்டு முனைப்புத் திட்டம் என்ற திட்டத்தை, தலைமை செயலகத்திலிருந்து, மாநிலம் முழுவதற்குமே கோப்புகள் எல்லாமே தமிழிலேயே எழுதப்பட வேண்டும் என்கிற அந்த திட்டத்தை அமுல் நடத்த இருக்கிறோம். முதலிலே 17 துறைகளை எடுத்துக் கொண்டு 81லேயிருந்து செயல் படுத்தியதில், அதன் விளைவுகள் நல்ல திருப்தி அளிக்கக் கூடியனவாக இருக்கிறது. ஆகவே, இன்னும் இந்த 2 ஆண்டுகளில் மற்ற துறைகளிலும் அதை விரிவுபடுத்துவதன் மூலமாக முழுமையான அளவுக்கு, தமிழை ஆட்சி மொழியாக ஆக்கக் கூடிய பணி பூர்த்தியாகும். தமிழ் வளர்ச்சித் துறைக்குத் தேவையான அதிகாரிகள் இருக்கிறார்கள். மற்ற தளவாடங்களும் இருக்கின்றன.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அரசு வெளியிடக்கூடிய கெஜட் பதிவுகளை தமிழிலேயே வெளியிடுவதற்கு அரசு ஏற்பாடுகள் செய்யுமா? அரசு உத்தரவுகள் அனைத்தையும் தமிழிலேயே வெளியிடுவதற்கான ஏற்பாடுகளையும் அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவர் அவர்களே, இவைகள் எல்லாமே இந்த 3 ஆண்டு முனைப்புத் திட்டத்தில் அடங்கும். 17 துறைகளில் அரசு உத்தரவுகள் எல்லாமே தமிழிலேயே வரவேண்டும் என்று சொல்லித்தான் ஏற்பாடுகளும் செய்திருக்கிறோம். கெஜட் பற்றிய விவரம் இல்லை.

திரு ஏ. சி. சண்முகம்: தலைமைச் செயலகத்தில் இருந்து அரசாணைகள், அரசு உத்தரவுகள் ஆகியவை தமிழில் வெளிவர அரசு நடவடிக்கை எடுக்குமா? தமிழக தலைமைச் செயலகத்திலிருந்து தமிழில் கோப்புகள் வரும்போது பரிசுத் திட்டம் இங்கே செயல்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பரிசுத் திட்டம் அமலில் இருந்து கொண்டிதானிருக்கிறது. 17 துறைகளைப் பொறுத்து உத்தரவுகள் தமிழில் வந்து கொண்டிருக்கும்போது மற்றத் துறைகளிலும் வரும். ஆனால் முழுமையாக முனைப்புத் திட்டம் வரும் போது மற்றத் துறைகளிலும் முழுமையான அளவிற்கு தமிழிலேயே வரும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: அரசுத் துறைகளிலும் மற்றும் தமிழ் ஆட்சிமொழியாக பின்பற்றப்படும் என்றும் அதற்கான முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்றும் சொன்னார்கள்.

நான் கேட்க விரும்புவது, தனியார் துறைகளிலும் வேறு பொது நிறுவனங்களிலும் தமிழிலேயே அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தமிழக அரசு பொது நிறுவனங்களில் இதைக் கொண்டுவருவதற்கான முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். தனியார் துறையைப் பொறுத்தவரையில் நம்முடைய ஆலோசனையை நாம் சொல்லலாம்.

திரு. கே. எம். என். சுப்பிரமணியன் : உலகத் தமிழ்நாடு மதுரையில் நடந்தபோது மதுரையில் இருக்கக்கூடிய அங்காடிகள் அத்தனையும் தமிழில் பெயர்ப் பலகைகள் வைக்கவேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருந்தும் பல நிறுவனங்கள் அதைச் செயல் படுத்தவில்லை. அதேபோல் தமிழ் நாட்டிலுள்ள அத்தனை அங்காடிகளும் தமிழில் பெயர்ப்பலகைகள் வைக்க வேண்டும் என்று அரசு ஆணையிட முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆங்கிலத்தில் அவர்கள் போட்டுக்கொண்டிருப்பதை நாம் தடுக்கமுடியாது. ஆனால் தமிழில் போடவேண்டுமென்று நாம் சொல்லலாம். அதை அவர்கள் பின்பற்றுவார்கள் என்று கருதுகிறேன்.

திரு. ந. குலசேகர பாண்டியன் : அமைச்சர்களுடைய சுற்றுப் பயண நிகழ்ச்சி நிரல்கள் எல்லாம் தமிழில் வெளி வருகின்றன. ஆனால் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட சுகாதார அலுவலர்கள் போன்றவர்களின் சுற்றுப்பயண நிகழ்ச்சி நிரல்கள் பற்றி ஆங்கிலத்திலேயே சுற்றறிக்கை அனுப்பப்படுகிறது. எனவே அவைகளை எல்லாம் தமிழிலேயே அனுப்ப அரசு தனியாக உத்தரவு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்ட தவறுகள் நடக்குமானால் அதை அரசு கவனிக்கும்.

திரு. எல். இளையபெருமாள் : தமிழில் எல்லாம் நடைபெறும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் மெடிக்கல் காலேஜ் இன்ஜினியரிங் காலேஜ் இவற்றிலிருக்கிற பாடப்புத்தகங் களை தமிழில் கொண்டுவர அரசு முயற்சி செய்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கேள்வி ஆட்சிமொழி பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பயிற்சி மொழி பற்றி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது தமிழில் வரவேண்டும் என்பதுதான் நம் ஆசை அதற்காக நாம் முடிந்த முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம்.

திரு சுப்பராயன் குழுவின் பரிந்துரைகள்.

* வினா எண் 168 திரு என். பழனிவேல் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நூலகங்களை சீர்திருத்துவது குறித்தான சுப்பராயன் குழுவின் பரிந்துரைகளை அரசு ஆராய்ந்து பார்த்தா?





(ஆ) ஆம் எனில் அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) திரு. சுப்பராயன் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளை அரசு பரிசீலித்துச் சில முடிவுகளை எடுத்தது. அவ்வாறு எடுத்த முடிவுகளைச் செயற்படுத்துவதற் கான வழிமுறைகள் பற்றி அரசுக்கு யோசனை கூற திரு. சீனிவாசன், இ. ஆ. ப. தலைமையில் அலுவலர் மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இந்தக்குழு பல்வேறு பரிந்துரைகளைச் செய்தது. அப்பரிந்துரைகளில் பெரும்பாலானவை அரசினால் பரிசீலிக்கப்பட்டு அவற்றின்மீது ஆணைகள் வெளியிடப்பட்டு விட்டன.

திரு. என். பழனிவேல் : நூலகங்கள் சீர்திருத்தம் சம்பந்தமான இந்தக் கேள்விக்கு அமைச்சர் அவர்கள் சுப்பராயன் குழு பரிந் துரை சம்பந்தமாக சீனிவாசன் குழு நியமித்து அதை அமல்படுத்த சிபார்சு செய்துள்ளதாக சொன்னார்கள். சுப்பராயன் குழு பரிந்துரைகள் என்ன? அது சம்பந்தமாக சீனிவாசன் குழு எடுத் திருக்கக் கூடிய நடவடிக்கை என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : சுப்பராயன் குழு பரிந்துரை கள் பலவற்றில் மிக முக்கியமானவை நூலகப் பணியாளர்களை அரசாங்கப் பணியாளர்களாக ஆக்குவதும், நூலகப் பணிக்காக இருக்கிற குழுக்களை நூலகக் குழுக்களை எடுத்து விடுவதுமாகும். முழுவதையும் அரசாங்கத் துறை நிறுவனமாக அதை ஆக்க வேண்டும் என்பது மிக முக்கியமான பரிந்துரை. ஆனால் அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. மற்றப் பரிந்துரைகள் மீது சீனிவாசன் குழு செய்திருக்கிற பரிந்துரைகள் அடிப்படையில் நாம் சில ஆணைகளை வெளியிட்டிருக்கிறோம். அதில் மிக முக்கிய மானது, இந்த ஊழியர்கள் யாராவது மரணம் அடைந்து விட்டால் அவர்கள் குடும்பத்திற்கு ரூ. 10,000 தருகிற திட்டத்தை அவர்களுக்கு கொண்டு வந்திருக்கிறோம்.

நூலக ஆணைக் குழு பணியாளர்களுக்கு அரசாணை பல்வகை எண், 862 கல்வி நாள் 20-5-80ன் மூலம் ஓய்வூதியம் குடும்ப ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை ஆகியவை விரிவு படுத்தப்பட்டுள்ளன.

நூல்கள் பருவ வெளியீடுகள் மற்றும் நாளிதழ்கள் ஆகியவை வாங்க நடைமுறைவிதிகள் வரையறை செய்யப்பட்டுள்ளன.

நூலக வரிவசூலை தீவிரப்படுத்தவும், ஒழுங்குபடுத்தவும் கல்வித்துறை துணைச் செயலாளரின் தலைமையின் கீழ் ஐவர் குழு ஒன்று அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. நிச்சயமாக வரியைத் ஸ்தல ஸ்தாபனங்கள் வசூல் செய்து அவர்கள் உடனடி யாகத் தருவார்களானால் நூலகங்களை நல்லமுறையில் நடத்த நமக்கு உதவியாக இருக்கும். அப்படித் தராத காரணத்தால் அது உடனடியாகக் கிடைக்க இரண்டு மூன்று துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழு அமைத்திருக்கிறோம்.

[1982 பிப்ரவரி 12

(முற்பகல் 9.30)

நூலக ஆய்வாளர்கள், நூல் இருப்பு சரிபார்ப்பு அலுவலர் மற்றும் கணக்கர் பதவிகள் புதியதாக தோற்றுவிக்கப் பட்டது.

நூலகங்களை வகைப்படுத்தி அதன் அடிப்படையில் பணி யாளர்கள் அனுமதிக்க வரையறை செய்யப்பட்டுள்ளது.

நூலகப் பணியாளர்களுக்கு நூலகவியல் பயிற்சி அளிக்கும் பொருட்டு திருச்சிராப்பள்ளியில் கூடுதலாக ஒரு நூலகவியல் பயிற்சி நிலையம் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

முன்னாள் திருவாங்கூர்-கொச்சின் மாற்றப்பட்ட செங்கோட்டை தாலுக்கா மற்றும் மாவட்டங்களுக்கு 1948 ஆம் வருட தமிழ்நாடு பொது நூலக சட்டத்தின் விதிகளை விஸ்தரிக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. சட்டத்திற்கு திருத்தம் வெளியிட்ட பின்னர் இது செயல்படுத்தப் படும். மாநிலத்திலிருந்து கன்னியாகுமரி

புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிய நூலக ஆணைக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நூலகப் பணியினை விரிவாக்க ஆணையிடப்பட்டது.

மாணவர்களுக்கு பாடப் புத்தகங்கள் கிடைக்க வேண்டி, கல்வி நிறுவனங்கள் வைப்பீட்டுத் தொகை செலுத்தி நூலக ஆணைக் குழுக்களில் அங்கம் வகிக்க வழிவகை செய்யப்பட்டது.

நூலக ஆணைக் குழுக்களுக்கு மூன்றுமாத காலத்தின் ஆரம்பத்திலேயே இணை மானியம் வழங்க ஆணையிடப் பட்டுள்ளது.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து நூலகங் களிலும் சமுதாயத்திற்கு விழிப்புணர்ச்சி ஊட்டிய பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய அனைத்துப் புத்தகங்களும் வைக்கப் பட்டிருக்கிறதா? அப்படி வைக்கப்படவில்லை என்றால், அனைத்து நூலகங்களிலும் கட்டாயமாக இருக்க வேண்டுமென்ற ஆணையை இந்த அரசு பிறப்பிக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கடந்த மூன்று ஆண்டு காலத்தில் தந்தை பெரியார் அறிஞர் அண்ணா எழுதிய பெருவாரியான நூல்கள் வாங்குவதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நூலக ஆணைக் குழுவிலே பணியாற்றுபவர் களை அரசு ஊழியர்களாக அரசு அறிவிக்குமா? தற்போது அவர் களுக்கு அரசு ஊழியர்களுக்கான சலுகைகள் மட்டும் அளிக்கிறோம் என்றார்கள். அவர்களையும் அரசு ஊழியர்களாக அறிவிக்க அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

—



1982 பிப்ரவரி 12]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களாக்கும் உத்தேசம் இல்லை என்று நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். மற்றபடி அவர்களுக்கு பல் வேறு வசதிகளை நாம் முடிந்த அளவுக்கு விஸ்தரித்திருக்கிறோம்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர் களே, இந்த நூலகங்களில் அறிஞர் அண்ணா, தந்தை பெரியார் போன்ற பேரறிஞர்களின் புத்தகங்கள் அங்கே வைக்கப்பட்டுள்ள தாகச் சொன்னார்கள். அதுபோல, மார்க்சீய தத்துவ நூல்கள் அங்கே வைக்கப்பட்டுள்ளதா? குறிப்பாக, ப. ஜீவானந்தம் போன்ற தலைவர்கள் எழுதிய புத்தகங்கள் அங்கே இடம் பெற்றுள்ளனவா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தந்தை பெரியார், அறிஞர் அண்ணா அவர்களின் புத்தகங்களை வைத்திருக்கிறோம் என்று சொன்னால், அவர்கள் பெயரைச் சொல்லி நாங்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறோம். அந்த அடிப்படையில் நாங்கள் அவர்களுடைய புத்தகங்களை அங்கே வைத்திருக்கிறோம். நீங்கள் சொல்லுகின்ற புத்தகங்கள் வைக்கக் கூடாது என்று தடை செய்யவில்லை. அவைகள் வாங்கப் படுகின்றன. அந்தக் குறிப்பிட்ட புத்தக நிலையதாரர்களைக் கேட்டால், அதைப்பற்றிய விவரங்களைச் சொல்லுவார்கள்.

திரு. பெ. திருமாறன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சில பகுதிகளில் சில மாவட்டங்களில் பெரும்பகுதி நூலகங்கள் வாடகைக் கட்டிடங்களிலேயே பல ஆண்டுகளாக இயங்கிக் கொண்டு வருகின்றன. அந்த நூலகங்களுக்கு அரசு கட்டிடங்களைக் கட்டிக் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நூலகங்களுக்கு நல்ல கட்டிடங்கள் இல்லை என்பது மட்டுமல்ல. அவற்றுக்காக திட்டமிட்டு போடப்பட்ட கட்டிடங்கள் இல்லை என்பதும் உண்மை, ஆகவே, இப்போது அதற்காக ஒரு தனி முயற்சியை மேற்கொண்டு, புதிய திட்டங் களைப் போட்டு, பெரு நகரங்களிலும், அதைப்போலவே ரெவின்யூ டிவிஷன் ஹெட் குவாட்டர்ஸ்களிலும், சாதாரண கிளை நூலகங்களுக்கான பிளான்களைத் தயாரித்து, நூலகங்கள் இப்படித்தான் நிறுவப்பட வேண்டும் என்ற முறையிலே கட்டிடங் கள் கட்டுவதற்கான முயற்சியை இப்போது மேற்கொண்டிருக் கிறோம். எல்லா மாவட்டங்களிலும் நல்லபடி கட்டுவதற்கு தீவிரப்படுத்தப்படும்.

கல்லூரி, பள்ளிகளின் அலுவல் நேரங்களை மாற்றியமைக்கும் திட்டம்.

வினா எண் 169—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—

சென்னையில் உள்ள கல்லூரி, பள்ளிகளின் அலுவல் நேரங் களை மாற்றியமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் நேரத்தை மாற்றும் உத்தேசம் இல்லை. ஆனால் தனியார் மற்றும் மாநகராட்சி ஆரம்பப் பள்ளிகளுக்கு அலுவல் நேரங்களை மாற்றியமைப்பது பற்றிய கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, கல்லூரி பள்ளிகள் அலுவல் நேரத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று தலைமையாசிரியர்களிடமிருந்து கல்லூரி பிரின்சிபால்களிட மிருந்தும் கோரிக்கை வந்துள்ளதா? தனியார் பள்ளிகளுடைய அலுவல் நேரங்களை மாற்றியமைப்பது அரசின் பரிசீலனையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது எவ்வாறு மாற்றியமைக் கப்பட இருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இப்போது கல்லூரி, உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களிடமிருந்து எந்த விதமான கோரிக்கையும் வரவில்லை. தனியார், மாநகராட்சி ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களிடமிருந்து கோரிக்கை வந்திருக்கிறது. அவர்கள் காலையில் $8\frac{1}{2}$ மணி 9 மணிக்கு பள்ளிக்கூடத்திற்கு வரவேண்டியிருப்பதால் வீட்டில் இருக்கும் வேலைகளை முடித்து விட்டு பள்ளிக்குச் செல்வது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. 9—3/4 அல்லது 10 மணிக்கு வைத்தால் வசதியாக இருக்கும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். பஸ் போக்குவரத்து, ஜன நெரிசல் ஆகியவற்றை அடிப்படையாக வைத்து ஸ்டாகரிங் செய்வதன் மூலம் சில ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே, போக்குவரத்துத் துறையோடு பேசி ஆசிரியர்கள் கூறுகிற அளவுக்கு மாற்றத்தைச் செய்ய முடியுமா என்று பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி: ஆசிரியர்கள் பள்ளிப் பிள்ளை களுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கும்போது காலையில் படித் தால்தான் புரியும் - பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்று சொல்வார்கள். பசி நேரத்தில் தமிழ்நாட்டில் கல்வி நிலையங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. பாரதியார் கூட 'காலையில் படிப்பு; மாலையில் விளையாட்டு' என்று சொல்லு யிருக்கிறார்கள் பாரதியார் நூற்றாண்டு விழாவை மிகச் சிறப் பாகக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், பம்பாய் மாநிலத்தில் இருப்பது போல் காலை 7 மணிக்கு பள்ளியை ஆரம்பித்து $12\frac{1}{2}$ மணிக்கு முடிப்பது பற்றி அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இப்போது ஆசிரியர்கள் 9 மணி, 10 மணிக்கு ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதைப் போய் 7 மணிக்கு என்றபோ மேயானால் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருக்கிற ஆசிரியர் களைக் கோபம் அடையச் செய்கிற யோசனையாகப் போய் விடும்.



திரு. என். வரதராஜன்: அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது ஆசிரியர்கள் கோபம் அடைவார்கள் என்று சொன் னார்கள். ஆனால் ஆராய்ச்சியாளர்களுடைய முடிவு பிற்பகல் படிப்பில் பிரயோசனம் இல்லை என்று முடிவு வெளி வந்திருக் கிறது. ஆகவே, காலையில் பள்ளிப் படிப்பைச் சொல்லிக் கொடுக்கும் வகையில் நேரங்களை மாற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆராய்ச்சியாளர்கள் கருத்துக்களுக்கு மதிப்புத் தர வேண்டியதுதான், ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான். பெரும்பாலான ஆராய்ச்சியாளர்கள் நம்மு டைய நிலைமையைக் கணக்கில் எடுத்துக் கொள்வது கிடையாது. நம்முடைய சமுதாய நிலைமையைக் கணக்கில் எடுத்து, நம்முடைய நாட்டு மக்களுடைய பொருளாதார நிலைமைகளைக் கணக்கிட்டு அதற்கேற்றவாறு காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. இப்போது பள்ளிகளில் காலையில் சில பேருக்கும் மாலையில் சில பேருக்கும் என்று ஷிப்டு முறையெல்லாம் வைத்துக் கொண் டிருக்கிறோம். ஆராய்ச்சியாளர்கள் சொல்லுவதை எந்த அளவுக்குப் பின்பற்ற முடியும் என்று முயற்சி செய்யப்பட்டு வருகிறது.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்: பள்ளிகள், கல்லூரிகள் தற்போது காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடக்கின்றன. அதனால் பள்ளி மாணவர்களுக்கும் கல்லூரி மாணவர்களுக்கும் ஸ்போர்ட்ஸ் ஆக்டிவிடிசில் அதிக நேரம் செலவழிக்க முடியாத நிலைமையில் ஸ்போர்ட்ஸ் ஸ்டாண்டர்டு இந்த மாநிலத்தில் மிகவும் குறைந்த நிலையில் இருப்பதை அறிவோம். இதற்காக பள்ளி நேரங்களையும், கல்லூரி நேரங்களையும் மாற்றியமைத்து ஸ்போர்ட்ஸில் பயிற்சி செய்ய அதிக நேரம் ஒதுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: விளையாட்டுக்கு நேரம் ஒதுக்காமல் வெறும் பாடத்தை நடத்திக் கொண்டிருக்கும் காரணத்தால் விளையாட்டில் முன்னேற்றம் இல்லையென்று சொல்லும்போது பாடத்தில் முன்னேற்றம் காட்டியிருக்க வேண்டும். இப்போது அனுபவத்தின் அடிப்படையில் பார்க்கும் போது அப்படி இல்லை. மாணவர்கள் பாடத்திலே விருப்பம் வைத்துக் கொண்டிருப்பதும் விளையாட்டில் விருப்பம் வைத்துக் கொண்டிருப்பதும் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட நிலையில் தான். அதற்குப்போதுமான வசதிகளை ஆங்காங்கு செய்து வைத்திருக்கிறோம். இப்போது பல்வேறு கல்லூரிகளில் விளையாட்டுத் துறையில் நல்ல முன்னேற்றத்தைக் காட்டி யிருக்கிறார்கள். பல்வேறு போட்டிகளில் பரிசையும் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பள்ளி கல்லூரி நேரத்தை நாம் மாற்றம் செய்வதற்கில்லை.

(முற்பகல் 9.40)

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஷிப்டு முறைப் பற்றிச் சொன்னார்கள். ஷிப்டு முறை வைக்கப்பட்டுள்ள

பள்ளி மாணவர்களுக்குப் பல சிரமங்கள் இருக்கின்றன என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஷிப்டு முறையை வைத்தி ருப்பதற்கு, பள்ளிகளிலே இடம் அதிகமாக இல்லாததுதான் காரணம் என்பது அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஷிப்டு முறையிருக்கின்ற பள்ளிகளை உடனடியாக ஆராய்ந்து அங்கே எல்லாம் அதற்குத் தகுந்த கட்டடங்களைக் கட்ட பணம் அரசு ஒதுக்கீடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** போதிய இட வசதி இல்லாத காரணத்தினால் ஷிப்டு முறையைக் கொண்டு வருகிறோம். இட வசதி இல்லாத பள்ளிகளில் ஷிப்டு முறையைக் கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்து வருகிறோம்.

### காட்பாடி அரசினர் உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம்

* வினா எண் 170.—**திரு என். ஏ. பூங்காவனம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் காட்பாடி அரசினர் உயர் நிலைப் பள்ளி மாணவர்களுக்கு கட்டிட வசதி இல்லையென்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் இதைப் போக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்:** (அ) இப்பள்ளியிலுள்ள மொத்தம் 29 பிரிவுகளில் ஒரே ஒரு வகுப்புக்கு மட்டும இட மில்லை.

(ஆ) வருகின்ற நிதியாண்டில், அரசு அளிக்கும் நிதியிலிருந்து கட்டடங்கள் கட்ட பள்ளிகள் தேர்ந்தெடுக்கும்பொழுது மேற் கண்ட பள்ளியின் நிலையும் முன்னுரிமையுடன் பரிசீலிக்கப்படும்.

**திரு. என். ஏ. பூங்காவனம்:** துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பள்ளியில் ஆயிரத்திற்கு மேற்பட்ட பிள்ளைகள் பயில் கிறார்கள். அங்கே பிள்ளைகள் வெயிலிலும் மழையிலும் பாதிக் கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் முன்னுரிமை கொடுக்கப்படுமெனச் சொன்னார்கள். இப்போது அந்த இடம் குறுகிய இடமாக இருக்கிற காரணத்தினால் பக்கத்தில் நல்ல இடமாகத் தேர்ந்தெடுத்து அங்கே வசதியை ஏற்படுத்தித் தருவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** வேறு நல்ல இடம் கிடைக்கு மானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும்; அரசு அதற்கான ஒத்துழைப்பைத் தரும்.

**திரு சி. கோபால்:** துணைத் தலைவர் அவர்களே, இது போன்று வட ஆற்காடு மாவட்டம் சோளிங்கரில் உள்ள உயர் நிலைப் பள்ளிக்கு என்று தனியாகக் கட்டடம் இல்லாத நிலைமை இருக்கிறது. அங்கே நிலம் கொடுப்பதற்கான சூழ்நிலை ஏற் படுத்தப்பட்டால் உடனடியாக அரசு கட்டிக்கொடுக்க முன் வருமா?



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இதுபோன்ற நிலை பல பள்ளிகளிலே இருக்கின்றன. கட்டடமே இல்லாமல் இருக்கின்ற அரசுப் பள்ளிகளை நோக்குகிறபோது இந்தப் பள்ளிகள் பரவாயில்லை என்ற நிலை இருக்கிறது. அரசுப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் எல்லா நிலைகளையும் வைத்து அதற்கேற்ப இந்த உதவிகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. அந்த அடிப் படையிலே முன்னுரிமை தந்து பல்வேறு பள்ளிகளுக்கு நாம் நிதியை ஒதுக்கீடு செய்து கொண்டிருக்கிறோம்.

**திரு. எ. சி. சண்முகம்:** துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல பள்ளிக் கட்டடங்கள் தனியார் குழுவால் கட்டப் பட்டு அரைகுறையாக வேலைகள் இருக்கின்றன. அதுபோன்ற பள்ளிக் கட்டடங்களை முடித்துத்தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** பல்வேறு நிர்வாகச் சிக்கல் காரணமாக பல கட்டடங்கள் இப்படிப் பாதியிலேயே நின்றுகொண்டு இருக்கின்றன. அதையெல்லாம் கணக்கில் எடுத்து முழுமையான ஒரு திட்டத்தைப் போட்டு பாதியிலே இருக்கின்ற கட்டடங்களை முடிப்பதற்கான முயற்சியை அரசு மேற்கொண்டி ருக்கிறது.

**திரு. கே. ஆர். சுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே, காட்பாடி உயர்நிலைப் பள்ளிக்குப் பின்புறத்திலே அரசுக்குச் சொந்தமாக இருந்த இடத்தினை ரயில்வே காலனிக்குக் கொடுத்து உதவி செய்து வந்தார்கள். இப்போது அந்த இடம் காலியாக இருக்கிறது. அந்த இடத்தை அந்தப் பள்ளிக்குப் பெற்றுத்தரவேண்டுமென்று அரசுக்கு விண்ணப்பம் வந்து இருக் கிறதா? அப்படி விண்ணப்பித்திருந்தால அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இப்போது இதுகுறித்த விவரங்கள் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

**திரு ஜி. மூர்த்தி:** பேரணாம்பட்டு ஒன்றியத்திலே மேம்பட்டி யிலே மேல்நிலைப்பள்ளியில் கட்டடம் இடிந்துவிழும் நிலையில் இருக்கிறது. நான் ஏற்கெனவே இதுபற்றிக் கேட்டிருக்கிறேன். அந்தப் பள்ளியின் சிரமத்தைப் பார்த்து.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வி காட்பாடி உயர்நிலைப்பள்ளிக் கட்டடத்தைப் பற்றியது. பேரணாம்பட்டைப் பற்றி இதிலே கேட்டால் அமைச்சரிடம் தகவல் இருக்காது. இதை அனுமதித்தால் ஒவ்வொருவரும் இப்படிக் கேட்பார்கள். இது மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாத கேள்வி.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** என்னிடத்திலே எல்லா விவரங்களும் இருப்பதாக நினைத்துக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்னிடத்திலே கேட்கப்பட்ட கேள்விக்குத்தான் பதில்,

தந்திருக்கிறார்கள். ஆகவே, இதிலே எல்லாப் பள்ளிக்கூடங்களை பற்றியும் கேள்விகளைக் கேட்டால் பதில் சொல்வதற்கு முடியாது. ஆகவேதான் தனிக் கேள்வி போட வேண்டுமென்று சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேள்வி போட்டிருப்பதாகச் சொல் கிறார்கள். அந்தக் கேள்வி வரும்போது நான் பதில் சொல் கிறேன்.

## Appoin ment of clerks from various Departments as Sub-Magistrates,

*Q.No 171- THIRU S.ANDI THEVAR & THIRU S. SEMMALAI Will the Hon. the Minister for Co-operation and Law be pleased to state what is the special consideration for recruiting clerks from Forest, Fisheries, Animal Husbandry, Co-operative Societies Weights and Measures and from all other Departments to the Sub-Magistracy?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தமிழ்நாடு குற்றவியல் மாஜிஸ்டிரேட்டுகள் தனிவிதிகள் 5 மற்றும் 13-ன்படி, குற்றவியல் இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் பதவிக்கு, மற்ற துறைகளி லுள்ள, சட்டப் படிப்பு உடைய நபர்களை. தற்காலிகமாக பணிமாற்றம் மூலம் நியமிக்கலாம். ஆகவே அவ்வாறு இதுவரை உயர்நீதி மன்றம் தக்க நபர்களை தேர்ந்தெடுத்து அரசு ஒப்புதல் பெற்று, குற்றவியல் இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டாக தற்காலிகமாக நியமித்துள்ளது. எனவே இதற்கு வேறு சிறப்புக் காரணம் இல்லை.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலை வரவர்களே, இதுபோன்று தற்காலிகமாக எடுத்த அவர்களை ரெகுலரைஸ் செய்வதற்கு அரசு உத்தேசித்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்படித் தற்காலிகமாக எடுக்கப் பட்டவர்கள் 1965-ஆம் ஆண்டிலிருந்தே எடுக்கப்பட்டவர்கள். அவர்களை அப்படி எடுத்துக்கூட, உயர்நீதிமன்றமே. கிட்டத் 1965-இலிருந்து எடுக்கப்பட்டவர்கள் பன்னெடும் ஆண்டு களாக இத்துறையிலே அவர்கள் அனுபவம் பெற்றிருக்கின்ற காரணத்தாலே திருப்பித் தாய்த் துறைக்கே இவர்கள் அனுப்பப் படுவார்களானால் அவர்களுக்குச் சமமாக இருக்கின்றவர் களெல்லாம் உயர் பதவிக்குச் சென்று இவர்களுக்கு எந்த இடத்தில் எங்கு அமைப்பது என்பதுகூட முடியாத ஒரு பிரச்னை எழும் என்ற காரணத்தாலே இவர்களை நிரந்தரமாக்க அரசு முடிவு செய்துள்ளது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்படிப் பல்வேறு துறை களிலேயிருந்து, சட்டத் துறையிலிருந்து சப்-மாஜிஸ்ட்ரேட் பதவிக்கு நியமிக்கும்பொழுது, அந்த சப்-மாஜிஸ்ட்ரேட்



பதவிக்குப் போகிறார்கள். பிறகு தங்களுடைய தாய்த் துறை யிலே ப்ரமோஷன் வரும்பொழுது எங்களைத் திருப்பி அனுப்புங் கள் என்று சொல்கிறார்கள். ஆகவே, அவர்கள் ஒரே நாள் பிரிவிலெஜ்ட் கிளாஸ் போல இருக்கிறார்கள். எனவே அந்தத் துறையிலேயிருந்து நியமனம் செய்வதை அரசு தவிர்க்க முற்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே. இதுகாறும் 11 : 9 என்ற அடிப் படையிலே 11 பேர் வழக்கறிஞர்களிலிருந்து எடுக்கப்படுவார் களேயானால் 9 பேர் சர்வீஸிலிருந்து எடுக்கப்பட வேண்டு மென்ற விதி 65-க்கு முன்னாலே இருந்தும் 65-லேயும் நடை முறைப்படுத்தப்பட்டு வருகிறது ஆனால் அது சரியல்ல என்பதை அரசு உணர்ந்திருப்பதால் குறிப்பாக மருத்துவத் துறை. கால் நடைத் துறை, பி. டபிள்யூ. டி. லோகல் அட்மினிஸ்ட்ரேஷன் போன்ற துறைகளிலிருந்தெல்லாம் எடுக்கப்படுகின்றவர்கள் போதிய சட்ட அனுபவம் இல்லாதவர்களாகவும், கிட்டத்தட்ட அவர்களுள் பலர் தபால் மூலமாகவே சட்டப் படிப்பைப் பெற்று சட்ட அனுபவம் என்ன என்பதைத் தெரியாதவர்களாக இருக் கின்ற காரணத்தாலே அவர்களை எடுக்கக் கூடாது என அரசு ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது.

அதுமட்டுமல்லாமல் அப்படி இருக்கின்ற அந்த ரேஷியோவான 11 : 9 என்பதனைக்கூட 5 : 1 என்று, 5 பேர் வழக்கறிஞர் களிலிருந்து எடுக்கப்பட்டால் ஒருவர் மட்டுமே சர்வீஸிலிருந்து என்று, அந்த ஒருவர்கூட தலைமைச் செயலகத்தில் சட்டத் துறையில் சட்ட அனுபவத்தைப் பெற்று பணிபுரிகின்றவர் களாகவோ அல்லது நீதிமன்றத்திலே சட்டம் பயின்று சட்ட அனுபவத்தைப் பெற்றுப் பணியாற்றுகின்றவர்களாகவோ இருக்க வேண்டுமென்று முடிவு செய்துள்ளது.

திரு பி எம். தங்கவேல்ராஜ்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மற்றத் துறைகளிலிருந்து இப்படிப் பணியாட்களை நியமிப்பதன் காரணமாக நீதித் துறையின் தரம் குறைந்திருப்பது அரசுக்குத் தெரியுமா? அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் படுகிறது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே. 1965-இலிருந்தே இப்படி — முழுக்க முழுக்க சரியானது என்று சொல்ல மாட்டேன் — ஒரு முறை உயர்நீதி மன்றமும் கடைப்பிடித்து வந்த காரணத்தால், நீதித் துறையினுடைய தரம் ஒரு சிறிது ஆங்காங்கு குறைவு ஏற்பட்டி ருக்கிறது என்பதை அரசு உணர்ந்து உயர்நீதிமன்றத்திற்கு அவ்வப்பொழுது தெரிவித்திருக்கிறது. அவர்களும் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

திரு. நெ. குப்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலை வரவர்களே, கடந்த பல ஆண்டுகளாக வழக்கறிஞர் பயிற்சி பெறாமல் பட்டப்படிப்பு பெற்றவர்கள் வேறு துறைகளிலே

வேலை பார்த்தவர்களெல்லாம் குற்றவியல் நடுவர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். வருகின்ற ஆண்டுகளில் வழக்கறிஞர்கள் மட்டுமே இந்தப் பதவிகளுக்கு – குறைந்தது ஐந்தாண்டுகளுக்காவது வழக்கறிஞர்கள் மட்டுமே இந்தப் பதவிகளுக்கு அமர்த்தப்படுகின்ற முடிவை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் ஏற்கனவே தெளிவாகச் சொன்னேன். 1965-இலிருந்து உயர்நீதிமன்றமும், உயர்நீதிமன்றத்தினுடைய பரிந்துரையை ஏற்ற காரணத்தால் அரசும் சேர்ந்து செய்த தவறின் காரணமாக அனுபவம் அற்றவர்கள் சட்டப் பயிற்சி அனுபவம் அற்றவர்கள் பலர் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டார்கள். அந்தக் குறையை இந்த அரசு தற்பொழுது பூர்த்தி செய்திருக்கிறது. ஆனால் முழுக்க முழுக்க வழக்கறிஞர்களிலேயிருந்தே எடுக்க வேண்டுமென்ற ஒரு முடிவுக்கு வரவில்லை. காரணம், நீதித்துறையிலே பட்டத்தைப் பெற்று, அந்தப் பயிற்சியைப் பெற்றிருக்கின்றவர்கள் சட்ட இலாகாவில் பல ஆண்டுகளாக அனுபவம் பெற்றிருக்கின்றவர்கள் என்ற அடிப்படையில் அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கலாம் என்ற முறையில் தான் முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.

### திருப்பத்தூர் கூட்டுறவு நகர வங்கி

*வினா எண். 172—திரு ரா. உமாநாத்: மாண்புமிகு கூட்டுறவு, சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூரில் உள்ள கோவாப்ரேட்டிவ் அர்பன் பாங்க் செயல்படாது பல ஆண்டுகளாக மூடிக்கிடப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) மூடி கிடப்பதின் காரணம் என்ன?

(இ) அரசு அதை திறக்க ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. சி பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கியிலிருந்து நகைக்கடன் வழங்கப்பெற்ற காசுக்கடன் தொகையை உறுப்பினர்களுக்கு குறுகிய காலக் கடனாக வழங்கியதை அடுத்து திருப்பத்தூர் கூட்டுறவு நகர வங்கியில் தவணை கடந்த கடன் நிலுவை அதிகரித்ததுடன் மத்திய வங்கியிலிருந்து புதிய கடன் பெற்று உறுப்பினர்களுக்கு கடன் வழங்கும் வாய்ப்பினை இழந்து வங்கி செயல் இழந்ததுடன் உறுப்பினர்களின் நம்பிக்கையையும் இழந்துள்ளது.

(இ) இவ்வங்கியை புத்துயிரூட்ட எடுத்துக்கொண்ட எல்லா முயற்சிகளும் பயனளிக்கவில்லை. ஆகவே இவ்வங்கியின் செயல்முறையை முடிவுக்கட்ட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



[முற்பகல் 9.50]

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு வங்கியையே மூடக்கூடிய அளவுக்கு அங்கே இந்த மாதிரி குறிப்பிட்டிருக்கக்கூடிய ஊழல்கள், சட்ட விரோதமான காரியங்கள் நடந்திருக்கின்றன என்று சொன்னால், அதற்குப் பிரதான காரணம் யார்? அரசாங்கம் அதுபற்றி விசாரணை நடத்தினார்களா? அப்படியானால் அதற்குக் காரணமானவர்கள் பேரில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கு ஊழல் நடக்கவில்லை, ஆனால், அந்த வங்கி அங்கத்தினர்களுக்குக் கடன் தருகிறது. வாங்கிய கடனை அங்கத்தினர்கள் குறித்த காலத்தில் திருப்பிக் கட்டுவதில்லை. எனவே, that has lost its lending viability அதற்கு அந்தச் சங்கத்தின் உறுப்பினர்களேதான் காரணம்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மீண்டும் அதைத் திரும்ப ஃபங்க்ஷன் பண்ணுவதற்கு நடவடிக்கை எடுத்துப் பயன் இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எடுக்கப்பெற்ற நடவடிக்கைகள் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்களிடம் நிலுவையில் நிற்கும் கடன் தொகையில் மாதம் ரூ. 6,000 வீதம் 10 மாதங்கள் வசூலிக்க வேண்டுமென்று ஒரு நிபந்தனை விதிக்கப்பட்டது. மூன்று மாத காலத்திற்குள் வைப்புத் தொகையை ரூ. 20,000 வரை வசூலிப்பது என முடிவெடுக்கப்பட்டது. கூட்டுறவு மைய வங்கிக்குச் செலுத்த வேண்டிய கடன் பாக்கிகளை 10 மாதத்திற்குள் திருப்பிச் செலுத்த வேண்டுமென்றும் கூறப்பட்டது. உறுப்பினர்களிடமிருந்து வசூலிக்கும் கடன்கள் மற்றும் வைப்புத் தொகைகளிலிருந்து நகைக் கடன்கள் வழங்கி உறுப்பினர்கள் மற்றும் ஏனையோர்களின் நம்பிக்கையைப் பெற வேண்டுமென்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், அவை அனைத்துமே இன்னும் நடைமுறைக்குக் கொண்டு வர முடியாத அளவுக்கு உறுப்பினர்களுடைய ஆதரவு இல்லாமல் இருக்கிற காரணத்தால், இந்தப் பிரச்னை அங்கே எழுகின்றது.

### கூட்டுறவு நிறுவனங்களின் பொது நலநிதி.

* வினா எண். 173— திரு. செ. செம்மலை: மாண்புமிகு கூட்டுறவு. சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கூட்டுறவு நிறுவனங்களின் பொதுநல நிதி (Common Good Fund) யை கூட்டுறவு நிறுவனங்களின் பணிகளை விரிவாக்குவதற்கோ அல்லது மிகவும் அத்தியாவசியமான பொது நல பணிகளுக்கோ பயன்படுத்தும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மற்றும் (ஆ) கூட்டுறவு நிறுவனங்களின் பொதுநல நிதியை கூட்டுறவு நிறுவனங் களின் பணிகளை விரிவாக்குவதற்காகப் பயன்படுத்துவதற்கு சட்டத்தில் வழிவகைகள் இல்லாத காரணத்தால், அத்தகைய பணிகளுக்கு திட்டம் ஏதுமில்லை. ஆனால் சட்டப்பிரிவு 62(2)(6)-ன்படி சங்க நிகர இலாபத்தில் 10%-க்கு மேற்படாமல் விதிகளில் குறிப்பிட்டபடி பொது நல நிதிக்கு ஒதுக்கீடு செய்து, தமிழ்நாடு கூட்டுறவு சங்கவிதி 46(10)-ன்படி அறநிலையச் சட்டம் 1890—ன் பிரிவு 2-ல் குறிப்பிட்டுள்ள கீழ்க்கண்டவை போன்ற நோக்கங்களுக்குப் பொதுநல நிதியைப் பயன்படுத்தலாம்.

(1) ஏழைகளுக்கு நிவாரணம்

(2) கல்வி

(3) மருத்துவ நிவாரணம்

(4) பொது சுகாதாரம்

(5) கூட்டுறவு கொள்கை பரப்புதல்

(6) வாசக சாலைகளை நிர்வகித்தல்

(7) ஏனைய பொதுமக்கள் உபயோகத்திற்கான காரியங்கள்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நிதியைப் பயன்படுத்தி பொது மக்களுக்கு வசதி ஏற்படுத்தித் தருகிற வகையில் மாவட்டங்கள் தோறும் சமுதாயக் கூடங்கள் அமைக்க ஆலோசித்து வருவதாக அமைச்சரவர்கள் ஒருமுறை சொன்னார்கள். எனவே. அந்த ஆலோசனைக்குச் செயல்வடிவம் கொடுக்கும் வகையில் ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல, அந்த ஆலோசனையை நடைமுறைப்படுத்த மதுரை, திருச்சி. சேலம் மாவட்டங்களிலும். சென்னையிலும் அந்த சமூகக் கூடங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில நலிந்துபோனக் கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்ந்து செயல்படத் தக்க வகையில் இதுபோன்ற நிதி யிலிருந்து அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடனாக அளிக்க சட்ட விதிகளைத் திருத்தியாவது, அரசு நலிந்துபோன கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்காக, காமன் குட் ஃபண்டி லிருந்து எதுவும் எடுக்க வேண்டியதில்லை. இதற்காக டெவலப் மென்ட் ஃபண்ட் என்ற வேறு ஒரு பிரிவு இருக்கிறது. அதிலே யிருந்து ஏற்கனவே ஒதுக்கப்படுகிறது. நலிந்த சங்கங்கள் அதன் மூலம் பராமரிக்கப்படுகின்றன.

திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நிறுவனங்களிலுள்ள பொது நல நிதியிலிருந்து கல்விக்கும் மருத்துவத்திற்கும் அதிகபட்சம் எவ்வளவு தொகை கூட்டுறவுச் சங்கங்கள் உதவி செய்யலாம்? அதற்கு, ஏதாவது உச்சவரம்பு உள்ளதா? அப்படி உச்ச வரம்பு இருந்தால் அதை நீக்கி, கல்வி ஸ்தாபனத்திற்கும் மருத்துவ வசதிக்கும் உதவி செய்ய இயலுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிகர லாபத்தில் 10 சதவிகிதம் இதுபோன்ற பணிகளுக்கு ஒதுக்கலாம் என்று இருக்கிறது. ஆனால் வழக்கமாக 3 சதவிகிதம்தான் ஒதுக்கப்படுகிறது. 10 சதவிகிதம் உச்சகட்டமாக ஒதுக்கலாம் என்று விதி நடைமுறையிலே இருக் கிறது அது கடைப் பிடிக்கப்படுகிறது.

## கூட்டுறவு நிலவள வங்கிகள் மூலம் புதுக்கிணறு வெட்டக் கடன்

*வினா எண். 174—திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : மாண்புமிகு கூட்டுறவு, சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

கூட்டுறவு நிலவள வங்கிகளில் விவசாயிகளுக்கு புதுக்கிணறு வெட்டக் கடன் வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : கடன் வழங்கும் தகுதி யுள்ள கூட்டுறவு நிலவள வங்கிகள், விவசாயிகளுக்குப் புதுக்கிணறு வெட்டக் கடன் வழங்குகின்றன.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு நிலவள வங்கிகள் மூலம் புதுக்கிணறு வெட்டுவதற்கு தகுதியுள்ள வங்கிகள் கடன் வழங்கலாம் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால், விவசாயிகள் பல பேர்கள் இன்னும் அரசாங்கத்தில் எந்தவிதமான சலுகையும் பெறாமல், புதுக் கிணறுகள் வெட்டுவதற்கு மனுச் செய்து காத்திருக்கின்றார்கள். ஆனால், சங்கம் தகுதி இழந்து விட்டது என்ற காரணத்தால் அந்த விவசாயிகள் பாதிக்கப்படுவது நியாயம்தானா? அவே கடனே வாங்காத விவசாயிகளுக்கு, புதுக்கிணறு வெட்டுவதற்கு கடன் வழங்க அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர் களுடைய உணர்வோடு அரசும் ஒன்றுகிறது; நானும் ஒன்றுகிறேன். அதன் அடிப்படையில் இதுகுறித்து ஏ.ஆர்.டி.சி. நிறுவனத்தை ஏற்கனவே நாம் கேட்டோம். There is difference between short

term loan and long-term loan ஷார்ட்டேர்ம் லோனைப் பொறுத்த வரையிலும், பிரைமரி சொசைட்டிகளைப் பொறுத்தவரையிலும் சொந்தப் பணம் அவர்களுக்கு இருக்கிற காரணத்தால் because they are generating their own funds அவர்களுக்கு ரிசர்வ் வங்கி, ஏ.ஆர்.டி.சி.யும் விதிவிலக்கு கொடுத்து பிரத்தியோகமாக எந்த மாநிலத்திற்கும் இல்லாத அளவுக்கு தமிழகத்திற்கு மட்டும் தந்து இருக்கிறது. பிரைமரி சொசைட்டிக்கு லென்டிங் எலிஜிபிலிடி இழந்து விட்டபோதிலும் கூட, அங்கே இருக்கின்ற உறுப்பினர்கள் கடனைத் திருப்பி காலத்தில் செலுத்துவார்களானால் அவர் களுக்கு அடுத்த கடன் தரலாம் என்ற உத்தரவைப் பெற்று தற்போது நடைமுறைப்படுத்தி வருகிறோம். ஆனால் எல். டி. வங்கியைப் பொறுத்தவரையிலும் லாங்டேர்ம் லோனாக இருக்கிற காரணத்தினாலும், டெவலப்மென்ட் ஆக்டிவிட்டீசுக்குத் தருகின்ற காரணத்தாலும், அந்த வங்கி கடன் தருகிற லென்டிங் எலிஜி பிலிட்டியை இழந்து விட்ட பிறகும் கூட, தனி நபருக்கு, விவசாயிகளுக்குத் தரவேண்டும் என்று அரசு கேட்டதைக் கூட அவர்கள் ஒத்துக் கொள்ளவில்லை. இதுதான் தற்போதைய நிலை.

திரு. எல். இளையபெருமாள் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கப்பட்டு, கிணறு வெட்டப்பட்டு, அந்தக் கிணறுகளில் தண்ணீரே இல்லாத அவல நிலை இருக்கின்றது. அப்படிப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்த எண்ணிக்கைதான் இருக்கும். அது சம்பந்தமாக சிறு விவசாயிகளுக்கு உதவி செய்யும் வகையில், அந்தக் கடனை ரத்து செய்து, எதிர்காலத்தில் பரிசீலனை செய்ய அரசு முன் வருமா? அவர்கள் ஒரு மெமோரன்டம் கொடுத்திருக்கிறார்கள். அதைப் பரிசீலனை செய்து உதவி செய்ய வழிவகை செய்யப் படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் சொன்னதுபோலவே. அரசும் அதை உணர்ந்து நடை முறைப்படுத்தி இருக்கிறது. 90 சதவிகிதம், அப்படிப் பாதிக்கப் பட்டவர்கள் கடன் முழுவதும் தள்ளுபடி செய்யப்படுகிறது.

கட்டடம் கட்டும் தொழிலாளர்களின் கோரிக்கை.

*வினா எண் 175—திரு. து. புருஷோத்தமன்; திரு. பொ. உத்திராபதி, திரு. எம். ஆறுமுகம், திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் :

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கட்டடம் கட்டும் தொழிலாளி வேலை நேரத்தில் விபத்துக் குள்ளாகி மாண்டால் குடும்பத்துக்கு ரூ. 10,000 வழங்கவேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ஆம்.

திரு. பொ. உத்திராபதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. கட்டடத் தொழிலாளர்கள், இந்த மாநிலத்திலே உயர்ந்த கட்டடங்களைக் கட்டுகின்ற தொழிலாளர்கள்—அவர்கள்



வேலை நேரத்தில் இறந்தால் 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பதற்கு உதவி செய்யவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். ஆகவே அந்த மாதிரி கொடுக்கக்கூடிய அளவுக்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து இருக்கிறார்களா என்று அறிவிப்பதோடு, அந்தக் கட்டடத் தொழிலாளர்கள் தமிழ்நாடு முழுவதும் சேர்ந்து ஒரு சங்கம் அமைத்து பல்வேறு கோரிக்கைகளை அரசுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகளில் இந்த கோரிக்கையும் அடங்குகிறது. அந்தக் கோரிக்கைகளிலே எந்தெந்தக் கோரிக்கைகளை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதோடு இந்தப் பத்தாயிரம் ரூபாயை இந்த மாதத்திலோ அல்லது இந்த ஆண்டிலேயாவது கொடுக்கும்படி உத்தரவிடப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவையின் அனுமதி யோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கட்டிடத் தொழிலாளர்கள் ரூ. 10,000 கொடுக்க வேண்டும் என்று அரசைக் கேட்கிறார்கள். ஆனால் கட்டடத் தொழிலாளர்களுக்கு இன்றையதினம் வொர்க் மேன் காம்பன்சேஷன் ஆக்டின் கீழ் பாதுகாப்பு இருக்கிறது. அவர்கள் கான்ட்ராக்டரிடம் வேலை செய்தாலும், வீட்டின் சொந்தக்காரரிடமே வேலை செய்தாலும் அவர்களுக்குப பாதுகாப்பு இருக்கிறது. கான்டிராக்டரிடம் வேலை செய்கிறபோது 'இம்மீடியட் எம்ப்ளாயர்' கான்ட்ராக்டர், வீட்டின் சொந்தக் காரர் 'பிரின்சிபல் எம்ப்ளாயர்'. இரண்டு பேரையும் சேர்த்து வொர்க்மேன் காம்பன்சேஷன் ஆக்டின் கீழ் பணம் கேட்கலாம். கான்ட்ராக்டரின் கீழ் வேலை செய்யமல் ஒரு வீட்டுச் சொந்தக்காரரே நேரடியாக நின்று அந்தத் தொழிலாளியின் உதவியோடு வீடு கட்டுகிறபோது அந்த விபத்து நேர்ந்துவிட்டால் அவர் மீது வொர்க்மேன் காம்பன்சேஷன் ஆக்டின் கீழ் பணம் கேட்கலாம். எந்த எந்த விபத்துக்கு எவ்வளவு காம்பன்சேஷன் என்பது வொர்க்மேன் காம்பன்சேஷன் ஆக்டின் 4-வது ஷெட்யூலில் இருக்கிறது. அதன் மூலம் நிறைய பணம் கிடைக்கும். ஆனால் அவர்கள் கேட்பது அரசு தரவேண்டும் என்பதாகும். அதை நீங்கள் ஆதரிக்க மாட்டீர்கள் என்று நன்றாக அறிவேன். ஏனென்றால் முதலாளியே தரவேண்டும். இப்போது மத்திய அரசாங்கம் அந்தக் கட்டிடத் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்காக ஒரு சட்டம் கொண்டு வர இருக்கிறது. அந்தச் சட்டத்தில் இரண்டு முக்கியமான அம்சங்கள் இருக்கின்றன. அந்தச் சட்டத்தின் நகல் தமிழக அரசுக்கு அனுப்பப்பட்டு, தமிழக அரசும் அதன்மீது கருத்து தெரிவித்து, மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறது.

அதிலே முக்கியமானது, விபத்து ஏற்பட்டால் அதைப்பற்றி தகவல் கொடுப்பது சட்டபூர்வமாக்கப்படுகிறது. கட்டாயம் அவர்கள் தகவல் கொடுத்தே ஆகவேண்டும். இவ்விபத்துக்களைக் குறித்து விசாரணை செய்யும் அதிகாரம் மாநில அரசுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. மோஸ்ட் இம்ப்பார்டென்ட் கிளாஸ்

கட்டுமானப் பணியாளர்களுக்கு அவர்கள் நிறுவனத்தில் ஈட்டுறுதி வசதி அளிக்கவும், விபத்துக்கள் நேரிட்டால் இழப்பீடு வழங்கவும் அதுதான் இந்த ரூ.10000 கேட்கிறார்களே அதைப்போல் இழப்பீடு வழங்கவும் உறுதி—அளிப்பது போல் இந்த கிளாஸ் இருக்கிறது. நம்முடைய பரிந்துரையை மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். மத்திய அரசாங்கம் நம்மிடமிருந்து கருத்துக்களை வாங்கியதே தவிர இன்னும் அந்தச் சட்டத்தை அறிமுகப்படுத்தவில்லை. சட்டத்தைச் செயல்படுத்தவில்லை. இதுதான் இன்றுள்ள நிலைமை.

திரு. எம். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, அமைச்சர் பதில் சொல்கிறபோது கட்டடத் தொழிலாளர்கள் விபத்துக்கு உள்ளாகி மாண்டுபோக நேரிட்டால் அவர்களுக்கு ஓர்க்மேன் காம்பன்சேஷன் ஆக்ட் மூலம் காம்பன்சேஷன் பெறுவதற்கு வழி இருக்கிறது என்று சொன்னார்கள். கட்டிடத் தொழிலாளர்களாக இருக்கக்கூடியவர்கள் கான்ட்ராக்டரிடம் வேலை செய்தாலும் சரி, அல்லது வீட்டுச்சொந்தக்காரரிடம் வேலை செய்தாலும் சரி, அவர்கள் தொழிலாளிதான் என்று நிரூபிக்கமுடியாத சூழ்நிலை இருப்பது அமைச்சருக்குத் தெரியாதது அல்ல. கட்டடத் தொழிலாளர்கள பல்வேறு சூழ்நிலைகளில் வழக்கு மன்றத்திற்குச் சென்றும் கூட அந்த ஆக்ட்படி தொழிலாளி என்று நிரூபிக்க முடியாமல் தோற்றுப்போகும் சூழ்நிலை இருக்கிறது. எனவே கட்டடத் தொழிலாளர் சங்கங்கள் தீர்மானம் போட்டு, இறந்தால் ரூ.10,000 கொடுக்கவேண்டும் என்று கேட்டுள்ளார்கள். அவர்களுடைய கோரிக்கையிலே உள்ள நியாயத்தை ஏற்று, தமிழக அரசு சொல்வதைப்போல் 'அன்ஆர்கனைஸ்டு ஒர்க்கர்ஸ்' என்று சொல்லக்கூடியவர்களுக்கு—அரசு ஊழியர்களுக்கு மற்றவர்களுக்கு இறந்தாலும் இறக்காவிட்டாலும் ரூ.10,000 என்று சொல்வதுபோல்—இந்தத் தொழிலாளர்களுக்கு அந்தப் பாதுகாப்பு கொடுத்து, இந்தப் பத்தாயிரம் ரூபாயை அரசு வழங்க முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே மிகத்தெளிவாகச் சொன்னேன். ஓர்க்மேன் காம்பன்சேஷன் ஆக்டிலே அதற்குப் ப்ரொவிஷன் இருக்கிறது. அடுத்து, மத்திய அரசு கொண்டு வர இருக்கும் சட்டத்திலே நான் சொன்னேனே, அதைப்போல் விபத்து நேரிடினும், இறந்தால் அல்லது விபத்து நேரிட்டால் இழப்பீடு வழங்கவும் அந்தச் சட்டத்திலே விதிமுறைகள் இருக்கின்றன. எனவே அந்தச் சட்டத்தை மத்திய அரசு விரைவிலே கொண்டு வரவேண்டும் என்று சொன்னால் பிரச்னை தீர்ந்து விடும். அதை விட்டு விட்டு, மாநில அரசு தரவேண்டும் மாநில அரசு தரவேண்டும் என்று சொன்னார்கள். அமைப்பிலே வராத—அதாவது—அன்ஆர்கனைசுடு மானுவல் லேபர் பற்றிச் சொன்னார்கள். அவர்களுக்கும் புரட்சித் தலைவர் ஆட்சியில் சட்டம் கொண்டு வரத் தயாராக வைத்து இருக்கிறோம். கூடுமான வரையில் அன்ஆர்கனைசுடு மானுவல் லேபருக்கான அந்தச் சட்டத்தை விரைவிலே கொண்டு வருவதற்கு எல்லா முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப்படும்.





### சென்னையிலுள்ள வீட்டுவசதி வாரியத்தின் குடியிருப்புகளுக்கான வாடகை.

*வினா எண். 176—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள வீட்டுவசதி வாரியத்தின் குடியிருப்பு மனை வாடகை 1-2-1981 முதல் 20% அதிகப்படுத்தப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) வீட்டுவசதி வாரியம் அதனுடைய 27-12-80 நாளிட்ட தீர்மான எண். 481-ல் வீட்டுவசதி வாரிய குடியிருப்புகளுக்கு வாடகையை 1-2-81 முதல் 20 சதவீதம் உயர்த்துவதென முடிவெடுத்தது. ஆனால், வீட்டுவசதி வாரியம் 20% உயர்த்திய வாடகையை அரசு மறுஆணை வழங்கும் வரை வசூலிக்கக்கூடாது என ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. எஸ். இராசாராமன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, லண்டனிலே காலியாக இருக்கும் இடத்தை அரசே கையகப்படுத்தி, அங்கே வீடுகள் கட்டிக்கொடுப்பதைப்போல், சென்னை நகரத்தில் இருக்கும் காலிஇடங்களையும் அரசு கையகப் படுத்தி வீடுகள் கட்டிக்கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கேள்வி வாடகையை உயர்த்தியது பற்றியது. அதைத் தொடர்ந்து கேள்வி கேட்டால் பதில் சொல்ல வசதியாக இருக்கும்.

### தஞ்சையிலுள்ள E.S.I. மருத்துவமனை

*வினா எண். 177—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூரில் S.I. மருத்துவமனைக்கு சொந்த கட்டிடம் மற்றும் அலுவலர் குடியிருப்பு கட்ட செயற்குறிப்பு அரசு பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ஆம்.

### தொழிலாளர்களிடம் பிடிக்கப்படும் வைப்புநிதித்தொகை.

*வினா எண். 178— திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1982 பிப்ரவரி 12

(அ) தொழிலாளர்களிடம் பிடிக்கப்படும் வைப்புநிதித் தொகை அவர்கள் வேலையிலிருந்து சென்ற பின்னர் ஆண்டுக் கணக்கில் அவர்களுக்குக் கொடுக்கப்படாமல் இருப்பது அரசுக்கும் தெரியுமா?

(ஆ) அந்தத் தொகையை உடனடியாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) வேலையிலிருந்து விலகும் அல்லது ஓய்வுபெறும் தொழிலாளர் வைப்பு நிதி பெறுவதற்கான மனுவை முழுமையாக பூர்த்தி செய்து அனுப்புதல் வேண்டும். தொழிலதிபர் செலுத்த வேண்டிய வைப்புநிதித் தொகையைச் செலுத்தி மனுவுடன் தேவையான எல்லா ஆவணங்களையும் வைத்து அம்மனுவை தொழிலதிபர் வட்டார வருங்கால வைப்பு நிதி ஆணையர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். அம்மனுவைப் பெற்ற 15 நாட்களுக்குள் உறுப்பினரின் சேமநல நிதி கணக்கை முடித்து தொகை அனுப்பி வைக்கப்படும். உறுப்பினர் தெரிவித்துள்ளவாறு எந்த மனுவும் ஆண்டுக்கணக்கில் கிடப்பில் வைக்கப்பட்டிருக்கவில்லையென்று வட்டார வருங்கால வைப்பு நிதி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

(ஆ) வைப்பு நிதித் தொகையைத் திருப்பிக் கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுவதாக குறிப்பான புகார்கள் அரசின் கவனத்திற்கு வந்தால் அவற்றின் மீது தக்க நடவடிக்கை எடுக்கப் படும்.

திரு. ஏ. டி. கருப்பையா : துணைத்தலைவரவர்களே, வருங்கால வைப்பு நிதி சம்பந்தமாக தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்ட பின்னால் அல்லது தொழிலாளர்கள் இறந்துவிட்டால் கூட பல ஆண்டுகளாகியும் கொடுக்கப்படுவதில்லை என்ற குறைபாடு இருக்கிறது. இறந்துவிட்ட தொழிலாளி குடும்பத்திற்கு கொடுப்பதில்கூட தாமதம் பல ஆண்டுகாலம் ஏற்படுகிறது. எல்லாவிதமான சான்றிதழும் கொடுக்கப்பட்ட பின்னால் உடனடியாக கொடுக்கப்படும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள்; நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் எவ்வளவு நாளைக்குள் கொடுக்கப்படும் என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவர் அவர்களே, 15 நாட்களுக்குள் கொடுக்கப்படும் என்று சொன்னேன். என்னிடம் இருக்கும் தகவல்படி தமிழகத்தைப் பொறுத்தவரையில் வைப்பு நிதித்தொகையைப் பெற கோரிவந்த எந்த மனுவும் ஆண்டுக்கணக்கில் கிடப்பில் வைக்கப்பட்டு இருக்க வில்லை.

திரு. என். வரதராஜன் : துணைத் தலைவரவர்களே அமைச்சரவர்கள் இந்த வைப்புநிதி விரைவிலே கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அது நல்லது. ஆனால் நான் அறிந்த வரையில் பல மாதங்கள் வரையில் வேலையிலிருந்து ஓய்வு பெறுகிற தொழிலாளிக்கு வைப்புநிதி வழங்கப்படாமல் சிரமப்படுகிறான். ஆகவே வேலையிலிருந்து நீங்கி 3 மாதங்களுக்குள் வைப்புநிதியை கொடுப்பதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என்று



1982 பிப்ரவரி 12]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன்னேன். அந்த அலுவலகத்திற்கு வந்தபின்னால் 15 நாட்களுக்குள் கொடுக்கப் பட்டுவிடுகிறது என்ற விவரம் இருக்கிறது. ஆகவே ஆண்டுக் கணக்கில் எந்த மனுவும் கிடப்பில் இல்லை என்று பதில் வந்திருக்கிறது.

தமிழ்நாட்டிலுள்ள 'பண்டாரத்தார்' சமூகத்தினர்.

*வினா எண். 179—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் 'பண்டாரத்தார்' சமூக மக்களிடமிருந்து அவர்களைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(ஆ) தாழ்த்தப்பட்ட இனத்தோருக்குரிய அடிப்படை பண்பியல்புகள் 'பண்டாரத்தார்' என்னும் இனத்தவரிடையே இல்லை. இவ்வினத்தவருக்கு தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்படுவதற்குரிய தகுதிகளில்லை. எனவே இதன் மீது மேல் நடவடிக்கை தேவையில்லை என முடிவு எடுக்கப்பட்டது.

திரு. எம். சின்னசாமி : துணைத் தலைவரவர்களே, பண்டாரத்தார் சமூகத்தினர் பெரும்பாலும் கோவில்களில் பூஜை செய்தல், பூ வியாபாரம் செய்தல் போன்ற பணிகளைச் செய்தல், சொற்ப வருமானத்தில் வாழ்கிறார்கள். அவர்களுடைய பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் ஆதிதிராவிடர் போல இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் குழந்தைகள் பள்ளிக்குச் படிக்க வாய்ப்பு இல்லை. பொருளாதார நிலையில் மிகவும் பின் தங்கிய நிலையில் இருப்பதால அவர்களை ஆதிதிராவிடர் பட்டியலில் சேர்ப்பதற்கு மாநில அரசு, மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யுமாஎன்று அறியவிரும்புகிறேன்.

(முற்பகல் 10.10)

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாநில அரசினைப் பொறுத்தவரையில் ஒரு இனத்தை பழங்குடியினர் பட்டியலிலோ அல்லது தாழ்த்தப் பட்டவர்கள் பட்டியலிலோ சேர்ப்பதற்கு மத்திய அரசிற்கு பரிந்துரை செய்வதற்கு சில நடைமுறை விதிகள் உள்ளன. தாழ்த்தப்பட்டவர் பட்டியலில் அவர்களைச் சேர்க்கின்ற விதி முறைகளிலே கொடுக்கப்பட்ட பழக்கவழக்கங்கள் அவர்களிடம் இல்லாத காரணத்தால் தாழ்த்தப்பட்டவர்களுக்குரிய அடிப்படைப் பண்புகளை அவர்கள் பெற்றிராத காரணத்தால் அவர்களைச் சேர்க்க இயலவில்லை.

அதுமட்டுமல்ல. இந்திய அரசினர், பாராளுமன்ற இணைத் தேர்வுக குழுவும், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், நலப் பணிகளில் ஈடுபட்டுள்ள பல்வேறு சங்கங்களும் பரிந்துரை செய்து தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் பட்டியல்களில் சேர்க்குமாறு கோரிய பல்வேறு இனங்களைக் கொண்டு இந்திய அரசினரால் அவற்றின்மீது தமிழ்நாடு அரசின் குறிப்புரைகள் தருமாறு கோரி அனுப்பியுள்ள பட்டியல்களிலும் இந்த பண்டாரத்தார் இனம் இடம் பெறவில்லை. மேற்கண்ட காரணங்களால் இதைப் பரிசீலனை செய்வதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. மூர்த்தி.: தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களின் பட்டியலிலே சேர்ப்பதற்கான நார்ம்ஸ் என்னென்ன? என்னென்ன தகுதிகள் இருக்கவேண்டும்? ரெட்டி, காப்பு, கம்மா போன்ற சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் முற்பட்டவர்கள். அவர்கள் மலைவாழ் மக்கள் போல போலிச் சான்றிதழ் பெற்று பல இடங்களிலே வேலைக்குச் சேர்ந்திருக்கிறார்கள். அந்தத் தகவல் அரசுக்குத் தெரியுமா? இப்படித் தெரிந்தால் அதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவரவர்களே, மூலக்கேள்வி ஒரு குறிப்பிட்ட இனத்தைப் பற்றியது. ஒரு இனத்தைப் பழங்குடியினர் பட்டியலிலோ அல்லது தாழ்த்தப்பட்டவர்களின் பட்டியலிலோ சேர்க்கவேண்டும் என்றால் அதற்கான அனைத்து முயற்சிகளையும் எடுத்து அதிலே தனியாக கவனம் செலுத்தி மத்திய அரசுக்கு பரிந்துரை செய்வது மட்டும்மே மாநில அரசனுடைய பணியாக இருந்துவருகிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள தனியான இனங்கள் பற்றி தனிக்கேள்வி போட்டால் அதற்குரிய விடையளிக்கப்படும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

படாளம் கிராமத்தில் பழங்குடியினருக்கு கட்டிக் கொடுககப்பட்டுள்ள வீடுகள்.

*வினா எண். 180—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வட்டம் படாளம் கிராமத்தில் பழங்குடியினருக்கு கட்டிக் கொடுக்கப் பட்டுள்ள வீடுகள் இடிந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) புதிய குடியிருப்புகள் அம்மக்களுக்குக் கட்டிக் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) மதுராந்தகம் வட்டம், படாளம் கிராமத்தில் சமுதாய வளர்ச்சி திட்டத்தின் கீழ் 1960-ம் ஆண்டு இருளர் குடும்பங்களுக்கு 17 வீடுகள் கட்டப் பட்டன. தற்சமயம் அவைகளில் 8 வீடுகளில் இருளர்கள்



குடியிருந்து வருகிறார்கள். எஞ்சிய 9 வீடுகள் காலியாகவும் பழுதடைந்தும் உள்ளன. குடியிருக்கும் 8 வீடுகளில் 4 வீடுகள் நல்ல நிலைமையில் இருக்கின்றன. மற்றவை காலப் போக்கில் சரியாகப் பராமரிக்கப்படாததால் சேதமடைந்துள்ளன.

(ஆ) இல்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த்: தலைவரவர்களே, 17 வீடுகளில் 9 வீடுகள் பழுதடைந்துள்ளன என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த குடியிருப்புகளை சீர் செய்யவும் அங்கே தண்ணீர் வழங்கவும் அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவரவர்களே, அரசினால் இதுவரை இலவசமாக வீடுகள் கட்டிக்கொடுக்கப் பட்டு வருகின்றதே தவிர அந்த வீடுகளைப் பராமரிக்கின்ற பணியினை வீட்டுக்கு உரியவர்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும். விதிமுறை அப்படித்தான் இருந்து வருகின்றது. அதிலே எந்த மாற்றத்தையும் செய்வதற்கு அரசு தயாராக இல்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த்: அங்கே வசிக்கின்ற இருளர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மிகவும் குறைந்த வருவாய் பெற்று வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். ஆகவே அவர்களால் அந்த குடியிருப்புகளை மீண்டும் சீர் செய்ய முடியாத நிலைமை இருப்பதால் அரசு அனுதாபத்தோடு அவர்களுடைய கோரிக்கையை ஏற்குமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவரவர்களே, ஏற்கெனவே நான் விடையளித்திருக்கிறேன். இப்போது நடைமுறையில் அந்தப் பழக்கம் இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கின்ற அடிப்படையில் அனுதாபத்தோடு ஏதாவது முயற்சியினை அரசு மேற்கொள்ளும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைப்பற்றி தெரிவித்தால் அனுதாபத்தோடு அரசு பரிசீலனை செய்யும்.

திரு. இரா. கருப்பையா: தலைவரவர்களே, ஆதி திராவிட மக்கள் அவர்களுக்குச் சொந்தமாக வீடு கட்டிக் கொள்ள வசதி இல்லாமல் இருப்பதால்தான் அரசு இம்மாதிரி இலவசமாக வீடு கட்டிக் கொடுக்கின்றது. அரசால் ஆதி திராவிட மக்களுக்கென்று கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகளைப் பழுதுபார்க்கக்கூடிய பொறுப்பும் அரசுக்கு இருக்கின்றது. ஆகவே அதற்காகவும் தனியாக நிதி ஒதுக்கீடு செய்து தரவேண்டும் என்பது அவசியம். ஆகவே அவ்வாறு அரசு கட்டிக் கொடுத்த வீடுகளைப் பழுது பார்ப்பதற்குரிய வகையிலே நிதி ஒதுக்கீடு செய்து அவர்களுக்கு உதவக்கூடிய முறையிலே அரசு நடவடிக்கைகளை மேற் கொள்ளுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவரவர்களே, நான் ஏற்கெனவே இதற்கு விடையளித்திருக்கிறேன்: தற்போது நடைமுறையில் அந்தப் பழக்கம் இல்லாத காரணத்தால்

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்கிற அனுதாபத்தின் அடிப்படையிலே வருங்காலங்களில் இதுபற்றிய முயற்சிகளை எடுக்கலாம்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆதித் திராவிடர்களுக்கு, இப்பொழுது மட்டும் அல்ல காங்கிரஸ் கட்சிக் காலத்திலிருந்தே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலிருந்தே அவர்களுக்கு கட்டுகிற கட்டிடங்கள் எல்லாம், காண்டிராக்ட் முறையில் விடப்படுவதால், அந்தக் கட்டிடங்களுக்காக ஒதுக்கப்படுகிற தொகை முழுமையான அளவில் பயன்பெறுவதில்லை என்பதோடு, கட்டிடங்கள் வெகு சீக்கிரத்திலேயே பழுது அடைந்துவிடுகின்றன. ஆகவே, கட்டிடம் சேதம் அடைவதற்குக் காரணம் குடியிருப்பவர்கள் அல்ல. அரசாங்கத்தின் பெயரால் கட்டப்படுவதால், இதை அரசு துரிதமாக பரிசீலனை செய்து, அரசு கட்டிடங்கள் குடியிருப்பவர்களுக்கு பாதுகாப்பு வழங்கக்கூடிய முறையில், ரிப்பேர்கள் செய்து கொடுப்பதற்கு விரைவில் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: துணைத் தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்டிருக்கிற கேள்வி பழங்குடி மக்கள் பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதித் திராவிடர்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்ட இலவச வீடுகளைப் பற்றி கேட்கிறார்கள். வீடுகளைக் கட்டித் தந்ததில் ஏதாவது குறை இருப்பின் அரசுக்குத் தெரிவித்தால், சம்பந்தப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.
### தொகுதிகள் குறித்து.

திரு. அ. செல்வராசன்: துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபோது அனைத்துக் கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து நல்ல காரியங்களை இந்த நாட்டுக்குச் செய்ய முன் வரவேண்டும் என்று சொன்னார்கள். நல்ல வேண்டுகோள்தான்.... (மணியடிக்கப்பெற்றது) என் தொகுதியைப் பொறுத்தவரையில்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இவைகள் எல்லாம் பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. தொகுதியைப் பற்றி பாயின்ட் [illegible] கேட்க முடியாது. திரு. இரெ. இராசமாணிக்கம்.



திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விடுவது 15 ஆம் தேதி நிறுத்தப்படும் என்று சொன்னார்கள். அப்படி 15 ஆம் தேதி நிறுத்தினால் தஞ்சை மாவட்டத்தில் பல ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் தாளடி செய்யப்பட்டு பாழாகக் கூடிய சூழ்நிலை இருக்கிற காரணத்தால் தண்ணீர் கொடுப்பதை நீட்டித்து இன்னும் ஒரு 15 நாள்....... (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இவைகள் எல்லாம் பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல. தொகுதியைப் பற்றி இப்படி ஒவ்வொரு உறுப்பினரும் சொல்லிக் கொண்டிருந்தால் நேரம் இருக்காது. உட்காருங்கள்.

## 3. கவன ஈர்ப்புகள்.

### (அ) நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கோ—ஆப்டெக்ஸ் செலுத்தவேண்டிய தொகை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் இரா. தாமரைக்கனி, எம். சின்னசாமி, ஏ. சி. சண்முகம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர், அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. இரா. தாமரைக்கனி: துணைத் தலைவர் அவர்களே, "நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கோ—ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் செலுத்தப்பட வேண்டிய தொகை இன்னும் வழங்கப்படாததால் நெசவாளர்கள் பாதிப்பு குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வித் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவர் அவர்களே பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன். அதற்கு மேலும் ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். "மலிவு விலை துணி மானியம் 1.29 கோடிக்கு கோ—ஆப்டெக்ஸ்நிறுவனத்திற்கு வழங்குகிற உத்தரவு 11-2-1982 அன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது, மேலும் 31-3-1982—க்குள் மத்திய அரசிடமிருந்து தள்ளுபடி மானியம் கொடுக்கப்பட்டு, 2.5 கோடி அளவில் கிடைத்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது".

### அறிக்கை

தமிழ்நாட்டில் 1,251 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மொத்தம் 2.89 இலட்சம் தறிகளுடன் இயங்கி வருகின்றன. அவற்றின் தலைமைச் சங்கமாகக் 'கோ—ஆப்டெக்ஸ்' எனப்படும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் இயங்கி வருகிறது. இது, பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தியில் பொதுவாக 50 சதவீதத்தை கொள்முதல் செய்து

[மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்] [1982 பிப்ரவரி 12

தமிழகத்திலும் இதர மாநிலங்களிலும் உள்ள அதன் 523 கிளை விற்பனை நிலையங்கள் மூலமாக விற்பனை செய்து வருகின்றது. பிரதம நெசவாளர் கூட்டுவுச் சங்கங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும் கைத்தறி துணிகளுக்கு கோ-ஆப்டெக்ஸின் நிதி நிலையைப் பொறுத்து, பெரும்பாலும் அவ்வப்போது பணம் பட்டுவாடா செய்யப்படுகின்றது. பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பினைத் தர வேண்டுமென்ற கொள்கை அடிப்படையில், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் பிரதம சங்கங்களிலிருந்து அதிக அளவில் கொள்முதல் செவ்து வருகிறது. 1981-82ம் ஆண்டில் கோ-ஆப்டெக்ஸின் துணி விற்பனை ரூ. 75/ கோடியாக இருக்க வேண்டுமென குறியீட்டளவு நிர்ணயிக்கப்பட்டு, கடந்த 7 மாதங்களில் (அதாவது ஜூலை 1981 முதல் 1982 முடிய கோ-ஆப்டெக்ஸ் ரூ.38.00 கோடி மதிப்புள்ள கைத்தறி துணிகளைக் கொள்முதல் செய்துள்ளது. சென்ற ஆண்டு இதே காலத்தில் (அதாவது ஜூலை 1980 முதல் ஜனவரி 1981 முடிய) கோ-ஆப்டெக்ஸ் ரூ. 26 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளை கொள்முதல் செய்தது. ஜூலை 1981 முதல் ஜனவரி 1982முடிய ரூ.52 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளை விற்பனை செய்துள்ளது. சென்ற ஆண்டு இதே காலத்தில் விற்பனை ரூ.33 கோடியாகும்.

2. கோ-ஆப்டெக்ஸினால் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொள்முதல் செய்த வகையில் பணம் பட்டுவாடா செய்த விவரம் பின்வருமாறு:—

| | (ரூ. கோடியில்). |
|---|---|
| ஜூலை 1981 | 3·90 |
| ஆகஸ்ட் 1981 | 4·72 |
| செப்டம்பர் 1981 | 5·67 |
| அக்டோபர் 1981 | 5·43 |
| நவம்பர் 1981 | 2·38 |
| டிசம்பர் 1981 | 5·26 |
| ஜனவரி 1982 | 3·16 |
| மொத்தம் .. | 30.47 |

சென்ற ஆண்டு ஜூலை 1980 முதல் ஜனவரி 1981 முடிய பட்டுவாடா செய்யப்பட்ட தொகை ரூ. 22.03 கோடியாகும்.

3. பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கொள்முதல் செய்யும் கைத்தறி துணிகளுக்கு உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யத் தேவையான எல்லா உதவிகளும் அரசு கோ-ஆப்டெக்ஸிற்கு செய்து வருகிறது. 1981-82 ஆம் ஆண்டில் கோ-ஆப்டெக்ஸில் மத்திய அரசு உதவியுடன் மாநில அரசு ரூ. 1 கோடி அதிகப்படி பங்கு மூலதனமாக முதலீடு செய்துள்ளது. இவ்வாறு முதலீடு செய்ததன் மூலம கோ.ஆப்டெக்ஸின் கடன் வாங்கும் திறன் அதிகரித்து. அதிக கடன் வசதி



1982 பிப்ரவரி 12] [திரு செ. அரங்கநாயம்]

பெற முடிகிறது. 1981-82 ம் ஆண்டில் கோ-ஆப்டெக்ஸிற்கு ரூ. 25 கோடி அளவுக்கு ரிசர்வ் வங்கியிலிருந்து காசுக்கடன் வசதி பெற்று தரப்பட்டது. இத்தகைய வசதிகள் மூலம் கோ-ஆப்டெக்ஸ் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் நிலுவைத் தொகையை ஓரளவு குறைக்க முடிந்தது. 31-12-81 அன்றைய நாளில் கோ-ஆப்டெக்ஸ் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்க வேண்டிய தொகை ரூ. 10.13 கோடியாகும். இதில் சுமார் ரூ. 5.95 கோடி இது நாள் வரை கொடுக்கப்பட்டது. 1982 ஜனவரி மாதத்தில் மட்டும் சுமார் ரூ.5 கோடி அளவிற்கு சரக்கு கொள்முதல் செய்யப்பட்டதால் இன்றைய தேதியில் பிரதம சங்கங்களுக்கு கொடுபட வேண்டிய மொத்த தொகை சுமார் ரூ. 10 கோடியாகும். பிரதம சங்கங்களில் உற்பத்தியாகும் துணிகளை கோ-ஆப்டெக்ஸ் தொடர்ந்து கொள்முதல் செய்து வருகின்றது. தற்போது கோ-ஆப்டெக்ஸில் ரூ. 43.00 கோடி மதிப்புள்ள கைத்தறி துணிகள் சரக்கு இருப்பாக உள்ளது. (சென்ற ஆண்டு அதே தேதியில் இருப்பு மதிப்பு ரூ. 31 கோடி) தீபாவளி, பொங்கள் பண்டிகைகளுக்கு பின்புள்ள காலம் கைத்தறி துணிகளின் விற்பனையில் ஒரு மந்த காலம் என்பதாலும், கோ-ஆப்டெக்ஸின் நிதி நிலைமை சற்று நெருக்கடியாக இருப்பதாலும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் நிலுவைத தொகை கொடுப்பதில் சற்று தாமதம் ஏற்பட்டது. ஆனால் அத்தாமதம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தினர்களுக்கு வேலை வாய்ப்பு தருவதில் எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் நெசவாளர்கட்கு தொடர்ந்து பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வேலை அளித்து வருகின்றன. மத்திய அரசிடமிருந்து 1980-81 முடிய கோ-ஆப்டெக்ஸிற்கு வர வேண்டிய தள்ளுபடி மானியம் சுமார் ரூ. 2.12 கோடி நிலுவையிலுள்ளது. நடப்பு ஆண்டில் (1981-82)-ல் கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி ரிபேட் கொடுத்த வகையில் மேலும் சுமார் ரூ. 4.50 கோடி முடங்கியுள்ளது. தமிழக அரசு ஊழியர்களுக்கும் மற்றும் பொதுத்துறை, அரசுத்துறை நிறுவனங்களுக்கும் துணி கடனாகக் கொடுத்த வகையில் ரூ. 9.65 கோடி மாநில சங்கத்திற்கு வர வேண்டியுள்ளது. இவற்றின் பொருட்டு ரூ. 6 கோடி வழிவகைக் கடனாக கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் அரசிடம் கேட்டுள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும் மத்திய அரசிடமிருந்து வந்துள்ள மலிவு விலைத் துணி மானியம் ரூ. 1.29 கோடியை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு வழங்க ஓரிரண்டு நாட்களில் ஆணை பிறப்பிக்கப்படும். மேலும் 31-3-82க்குள் மத்திய அரசிடமிருந்து தள்ளுபடி மான்ய கணக்கில் ரூ. 2.50 கோடி கிடைத்துவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இவை தவிர, ரிசர்வ் வங்கியிடமும் அதிக நிதி வசதி கேட்கப்பட்டுள்ளது. இவற்றின் மூலம் விரைவில் பிரதம சங்கங்களுக்கு கொடுக்க வேண்டிய நிலுவைத் தொகை கொடுக்கபட்டுவிடுமெனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு அரசு சில்லரை விற்பனையின் மீது வழங்கிய 20சதவீதம் சிறப்புத் தள்ளுபடியையும், மொத்த விற்பனையின் மீது வழங்கிய 15 சதவீதம் சிறப்புத்தள்ளுபடியையும் பயன்படுத்தி பிரதம சங்கங்கள் ரூ. 8.12

கோடி விற்பனை செய்துள்ளன. பொங்கலுக்கு பிறகு பிரதம சங்கங்களின் சரக்கு இருப்பு மதிப்பு ரூ. 6.78 கோடியாகும். இது, இச்சங்கங்களின் ஒரு மாத உற்பத்திக்கு சமமேயாகும். உற்பத்தியைப் பொறுத்த அளவில் சென்ற ஆண்டு மாத மொன்றுக்கு சுமார் 86.07 லட்சம் மீட்டர் கைத்தறித் துணிகளை உற்பத்தி செய்து வந்த பிரதம சங்கங்கள், தற்பொழுது மாத மொன்றுக்கு சுமார் 96.03 லட்சம் மீட்டர் துணிகளை உற்பத்தி செய்து வருகின்றன.

பிரதம சங்கங்களுக்கு பணம் பட்டுவாடா செய்ய அரசும் மாநிலச் சங்கமும் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதோடு, பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அங்கத்தினர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பினை அளித்து வருகிறது என்பது மேற்கண்ட விவரங்களிலிருந்து புலனாகும்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிடமிருந்து வரவேண்டிய ரிபேட் தொகை வராததினால் தான் சுமார் 6 கோடி ரூபாய்க்கு மேல் வராததினால்தான், இந்தத் கைத்தறி நிறுவனங்களுக்கு குறித்த நேரத்தில் தொகை செலுத்த முடியவில்லை என்று சொல்கிறார்களே, அப்படியானால் அவைகளை பெறுவதற்கு நம் மாநில அரசு என்ன முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என்றும், அத்தோடு மத்திய அரசிடமிருந்து நம் அரசு ரிபேட்-அட்வான்ஸ் ஏதாவது கேட்கிறார்களா என்பது குறித்தும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிடமிருந்து வரவேண்டிய துணி மானியம் 1.29 கோடி வந்து அதைக் கொடுப்பதற்கும் உத்தரவு இட்டிருக்கிறோம்.

மேலும் ரூ. 2.5 கோடி 31-3-82—க்குள் வந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(முற்பகல் 10.20)

திரு. ஏ. சி. சண்முகம்: கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளதுபோல் டிசம்பரில் ரூ. 5.26 கோடி பணம் பட்டுவாடா செய்யப்பட்டது. 1982 ஜனவரியில் ரூ.3.16 கோடி பட்டுவாடா செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. பட்டுவாடா செய்வதில் ஒரு மாத கால வித்தியாசத்தில் ரூ. 2.10 கோடி குறைந்ததால் இந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அறிக்கையில் '....கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தினர்களுக்கு வேலைவாய்ப்பு தருவதில் எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் நெசவாளர்கட்கு தொடர்ந்து பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் வேலை அளித்து வருகிறன. என்றிருக்கின்றது. சங்கங்களுக்கு பணம் பாதி கொடுத்தால்தான், அதுவும் தமிழ்நாடு பெடரேஷன், கர்நாடகா பெடரேஷன் போன்றவைகளுக்கு கடன் கொடுத்துவிட்டால் சங்கங்களுக்கு பணம் இல்லாத நிலை ஏற்படுகிறது. அப்போது உறுப்பினர்களுக்கு கூலி கொடுக்க முடியாத ஒரு நிலை ஏற்படுகிறது. ஆகவே இதை விரைந்து போக்க அரசு முன்வருமா?



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் அதற்கான முயற்சிகளைத்தான் அரசாங்கம் மேற்கொண்டிருக்குறது.

(ஆ) பேரளம் ஆதித் திராவிட மாணவர்கள் தங்கும் விடுதி.

திரு. செ. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, ''தஞ்சை மாவட்டம் பேரளம் ஆதி திராவிட மாணவர்கள் தங்கும் விடுதியில் சாக்கடை நீர், குடிநீர் குழாய் அருகே தேங்கிக் கிடப்பதால் மாணவர்களுக்கு மலேரியா நோய் ஏற்படுவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதித் திராவிடர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவரவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் 5.2.82 அன்று தஞ்சை மாவட்டம் நன்னிலம் வட்டாட்சியரை தொலைபேசியில் அறிவுறுத்தியபடி வட்டாட்சியர் பேரளம் மாணவர் விடுதிக்கு உடனடியாகச் சென்று பார்வையிட்டு, கீழ்க் காணும் விவரங்களை தொலைபேசியின் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இயக்குநருக்குத் தெரிவித்துள்ளார்.

பேரளம் ஆதிராவிடர்கள் மாணவர் விடுதியானது 30 மாணவர்களைக் கொண்ட விடுதியாகும். இதுசமயம் இந்த விடுதியானது தனியார் கட்டிடத்தில் வாடகைக்கு அமைந்துள்ளது. அந்த விடுதியிலிருந்து வெளியேறும் கழிவு நீரானது இந்த விடுதியினை அடுத்துள்ள யள்ம்புநாதர் மடத்தின் மூலம் வெளியில் செல்லவேண்டும். ஆனால் அந்த மடத்திற்குப் பொறுப்பிலுள்ளவர்கள் சில நாட்களுக்கு முன் கழிவு நீரானது வெளியேறும் வழியினை அடைத்துவிட்டதாகத் தெரியவருகிறது. ஆனால் பத்து நாட்கட்கு முன்னர் அம்மடத்தின் பொறுப்பிலுள்ளவர்களிடம் தொடர்பு கொண்டதன் விளைவாக கழவுநீர் வெளியேறும் வழியானது திறந்துவிடப்பட்டது.

மேலும், இந்த சாக்கடை கழிவு நீர் தேக்கத்தினால் எந்த ஒரு மாணவனுக்கும் மலேரியா காய்ச்சல் வரவில்லை; 5.2.82 அன்று நன்னிலம் வட்டாட்சியர் பூந்தோட்டம் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலருடன் சென்று விடுதியில் உள்ள மாணவர்களின் உடல்நிலையை பரிசோதிக்குமாறு செய்தார். அவ்வாறு பரிசோதித்ததில் மலேரியா காய்ச்சல் எந்த மாணவனுக்கும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார். இது குறித்து மாணவரிடையே யாதொரு பதட்டநிலையும் காணவில்லை என்றும் வட்டாட்சியர் தெரிவித்துள்ளார்.

திரு. செ. இராமலிங்கம்: மாதக்கணக்கில் இந்த விடுதியைச் சுற்றி சாக்கடை நீர் தேங்கிக் கிடந்தது. பத்து நாட்களாகத்தான் சாக்கடை நீர் வேறு வழியில் திறந்துவிடப்பட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் மாதக்கணக்கில் தேங்கிக் கிடந்தது என்றால் கப்பாளர், வெல்பேர் ஆபீஸர்

இவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? இவர்கள் அரசுக்கு தெரிவித்தார்களா? அதன் மேல் என்ன நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: விவர அறிக்கையில் இது பற்றி விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. ஸ்வயம்நாதர் மடம் மூலம் கழிவுநீர் வெளியே செல்லவேண்டும். அந்த மடத்தின் பொறுப்பில் உள்ளவர்கள் சில நாட்கள் அதை மூடிவிட்டதால் இந்த ஒரு நிகழ்வு ஏற்பட்டது. வரும் காலத்தில் இப்படி நிகழாமல் இருக்க அதிகாரிகளும் மற்றவர்களும் அறிவுறுத்தப் பட்டிருக்கிறார்கள்.

திரு. செ. இராமலிங்கம்: தற்போது வாடகைக் கட்டடத்தில் விடுதி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எனவே ஹரிஜன நலத் துறை வாயிலாக அவர்களுக்கு சொந்தமாக இந்த ஆண்டு அரசு கட்டடம் கட்டித்தருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: இந்த ஆண்டைப் பொறுத்த வரையில் முப்பது விடுதிகளுக்கு புதிதாகக் கட்டடம் கட்டப் படுகிறது. அதில் இதையும் சேர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

### 4. அரசினர் தீர்மானங்கள்.

#### (அ) நீதிபதி பால்கமிஷன் அறிக்கை மீதும் அரசு எடுத்த நடவடிக்கை குறித்தும் விவாதம் (தொடர்ச்சி).

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால் கமிஷன் பரிந்துரைகள் மீதான நடவடிக்கைகள் மீது விவாதிக்கிற வாய்ப்பினை தந்தமைக்கு என் நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். கமிஷன் நியமனத்திற்கு முன்னால் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் போலீஸ் அதிகாரிகளும் சுப்பிரமண்ய பிள்ளை உடலை அவரது மகன் சிதம்பரதாணு விருப்பத்தை ஏற்று பரிசீலனை செய்த டாக்டர் ராமமூர்த்தி அவர்கள் கொடுத்த அறிக்கை மீது தற்கொலை என அரசாங்கத்திற்கு தகவல் அனுப்பினார். அரசுக்குக் கிடைத்த தகவலை அமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள். இதிலே சில சந்தேக உணர்வுகளை எழுப்பியதன் காரணமாக உண்மைகளை உணர்ந்து கொள்ள தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் விரும்பினார்கள். அதனால் எம். ஜே. ஆர். பால் கமிஷனை அரசு நியமித்தது. ஆதலால், அரசாங்கத்தினுடைய எண்ணம் தூய்மையானது, நேர்மையானது. நியாயமானது என்பதால் உண்மையைத் தெரிந்து கொள்ள ....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் 10 நிமிடங்கள் ஒதுக்கப்பெறுகின்றன.

திரு. மி. வின்சென்ட்: உண்மையைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதில், எதிர்க்கட்சிகளுக்கு இருக்கின்ற ஆர்வத்தை விட, ஆளுங்கட்சிக்கு அதிக அக்கறை இருக்கிறது. அக்கறை செலுத்துகிறது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் ஒத்துக்





கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். பால் கமிஷனின் பரிந்துரை என்ன? வன்முறை காரணமாக சுப்பிரமணிய பிள்ளை இறந்திருக்கலாம், எனவே, இதைப் பற்றி மாநில சி.ஐ.டி. என்ற தனி அமைப்பின் மூலம் புலன் விசாரணை செய்ய வேண்டுமென்பதுதான். இந்தக் கமிஷனுடைய பரிந்துரையை அரசு ஏற்றுக்கொண்டது. சி.ஐ.டி. போலீசைக் கொண்டு, பொது விசாரணை நடத்துவதற்கான உத்தரவினை, அறிக்கை கிடைத்த ஒரு மாதத்தில் அரசு போட்டிருக்கிறது. ஆதலால், பால் கமிஷன் அறிக்கையின் பிரதான சிபார்சை அரசு ஏற்றுக் கொண்டது. நிராகரிக்கவில்லை.

அடிப்படை சிபார்சு என்னவென்றால், அறங்காவலர் குழுவைக் கலைக்க வேண்டுமென்பது தான். அறங்காவலர் பதவியை நீக்குவது என்பது இந்து சமய அறக்கட்டளை 53வது பிரிவின்படி அதல் குறிப்பிட்ட காரணங்கள் ஏதேனும் ஒன்றிருக்க வேண்டும் என்பதை பால் கமிஷன் அறிக்கை தெளிவாக்குகிறது. கலைக்க வேண்டுமென்று தொடங்கிய நீதிபதி பால் அவர்கள், கலைக்க முடியாததற்கான காரணங்களையும் சொல்கிறார். ஆனால், நீதிபதி பால் அவர்கள் எந்த ஒரு குற்றச்சாட்டையும், எந்த ஒரு தனி நபர் செய்திருக்கிறார் என்பதையும் சந்தேகத் திற்கு இடமில்லாமல் தெளிவாக்கவில்லை. ஆதலால், இந்த வன்முறையைச் செய்தது யார்? அவர்கள் பெயர் என்ன? என்பதை அவரால் தெளிவாகச் சொல்ல இயலவில்லை.

சென்னை மத்திய சிறைச்சாலையில் நடந்த கொடுமைகளை விசாரிக்க நீதிபதி எம். எம். இஸ்மாயில் அவர்கள் தலைமையில் ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டது. சிறைக் கைதிகளை மனோகரன் என்ற ஒரு சிறை அதிகாரி கொடுமைப்படுத்தியதாக 1977 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 2 ஆம் தேதி அப்படி செய்ததாக தெளிவாகக் கூறினார். அதை வைத்து மனோகரன் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதை அடுத்து, மனோகரன் ரிட் தாக்கல் செய்தார், அதன்மீது நீதிபதிகள் இராமானுஜம்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நேரம் குறைவாக இருக்கின்ற காரணத்தால், ஒவ்வொரு கட்சியிலிருந்து ஒருவர் மட்டும் பேசுவதாக முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. அதனால், நாளைக்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், அமைச்சரவை சார்பாக ஒருவரும் பேசுவார்கள். எனவே, நீங்கள் பேச்சை முடித்துக் கொள்ளுங்கள்.

#### (ஆ) விதி 31—ஐ தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஒவ்வொரு நாளும் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடை அளிப்பதற்கென்று ஒதுக்கப்பெற வேண்டும் என்றுள்ள பேரவை விதி 31 தளர்த்தப்பெற்று, நாளை, 13-2-1982 அன்று நீதிபதி திரு. பால் கமிஷன் பரிந்துரைகள் மீதும், அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் மீதும் விவாதம் எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நாளை காலை 9 மணிக்கு அவை தொடங்கி, 12 மணிக்கு முடிவடையும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாளைய தினம் பகல் 12½ மணிக்கு சுவீடிஷ் பிரதமர் அவர்கள் சென்னைக்கு வருகை தருகின்ற காரணத்தால், குறிப்பிடத்தக்க பலரும், தலைவர்களும் அங்கே இருக்கவேண்டிய அவசியமிருப்பதால் இந்த முடிவு ஏற்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அனைத்துக் கட்சித் தலைவர்களும் இதை ஏற்றுக்கொண்டதற்காக நன்றி கூறிக் கொள்கிறேன்.

(அ) நீதிபதி பால் கமிஷன் அறிக்கை மீதும் அரசு எடுத்த நடவடிக்கை குறித்தும் விவாதம் (தொடர்ச்சி).

* திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு திருச்செந்தூர் தேவஸ்தானத்தில் நடைபெற்ற திரு. சுப்பிரமணியப் பிள்ளை கொலை மீது சி.ஜே.ஆர். பால் கமிஷன் அளித்த அறிக்கை இந்த அவையிலே வைக்கப்பட்டுள்ளது, அதன்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைக் கூற முன் வந்திருக்கிறேன்.

குறிப்பாக, இந்தக் கமிஷன் நியமிக்கப்பட்ட சூழ்நிலையைப் பொறுத்தவரையில், அந்த மரண சம்பவம் நடைபெற்றது பற்றி விசாரிப்பதற்காக நம்முடைய காவல் துறையாகயிருந்தாலும், அந்த வழக்கை நீதிபதி விசாரிக்கவேண்டுமென்று சொல்லி, அந்த நகரத்திலே இருக்கக்கூடிய மக்களும், நெல்லை மாவட்டத்தில் இருக்கக்கூடிய அரசியல் கட்சிகளும், தமிழகம் பூராவிலும் மிகப் பெரிய கொந்தளிப்பு ஏற்பட்ட காரணத்தால், இந்த வழக்கை போலீஸ் துறையிடம் ஒப்படைத்தால் சரியான நீதி கிடைக்காது என்ற காரணத்தால்- போலீஸ் துறைமீது இன்றைக்கு மக்களுக்கு நம்பிக்கை இல்லாத காரணத்தினால், ஒரு நியாயமான, நேர்மையான முடிவிற்கு வரவேண்டுமென்ற அடிப்படையில், இந்த வழக்கின்மீது விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டது.

[முற்பகல் 10.30]

ஆனால், இந்த விசாரணைக் கமிஷன் உயநீதிமன்ற நீதிபதி அவர்களின் பரிந்துரையின் பேரில் தான் ஜே. சி. ஆர், பால் அவர்கள் இந்த அரசு நியமித்திருக்கவேண்டுமென்று கருதுகிறேன். இந்தக் கமிஷனைப் பொறுத்தமட்டில் தெளிவாக நீங்கள் இங்கே விளக்கியிருக்கிறீர்கள். திருச்செந்தூர் தேவஸ்தானத்தில் இருக்கக்கூடிய அந்த ஊழியர் மட்டுமல்லாமல் தமிழகம் பூராவிலும் இருக்கக் கூடிய அரசு ஊழியர்கள் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டால் மிகப் பெரிய போராட்டங்களை ஆரம்பித்து





நடத்த திட்டமிட்டனர் தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்து அரசியல் கட்சிகளும் மக்களும் கொதிப்பான நிலைக்கு வந்த பிறகு இந்த அரசு நீதி விசாரணையை ஏற்படுத்தியது. இதை அமைக்கும்போது தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள் நோக்கங்களைப் பற்றி. இது போன்ற தவறுகள் இனி நடைபெறாமல் இருக்க வேண்டுமென்பதற்காக இந்த மரணம் எந்தச் சூழ்நிலையில் எப்படி நடைபெற்றது என்பதை அரசுக்குத் தெரிவிக்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்தக் கமிஷன் நியமிக்கப்பட்டது. இந்தக் கமிஷன் நியமிக்கப்பட்டபோது நீதிபதி சி. ஜே. ஆர். பாலைப் பற்றி ஆரம்பத்தில் சந்தேகித்தவர்கள் உண்டு. ஆனால் இப்படிப்பட்ட ஒரு சிக்கலான ஒரு கடமையைத் திறமையாக வரையறைக்குள் நின்று கடமையைச் செய்து குறித்த காலத்தில் ரிப்போர்ட்டைக் கொடுத்திருக்கிறார்கள். எவ்வளவோ கமிஷன்கள் போடப்பட்டு அந்தக் கமிஷன்கள் கால வரம்புக்குள் அறிக்கை கொடுக்காத நிலைமைகள் எல்லாம் இருந்திருக்கின்ற சி. ஜே. ஆர். பால் தனக்குக் கொடுத்த கால வரம்புக்குள், சட்ட வரம்புக்குள், நின்றுக் கொண்டு நியாயமான முறையில் குறித்தக் காலத்தில் இந்தக் கமிஷன் ரிப்போர்ட்டைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட அடிப்படையில் 30 ஆண்டுக் காலம் நீதிபதியாக இருந்த அவர்கள் சிக்கலான இந்த நீதி விசாரணையை நடத்தி இந்த நியாயமான ரிப்போர்ட்டைக் கொடுத்தற்காக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக சி. ஜே. ஆர். பால் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் கொலையைப் பற்றி, இந்த வழக்கைப் பற்றி பரபரப்பான சூழ்நிலை நெல்லை மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கிறது. பொதுவாக இன்றைக்குக் கொடுத்திருக்கக் கூடிய அறிக்கையில் பல்வேறு அரசு தரப்பு சாட்சிகளையும், மற்ற தரப்பு சாட்சிகளையும் விசாரித்து தெளிவாகத் தீர்ப்புச் சொல்லியிருக்கிறார்கள்.

அன்றைய தினம் அந்த தேவஸ்தானத்திற்குச் சொந்தமான குடிலில் யாரும் தங்கவில்லை என்று அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. யாரோ ஒருவருக்கு பூசாரியால் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் அந்தக் குடிலில் யாரும் தங்கவில்லை என்பது சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் பார்த்தால் இந்த மரணத்தைப் பற்றி நாங்கள் பார்த்தோம் நேரடியாக என்று சாட்சி சொல்ல யாருமே முன்வரவில்லை. அரசு பரிந்துரை செய்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மேலான அவை உறுப்பினர்களும் சிந்திக்க வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன். அந்தச் சூழ்நிலையில் அந்த அறையைச் சுற்றி யாரும் தங்கவில்லை என்று குறிப்பிடப்பட்டிருப்பதை எடுத்துக் கொண்டால் அந்த அடிப்படையில் இவர்கள் அடித்தார்கள், இன்னின்னார் அடித்தார்கள் என்று சொல்ல வேண்டுமென்றால் அங்கே பணிபுரிகிற அந்த ஊழியர்களைத் தவிர யாருமே பார்த்திருக்க முடியாது. திருவாளர் அவர்கள் தான் சாட்சி சொல்ல வேண்டும்.

அந்த அதிகாரி சுப்பிரமணிய பிள்ளை 72 பேர்கள் அமர்ந்து உண்டியலை எண்ணக்கூடிய பணத்திலிருந்து 2500 ரூபாயை எடுத்துக்கொண்டு வந்தார் என்று சொல்கிறார்கள். நான் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். பணத்தை எண்ணு கிறார்கள், அதைப் போல பல விஷயங்கள் நடக்கின்றன 60, 70 பேர் அமர்ந்திருப்பது மட்டுமல்லாமல் ஆதித்தனாரால் கட்டப்பட்ட கோமதி அம்மாள் கல்யாண மண்டபத்திற்கும் இந்தக் குடிலுக்கும் இருக்கின்ற தூரம் அதிகமான தூரம்—நான் திருச்செந்தூர் ரோடு அந்த மண்ணோடு நெருங்கிய சம்பந்தப்பட் டவன், சொல்கிறேன். அவ்வளவு பெரியத் தொகையை எடுத்துக் கொண்டு வந்தார் என்பதை நம்பமுடியவில்லை.

அவர் அப்படி எடுத்துக் கொண்டு சென்றார் என்று யாரோ ஒருவர், போன் மூலமாக தகவல் சொல்கிறார் என்று அறங்காவலர் குழுத் தலைவர் வாய்மொழிப் பதிரத்திலே சொல்லியிருக்கிறார். யாரோ ஒருவர் போன் மூலம் அறங் காவல் குழுத் தலைவரிடம் சொன்னார் என்ற அடிப்படையில் அங்கே சென்றோம் என்று சொல்கிறார்கள். அங்கே இருக்கக்கூடிய சுப்பிரமணிய பிள்ளை குளியலறையில் தற்கொலை செய்து கொண்டார் என்று சொல்கிறார்கள். அவர் இறந்தபோது அல்லது இறக்கும் தருவாயில் இருந்த போது முதலிலே பார்த்து எடுத்தவர்கள் என்று சொல்லப் படுகிற காவலாள் முத்தையா, அடிப்படை பணியாளர் சிதம்பரம், துப்புரவுத் தொழிலாளி ஆறுமுகம் ஆகியோரில் இரண்டு பேர் சாட்சியமளித்திருக்கிறார்கள், ஒருவர் சாட்சிய மளிக்கவில்லை, இடைப்பட்ட காலத்தில் அவர் தற்கொலை செய்து கொண்டார் என்று சொல்கிறார்கள். ஒரு கொலை யை விசாரிக்கிற போது மீண்டும் ஒரு கொலை நடைபெற்றிருக் கிறதோ என்ற சந்தேகம் எனக்கு எழுகிறது. குறிப்பாக இறந்த துப்புரவுத் தொழிலாளி ஆறுமுகத்தின் மனைவி அப்போது கர்ப்பிணியாக இருந்திருக்கிறார், எங்களுடைய நெல்லை மாவட்டத்திலே மனைவி கர்ப்பிணிவாக இருக்கிற போது கணவன் ஒரு பிராணியைக் கூட கொல்ல மாட்டார். அப்படிச் செய்தால் அவர்களுக்குப் பிறக்கின்ற குழந்தை அரைகுறையாக அங்கஹீனமாக பிறக்கும் என்ற சம்பிரதா யத்தின அடிப்படையில் தவறைச் செய்யமாட்டார்கள். கொலையாக இருந்தாலும் தற்கொலையாக இருந்தாலும். நேரிலே பார்த்ததைச் சொல்வேன் என்று ஆறுமுகம் உறுதியாக இருந்த காரணத்தால் அவர் போய் தூத்துக் குடியிலே தற்கொலை செய்து கொண்டார் என்று சொல்கிறார்கள். ஏதோ சாதாரண சமுதாயத்திலே பிறந்து விட்ட காரணத்தினாலேயே அவர் எதையும் செய்யலாம் என்ற முறையிலேமூடிமறைத்திருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் சொல்கிறேன்.

அன்றைய தினம் அதிகாரி சுப்பிரமணிய பிள்ளை இறந்து விட்டார் அல்லது இறக்கும் தருவாயில் இருந்தார் என்றால் அறங்காவலர் குழுத் தலைவர் டாக்டர் ஜி. ஆர். பால கிருஷ்ணன் என்பவர் சாதாரண ஆள் அல்ல. ஹோமியோபதி





டாக்டர், நெல்லை மாவட்டத்திலேயே மிகப் பெரிய அளவிலே பல ஆண்டுக் காலம் மருத்துவம் செய்து வந்த டாக்டர் மோசஸ் என்ற திறமையானவரிடத்திலே பல ஆண்டுக்காலம் கம் பவுண்டராக இருந்து பணியாற்றியவர்' பிறகு அங்கே நேற்றைய தினம் வரையிலே டாக்டராக இருந்து அந்த வேலையை செய்து வருகிறவர், அவர் முதல் உதவியைக் கூட, சட்டத்தின் அடிப்படையில் நான் கேட்கவில்லை' மனிதாபிமான அடிப்படை யிலே கேட்கிறேன், முதல் உதவி செய்திருக்கிறார்களா என்றால் இல்லை.

அந்த அதிகாரியின் பிணத்தை அங்கே இருந்து அரசு மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றிருக்கிறார்கள். அங்கே தூக்கிச் சென்றவர்கள் உடலை டாக்டரிடம் காட்டுகிறார்கள். டாக்டர் யார் என்று சோதித்துப் பார்த்து விட்டு எப்படி இறந்த பிணத்தை தூக்கி வந்தீர்கள் எங்கே போலீஸ்காரர்கள் என்று கேட்க பிணத்தைத் தூக்கிக் கொண்டு வந்தவர்கள் அங்கேயே அதைப் போட்டு விட்டு ஓடி விட்டார்கள். இது நடந்தது உண்மை. அந்தப் பிணத்தை எடுப்பதற்கு யாருமே முன் வரவில்லை. அவர்களைக் கேள்வி கேட்ட அந்த பெண் டாக்டர் எப்படியெல்லாம் விரட்டப்பட்டார் எப்படி மாற்றம் செய்யப் பட்டார், பின்னர் எப்படி அங்கே வருவிக்கப்பட்டார் என்ற உண்மையை நான் மன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஆகவே இந்தச் சூழ்நிலையில் அறங்காவலர் குழுத் தலைவர் டாக்டர் பாலகிருஷ்ணன் தன்னுடைய அதிகாரத்தில் இருக்கக் கூடிய ஒரு தேவஸ்தானத்தில் கொலையோ தற்கொலையோ ஒரு உயர்ந்த அதிகாரி மரணம் அடைந்திருக் கிறார் என்கிறபோது ஒரு அறங்காவலர் குழுத் தலைவர் எப்படி நடந்து கொள்ள வேண்டும், என்ன செய்ய வேண்டும்? இந்த மாமன்றத்திலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர் களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். அன்றைய தினம் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் இந்த நாட்டில் வேலை கொடு அல்லது சிறையில் இடு என்று போராட்டம் நடத்திக் கொண்டிருந்தார்கள். நெல்லை மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான தோழர்கள் அன்றைக்கு என்னுடைய தலைமையிலே நெல்லை ரெயில் நிலையத்திலே மறியல்செய்து கொண்டிருந்தோம்.

[முற்பகல் 10.40]

அப்பொழுது எங்களைக் கைது செய்து போலீசார் அழைத்து வருகிறார்கள். அங்கே டாக்டர் பாலகிருஷ்ணனை நான் பார்க்கிறேன். ஏற்கனவே மாலை முரசு பதத்திரிகையில் படித்த காரணத்தினால் திருச்செந்தூரில் சம்பவம் நடந்திருக்கிறது. சம்பந்தப்பட்ட தலைவர் இங்கே வந்திருக்கிறாரே என்று நான் ஐயப்பட்டதுண்டு.

[திரு. மு. அப்பாத்துரை] [1982 பிப்ரவரி 12

இப்படிப்பட்ட சம்பவங்களையெல்லாம் நான் ஏன் சுட்டிக்
காட்டுகிறேன் என்றால், ஒரு பொறுப்புள்ள அறங்காவலர்
குழுத் தலைவர் தம்முடைய ஆளுகையில் உள்ள ஒரு இடத்தில்
இப்படிப்பட்ட ஒரு சம்பவம் நடந்திருக்கின்றபொழுது
சென்னைக்கு கல்யாணத்திற்கு வாழ்த்துச் சொல்லவும்,
அமைச்சரின் பிறப்புக்கு வாழ்த்துக் கூறவும் வந்தேன் என்று
சாட்சியம் சொல்லியிருக்கிறார்கள். இது சரியானதுதானா?
இப்படிப்பட்ட நிலைமை மனிதாபிமான அடிப்படையில்
நடக்குமா என்பதை அமைச்சரவர்களுக்கு சுட்டிக்காட்ட
விரும்புகிறேன்.

நீதிபதி பால் அவர்கள் பாரபட்சமற்ற முறையில் சொல்லி
யிருக்கிறார்கள். எப்படிப்பட்ட முரண்பாடுகள் அரசுத் தரப்பில்
ஏற்பட்டிருக்கின்றன என்பதை பற்றித் தெளிவாக சொல்லியிருக்
கிறார்கள். குறிப்பாக அறங்காவலர் குழுத் தலைவரும் மற்றும்
அறங்காவலர் சீனிவாச பாண்டியனும் ஒரே ஆளி ஒரே அச்சில்
அடித்துக் கொடுத்திருக்கிறார்கள் என்று சுட்டிக்காட்டுகிறார்கள்.
இப்படிப்பட்ட சூழ்நிலை ஏன் நடைபெறுகிறது?

இன்றைக்குக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சொல்வ
தெல்லாம், ஆளுங்கட்சியானாலும் எதிர்க்கட்சியானாலும்
நீங்கள் தந்தை பெரியார் போன்றவர்களின் வழியிலே வந்திருப்ப
தாகச் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். கடந்த ஆட்சியிலேயும்
சரி, இந்த ஆட்சியிலேயும் சரி கோயில்களைக் கொள்ளைக்
கூடங்களாக நினைத்து உங்கள் கட்சிக்காரர்களை அறங்காவலர்
களாக மடங்களுக்கும், கோயில்களுக்கும் போடுவதன் காரணமாக
இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறுகின்றன என்பதைச் சுட்டிக்
காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஆகவே, அந்தச் சாட்சியங்களைப் பொறுத்தவரையில்
குன்னிமலையான் என்பவர் பக்கத்துக் கிராமத்தில் உள்ள
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச்
செயலாளர்; டாக்டர் பாலகிருஷ்ணனின் அந்தரங்கச்
செயலாளர். இங்கே சொல்கிறார், எனக்கு அரசியல் முதல்
விரோதி என்று. அவரை எப்படியெல்லாம் பயமுறுத்தி,
சாட்சியத்தில் உண்மையைச் சொல்லி விடுவார் என்று நினைத்து
உண்மையை மறைக்க வேண்டுமென்று கருதி அவரைப் பக்கத்தில்
உள்ள கிராமத்தில் அடைத்து வைத்திருக்கிறார்கள். இது
சரியானதுதானா?

இந்தக் கமிஷன் அறிக்கையில் மாண்புமிகு நீதிபதி பால்
அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள், இந்தக் குழுவின்
விசாரணை நடக்கின்றபொழுது அவர்கள் சொல்லும்பொழுது
மூன்று நபர்களைக் குறிப்பிடுகிறார்கள். அவர்கள் தனியாக
வந்து சொல்கிறார்கள், நாங்கள் இந்த கமிஷனுக்கு நேரடியாக
வந்து சாட்சி சொன்னால் டாக்டர் பாலகிருஷ்ணன் எங்களைத்
துன்புறுத்துவார் என்ற அச்சத்தைத் தெரிவித்துள்ளார்கள்.
எனவே உண்மையை விசாரிக்க வேண்டுமென்றால் என்ன செய்ய
வேண்டுமென்பதற்கு மாண்புமிகு நீதிபதி பால் அவர்கள்
அரசுக்குச் சில சிபாரிசுகளைச் செய்திருக்கிறார்கள்.



[திரு. மு. அப்பாதுரை] [1982 பிப்ரவரி 12]

இன்றைக்குச் சாதாரணமாகப் பார்க்கிறோம், காவல்
நிலையத்திலே கூட பெரிய மனிதர்களை எதிர்த்துச் சாட்சி
சொல்பவர்கள் அல்லது பெரிய அதிகாரிகளுக்கு எதிராகச்
சாட்சி சொல்பவர்கள் எப்படியெல்லாம் துன்புறுத்தப்படு
கிறார்கள், தாக்கப்படுகிறார்கள் என்பதை நடைமுறையில்
பார்க்கிறோம். அந்த அடிப்படையில் பார்த்தால் இந்த
அறங்காவலர் குழுத் தலைவர் பதவியில், பொறுப்பில் இருக்கும்
பொழுது அதில் இருக்கும் நேரடியாகப் பார்த்த சாட்சிகள்,
பணி செய்யும் ஊழியர்கள் எந்த அடிப்படையில் சாட்சி சொல்ல
முன்வருவார்கள்? எனவே, அந்த அடிப்படையில் அந்த அறங்
காவலர் குழுவைக் கலைக்க வேண்டும் என்று மாண்புமிகு நீதிபதி
பால் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த அரசு அறிக்கையின் மீது இந்தியக் கம்யூனிஸ்ட்
கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.
கமிஷனின் சிபார்சுகளை நிராகரிக்க வேண்டுமென்ற அடிப்படை
யில் இந்த அரசின் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டு
மல்லாமல் உள்நோக்கம் உள்ள, குற்றங்களை மறைக்கும்
விதத்தில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதன்
மூலம் அரசுக்கு விபரீதமான விளைவுகள்தான் ஏற்படும்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எந்தக் காரண
காரியங்களுக்காக, எந்த நோக்கங்களுக்காக இந்த கமிஷனை
ஆரம்பத்திலே போட்டார்களோ அதற்கு மாறான முறையில்
அறிக்கை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், இங்கே தவறு செய்திருக்கிறவர்கள்
யார்? அங்கே இருக்கக்கூடிய அறங்காவலர்கள்தான். இந்த
அறங்காவலர்களைக் காப்பதற்காக, அங்கே நடைபெற்ற ஒரு
காரியத்திற்காக இந்த அரசு தன்னுடைய அதிகாரம், ஆட்சி,
அத்தனையையும் பயன்படுத்தி, அந்தத் தவறுகளை மறைப்பு
தற்காக எவ்வளவு பெரிய தவறை நீங்கள் செய்திருக்கிறீர்கள்
என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த அரசு
அறிக்கையினால், அரசு ஊழியர்களுக்கே, இந்த அரசு மீது ஒரு
அவநம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தி
யிருக்கிறார்கள் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல், இந்தக் கமிஷன் அறிக்கை மீது,
கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்தைத் தெளிவாகச் சுட்டிக்
காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அறங்காவலர் குழுவைக்
கலைக்கவேண்டும். அதற்குத் தெளிவாகவே பால் அவர்கள்
சொல்லியிருக்கிறார்கள். ஒரு அறங்காவலர் குழுத் தலைவர்
உண்டியலை எண்ணுகின்றபொழுது கூட அங்கே செல்லவில்லை
யென்று சொன்னால், அப்படி பட்டவர்களை ஏன், நீங்கள்
அறங்காவலர்களாகப் போடுகிறீர்கள். அதைவிட அவர்களுக்கு
வேறு என்ன வேலையிருக்கிறது? கோடிக்கணக்கான ரூபாய்
இலட்சக்கணக்கான ரூபாய் பக்தர்களுடைய பிரார்த்தனையாகப்
போடப்படுகிறது. அங்கே இப்படிப்பட்ட ஒழுங்கீனங்கள்
இருக்கின்ற காரணத்தாலே, தவறுகள் நடைபெறுகின்ற காரணத்தி
னாலே, தங்கவேல் மாயமாக மறைந்த காரணத்தால்

இப்படிப்பட்ட தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்த அறங்காவலர்கள் குழுவை உடனடியாகக் கலைத்துவிட்டு, நாங்கள் எங்கோயிருந்து விசாரணை வேண்டுமென்று கேட்பவர்கள் அல்ல. தமிழகத்திலேயே நேர்மையான, நீதியான அனுபவம் உள்ள நம்முடைய புலனாய்வுத்துறை அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களை வைத்துக் கொண்டு மீண்டும், நம்முடைய மாநிலப் புலனாய்வுத் துறை மூலமாக, அதிலும் திறமையான அதிகாரிகளைப் போட்டு, உண்மையைக் கண்டறிந்து, குற்றவாளிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டு முடிக்கிறேன்.

*திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நீதிபதி பால் அவர்கள் குறிப்பிட்டுள்ளபடி, சரி பார்ப்பு அதிகாரி சுப்பிரமணியப் பிள்ளை கொலை செய்யப் பட்டுள்ளார் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நம்புகிறது. இதில் எழுந்துள்ள முக்கியமான கேள்விகள் என்ன என்பதைப் பற்றி பரிசீலிக்க வேண்டும். இறந்த சுப்பிரமணிய பிள்ளை உண்டியல் திறக்கப்பட்டபோது அங்கு வந்தாரா? அல்லது, அங்கு வருமுன் உண்டியல்கள் திறக்கப்பட்டனவா? இரண்டாவது உண்டியல் பணத்தில் திருடினாரா? எதை அறங்காவலர் குழுத் தலைவரிடம் ஒப்புக்கொண்டு, ஆய்வகத்தின் குளியலறையில் தற்கொலை செய்து கொண்டாரா? அல்லது, அவர் வருவதற்கு முன்னரே, கோவில் உண்டியலைத் திறக்கப்பட்டதை ஆட்சேபித்து உயர் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப் போவதாக மிரட்டியதோடு, உண்டியல் கணக்குப் பதிவேட்டில் கையெழுத்து போட மறுத்ததால், கொலை செய்யப்பட்டாரா, என்பதே இங்கே எழுந்துள்ள கேள்வியாகும்.

சான்றாவணம் 6, அதாவது, ஃபார்ம் 26 என்பது உண்டியல் வகைப்பாட்டுப் பதிவேடு என்பதாகும். உண்டியல் திறக்கப் பட்டபோது யார், யார், அங்கே வந்திருந்தார்கள் அவர் களுடைய கையொப்பம் அவர்களுடைய முகவரிகள் எல்லாம் அதிலே இருக்க வேண்டும். ஆனால், ஃபார்ம் 26 ஐப் பொறுத்த வரை, அதில் சீனிவாச பாண்டியன், நிருவாக அதிகாரி இராசா ராம், சரிபார்ப்பு அகிகாரியின் தொழில்நுட்ப உதவியாளர் அருணாசலம், ஆய்வாளர் அருணகிரி ஆகியோர் கையொப்பம் மட்டுமே இருக்கிறது. ஆனால், சரிபார்ப்பு அதிகாரி சுப்பிரமணிய பிள்ளையினுடைய கையெழுத்து அங்கே இல்லை.

சம்பவம் நடந்து 2 மாதங்கள் கழித்து, திடீரென்று பதிவுத் தபாலில் அவருடைய டையரி வருகிறது. அது இன்ஸ்பெக்டரின் ஃபார்ம் 91-ல் குறிப்பிடவில்லை. அதாவது, சரிபார்ப்பு அதிகாரியினுடைய பேனாவோ, பால் பாயின்ட் பேனாவோ எதுவுமே கைப்பற்றப்பட்டதாக இல்லை. ஆனால், அதே நேரத்தில், வந்த டையரியில் 'உண்டியல் திறப்புக்குப் போயிருந்தேன்' என்று எழுதப்பட்டிருக்கிறது. அந்த எழுத்து எழுதப் பட்ட, அந்த நாட்குறிப்பு இரண்டு மாதம் கழித்துத்தான் அங்கு வருகிறது. அதில் இருந்து சி.ஜே.ஆர். பால் அவர்களே



குறிப்பிடுவது என்ன? அதே 2 மாத காலங்களுக்குள்ளாக சரிபார்ப்பு அதிகாரியினுடைய கையெழுத்தைப் போட்டு பயிற்சி பெற்று எழுதப்பட்டிருக்கலாம் என்று அவர் சந்தேகிக்கிறார்.

அதே போல், பக்கம் 65-ல், குற்றப் புலனாய்வுத் துறையின் தனிப்பிரிவு இன்ஸ்பெக்டர், சென்னை குற்றப்புலனாய்வுத் துறை தனிப்பிரிவு சூப்பிரண்டுக்கு தொலைபேசி மூலமாகத் தெரிவிக் கின்றார். அவர் குறிப்பிடுவது 'திருசெந்தூர் முருகன் கோவில் உண்டியல் காணிக்கைகளை கணக்கிடுவதற்காக ஒவ்வொரு திங்களும் அது திறக்கப்படுவது வழக்கம். இன்று காலை, தனி அதிகாரி சுப்பிரமணியம் வருவதற்கு முன்னர், நிருவாக அதிகாரி இராசாராமும் ஏனைய பணியாளர்களும் உண்டியலைத் திறந்த தாகக் கூறப்படுகிறது' என்று தொடர்ச்சியாக அவர் ஃபோன் மூலமாக சென்னைக்குத் தகவல் அனுப்பியதாக 65-ஆம் பக்கத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதே போல், உண்டியல் திறந்து மூடும்போது முத்திரையிட வேண்டும். அப்படி முத்திரையிடுவதற்கு, இறந்த இடத்திலே யிருந்து, முத்திரை எடுத்து வந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப் படுகிறது. இராசாராம், நிருவாக அதிகாரி, இன்ஸ்பெக்டரிடம் அப்படிப்பட்ட முத்திரை காணவில்லையென்று எதுவுமே புகார் இல்லை.

[முற்பகல் 10.50]

அடுத்து சுப்பிரமணிய பிள்ளை திருடினார் என்பதற்கு நேரடி சாட்சி கந்தன் என்பவர்தான். அவர் கூறுவதிலும் முரண்பாடு உள்ளது. உண்மையில் அவர் திருடியதை பார்த்து சிதம்பரநாத னுடன் சேர்ந்து அவரிடம் சொல்லி, தலைவரிடம் சொல்ல போன செய்ய காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் சிதம்பரநாதன் பின்னர் சாட்சியம் கூறும்போது நான் பார்க்கவில்லை என்று சாட்சியத்திலே மறுக்கிறார். பணத்தைத் திரும்பக் கொடுக்கின்ற நேரத்திலும் அதை யாரும் வாங்கவில்லை. அதே நேரத்தில் டாக்டர் பாலகிருஷ்ணன் ஆணையருக்கும், துணை ஆணை யருக்கும் தொலைபேசியில் பேசப்போவதாகச் சொல்லிப் போகின்றார். ஆனால் அன்று மாலை துணை ஆணையர் வந்த உடனே அதைப் பற்றிச் சொல்லவே இல்லை. அந்தப் பணத் தையும் வாங்கவில்லை. களவு போன பணத்தை யாரும் வாங்காமல் இருப்பது ஒரு பெரிய சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

டிப்டி சூப்பிரன்டென்டென்ட் ஆப் போலீஸ் மகாதேவனை விசாரித்தபோது கூறியபடி பார்த்தால் தலைவரிடம் அதிகாரி என்ன சொன்னார் என்பதே கேட்டிருக்க முடியாது. அவர் தூரமாக நின்று தலைவரும் சரிபார்ப்பு அதிகாரியும் அறைக்குள் இருந்து பேசிக் கொண்டிருந்ததை மகாதேவன் பார்த்திருக்க முடியாது என்று இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதே மாதிரி தான் திருடியதாக ஒப்புக் கொண்ட சரிபார்ப்பு அதிகாரியிடும், நிர்வாக அதிகாரியோ அல்லது மற்றவர்களோ ஒரு ஸ்டேட் மென்ட் கூட வாங்குவதற்கு அவர்கள் தயாராக இல்லை. சட்டம் படித்தவர்கள் அப்படி இருந்தும் ஸ்டேட்மென்ட் வாங்காமல் இருந்தது சந்தேகம் அளிக்கிறது என்று நீதிபதி சொல்லி இருக் கிறார்.

அந்தப் போன்று, அந்த பணத்தைப் பொறுத்த வரையிலும் முரண்பாடுகள் இருக்கின்றன. சான்றாவணம் 19-ல் ஆணையருக்கு அனுப்பியதந்தியில் ரூபாய் 2000 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. முதல் எப்.ஐ.ஆரில் 2000 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதே போன்று 30-ந் தேதி இன்ஸ்பெக்டர் ஆப் போலீஸ், சூப்பிரன்ட் டென்டென்ட் ஆப் போலீசுக்கு அனுப்பக்கூடிய அறிக்கையில் 2000என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்குப் பிறகு 2000 ரூபாய் என்பது மிகத் துல்லியமாக இருக்கலாம் என்று, 27-ந் தேதிதான் 2850 என்று மாற்றப்பட்டிருப்பதாக சந்தேகிக்கப் படுகிறது. 1-ந் தேதி தாசில்தார், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அனுப்பிய அறிக்கையில் 2850 என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. அதே போன்று 27-ந் தேதி தயார் செய்கின்ற நிகழ்வு அறிக்கையிலே 2850 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, தொகையைப் பொறுத்து முரண்பாடு இருக்கிறது. ஆகவே பெரிய சந்தேகத்திற்கு இடம் இருக்கிறது என்று நீதிபதி சொல்லி இருக்கிறார். தலைவர், ஆணையரிடம் தகவல் கொடுத்த உடனேயே, போலிசில் புகார் செய்யவே இல்லை. ஏற்கனவே அங்கே இருந்த டாக்டர் பாலகிருஷ்ணன், கமிஷனருக்கு போன் பண்ணிய உடன் உடனடியாகப் போலிசுக்குத் தகவல் கொடுங்கள் ரிப்போர்ட் செய்யுங்கள் என்று சொல்லியும் கூட, தலைவரோ அல்லது நிர்வாக அதிகாரிகளோ கடைசி வரைக்கும் தகவல் கொடுக்கவில்லை. எப்.ஐ.ஆர். கொடுக்கவே இல்லை. கடைசியாக அன்று மாலை 4-15 மணிக்குத்தான் புருஷோத்தமன் என்பவர் எப்.ஐ.ஆர் கொடுப்பதாகச் சொல்லுகிறார். அந்த எப்.ஐ.ஆர்-ஐப் பொறுத்தவரையில் இரண்டு விதமான எப்.ஐ.ஆர்.—கள் இருக் கின்றன. நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி பக்கம் 65 ஒரு எப்.ஐ.ஆர் இருந்தது. குற்றப் புலனாய்வுத்துறை இன்ஸ்பெக்டர், சென்னையிலே இருக்கக் கூடிய சூப்பிரன்டென்டுக்கு சொல்லு கிறார். அதிலே குறிப்பிடப்பட்டிருப்பது — "நிர்வாக அதிகாரி ராஜாராமும் ஏனைய பணியாளர்களும் உண்டியலைத் திறந்ததாகக் கூறப்படுகிறது. தனி அதிகாரி இதனை எதிர்த்ததாகவும் இதனால் அவர்களுக்கு இடையே வாய்ச்சண்டை நிகழ்ந்ததாகவும் தெரியவருகிறது. சுமார் 1½ மணிக்கு உண்டியல் பணம் எண்ணப் படும் இடத்திற்கு நேர் பின்புறத்தில் தனி அதிகாரி தூக்கிட்டுத் தொங்கிக் கொண்டிருந்தார். சடலம் சவப் பரிசோதனைக்காக திருச்செந்தூர் அரசு மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப் பட்டது. நிர்வாக அதிகாரியும், ஏனைய பணியாளர்களும் தனி அதிகாரியைக் கொலை செய்ததாகக் கூறப்பட்டு வழக்கு ஒன்றும் பதிவு செய்யப்பட்டது".

ஆக ஏற்கனவே இருக்கிற எப்.ஐ.ஆர். பதிவு செய்யப்பட்டதாக இங்கே குறிப்பிடப்படுகிற சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர் சென்னையில் உள்ள சி.ஐ.டி. சூப்பிரன்டென்டுக்கு தகவல் அனுப்புகிறார். அதே நேரத்தில் மாலை 4-15 மணிக்கு புருஷோத்தமன் இன்னொரு எப்.ஐ.ஆர். கொடுக்கிறார். இது பெரிய புதிராக இருக்கிறது என்று நீதிபதி குறிப்பிடுகிறார். ஆகவே இந்த முரண் பாட்டை பொறுத்தவரையில் சரிபார்ப்பு அதிகாரி உண்டியல்



பணத்தைத் திருடினார் என்ற கதை நம்புவதாக இல்லை என்றும் அது உண்மையானது அன்று என்றும் சி ஜே.ஆர். பால் ஃபைன்டிங் கொடுத்திருக்கிறார்.

அதேபோன்று அந்தத் திருடு நிரூபிக்கப்படவில்லை என்றால் இந்தக் கொலைக்கு வேறு காரணம் கிடையாது. மோடிவ் நிச்சயமாக இருக்க முடியாது. ஆகவே, திருடு என்பது நிராகரிக்கப் பட்டு இருக்கிறது, நிரூபணம் ஆகவில்லை. ஆகவே, இது தற்கொலை என்பது நிச்சயமாக எற்றுக்கொள்ள முடியாது என்பது தான் நீதிபதியின் பைன்டிங்ஸ்.

அதேபோன்று, சரிபார்ப்பு அதிகாரி இறந்த விதத்தைப் பற்றிக் குறிப்பிடுகிற நேரத்தில், தலைவர் தொலைபேசியில் பேச வேண்டும் என்று போகிற நேரத்தில், நிர்வாக அதிகாரி அழைக்கப் பட்டு, மகாதேவன் என்பவரையும், முத்தையா என்பவரையும் காவலில் நிற்க வைத்துவிட்டு, கடைசியில் அந்த சரிபார்ப்பு அதிகாரி குளியல் அறையில் தாள் போட்டுக் கொண்ட உடனேயே, உடனடியாக அந்தக் கதவைத் தட்டவோ, அல்லது அறைக் கதவைக் கட்டாயமாக திறக்கவோ முயற்சிக்கவில்லை. ஆனால், மகாதேவன் என்பவர் உடனடியாக தலைவரையும், நிர்வாக அதிகாரியையும் அழைத்து வருவதற்காக ஓடுகின்றாராம். இது எல்லாம் நம்ப முடியவில்லை. சாதாரணமாக ஒரு நார்மல் மனிதன் எப்படிச் செய்ய வேண்டுமோ அப்படிக்கூட செய்யப்பட வில்லை என்பதைப் பார்க்கிறபோது இவ்வளவும் ஒரு கற்பனையாக இருக்கிறது.

அதேபோன்று, டாக்டர் பாலகிருஷ்ணன் வந்த உடனே அந்த சரிபார்க்கும் அதிகாரி மயங்கிய நிலையில் இருக்கும் நேரத்தில் அவருக்கு உயிர் இருக்கிறதா அல்லது முதல் உதவி செய்ய வேண்டுமா என்றெல்லாம் அவருக்கு ஒன்றும் தெரியவில்லை. அவர் ஒரு டாக்டராக இருந்தும் கூட இதையெல்லாம் செய்யாமல் இருப்பது ஒரு இயற்கைக்கு முரணானதாக இருக்கின்றது. அதே போன்று அந்தச் சரிபார்க்கும் அதிகாரி மருத்துவ மனைக்கு உடனடியாக கொண்டு செல்லவேண்டும் அல்லது டாக்டரை உடனடியாக அழைத்துச் செல்லவேண்டும் என்பதற்சான எந்த முயற்சியையும் எடுக்கவில்லை. அவரோடு ஒரு சட்டமன்ற உறுப்பினர் கூடவே இருக்கிறார். அவரும் அதைப் பற்றி அக்கறை கொள்ளவில்லை. ஆனால் உடனடியாக காரிலே செல்கிறார்களாம், ஆஸ்பிடலுக்குப் போவதற்கு, அந்த சரி பார்க்கும் அதிகாரியின் உடலை எடுத்துக் கொள்ளாமலேயே போகிறார்களாம். அவர்களாகவே போகிறார்களாம். போகின்ற செல்கிறார்களாம். அவர்களாகவே போகிறார்களாம். இருக்கின்ற நேரத்திலும், வழியில் — இவ்வளவு அமளி நடந்து இருக்கின்ற நேரத்திலும், அந்த டாக்டர் — ஒரு பொறுப்பில் உள்ளவர் — அங்கேயுள்ள எல்லாவற்றிற்குமே முக்கியமாக இருக்கக்கூடியவர் — தலைவராக இருக்கக்கூடியவர் — இடையிலே இறங்கி நான் சென்னைக்குப் போகவேண்டும் என்று சொல்லி இறங்குகிறாராம். இதை எல்லாம் எப்படி நம்புவது? ஆனால் உண்மையிலேயே குற்றம் உள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்பது போல் ஏதோ அவர் தவறு செய்து இருக்கிற காரணத்தால் தான் ஓடி ஒளிய முயற்சித்து இருக்கிறார் என்பதை நான் நிச்சயமாகச் சொல்ல முடியும்.

அவர் சென்னைக்கு வந்து விட்டார் அன்றைக்கே. அதற்கு மறு நாள் எம்.எல்.ஏ. வந்து விட்டார். தன்னுடைய நிர்வா கத்தின் பொறுப்பில் இருக்கக்கூடிய ஒரு இடத்தில் ஒரு கொலை நடந்து இருக்கிறது — அதை தற்கொலை என்றே வைத்துக் கொள்வோம் — அந்த சரிபார்ப்பு அதிகாரி என்ன ஆனார், உண்டியல் என்ன ஆயிற்று என்பதைக் கூட கவனிக்காமல், சென்னையிலே 3-ம் தேதி வரையில் இருக்க வேண்டிய அவசியம் என்ன வந்தது? ஏற்கனவே அங்கே சொல்லியிருக்கின்ற அடிப் படையில் பார்க்கின்றபோது, ஒரு வைர வேல் காணாமல் போய் விட்டது. அது சென்னைக்கு வந்து இருக்கலாமோ என்ற ஒரு பெரிய சந்தேகம் மேகநாதன் சொன்னது போல் எழுகிறது.

அதைப்போலவே பக்கம் 65-ல் உள்ளூரில் நிலவும் வதந்தி என்ற தலைப்பின் கீழ் தங்கம் எதுவும் உண்டியல் எண்ணும் போது காணவில்லை, வழக்கமாக நிறைய தங்கம் இருக்கும் : எனவே அதை யார் எடுத்து இருப்பார்கள்? இத்தகைய சூழ் நிலையில் விசாரணை நடத்துவது உகந்தது என்று குறிப்பிடப் பட்டு இருக்கிறது. மேலும், வழக்கமாக அதிகமான அளவிற்குத் தங்கம், தங்க ஆபரணங்கள் இருக்கும், இன்று பார்க்கும்போது தங்கமே இல்லை என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இதனுடைய ரகசியம் என்ன என்பதைக் கண்டறியவேண்டும்.

சரிபார்க்கும் அதிகாரி எப்படிப்பட்டவர் என்பதற்கு அவருடைய 'கேரக்டரை'ப் பார்க்கவேண்டும். அவருடைய முன் நடவடிக்கை எப்படிப்பட்டது என்பதைப் பரிசீலிக்கவேண்டும். டாக்டர் பாலகிருஷ்ணன், பி.ஏ.டு கமிஷனர் அர்ஜுனன் அவர் களுக்குப் போன் செய்தவுடனே, அந்தச் சரிபார்க்கும் அதிகாரி திருடி விட்டார் என்று சொன்னவுடனே, 'தான் அதிர்ச்சி அடைந்தேன்' என்கிற முறையில் பி.ஏ.டு கமிஷனர் அர்ஜுனன் சொல்லியிருக்கிறார். இன்னும் அவர் தன்னுடைய சாட்சியத்தில் சொல்கிறார் — நீண்டகாலமாகப் பணியாற்றும் சரிபார்க்கும் அதிகாரி, தனக்குத் தெரிந்த வரையில் அவர் மீது எந்தவிதமான தவறும் செய்ததாகத் தெரியவில்லை என்றும், அவர் எளிமை யானவர், எளிமையான வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர் என்றும் சொல்கிறார். அதைப்போலவே, அந்த மகாதேவன் அவர்களும், எனக்குத் தெரிந்தவரையில் கண்காணிப்பு அதிகாரி எளிமையானவர், நான் அந்தச் செய்தியைக் கேட்டவுடனேயே அதிர்ச்சி அடைந்தேன் என்று சொல்கிறார். ஆகவே, அந்த அடிப்படையில் அவரது கடந்த கால நடத்தையைப் பொறுத்தவரையில் நிச்சயமாக அவர் நேர்மையானவர், எளிமை யானவர், இப்படிப்பட்ட காரியங்களில் நிச்சயமாக ஈடுபட்டு இருக்க முடியாது என்று தான் சொல்கிறார்கள்.

(முற்பகல் 11.00)

கடைசியாக இப்படியெல்லாம் திருட்டு நடந்திருக்க முடியாது, மோட்டிவ் இருக்க முடியாது என்ற நிலை வந்தவுடனே தேவஸ் தானத்தினுடைய அல்லது அரசின் சார்பிலே வழக்காடிய வழக் கறிஞர் பொய்க்குற்றச்சாட்டுக் காரணமாக அவமானம் தாங்காமல்



உணர்ச்சிவசப்பட்டு தற்கொலை செய்திருக்கலாம் என்று வாதித்தார். அதை ஏற்றுக் கொள்வதற்கில்லை : திருட்டைக் கண்டுபிடித்ததால் தற்கொலை செய்து கொண்டார் என்பது டாக்டர் தரப்பின் வாதம். எனவே தற்கொலை என்பது கற்பனையே, என்று 'ஃபைன்டிங்' சொல்கிறது.

இரண்டு 'எஃப்.ஐ.ஆர்.' இருக்கின்றன. முதலில் காவல் நிலையத்தில் 4 15 மணிக்கு பதிவு செய்துகொண்டது. அதற்கு முன்னே இது கொலை என்று ஒரு எஃப்.ஐ.ஆர். பதிவு செய்யப் பட்டதாக சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர் எஸ்.பி.க்கு தகவல் கொடுத் திருப்பதாக ஒரு தகவல் இருக்கிறது. அது மட்டுமல்ல, தூத்துக்குடி சப் கலெக்டர் திரு. வியாஸ் அவர்கள் இது கொலை என்றும் தற்கொலை என்றும் கூறியிருக்கிறார்கள். அதையும் அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். டாக்டர் பாலகிருஷ்ணன், சீனிவாச பாண்டியன், மகாதேவன், இராசாராம் ஆகியோர் நிலைமை மாறிவிட்டது கண்டு மிகவும் அச்சமடைந்துள்ளதாகத் தெரிகிறது. மேற்குறிப்பிட்ட அவர்களது நடத்தை மிகவும் வியப்பாக இருக்கிறது. இயல்பாக ஒருவர் மனிதாபிமானத்துடன் நடந்து கொள்வதற்கு நேர்மாறாகவும் இருக்கிறது. வேறு வகையில் பார்த்தாலும் கூட அவர்களின் சாட்சியங்களில் முரண்பாடுகளும் ஒவ்வாத கூற்றுகளும் பொய்ப் பித்தலாட்டங்களும் மலிந்துள்ளன. எனவே அவர்களுடைய சாட்சியங்களைப் பொறுத்தவரையில் நம்ப முடியாததாகவும் இந்த வழக்கிலிருந்து எப்படி தப்பித்துக் கொள்ள முடியுமோ அந்த அளவுக்கு முயற்சி செய்திருக்கிறார்கள் என்றும் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். நாம் இதையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

டாக்டர் இராமமூர்த்தி அவர்கள் பார்த்த வேட்டி இரத்தக் கறை படிந்திருந்தது என்றும் அது 330 சென்டிமீட்டர் தான் இருந்தது என்றும் சொல்லப்பட்டது. ஆனால், கமிஷன் முன்பு கொண்டுவரப்பட்ட வேட்டி 352 சென்டிமீட்டர் இருந்ததாகவும் இரத்தக் கறை எதுவும் இல்லை என்றும் சொல்லுகின்ற நிலைமையைப் பார்க்கும்போது இது மிகவும் சந்தேகத்திற்கு இடமளிக்கிறது.

கடைசியாக சவப் பரிசோதனை செய்யும்போது இது கொலையா தற்கொலையா என்ற முடிவுக்கு வரமுடியாது என்று டாக்டர் இராமமூர்த்தி சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டு மல்ல, கழுத்தில் ஏற்பட்டிருக்கிற தழும்பைப் பார்க்கிறபோது, வேட்டி முறுக்கில் ஏற்பட்ட சுருக்கு ஒரு அங்குலம் அகலத்திற்கு சுருக்கியிருக்காது என்றும், ஆகவே, வேட்டி மூலம் தூக்கு போட்டிருக்க முடியாது என்றும் டாக்டர் கோபாலகிருஷ்ணன் சொல்லியிருக்கிறார்கள். டாக்டர் கோபாலகிருஷ்ணன் அவர் களுடைய சாட்சியம் நிச்சயமாக நம்பக்கூடியது என்றும் ஃபைன்டிங் சொல்கிறது. ஃபைன்டிங் கூறுவதில் சந்தேகத்திற்கு இடமில்லை என்று நம்பமுடிகிறது.

கடைசியாக இந்த அரசாங்கம் கொடுக்கக்கூடிய அரசு உத்தரவில் செக்ஷன் 53-ன்படி இந்த நிர்வாகக் குழுவை கலைக்க முடியாது என்று சொல்லக்கூடிய முறையிலே இருக்கிறது. அதைப்பொறுத்த வரையில் ஒரு தீர்ப்பு சொல்லப்படுகிறது. 1981 (1) எம்.எல்.ஜே பக்கம் 368-ல் அதையும் சொல்கிறார்கள். அதைப்பொறுத்த வரையில் ஒரு கமிஷன் கொடுக்கக்கூடிய தீர்ப்பின் அடிப்படையில் உடனடியாக நடவடிக்கை எடுக்கமுடியாது என்பது,

1981-1 M. L.J. Page 368.

"Commission of Enquiry Act (LX of 1952), section 8—B— Commission of Enquiry Tamil Nadu Rules 7 and 10 . . . .

Under section 8-B of the Commission of Enquiry Act and the Rules framed thereunder the Commission of Enquiry appointed under the provisions of the said Act was bound to give a reasonable opportunity to the person whose conduct was sought to be inquired into and whose reputation was likely to prejudicially affected by the enquiry. That portion of the report which dealt with the conduct and reputation of the affected party without giving such party an opportunity of being heard in the inquiry should be taken to be vitiated for violation of section 8-B of the Act and rules 7 and 10 of the Commission of Euqnify Tamil Nadu Rules.

Those findings cannot exclusivelv form the subject-matter of any inquiry. No action can therefore be taken against the petitioner solely based on such findings.

ஆக ஒரு கமிஷனில் சொல்லி இருக்கக்கூடிய ஃபைண்டிங் அடிப்படையிலே மட்டும் ஒருவர்மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பது மட்டும்தான். ஆனால் செக்ஷன் 52-ஐப் பொறுத்தவரையில் இவர்கள் நடந்துகொண்ட முறைகள் டாக்டர் பாலகிருஷ்ணன் மற்றும் மற்ற அறங்காவலர்கள் கடந்த காலங்களில் நடந்து கொண்ட முறைகளைப் பார்க்கின்றபோது சாட்சியம் 6ஐப் பார்க்கின்றபோது இவர்கள் முறையாகவும், அந்த அறநிலையத்தினைப் பாதுகாக்கவேண்டும் என்ற எண்ணத்திலும் நடந்துகொள்ளவில்லை என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியும். உண்டியல்களைத் திறக்கக்கூடிய நேரத்திலே அவர்கள் முறையாக வருவதில்லை. குறிப்பாக டாக்டர் பாலகிருஷ்ணன் அவர்களிடம் இருந்த மிக முக்கியமான அந்தச் சாவிக்கொத்தை வேறு ஒருவரிடம் கொடுத்து அனுப்பியது முரண்பாடானது. ஆகவே இந்த அடிப்படையிலே அவர்களிடம் காரணம் கேட்டு ஷோகாஸ் நோட்டீஸ் கொடுத்து அவர்களை நீக்க முடியும். ஆனால் இப்படிப்பட்ட வகைகளில் அவர்கள் நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பது தெரிந்ததற்குப் பிறகும் அரசு இவர்களுக்கு நோட்டீஸ் கொடுப்பதற்கு முன்வந்ததா என்றால் நிச்சயமாக இல்லை. ஆகவே நோட்டீஸ் கொடுத்து அவர்களை நீக்குவதற்கு வழி வகை இருக்கின்றது. அதற்குச் சட்டத்திலே இடம் இருக்கின்றது. ஆனால் எதையுமே செய்ய முடியவில்லை என்று வாளாயிருப்பது



சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய அளவிலே இருக்கின்றது. இங்கே மேற் கொடுக்கப்பட்டிருக்கின்ற அரசாங்கத்தின் ஆணை கோர்ட்டுக்குக் கொடுக்கக்கூடிய அப்பீல் மாதிரி இருக்கின்றது. ஆகவே இந்த அரசு ஏற்கெனவே மனதிலே ஒன்றை வைத்துக் கொண்டு, ஒரு முடிவினை எடுத்துக் கொண்டு நடவடிக்கை எடுப்பதுபோல் இருக்கின்றது. ஆகவே இந்தமாதிரி நடவடிக்கை எடுப்பது புதிதாக இருக்கின்றது. ஆகவே இப்படிப்பட்ட ஒரு உத்தரவு அவசியம்தானா என்பது எனக்குத் தெரியவில்லை.

ஆகவே இதன்மீது முறையாக விசாரணை செய்து சம்பந்தப் பட்டவர்களின் மீது நடவடிக்கை எடுப்பதுதான் இந்த அரசுக்கு அழகாகும். ஆகவே அப்படிப்பட்ட ஒரு நிலையினை எடுத்து சம்பந்தப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ப. நெடுமாறன் : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, பால் கமிஷன் அளித்திருக்கின்ற பரிந்துரையின் மீதும் இதன்மீது அரசு அளித்திருக்கின்ற ஆணையின்மீதும் நடைபெறு என்ற இந்த விவாதத்திலே சில முக்கியமான கருத்துக்களை அடுத்து வைப்பதற்கு முன்னாலே அரசு வெளியிட்ட ஆணையிலே என்னைப்பற்றி ஒரு தவறான கருத்து குறிப்பிடப்பட்டிருப்பதைப் பற்றி என்னுடைய விளக்கத்தைத் தர விரும்புகிறேன். பால் கமிஷன் முன்னிலையில் என்னுடைய சார்பிலே உறுதிமொழிப் பத்திரம் அளிக்கப்பட்டது. என் சார்பிலே திரு தங்கபாண்டியன் உட்பட 3 வழக்கறிஞர்கள் ஆஜரானார்கள். அவர்கள் கமிஷன் அனுமதியுடன் மற்ற சாட்சிகளை குறுக்கு விசாரணை செய் தார்கள். மீண்டும் 1981-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11-ஆம் தேதி கமிஷன் முன்னாலே நானும் ஆஜராகி எனக்குத் தெரிந்த சில விவரங்களை சொன்னேன். அதுமட்டுமல்ல, கமிஷன் எப்போது அழைக்கின்றதோ அப்போது நான் வந்து சாட்சியம் சொல்வதற்கு ஆயத்தமாக இருக்கிறேன் என்பதைச் சொன்னேன். ஆனால் அரசாங்க அறிக்கையிலே நான் உறுதிமொழிப் பத்திரம் அளித்து விட்டு அதற்குப் பிறகு கமிஷன் முன் சாட்சியம் சொல் வதற்கு வரவில்லை என்று குற்றச்சாட்டு சொல்லப்பட்டிருக் கின்றது.

இங்கே நம்முடைய மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் சட்டம் பயின்றவர்கள். அதுபோன்று அமைச்சரவையிலே உள்ள பல்வேறு அமைச்சர்கள் சட்டம் பயின்றவர்கள். ஆளும் கட்சியிலே இருக்கின்ற பல்வேறு உறுப் பினர்கள் சட்டம் பயின்ற வழக்கறிஞர்கள். அவர்களை எல்லாம் நான் பார்த்து கேட்கிறேன், கமிஷன் ஆப் என்கொயரி ஆக்டிலே என்ன சொல்லி இருக்கின்றது.

(முற்பகல் 11.10)

In law, be it under the Commission of Enquiry Act or under the Evidence Act, evidence can be oral or documentary and the party desirous to give evidence can either appear in person and tender evidence or submit an affidavit. Under the rules framed under the Commission

of enquiry Act, any person who in the opinion of the Commission, must be given an opportunity of being heard in an enquiry, shall furnish a statement and the statement shall be accompanied by an affidavit. So, affidavit itself is evidence and anybody seeking to contradict the contents of the affidavit can cross-examine the deponent with the permission of the Commissioner. என்று தெளிவாகவே சொல்லப்பட்டிருக்கிறது.

Even though affidavit was filed, this itself is an evidence under the Commission on of enquiry Act. I was not issued with any summons by the Commission fixing up some date either for filing a statement or for recording oral evidence. Under these circumstances I could not appear for giving oral evidence.

அஃபிடவிட் பைல் பண்ணினாலே அதுவே ஒரு சாட்சியம் தான் என்று தெளிவாகவே குறிப்பிட்டிருக்கிறார். நான் சாட்சியம் அளிக்க முன் வரவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கும் தெளிவாகவே பதில் இருக்கிறது. அரசு தரப்பு அல்லது தேவஸ்தான தரப்பு வழக்கறிஞர்கள் கமிஷனிடம் சென்று முறையிட்டிருக்கலாம். இதுமாதிரி நெடுமாறன் அவர்கள் உறுதி மொழிப் பத்திரத்தைத் தாக்கல் செய்திருக்கிறார்கள் என்று அரசு வழக்கறிஞர்கள் சொல்லி, கமிஷன் அதை ஏற்றுக் கொண்டு, என்னை கமிஷன் அழைத்து, அதற்குப் பின்னால் நான் சாட்சியம் அளிக்க வரவில்லை என்று சொல்லியிருப்பார்களேயானால், அது நியாயம் உள்ளதாக, உண்மையானதாக இருந்திருக்கும்.

ஆகவே, வேண்டும் என்றே ஒரு தவறான கருத்தை இந்த அறிக்கையிலே வைத்ததன் மூலம் நீங்கள் என்னுடைய உரிமையை பறிக்கிறீர்கள். அதன்மூலம் இந்தச் சட்டமன்றப் பேரவையின் உரிமையையும் பறிக்கிறீர்கள் என்று கருதுகிறேன். இது சம்பந்தமாக ஒரு உரிமைப் பிரச்னையைக் கூட கொடுத்தேன். அது என்ன ஆயிற்று என்று எனக்குத் தெரியவில்லை.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருச்செந்தூரில் இப்படிப்பட்ட சம்பவம் நடைபெற்றவுடன் நேரிலேயேசென்று விசாரித்தார். அதைப் பாராட்டுகிறேன். அவருக்கு உண்மையை அறியவேண்டும் என்பதிலே எவ்வளவு பதைப்பு இருந்ததோ, அதிலே 1/2 சதவீதம் கூட குறைந்தது அல்ல என்னுடைய பதைப்பும். நானும் அங்கே போனேன். நானும் விசாரித்தேன். நான் விசாரித்து அறிந்த உண்மைகளை, நீங்கள் அமைத்த குழுவிற்கு முன்னாலே, தாக்கல் செய்திருக்கிறேன். அதன் மூலம் நீங்கள் அமைத்த அந்த கமிஷனுக்கு நான் என்னுடைய ஒத்துழைப்பைக் கொடுத்திருக்கிறேன். உங்கள் கமிஷன் முன்னாலே உண்மையை சொல்ல முன் வந்த என்மீது நீங்கள் தேவையில்லாமல் சேற்றை வாரி இறைத்திருக்கிறீர்கள். ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.





சர்க்காரியா கமிஷன் முன்னால் நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அஃபிவிட் தாக்கல் செய் தார்கள். ஆனால் அவர் சாட்சியம் சொல்ல முன் வரவில்லை என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் தரப்பிலே அவர் மீது குற்றம் சாட்டப்பட்டதற்கும், நீங்கள் இப்போது என் மீது சாட்டுகிற குற்றச்சாட்டுக்கும் என்ன வித்தியாசம் என்று அறிய விரும்புகிறேன்? இது நியாயமே அல்ல. உண்மையை அறிவதற் காக அமைக்கப்பட்ட அந்த கமிஷனின் முன்னாலே சகல தரப் பினரும் ஆஜராகி அவரவர்களுக்கு தெரிந்த வகையிலே அந்த உண்மைகளை கமிஷன் முன்னாலே எடுத்து வைத்திருக்கிறார்கள். அதைத்தான் என்னைப் பொருத்தவரையில் நானும் செய்வதற்கு முயற்சி செய்திருக்கிறேன். ஆனால் கமிஷன் முன்னாலே ஆஜர் ஆகவில்லை என்று நீங்கள் சொல்வது ஒரு அப்பட்டமான தவறு. வேண்டும் என்றே செய்தீர்கள் என்று நினைக்கிறேன். அந்தத் தவற்றை நீங்கள் தயவுசெய்து திருத்திக் கொள்ளவேண்டும் என்று இந்த நேரத்திலே வற்புறுத்தி விட்டு, அந்தக் கமிஷனின் பரிந் துரைகள் பற்றிச் சொல்வதற்கு நான் விரும்புகிறேன்.

பால் கமிஷன் அளித்திருக்கிற அந்த பரிந்துரை இந்த அவையின் முன்னாலே இருக்கிறது. இதிலே இருக்கக் கூடிய விவரங்களுக்குள் நான் போகவில்லை. இந்த பால் கமிஷனின் பரிந்துரைகள் மீது 9 முக்கியமான கேள்விகளை நான் எழுப்ப விரும்புகிறேன். அந்த வினாக்களுக்கு பால் கமிஷனின் அறிக் கையில் உள்ள விவரங்களில் என்னென்ன பதில்கள் அடங்கிக் கிடக்கின்றன என்றும் நான் இந்த அவையின் முன் வைக்க விரும்பு கிறேன்.

முதல் கேள்வி: 28-11-1980 ஆம் தேதியன்று அதிகாலையில் கோவில் உண்டியல் திறக்கப்பட்டபோது, திரு. சுப்பிரமணியம் பிள்ளை அவர்கள் அங்கே இருந்தாரா? அவர் முன்னாலே தான் அந்த உண்டியல் திறக்கப்பட்டதா என்பது முதல் கேள்வி.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இதற்குப் பால் கமிஷனின் அறிக்கையிலே என்ன பதில் சொல்லப்பட்டிருக்கிறது. நீதிபதி பால் அவர்கள் குறிப்பிடும் போது, திரு. சுப்பிரமணியப் பிள்ளை அவர்களின் சாவுக்குப் பின்னாலே அவர் வசம் இருந்த பேனா, அவருடைய நாட்குறிப்பு போன்ற பொருள்களைப் பற்றி சொல்லிவிட்டு, அவைகளையெல் லாம் போலீஸ் அதிகாரிகள் எடுத்துச் செல்லவில்லை என்று சொல்லிவிட்டு இறுதியிலே, பக்கம் 24-லே ஒன்றைச் சொல் கிறார்கள்.

"எனவே சுப்பிரமணியப் பிள்ளை மரணத்திற்குப் பின்னர் ஆய்வகத்திலிருந்து யாரோ ஒருவர் இந்த நாட்குறிப்பேட்டையும் சுப்பிரமணியப் பிள்ளை தன் வசம் நிச்சயமாக வைத்திருக்கக் கூடிய பேனாவையும் எடுத்திருக்கிறார் என்றும் அந்தப் பேனாவில் பச்சை மை நிரப்பப்பட்டிருக்க வேண்டும் என்றும், அவ்வாறு உண்டியல்களைத் நாட்குறிப்பேட்டை எடுத்து வைத்திருந்தவர்,

திறக்கும்போது சுப்பிரமணியப்பிள்ளை அங்கு இருந்தார் என்று காட்டுவதற்காக அவரே (சுப்பிரமணியப் பிள்ளை அவர்களே) எழுதினாற்போல, ஆவணச் சாட்சியம் கொடுக்கும் நோக்கத்துடன் அவ்வாறு செய்திருக்கிறார் என்றும் முடிவு கொள்வதில் நியாயம் உள்ளது.

உண்டியல்களைத் திறந்தபோது சுப்பிரமணியப் பிள்ளை அங்கு இருந்தார் என்று எப்படியாவது தோன்றச் செய்து, அதன்மூலம், அளிக்கப்பட்ட சாட்சியத்தைத் தகாக்கவேண்டும் என்பதில் அக்கறையுள்ள யாரோ ஒருவரின் அல்லது பலரின் தேவையற்ற கவலையையும் [illegible]து உணர்த்துகிறது'' என்று நீதிபதி பால் அவர்கள் தெளிவாகவே சொல்லியிருக்கிறார்கள். ஆக, உண்டியல் உடைக்கப்படும்போது சுப்பிரமணியப் பிள்ளை நிச்சயமாக அங்கே இல்லை என்பதை பால் அவர்கள் தெளிவாகச் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள்.

இரண்டாவது கேள்வி, உண்டியல் பணம் எண்ணப்பட்ட போது சுப்பிரமண்ய பிள்ளை திருடினாரா என்ற ஒரு கேள்வி எழுகிறது. அதற்கு பால் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பககம் 30. ''சரிபார்ப்பு அதிகாரி உண்டியல் பணத்தைத் திருடியதாகக் குற்றஞ்சாட்டப்படுவது தொடர்பாக அ. சா, 3 அளித்த சாட்சியம் நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை.'' பக்கம் 38-ல், மேலும் சொல்லுகிறார்கள், ''சரிபார்ப்பு அதிகாரி உண்டியல் பணத்தைத் திருடினார் என்ற கதை நம்பத்தக்கதாக இல்லையென்றும், அது உண்மையானதன்று என்றும் நான் கருதுகிறேன்,'' என்று நம்பத்தக்கதாக இல்லை, உது உண்மையானதன்று என்பதை திட்டவட்டமாக தெளிவாக பால் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

மூன்றாவது கேள்வி, திருடு கண்டுபிடிக்கப்பட்டதும் அந்த அவமானத்தை தாங்கமுடியாது சுப்பிரமணிய பிள்ளை தற்கொலை செய்து கொண்டாரா என்பது. அதற்கு பால் அவர்கள் சொல்கிறார்கள் பக்கம் 38-ல். ''..ஆகையால் சுப்ரமணியபிள்ளை உண்டியல் பணத்தைத் திருடினார் என்று கூறப்படுவது உண்மையல்ல என்று தெரிய வருமானால் திருடப்பட்டது கண்டுபிடிக்கப் பட்டதால்தான் அவர் தற்கொலை செய்து கொண்டார் என்ற 'அ' தரப்பினரின் வாதம் குலைந்து போகாவிட்டாலும் முழுமையாக ஆட்டம் கண்டுவிடுகிறது என நான் கருதுகிறேன்.''

That on acocunt of the discovery of that theft he committ ed sucide is shatken to the vsry core if not destroyed.

ஆங்கிலப் பதிப்பில் பக்கம் 33-ல் தெளிவாக பால் அவர்கள் சொல்கிறார்கள்.

அடுத்து, நான்காவது கேள்வி, சுப்பிரமணியபிள்ளை சாவையொட்டி அறங்காவலர்கள், தேவஸ்தான அதிகாரிகள் நடந்து கொண்டமுறை, செயல்பட்டவிதம் சந்தேகத்திற்கு இடம் அளித்ததா என்பதாகும் அதற்கும் பால் அவர்கள் தெளிவாகச் சொல்கிறார்கள். ''இந்த வழக்கில் சாட்சி



கள் அளித்த சாட்சியமும் அவர்கள் நடத்தையும் ஒன்றுக்கொன்று முரண்பட்டிருந்ததால் அவர்களின் சாட்சியத்தை நாம் ஏற்கமுடியவில்லை என்பது வெளிப்படையாயிற்று.'' என்று சொல்கிறார்கள். அதற்கடுத்த பக்கத்தில் சொல்கிறார்கள், ''சரிபார்ப்பு அதிகாரிக்கு உடனடியாக அவர்கள் முதலுதவி அளிக்கவோ அவருக்கு மூச்சு வரச்செய்யவோ சிகிச்சை அளிக்கவோ முன்வரவில்லை என்றும், ஏனெனில் அவருக்கு மூச்சு வந்து உணர்வு பெற்றால் அவர்களுக்கெதிராக மரண வாக்கு மூலம் கொடுக்கக்கூடும் என்று அவர்கள் அச்சப்பட்டனர் என்றும் 'ஆ' தரப்பினரின் வழக்குரைஞர் கூறிய வாதத்திற்கு இவர்களின் விசித்திரமானபோக்கு ஆதரவாகிறது.,' ''மிகுந்த விசித்திரமான அவர்களின் நடத்தை தீய உள்நோக்கங்கொண்டது என்ற முடிவிற்கு வர வழி வகுக்காவிட்டாலும்கூட அவர்கள் சாட்சியங்களின்மீது ஐயத்தையாவது எழுப்புகிறது. அவர் ஏற்கனவே இறந்திருக்க வேண்டுமென்று மிகவும் உறுதியாக இருந்ததாலோ அல்லது அவர்களுக்கு தீய உள்நோக்கம் இருந்ததன் காரணமாகவோ சரிபார்ப்பு அதிகாரிக்கு உடனடியாக மருத்துவ உதவி அளிக்க பெரிதும் தயக்கம் காட்டினர் என்றே தோன்றுகிறது.'' என்றும் சொல்கிறார்கள். தேவஸ்தான அதிகாரிகள், அறங்காவலர்கள் நடத்தை சந்தேகத்திற்கு இடமாக இருந்தது என்பதை நீதிபதி பால் தெளிவாகச் சொல்கிறார்கள்.

திருச்செந்தூரில் அந்த நேரத்தில் இருந்த போலீஸ், ரெவன்யூ அதிகாரிகள் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்தார்களா என்பது ஐந்தாவது கேள்வியாகும். அதற்கும் பால் அவர்கள் தெளிவாகச் சொல்கிறார்கள். பிரேத விசாரணை நடத்தப்பட்டு இறுதி அறிக்கை கொடுக்கப்படுகிறவரை ஆய்வகம் பூட்டு சீல் வைக்கப்பட்டிருக்க வேண்டும். அது செய்யப்படவில்லை. அதை அ. சா. 9 செய்யவில்லை. ஆய்வகத்தின் சாவி அ. சா. 3-டம் இருந்திருக்கிறது. மற்றொரு சாவி தேவஸ்தானத்தில் இருந்திருக்கிறது. தற்கொலை அல்லது கொலை, முக்கியமான நிகழ்ச்சி நடக்கிறது. அதுநடைபெற்ற ஆய்வகத்தை பூட்டிவைகக வேண்டும் என்பது சாதாரண அறிவு உள்ளவர்கூட செய்யக் கூடிய வேலை. ஆனால் போலீஸார் அந்தக் கடமையைச் செய்யவில்லை என்பத பால் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல.

(முற்பகல் 11.20)

பக்கம் 71—லே அவர் தெளிவாகச் சொல்கிறார்: 'பிரேத விசாரணை நடத்துகையில் அ. சா. 11 —நான்கு பெரியவர்களை வைத்து அவர்கள் முன்னிலையில் விசாரணை நடத்தவில்லை என்பது விரோதமாக உள்ளது' என்று. பிரேத விசாரணை நடத்துவது என்றால், அந்த ஊரிலே உள்ள 4 பெரிய மனிதர்களை அழைத்து வைத்துத்தான் இதை நடத்துவார்கள். ஆனால், இதிலே அவர்கள் அவ்வாறு செய்யவில்லை என்றும், எனவே இது மிகவும் விநோதமாக இருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறார்.

அ. சா. 11-ன் கூற்றுப்படி பிரேத விசாரணைக்கென பஞ்சாயத்தார்களாக இருந்தவர்களில் இருவர் கோவில் பணியாளர். இருவர் கூலிகள். மற்றொருவர் வணிகர். இவர்களை வைத்துக்கொண்டு அவர்கள் பஞ்சாயத்து நடத்தியதாகச் சொல்லியிருப்பதை தன்னால் நம்ப முடியவில்லை என்று நீதிபதி பால் அவர்கள் சொல்லியிருக்கிறார்.

பக்கம் 77-லே இன்னொன்றைச் சொல்லுகிறார். ''திருச்செந்தூர் புற நகர் காவல் நிலையத்தின் பொது நாட் குறிப்பேடு 'சா. ஆ. எ. 35இலுள்ள இவ்விரு பக்கங்களும், இப் பொது நாட் குறிப்பேட்டில் 26-11-1980 ஆம் நாளில் எழுதப்பட்ட உண்மையான பதிவுதான் என்பதைக் காட்டுவதற்காக இவை வேறு ஏதோ ஒரு பொது நாட் குறிப்பேட்டிலிருந்து கிழிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை இது காட்டுகிறது' என்று நீதிபதி பால் சொல்லுகிறார்.

அதேபோல், பக்கம் 75லே சொல்லுகிறார்—'சில பதிவேடுகளில் திருத்தங்கள் உள்ளன. தேவஸ்தான அதிகாரிகள் திரித்துக் கூறியதற்கு ஆதரவாக சில துறைகளின் அதிகாரிகள் வேண்டுமென்றே சில திருத்தங்களைச் செய்ததாக ''ஆ'' தரப்பினர் கூறுவதற்கு அழுத்தமான காரணம் உள்ளது' என்பதையும் அவர் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

அடுத்த கேள்வி 6. மருத்துவப் பரிசோதனை கூறுவது என்ன அதற்கு நீதிபதி பால் அவர்கள் அவருடைய பரிந்துரையிலே, பக்கம் 63லே தெளிவாகச் சொல்லியிருக்கிறார். டாக்டர் கோபாலகிருஷ்ணா அளித்த சாட்சியத்தின் சுருக்கத்தை மட்டும் சொல்கிறேன். டாக்டர் கோபாலகிருஷ்ணாவின் சாட்சியம் ஒரு மருத்துவ வல்லுநரின் கருத்தே. இதை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவோ, நிராகரிக்கவோ செய்யலாம். சரிபார்ப்பு அதிகாரியின் மரணம் தொடர்பாக ''அ'' தரப்பினர் அளித்த கூற்றை இது அடிபட்டு போகச் செய்கிறது. இந்த வல்லுநர் சாட்சியத்தை நிராகரிக்க காரணங்கள் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை, என்றும் எனவே இந்த சாட்சியத்தை நான் ஏற்கிறேன் என்றும் சொல்லியிருக்கிறார். அந்த டாக்டர் கோபால கிருஷ்ணா என்ன சாட்சியம் சொல்லியிருக்கிறார்.

(1) கா. பொ. 1ஐ மரணம் அடைந்தவர் தன்னைத் தானே தூக்கிட்டுக் கொள்ளப் பயன்படுத்தி இருக்க முடியாது. ஏனெனில் அதில் இரு முனைகளிலும் முடிச்சுப் போடுவது கடினம். மேலும் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் வேட்டி க.பொ 1ஐ விட 22 செ.மீ. நீளம் குறைவாக இருக்குமானால் சுப்பிரமணிய பிள்ளை அதைக் கொண்டு தனக்குத் தானே தூக்கிட்டுக் கொண்டிருக்க முடியாது.

(2) சுப்பிரமணிய பிள்ளை ஒரு வாளியின்மீதோ அல்லது தடுப்புச் சுவரின் மீதோகூட ஏறி இந்த வேட்டியின் உதவியால் தற்கொலை செய்து கொண்டிருக்க முடியாது.



(3) சவப் பரிசோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்ட 3 காயங்கள் கொலைக் காயங்களாகும். அவற்றில் ஏதாவது ஒரு காயத்தினால் அல்லது 3 காயங்களினாலும் மூளை அதிர்ச்சி ஏற்பட்டு அவர் நினைவிழந்திருப்பார். இவ்வாறு காயமுற்ற பின்னர் தற்கொலை செய்ய அவர் முற்பட்டிருக்க முடியாது.

(4) சவப் பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்ட அறிகுறிகள் அனைத்துமே ஒருவர் சுய நினைவிழந்த அல்லது ஓரளவு நினைவிழந்த நிலையில் இருக்கும்போது, அவராகவே செய்து கொள்ளாமல் மற்றொருவரால் தூக்கிலிடப்பட்டு அவ்வாறு தூக்கிலிடப்பட்டதால் ஏற்பட்ட மூச்சுத் திணறல் காரணமாக ஏற்பட்ட மரணத்தின் அறிகுறிகளை ஒத்திருக்கின்றன.

(5) இறந்த அதிகாரி தலையில் தாக்கப்பட்டு நினைவிழக்கச் செய்யப்பட்டு அதன் பின்னர் தற்கொலை என்று தோன்றச் செய்வதற்காக உயிருடன் இருக்கும்போதோ அல்லது இறந்த பின்னரோ அவரது கழுத்தை நெறித்திருக்க வேண்டும். அல்லது அவர் தொங்கவிடப்பட்டிருக்க வேண்டும். சவப் பரிசோதனையில் தென்பட்ட அறிகுறிகளைக் கொண்டு கழுத்தை நெறித்தாலோ, தூக்கிலிட்டுத் தொங்கியதால் ஏற்பட்ட மூச்சுத் திணறலால் மரணம் ஏற்பட்டது என்று சொல்வதற்கு முற்றிலும் சாத்தியமுள்ளது.
என்று பால் அவர்கள் மிகவும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

கேள்வி 7. தடையங்களைக் கலைக்க முயற்சி நடந்ததா? இதைப் பற்றி பால் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். பக்கம் 52-லே அவர் சொல்கிறார். இரத்தக் கறை வேட்டிக்குப் பதிலாக மற்றொரு வேட்டி காட்டியிருப்பது அக்கறை கொண்ட சிலர் தடயங்களைக் கலைக்க முயற்சித்ததையே காட்டுகிறது என்று.

பக்கம்—70—'' ஆகவே, தீய செயல்புரியும் நோக்கத்துடன் ஆய்வகத்தில் நுழைவதில் அக்கறை கொண்ட தேவஸ்தானத்துடன் சம்பந்தப்பட்ட எவரும் ஆய்வகத்தினுள் எளிதில் செல்ல ஏதுவாக இருந்திருக்கிறது. சுப்பிரமணிய பிள்ளையின் சடலம் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட பின்னர் ஆய்வகத்திலிருந்த எண்ணற்ற பொருட்கள் காணாமல் போய் விட்டன என்று தெரிகிறது. முதலில் நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல் அவருடைய அலுவலக நாட்குறிப்பேடு, பச்சை மை நிரம்பிய பேனா, நீல மை நிரம்பிய பேனா, ஆகியவை அவர் இறந்தபின் ஆய்வகத்திலிருந்து காணாமல் போய்விட்டன.

பக்கம்—70—'' சரிபார்ப்பு அதிகாரியின் குளியல் சோப், பிரஷ் ஆகியவற்றைக் காணவில்லை.

பக்கம் 70—அ.சா. 11—திருச்செந்தூர் காவல் துறை இன்ஸ்பெக்டர் ஸ்ரீதரன் நாயர் சம்பவம் நடைபெற்ற இடத்தைப் பார்வையிட்டபோது குளியறையிலிருந்த இரண்டு இரும்பு வாளிகள் பின்னர் அகற்றப்பட்டிருந்தன.

பக்கம்— 70 — ''11-12-80 ஆயவகத்தை ஆய்வு செய்து பூட்டி சாவியை சப்-இன்ஸ்பெக்டரிடம் கொடுத்ததாக அ.சா. 11 கூறுகிறார். ஆகவே, 11-12-80 அன்றுக்கும் இக்கமிஷன் பணியாளர்கள் ஆய்வகத்தை முத்திரையிட்டுப் பூட்டிய நாளான 7—2—81க்கும் இடைப்பட்ட காலத்தில் எவரோ ஒருவர் துவலைக் குழாயை உடைத்துள்ளார். இதை வேறு யாரும் சொல்லவில்லை, நீதிபதி பால் அவர்களே சொல்லியிருக்கிறார்கள்.

பக்கம் 71—''அ.சச. 11 குளியலறையில் தான் கண்டதாகக் கூறும் இரு இரத்தத் துளிகளின் கறை காய்ந்திருக்க வேண்டும். அவ்விடத்தை நான் ஆய்வு செய்தபோது குளியலறையில் காய்ந்து போன இரத்தக்கறையேதும் காணப்படாததால் யாரோ ஒருவர் அதைத் துடைத்திருக்கிறார் என்பதும் வெளிப்படை.''

பக்கம்—75—'' ஆய்வகத்திலிருந்து சுப்பிரமணிய பிள்ளையின் தனி முத்திரை காணாமல் போனதும் மீண்டும் இரவு 10 மணிக்கு அம்முத்திரைக் கிடைத்ததும் தொடர்பாக, சுப்பிரமணிய பிள்ளை மரணமடைந்த பின்னர் அவர் வைத்திருந்த அலுவலக நாட்குறிப்பேட்டையும், பச்சை மை பேனாவையும் அப்புறப்படுத்தியதைப் போல முத்திரையையும் ஆய்வகத்திலிருந்து யாரோ எடுத்திருக்க வேண்டும் என்கிற ஐயம் எழுகிறது.

இம்முத்திரை இரு நோக்கங்களுக்காகத்தான் பயன்படுத்தப்பட்டு வந்தது. உண்டியல்களைத் திறந்து அவற்றிலுள்ள காணிக்கைகளை எண்ணுவதற்காக எடுத்த பின்னர் அவற்றை மீண்டும் முத்திரையிடுவதற்கும், இரண்டாவதாக திரு ஆபரணங்களைக் கொண்ட சிப்பங்களுக்கு முத்திரையிடுவதற்கும் பயன்படுத்தி வந்தது, எனவே, சரிபார்ப்பு அதிகாரி அங்கு வருவதற்கு முன்பு விடியற்காலையில் உண்டியல்கள் திறக்கப்பட்டுள்ளன என்றும், மீண்டும் உண்டியல்களுக்கு முத்திரையிடுவதற்குத் தனி முத்திரை தேவைப்பட்டது என்றும், தான் இல்லாமல் உண்டியல்கள் திறக்கப்பட்டுவிட்டதால் சரிபார்ப்பு அதிகாரி முத்திரையைக் கொடுக்க மறுத்திருக்க வேண்டும் என்றும், எனவே அவருடைய மரணத்திற்குப் பின் யாரோ ஒருவர் உண்டியல்களுக்கு மீண்டும் முத்திரையிடுவதற்கு ஆய்வகத்திலிருந்து முத்திரையை எடுத்துச் சென்றிருக்கிறார் என்றும் எனவே அ.சா. 6, அ. சா. 3, க. சா. 10 ஆகியோர் முத்திரை காணாமல் போனது பற்றி அ. சா. 11 இடம் எதுவும் கூறவில்லை என்றும், யாரும் முத்திரைப் பற்றி சொல்லவில்லை என்பதிலும் ஐயம் எழவே செய்கிறது.



8-வது கேள்வி. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் கொலை செய்யப்பட்டாரா என்பது. அதைப் பற்றி நீதிபதி பாலின் பரிந்துரை பக்கம் 78—ல் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'' சாவு பற்றிய ''அ'' தரப்பு கூற்று உண்மையானதாக இருக்கமுடியாது. ஆனால் அதற்கு மாறாக சரிபார்ப்பு அலுவலர் கோவிலுக்கு வந்து சேர்வதற்கு முன்பே உண்டியல்கள் திறக்கப்பட்டன. அதனால் சரிபார்ப்பு அலுவலர் எதிர்ப்புத் தெரிவித்து எண்ணுவதில் தான் பங்கெடுத்துக் கொள்ளப் போவதில்லை என்றும் அதிகாரிகளிடத்தில் இது பற்றி அறிக்கை செய்யப் போவதாகவும், கூறி ஆய்வகத்திற்குச் சென்று விட்டார். அதன் பேரில் அவர் தாக்கப்பட்டு யாரோ ஒரு நபரால் அல்லது சில நபர்களால் அவருக்குத் தலையில் காயங்கள் விளைவிக்கப்பட்டன. அதன் காரணமாக அவர் உணர்விழந்தவர் ஆனார். அவர் குரல் வளையை நெறிப்பதற்காக முயற்சிக் கூடச் செய்யப்பட்டு இருந்திருக்கலாம். மற்றும் அவர் தற்கொலை செய்து கொண்டார் என்று தோன்றுமாறு செய்ய அவர் துவலைக் குழாயில் தொங்கவிடப்பட்டார் என்று சந்தேகிப்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. சுருங்கச் சொன்னால் மரணம் விளைவிக்கக்கூடிய வன்முறையில் — ஹோமிசைடல் வயலன்ஸ் காரணமாக சரிபார்ப்பு அலுவலர் தன் மரணத்தைச் சந்தித்தார் என்று நம்புவதற்குப் போதுமான ஆதாரங்கள் உள்ளன'' என்று நீதிபதி பால் அவர்கள் திட்டவட்டமாக 8-வது கேள்விக்குப் பதில் சொல்லியிருக்கிறார்.

(முற்பகல் 11.30)

இது நிச்சயமாகக் கொலை என்பதை அவர் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். ஆகவே நீதிபதி பால் அவர்களின் இந்தப் பரிந்துரையில் நான் 8 கேள்விகளை எழுப்பினேன், 8 கேள்விகளுக்கு அவர் அளித்த விடையை இந்த அவையின் கவனத்திற்கு வைத்தேன். 9-வது கேள்வி, கொலைக்கான காரணங்கள், உள்நோக்கங்கள் என்ன? என்பது. அதற்கு நீதிபதி பால் அளித்த பரிந்துரையிலிருந்து நான் பதிலை எடுத்து வைக்க விரும்புகிறேன். சரிபார்ப்பு அதிகாரி வருவதற்கு முன்னாலேயே உண்டியல்கள் உடைக்கப்பட்டுவிட்டன. தனி அவர் வந்த பிறகு கையெழுத்திட மறுத்துவிட்டார். தனி முத்திரை வைக்கவும் மறுத்துவிட்டு ஆய்வகம் சென்று விட்டார். தங்கள் மோசடி வெளியாகிவிடும் என்ற காரணத்தினால் அவரைக் கொலை செய்து தற்கொலை செய்து கொண்டதாகக் கூறிவிட்டனர். இவ்வாறு நமக்கு பரிந்துரையிலிருந்து தெரியவருகிறது.

இது சம்பந்தமாக இன்னும் சில சில விவரங்களை இந்த அவையின் கவனத்திற்கு நான் வைக்க விரும்புகிறேன். நான் 18-12-80 இல் திருச்செந்தூருக்குச் சென்று அங்கே உள்ள சகல தரப்பினரையும் விசாரித்து பகிரங்கமாகப் பத்திரிகைகளுக்கு நான் ஒரு அறிக்கை கொடுத்தேன். அதிலே நான் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். அறங்காவல், போலிஸ், ரெவின்யூ, மருத்துவத் துறை ஆகிய அலுவலகங்களிலே இந்த நிகழ்ச்சி சம்பந்தமாக உள்ள சகல ரிகார்டுகளையும் அரசாங்கம் கைப்பற்றி சீல் வைக்க வேண்டும் என்றும் இல்லாவிட்டால் அதைத் திருத்துவதற்கான முயற்சி நிச்சயமாக நடைபெறும் என்றும் சுட்டிக்காட்டினேன். திருச்செந்தூரிலிருந்து யார் யாருக்கு டிரங்கால்கள் போடப்பட்டன என்பதுப் பற்றி அது சம்பந்தமாகவும் சகல ரிகார்டுகளையும் வாங்கி சீல் வைக்க வேண்டுமென்று அறிக்கையிலே நான் வற்புறுத்தி இருந்தேன். என்னுடைய அறிக்கையிலே நான் என்ன சொன்னேனோ அது எவ்வளவு நியாயமானது என்பதை நீதிபதி பால் அறிக்கை தெளிவாக்கி இருக்கிறது.

அந்தத் தடையங்கள் எல்லாம் அழிக்கப்பட்டு விட்டன அல்லது திருத்தப்பட்டுவிட்டன என்று பால் கமிஷன் அறிக்கை சொல்லியிருக்கிறது. இப்போதும் நான் சொல்கிறேன். இனிமேலும் தாமதம் செய்யாமல் உடனடியாக அறங்காவலர் குழுவைக் கலைத்துவிட்டு புலன் விசாரணையை முடுக்கி விட்டு குற்றவாளிகளை கைது செய்து வழக்கு தொடுக்க வேண்டும். இட் இஸ் டூ லேட், ஏற்கெனவே தாமதம் ஆகி யிருக்கிறது. இன்னும் தடயங்களையும் சாட்சியங்களையும் அழிப்பதற்கான முயற்சிகளிலே சம்பந்தப்பட்டவர்கள் ஈடுப் பட்டிருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த ரகசியம்.

நான் இன்னொன்றையும் இந்த அவையின் கவனத்திற்கு வைக்க விரும்புகிறேன். மதிப்பிற்குரிய முதலமைச்சர் 8-12-80 அன்று திருச்செந்தூர் சென்றார். நேரிலே விசாரித்தார். சென்னை திரும்பி வந்த உடனே நீதிவிசாரணைக்கு உத்திர விட்டார். ஆனால் அந்த விசாரணை அறிக்கை வெளிவந்து அந்த அறிக்கையின்மீது இந்த சபையினரின் ஆலோசனைகளைப் பெற்று இந்த சபை என்ன கருதுகிறது என்பதைப் பெற்று அதற்குப் பின்னால் அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுத் திருக்குமானால் அது நியாயம். முதலமைச்சர் நீதிவிசாரணைக்கு உத்தரவிடுகிறேன் என்று சொல்கிறார். அந்த அறிக்கை வந்ததற்குப் பின்னால் அந்தப் பரிந்துரையின் மீது நீங்கள் ஜி.ஓ.வை அவசர அவசரமாக வெளியிடுகிறீர்கள். இது அவசியந்தானா? இது தேவைதானா? இந்தப்பரிந்துரையின்மீது இந்தச்சபை என்ன கருதுகிறது என்பதை அறிந்த பின்னாலே நீங்கள் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டுமே தவிர அதற்கு



முன்னால் மிகப் பதைப்போடு அரசாங்கம் அறங்காவலர் குழுவைக் கலைப்பதற்கு சட்டத்திலே இடம் இல்லை என்று வெவ்வேறு வகையிலே எல்லாம் நீங்கள் அவசர அவசரமாக ஜி. ஓ. வை வெளியிட வேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் புலன் விசாரணைக்கு உத்திரவிட்டிருக்கிறோம் என்று சொல்லு கிறீர்கள். நான் உங்களைக் கேட்க விரும்புகிறேன். இந்தச் சம்பவத்தைப்பற்றி அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் ஒரு அறிக்கையை பத்திரி கைகளுக்கு பகிரங்கமாக வெளியிட்டார். இது கொலை அல்ல தற்கொலை........

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நேற்றும் நான் அந்த கருத்தை மறுத்துச்சொல்லி யிருக்கிறேன். மாண்புமிகு திரு நெடுமாறன் அவர்கள் ஒரு பொறுப்புள்ள கட்சியின் தலைவராக இங்கே பேசிக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு அமைச்சர் அறிக்கை வெளியிட்டார் என்று சொல்கிறார்கள். அமைச்சர் அறிக்கை வெளியிடவில்லை. அரசுக்கு வந்து மாவட்ட ஆட்சித் தலைவருடைய அறிக்கையை அந்தத் துறையை சேர்ந்த அரசினுடைய செயலாளர்களை வைத்துப் பத்திரிகைளுக்குப் படித்துச் சொல்லி இருக்கிறோம். அதற்குப் பிறகு அரசியல் கருத்துக்கள் வெளியிடப்பட்டதை ஒட்டி நான் அரசியல் கருத்துக்களை வெளியிட்டிருக்கிறேன்.

திரு. ப. நெடுமாறன்: நானும் இதைத்தான் எதிர்பார்த்தேன். நான் ஒரு சம்பவத்தை அமைச் அதை நான் வரவேற்கிறேன். கேரள மாநில சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இராஜன் முதலமைச்சராக இருந்த கருணாகரன் அவர்கள் அறிக்கையை கொலை வழக்கிலே போலீஸ் அதிகாரிகள் சொன்ன அதற்கான அவர்கள் வாசித்து அளித்ததன் விளைவாக கடமையாக பொறுப்பை அவர் ஏற்க வேண்டிய தார்மீகக் இராஜினாமா செய்ய வந்து, அதன் விளைவாகப் பதவியை விட்டு நினைவு படுத்த வேண்டிய அவசியம் வந்தது என்பதை நான் கொடுத்த விரும்புகிறேன். நீங்கள் அரசாங்க அதிகாரிகள் பொறுப்பை தகவல்களை நீங்கள் அறிவிக்கும்பொழுது அதற்கான அமைச்சர அமைச்சரவர்கள் தார்மீக ரீதியிலே ஏற்க வேண்டும். என்றால், வர்களின் பதிலில் இருந்து என்ன தெரிகிறது வெளியிட்டேன் அதிகாரிகள் கொடுத்தார்கள், அதை நான் என்பதை என்பது பொறுப்பான ஒரு பதிலாக இருக்க முடியாது நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்படி அரசாங்கத்திற்கு வருகின்ற தகவல்களை முதல் தகவலுக்காக மக்களுக்குத் தெரிவிக்கின்ற சூழ்நிலையை யொட்டி, பிறகு மாறுபட்ட கருத்துக்கள் வரும்பொழுது அமைச்சரவை அல்லது அமைச்சர் இராஜினாமா செய்ய வேண்டு

மென்று முன்னாலே இந்தச் சட்டமன்றத்திலே எழுப்பப்பட்டிருக்கிறது. அதற்குப் பதில்களெல்லாம் அளிக்கப்பட்டிருக்கின்றன. தேவையான நேரத்தில் அந்த விவரங்கள் தரப்படும். ஆனால் மாண்புமிகு கருணாகரன் மீது நடைபெற்ற பிரச்னை வேறு. நீதிமன்றம் வரை சென்று ஏற்பட்ட நிலைமை. ஆகவே, அந்தப் பிரச்னைக்குள்ளே நுழைந்து, அமைச்சர் இராஜினாமா செய்ய வேண்டும், அமைச்சரவை இராஜினாமா செய்ய வேண்டுமென்று விரும்பினால் ஒருநாள் கூட அமைச்சரவை இருக்காது; இருக்க வைக்க முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிந்துக்கொண்டிருப்பார்கள் என்று கருதுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. ப. நெடுமாறன்: முதலமைச்சரவர்கள் நீதி விசாரணைக்கு உத்தரவிட்டார்கள். பிறகு பால் கமிஷன் விசாரித்து அறிக்கையை வைத்திருக்கிறது. போலீஸ் புலன் விசாரணைக்கு உத்தரவிட்டிருக்கிறீர்கள். ஆனால் என்னுடைய சந்தேகம் என்னவென்றால், மாண்புமிகு அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்களின் அறிக்கையும், இந்த ஜி. ஓ. வும் பரிந்துரைகள் மீது வெளியிடப்பட்ட ஜீ. ஓ. வும் அரசு இந்தப் பிரச்னையில் என்ன கருதுகிறது என்று தெளிவாக சுட்டிக் காட்டியிருக்கிறது பிறகு போலீசார் எப்படி நியாயமான முறையில் விசாரணை நடத்த முடியும்? அரசாங்கம் என்ன கருதுகிறது என்பது போலீசாருக்குத் தெரிவிக்கப் பட்டிருக்கக் கூடாது. இந்த நிகழ்ச்சியைப்பற்றி அரசாங்கத்தின் கருத்து என்ன என்பதைப்பற்றி நீங்கள் தெளிவாக்கி விட்டீர்கள். இந்த ஜி. ஓ. வின் மூலமும், அமைச்சர் அறிக்கை விட்டதன் மூலமும் தெளிவாக்கி விட்டீர்கள். இதற்குப் பிறகு போலீஸ் நியாயமான விசாரணையை நடத்தும் என்று எப்படி நாங்கள் எதிர்பார்க்க முடியும்? போலீசாரின் கைகளைக் கட்டிவிட்டு, விசாரணை நடத்த வேண்டுமென்று சொன்னால் ஒரு முடிவுக்கு வந்தாகி விட்டது. இதன் முடிவுக்கு ஏற்ப போலீசார் விசாரணை செய்து அவர்களுடைய பரிந்துரையை அளிக்கட்டும் என்பதுதானே பொருள். ஆகவே, போலீஸ் நியாயமான முறையில் செயல்பட இயலாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, அறங்காவலர் குழுவைக் கலைக்க சட்டத்திலே இடம் இல்லை என்ற ஒரு வாதம் வைக்கபபட்டிருக்கிறது. நான் கேட்கிறேன், பால் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எப்படிக் கலைக்கலாம் என்பதற்கான காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள், அதை நீங்கள் ஏற்கவில்லை, அது வேறு விஷயம். ஆனால் அறங்காவலர் குழுவிலே இருக்கின்ற ஐந்து பேர்களிலே நான்கு பேர்கள் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள்; ஒருவர் இந்திரா காங்கிரஸைச் சேர்ந்தவர். கட்சி கட்டளையிட்டிருந்தால் அந்த நான்கு பேர்களையும் இராஜினாமா செய்ய வைத்திருக்க முடியும். தார்மீகப் பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது.



அறங்காவலர் குழுத் தலைவர் பாலகிருஷ்ணனைக் கட்சியிலிருந்து சஸ்பென்ட் செய்து அறிக்கை வெளியிட்டீர்கள்; கட்சியிலிருந்து வெளியேற்றப்படுகிறார். ஆனால் மற்ற மூன்று பேர்களும் கட்சியிலே இருக்கிறார்கள், தார்மீக ரீதியிலே நீங்கள் இராஜினாமா செய்து விட்டு வெளியே போக வேண்டுமென்று சொல்லியிருக்க வேண்டும். அதைக் கூடச் செய்ய மனம் இல்லாமல் நீங்கள் இருப்பதற்கு என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறங்காவலர் குழுத் தலைவருக்கு மேலும் பல பதவிகள் இந்த அரசாங்கத்தால் தொடர்ந்து அளிக்கப்பட்டு கொண்டிருப்பது நீங்கள் ஒரு சார்புடையவர்களாக இதில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. பல்வேறு வாரியங்களின் தலைவர்களை நீங்கள் இராஜினாமா செய்ய சொல்லவில்லையா; உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களை இராஜினாமா செய்ய வைக்கவில்லையா? ஏன்

இந்த அறங்காவலர் குழு விஷயத்திலே இவ்வளவு பதைப்புடன் செயல்படுகிறீர்கள் என்பதை என்னாலே புரிந்துக் கொள்ள முடியவில்லை என்பதை நான் உங்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 11.49)

பால் கமிஷன் பரிந்துரையிலே இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார்கள். எதிர்காலத்தில், கோயில்களில் உண்டியல்களில் ஆபரணங்களை, பாதுகாப்பதற்கான நடைமுறைகளைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது பால் கமிஷனிலே பரிந்துரையிலே. அதைப்பற்றி ஒரு வார்த்தைக் கூட உங்களுடைய இணைப்புரையிலே, எதுவுமே இல்லை. அதிலே நான் அரசு தரப்பினருக்கு மிக்கப் பணிவாக ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் இதை வற்புறுத்துகிறது, அதனுடைய தலைவர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் சொல்கிறார்கள் என்பதற்காக நீங்கள் பிடிவாதம் பிடிப்பது சரியல்ல. என் போன்றவர்கள் ஆரம்பத்தில் இருந்தே இதைவற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். பால் கமிஷன் அமைக்கப்பட்ட பொழுது நான் வரவேற்றிருக்கிறேன். இந்திரா காங்கிரஸைச் சேர்ந்த அருமை நண்பர் திண்டிவனம் இராமமூர்த்தி அவர்கள் இந்துக் கோயிலிலே நடைபெற்ற ஒரு நிகழ்ச்சிக்கு கிறிஸ்தவ நீதிபதியை நியமிக்கலாமா என்று கேட்டார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் அது ஆமோதிக்கப்பட்டது. ஆனாலும் என் போன்றவர்கள் பால் கமிஷன் விசாரணையை வரவேற்றதோடு மட்டுமல்ல, ஆஜராகி உறுதிமொழிப் பத்திரமும் கொடுத்து, நேரிலும் பால் கமிஷன் முன்னால் எங்களுக்குத் தெரிந்த உண்மைகளைச் சொல்லியிருக்கிறோம். அந்தக் கமிஷன் இன்றைக்குத் தெளிவானத் தீர்ப்பை வழங்கிற்று. இந்தச் சந்தர்ப்பத்திலே அந்தப் பரிந்துரைகளின்படி நீங்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, அதற்கு சாக்குப்போக்கு சொல்வதிலே உங்களுக்கோ, நாட்டுக்கோ எந்தப் பயனும்

விளையப் போவதில்லை. உங்களுக்கு ஒரு சம்பவத்தை நினைவு படுத்துகிறேன். 1948 ஆம் ஆண்டில் காங்கிரஸ் ஆட்சி இந்த மாநிலத்திலே நடைபெற்றபொழுது, அன்றைக்கு ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். அப்பொழுது உடையார் பாளையம் வேலாயுதம் என்ற திராவிடர் இயக்கத்தைச் சேர்ந்த ஆசிரியர் அடித்துக் கொல்லப் பட்டு மரத்திலே, தூக்கிலப்பட்டதாகக் காட்டப்பட்டார். இதேப் போன்ற சம்பவம். அன்றைக்கு ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள். இதிலே கலந்துக் கொண்டவர் காங்கிரஸ் எம்.எல்.ஏ. வெங்கடாசலம் பிள்ளை என்றிருந்தாலுங்கூட, உடனடியாக நடவடிக்கை எடுத்து, அவரைக் கைது செய்து குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தி, நியாயமான நீதிவிசாரணை நடத்துவதற்கு ஏற்பாடு செய்தார். அந்த மனத் துணிவு உங்களுக்கு வரவேண்டுமென்று நான் வற்புறுத்த விரும்புகிறேன். நீங்கள் இன்றைக்கு செய்துக் கொண்டிருக்கக்கூடிய காரியம், நாட்டுமக்கள் மத்தியிலே நீங்கள் இந்த பயங்கரமானப் படு கொலையை மறைப்பதற்கு ஆளுங்கட்சித் திட்டமிட்டு முயற்சி செய்கிறது என்ற எண்ணத்தைத்தான் ஏற்படுத்திக் கொண்டிருக் கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பால் கமிஷன் பரிந்துரையின் பேரிலே அரசாங்கம் அளித்திருக்கிற இணைப்பு அறிக்கையை வாபஸ் வாங்கிவிட்டு, உடனடியாக, புலன் விசாரணையை முடுக்கி விட்டு, அறங்காவலர் குழுவை கலைத்து, ஆலயச் சிப்பந்திகள் யாராக இருந்தாலும், அவர்களை யெல்லாம் அழைத்து, யார் யாரை விசாரிக்க வேண்டுமோ, அவர்களையெல்லாம் விசாரித்து, அதிலே எந்த பட்சபாதமும் இல்லாமல் உங்களுடைய நேர்மையை நீங்கள் காட்ட வேண்டு மென்று இந்த நாடு எதிர்பார்க்கிறது, அந்த வகையிலே உண்மை யான குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, அவர்களுக்குரியத் தண்டனையை வழங்குவதிலே இந்த அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு( வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள்!இங்கே பேசும்போது 8(பி)-ன் படி என்னிடம் அஃபிடவிட் வாங்க வேண்டுமெனச் சட்டத்தின் துணையை நாடினார்கள். சட்டத்தின் துணையை நாடிய மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, அரசு நடவடிக்கைக் குறிப் பினை இப்பொழுது வைத்தது தவறு என்று சொன்னார்கள், செக்ஷன் 3 பிரிவு 4ல் நடவடிக்கை குறிப்பையும் இணைத்து தான் பேரவையில் வைக்க வேண்டுமேன்று இருக்கிறது. ஆகவே, அதைப்பற்றி என்ன சொல்ல விரும்புகிறார் என்பதை அறிய விரும்புகிறேன்.

*THIRU T. VENKATA REDDY: Hon. Mr. Deputy Speaker, Sir, I would like to thank the House for having given me this opportunity to speak on behalf of Congress (I).

The Paul Commission has brought out three salient features Report. They are;



That the Trustees are most powerfnt people;

That the Report which the Police have received has been missing; and

That the place of occurance h s not been guarded by the police or the authorities who are likely to guard the place.

The Commission has also clearly brought out that the deceased Subramania Pillai has not committed suicide, but he has been done to death. The other aspect is, unfortunately, the important eye-witness who is supposed to throw a lot of evidence and lot of facts about this occurance is also missing. our information is, the watchman or the sweeper of the temple is missing even to this date. Our information is that is he has also been done to death. This is a fact which has been clearly brought out by the Paul Commission.

Before going into the detailes of the Report of the Commission, I wish to ask the Hon. Minister whether the Government have shown their bona fides in finding out the truth in order to help the commission and also to show to the world that the Government have acted with justice and bona fide intention. First of all, the Paul Commission has been appointed after great pressure, great agitation and all parties procession. All-party people have compelled the Government to appoint a Commission. The Commission has submitted a report stating that there is a prima facie case that the death has occurred due to malpractices. We are not worried about who has done it. The Commission has clearly pinpointed the reasons for his death. It has also pointed out that persons who are powerful are acting behind this inciden . But what the Government have done so far? The Government cannot plead helplessness so for as this aspect concerned. The Hon. Minister has got ample powers, as my hon. Friend Thiru Nedumarao has pointed out, to initiate proceedings against the Trustees. A G.O. has been issued just before placing this Report on the floor of the House. In the last paragraph of the G.O. it has been stated thus:

"Based ou the above decision, it is not possible to take legal action straightaway on the basis of the finding of the Paul Commission to dissolve the Board of Trustees, or to dismiss or suspend any of the Trustees. The terms of reference given to the Commission do not cover supersession of the Board of Trustees or its suspension or its dissolution. However, under the Hindu Religious and Charitable Endowments Act, the concerned Department is separately examining this question and taking suitable action on the basis of separate and independent materials, independeut of the Commissions findings."

If that is so, why this Commission? The Commission has been appointed to find out the faces. After getting the Report of the Commission what steps the Govepnmeut have taken under the Hindu Religious and Charitable Endowments Act to suspend or to dissolve the Board of Trustees. Under Section 54 of the Act, the Government or the appropriate authorities have got ample powers to dissolve or suspend the Board of Trustees. Even otherwise, he Government have got amble inherent powers to dissolve he Board of Trustees. What have they done so far? There is a genuine suspicien on the part of this House and also on the part of the public that the Goverument are screening the Trustees or harbouring the culprits. It is the duty of the Government as well as the duty of the Hon. Minister to remove the suspicion in order to get a fair name to this Government.

முற்பகல் 11.50

We are saying that we are having Puratchi Thalaivar as our Chief Minister. What the Puratchi Thalaivar has done in this particular case. 'Puratchi' means doing of a revolutionary thing. Revolutionary thing must also be for the good of the people and to establish fair name to the Government. What has been done in th case? Instead of establishing fair name, instead of showing to th people that the Government is doing justice to the people, instea of showing to the people that the temples are safe in the hands of th Governmen, the Government still have not dissolved or suspende the Board of Trustees. They have not directed the Endowment Boar or the concerned officers to do necessary things. Where is will end Will it take another one year to suspend the Board of Trustees o will it not be suspended? That is the question that has bee agitating the minds of the people and general public.

As the saying goes, the Caesar's wife must be above suspicion which means the Government must be above suspicion. The Goverr ment must act immediately to remove that suspicion from the mind of the people. What is the act the Government has done? Justic must have been done, as our Law Minister is fully aware of it the just ced seems to have been done in order o show to the peoplei that justice has been done. Our hon. Member, Thiru Necumarn was saying that some Ministers had resigned under such circumstances There are instances in which our late Lal Bahadur Sastri rstignces when the railway accident occurred. Like hat many instanessned, there. In the present case, the hon. Minister for Religious ce are men s was saying that there were instances in which many peEndowe not resigned and therefore, 'I will also not resign'. That should ople had attitude of a responsible Minister. He is the responsible to not be the and it is his duty to see that the Gods properties are saved. he peopls anybody elses property and it is Gods property people have It is noe in Gods properties also. The Board of Trustees should be lost faith There is conclusive judgement, by the Commisson that they are the dissolved real culprits.



Now there is a genuine apprehension and fear in the minds of the officials and more so in the minds of the officials who are handling the Government properties as Executive officers or Commissiners in discharging their duties. There is genuine apprehension and fear that the Trustees who have been screened by the present Government will not allow them to do justice and that they will not allow to do their work in impartial manner. That is the suspicion which the people and the officials have got. I is notthe duty of the Government. Is it not the duty of the concerned Minister? Is it not the duty of everybody in this Assembly, for this August body, to remove that suspicion?

So I only request the Government to be fair. The Paul Commissons Report has given very good guidelnes on the administration of the Endowment Board and pin-pointed out how an individual -- powerful individual in a section of the society can throttle justice. It has been clearly pointed out not a section of the society, but how an individual -- powerful individual -- can simply smash the judicial proceedings. This has happened in this case. The First Information Report (FIR) is also missing. Another important thing is this. People who have come forward to give evidence have been threatened and they were not able to give fair and clear evidence before the Commission. That is the state of affairs now.

Therefore it is the duty of the Government to clear that suspicion, clear that misunderstanding and establish immediately the fair name by dismissing or dissolving the Board of Trustees and having an Independent Police Enquiry. The persons who have been held responsible after investigation should be punished, so that the Government can say to the State and to the People that they have given a fair trial in this case and also they can establish beyond doubt to the people that they have removed the suspicion that has been in the minds of the people for a long time. That is the Government's duty. Otherwise, I am afraid, that whatever faith the people have reposed in us whatever, faith this August Assembly has got will be lost for ever. I am only suggesting I am not blaming the Government as a whole to the Government to establish a fair name for the Assembly and Government. I am only requesting the Hon. Minister to do this immediately. Otherwise we will be losing faith in the public. We will also be losing faith in the democratic set-up and confidence of the people.

Another aspect to which I want to refer in this context is this. Two officials are missing. One is Thiru Subramania Pillai who is no more. Another is the watchman sweeper of the Board and he is also missing. It is not established whether he is alive or not. That aspect also has to be borne in mind. The poor sweeper has not been able to protect himself. He must be traced, and justice done to the officials. Of the wise section of the officials who are to man, who

are to administer whatever laws the Government pass, or whatever laws the Assembly pass, whatever thing they have to do, they will not be able to implement or do it fairly, squarely, independently and boldly.

With these words I thank this House for giving me this opportunity.

திரு. இ. சட்டநாதகரையாளர்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பால் கமிஷன் அறிக்கையின் மீது நடக்கும் விவாதத்தில் பங்கேற்கும்போது முதற்கண் அதனுடைய தன்மையைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல அவாவுடையேன்.

This is an enquiry under the Commission of Enquiry Act. அதனுடைய தன்மையைப் பற்றி அதனுடைய வரம்புகளைப் பற்றி சில விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

'A Commison of Enquiry is a fact finding body' உண்மையைக் கண்டறிவதற்காக அமைக்கப்பட்ட குழு. இது எதற்காக என்றால் The purpose of 'The Commission of Enquiry is to find out the facts for the Government அரசு உண்மையை அறிந்து கொள்வதற்காக அமைக்கப்பட்ட குழு. திரு சுப்பிரமணியபிள்ளை அவர்கள் கொலை செய்யப்பட்டாரா, தற்கொலை செய்து இறந்தாரா, அவர் உண்டியல் பணத்தைக் கையாடினாரா? என்பவை போன்ற விவரங்களை அறிந்து அரசுக்கு அந்த கமிஷன் அறிவிக்க வேண்டும். இதிலே மிக மிக முக்கியமானது அவருடைய மரணம் சம்பந்தமானது.

(நண்பகல் 12.00)

இந்தப் பிரச்சினையில் அரசு இதிலே ஆரம்ப காலத்திலே இருந்தே ஒரு பாரபட்சமான நிலை எடுத்தது மிக மிக வருந்தத் தக்கது. அரசியல் கண்ணோட்டத்தோடு இதிலே அணுகியதுதான் மிகவும் வேதனையான ஒரு விஷயம். இது முழுக்க முழுக்க ஒரு நிர்வாக விஷயம். ஒரு தேவஸ்தானத்திலே நடந்திருக்கின்ற அசந்தர்ப்பமான நிகழ்ச்சியைப் பற்றி என்ன நடந்தது. எப்படி நடந்தது என்பதைப் பரிசீலனை செய்வதற்கு அரசு என்கொயரி கமிஷன் சட்டத்தின் கீழ் ஒரு நீதிபதியை நியமித்துவிட்டு அந்த விசாரணையில் இந்த அரசே ஒரு நிலை எடுத்தது மிகவும் வருந்தத் தக்கது. ஆகவே அரசின் சார்பிலேயே ஒரு வழக்கறிஞரை நியமித்து இது கொலை அல்ல, தற்கொலைதான் என்று வாதிடக் கூடிய அளவுக்கு ஒரு சூழ்நிலை இருந்தது வேதனைக்குரியது என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

உண்மையைக் கண்டறிவதற்காக பல்வேறு கமிஷன்கள் அமைக்கப்படுகின்றன. மத்திய அரசு அமைக்கக்கூடிய கமிஷன்களை எடுத்துக் கொள்ளுங்கள். அந்த கமிஷன்கள் முன் மத்திய அரசு ஒரு நிலையினை எடுத்தால் அது நியாயமாக இருக்குமா? அதை தார்மீக தர்மத்தின்படி நாம் ஒத்துக்கொள்ள முடியுமா? ஆகவே



சுட்டிக் காட்டிய பல்வேறு அம்சங்களைப் பார்க்கவேண்டும். நடந்திருக்கின்ற சந்தர்ப்பத்தைப் பார்ப்போமேயானால் பணத்தைக் கையாடல் செய்திருந்தால்தான் அவர் தற்கொலை செய்திருக்க வேண்டும், ஆனால் பணத்தைக் கையாடல் செய்தாரா இல்லையா என்பதிலே பல்வேறு கருத்து வேற்றுமைகள் இருக்கின்றன. அது நூறு ரூபாய் நோட்டாக இருந்ததா அல்லது புதிய நோட்டாக இருந்ததா என்பதை பற்றி எல்லாம் முரண்பாடான கருத்துக்கள் வந்திருக்கின்றன. ஆனால் முடிவாக மருத்துவ நிபுணர்களின் கருத்துக்கள் மீது தான் எடுக்கப்பட்டுள்ளது. ஹோமிசைடல் வயலன்ஸ் என்ற அந்த அடிப்படையிலே அவர் அடித்துக் சொல்லப்பட்டிருக்க வேண்டும் என்று தீர்ப்பு கூறப்பட்டுள்ளது. ஆனால் டாக்டர் ராமமூர்த்தி அவர்கள் தற்கொலை என்று சொல்லி இருக்கிறார் டாக்டர் கோபால கிருஷ்ணன் அவர்கள் மாறுபட்ட கருத்தைச் சொல்லி இருக்கிறார். strangulated or suspended while alive or after death என்று சொல்லி இருக்கிறார்.

அந்த அடிப்படையில்தான் நீதிபதி பால் அவர்கள், இப்படிப்பட்ட ஒரு தீர்ப்பைக் கூறியிருக்கிறார்கள். ஆரம்பக் காலத்தில் இருந்தே உண்மைகளை, அடிப்படைகளைக் கண்டு அறிவதற்காக நீங்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் சரியல்ல. நான் குறை கூறுவதெல்லாம், அரசு தரப்பிலே அல்ல, நிர்வாக மேல் மட்டத்திலே. கோவில் தேவஸ்தான நிர்வாக அதிகாரிகள் மட்டத்திலே நடந்து கொண்ட முறைகளும், போலீஸ் நடந்து கொண்ட முறைகளும் சந்தேகச் சூழ்நிலையை தான் உருவாக்குமேயன்றி, அவர்கள் நேர்மையாக, நியாயமாக, உண்மையாக நடந்துகொண்டார்கள் என்று சொல்வதற்கு இல்லை அந்தத் தான் பால் கமிஷனிலும், நீதிபதி பால் அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

மதிய வேளையிலே தான் கொலையோ அல்லது தற்கொலையோ நடந்திருக்கிறது. அங்கே உச்சி கால பூஜைக்குப் பிறகு, ஓரளவுக்கு பெருவாரியான மக்கள் கூடியிருக்கக் கூடிய நேரம். அந்த நேரத்திலே கொலையோ, தற்கொலையோ நடை பெற்றதை நேரிலே பார்த்தவர்கள் இல்லை. தற்கொலை என்றால் கதவை உடைத்துத் திறந்து உள்ளே பேசும்போது, அந்தப் பக்கத்தில் யாருமே இல்லாமலா இருந்தார்கள்? சாதாரணமாக இதுபோன்ற தற்கொலையோ அல்லது கொலையோ நடந்தால் பலபேர்கள் அதைப் பார்ப்பார்கள். கூட்டம் கூடிவிடும். அதே பேச்சாக இருக்கும். அங்கே பெருங் கூட்டம் கூடுவதற்கு வாய்ப்பு இருக்கும். துரதிஷ்டவசமாக இங்கே யாருமே பார்க்கவில்லை. கோவில் நிர்வாகத்தினருக்காவது தெரிந்ததா என்றால் அவர்களுக்கும் தெரியாமலே போய்விட்டது.

அங்கே இருக்கக் கூடிய ஒரு உயர் மட்ட அதிகாரி கொலை செய்யப்பட்டோ, அல்லது தற்கொலை செய்துக் கொண்டோ இறந்திருக்கிறார் என்றால், அதைப்பற்றி எதுவுமே தெரியாமல் கோவில் நிர்வாகத்தினர் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்றால்

அதை அடிப்படையிலேயே எதிர்த்திருக்கின்ற ஒரு அரசியல் கட்சி என்ற முறையிலே நான் இதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்தக் கமிஷனைப் பொறுத்தவரையிலே ஆரம்ப காலத்திலே இருந்தே நம்முடைய அரசு எடுத்திருக்கின்ற ஒரு நிலை மிகத் தவறானது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை விட்டார் என்பதற்காக அவரை ஒருபக்கமாகச் சொல்வதும் சரியல்ல. கமிஷன் அறிக்கையிலே ஒரு இடத்திலே He has no personal knowledge, என்று சொல்லி இருக்கிறார்கள்.

மந்திரி அவர்கள் நேரடியாகச் சென்று அங்குள்ள சூழ்நிலையினைக் கண்டறிந்தவர் அல்ல. அவர்களுக்கு அஃபிஷியலாக வந்திருக்கக்கூடிய தகவல்களை வைத்து அவர் அறிக்கை கொடுத்திருக்கலாம். ஆனால் அதற்குப் பிறகு அரசு ஒரு கமிஷன் நியமித்து அதன் உண்மை நிலையைக் கண்டறிய விழுந்ததற்குப் பிறகு அரசின் சார்பாக ஒரு நிலை எடுத்ததுதான் மிக மிக வருந்துவதற்குரிய ஒன்று. அது கமிஷனையே இந்த விதத்தில் நீங்கள் தீர்ப்புக் கொடுக்க வேண்டும் என்று நடத்திச் செல்வதற்கு தூண்டுகோலாக அமைந்துள்ளது. It is a bad precedeni. என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சூழ்நிலையிலேயே எல்லாக் கமிஷன்களும் அமையுமானால் இந்த நாட்டிலே நியாயம், நேர்மை கிடைப்பதற்கான வாய்ப்பே இருக்காது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். This it not a good precedend. என்பதை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இந்த அறிக்கையிலுள்ள அந்த விஷயங்களுக்குள்ளே நான் ஆழமாகப் போக விரும்பவில்லை. பாராளுமன்ற சம்பிரதாயத்தின்படி இதைப்பற்றி அதிகம் விவாதிக்கக் கூடாது என்பதுதான் நியதி. இருப்பினும் எனக்கு முன்பு நண்பர்கள் பேசியதன் அடிப்படையிலே நானும் சிலவற்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

உண்டியலைத் திறக்கும்போது திரு. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் வந்திருந்தாரா, என்பது கேள்விக்குரியது. அல்லது அதற்குப் பிறகுதான் அவர்கள் வந்தாரா? அப்படி வந்தபோது அவருடைய கையெழுத்தை வாங்குவதற்கு முயற்சித்தபோது கையெழுத்துப்போட மறுத்த காரணத்தாலே அவர் அடித்துக் கொல்லப்பட்டாரா என்பதெல்லாம் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டிருக்கின்ற விஷயம். இதிலே திட்டவட்டமாக கமிஷன் ஒன்றைக் கூறி இருக்கின்றது. இறந்த சூழ்நிலையைப் பரிசீலனை செய்யும்போது அது தற்கொலை என்று சொல்வதற்குரிய சூழ்நிலை இல்லை. ஆனால் கொலை நடந்திருக்கக்கூடும். அது எப்படி நடந்தது என்பதைப் பற்றி பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் சொல்லி இருக்கிறார். There are adequate grounds to believe that the Verfication Officer metwith his death on account of homicidal Violencc. என்று கருத்து சொல்லி இருக்கிறார். இந்த முடிவினைத் தீர்ப்பு என்ற அடிப்படையிலே ஏற்றுக்கொள்ள முடியாது. விசாரணையை மேலும் நடத்தவேண்டும் என்று பரிந்துரை கொடுத்திருக்கிறார்கள். அப்படிக் கொடுக்கப்பட்ட பரிந்துரையிலே அவர்கள்



இதை நம்ப முடிகிறதா? அங்கே அப்படி யாருமே இல்லமலா பேய்விடுவார்கள்? ஒரு கொலை அல்லது தற்கொலை நிகழ்ச்சி என்றால், 10 பேர்கள் கூடி ஜன்னல் வழியாகவாவது பார்க்க மாட்டார்களா? இல்லை. ஆகவே, இப்படி நேரிடையாக சாட்சி சொல்லக் கூடிய ஒரு சூழ்நிலை இல்லாத நேரத்தில், தீர்ப்பும் நிச்சயமற்றதாக கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காகத்தான் ஸ்பெஷல் பிராஞ்சைச் சேர்ந்த சி.ஐ.டி.-யை வைத்து விசாரணை செய்ய வேண்டும் என்று நீதிபதி பால் அவர்களே தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் ஏன் அந்தத் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளவில்லை என்று கேட்க விரும்புகிறேன்? முதலிலே ஏற்றுக்கொண்டு, அவர் கூறியிருக்கிற அடிப்படையிலே ஒரு உயர் மட்ட அதிகாரிகளை, சி.ஐ.டி. அதிகாரியை நியமித்து-இதை விசாரிக்கச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அத்தோடு அந்த அறங்காவலர் குழுவை கலைப்பதிலே உங்களுக்கு என்ன கஷ்டம் என்றும் கேட்க விரும்புகிறேன்? சட்ட ரீதியாக கலைக்க முடியாது என்று ஒத்துக் கொள்கிறேன். அதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. அவர்கள் மீது குற்றஞ்சாட்டித்தான் கலைக்க முடியும். அதற்கு அவர்கள் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். உயர்நீதி மன்றத்திற்குப் போவார்கள். உச்சநீதி மன்றத்திற்குக் கூடப்போகக்கூடும். அவர்கள் மீது குற்றஞ் சாட்டுகிறபோது அதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பது எல்லாம் உண்மைதான். ஆனால் தார்மீக ரீதியிலே இதைச் செய்ய முடியாதா? இன்றைக்கு அந்துலே அவர்கள் கூட ராஜினாமா செய்திருப்பதைப் பார்க்கிறோம்.

அதுபோன்று, அவர்களை அழைத்து ராஜினாமா செய்வதற்கு கேட்டால் அதற்கு அவர்கள் முன் வர மாட்டார்களா? அந்தக் குழுவிலே உள்ள அங்கத்தினர்கள் ஒரு சிலரை எனக்குத் தெரியும். அவர்கள் உண்மையிலேயே சொன்னால் ராஜினாமா செய்வதற்கு முன் வருவார்கள்.

You can persude them அவர்களை நீங்கள் வேண்டிக்கொள்ள முடியும். அவர்கள் ராஜினாமா செய்தால் மாத்திரம் போதாது. அந்தக் கோவில் நிர்வாகத்திலே இருக்கக் கூடிய உயர் மட்ட அதிகாரிகளையும் அங்கேயிருந்து மாற்ற வேண்டும். அதேபோல ஒரு சிலரையும் மாற்ற வேண்டும். அப்படி மாற்றினால்தான் உண்மைகளை கண்டறிய முடியும். ஆகவே, இந்த அரசுக்கு நான் வேண்டுகோள் விடுவது என்னவென்றால், இந்தக் குழப்பங்களைப் போக்க வேண்டும் என்ற அடிப்படையில் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவன் என்ற முறையில் சொல்லவில்லை, உங்கள் நண்பன் என்ற முறையில் சொல்கிறேன், தயவுசெய்து, எந்தெந்த முறைகளில் எல்லாம் முயற்சிகள் எடுக்க முடியுமோ, அவைகளைச் செய்து, அந்த அறங்காவலர் குழுவை கலைப்பது நல்லது அங்கே இருக்கக் கூடிய கோவில் அதிகாரிகளையும் மாற்றி, அங்கே நம்பிக்கையுள்ள உயர்மட்ட போலீஸ் அதிகாரிகளை வைத்து சி.ஐ.டி. மூலம் முழுமையாக விசாரணை செய்து, உண்மையைக் கண்டு அறிய வேண்டும். இதிலே தயக்கம் காட்டக் கூடாது. பின் வாங்கக் கூடாது. ஏனெனில் இது

இன்றைக்கு இந்த அரசுக்கு மாசு கற்பிக்கக்கூடிய ஒரு சூழ் நிலையே உருவாகிக் கொண்டிருக்கிறது, என்பதை உங்களுக்கு மிகப் பணிவோடும் அன்போடும் கூறி முடிக்கிறேன். நன்றி.

(பிற்பகல் 12.10)

* திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதிபதி பால் கமிஷன் அறிக்கை மீதும் அதன் மீது அரசாங்கம் எடுத்திருக்கிற நடவடிக்கைகள் மீதும் இந்த மாமன்றத்தில் நான் சார்ந்திருக்கிற ஜனதாக் கட்சி சார்பில் ஒரு சில கருத்துகளைச் சொல்ல விழைகிறேன், மரணம் அடைந்த அதிகாரி சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் எங்கள் மாவட்டத்தைச் சார்ந்தவர்கள். அவர்களை, அவர்கள் மரணமடைவதற்கு முன்னாலேயே நான் பார்த்திருக்கிறேன், எனக்குத் தெரியும். அந்த அளவில் ஒரு எளிமையான மனிதர், இப்படிப்பட்டதொரு மனிதருக்கு இப்படிப்பட்டதொரு துர்பாக்கியகரமான நிலை ஏற்பட்டதை எண்ணுகிறபோது உண்மையிலேயே என்னைப் போன்றவர்கள் வருத்தப்படாமல் இருக்க முடியாது. அந்த அளவிற்கு ஒரு எளிமையான மனிதர், ஒரு நேர்மையான மனிதர் என்று பெயர் பெற்றவர், இன்று இது போன்றதொரு விபரீதமான நிகழ்ச்சியில் மாட்டிக்கொண்ட பிறகு இன்று எல்லா எதிர்கட்சிகளும், பத்திரிகைகளும், சமுதாயத்திலுள்ள படித்தவர்களும், மற்றவர்களும், நேர்மையானவர்களும், சிந்தனையாளர்களும் இன்றைக்கு அரசாங்கம் செய்திருக்கிற செயல் சரிதானா என்பதை எண்ணிப்பார்க்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

இந்தச் சம்பவம் நடந்தவுடனே அது குறித்து கமிஷன் போடுவதற்கு முன்னால் அரசாங்கம் ஒரு நிலையை எடுத்து விட்டது தவறு என்று நான் இங்கே குற்றஞ்சாட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அரசாங்கம் என்ன நிலையை எடுத்திருக்கிறது என்று சொன்னால் இந்த மரணம் தற்கொலைதான் கொலையல்ல என்ற ஒரு முடிவை அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்,

அதோடு மட்டுமல்ல, இந்தக் கமிஷனைப் போட்டதற்குப் பின்னால் அரசாங்கம் பிரிவுகளாக இந்த விசாரணையை எடுத்திருக்கிறது. இதில் 'ஏ' பார்ட்டி என்ன சொல்லப்படுவது இது தற்கொலை என்று வாதிக்கிறது. A Far.y that is Devas han..m the State cf Tamil N..du an. the pel.ce. 'ஏ' பார்ட்டி உள்பட நம்முடைய சர்க்கார் இதை தற்கொலை என்று வாதிக்கிறது. திரு விருத்தாச்சல ரெட்டியார் போன்ற பிரபல வழக்கறிஞர்களை வைத்து இது தற்கொலை என்று சாதிக்க நினைக்கிறது. ஆனால் ஒரு நல்ல காலம் என்னவென்று சொன்னால் முதலில் ஒரு கிறுஸ்தவ நீதிபதியைப் போட்டு இதில் நீதி விசாரணை செய்யச் சொன்னால் ஒழுங்காக வருமா என்ற சந்தேகங்கள் எல்லாம் எழுப்பப்பட்டாலும் நீதிபதி பால் அவர்கள் தான் ஒரு உண்மையான கிறிஸ்தவர், நீதிக்கும் நேர்மைக்கும் கட்டுப் பட்டவர் என்பதை நிரூபிக்கும் வகையில் இன்றைக்கு ஒரு தெளிவான அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள்.





இந்த அறிக்கையில் இது தற்கொலை அல்ல, இது கொலை என்ற வகையில் அதை நிரூபிக்கிற வகையில் பல்வேறு ஆதாரங்களை இன்றைக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆதாரங்களை ஒன்றில் ஏற்றுக் கொள்ள வேண்டும் இல்லையென்று சொன்னால நிராகரிக்கவேண்டும். ஆனால் இன்றைக்கு சர்க்கார் தரப்பில் ஒரு அரசாணை இங்கே போடப்பட்டிருக்கிறது. இந்த அரசாணை பற்றி நான் சொல்கிறபோது நிச்சயமாகச் சொல்வேன் இது ஒரு மோசடி அரசாணை என்பதை இந்த மன்றத்தில் துணிந்து சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தொட்டிலையும் ஆட்டுகிற பிள்ளையையும் கிள்ளிவிட்டு பார்க்கிறேன். இந்த பால் கதையைத்தான் இந்த அரசாணையில் அறிக்கையின்மீது பல்வேறு கமிஷன் ரிபோர்ட், இந்தக் கமிஷன் கிளறிவிட்டுவிட்டு சி.ஐ.டி. இது சந்தேகங்களை தாமாகவே நன்றாக இல்லை, கோபால கிருஷ்ணன் சொத்தை, அது சொத்தை, இது ஒத்துக்கொள்ள முடியாது என்று சொல்வது நீங்கள் மறைமுகமாக நீங்கள் போட்டிருக்கக்கூடிய சி.ஐ.டி. விசாரணைக்கு ஒரு வடிவம் கொடுக்க முயற்சிக்கிறீர்கள் என்று குற்றஞ்சாட்டுகிறேன், இல்லை என்று சொன்னால் இவைகளையெல்லாம் இங்கு ஏன் சொல்ல வேண்டும். சி.ஐ.டி. விசாரணை போட்டிருக்கிறோம். முடிவு வரட்டும் என்று சொல்லவேண்டும். சட்டப் பிரச்னை பற்றியும் இங்கே சொல்லியிருக்கிறீர்கள். அறங்காவலர் குழுவை கலைக்க முடியாது என்று சொல்லியிருக்கிறீர்கள். பாலகிருஷ்ணன் அவர்கள் சாட்சியத்தை ஏற்க முடியாது என்பதற்காக காரணங்களைக் கண்டுபிடித்து நீங்கள் உண்மையில் நேர்மையானவர்களாக, நியாயம் உள்ளவர்களாக இருந்தால் மாதத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் வருமானமுள்ள ஆண்டு ஒன்றுக்கு 12 இலட்சம் ரூபாய் வருமானமுள்ள ஒரு தேவஸ்தானத்தின் அறங்காவலர் குழுவிற்குத் தலைவராக ஒருவரை நியமிப்பதற்கு முன்னால் அவர் எப்படிப்பட்டவர் என்று எண்ணிப்பார்த்தீர்களா..?

இன்றைக்கு கூட திருச்செந்தூர் காவல் நிலையத்தில் ஒரு ரௌடி லிஸ்ட் ஓபன் பண்ணப்பட்டு, அந்த ரௌடி லிஸ்டிலே சொல்லப்பட்டிருக்கிற ஒருவர் நியமிக்கப் பால் கமிஷனில் எப்படி படுகிறார் என்று சொன்னால், உங்களை நாங்கள் சந்தேகிக்காமல் இருக்க முடியும் என்பதை எடுத்துவைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அறங்காவலர்கள் குழுவை கலைக்க வேண்டுமென்பது பற்றி நிருபர்கள் மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்களை கேட்கிறார்கள். அதற்கு அவர்கள் பல் சொல்லுகின்ற செய்து, நீதி விசாரணை நடக்கு; நீதிபதி இந்தப் பிரச்னையில் என்னென்ன சொல்கிறாரோ, அதுபடி நடக்கும் என்று முதலமைச்சர் அவர்களே நிருபர்களுக்கு முன்னால் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே, முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டதற்குப் பின், இந்தத் தடுமாற்றம் ஏன்? யாரைக் காப்பதற்கு இந்த நாடகம் என்பதை நான் இந்த மாமன்றத்தின் சார்பில் நான் கேட்க விரும்புகிறேன்?

இங்கே எடுத்துச் சொல்லவேண்டியது, அறங்காவலர்கள் குழுவைக் கலைப்பது பற்றி நீதிபதி சொல்லியிருக்கிறார். விதிகளுக்குட்பட்டு, இந்த அறங்காவலர்கள் குழுவைக் கலைக்க முடியும் என்று.

"There is enough material appearing in the evidence that has been recorded to show first of all that the Chairman Dr. C.R. Balakrishnan has not been discharging his duties and performing his functions as the Chairman of the Board of Trustees and as a Trustee in accordance with the provisions of the Act or the rules made thereunder and had also disobeyed the lawful orders issued under the provisions of the Act or the rules made there-under .....and had also continuosly neglected his and has acted adversely duty to the interests of the Devasthanam"

இது 53-வது விதியில், இரண்டாவது பிரிவில் இப்படி இருக்கிறது. இந்தக் காரணத்தை வைத்துக்கொண்டு, அந்த அறங்காவலர் குழுத் தலைவரை நீக்க முடியும்; அறங்காவலர்கள் குழுவை நீக்க முடியும். ஆனால், ஏன் இதைச் செய்ய மறுக்கிறீர்கள்? இதனால் பலவிதமான சந்தேகங்கள் எழுகின்றன. தங்களுக்குச் சாதகமான காரியங்களை எடுத்துக்கொண்டு, மற்றவைகளை விட்டுவிடுவது எந்த முறையில் நியாயம்?

உறுதிமொழிப் பத்திரத்தில் மேகநாதன் என்பவர் ஒரு உறுதிமொழியைக் கொடுத்திருக்கிறார். பிறகு அதற்கு மாறுபட்டு நடந்திருக்கிறார் என்று சொல்லப்படுகிறது. இப்படி இந்த உறுதிமொழிக் கொடுத்தவர்கள், அபிடவிட் கொடுத்தவர்கள் யாருமே ஒழுங்காக, சரியாக சாட்சியம் சொல்லவில்லை. நேரடியாக அவர்கள் சாட்சியம் சொல்லும்போது சொன்னது, முன்னுக்குப் பின் முரண்பாடாகத் தான் எல்லோரும் சொல்லியிருக்கிறார்கள். அறங்காவலர் குழுத் தலைவரிலிருந்து, அத்தனை பேரும் உறுதிமொழி கொடுத்தது ஒன்று. ஆனால், நேரடி விசாரணையில் அதற்கு மாறாக, சொன்னது வேறு. அதை ஏற்றுக்கொள்வதற்கு இந்த அரசாங்கம் தயாராக இல்லை. ஆனால், சில காரணங்களைக் காட்டி, தள்ளி வைப்பதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தியிருப்பதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

அது மட்டுமல்ல, ஒருமுறை திருடிய பணம் 2,000 என்று சொல்லுகிறார்கள். அவ்வாறு உறுதிமொழி கொடுத்த பிறகு, ரூ. 2,850 என்று சொல்லுகிறார்கள். எவ்வளவு பெரிய வேறுபாடு. திருடிய பணம் என்று சொல்லும்போது, அது கசங்கியதாக இருந்ததாகச் சொல்லுகிறார்கள். ஆனால், எக்சிபிட்டாக, மெடீரியல் ஆப்ஜக்டாக காட்டும்போது அந்தப் பணம் சலவை நோட்டாக இருக்கிறது. இது யாரை ஏமாற்றுவது இது எப்படி நியாயம்? என்பதை கேட்க விரும்புகிறேன்.

பால் கமிஷன் நிச்சயமாக, திட்டவட்டமாகச் சொல்லிவிட்டது. சுப்பிரமணிய பிள்ளை திருடியிருக்க முடியாது; அவர் திருடவில்லை. அப்படித் திருடாத ஒருவர் ஏன் தற்கொலை ... தற்கொலை செய்துகொள்வதற்கான என்ன





காரணம்? அப்படிப்பட்ட அவசியம் என்ன வந்தது? தற்கொலை கூட நம்பத்தகுந்த முறையில் இருக்கிறதா? தற்கொலை என்றால், தலையிலே 3 காயங்கள் எப்படி வரும்? புட் பால் ஆடினாரா 3 காயங்கள் வருவதற்கு என்று நான் கேட்கிறேன்? தொங்கியிருந்தவரை எடுத்துப் பார்க்கும்போது, அவர் தலையிலே 3 காயங்கள் என்றால், அதை நம்ப முடியவில்லை. இன்னொன்று மூக்கிலே இருந்து இரத்தம் வழிகிறது. மெடிகல் ஜூரிஸ் புருடென்ஸ்படி ஒருவர் தூக்கிலிட்டுக் கொண்டால், அவர் மூக்கிலிருந்து இரத்தம் வராது. ஒருவேளை உறிஞ்சினார்களோ என்னவோ தெரியவில்லை. மூக்கில் இருந்து இரத்தம் வந்திருக்கின்றது என்று சொன்னால், தலையில் அடிபடாமல் இருந்தால், நெற்றியிலோ அல்லது மற்றப் பாகங்களில் அடிபடாமல் இருந்தால், மூக்கில் இருந்து எப்படி இரத்தம் வரும்? எனவே, அப்படி மூக்கிலிருந்து இரத்தம் வருவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(பிற்பகல் 12.20]

இவையெல்லாம் உங்களுடைய ஜி.ஓ.வில் காணவில்லை. ஆகவேதான் சொன்னேன்—மோசடியான அரசாணை என்று. இதை நீங்கள் வாபஸ் பெறவேண்டும்.

வேட்டியில் இரத்தக் கறை படிந்திருக்கிறது என்று சொன்னார்கள். வேட்டியில் பார்த்தால் இரத்தக் கறையைக் காணோம்: வேட்டியின் நீளம் சுருங்கியிருக்கிறது அல்லது நீண்டிருக்கிறது. எப்படி என்று தெரியவில்லை. இப்படி எத்தனை கோளாறுகள்? முன்னுக்குப் பின் முரணாக இருக்கின்றன. இத்தனைக்கும் பிறகு கொலைதான் என்று நம்ப வேண்டிய சூழ்நிலை உண்டான பிறகும் கூட, ஹோமிசைடல் வயலன்ஸ் நடந்திருக்கிறது என்ற நிலைக்குப்பிறகு கூட அரசாங்கம் எடுத்திருக்கிற நிலையைக் கண்டு உண்மையிலேயே எங்களைப் போன்றவர்களுக்கு இந்த அரசின் மீது நம்பிக்கையை இழக்கும் அளவுக்கு நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறது. உண்மையில் நீதியைக் காப்பாற்ற வேண்டுமென்று சொல்லுகிறபோது இரண்டு எப்.ஐ.ஆர். ஏன் போடவேண்டுமென்ற கேள்வி எழுகிறது.

நீதிபதி அவர்கள் சொல்லுகிறார்கள்—

On 26th November 1980 at 20.40 hours, the Inspector of Police, Special Branch, C.I.D. Department, Tirunelveli, had sent a phone message to the Superintendent of Police, Special Branch, C.I.D. Madras, which is worded as follows:—

'The hundi of Tiruchendur Murugan temple used to be opened every month to account the collections. Today morning, the Executive Officer, Rajaram and other employees are reported to have opened the hundi before the arrival of Special Officer, Subramaniam. It is learnt that the Special Officer objected to it and there was a wordy quarrel between them. At about 13.30 hours, the Special Officer was found

hanging just behind the counting place. The body is removed to G.H., Tiruchendur for post-mortem. A case is being registered alleging that E.O. and the other staff have murdered the Special Officer. About 50 All-party members led by Ganesan, D.M.K. took out a procession this evening. Developments are under watch.''

அப்படி ஒரு மெசேஜ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த மெசேஜ் பால் கமிஷன் ரிப்போர்ட்டில் இருக்கிறது. அந்த மெசேஜின் அடிப்படையில் போடப்பட்ட எப்.ஐ.ஆர். எங்கே? அந்த அறிவிப்பின் அடிப்படையில் எப்,ஐ.ஆர். போட்டிருந்தால் அந்த அறிவிப்பு எங்கே? அது திருடப்பட்டிருக்கிறது அல்லது கிழித்து எறியப்பட்டிருக்கிறது. இப்படி பல்வேறு காரணங்கள். எல்லா காரணங்களையும் ஒவ்வொன்றாகச் சொல்லிக் கொண்டே போனால் கோர்ட்டில் வாதாடுவது போல் வாதாடினால் மற்றவர்கள் பேச முடியாத அளவுக்கு முரண்பாடுகள் ஏராளம் ஏராளம் இருந்து கொண்டிருக்கின்றன. நான் அரசாங் கத்தைப் பார்த்துக் கேட்கிறேன்—வள்ளுவன் சொன்னார்......

''எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு''.

ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் சொல்லி விட்டார், எதிர்க்கட்சித் தலைவர் சொல்லிவிட்டார் என்பதற்காக, உங்களுக்குள் இருக்கக்கூடிய நேரடிப் பகை, குடும்பப் பகை காரணமாக இதுபோன்ற நிலைமை நாட்டில் நடைபெற்ற பிறகு நீதியை மறைக்க ஏன் முயற்சிக்க வேண்டும்? இந்த அரசாங்கம் அதற்கு ஏன் முயற்சிக்க வேண்டும்? இது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இடையே இருக்கக்கூடிய பிரச்சினை அல்ல. இது இந்த நாட்டில் நடைபெற்ற ஒரு கொலை சம்பந்தமான பிரச்சினை. இந்தப் பிரச்சினையில் எதிர்க்கட்சித் தலைவர் சொல்லிவிட்டார் என்பதற்காக ஏன் பிடிவாதம் பிடிக்க வேண்டுமென்று கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

''அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை''

என்றார் திருவள்ளுவர். அந்தக் குடும்பத்தினர் விடுகின்ற கண்ணீர் உங்களுடைய செல்வத்தை, செல்வாக்கை அழித்து விடும்.

இந்தத் தவறு நடைபெற்றது குறித்து பொதுமக்கள் வெளியே என்ன எண்ணுகிறார்கள் என்பதையும் நான் மாமன்றத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். பத்திரிக்கைகள் நினைப்பதை மாமன்றத்தில் சொல்லியாக வேண்டும். 'இந்த அறங்காவலர் குழுத் தலைவரைக் கண்டு அமைச்சர் பயப்படு கிறார்; அமைச்சரைக்கண்டு முதலமைச்சர் பயப்படுகிறார். ஆகவேதான் இதில் நடவடிக்கை இல்லை' என்று சொல்லு கிறார்கள்.



கடந்த 11-2-82 ஆம் தேதியிட்ட குமுதம் பத்திரிகையில்— ஏறத்தாழ லட்சக்கணக்கான பிரதிகள் இந்த மாநிலத்திலேயும் மற்ற மாநிலங்களிலேயும் வெளிநாடுகளிலேயும் விற்பனை செய்யப்படுவதும், பல லட்சக்கணக்கான மக்கள் படித்துக் கொண்டுவருகின்ற குமுதம் பத்திரிகையில் கேள்வி பதில் பகுதியிலே ஒன்றை நான் பார்க்கிறேன். பால் கமிஷன் அறிக்கை மீது நடவடிக்கை எடுக்கமல்——ஒருவர் கேள்வி கேட்கிறார்—' திருச்செந்தூர் அறங்காவலர் குழுத் தலைவரை குற்ற லம் பராசக்தி மகளிர் கல்லூரி-நான் நினைக்கிறேன் அறநிலையத் துறைக்குட்பட்ட கல்லூரி என்று அந்தக் கல்லூரி நிர்வாகக் குழுவின் உறுப்பினராகவும் தூத்துக்குடி துறமுக நிர்வாக வளர்ச்சிக்குழு உறுப்பினராகவும் எம்.ஜி.ஆர் நியமனம் செய்துள்ளது சரிதானா? அரசு என்பவர் அதற்கு பதில் சொல் கிறார், ''தமிழகம் எம்.ஜி.ஆர். கைக்குள், எம்.ஜி ஆர் ஒரு அமைச்சரின் கைக்குள், அந்த அமைச்சர் ஒரு அறங்காவலர் குழுத் தலைவரின் கைக்குள் ஆகவே தமிழகம் அந்த அறங்காவலர் குழுத் தலைவரின் கைக்குள் என்கிறார்கள்;'' நான் நம்பவில்லை என்ற அளவில் ஒரு செய்தி வந்திருக்கிறது....

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: துணைத் தலைவர் அவர் களே, மாண்புமிகு உறுப்பினருக்கு நான் பதிலளிக்க முன்வர வில்லை. நாளைக்கு பதிலிலே அவசியமானால் தெரிவிக்கிறோம். ஒரு தகவல் தவறாக வந்திருக்கிறது. அது குமுதத்தில் வந்திருப் பதாகத் தெரிவிக்கிறார்கள். திருச்செந்தூர் அறங்காவலர் குழுத் தலைவரை அந்தச் சம்பவத்திற்குப் பின்னால் அரசு நியமித்த தாகத் தகவல். அது தவறு. திருச்செந்தூர் அறங்காவலர் குழுவிற்கு யார் தலைவராக வருகிறாரோ அவர் இயற்கையாக அந்த பராசக்தி கல்லூரியிலே அந்தக் குழுவிலே ஒரு உறுப்பினராக ஆவார். இது முன்னாலே நடைபெற்றது. இரண்டாவது ஏதோ தூத்துக்குடி துறைமுகக் குழுவிலே அவரைப் போட்டதாகத் தெரிவிக்கிறார்கள். அதுவும் அடிப்படையிலேயே தவறு. அந்த பாலகிருஷ்ணன் என்பவர் தூத்துக்குடியிலே இருப்பவர். ஆகவே அந்த பாலகிருஷ்ணன் என்கின்ற பெயரை குறிவைத்துக் கொண்டிருப்பது தான் வருகிறதே தவிர உண்மையான பால கிருஷ்ணன் யார் என்று கூடச் செய்தி போடவோ பேசவோ முன் வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு இருக்கிறது அது அதாரமற்றது என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. பொ. விஜயராகவன்: துணைத் தலைவர் அவர்களே, வெளியிலே மக்கள் மத்தியிலே பத்திரிகைகள் மத்தியிலே இருக்கக் கூடிய கருத்துக்களை இந்த அரசும் இந்த மாமன்றமும் உணர வேண்டும் என்பதற்காகச் சொன்னேனே தவிர என்னுடைய கருத்தை நான் சொல்லவில்லை. பத்திரிகையிலே வந்திருக்கிற கருத்து அது. அப்படியானால் இதில் மட்டும் இவ்வளவு சந்தேக மான சூழ்நிலையில் பல சம்பவங்கள் நடந்திருக்கின்ற காரணத்தினால் அரசாங்கம் அந்த மகளிர் கல்லூரியையாவது தயவுசெய்து காப்பாற்ற முன்வரவேண்டும். அந்தக் கோவிலை மட்டுமல்ல. அந்த மகளிர் கல்லூரியைக்கூட நீங்கள் காப்பாற்ற

முன்வரவேண்டும். இப்படிப் பல்வேறு காரணங்கள் காரியங்களினால் நிகழ்ச்சிகளினால் இந்த அரசு சி.ஐ.டி. போலீஸை வைத்து ஒழுங்காக விசாரிக்கும் என்று நாங்கள் நம்பவில்லை ஏனென்றால் நீங்கள் ஒரு நிலையை ஏற்கனவே எடுத்திருக்கிறீர்கள். அதை நிறைவேற்றுவதற்கு பால் கமிஷனிலே வாதாடவும் செய்தீர்கள், வாதாடி அதைப் பெறமுடியாத நிலை ஏற்பட்ட பிறகு ஒரு நிலையை மேற்கொண்டிருக்கிறீர்கள். இன்னும் அப்படித்தான் செய்வீர்கள் என்ற சந்தேகம் எங்களுக்கு வருகிறது. ஆகவே இந்த மாநிலத்தில் சம்பந்தப்படாத, இந்த மாநிலத்தில் இல்லாத ஒரு விசாரணைப் பிரிவின் மூலம் வேறு மாநில போலீஸ் அல்லது சி.பி.ஐ. ஏதோ ஒன்றின் மூலம் இதன் நியாயத்தை உணர்ந்து தர்மத்தை உணர்ந்து இதிலே நீதி கிடைக்கச்செய்ய வேண்டும். குற்றவாளிகளைத் தப்பவிடக்கூடாது. உண்மையிலேயே அரசாங்கத்தினுடைய மடியிலே கனம் இல்லை யென்றால் வழியிலே பயம் இருப்பதற்கு நியாயம் இல்லை. நீங்கள் உங்களுடைய நிலையில் தெளிவாக இருக்கிறீர்கள். உண்மையிலே நீதியை நிலை நாட்டப் போகிறீர்கள் என்பது உண்மையானால் அதைப்போன்று செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வளவு நிகழ்ச்சிகள், காரியங்கள் நடைபெற்ற பிறகும் இவ்வளவு மோசமான சூழ்நிலையில் மக்கள் நம்பிக்கையை இழந்த நிலையில் நீதி இந்தச் சர்க்காரில் நமக்குக் கிடைக்காது என்ற அளவுக்கு வந்த பிறகு இந்த அமைச்சரவையை நான் ராஜிநாமா செய்யச் சொல்லாவிட்டாலும் பொறுப்பேற்று இருக்கிற அறநிலையத் துறை அமைச்சர் ராஜிநாமாச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நாங்கள் பார்க்கிறபோது சந்தேகங்கள் வருகின்றன. அரசாங்கம் எப்படி அறங்காவலர் குழுவைப் போட்டிருக்கிறது என்பதற்கு ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற அளவுக்கு கமிஷனாலே காட்டப்பட்டதுபோல் ரௌடி லிஸ்டிலே இருக்கிறவர்கள் இது போன்றவற்றில் இருக்கிறார்கள். ஆகவே தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களில் எப்படிப்பட்டவர்கள் அறங்காவல் குழுவிலே இருக்கிறார்கள், எப்படிப்பட்டவர்கள் தமிழகத்தின் திருக்கோயில்களை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள நகைகள், செல்வங்கள் பராமரிக்கக்கூடிய கோயில்களினுடைய நிர்வாகம்பற்றி நீதி விசாரணை செய்யவேண்டுமென்றும் இது போன்ற நிகழ்ச்சிகள் தொடரா வண்ணம் அறங்காவலர் முழுவை உடனடியாக நீக்கம் செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன்.

(பிற்பகல் 12.30)

டாக்டர் கே. சமரசம்: பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயராகவன் அவர்கள் பேசும்பொழுது மீண்டும் ஒரு விசாரணை வேண்டுமென்று கேட்கிறார்கள். ஏற்கனவே உள்நோக்கம் வைத்து விசாரணைக் கமிஷனை



அமைத்தது என்று அவர்களே சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கம் அப்படி வைத்திருந்தால் பால் கமிஷன் ரிப்போர்ட் இப்படி வந்திருக்குமா என்பதை உணர்ந்து பார்த்திருக்க வேண்டும். குமுதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் அல்ல.

டாக்டர் கே. சௌரிராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நீதிபதி பால் அறிக்கையின்மீது அதைத் தொடர்ந்து தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கையின்மீது நடைபெறுகின்ற விவாதத்தில் பங்கெடுத்துக்கொள்ள வாய்ப்பளித்தமைக்காக நான் என்னுடைய நன்றியைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மன்றத்திலே உள்ளபடியே மிகுந்த வேதனையோடு நான் நிற்கின்றேன்.

இந்த நாட்டிலே எண்ணற்ற மரணங்கள் சம்பவிக்கின்றன; கொலைகள்கூட தற்கொலை என்று எத்தனையோ இடங்களிலே மக்களுடைய கவனத்திற்கு வராமல்கூடச் சென்றுவிட வாய்ப்பிருக்கிறது. ஆனால் திருச்செந்தூரில் சரிபார்க்கும் அதிகாரி அவர்கள் மரணம் அடைந்த பிறகு இதிலே ஒரு மாபெரும் சர்ச்சையே உருவாகி அது கொலையா, தற்கொலையா என்று யாரும் ஐயமில்லாமல் சொல்லமுடியாத அளவிற்கு இன்றைக்கு ஒரு சூழ்நிலை தமிழகத்திலே உருவாகியிருக்கிறது. அரசாங்கத்தினுடைய அதிகாரி ஒருவர், அதுவும் உயர்ந்த பொறுப்பிலே உள்ள ஒருவர் திடீரென்று மரணம் அடைந்த பிறகு அவர் தற்கொலை செய்து கொண்டார் என்று ஒரு சாராரும், இல்லை அவர் கொலை செய்யப்பட்டார் என்று மறு சாராரும் சொல்லும் அளவிற்கு இன்றைக்கு இருக்கிறது என்றால் இதில் அடிப்படைக் காரணமே முதலில் இருந்தே அனாவசியமான அரசியல் தலையீட்டின் காரணமாகத்தான் என்று நான் நினைக்கிறேன்.

இந்தப் பிரச்னையைப்பற்றி முழுமையாகப் படித்துப் பார்க்கின்ற நேரத்தில் இங்கே நான் ஏதோ நீதிமன்றத்திலே வாதாடுவதைப்போல வாதாடுவதற்கோ அல்லது கமிஷன் ரிப்போர்ட்டை வைத்துக்கொண்டு ஒரு அங்கமாக விவாதிக்கவோ தயாராக இல்லை.

ஆரம்பத்திலேயே, அவர் மரணம் அடைந்தபிறகு காவல் துறையினர் அவர் தற்கொலை செய்து கொண்டார் என்று சொன்னவுடனேயே பொதுமக்களிடையே ஒரு கலவரம் ஏற்பட்டு, இல்லை, அவர் கொலை செய்யப்பட்டார் என்ற ஒரு கருத்து ஆதரவு பெற்றவுடனேயே அறங்காவலர் குழுவைச் சேர்ந்தவர்கள் முக்கியமாக மெஜாரிட்டியாக இருக்கின்ற மூன்று பேர்கள் ஆளுகின்ற கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தினால், எங்கே இந்த ஆளுகின்ற கட்சியின் பெயருக்கு அவதூறு வந்து

விடுமோ அல்லது ஒரு பப்ளிக் கிரிட்டிசிசத்திற்கு இடம் வந்து விடுமோ என்று பயத்தின் காரணமாகக் கூட இருக்கலம் அரசாங்கம் அனாவசியமாகத் தலையிட்டு இந்த விவகாரத்தை மேலும் மேலும் அதிகமாகக் குழப்பி விட்டார்கள் என்றால் அது மிகையாகாது.

சாதாரணமாக இந்தக் கொலை அல்லது மரணம் வேறு எங்கேயாவது சம்பவித்திருந்தால் அதைப்பற்றி இந்த அரசாங்கம் இவ்வளவு அக்கறை எடுத்திருக்க முடியாது. ஆனால் ஆளுங் கட்சியைச் சார்ந்தவர்கள் பொறுப்பில் உள்ள இடமாக இருக் கின்ற காரணத்தால் எங்கே கட்சியும் ஆட்சியும் இதிலே சம்பந்தப்படுத்தப்பட்டு விட்டால் நம்மை எதிர்க்கட்சிக்காரர்கள் சும்மா விட மாட்டார்களே என்று பயந்தோ அல்லது உண்மை யாகவோ என்னவோ தெரியவில்லை இவர்கள் அதைப் பெரிதாக்கி அவசரமான நடவடிக்கைகளை எடுத்ததன் காரணமாக மேலும் தங்களைத் சந்தேகத்திற்கு உள்ளாக்கிக் கொண்டு விட்டார்கள் என்று நினைத்து அவர்களைப்பற்றி நான் நிச்சயமாக உள்ள படியே பரிதாபப்படுகிறேன்.

இதைப் பார்த்தால், ''அ'' தரப்பில் 23 பேர்களில் அரசாங்க அதிகாரிகள் ஆளும் கட்சியை சேர்ந்தவர்கள். அதில் ஒரே ஒருவர் இந்திரா காங்கிரஸைச் சேர்ந்தவர். ஆனால் எதிர்ப் புறத்திலே இருந்து குற்றச்சாட்டுக்களைச் சொன்ன அந்த 23 பேர்களில் 12 பேர்கள் இன்று பிரதான எதிர்க்கட்சி யாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த வர்கள். மற்றும் தனியாக உள்ளவர்கள் வெகு சிலரே இருக் கிறார்கள். இங்கே, அவர்கள், எதிர்க்கட்சியில் உட் கார்ந்து கொண்டிருக்கிறவர்கள், இது கொலை என்று நிரூபித்து விட்டால் இந்த அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர் வந்து விடும். அவப்பெயர் வந்து விடும் இந்த அரசாங்கம் அதுவும் இந்த ஆளுகின்ற கட்சி, மக்கள் மத்தியிலே மீண்டும் செல் வாக்கை நிலை நாட்டிக்கொள்ள முடியாது என்ற அந்த பயத்தின் காரணமாகவோ, என்னவோ, இந்த அரசாங்கம் அவசரம் அவசரமாக சில நடவடிக்கைகளை எடுத்து அதை மக்கள் ஒத்துக் கொள்ளாத காரணத்தினால், மக்களிடையே ஒரு கொந்தளிப்பு எழுந்த காரணத்தால், நிர்ப்பந்தச் சூழ்நிலையின் காரணமாக, ஒரு கமிஷன் போட வேண்டிய நிர்பந்தத்திற்கு அது ஆளாகி இருக்கிறது.

சம்பவம் நடந்த பிறகு ஒரு விசாரணை நடத்தப்படுகிறது. பால் கமிஷன் நியமித்த பிறகு நீதிபதி பால் அவர்கள் அங்கே செல்கிறார்கள். அவர்கள் செல்கின்ற சூழ்நிலையை நீங்கள் சிந்தித்துப்பார்க்க வேண்டும் எந்தச் சூழ்நிலையிலே அவர்கள் செல்கின்றார்கள். இங்கே அரசியல் மாச்சரியங்கள், அரசாங்கத்தினுடைய தலையீடுகள். இவ்வளவுக்கும் நடுவே, ஒரு நீதிபதி அவர்கள் சென்று விசாரணை கமிஷனை நடத்துகிறார்கள். அந்தக் கமிஷனை நடத்துகின்ற நேரத்திலே அவருக்கு இருக்கக்கூடிய தடயங்கள்,



வசதிகளைச் சிந்தித்துப் பார்ப்போமானால், இரண்டே இரண்டு தான். ஒன்று சந்தர்ப்ப சாட்சியங்கள். circum stantied evidence அதை வைத்துக் கொண்டு அவர் தன்னுடைய முடிவக் கூற வேண்டும். அடுத்து இருக்கக்கூடிய ஒரே ஒரு கான்க்ரீட் எவிடன்ஸ் என்னவென்று சொன்னால், சவப் பரிசோதனை ரிப்போர்ட், பிரேத பரிசோதனை முடிவு. That is post martum Report Post mortem Report இந்த Circumstantial evidence அடுத்து, தவிர அவருக்கு வேறு எந்த இரண்டே இரண்டு தடயங்களைத் தவிர விசாரணை விதமான ஆதாரமும் இல்லை. அவற்றைத்தவிர விசாரணை செய்ய வேறு எந்தத் தடயமும் அவருக்குக் கிடைக்கவில்லை. ஆகவே, இந்த இரண்டை மாத்திரமே எடுத்துக் கொண்டு அவர் முடிவுக்கு வந்திருக்கிற நேரத்தில் நீதிபதி பால் அவர்கள் சரியான முடிவுக்கு வந்தார்களா என்பதைப் பற்றி இங்கே சிந்திக்க வேண்டிய நிலைமையில் நாம் இருக்கிறோம். அப்படிப் பார்க்கின்ற நேரத்தில், அவருக்குக் கிடைத்த, அந்தத் தடயங் களை வைத்துக் கொண்டு அவர் செய்தது முழுக்க, முழுக்க சரி என்பதை இந்த மாமன்றம் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று இங்கே நான் உங்களுக்குச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டி ருக்கிறேன்.

அதாவது, ஒரு புறத்திலே அரசு, அவர்களுடைய உத்தியோ கஸ்தர்கள், அலுவலர்கள் அரசுக்குப் பயந்தவர்கள், அரசுக்குக் கட்டுப்பட்டவர்கள், இவர்கள் கொடுக்கின்ற சாட்சியங்கள், ஒட்டு மொத்தமாக ஒன்றாகவே இருக்கிறது. பிரேதப் பரிசோதனை செய்த அந்த மருத்துவருடைய சான்றிதழை வைத்துக் கொண்டு நாம் சிந்தித்துப் பார்க்கின்ற நேரத்தில், நீதிபதி பால் அவர்கள் சரியாகவே நல்ல முடிவுக்கு வந்திருக்கிறார்கள். ஏனென்று சொன்னால், சாவு மூச்சுத் திணறலால் Asphyxiation என்று கூறப்பட்டிருக்கிறது. Asphyxiation என்று சொன்னால், மூச்சுத் திணறி இறப்பது. இப்படிச் சொல்லும் போது கொஞ்சம் சரியான முடிவுக்கு வருவது கஷ்டம். காரணம் என்னவென்றால், Asphyxiation may be due to hanging or due to strangling அதாவது, கழுத்து நெறிக்கப் பட்டு இறந்தாலும் அல்லது தூக்கிலே தொங்கி இறந்தாலும் சாவின் அடிப்படைக் காரணம் Asphyxiation தான், மூச்சுத் திணறல்தான். ஆனால், இந்த இரண்டில், எந்த அடிப்படையிலே அவர் இறந்தார், Wether it is due to hanging or whether it is due to strangulation இந்த இரண்டுக்கும் உள்ள வேறுபாடு மிகக் குறைவு, very subtle difference, இதை நிரூபிப்பது என்பது மிகவும் கடினமான காரியம் என்பதை மருத்துவ வல்லுநர்கள் கூடச் சொல்வார்கள். ஆகவே, அந்த வித்தியாசங்களை பற்றி Toxicology Jurisprudence detailed description, Modi புஸ்தகத்திலே, அதிலே சொல்லியிருக்கிறார்கள். 13 வித்தியாசங்கள் Death due to ranging or strangulation அந்த வித்தியாசங்களைப் எல்லாம் அங்கே பிரேத பரிசோதனை செய்து டாக்டர் மனதிலே வைத்து, ''தற்கொலை என்று சொல்கிறார்களே, இங்கே, ஊரிலே கூக் குரலிடுகிறார்களே. இது கொலை என்று, எது சரியானது

என்று முடிவெடுக்க, டீடெய்ல்ட் போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டை சரிவர, நன்றாக, தீர ஆராய்ந்து அவர்கள் கொடுத்திருக்கிறார்களா என்றால் கிடையவே கிடையாது. மருத்துவப் பரிசோதனையினுடைய ரிப்போர்ட் it is positive conclusion, Whether it is due to hanging, or due to strangulation என்பதை அவரால் சொல்ல முடியாத நிலைமையில், இங்கே ஒரு மருத்துவ பரிசோதனை ரிப்போர்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்கிறேன். அதில் இரண்டு மூன்று குறிப்பான சில பகுதிகளை அவர்கள் விட்டுவிட்டார்கள். தற்கொலை செய்து கொள்ள யாராவது தூக்கிலே தொங்கினால் பாசிடிவ்வாக, நிச்சயமான ஆதாரமாக அவனுடைய கடைவாயிலிருந்து எச்சில் ஒழுகியிருக்கும் என்பது பலகாலமாக நிரூபிக்கப்பட்ட ஒன்று. அதைப்பற்றி எந்தவிதமான பரிசோதனை செய்ததற்கும் ஆதாரமே இல்லை அந்த ரிப்போர்ட்டில்.

அடுத்தபடியாக, சொல்வார்கள், மூக்கிலிருந்து ரத்தம் வழிய வேண்டும், என்று எப்பொழுது? Due to strangulation ஆனால், தற்கொலை செய்து கொள்ள தூக்கிலே தொங்குகின்றவனுக்கு மூக்கிலிருந்து ரத்தம் கொட்டாது. இங்கே பார்த்தவர்கள் சொல்கின்றார்கள். மூக்கிலிருந்து ரத்தம் வழிந்தது என்று ரிப்போர்ட்டிலே இருக்கிறது.

(பிற்பகல் 12.40)

ஆகவே, இது கொலையாக இருக்கலாமோ என்று சந்தேகிக்கப்பட்டு இருக்க வேண்டியது அந்த மருத்துவப் பரிசோதகருடைய கடமை. ஆனால், தன்னுடைய கடமையைச் சரியாகச் செய்யாமல், ஏன் இப்படி ஒரு டவுட்புல் ரிப்போர்ட் கொடுக்கவேண்டும்? அது strangulation ஆக இருக்கலாம் அல்லது hanging ஆகவும் இருக்கலாம் என்று சொல்லுகிற அளவுக்கு Death due to Asphyxiation மூச்சுத் திணறல் என்று கொடுத்தார் என்றால் நிச்சயமாக அவருடைய சாட்சியம் எந்த அளவுக்குப் பொருந்தும் என்று பால் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கவேண்டும். அதே நேரத்தில் இங்கே என்னுடைய பேராசிரியர் டாக்டர் கோபாலகிருஷ்ணன் அவர்களைப் பற்றி சொல்லி இருக்கிறார்கள். அவர் அந்தக் காலத்திலேயே மிகச் சிறந்த வல்லுநர், மிகத் திறமை வாய்ந்தவர், தானாக முன்வந்து சாட்சியத்தை அளித்திருக்கிறார். ஓய்வு பெற்ற டாக்டர், அதுவும் சென்னை மருத்துவக் கல்லூரியிலே பேராசிரியாாக இருந்தவர், ஏதோ எதிர்க்கட்சிக்காரர்களிடம் லஞ்சம் வாங்கிக் கொண்டு வந்து அங்கே சாட்சி கொடுத்திருக்க முடியுமா என்பதைச் சிந்தித்துப பார்க்கவேண்டும். அவர்கள், அவருடைய ஆற்றலும் அறிவும் நாட்டிற்காக பயன்பட, ஒரு நீதியை நிலை நாட்ட வேண்டும் என்ற அந்த அடிப்படையில் அவர்கள் அங்கே வந்திருக்கவேண்டுமே தவிர, ஏதோ எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்லிக் கொடுத்து அங்கே வந்திருக்க முடியாது. அவர் சாட்சியத்தில் சொல்லுகிறபோது, ஒரு முடிவாகச் சொல்லுகிறார். 7½ அடி உயரம் உள்ள குழாயிலிருந்து ஒருவன் தூக்கிலிட்டுக் கொள்ள முடியுமா என்று ஒரு வழிப்போக்கனைக் கூப்பிட்டு முயற்சி செய்து பார்க்கச் சொல்லி, அந்த



வழிப்போக்கன் முயற்சி செய்து பார்த்தேன் முடியவில்லை, கஷ்டமாக இருந்தது என்று சொன்னான் என்று சொல்லுகிறார். அவரைப் பற்றி கேவலமாக, அந்தப் பேராசிரியரைப் பற்றி தரக்குறைவாக இந்த ஜி.ஓ.விலே குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது உள்ளபடியே நான் வேதனைப்படுகிறேன். இந்த அரசாங்கத்திற்கு ஒரு நல்ல பெயரைத் தேடித் தந்த ஒரு வல்லுநரைப் பற்றி, அவர் கைகள் தள்ளாடுகின்றன, அவர் தள்ளாடுகிறார் என்று இருக்கிறது. 65 வயதிலே தள்ளாடாமல் எல்லோரும் நன்றாக இருப்பார்களா என்ன? ஆனால் அவருடைய மூளை தள்ளாடவில்லை, அறிவு மழுங்கவில்லை, அப்படிப்பட்ட பேராசிரியரைப் பற்றி இவ்வளவு கேவலமாக இப்படி ஒரு ரிப்போர்ட்டை அரசாங்கம் அளிக்கிறது என்று சொன்னால், உள்ளபடியே அந்தத் தொழிலைச் சேர்ந்த என்னுடைய உள்ளம் கொதிக்கிறது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அவருடைய சாட்சியைப் பற்றி சொல்லுகிறார்கள். "இன்னொரு வழிப்போக்கனை அழைத்து வந்து பார்த்தேன், அவன் கஷ்டமாக இருக்கிறது என்று சொன்னான் என்று சொன்னார்கள்". அந்தப் பேராசிரியரே தூக்கு மாட்டிக்கொண்டு செத்துவிட்டேனா, இல்லையா என்று பார்க்க சொல்வார்களா? 7½ அடி உயரம் இருக்கிறது. அவன் 67 கிலோ இருக்கிறான்-140 பவுண்டு இருக்கிறான். அது தாங்குமா என்றால் தாங்கும். ஆனால் அவருடைய உயரம் எத்தனை அடி? சுப்பிரமணியபிள்ளையின் உயரம் எத்தனை அடி? அந்தக் குழாயிலே சாதாரணமாக தூக்கு மாட்டிக் கொள்ள முடியுமா? ஒரு சாதாரண ஸ்டூலாவது அந்த பாத் ரூமில் இருந்திருக்க வேண்டும். 7½ அடி உயரம் உள்ள குழாயை எட்ட முடியாது. 55 வயதிலே ஒரு கிழவனால் அதை எட்ட முடியாது. ஆனால் மாண்புமிகு அமைச்சர் இராகவானந்தம் வேண்டுமானால் செய்யலாம். 55 வயதிலே மற்றவர்களால் அந்தக் குழாயிலே ஏற முடியாது. சிறு குழந்தையாக இருந்தால் ஏறிவிடலாம். ஏறுவது கஷ்டம்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் சௌரிராஜன் அவர்கள் இரண்டு பிரச்சினைகளை எழுப்பி இருக்கிறார்கள். 65 வயதிலே கை ஆடாமலா இருக்கும் என்றால், எனக்கு 66 வயதாகிறது; கை ஆடவில்லை. எனவே அது சரியல்ல. இரண்டாவது யாரையோ தூக்கிவிட்டு போட்டுப் பார்த்து இருக்கிறார். இதுவே தாங்கவில்லை என்றால் ஊரான் மட்டும் இதிலே தொங்கிப் பார்க்கலாமா. அதுதான் டிரையல் செய்யலாமா?

டாக்டர் கே. சௌரிராஜன்: 65 வயதிலே அவரால் முயற்சி செய்ய முடியவில்லை. அதனாலே இன்னொருவரை வைத்துப் பார்த்தார்கள். உங்களால் முடியும். அதற்கான வலு உங்களிடம் இருக்கிறது; எங்கள் டாக்டருக்கு வலு இல்லை. ஆகவே, ஒரு குழாயின்மேல் ஏறி, 7½ அடி உயரத்தில், அந்த உயரத்திற்கு அவன் ஏறவேண்டுமென்று சொன்னால் கீழே ஒரு ஸ்டூல், வாளி, பக்கெட் இருந்தால்தான் மேலே ஏறமுடியும். அதையும் அவன் செய்கின்ற நேரத்தில் அவன் தூக்கில் மாட்டிக்கொண்டு அந்த பக்கெட்டை உதைத்துத் தள்ளினால் ஒழிய அவன் தொங்கமுடியாது. ஆகவே

சாட்சிகளை வைத்துக்கொண்டு இப்படிப்பட்ட ஒரு வல்லுநர் கொடுக்கின்ற சாட்சியத்தை-இந்த அரசாங்கத்தின் ரிப்போர்ட்டில் என்ன சொல்கிறது என்றால், அதை நாங்கள் நம்பத் தயாராக இல்லை என்று. இந்த அரசாங்கம் என்ன செய்திருக்க வேண்டு மென்று சிந்தித்துப் பார்க்கும்போது, பால் கமிஷன் அறிக்கை வந்தவுடனே இவர்கள் கொடுத்திருக்கிறார்களே, இந்த ஜி.ஓ. அதிலே We don.twant judgement over anothei judgment by the Govt.. அதற்கு நீங்களே போய் சாட்சியம் சொல்லியிருக்கலாமே! இங்கே இருக்கிற சீஃப் செக்ரட்டரி அவர்கள் ஒரு பக்கத்திற்கு ஒரு ஜட்ஜ்மென்ட் எழுதியிருக்கிறார்கள். There is a chance for homic-del violence என்று பால் கமிஷன் சந்தேகித்திருக்கிறார்கள். ஹோமிசைடல்' இல்லையென்று நீங்கள் கருதி னால் அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. ஆனால் நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்? மீண்டும் பால் கமிஷன் அறிக்கையின் பேரில் உங்களுடைய வாதங்களை எடுத்து வைத்து, இரண்டு மூன்று பக்கங்களில் உங்களுக்கு வேண்டிய ஆதாரங்களை எல்லாம் எடுத்துவைத்து அதன்மேல் கடைசியாக இந்த முடிவுக்கு வந்திருக்கிறீர்கள்.

Government is supreme. You have entrusted the job to o Commission. The Commission has given its findings. Either you accept it or rejeot it. We a e not going ta ask you the ques ion,, why you havc rejected the findings.

அதைப் போலவே, உங்களின் விவாதங்களைப் பார்க்கிறபோது நீங்கள் உங்களுக்குச் சாதகமானவற்றை மட்டும் எடுத்துக் கொண்டு, பாதகமானவற்றை விட்டுவிட்டீர்கள். கடைசியாக இப்படிப்பட்ட ஒரு ரிப்போர்ட்டைக் கொடுப்பதைவிட இரண்டே இரண்டு வாதங்களில் உங்களுடைய தீர்ப்பை முடித்துக்கொண்டு இருக்கலாம். அதாவது. 20, 26 அல்லது 28-ல் உள்ள ஏதாவது இரண்டைச் சொல்லி முடித்து இருக்கலாம். அதாவது-மேற் கூறிய வேறுபாட்டு நிலைகள் இருந்தபோதிலும் கூட குற்றப் புலனாய்வுத் துறையின் குற்றப்பிரிவு போன்ற தனிப்பட்ட குற்றப் பிரிவினர் அமைப்பினால் முழு அளவில் தீர புலனாய்வு செய்ய வேண்டும் என்று முடிவு எடுத்து இருக்கிறீர்கள். அறங்காவலர் குழுவைக் கலைக்க வேண்டாம், அதற்குச் சட்டத்திலே இடம் இல்லை. அதற்கு அறநிலையத் துறையில் நடவடிக்கை எடுக்கச் சொல்லியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். இந்த இரண்டு குறிப்புகளே போதும். அதை விடுத்து நீங்களே ஏதோ சம்மன் இல்லாமல் ஆஜர் ஆகும் வக்கீல் போல, அறங்காவலர் குழுவுக்கு வக்காலத்து வாங்கியிருக்கிறீர்கள். இந்த அரசாங்கம் எதற்காக அறங்காவலர் குழுவுக்கு வக்காலத்து வாங்கவேண்டும் என்று எனக்குப் புரியவில்லை. இதையெல்லாம் ஒட்டுமொத்த மாகச் சிந்தித்துப் பார்க்கின்ற நேரத்தில் உங்களிடத்தில் என்ன நியாயம் கிடைக்கும்? நீங்கள் ஏற்கனவே ஒரு முடிவுக்கு வந்து விட்டீர்கள். அந்த முடிவுக்கு எதுஎது சாதகமாக இருக்கிறதோ அதை மாத்திரம் எடுத்துச்சொல்லி இருக்கிறீர்கள், விளக்கம்



கொடுத்து இருக்கிறீர்கள். பாதகமாக வருமானால் அதைத் தூக்கி எறிந்து விடுவீர்கள் என்ற சந்தேகம் சாதாரணமாகச் சிந்திக்கக்கூடிய ஆற்றல் உள்ள எந்த மனிதனுக்கும் எழத்தான் எழும். ஆகவே, என்னுடைய கோரிக்கை எல்லாம்—நிச்சயமாக உங்களுடைய கடமை. நியாயத்தை நிலை நாட்டவேண்டும், நீடவை நிலைபெறச் செய்யவேண்டும் என்பதில் இருக்க வேண்டும். அந்த அக்கறை உங்களுக்கு இருக்குமானால், இந்த வழக்கைப் பற்றி விசாரிக்க சென்டிரல் பீரோ ஆப் இன்வெஸ்டி கேஷனிடத்தில் ஒப்படையுங்கள். அறங்காவலர் குழுவில் அரசியல்வாதிகள் இடம்பெறக் கூடாது என்று ஒரு கன்வென்ஷனை ஏற்படுத்துங்கள். அந்த அறங்காவலர் குழுவில் அரசியல்வாதிகள் இருக்கிற காரணத்தால்தான், The Government is also compel'ed to prctect tho Ruling Party Nembers. ஆகவே, அறங்காவ , குழுவில் ச்சயமாக அரசியலில் முழுமையாக ஈடுபட்டு இருப்பவர்களைப் போடக்கூடாது என்கி ஒரு 'ஹெல்தி கன்வென்ஷனை ஏற்படுத்துங்கள் என்று சொல்லி, நீங்கள் நீதியை நிலைநாட்டினாலும் சரி, நிலைநாட்டா விட்டாலும் சரி, எனக்குத் தெரிந்த வரையுல், நான் நம்புகின்ற முருகன், திருத்தணி முருகன் ஒரு தடவை சொல்லி விட்டான், மருதமலை முருகன் ஒரு தடவை சொல்லிவிட்டான், திருச் செந்தூர் முருகன் நிச்சயமாக நியாயத்தை நிலை நாட்டியே தீருவான், அவனுக்குத் துரோகம் செய்தவர்கள் அழிந்து போவார்கள் என்பதை நிச்சயமாகச் சொல்லி, வாய்ப்பளித்த துணைத் தலைவருக்கு நன்றியைத் தெரிவித்து விடை பெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை 13-2-1982 ஆம் தேதி காலை 9 00 மணிக்குப் பேரவை மீண்டும். பின்னர் பேரவை பிற்பகல் 12.47 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

5. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

ஏதுவுமில்லை,

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சனிக்கிழமை, 1982 பிப்ரவரி 13.

மாசி 1, துன்மதி, திருவள்ளுவர் 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

''பருவந்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு.''

காலத்தின் போக்கினை உணர்ந்து அதற்குப் பொருந்த ஒழுகுவது தம்மை விட்டு நீங்காது இருக்குமாறு செல்வத்தை இழுத்துக் கட்டும் கயிறாகும்.

குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 1. தகவல் கோரல்.

காவிரி நீர் பிரச்சினை.

*திரு. ப. நெடுமாறன்: சார், கர்நாடக முதலமைச்சர் குண்டுராவ் அவர்கள் அந்தச் சட்டசபையில் காவிரி நீர் பற்றி ஒரு கருத்தைச் சொல்லியிருப்பதாக பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. இது முக்கியமான ஒரு பிரச்சனை........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிகையில் வந்த செய்தியை வைத்து உடனடியாக அதற்குப் பதில் சொல்ல முடியாது. அதோடு இன்றைக்கு 12-00 மணிக்குள் பேரவை நிகழ்ச்சிகளை முடித்தாக வேண்டும். ஆகவே, நாளை இந்தப் பிரச்சனையை எடுத்துக்கொள்ளலாம்.

### 2. அரசினர் தீர்மானம்.

''பால் கமிஷன்'' பரிந்துரைகள் மீதும், அரசு எடுத்த நடவடிக்கை குறித்தும் விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பால் கமிஷன் அறிக்கை மீதான விவாதம். திரு. சங்கரய்யா அவர்கள்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். எங்கள் கட்சியின் சார்பில் பேசுவதற்கு நான் பெயர் கொடுத்திருந்தேன். பால் கமிஷன் அறிக்கைமீது பேசுவதற்கு எங்கள் கட்சியில் யாருக்கும் வாய்ப்புக் கொடுக்கவில்லை. ஆகவே, தாங்கள் என்னைப் பேசுவதற்கு அனுமதிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுவதற்குப் பெயர் கொடுத்திருந்தால் அவையிலே இருந்து, நேற்றே நீங்கள் பேசியிருக்க வேண்டும். இன்றைக்குப் பேசுவதற்கு நேரமில்லை. இருந்த போதிலும் நீங்கள் 5 நிமிடத்தில் உங்கள் உரையை முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. எஸ். ஆண்டித்தேவர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பால் கமிஷன் அறிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு அகில இந்திய ஃபார்வெர்டு பிளாக் கட்சியின் சார்பாக கருத்துச் சொல்ல என்னை அனுமதித்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

26-11-1980 ஆம் நாள் அன்று திருச்செந்தூர் ஆலயத்தின் சரிபார்ப்பு அதிகாரி இறந்துவிட்டார். அது சந்தேகத்திற்குரிய இறப்பு என்று அனைத்துக் கட்சிகளும் குரல் கொடுத்த பின்னால் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஒரு விசாரணைக் கமிஷன் அமைக்க உத்தரவிட்டார்கள். அவர்கள் ஒரு நல்ல எண்ணத்தோடு அந்தக் கமிஷனை அமைத்தார்கள். உண்மை என்னவென்று அறிவதற்கு அது உதவ வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு அறிவித்தார்கள். 'நீதிக்கு தலை வணங்கு' என்று சொல்லுகிற அவர்கள் அந்த நீதிபதி கொடுத்த தீர்ப்பை ஏற்று அந்த அறங்காவலர் குழுவைக் கலைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிற பரிந்துரையை ஏற்று, தமிழக முதலமைச்சர் அவர்கள் அதைச் செய்வார்கள் என்று கருதுகிறேன். அதற்கு மாறாக நமது சட்டமன்றத்திலே அறிக்கை வைக்கப்பட்டு, அதில் அறங்காவலர்க் குழுவைக் கலைக்க வேண்டியதில்லை என்று சொல்லி, அதற்கு செக்ஷன் 53-ல் சொல்கிற விதியை எடுத்துக்காட்டி, அந்த விதியின் பிரகாரம் கலைக்க வேண்டியதில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏன் அவர்கள் அதிலே முனைப்பு காட்டுகிறார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

டாக்டர் பாலகிருஷ்ணனை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக, ஒரு இயக்கத்தைச் சேர்ந்தவர் என்பதற்காக, இத்தகைய முனைப்போடு இந்தச் சட்டத்தைச் சொல்லியிருக்க வேண்டியதில்லை. அவர் அப்படி உயர்ந்த நபரா, நல்லவரா என்று பார்த்தால் கூட அவர் அறங்காவலர் குழுவுக்கு நியமனம் செய்யக் கூட தகுதியில்லாத ஒரு நபராக இருந்தும் அரசு ஏனோ அதை தெரிந்துகொள்ளாமல் இருந்திருக்கிறது. கேடி என்று போலீஸ் லிஸ்டில் இருக்கிற ஒரு நபரை அறங்காவலர் குழுவில் நியமித்தது மட்டுமல்லாமல் இப்படி ஒரு நீதிபதி தீர்ப்பை, அவர்கள் சொல்கிற கருத்தை ஏற்றுக்கொள்ளாதது மட்டுமல்ல; அதற்கு ஒரு களங்கத்தை ஏற்படுத்தும் முயற்சியிலே ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது. சரிபார்ப்பு அதிகாரி சுப்பிரமணிய பிள்ளை என்பவர் திருச்செந்தூர் தேவஸ்தானத்தில் மரணம் அடைந்ததற்குக் காரணமான சூழ்நிலைகளை ஆராய வேண்டும்; அது மட்டுமல்லாமல் இத்தகைய சம்பவங்கள் மீண்டும் நடைபெறாமல் இருக்க சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று சொல்லியிருப்பதைத் தவறு என்று சொல்கிறார்கள்.



இருக்கிறார்கள். அவர்
அவர்கள் கோடிட்டுக் காட்டி தூக்கிட்டுச் சாகவில்லை.
இறந்ததில் சந்தேகம் இருக்கின்றது. என்று சொன்ன நீதிபதி
கொலை செய்யப்பட்டு இருக்கிறார் சொல்லி இருக்கிறார்கள்.
அவர்கள் ஒரு வழிமுறையையும் நடக்கக்கூடாது என்பதற்
இனிமேலும் அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் கண்டுபிடிப்பதற்காக இப்படிப்
காக அந்த சம்பவத்தைப் பற்றி அனுசரிக்கவேண்டும் என்று நீதிபதி
பட்ட விதிமுறைகளை அவர் அறங்காவலா குழுவைக்
அவர்கள் கூறி இருக்கிறார்கள். இருக்கிறார். அப்படிக் கலைத்
கலைக்கவேண்டும் என்று சொல்லி விசாரணையின்போது
தால்தான் நீங்கள் நியமிக்கப்போகின்ற சொல்ல முடியும், ஆகவே
அங்குள்ளவர்கள் உண்மையைச் வேண்டும் என்று குறிப்
அதற்காக அந்தக் குழுவைக் கலைக்க இங்கே மறுக்கிறார்கள்.
பிட்டிருக்கிறார்கள். ஆனால் அதை என்று சொல்
நீதிபதிக்கு அந்தக் கடமை பணிக்கப்படவில்லை செய்யப்பட்டிருக்கிறார்
கிறார்கள். சரிபார்ப்பு அதிகாரி கொலை இப்படிப்பட்ட சம்பவங்கள்
என்ற கருத்தைச் சொல்லி மேலும் கண்டுபிடிப்பதற்கு
நடக்காத வகையிலே நடந்த சம்பவத்தைக் அந்த கருத்தை
இப்படிப்பட்ட விதிமுறைகள் வேண்டும் என்ற அவர்கள சொல்லி
ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நீதிபதி
இருக்கிறார்கள்.

ஆனால் 53-வது செக்ஷன்படி அறங்காவலர் குழுவைக்
கலைக்க முடியாது என்றும் அவர்களை நீக்க முடியாது என்றும்
சொல்லி இருக்கிறார்கள். ஏனோ இவ்வளவு தூரம் பாதுகாப்பு
கொடுக்கிறார்கள் என்பது தெரியவில்லை. அவர் எப்படிப்
பட்டவர் என்பதும் அரசுக்கும் தெரியும். அப்படிப்பட்ட ஒருவரை
அறங்காவலர் குழுவின் தலைவராக வைத்துக் கொண்டு அவர்தான்
தொடர்ந்து இருக்கவேண்டும் என்பதிலே அரசு இவ்வளவு ஆணித்
தரமாக இருக்கக் கூடாது என்பதை நான் இங்கே சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமல்ல; அந்த 53-வது விதியின்
கீழே நீக்கப்படக்கூடியவர்தான். If anybody acts against the interests
of the institution என்று சொன்னாலே நீக்கலாம் என்று விதி
இருக்கின்றது. அது against the interests of the Institution என்ற
வகையிலே எப்படி நடந்திருக்கிறார் என்பதற்கு நான் ஒரு
உதாரணம் மட்டும் சொல்கிறேன். உண்டியலைத் திறக்கின்ற
போது அறங்காவலர் குழுத் தலைவர் இருக்கவேண்டும்.
அவரிடமும் ஒரு சாவி இருக்கின்றது, அங்கே இருக்கின்ற நிர்வாக
அதிகாரியிடமும் ஒரு சாவி இருக்கின்றது. ஆனால் உண்டியலைத்
திறக்கின்ற போது சாவியை இசக்கிமுத்துவிடம் கொடுத்து
அனுப்பினேன் என்று சொல்கின்ற நிலைமையில் இருக்கின்ற
பொறுப்பற்றவரை அந்த அறநிலையத்திற்கு மாறாக நடக்கின்ற
வரை எப்படி வைத்துக்கொள்வது? அதுமட்டுமல்ல. இன்னொன்று,
நீங்கள் சொல்கின்ற கூற்றுப்படி சுப்பிரமணியப்பிள்ளை அவர்கள்
தற்கொலைதான் செய்துகொண்டார் என்று வைத்துக்கொண்டால்
கூட சுப்பிரமணியப்பிள்ளை 2,850 ரூபாய் திருடினார் என்பதை
அறங்காவலர் குழு கண்காணிக்கவில்லையா? உங்கள் கூற்றுப்படி

வைத்துக்கொண்டால் கூட கோயில் சொத்தைத் திருடுவதைப் பார்த்துக்கொண்டிருந்தது against the interest of the institution இல்லையா? ஆகவே இதைத் தடுப்பதற்கு ஏன் இந்த அரசு தயக்கம் காட்டுகின்றது. அதுமட்டுமல்ல; அப்போது புலனாய்வு செய்த காவல்துறை எப்படி நடந்துகொண்டு இருக்கின்றது என்பதையும் பார்க்கவேண்டும். கதவு திறக்கப்படும்போது உதவி சப் இன்ஸ்பெக்டர் அங்கே இருந்திருக்கிறார். இரண்டரை மணிக்கு கதவைத் திறந்து பிணத்தை எடுத்துச் செல்லும்போதே அவர் இன்வெஸ்டிகேஷனை ஆரம்பித்திருக்கவேண்டும். ஆனால் காவல்துறை அதிகாரி இங்கே இருந்திருந்தும் அவர் என்ன சொல்கிறார்? ஆஸ்பத்திரிக்குச் சென்ற பிணத்தைப் பற்றி ஏதாவது தகவல் வந்ததா என்று மூன்றரை மணிக்கு காவல் நிலையத்திற்குச் சென்று கேட்டேன் என்று சொல்கிறார். அப்படியானால் எவ்வளவு பொறுப்பற்ற தன்மையில் அவர் நடந்து கொண்டிருக்கிறார். அப்போதே அவர் எஃப்.ஐ.ஆர். தயார் செய்து விசாரணையை ஆரம்பித்திருக்கவேண்டாமா? அப்படி ஆரம்பித்திருந்தால் அங்கே டைரி கிடைத்திருக்கும், பணத்தைக் கைப்பற்றி இருக்க முடியும். ஆனால் அவர்கள் எப்படி நடந்திருக்கிறார் என்றால் வண்டியைக் கூட அவர்கள் எடுக்கவில்லை என்ற அளவுக்கு காவல்துறை அதிகாரிகள் நடந்திருக்கிறார்கள். அவருடைய டைரி, பெர்சனல் டைரி 3-2-1981 அன்று அரங்கநாதன் என்ற பெயரிட்டு காவல்துறைக்கு அனுப்பப்படுகின்றது என்று சொன்னால் காவல்துறை எந்த அளவுக்கு மெத்தனமாக நடந்திருக்கின்றது என்பது தெரிகின்றது; எஃப்.ஐ.ஆர். எப்போது போட்டார்கள் என்றால் 4 மணிக்குத்தான்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சீக்கிரம் முடியுங்கள்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: இந்த விஷயத்திலே காவல் துறையினர் காட்டிய மெத்தனத்தின் காரணமாக உண்மை வெளிவரவில்லை என்பதை அரசு ஏற்று அந்த காவல்துறை அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆனால் அவர்களே உடந்தையாக இருந்திருக்கிறார்கள். புலனாய்வின்படி விவரங்களை அறிய வேண்டிய அந்த இடத்தை அங்கே இருந்த உதவி சப் இன்ஸ்பெக்டர் பூட்டி சாவியை அப்பொழுதே வைத்துக்கொள்ளவில்லை. அப்படிச் செய்திருந்தால் தடயங்கள் கிடைத்திருக்கும். ஆனால் அதற்குப் பிறகு சிமென்ட் எல்லாம் போடப்பட்டது என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆகவே இப்படி நடவடிக்கை ஒழுங்காக எடுக்காத அதிகாரிகளின் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுமட்டுமல்ல. 53-வது செக்ஷன்படி அந்தக் குழுவினைக் கலைக்க முடியாது என்று சொல்கின்ற நீங்கள் ''அகெய்ன்ஸ்ட் தி இன்டரஸ்ட் ஆஃப் தி இன்ஸ்டிடியூஷன்'' என்ற காரணத்திற்காகவே அந்தக் குழுவினைக் கலைக்க வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.





திரு. என். சங்கரய்யா: பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது விவாதத்திற்கு இருக்கக்கூடிய இந்தப் பிரச்னையில் ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கக் கூடிய காரணங்களுடன் பின் வரும் சில கருத்துக்களை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இதிலே பொதுவாக ஒரு விஷயத்தை கவனமாகவே சொல்லப்படவில்லை என்று கருதுகிறேன். பக்கம் 40ல் ''துப்புரவாளர் ஆறுமுகம் தற்கொலை செய்துக் கொண்டார் என்று ''அ'' தரப்பினர் கூறியிருக்கிறார்கள். அவர் கொலை செய்யப்பட்டார் என்று ''ஆ'' தரப்பினர் கூறினர்'' என்று நீதிபதி பால் கமிஷன் ஒரு பரிந்துரையை கூறியிருக்கிறார். அந்த ஆறுமுகம் தான் முதலிலே திரு. சுப்பிரமணியப் பிள்ளை என்பவர் தூக்கிலே தொங்கிக் கொண்டிருக்கிறார் என்பதை பார்த்துச் சொன்னவர். அவர் எதற்காக தற்கொலை செய்துக் கொண்டார் என்று ''அ'' தரப்பினர் கூறுகிறார்கள் என்பதை கேட்டு தமிழ் மக்கள் அதிர்ச்சி அடைந்திருக்கிறார்கள். ஆகவே, இதிலேயும் ஏதாவது தவறான முயற்சி செய்யப்பட்டிருக்கிறதோ என்ற சந்தேகம் எழுகிறது. அவர்தான் அந்த நிகழ்ச்சியை நேரிலே பார்த்தவர் என்ற காரணத்தால், அவர் உயிரோடு இருப்பது சிலருக்கு அபாயம் என்ற காரணத்தால், இடையூறு செய்யப்பட்டு அதன் விளைவாக மரணம் ஏற்பட்டதா என்பதும் தீர விசாரிக்க வேண்டிய ஒரு பிரச்னையாக இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

அடுத்தபடியாக பக்கம் 47 லே டாக்டர் ஃபென்சி டேனியல் கூறுகிறபோது, சிதம்பரம் என்பவரும், புருஷோத்தமன் என்ற கோவில் காவலரும் (வாட்ச்மேன்) உடலைக் கொண்டு வந்த நேரத்திலே அவர்களை விசாரித்த போது, மரணம் ஏற்பட்டதற்கான காரணத்தைக் கூறவில்லை என்றும், எனவே மரணத்திற்கான காரணம் குறித்து விபத்து பதிவேட்டில் இடம் காலியாக விடப்பட்டது என்றும் திட்டவட்டமாக தெரிவித்திருக்கிறார். அதே புருஷோத்தமன் அவர்கள் தான் பிறகு 4.15 மணிக்கு முதல் குற்றத் தகவல் அறிக்கையை கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அந்த உடலைக் கொண்டு வந்தபோது யாருமே அதை என்ன காரணம் என்று கூறமுடியவில்லை; ஆகவே அந்த இடம் காலியாக விடப்பட்டது என்றால், பின்னர் அதை எப்படி வேண்டுமானாலும், திருத்தம் செய்வதற்கான ஒரு வாய்ப்பாகத்தான் இருக்கிறது என்பது சாதாரணமாக எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அதுவும் இன்றைக்கு நம்முடைய கவனத்தை ஈர்க்க வேண்டிய ஒரு முக்கியமான பிரச்னை என்று நான் கருதுகிறேன்.

அடுத்தபடியாக பக்கம் 48 ல் நீதிபதி பால் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ''ஆகவே, இவர்கள் 'அ' சாட்சி 2, 'ஆ' சாட்சி 6, நிர்வாக அதிகாரி, சட்டமன்ற உறுப்பினர் இருவரும் மருத்துவ மனைக்குச் சென்று டாக்டரை அழைத்தனர்

என்பதும், டாக்டரோடு அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது சடலம் கொண்டுவரப்பட்டது என்பதும், நிச்சயமாக நம்பக் கூடியதாக இல்லை'' ''என்று திட்டவட்டமான ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். ஆகவே இதுவும் ஒரு பெரிய பிரச்னையாகப் படுகிறது. இதேபோல இன்னும் 2 விஷயங்களை இந்தச் சான்றுகள் சம்பந்தமாகக் கூற விரும்புகிறேன்.

மாவட்ட கலெக்டர் தலைமை செயலருக்கு 1-12-1980 அன்று அனுப்பிய டெலக்ஸ் செய்தியில், இது சான்று ஆவணம் 60-சி என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் சரிபார்ப்பு அதிகாரி, நிர்வாக அதிகாரி, டாக்டர் பாலகிருஷ்ணன் ஆகியோர் உண்டியல் திறக்கப்படும் போது உடன் இருந்தார்கள் என்று கூறியிருக்கிறது. அப்படி என்றால் அ.சா. 1, தான் அங்கு இல்லை என்று சொன்ன கூற்றை இது மறுக்கிறது என்று நான் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதேபோல சான்று ஆவணம் அ.54 படி அ.சா. 11, இன்ஸ்பெக்டர் ஸ்ரீதரன் நாயர், எஸ்.பி.க்கு 30-1-1980ல் அனுப்பிய செய்தியும் இதுவே. அதிலே அவர் கூறியிருக்கிறார்கள். காலை 8 மணிக்கு அவர்கள் அனைவரும் வந்திருக்தனர் என்று, ஆகவே, இந்த அறங்காவலர் குழுத் தலைவர் அந்த இடத்திலே இல்லை என்பது இரண்டு. அந்த மாவட்ட அதிகாரிக்கு அனுப்பட்ட செய்தியை இது மறுக்கிறது என்பதும் சந்தேகத்தைக் கிளப்பக் கூடியதாக இருக்கிற முக்கியமான பிரச்னையாகும்.

அது மட்டுமல்ல, கடைசியாக, இந்த விசாரணைகள் நடக்கும்போது தேவஸ்தானத்தின் சார்பாக ஒரு வக்கீலை வைத்திருந்தது கூடத் தவறு என்று நான் கருதுகிறேன். ஏனென்றால் இது ஒரு வழக்கு அல்ல. நீதிவிசாரணை தான். அப்படி வழக்கு என்றாலும் தனிப்பட்டவர்கள் தான் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும் தேவஸ்தானத்தின் சார்பில் போடவேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். அதைக் காட்டிலும் அரசு சார்பிலே வாதிட்ட வழக்கறிஞர் திருமதி பத்மினி யேசுதுரையும் பக்கம் 35லே கூறியிருக்கிறார்கள். அதில் ''அத்தகைய திருட்டை புரிவதற்கு அதுவே அவருக்கு கடைசி வாய்ப்பாக இருக்கும் என்று கருதியிருக்கலாம்'' என்று அரசு சார்பில் வாதிட்ட வழக்கறிஞரும், தேவஸ்தான சார்பில் வாதிட்ட வழக்கறிஞரும் சொல்லியிருக்கிறார்கள் என்றால், இந்த அரசு உண்மையைக் கண்டு பிடிக்கத்தான் கமிஷன் வைக்கிறோம் என்று சொல்வானேன்? அவர்களுடைய வழக்கறிஞர்கள் அங்கே போய் திருட்டைச் செய்தற்காகத்தான் அவர் தற்கொலை செய்துக் கொண்டார் என்ற முறையில் வாதிடுவதற்கு, நீதிவிசாரணைக் கமிஷன் எதற்காக வைக்க வேண்டும். அப்புறம் அரசாங்கம் எப்படி இந்தப் பரிந்துரைகளின் மீது பாரபட்சமற்ற முடிவுக்கு வரும் என்று நம்ப முடியும் என்று நான் கேட்க விரும்புகிறேன்.



பல்வேறு அதிகாரிகள் மீது இன்றைக்கு அரசாங்கத்தின் ஏற்படுகிறது. இதை கட்சி மட்டங்களிலிருந்து நிர்ப்பந்தம் என்று கேட்டுக்கொள்கிறேன். அடிப்படையில் பார்க்கவேண்டாம் அரசாங்க உத்தரவு இந்தப் பரிந்துரை மீது கொடுக்கப்பட்டுள்ள கமிஷன் முடிவை முற்றிலும் தவறானது. அவர்கள் இந்த கமிஷன் முடிவை நிராகரிக்கிறார்கள். ஆகவே இந்தக் கமிஷன் நேர்மையான நிராகரிக்கிறோம் என்று சொல்லியிருந்தால் அது சொல்லாமல் ஆனால் ஒரு மறுப்பாக இருந்திருக்கும். அப்படிச் முயற்சியில் இறங்கிய அதே சமயத்தில் பூராவையும் மறுக்கும் உத்தரவிட்டால் பிறகு பரிந்துரைமீது விசாரணை நடத்த கண்டுபிடிக்க அதிகாரிகள், போலீஸ் அதிகாரிகள் உண்மையைக் பார்க்கவேண்டும். முன்வருவார்களா என்பதை அரசு சிந்தித்துப்

அசாத்திய அறங்காவலர் குழுவை கலைக்கவேண்டும், இது முனிசிபாலிட்டிகள் மான பிரச்னை அல்ல. கார்ப்பரேஷன்கள், மத்திய அரசு மாநில கலைக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல் பார்க்கும்போது அரசுகளைக்கூட கலைக்கிறது. இதையெல்லாம் இப்படிப்பட்டதொரு ஒரு அறங்காவலர் குழுவை அதுவும் அந்தக்குழுவை வழக்கு நடந்து கொண்டிருக்கிற நேரத்தில் ஏற்கனவே நிச்சயமாகக் கலைக்கலாம், கலைக்கவேண்டும். புதிய ஷரத்துக்களைக் கடந்த சட்டமன்றத்தில் பல்வேறுவிதமான நிறைவேற்றப்பட்டிருக் கொண்டுவந்து ஒரு திருத்தச்சட்டம் ஆகவே கிறது. பல்வேறு காரணங்கள் கூறப்பட்டிருக்கின்றன. கலைத்தால்தான் இந்த கோவில் அறங்காவலர் குழுவை விசாரணை நடத்தமுடியும்.

கூட அதோடு கூட அறங்காவலர் குழுக்களை நியமிப்பதில் குழுவில் அரசு சற்று சிந்திக்கவேண்டும். இப்போது அறங்காவலர் ஆளும் ஐந்து ட்ரஸ்டிகளை நியமிக்கும் போது நான்கு பேர்களை பொறுப்புகள் கட்சியிலிருந்து நியமிக்கிறார்கள். அவர்களுக்கு பல முதலிலேயே வேண்டுமென்ற நிர்ப்பந்தம் வந்தால் அதை ஸ்தாபனங்களில் எதிர்த்து நின்றுவிடுவது நல்லது. இப்படிப்பட்ட பெரும்பான்மையாகப் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களைப் பிரச்னைகளை போட்டுவிட்டு பிறகு அதனால் ஏற்படும் இப்படிப்பட்ட அரசாங்கம் சந்திக்கவேண்டிவரும். ஆகவே கொண்டிருக்கக்கூடிய குழுக்களில் இந்து மதத்தில் அக்கறை காரியங்கள் செய்வது சாதாரண மக்கள் பிரதிநிதிகளை போட்டு தான் பொருத்தமாக இருக்கும்.

இதில், அரசாங்கத்திற்குத்தான் முழுப் பொறுப்பு என்று நாங்கள் கருதுகிறோம், தனிப்பட்ட அமைச்சர் பொறுப்பு என்று நாங்கள் கூறவில்லை. காரணம், இதில் ஆரம்பத்திலிருந்து கடைசிவரை அரசாங்கத்தின் சார்பில்தான் பல்வேறு குறுக்கீடுகள் நடந்திருக்கின்றன என்று நாங்கள் கருதுகிறோம்.

[திரு. என். சங்கரய்யா] [1982 பிப்ரவரி 13

கடைசியாக நான் கூற விருப்புவது, இதில் மத்திய
புலனாய்வுத்துறை விசாரணை என்பதை நாங்கள் மார்க்ஸிஸ்ட்
கம்யூனிஸ்ட்கட்சி ஏற்றுக்சொள்ளவில்லை. எதிர்க்கிறோம். மத்திய
புலனாய்வுத் துறை, மட்டும் பாரபட்சமற்ற முறையில்
நடக்கக்கூடிய ஒரு ஸ்தாபனம் என்று நாங்கள் கருதவில்லை.
இந்த மாநில சர்க்கரே இங்கே ஏற்பட்டிருக்கக்கூடிய பிரச்னை
மீது, பால் கமிஷன் அவர்களே சொல்லி இருக்கிறார்கள்.
independent agency such as the crime branch அப்படிப்பட்ட க்ரைம்
ப்ராஞ்ச் போன்ற ஒரு சுதந்திர ஸ்தாபனத்திடம் விசாரணை
நடத்தச் செய்ய உத்தரவிடுங்கள், ஒரு குழுவை நியமியுங்கள்,
அவர்களுக்கு பகிரங்கமாக அறிவியுங்கள். அவர்கள் என்ன
முடிவுக்கு வந்தாலும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும், அவர்கள்
விசாரணையில் எந்த விதத் தடங்கலும் இருக்கக்கூடாது என்ற
முறையில் உத்தரவாதம் கொடுக்கவேண்டும். அதைத்தான்
செய்யவேண்டுமே தவிர மத்திய புலனாய்வு விசாரணைக்கு
இதைக் கொண்டுவருவது என்பது மாநில சுயாட்சியின். மாநில
ஆட்சிக்குள்ள அதிகாரங்கள் மீது மத்திய அரசின் குறுக்கீடுகளைக்
கொண்டுவரக்கூடிய ஒன்றாக அது அமையும் என்று நாங்கள்
கருதுகிறோம், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நாங்கள்
கருதுகிறோம். ஆகவே இதில் இப்படிப்பட்டதொரு நிலை
ஏற்படக்கூடாது.

இப்படிப்பட்ட அறங்காவலர் குழுக்களில் இந்து மதத்தில்
நம்பிக்கை உள்ளவர்களைப் போடவேண்டும். கம்யூனிஸ்ட் கட்சி
யிலிருந்து யாராவது இரண்டு பேர்களைப் போடுங்கள் குழுக்களில்,
ஒத்துக்கொள்கிறோம் என்று சொன்னார்கள். எங்களுக்கு இதில்
நம்பிக்கை இல்லை. இந்து மதத்தில் நம்பிக்கை உள்ளவர்களை,
அவர்கள் பிரதிநிதிகளை இக்குழுக்களில் போடட்டும். அதைத்
தான் நாங்கள் கூறினோம், இன்றைக்கும் அதைத்தான் கூறு
கிறோம். கோவில்களில் பூஜைகள் எப்படி நடக்கின்றன என்று
தெரியாத, இந்து மதத்தில் நம்பிக்கை இல்லாதவர்களைப்
போடுவது சரியல்ல. இந்து மதத்தில் அக்கறை, நம்பிக்கை
உள்ளவர்களைப் போட்டு நடத்திச் செல்லவேண்டும். அதுதான்
அரசாங்கத்திற்கு பாதுகாப்பாக இருக்கும்.

இது மிகப் பெரிய பிரச்னை. அரசாங்கம் இதில் தக்க
முடிவிற்கு வரவேண்டும். இதில் ஒரு ஜீ. ஓ. போட்டுவிட்டோம்
என்று பார்க்க வேண்டாம். நியாயம் செய்ய நினைத்தால்
திராவிட முன்னேற்றக் கழகம் திருச்செந்தூருக்குப் போக
வேண்டிய அவசியமிருக்காது. அதற்குப் பதிலாக அ. தி. மு. க.
சார்பிலும் போகவேண்டிய அவசியமிருக்காது, நியாயமான
அடிப்படையில் முடிவிற்கு வர வேண்டும் அரசாங்கம் என்று இந்த
மன்றத்தில் உள்ள எதிர்தரப்பு கட்சிகள் அனைத்தும்
கூறியிருக்கின்றன என்பதை தங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து
நியாயம் வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



122229

1982 பிப்ரவரி 13]

[முற்பகல் 9-20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்தபடியாக திரு. சுந்தரராஜ்
அவர்கள் பேசுவார்கள்; நேரம் அதிகம் இல்லாத காரணத்தினால்,
திரு. சங்கரய்யாவைப் போல திரு. சுந்தரராஜ் அவர்களையும்
சுருக்கமாகப் பேசும்படி அழைக்கிறேன்.

*திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, 26-11-81 ஆம்
நாள் அன்று திருச்செந்தூர் தேவஸ்தானத்தில் நடைபெற்ற ஒரு
சம்பவம் குறித்து அரசு ஒரு விசாரணை கமிஷனை நீதிபதி பால்
அவர்கள் தலைமையில் நியமனம் செய்கிறது. அவர்கள்
அளித்துள்ள அந்த அறிக்கையின் மீது நடைபெறும் விவாதத்தில்
கலந்து கொள்ளுகின்ற நேரத்தில் வருத்தப்பட்டாலும், காங்கிரஸ்
கட்சியின் சார்பில் சொல்லவேண்டிய கருத்துக்களை, சொல்ல
வேண்டிய கடமையிலே இருக்கிறேன். இன்றைக்கு இந்த அறிக்
கையின் மூலமாக அரசாங்கம் பால் கமிஷன் அறிக்கையை,
ஏதோ கீழ்க் கோர்ட்டிலே தீர்ப்பளிக்கப்பட்டு, அதை மறுத்தோ
அல்லது ஆதரித்தோ, ஹை கோர்ட் தீர்ப்பு வழங்குவதுபோல,
பால் கமிஷன் அறிக்கையின்மீது அரசாங்கத்தைச் சேர்ந்த
அதிகாரிகள் இன்றைக்கு தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்
கிறார்கள்.

V211,31'482

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

483-2952

ஆகவே, இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில், அங்கே சரி
பார்க்கும் அதிகாரி சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் மரணம்
அடைந்தது தற்கொலையா அல்லது கொலையா என்பதை
விசாரிப்பதற்காக, நீதிபதி பால் அவர்கள் நியமனம் செய்யப்
பட்டார்கள். 26-11-1981ஆம் நாள் அந்தச் சம்பவம் நடைபெற்ற
பின்னர், அங்குள்ள எல்லா அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்
களும் போராட்டம் நடத்தியதற்குப் பின்னால், தமிழக முத
லமைச்சர் அவர்கள் அங்கே நேரடியாகச் சென்று, விசாரணை
செய்கிறார். விசாரணை செய்ததற்குப் பின்னால், அரசாங்கம்
இதிலே சந்தேகம் இருக்கிறது என்ற ஐயப்பாட்டின் அடிப்படையில்
நீதிபதி பால் கமிஷன் நியமனம் செய்யப்படுகிறது. அதுவரையில்
அரசாங்கம் நடந்துகொண்ட முறை சரிதான்; அதிலே எங்களுக்கு
கருத்து வேறுபாடு இல்லை; ஆனால், அதற்குப் பிறகு நீதிபதி
பால் அவர்கள் விசாரணையை துவங்குகின்ற காலகட்டத்திலே,
வழக்கு மன்றத்தில் வழக்கறிஞர் நீதிபதியிடம் முறையீடு செய்
வார்கள்; வாதம் புரிவார்கள். அந்த வகையில் அங்கே வாதங்
களும், பிரதிவாதங்களும் நடைபெற்றன. அரசாங்கம் ஆரம்பத்
திலேயே இந்த நிலையை, எடுத்துக்கொண்டது என்பதைப்
பார்க்கின்றச் நேரத்தில், தேவஸ்தானத்தை சேர்ந்த அதிகாரிகள்
கமிஷனுக்கு முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டியவர்கள்.
அரசாங்கம் பாரபட்சம் இல்லாமல் அங்கே நீதி கிடைக்க
வேண்டுமென்று விரும்பியிருக்குமானால், அரசாங்கம் அங்கே ஒரு

வழக்கறிஞரை நியமனம் செய்து, அந்த வழக்கறிஞர் அது தற்கொலைதான் என்று உறுதிப்படுத்துகின்ற வகையில் வாதம் புரிவதை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. இந்த அறிக்கையை சமர்ப்பிக்கின்ற நேரத்தில், இது நியாயம் தானா என்று கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு பிரமாணப் பத்திரங்கள், வாக்கு மூலங்கள் தாக்கல் செய்யப்படுகின்ற நேரத்தில் இரண்டு சாராரும் தாக்கல் செய்திருக்கின்றார்கள். ஒரு சாரார் 'அ' தரப்பாரைச் சார்ந்தவர், இன்னொரு தரப்பார் 'ஆ' தரப்பாரைச் சார்ந்தவர். இந்த இரண்டு சாராரும் தங்கள் தங்கள் வாக்கு, மூலங்களை தாக்கல் செய்திருக்கிறார்கள். ஆனால், இந்த காவல் துறை அதிகாரிகள் யாரை விசாரித்தார்கள் என்றால், தேவஸ்தான ஊழியர்களையும், மருத்துவர்களையும் விசாரணை செய்தார்கள். இவர்கள் அத்தனைபேரும் 'அ' தரப்பைச் சார்ந்தவர்கள். ஆனால், கொலையுண்டார் என்று சொல்லும் தரப்பார் யாரும் விசாரிக்கப்படவில்லை. எனவே, இப்படி ஒருதலை பட்சமான விசாரணையை நடத்திவிட்டு, நாங்கள் நியாயத்தைச் செய்கிறோம் என்று சொல்வதை தாங்கள் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

அது மட்டுமல்ல, சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் இறந்த நேரம் எது என்பதை யாராலும் சொல்ல முடியவில்லை. நீதிபதி டால் அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில், பல்வேறு வகையில் சொல்கிறார்கள். அந்த வகையிலே இன்றைக்கு ஒருதலைபட்சமான கருத்துதான் நிலவுகிறது. காரணம், அந்த தேவஸ்தானத்திலே நடைபெற்ற சம்பவம் கொலையா அல்லது தற்கொலையா என்று சொல்லக்கூடிய வகையில், இதை யார் பார்த்திருப்பார்கள் என்று சொன்னால், தேவஸ்தானத்தைச் சார்ந்தவர்கள் தவிர பொதுமக்கள் யாரும் பார்த்திருக்க முடியாது. காரணம், அங்கே அந்த ஆய்வகத்திலே யாரும் தங்கவில்லை. அங்கே தேவஸ்தானத்தைச் சேர்ந்தவர்கள் தான் தங்கியிருக்க முடியும். அவர்களுக்குத் தான் உண்மை தெரியும். ஆனால், அவர்கள் உண்மையைச் சொல்லத் தயாராக இல்லை. கொலையோ அல்லது தற்கொலையோ, சம்பவம் நடந்துவிட்டது. காவல் துறை அதிகாரிகள், பூட்டியிருக்கின்ற நிலையிலே இருந்த அறையைத் திறந்து விட்டிருக்கிறார்கள்; அங்கே சிமெண்ட் பூசியிருக்கிறார்கள்; பைப்பை மாற்றியிருக்கிறார்கள் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. ஆகவே, காவல் துறை அதிகாரிகள் ஒழுங்காக செயல்பட்டிருப்பார்களானால், உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடித்திருக்க முடியும்.

அது மட்டுமல்ல, எப்.ஐ.ஆர். திருத்தப்பட்டு 2 எப்.ஐ.ஆர்.களாக காட்சி அளிக்கின்றன. அதிலே எத்தனை பேர்கள் தலையிட்டார்கள் எப்.ஐ.ஆர். திருத்தப்பட்டதற்குக் காரணம் என்ன, இரண்டு எப் ஐ.ஆர்.கள் கொடுத்ததற்கு அவசியம் என்ன என்பதை அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும்.



பிரேத பரிசோதனை ரிப்போர்ட் ஏ. 11 என்று சொல்லக் கூடியவர், காவல் துறையால், 28 ஆம் தேதியே தாசில்தாரிடம் கொடுத்து விட்டேன் என்று சொல்கிறார். ஆனால் தாசில்தார் அலுவலகத்திலே 30-11-81 அன்று நாங்கள் ரிஜிஸ்தர் செய்தோம் என்று சொல்கிறார்கள். இரண்டிற்கும் இடைப்பட்ட 2,3 நாட்களில் பிரேத பரிசோதனை அறிக்கை என்ன ஆனது? எங்கே போனது? அறிக்கை எப்படி மாறியது? இதையெல்லாம் நீங்கள் நீங்கள் என்று சொன்னால் இந்த அறிக்கைமீது நீங்கள் ஒரு அறிக்கையை வைத்திருக்கிறீர்களே, இது தற்கொலை என்று சொல்லியிருக்கிறீர்களே அந்த அளவுக்கு இல்லாமல் இந்த ஜி. ஓ. வை ரத்து செய்துவிட்டு புதிதாக ஒரு அரசாங்க உத்திரவைப் போட்டு விசாரிக்கவேண்டும். நான் தமிழகத்திலே உள்ள காவல் துறை அதிகாரிகளைக் குறைசொல்லவில்லை, தமிழகத்திலே சிறந்த அதிகாரிகள் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. ஆனால் அதே நேரத்திலே தமிழகக் காவல் துறை அதிகாரிகளால் முடியாது என்று சொன்னால் எங்களைப் போன்றவர்களுக்கு மற்றவர்களுக்கு அதில் நம்பிக்கை இல்லை என்ற நிலை வருகிறபோது சி. பி. ஐ. எடுப்பதற்கு நாங்கள் தயங்கவில்லை. ஆனால் அதற்கு முன்னாலே தமிழகக் காவல் துறையில் உள்ள எல்லோரும் ஒட்டுமொத்தமாக மோசமானவர்கள் அல்லது தவறான நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடியவர்கள் அல்லது அரசாங்கத்திற்கு ஆதரவாக நியாயத்திற்குப் புறம்பாக செயல்படக்கூடியவர்கள் என்று நான் சொல்லத் தயாராக இல்லை. நியாயத்திற்குப் புறம்பாக இல்லாமல் நியாயமாக நடந்து கொள்கிற அதிகாரிகள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். நீங்கள் அவர்களிடம் ஒப்படையுங்கள். அவர்கள் முழு விசாரணை நடத்துவதற்கு உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்றைக்கு நான் பேசுகிறபோது கூடச் சொன்னேன்; நாளைய கதாநாயகன் என்று. அப்போது சிலர் வருத்தப்பட்டார்கள். அறங்காவலர் குழுத் தலைவராக அவர் பாலகிருஷ்ணன், எந்த அளவுக்கு தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதற்கு சாட்சியாக அவர் பெயர் இருக்கக்கூடியவர் ரௌடி லிஸ்டிலே இருப்பதாகக் கேள்விப் காவல் துறையிலே உள்ள சந்தர்ப்பத்திலே நான் மாண்புமிகு அற படுகிறோம். ஒரு அமைச்சர் அவர்களிடம் இந்த சபையிலே நிலையத் துறை கட்சிக்காரர்களாகப் பார்த்து அறங் கேட்டேன், உங்களுடைய போடுகிறீர்களே நியாயமா, நேர்மையா, காவலர் குழுவிலே கட்சிக்காரர்களைப் போடவேண்டுமென்று நான் எங்களுடைய என்று சொன்னபோது தெய்வபக்தி மிகுந்தவர் சொல்லவில்லை அந்த தேவஸ்தானங்கள், கோயில்கள் சிறப் களைப் போட்டால் என்று சொன்னார்கள். நான் ராதாகிருஷ் பாக நடைபெறும் தேவஸ்தானத்திற்கு தலைவராகப் போட்டிருக் ணனை பழனி நண்பர் வி.எம்.சி.டி.-யை மதுரையிலே இறோம், உங்களுடைய என்று சொன்னார்கள். ஆனால் நல்லவர் போட்டிருக்கிறோம்

களையும் தவறுகளில் ஈடுபடுகிறவர்கள் இல்லாத நிலையில் உள்ளவர்களையும் நியமனம் செய்வதை விட்டுவிட்டு ஒரு ரௌடியை ஆறுபடை வீடுகளில் ஒரு படைவீடான திருச்செந் தூரில் ஒரு ரௌடியை நியமனம் செய்து இருக்கிறீர்களே அதைத் தான் என்னால் புரிந்துக்கொள்ள முடியவில்லை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

அது மட்டுமல்ல, இன்றைக்குப் பல சாட்சிகள் நேரடியாக வந்து சொல்லமுடியாமல் பேனதற்குக் காரணம் இவரால் துன்பம் ஏற்பட்டுவிடும் என்பது மட்டுமல்ல, இவரால் கொலை செய்யப்படுவார்கள் என்று அஞ்சித்தான். நீதிபதி பால் அவர் களிடம் திருச்செந்தூரிலே நேரடியாகத் தெரிவித்திருக்கிறார்கள், நாங்கள் பிரமாணப் பத்திரம் கொடுத்து இருக்கிறோம், சாட்சி யங்கள் நேரிலே வந்து சொல்வோமானால் எங்களை பாலகிருஷ் ணன் கொன்றுவிடுவார் என்று அச்சப்பட்டார்கள். அதன் காரணமாக நீதிபதி பால் அவர்கள் அவர்களுக்கு வேண்டிய போலீஸ் பாதுகாப்பைத் கொடுத்திருக்கிறார்கள். ஆறுமுகம் ஒரு துப்புரவுத் தொழிலாளி, அவர் நேரடியாக அந்தச் சம்பவத்தைப் பார்த்தவர், தூக்கிலே தொங்கினாரா அல்லது அடித்துக் கொல்லப் பட்டாரா என்று நேரடியாகப் பார்த்தவர். ஆனால் இன்றைக்கு அவர் இல்லை. அவர் மர்மமாக இறந்திருக்கிறார்.

அதோடு தொடர்பு படுத்தி நான் ஒன்றைக் கேட்க விரும்பு கிறேன். வேலுப்பிள்ளை சங்கரலிங்கம், ஈஸ்வர அய்யர் போன்ற வர்கள் நாங்கள் சாட்சியம் சொன்னால் எங்களைக் கொன்று விடுவார்கள் என்று அச்சப்படுவதற்கும் ஆறுமுகம் இறந்துவிட்டார் என்று சொல்லப்படுவதற்கும் சம்பந்தம் இருப்பதாக நான் கருது கிறேன். ஆகவே விசாரணை செய்யும் பொழுது ஆறுமுகம் எப்படி இறந்தார் என்ற விசாரணையை உடனடியாக நீங்கள் தொடங்கி னால் தான் தமிழக மக்கள் நீங்கள் நியாயமாக நடக்கிறீர்கள் என்று சொல்ல முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறங்காவலர் குழுவை எங்களால் கலைக்க முடியாது என்று அரசுத் தரப்பிலே சொல்லப்படுகிறது. தமிழகத்திலே 12 ஆயிரம் பஞ்சாயத்துக்களை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு களை, அரசாங்கம் எந்த ஜி.ஓ.வைப் போட்டு கலைத்ததோ அது மாதிரிப் போட்டுக் கலைக்க முடியும். இன்றைக்கு உங்கள் கட்சிக்காரர்கள், உங்களால் நியமனம் செய்யப்பட்டவர்கள், நான் பாலகிருஷ்ணனை அறநிலையத் துறை அமைச்சர் நியமனம் செய்தார் என்று சொல்லவில்லை. அரசாங்கத்தால் நியமிக்கப் பட்ட இந்த அறங்காவலர் குழுவைக் கலைப்பதிலே என்ன தயக்கம்? அதற்குப் பதிலாக பாதுகாக்கவேண்டும் என்பதற்காக ஆதாரப் சாட்சியங்கள் பொய் அடிப்படையிலே புலன் விசாரணை செய்வதைப்போல், விசாரணை செய்வதைப் போல் ஒரு அறிக்கையைத் தாக்கல் செய்திருக்கிறது, எங்களால்



நடவடிக்கை எடுக்க முடியாது என்று சொல்கிற ஒரு அரசாங்கம் இருக்கிறது என்றால் அரசாங்கத்தினுடைய கையலாகாதனத்தை எப்படிச்சுட்டிக்காட்டுவது என்று புரியவில்லை. ஒரு சாதாரண அறங்காவலர் குழுவைக் கலைக்க முடியவில்லை என்று அரசாங்கம் சொல்கிறது என்றால் அறங்காவலர் குழுத் தலைவரோ அல்லது அறங்காவலர் குழுவோ எதை வேண்டுமானாலும் செய்யலாம் நிலைமைக்கு வருமானால், தமிழகத்தில் எந்தக் கோயிலும் நியாயமாக நடக்காது. ஒரு கோயில்கூட நிம்மதியாகப் பொது மக்கள் ஆண்டவனைத் தரிசிக்கச் செல்ல முடியாத நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல, அதற்கு ஆதரவாக விதி 53—பி—யைச் செல்கிறார்....

[முற்பகல் 9-30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 53—வது விதியைப்பற்றி ஆண்டித்தேவர் அவர்கள் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள்; அதையே திருப்பிச் சொல்ல வேண்டியதில்லை. அவையின் நிகழ்ச்சி பிற்பகல் 12 மணிக்குள் முடிந்தாக வேண்டும். அதற்குள் எதிர்க்கட்சித் தலைவர் பேச வேண்டும்; மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லியாக வேண்டும்; சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு நா. சுந்தரராஜ்: உண்டியலைத் திறப்பதற்கான சாவியை, சம்பந்தமே இல்லாத இசக்கிமுத்து என்பவரிடத்திலே கொடுத்து உண்டியலைத் திறக்கச் சொல்லும் அளவிற்கு வந்திருந்தால் அவர் தன்னுடைய கடமையிலிருந்து தவறியிருக்கிறார் என்றுதான் பொருள். அந்த அடிப்படையிலேயே அவரை நீக்கி இருக்க முடியும். ஆனால் அதைச் செய்யவும் மறுத்து விட்டீர்கள், அதற்குப் பதிலாக அவருக்கு ஆதரவாக அரசாங்கம் செயல்படுவது சற்று வேதனையாக இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எங்களுடைய கட்சியின் சார்பிலே நான் கேட்டுக்கொள்ள விரும்புவதல்லாம், உடனடியாக முதலிலே அறங்காவலர் குழுவைக் கலைத்து விடுங்கள். இரண்டாவதாக, நீதிபதி பால் அவர்களின் அறிக்கையை ஏற்றுக்கொண்டு, உங்களுடைய அறிக் கையை வாபஸ் பெற்றுவிட்டு, தமிழகத்திலே இருக்கின்ற பொறுப்பான, நியாயமான, நேர்மையான முறையில் நடக்கின்ற காவல்துறை அதிகாரிகளைக் கொண்ட குழுவை அமைத்து அவர்களைக் கொண்டு முழு விசாரணை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யுங்கள். அதற்கு முன்னால், அய்வகம் சம்பந்தப்பட்ட ரிக்கார்டுகள், ரிக்கார்டுகள். தேவஸ்தானம் சம்பந்தப்பட்ட ரிக்கார்டுகள் ஆகிய அத்தனை டிரங்கால் போட்டுப் பேசிய ரிக்கார்டுகள் ஆகிய அத்தனை கோப்புகளையும் உடனடியாக அரசாங்கம் கைப்பற்றி, அதைப் பாதுகாப்பாக வைத்து, அவைகளை அந்த அதிகாரிகளிடத்திலே கொடுத்து விசாரணை நடத்துவதற்கு உத்தரவிட வேண்டும்.

உங்களுடைய அறிக்கையைத் திரும்பப் பெற வேண்டும். இந்த
அறிக்கையை மோசடி அறிக்கை என்று நான் சொல்ல மாட்டேன்;
ஆனால் இது தேவை இல்லாத அறிக்கை. இதை அரசாங்கம்
செய்ய வேண்டியதில்லை. இதுவரை இப்படிப்பட்ட சம்பிரதாயம்
இல்லை, நடைமுறை இல்லை. அதற்குப் பதிலாக ஒரு அறிக்கை
யைச் சமர்ப்பித்து, இதுதான் எங்கள் அறிக்கை என்று சொன்
னால், இந்த அறிக்கைக்கு மேல் அமைச்சர்கள் வேறு பதில்
சொல்ல முடியாது. இந்த அறிக்கையை பேஸ் செய்து எங்கள்
கருத்து இருக்கும் என்று சொன்னால் மூன்று நாட்களுக்கு இந்த
விவாதமே தேவையில்லாமல் போயிருக்கக் கூடும்.

இதில் திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகம் என்பது அல்ல. (மணியடிக்கப்பட்டது)
தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர்
கலைஞர் அவர்கள் இந்தப் பிரச்னையை எடுத்துக்கொண்டார்,
நியாயம் கேட்கிறார் என்ற அரசியல் கண்ணோட்டத்தோடு
பார்க்க வேண்டாம். அவரும் இந்த நாட்டின் குடிமகன்தான்.
நாங்களும் அப்படித்தான், எந்தக் குடிமகன் பாதிக்கப்பட்டாலும்
குரலெழுப்ப வேண்டியது எதிர்க்கட்சிகளின் கடமை. அந்த
முறையிலேதான் இது எழுப்பப்பட்டிருக்கிறது. எனவே, இந்த
அவையில் உள்ளவர்களின் கருத்தைக் கேட்க வேண்டும். இந்த
அறிக்கையை வாபஸ் பெற்று, நல்ல அதிகாரிகளைக் கொண்டு
விசாரணை நடத்த உத்தரவிட வேண்டுமென்று முடித்துக்கொள்
கிறேன்.

*டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ள நீதிபதி பால் அவர்
களுடைய அறிக்கையைக் குறித்தும், அதன் தொடர்பாக அல்லது
அதற்கு மேலாக என்று எண்ணிக் கொண்டு வைக்கப்பட்டுள்ள
திரவியம் அவர்களுடைய அறிக்கையைக் குறித்தும் நடைபெறு
கின்ற விவாதத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய
கருத்துக்களை நான் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.
நேரம் அதிகம் இல்லை எனினும் நேற்றையதினம் அவை முன்னவ
ரோடும், முதல்வரோடும், தங்களோடும் பேசி முடித்தவாறு 11
மணிக்குள்ளாக என்னுடைய பேச்சை முடித்துவிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 45 நிமிடங்கள் பேசினால்
போதும். அதற்குள்ளேயே முடிக்கலாம். இன்றைக்குக் கொஞ்சம்
அட்ஜஸ்ட் செய்து கொள்ளுங்கள்.

டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, 1980 ஆம் ஆண்டு
நவம்பர் திங்கள் 26 ஆம் நாள் திருச்செந்தூரிலே சரிபார்ப்பு
அதிகாரி சுப்பிரமணியப் பிள்ளை இறந்தது குறித்த செய்தி
வெளிவந்தது. அந்தச் செய்திகளூடே அது மர்மமரணம் என்றும்,
தற்கொலை என்றும், கொலை என்றும் பல்வேறான செய்திகள்
வெளிவந்தன.



இங்கே பல்வேறு கட்சிகளுடைய தலைவர்கள் எடுத்துக்
காட்டியதைப் போல திராவிட முன்னேற்றக் கழகம் மாத்திரம்,
இது தனக்குரிய ஒரு பணி என்று எடுத்துக் கொள்ளாமல்,
அந்தப் பகுதியிலே உள்ள அனைத்துக் கட்சிகளும் இந்த மர்ம
மரணம் பற்றி அரசு உடனடியாக உரிய நடவடிக்கைகளை எடுத்து
ஆய்வு செய்து அதனை உலகுக்கு வெளிப்படுத்த வேண்டுமென்ற
கோரிக்கையை விடுத்தன அதனுடைய தொடர்பாகத்தான்
இன்றைக்கு இந்த மன்றத்திலேகூட 8 அல்லது 9 கட்சிகள்
ஆளுங்கட்சியைத் தவிர என்று கூடச் சொல்லலாம், அனைத்துக்
கட்சிகளும் இந்த கோரிக்கையை முன்வைத்து, சரியான நீதி,
நியாயம் வழங்கப்பட வேண்டுமென்பதிலே, அழுத்தந்திருத்தமாக,
வாதாடுகின்ற காட்சியினை நாம் காண்கிறோம். சுப்பிரமணிய
பிள்ளை அவர்கள் மர்மமாக மரணம் அடைந்திருக்கிறார் என்ற
தகவலை உலகுக்கு அறிவித்து, அரசு உடனடியாக நடவடிக்கை
மேற்கொள்ள வேண்டுமென்று ஆலய ஊழியர்களுடைய
சங்கத்தினர் தீர்மானம் போட்டார்கள். அந்தப் பகுதியிலே உள்ள
எல்லாக் கட்சிகளைச் சேர்ந்த, மாவட்ட அளவிலே உள்ள
நிர்வாகிகள், தலைவர்கள், கண்டனக் கூட்டங்களை
நடத்தினார்கள். ஊர்வலங்களை நடத்தினார்கள். டிசம்பர்
2 ஆம் தேதி அன்று திருச்செந்தூரில் ஒரு முழு அடைப்பு—
கடை அடைப்பு, வேலை நிறுத்தம், என்கிற அளவுக்கு நடை
பெற்றது. இவ்வாறாவும் நடந்து முடிந்து, டிசம்பர் 3-ஆம் தேதி
வரையிலே காத்திருந்த நான் இப்படி பல்வேறாகச் செய்திகள்
வந்தபொழுது பிரதமருக்கும், மத்திய உள்துறை அமைச்சர்
மாண்புமிகு ஜெயில் சிங் அவர்களுக்கும், மேதகு தமிழக
ஆளுநருக்கும், மாண்புமிகு முதலமைச்சருக்கும் பின்வருமாறு ஒரு
தந்தியினை நான் அனுப்பினேன்.

"Subramania Pillai, Jewel Verification Officer—cum- Assistant
Commissioner of Hindu Religious and charitable Endowments Department of Tirunelveli found dead under mysterious circumstances on 26th
November at Subramaniaswami Devasthanam Inspection Bungalow,
Tiruchendur. All political parties suspect murder. Trust Board
Members absconding. Hartal by public on 2nd December at Tiruchendur
demanding proper investigation and enquiry. Please intervene, cause
proper investigation and enquiry by independent CID branch."

என்ற இந்தத் தந்தியை நம்முடைய முதலமைச்சர் உள்ளிட்ட
அனைவருக்கும் நான் அன்றைக்கு அனுப்பினேன். எனவே,
எடுத்த எடுப்பில், சி.பி.ஐ. விசாரணை வேண்டுமென்கிற அளவுக்கு
நான் போகாததற்குக் காரணம், அல்லது கழகம் கருதாததற்குக்
காரணம், இங்குள்ள நேர்மையான காவல் துறை அதிகாரிகளைக்
கொண்டே இந்த விசாரணையை இந்த அரசு நடத்தும் என்ற
நம்பிக்கையினுடைய அடிப்படையிலேதான். ஆனால், 3 ஆம்
தேதி இப்படிப்பட்ட ஒரு தந்தியை, எதிர்க்கட்சியினுடைய
தலைவன் என்கின்ற முறையிலே நான் அனுப்பியதற்கு மறுநாள்
டிசம்பர் 4 ஆம் நாள், அறநிலையத் துறை அமைச்சர்,

அருமை நண்பர், மாண்புமிகு ஆர். எம். வீரப்பன் அவர்கள் நிருபர்கள்கூட்டத்தைக் கூட்டி, அதிலே தன்னுடைய கருத்துக் களையும், அதிகாரிகள் தந்த அறிக்கையினையும் எடுத்து வைத்தார். அவருடைய கட்சி ஏடான, அண்ணா பத்திரிகையிலே, 4-12-1980 என்று திருச்செந்தூரில் நடந்தது என்ன? இறந்தவரை வைத்து கருணாநிதி நடத்தும் அரசியல் மோசடி, ஆர். எம். வீ. கடும் கண்டனம் என்று தலைப்பிட்டு, 'திருச்செந்தூரில் உண்டியல் எண்ணும்போது நடந்த சம்பவம்பற்றி பத்திரிகைகளில் செய்திகள் வந்துள்ளன. நேற்று முதல் எதிர்க்கட்சித் தலைவர் அந்த விஷயத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார். அடிப்படையே இல்லாத ஆதாரம் ஏதும் இல்லாத முழுப்பொய்யை ஜோடித்து ஒரு கற்பனைக் கதையை எதிர்க்கட்சித் தலைவர் உருவாக்கி இருக்கிறார். அனைத்திந்திய அண்ணா தி.மு.கழக ஆட்சிமீதும் அறங்காவலர் மீதும் பழி போடும் வேலையில் எதிர்க்கட்சித் தலைவர் ஈடுபட்டுள்ளார். அவரது குடும்பப் பத்திரிகையும் அந்தப் பணியில் ஈடுபட்டுள்ளது. பெரிய கொலை நடந்திருப்பதாகப் பிரதமருக்கு அவர் தந்திகூட அனுப்பி இருக்கிறார். நான் முதல்வருக்கும் அனுப்பினேன். ஆனால், அமைச்சர் அவர்கள் இப்படி குறிப்பிடுகிறார்கள். —

இன்றைய முரசொலியில் எட்டுக்காலத் தலைப்பிட்டுச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

[முற்பகல் 9-40]

அ.தி.மு.க.வினர், அடித்துக் கொன்றனர் என்று செய்தி வெளியிட்டுள்ளனர். பொறுப்பற்ற முறையில் இப்படிப்பட்ட செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. அங்கே என்ன நடந்தது என்ற உண்மை விவரங்களை வெளியிடக் கடமைப்பட்டுள்ளோம். இந்த சம்பவம் நடந்தபோது அங்கே 50,60 பேர்கள் இருந்திருக் கிறார்கள். அங்கே நடந்த சம்பவம் குறித்து திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரும், காவல் துறை உயர் அதிகாரியும் அறிக்கை அனுப்பியுள்ளனர். மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பியுள்ள அறிக்கையில் கூறி இருப்பதை இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன். (அதற்குப் பிறகுதான் அறிக்கையையே அவர் வெளியிடுகிறார். அதுவரையில் எதிர்க்கட்சித் தலைவருக்கு உரிய அர்ச்சனை நடை பெறுகிறது?) அந்த அறிக்கையிலே சுப்பிரமணியப்பிள்ளை உண்டியலைத் திருடினார் என்றும் அதன் காரணமாக ஓடி ஒளிந்தார் என்றும், அவரைத் துரத்திச் சென்று அந்தப் பணத்தைக் கைப்பற்றினர் என்றும், அவமானம் தாங்க மாட்டாமல், அவர் தற்கொலை செய்து கொண்டார் என்றும் அந்த அறிக்கையை அமைச்சர் அவர்கள் படித்து முடித்ததும், நிருபர் கேட்கிறார், "அந்த அதிகாரியின் உடையிலே ரத்தக்கறை இருந்ததாக கருணாநிதி எழுதி இருந்தாரே" என்று கேட்டபோது அமைச்சர், "யார் யாரோ எதை எல்லாமோ எழுதுவார்கள், ரத்தக் கறை" எதுவும் இல்லை. அந்த அதிகாரி வராமலேயே



உண்டியல் உடைக்கப்பட்டதாகக் கூட எழுதி இருக்கிறார்கள். ஆனால் அந்த அதிகாரி முதல் நாள் இரவே பியூனுடன் வந்து தங்கியிருக்கிறார். அவர் பார்த்த பிறகுதான் உண்டியல் உடைக்கப்பட்டுள்ளது. 7 ஆண்டு காலம் முதலமைச்சராக இருந்தவர், எதிர்க்கட்சித் தலைவராக இப்போது இருப்பவர், நேற்று முதல் இந்தப் பிரச்சினையை எடுத்துக் கொண்டு பொறுப்பற்ற முறையிலே எழுதத் தொடங்கி இருக்கிறார். ஒரு மரணம் ஏற்பட்டால் அதை எடுத்து வைத்துக் கொண்டு பொறுப்பற்ற முறையில் மனமறிந்து, பொய்களைச் சொல்கிறார். அடித்துக் கொன்றதாகச் சொல்லுகிறார். எதிர்க்கட்சித் தலைவர் இப்படிப் பட்ட மோசடியில் ஈடுபட்டிருப்பது வருந்தத்தக்கது. இந்த மரணத்தை வைத்துக்கொண்டு அரசியல் மோசடி செய்கிறார். திருச்செந்தூரில் இந்தச் சம்பவம் பற்றி எல்லா விவரமும் தெரிந்திருப்பதால் அங்கு எந்தப் போராட்டமும் நடக்கவில்லை" என்று கூறினார் என்று அண்ணா பத்திரிகையிலே முதல் பக்கத்தில் வெளிவந்தது.

திருச்செந்தூரிலே ஏந்தப் பரபரப்பும் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியது எவ்வளவு அப்பட்டமான உண்மைக்கு மாறான தகவல் என்பதை நேற்றைய தினம் பேசிய என் அருமை நண்பர் நெடுமாறன் இங்கே கூறி இருக்கிறார். அதைப்போலவே மற்றக் கட்சியினுடைய தலைவர் களும், திருச்செந்தூர் மக்கள் ஏந்த அளவுக்கு கொந்தளித்திருக் கிறார்கள், குமுறுகிறார்கள், கடை அடைப்பு வரையிலே சென்றார்கள் என்ற செய்திகளை இங்கே எடுத்துக் காட்டி இருக்கிறார்கள். ஆனால் டிசம்பர் 4-ந் தேதி அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையைத் தந்தபோதிலும், டிசம்பர் 7-ந் தேதி நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நிதி அமைச்சர் நாவலர் அவர்களும் சென்றதாக எனக்கு நினைவு, நெல்லைக்குச் சென்றவர்கள். திருச்செந்தூர் சென்று அந்த ஆலயத்தையும் ஆலய வளாகத்தையும் ஆய்வகத்தையும் பார்வையிட்டு, சென்னைக்குத் திரும்பிய பிறகு டிசம்பர் 11-ந் தேதி இதுகுறித்து ஒரு நீதி விசாரணை நடக்கும் என்று முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். பிறகு டிசம்பர் 19-ந் தேதி சென்னையிலே அறிவித்தார்கள். பிறகு டிசம்பர் 19-ந் தேதி நீதிபதி பால் அவர்களுடைய பெயர் அறிவிக்கப்பட்டு, அரசு ஆணையின் மூலம் அது தெரிவிக்கப்பட்டது. பால் அவர்கள் அதை மிக உன்னிப்பாக, கவனமாக பல்வேறு விதமான விசாரணை செய்து ஆய்ந்து ஒரு அறிக்கையினை இன்றைக்கு இந்த அரசாங்கத்தினிடத்தில் தந்திருக்கிறார். பால் அவர்களுடைய விசாரணைக் கமிஷன் நடைபெற்றபோது, இரண்டு தரப்பினர் அவர்களே குறிப்பிட்டு இருப்பதைப்போல் விசாரணையில் கலந்து இதிலே விசாரிக்கப்பட்டார்கள். அல்லது 'அ' தரப்பு என்பது அறங்காவலர் குழுவைச் சேர்ந்தவர்கள், காவல் துறையைச் சேர்ந்தவர்கள், இவர்கள் கொண்டார்கள்.

எல்லாம் 'அ' தரப்பினர். 'அ' தரப்பினுடைய முக்கியமான பணியாக எது இருந்தது என்றால், அதிகாரி சுப்பிரமணிய பிள்ளை தூக்கு மாட்டிக் கொண்டு, தற்கொலை செய்து கொண்டார் என்பதை மெய்ப்பிப்பதற்காகத்தான் அவர்கள் அரும்பாடுபட்டார்கள். அவர்கள் சார்பில், அறங்காவலர் குழு சார்பில் வழக்கறிஞர் விருத்தாசலம் ரெட்டியார் அவர்களும், அரசின் சார்பில் பத்மினி ஜேசுதுரை அவர்களும், வாதிட்டார்கள். அடுத்து 'ஆ' தரப்பினர் இது தற்கொலை அல்ல என்று வாதாடுகின்ற தரப்பு, அந்தத் தரப்பின் சார்பில் வழக்கறிஞர்கள் எட்டியன்ட், இரணியல்ரவி, ஏ. எல். சுப்பிரமணியம் மற்றும் சில வழக்கறிஞர்களும் இந்த விசாரணையிலே ஈடுபட்டார்கள். இந்த விசாரணைக்கு என்று ஒருவரம்பு, டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ், தரப்பட்டது. இப்போது வைக்கப்பட்டிருக்கின்ற அரசு ஆணையிலே சொல்லப்பட்டிருக்கின்ற குற்றச்சாட்டே, நீதிபதி பால் அவர்கள் இந்த டெர்ம்ஸ் ஆப் ரெபரன்சை, விசாரணை வரம்பை மீறி இருக்கிறார் என்பதுதான். என்ன அந்த விசாரணை வரம்பு முதலில் தரப்பட்டது. (அ) இந்து சமய அற நிலையத் துறையின் சரிபார்ப்பு அதிகாரி திரு. சி. சுப்பிரமணியப் பிள்ளை இறந்ததற்கான காரணத்தையும், சந்தர்ப்ப சூழ்நிலையையும் பற்றி விசாரணை செய்யவும், (ஆ) அத்தகைய சம்பவம் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்குத் தக்க நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்யவும் என்பதுதான் 'டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ்'. இதிலே எப்படி விசாரணை வரம்பு மீறப்பட்டது என்பதை அரசு யூகிக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை. ஒரு சாவுக்கான காரணம் விபத்தாக இருக்கலாம், தற்கொலையாக இருக்கலாம், கொலையாக இருக்கலாம் அல்லது இயற்கைச் சாவாக இருக்கலாம். இதிலே இயற்கைச் சாவு என்பதும், விபத்து என்பதும் வருவதற்கு இடமே இல்லை. தற்கொலை என்றால், சுப்பிரமணியப் பிள்ளை உண்டியல் பணத்தைத் திருடினார் என்ற குற்றச்சாட்டோடு அது இணைகிறது. அந்தக் குற்றச்சாட்டு, அடிப்பட்டுப் போகிறபோது. கொலை என்பது நிரூபிக்கப் படுகிறது. கொலைக்கான காரணங்களை ஆராய்வதும் விசாரணை வரம்புக்கு உட்பட்ட காரியமேயாகும். கொலைக்கான காரணங்களை ஆராயச் சொல்லித்தான் 'டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ்' தரப்பட்டது.

அறங்காவலர்களும், நிர்வாகிகளும் நடத்திய உண்டியல் திருட்டுக்கு சுப்பிரமணியப் பிள்ளை உடந்தையாக இல்லை. மாறாக மறுப்பு தெரிவிக்கிறார். அதனால் கொல்லப் படுகிறார். எனவே, சுப்பிரமணியப் பிள்ளை மரணத்திற்கான காரணங்களை விசாரிக்க வேண்டியது பால் அவர்களின் விசாரணை வரம்புக்கு உட்பட்டது. அவர் கண்டுபிடித்துத் தெரிவித்து இருக்கிறார். அந்த காரணங்களின் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்கவேண்டும், அறங்காவலர் குழுவினர் கோவில் நிர்வாகிகளாக இருப்பதால் நீக்கி வைக்கப்பட வேண்டும் என்பது தான் அந்த அறிக்கையின் முடிவான கருத்து.



காரணஸ்தர்களாலே தான் காரணம் ஏற்படுகிறது என்பதை மறந்து விடக்கூடாது. காரணம் அருபமானது. அதன் மீது நடவடிக்கை எடுக்க முடியாது. காரணஸ்தர்கள் உருவம் உடையவர்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொன்னால் அது எப்படி விசாரணை வரம்பை, டர்ம்ஸ் ஆப் ரெபரன்சை கடந்ததாக இருக்கும் என்பதை அரசு தான் விளக்கவேண்டும். எனவே, விசாரணை வரம்பு எதுவுமே மீறப் படவில்லை என்பது நான் தந்த இந்த விளக்கத்தின் மூலம் தெளிவுபடுகிறது.

நீதிபதி பால் தெரிவித்துள்ள முடிவான கருத்துக்கள் தெளிவாக இருக்கிறது. சுப்பிரமணியப் பிள்ளை கோவிலுக்கு வந்து சேரும் முன்பே உண்டியல்கள் திறக்கப்பட்டன. அதைக்கண்ட சுப்பிரமணியப் பிள்ளை எதிர்ப்பு தெரிவித்து, எண்ணிக்கையில் கலந்து கொள்ளாமல், அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப் போவதாகச் சொல்லிவிட்டு ஆய்வகம் சென்றுவிட்டார். அதன்பிறகு அவர் தாக்கப்பட்டு, அவருக்கு காயங்கள் விளைவிக்கப்பட்டன. அதன் விளைவாக அவர் உணர்வு இழந்தார். அவரது குரல்வளை நெறிக்கப்படுவதற்கான முயற்சிகள் கூட செய்யப்பட்டு இருக்கலாம். அவர் தற்கொலை செய்துகொண்டார் என்று தோன்றுமாறு செய்ய அவர் துவலைக் குழாயில் தொங்கவிடப் பட்டார் என்று சந்தேகிக்க ஆதாரங்கள் உள்ளன. சுருங்கச் சொன்னால், மரணம் விளைவிக்கக்கூடிய வன்முறை காரணமாக அவர் தன்னுடைய மரணத்தைச் சந்தித்தார் என்று நம்புவதற்குப் போதுமான ஆதாரங்கள் உள்ளன. இச்சம்பவத்தைக் கோவிலில் உள்ள ஊழியர்கள் மட்டுமே பார்த்து இருக்க முடியும். அவர்கள் சாட்சியம் தரமாட்டார்கள். அறங் காவலர் குழு இன்னும் செயல்பட்டுக்கொண்டு இருப்பதால் கமிஷன் முன்னிலையில் சாட்சியம் சொல்ல அஞ்சுவார்கள் என்ற 'ஆ' தரப்பினரின் வாதத்தை தள்ளிவிடமுடியாது. இச்சூழ்நிலையில் ஊழியர்கள் அறங்காவலர் குழுவைத் தற்காலிகமாக விலக்கியோ அல்லது நீக்கியோ வைத்தபிறகு, குற்றப்புலனாய்வுத் துறையின் குற்றப் புலனாய்வு பிரிவு போன்றதோர் தனிப்பட்ட குற்றப் புலனாய்வு அமைப்புகளால் முழுஅளவில் தீர ஆய்வு செய்யப்பட வேண்டும். அத்தகைய புலன் விசாரணைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப் படவேண்டும். அறங்காவலர் குழு விலகினால் தான் தேவஸ்தான ஊழியர்களும், மற்றவர்களும் இது பற்றி இன்னும் அதிகமாக விளக்கம் அளிக்க முன்வரலாம்.

நீதிபதியின் இந்த அறிக்கை தான் விசாரணை வரம்பை மீறுகிறது என்று அரசாணை குறிப்பிடுகிறது. மரணம் அடைந்த காரணத்தை, சூழ்நிலையைக் குறித்து விசாரணை நடத்தச் சொன்னீர்கள். அந்த நீதிபதி காரணத்தை அறிவித்து இருக்கிறார்கள். இத்தகைய நிகழ்ச்சி மீண்டும் நடக்காமல் இருப்பதற்குரிய நடவடிக்கைகளைப் பரிந்துரைக்கச் சொல்லியிருக் கிறீர்கள். அதைத்தான் அவர் பரிந்துரைத்துள்ளார்கள். நடந்த [illegible]

நிகழ்ச்சியில் எடுக்கும் நடவடிக்கைதான், இதுபோன்ற நிகழ்ச்சி மீண்டும் நடக்காமல் தடுப்பதற்கேற்ற பரிந்துரை என்று ஏன் நீங்கள் எண்ணிடத் தவறுகிறீர்கள் என்பதுதான் எனக்குப் புரியவில்லை. அரசின் சார்பிலே எழுப்பப்பட்டுள்ள மறுப்புக் கருத்துகள் இந்த அவையில் வைக்கப்பட்டுள்ளன. அவைகள் அனைத்தும் ஏற்கெனவே விசாரணை கமிஷனிலே வழக்கறிஞர் விருத்தாசலம் ரெட்டியார் அவர்களால் 'அ' தரப்பிற்காக வாதக்கப்பட்டு, நீதிபதியால் ஏற்றுக்கொள்ளப்படாத அந்தக் கருத்துக்களைத்தான் நீங்கள் மீண்டும் அரசு அறிக்கையாக அதாவது விருத்தாசலம் ரெட்டியாரின் அந்தக் கருத்துக்களை அந்த வாதங்களை இங்கே அச்சடித்து வைத்து இருக்கிறீர்கள் என்று நான் கூறவிரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

'அ' தரப்பை மட்டும் விசாரித்தது கமிஷன், 'ஆ' தரப்பை விசாரிக்கவில்லை. இது அரசு ஆணையிலே நீங்கள் சுட்டிக் காட்டியுள்ள ஒரு குற்றச்சாட்டு. நான் முதலிலேயே சொல்ல விரும்புகிறேன். 'ஆ' தரப்பை விசாரிக்க வேண்டுமென்று 'அ' தரப்பு வழக்கறிஞர்களால் கோரப்படவே இல்லை என்பது தான் இதற்கு நான் அளிக்கின்ற பதிலாகும்.

பொதுவாக ஒரு வழக்கிலே இரண்டு வழிகள் உண்டு, ஒன்று தன்து தரப்பில் கண்கண்ட அதாவது 'ஐ' விட்னஸ் சாட்சிகளை யும், சூழ்நிலை அதாவது 'சர்கம்ஸ்டன்ஷியல்' சாட்சிகளை விசாரிப்பது. இது 'பாசிடிவ் மெதடு'. அடுத்து மாற்றுத் தரப்பு சாட்சியங்களை குறுக்கு விசாரணை செய்து அவர்களது கூற்றைப் பொய்யாக்குவது. இது நெகடிவ் மெதேடு. இந்த இரண்டாவது முறை நெகடிவ் மெதேடுதான் இந்த விசாரணையிலே கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. மேலும் 'அ' தரப்பினர் 'ஆ' தரப்பு சாட்சிகளை விசாரிக்க வேண்டுமென்று கூறவே இல்லை.

அது மட்டுமல்ல. சுப்பிரமணிய பிள்ளை பணத்தை திருடி அது கண்டுபிடிக்கப்பட்டவே மானத்துக்கு அஞ்சி தற்கொலை செய்துகொண்டார். அதற்கான நேரடி சாட்சிகள் என்று சொல்லிக்கொள்கின்றவர்கள், அதை உண்மை என்று கூறும் காவல் துறையினர்தான். சுப்பிரமணிய பிள்ளை கொலை செய்யப்படவில்லை. தற்கொலை செய்துகொண்டார் என்று திட்டவட்டமாக நிரூபிக்க வேண்டியவர்கள் அவர்கள். மேலும் கொலை செய்யப்பட்டார் என்று கூறுபவர்களுக்கு புலன் விசாரணை செய்ய உரிமை இல்லை, வசதி இல்லை. அவர்கள் எதிர் தரப்பினரை குறுக்கு விசாரணை செய்து, சுப்பிரமணிய பிள்ளை தற்கொலை செய்யவில்லை என்று நிரூபித்து காட்டினாலே போதும். அதைதான் அவர்கள் செய்திருக்கிறார்கள், எனவே இதில் 'அ' தரப்பினர் விசாரிக்கப்படவில்லை என்று



கூறுவது அவர்களை விசாரிக்குமாறு 'ஆ' தரப்பினர் கோரவில்லை என்ற பதில் மூலம் அடிபட்டுப் போகிறது என்பதை நான் இந்த அவையிலே எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு ஆணையில் இரண்டாவதாகக் கூறப்படுவது, 'எச்.ஆர். அண்டு சி. இ. கமிஷனரின் உதவியாளர் அர்ச்சுனன் என்பவர் சாட்சியத்திற்கு கமிஷன் முக்கியத்துவம் அளித்துள்ளது. அவர் 'சுப்பிரமணிய பிள்ளை எளியவர் என்றும் அவர்மீது எந்த புகாரும் கிடையாது என்றும் கூறியுள்ளார். ஆனால் அதே அதிகாரியான அர்ச்சுனன் சுப்ரமணிய பிள்ளை பற்றி வந்த புகார் குறித்து அவரிடமே விசாரித்த சம்பவங்கள் பற்றிய அறிக்கைகள் அரசிடம் உள்ளன என்று பின்னால் கூறியிருக்கிறார்.'' இது நீங்கள் இங்கே வைத்திருக்கிற அரசு ஆணையில் அச்சிடப் பட்டிருக்கிறது. நான் கேட்க விரும்புகிறேன். அப்படியானால் அரசிடம் இருக்கிற அந்த அர்ச்சுனனுடைய அறிக்கைகளை ஏன் விசாரணை நடைபெற்ற நேரத்தில கமிஷன் முன்வைக்க வில்லை. எனவே அர்ச்சுனன் கூறியதை சொல்லப்படவில்லை. எல்லாம் அவர்கள்மீது எந்த புகாரும் இல்லை என்று முதலிலே நீதிபதி பால் கமிஷன் முன்னால் சொன்ன எச்.ஆர்.அண்ட் சி.இ., கமிஷனர் உடைய உதவியாளர் அர்ச்சுனன் பிறகு 'இப்படிப்பட்ட புகார்கள் அவர்மீது உள்ளன' என்று விசாரணை முடிந்த பிறகு சொல்கிறார் என்றால் இது 'ஆஃப்டர் தாட்' அதற்குப் பிறகு அர்ச்சுனனை கசக்கிப் பிழிந்து ஆரம்பத்தில இப்படிப்பட்ட ஒரு மறுப்பு அறிக்கையை வைத்துக்கொள்கிற அளவுக்கு தேவை யற்ற முறையற்ற ஒரு தன்மையில் ஒரு நடவடிக்கை அமைச்சர் மூலம் நடைபெற்றிருக்கக்கூடும் என்ற ஐயப்பாட்டைத்தான் இது உறுதிபடுத்துகிறதே அல்லாமல் வேறு அல்ல.

மூன்றாவதாகச் சொல்கிறார்கள். எச்.ஆர். அண்ட் சி.இ., கமிஷன் கலெக்ட செயலாளரையும் கமிஷனரையும் விசாரித்த கமிஷன் ரையோ காவல்துறை அதிகாரிகளையோ ஏன் விசாரிக்கவில்லை என்று அரசு கேட்கிறது. எச்.ஆர். அண்ட் சி.இ., செயலாளரை யும் கமிஷனரையும் சாட்சியமாக அழைக்க வேண்டுமென்று கமிஷன் விரும்பவில்லை. அதற்கு மாறாக 'ஆ' தரப்பு தற்கொலை அல்ல என்று வாதாடுகின்ற தரப்பிலே உள்ள இரணியல் ஏன்றோ போன்ற வழக்கறிஞர்கள் கொடுத்த மனு மீதுதான் ஆணை பிறப்பிக்கப்பட்டு எச்.ஆர். அண்ட் சி.இ., செயலாளரும் கமிஷனரும் விசாரிக்கப்பட்டிருக்கிறார்கள். கலெக்டரையோ காவல்துறை அதிகாரிகளையோ விசாரிக்க வேண்டுமென்று 'அ' தரப்பு வழக்கறிஞரான விருத்தாசலம் அவர்களோ அரசாங்க வழக்கறிஞரான பத்மினி ஜேசுதுரையோ கமிஷனைக் கேட்டிருக்கலாம். அவர்கள், கேட்கவில்லை. எனவே, அரசு ஆணையிலே எடுத்து வைத்திருக்கிற இந்த வாதமும் பொருந்தாத வாதம் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மேகநாதன் அவர்களுடைய உறுதிமொழிப் பத்திரத்தையும் குறுக்கு விசாரணையின்போது அவர்கள் அளித்த 'சஜஷன்'களையும் முரண்பாடு உள்ளவை என்று நீதிபதி கூறியதை அரசு தரப்பு தனக்கு ஆதரவாக எடுத்துக்காட்டுகிறது. ஆனால் நீதிபதி பால் மேகநாதன் அவர்களுடைய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாமல்தான் தன்னுடைய முடிவுகளை வழங்கியிருக்கிறார். மேகநாதன் அவர்களுடைய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாத பால் அவர்கள் இப்படிப்பட்ட ஒரு முடிவை அறிவித்திருப்பதிலிருந்து மேகநாதன் அவர்களுடைய கருத்துக்களை கண்ணை மூடிக்கொண்டு ஏற்றுக்கொள்ளவில்லை என்ற அவர்களுடைய நடுநிலைத்தனம்தான் இதிலே புரிகிறதே அல்லாமல் நீதிபதி பால் குறையுடையவர் அல்ல என்பதை நான் இந்த பதில் மூலம் அரசுக்கு எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

உண்டியல் திருடப்பட்டதை சுப்பிரமணிய பிள்ளை உடனடியாக ஏன் மேலதிகாரிகளுக்கு தந்தி மூலமோ தொலைபேசி மூலமோ தெரிவிக்கவில்லை? இது அரசாங்கத்தினுடைய கேள்வி, அதற்கு நான் சொல்கிற ஒரே பதில் உயிரோடு இல்லாத ஒரு மனிதர் எப்படி தெரிவிக்க முடியும் என்பதுதான். அதுமாத்திரமல்ல. சாவதற்கு முன்புகூட அவருக்கு தொலைபேசியில் பேச இடம் கொடுத்திருக்க மாட்டார்கள். ஒருவேளை அவர் ரிப்போர்ட் எழுதிக்கொண்டிருந்திருக்கலாம் ஆய்வகத்திலே அமர்ந்து. கொலை செய்யப்பட்டதை ஒட்டி எப்படி அவருடைய டைரியும் அவருடைய எழுதுகோலும் திருடப்பட்டதோ அதைப் போல அவர் எழுதிய ரிப்போர்ட்டும் திருடப்பட்டிருக்கலாம். எனவே இந்தச் சம்பவம் இந்த அரசுக்கு உள்ளத்திலே தோன்றவில்லையா? வேண்டுமென்றே தொலைபேசியிலே தெரிவிக்கவில்லை என்று ஒரு புதிய வாதத்தை எடுத்து வைத்து நீதிபதி பால் அவர்கள் அளித்திருக்கின்ற ஒரு முடிவுக்கு மாறாக ஒரு புதிய தீர்ப்பை வழங்கவேண்டிய அவசியம் இந்த அரசுக்கு எப்படி ஏற்பட்டது என்பதுதான் எனக்குப் புரியவில்லை,

மிக முக்கியமான ஒன்றைச் சொல்கிறார்கள். உதவி இயக்குநர் ராமன் பிரச்சினைக்குரிய அந்த வேட்டி தொங்கவிடப் படுவதற்கு பயன்படுத்தப்பட்டிருக்க முடியும் என்ற கருத்துக்களை வழங்கியுள்ளார். ராமன் என்ற உதவி இயக்குநர் தந்துள்ள சாட்சியத்தில் முதல் பகுதியிலே உள்ள 4 வரிகளை மாத்திரம் எடுத்துப்போட்டு ஒரு அரசு மற்ற வரிகளை எல்லாம் மூடி மறைத்து வாதம் செய்வது நியாயம்தானா என்று நான் கேட்க விரும்புகிறேன். அவர் சொல்கிறார் தொங்கவிட இது பயன் படுத்தப்பட்டிருக்க முடியும் என்று சொல்கிறார். தொங்கவிட என்ற அந்தச் சொல்லை ஆழ்ந்து கவனித்தால் ஒரு பிணத்தை தொங்கவிட என்று ஏன் நாம் எடுத்துக் கொள்ளக்கூடாது? ராமன் அவர்கள் சொன்னதில் முதல் வரியை மாத்திரம் எடுத்துக் கொண்டார்கள். ஆனால் ராமன் மேலும் என்ன தெரிவிக்கிறார்? அதே பேராகிராஃபிலே அதே பகுதியிலே அடுத்து என்ன



சொல்கிறார்? மடிக்கப்பட்டிருந்த வேட்டியின் நீளம் மிகவும் குட்டை என்றும் எந்த முனையிலும் ஒரு முடிச்சுப்போட மட்டுமே பயன்படுத்தி இருக்க முடியும் என்றும் அவ்வாறு போடுவதற்குக் கூட சாமர்த்தியம் வேண்டும் என்றும் 7 அடி 6 அங்குலம் உயரத்திலே உள்ள ஒரு குழாய் மீது ஒருவர் தொங்குவதாகக் கற்பனை செய்து பார்த்தால் அவர் அனேகமாக குழாயின் உயரத்திற்குத் தானே எம்பித்தான் அவ்வாறு செய்ய வேண்டி இருந்திருக்கலாம். அந்த வேட்டியைக் கொண்டு இறந்த சுப்பிரமணிய பிள்ளை போன்ற தடித்த கழுத்தை உடைய பருமனான ஒருவர் முதலிலே சுருக்கு வளையம் போட்டுக் கொண்டு கழுத்தைச்சுற்றி பின்னால் சுருக்கிட்டுக்கொண்டு தானே தொங்குவது என்பது மிகவும் கடினமானதாகும் என்று ராமன் தெரிவித்துள்ளார். அந்த ராமனுடைய திட்டவட்டமகத் சாட்சியத்திலே உள்ள பிற்பகுதி அனைத்தையும் விட்டுவிட்டு முற்பகுதியிலே தொங்கவிட அது பயன்பட்டது என்ற இரண்டு வரிகளை மாத்திரம் எடுத்து கையாண்டு ஒரு அரசு ஆணையின் மூலமாக நீதிபதி பால் தெரிவித்திருக்கின்ற ஒரு நல்ல தீர்ப்பினை மறைக்க முயல்வது தேவைதானா என்று இந்த அரசை நான் கேட்க விரும்புகிறேன்.

பிணப் பரிசோதனை நடத்திய டாக்டர் ராமமூர்த்தி பிரச்சினையிலே உள்ள வேட்டி தன்னைத் தூக்கிட்டுக்கொள்ள இறந்து போனவரால் பயன்படுத்தப்பட்டிருக்க முடியும் என்று உறுதியாகக் கூறியுள்ளார் என்றும் அரசாங்கத்தினுடைய அறிக்கை கூறுகிறது. டாக்டர் ராமமூர்த்தி பிணப் பரிசோதனை செய்ய மறுத்தவர். வேட்டி பற்றிக் கருத்துக்கூற அவருக்குத் தகுதி இல்லை. வேட்டியைப் பற்றி ராமமூர்த்தி சொன்னதைப் பெரிதாகத் தங்களுக்கு அனுசரணையாக அரசு எடுத்துக்கொண்டு இங்கே அச்சியற்றி வைத்திருக்கின்றது. ஆனால் அந்த வேட்டி பற்றி நீதிபதி பால் என்ன கூறுகிறார் என்பதைக் கவனிக்க வேண்டாமா? வேட்டியை நீதிமன்றத்திலே வெளிப்படையாக அளந்து பார்த்ததில் 352 சென்டிமீட்டர் நீளம் இருந்தது. டாக்டர் ராமமூர்த்தி அவர்களுடைய சாட்சியத்தில் சுப்பிரமணிய பிள்ளையினுடைய உடலை சவப் பரிசோதனைக்காக தனியிடத்திலே கொண்டுவந்தபோது அதிகாரி தானே தூக்கிட்டுக் கொண்டதாகச் சொல்லப்படும் வேட்டியைக் கொண்டுவரவில்லை என்றும் அதாவது பிரேதத்தைக் கொண்டுவரும்போது பிரேதப் பரிசோதனைக்கூடத்திலிருந்த ராமமூர்த்தியினிடத்தில் அதிகாரியுடைய அந்த வேட்டி கொண்டுவரப்படவில்லை என்றும் அதைப்பற்றி சப் இன்ஸ்பெக்டரிடம் ராமமூர்த்தி கேட்டபோது அந்த வேட்டி ரத்தக்கறை படிந்ததாக இருந்ததால் அது கொண்டுவரப்படவில்லை என்று உதவி சப்இன்ஸ்பெக்டர் அவரிடத்திலே கூறியதாகவும் உடனடியாக வேட்டியைக் கொண்டு வருவதாகவும் கூறி இருந்தார், ஆனால் அது கொண்டுவரப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். டாக்டர் ராமமூர்த்தி சம்பவம் நடந்த

இடத்தை 27-11-80 அன்று பார்வையிட்டார். அப்போது வேட்டியை அளந்து 330 செண்டி மீட்டர் நீளம் இருந்ததைத் தன்னுடைய சவப் பரிசோதனைக் குறிப்பில் எழுதி வைத்ததாகக் கூறுகிறார்.

எனவே மேற்படி சாட்சியத்திலிருந்து இறந்து போனவர் தூக்கிட்டுக் கொண்டதாகச் சொல்லப்படுகிற வேட்டி முதலிலே இரத்தக்கறை படிந்தது என்று கூறப்பட்டதாகத் தெரிகிறது.

[முற்பகல் 10.00]

டாக்டர் இராமமூர்த்தி தன்னிடத்திலே காண்பிக்கப்பட்ட வேட்டியில் எந்தவிதமான கறையும் இல்லை என்று தெரிவித்திருக்கிறார். எனவே கமிஷனிடம் கொடுக்கப்பட்ட வேட்டி, வேறு ஒரு வேட்டிக்குப் பதிலாக கொண்டு வரப்பட்ட வேட்டி என்று நம்புவதில் நியாயம் இருக்கிறது என்று நீதிபதி பால் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அந்த வாதங்களை எல்லாம் மறைத்து விட்டு, ஒரு வாசகத்திலே ஒரு பகுதியை மாத்திரம் வெட்டி எடுத்து, வேண்டும் என்றே அறங்காவலர்களை பாதுகாக்க அரசு முயற்சித்திருப்பதை நான் மிக மிக வன்மையாக கண்டிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

டாக்டர் கோபாலகிருஷ்ணன் அவர்களின் சாட்சியத்தைப் பற்றியும், டாக்டர் கோபாலகிருஷ்ணன் அவர்கள், இராமமூர்த்தியை விட கெட்டிக்காரர் அல்ல என்றும் அரசு வாதிட்டு இருப்பதற்கு மாறாக, நீதிபதி பால் அவர்கள் டாக்டர் கோபாலகிருஷ்ணன் அவர்கள் எவ்வளவு திறமை படைத்தவர் என்பதையும், எவ்வளவு காலம் அந்தத் துறையிலே அனுபவம் உள்ளவர் என்பதையும், ஏறத்தாழ 8,000 பிணங்களை பரிசோதனை செய்தவர் இராமமூர்த்தி என்றால், 14,000க்கு மேற்பட்ட பிணங்களை பரிசோதனை செய்து அதனுடைய முடிவுகளை அனுப்பியவர் கோபாலகிருஷ்ணன் என்பதையும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். எனவே, இதிலே நான் அதிகமாகச் சென்று விவரிக்க விரும்பவில்லை நேரம் இல்லாத காரணத்தால்.

அரசு அறிக்கையில் ஒரு முக்கியமான விஷயம், பக்கம் 27 பேரா 23ல் டாக்டர் இராமமூர்த்தி, அடிபட்ட காயம் சுப்பிரமணியப் பிள்ளையின் உடல் மீது எதுவுமே இல்லை என்று அழுத்தந்திருத்தமாக சாட்சியம் கூறியிருக்கிறார். இது அப்பட்டமான உண்மைக்கு மாறாக எடுத்து வைக்கப்பட்ட கருத்து. நீதிபதி பால் அவர்களுடைய அறிக்கையில் பக்கம் 64ல், "சாவு குறித்து பின் ஆய்வு செய்யப்பட்டபோது, தலையில் காணப்பட்ட 3 காயங்களும் சுப்பிரமணியப்



பிள்ளை அவர்கள் இறப்பதற்கு முன்பாக ஏற்பட்டிருக்க வேண்டும் என்று இராமமூர்த்தி விளக்கமாக கூறியுள்ளார்" என்று நீதிபதி பால் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்த உண்மையை அரசு மறைக்க வேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டது என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அறங்காவலர் குழுவைக் கலைக்க வேண்டும் என்றால், அறநிலையத்துறை சட்ட விதிகளின்படிதான் நடவடிக்கை எடுக்க வேண்டும். கமிஷன் அளித்த தீர்ப்பின் முடிவை மாத்திரம் அடிப்படையாக வைத்து நடவடிக்கை எடுக்க முடியாது என்று விவாதிக்கும் அரசு, இதற்கு சான்றாக, இஸ்மாயில் கமிஷன் அறிக்கையில், மனோகரன் என்ற அதிகாரியின் மீது, கமிஷனின் முடிவின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு, பின்னர், அவர் தமது முறையீட்டை கேட்காமல் கமிஷன் எடுத்த முடிவுகளின்படி நடவடிக்கை எடுத்தது தவறு என்று வாதாடி வெற்றி பெற்றதைச் சான்றாக கொடுக்கிறார்கள் அரசு குறிப்பிலே.

நான் இங்கே குறிப்பிட விரும்புவது எல்லாம், மனோகரன் என்ற அதிகாரி இஸ்மாயில் கமிஷன் முன்னால் வந்து அவருடைய முறையீட்டைச் சொல்ல வாய்ப்பு இல்லை என்று எடுத்துக் கூறி, இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டார், வழக்குத் தொடுத்தார். ஆனால் இங்கே நிலைமை என்ன? அறங்காவலர் குழுத் தலைவர் பாலகிருஷ்ணனுக்கோ, அல்லது மற்றவர்களுக்கோ அப்படி வாய்ப்பு, நீதிபதி பால் கமிஷன் முன்னாலே அளிக்கப்படவில்லையா என்றால், நிரம்ப அளிக்கப்பட்டிருக்கிறது. மனோகரனுக்கோ தனது கருத்தைச் சொல்லி வாய்ப்பு அளிக்கப்பெறவில்லை. எனவே இஸ்மாயில் கமிஷனுக்கு எதிராக மனோகரன் என்ற அதிகாரி தனது கருத்தை தெரிவித்தார். ஆனால் இங்கே, அறங்காவலர் குழுவில் உள்ள தலைவர் களுக்கும், மற்றவர்களுக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த வேறுபாட்டை உணராமல், அரசு அறிக்கையிலே இப்படி கூறப்பட்டிருப்பதற்காக நான் என்னுடைய கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பால் கமிஷன் குற்றவாளிகள் யார் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்பது அரசாங்கத்தினுடைய வாதம், குற்றமே நடைபெறவில்லை என்றோ, அல்லது கொலையே நடைபெற வில்லை என்றோ நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுவரையில் இங்கே வாதிக்கவில்லை. அதுவரையில் அவர்களுக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களைப்போல, அவர் இந்தக் கோலைக்கு உள்ளே சென்று கொலையா, தற்கொலையா என்று விவாதித்து தமது முடிவை அறிவிக்கவே இல்லை. ஆனால் சந்தேகத்தை பல நேரங்களில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எழுப்பியிருக்கிறார்கள், பால் கமிஷன்

குற்றவாளி யார் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லையே என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கிடையே குற்றவாளிகளை கைது செய் என்று கேட்கிறீர்களே என்று எதிர்க்கட்சிகளை (எல்லாக் கட்சிகளையும் சேர்த்து)— அவர் பல நேரங்களில் கேட்டிருக் கிறார்கள்.

ஆனால் பால் கமிஷனின் அறிக்கையில் "சாட்சியங்களின் நிலைமை" என்ற தலைப்பில் 44, 45 ஆகிய பக்கங்களில் குற்ற வாளிகள் குறிப்பிட்டுக் காட்டப்பட்டிருக்கிறார்கள். 45 ஆம் பக்கத்திலே ஒரு பகுதியிலே என்ன சொல்லியிருக் கிறார்கள் என்றால் "சரி பார்ப்பு அதிகாரிக்கு உடனடியாக அவர்கள் முதலுதவி அளிக்கவோ, அவருக்கு மூக்கு செய்யவோ, சிகிச்சை அளிக்கவோ முன் வரவில்லை என்றும், ஏனென்றால் அவருக்கு மூச்சு வந்து, உணர்வு வந்தால், அவர் களுக்கு எதிராக மரண வாக்கு மூலம் கொடுக்கக் கூடும். என்று அவர்கள் அச்சப்பட்டார்கள் என்றும் "ஆ" தரப்பின் வழக்கறிஞர்கள் கூறிய வாதத்திற்கு. இவர்களின் விசித்திரமான போக்கு ஆதரவாகிறது" என்று நீதிபதி பால் அவர்கள் குறிப் பிட்டிருக்கிறார்கள்.

அந்த அவர்கள் யார்? அவர்களுக்கு எதிராக மரண வாக்கு மூலம் சுப்பிரமணிய பிள்ளை கொடுப்பார்களோ என்று அஞ்சினார்களே அந்த அவர்கள் யார்? 44வது பக்கத்திலே குறிப்பிடுகிறார்கள். அந்த ஆய்வகத்தில் இருந்தவர்கள் யார் யார் என்று குறிப்பிடுகிறார்கள். அங்கே யார் யார் இருந்ததாகச் சொல்கிறார்கள் 44வது பக்கத்தில்? டாக்டர் பாலகிருஷ்ணன், சீனிவாச பாண்டியன், கோவில் சூப்பரின்டென்டென்ட் காமதவன், நிர்வாக அதிகாரி ராஜாராம், கேசவ ஆதித்தன் ஆகியோர் இருந்திருக்கிறார்கள் என்று நீதிபதி பால் அவர்கள் 44வது பக்கத்தில் குறிப்பிடுவதிலிருந்து குற்றவாளிகள் யார் என்று இன்னும் அரசாங்கத்திற்குத் தெரியவில்லை என்றால் நான் உள்ளபடியே வேதனைப்படுகிறேன். தெரிந்தும் தெரியாத தைப்போல் நீங்கள் இருக்கிறீர்களா என்று நான் உங்களிடம் கேட்கவிரும்புகிறேன்.

பால் கமிஷனுடைய அறிக்கை வெளியிடப்பட்டு,— அவையில் வைக்கப்படுவதற்கு முன்பு என்னால் வெளியிடப்பட்டது என்பதையொட்டி நீங்கள் எடுத்திருக்கிற நடவடிக்கைகளில் பாதி நடவடிக்கைகளாவது, ஒரு கால் பகுதி நடவடிக்கைகளாவது இந்தக் கொலைகாரர்களைக் கண்டு பிடிக்க, கொலைகாரர்களை கைது செய்ய அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்க இந்த அரசு எடுத்துக்கொண்டதா என்றால் இல்லை. பால் கமிஷன் அறிக்கையை முன்கூட்டியே வெளியிட்டதை ஒரு பெரிய குற்ற மாகக் கருதி — நான் அதை வெளியிட்ட காரணங்களை, கருத்துக் களைப் பற்றி இங்கே விமர்சிக்க விரும்பவில்லை. சண்முக



நாதன் கைது செய்யப்பட்டார். சதாசிவம் என்ற ஒரு அதிகாரி கைது செய்யப்பட்டார், கைது செய்யப்பட்டது மாத்திரமல்ல. அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. அந்த இரண்டு அதிகாரிகளும் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக் கிறார்கள். எந்தளவிற்கு அதனால் அவர்கள் இழப்பிற்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதை மறந்து விடக்கூடாது.

எனது நேர்முக உதவியாளர் சண்முகநாதனின் அடிப்படைச் சம்பளம் ரூ. 950. டியர்னஸ் அலவன்ஸ் ரூ. 239, எச். ஆர். ஏ. ரூ. 165. சிட்டி காம்பன்ஸேட்டரி அலவன்ஸ் ரூ. 90, ஸ்பெஷல் பே ரூ. 325. கன்வேயன்ஸுக்காக ரூ. 80. ஆகமொத்தம் ரூ. 1849 மாதந்தோறும் பெறவேண்டிய என் நேர்முக உதவி யாளர் சண்முகநாதனுக்கு இப்போது கிடைக்கிற தொகை எவ்வளவு என்றால் இந்த எச். ஆர். ஏ., ஸி. ஸி. ஏ., ஸ்பெஷல் பே, கன்வேயன்ஸ் இவையெல்லாம் ரூ. 660 இனிமேல் வழக்கு நடைபெற்று அந்த வழக்கில் சண்முகநாதன் விடுதலை பெறுகிற அந்தக் காலம் வரையில் இந்த ரூ. 660 மாதந்தோறும் அவர் இழக்க நேரிடுகிற பணமாகும். அதை மறந்து விடக்கூடாது. மீதமுள்ள அடிப்படைச் சம்பளம் ரூ. 950ல் பாதிச் சம்பளம்தான் ரூ. 475 தான், மற்றச் சலுகைகள் டி. ஏ. போன்றவைகள் எல்லாம் ரூ. 239, ஆக ரூ. 714 ரூபாய்தான் இந்த ரூ. 714ல் ஏற்கனவே கல்யாணம் போன்றவற்றிற்கு பட்டிருக்கிற கடனுக்குக் கழித்தது போக என் நேர்முக உதவி யாளர் சண்முகநாதனுக்குக் கிடைக்கிற சம்பளம் ரூ. 208 தான். எனவே இப்படிப்பட்டதொரு நிலையே சென்னையில் குடும்பம் நடத்துகிற சண்முகநாதனுக்கோ அல்லது சதாசிவம் என்ற அதிகாரிக்கோ ஏற்படுத்த வேண்டும் என்று இந்த அரசாங்கத்திற்கு யாராவது ஆலோசனை கூறியிருப்பார்களே யானால் அப்படி ஆலோசனை கூறியவர்களுடைய குடும்பம் உருப்படுமா என்பதை மாத்திரம் தயவுசெய்து எண்ணிப் பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். சண்முக நாதன் மீது வழக்கு தொடரப்பட்டு கைது செய்யப்பட்டது மாத்திரமல்ல. எதிர்க் கட்சித் தலைவர் என்ற முறையில் எனக்கு தரப்பட்டிருந்த இரண்டு டைப்ரைட்டிங் மெஷின்களைக் கூட இந்த அரசு, அரசாங்கத் துறை இந்த அவையினுடைய செயலாளர் மூலமாக கேட்டுப்பெற்றுக்கொண்டார்கள்— பிடுங்கிக் கொண்டார்கள் என்று சொல்லமாட்டேன் — கேட்டுப் பெற்றுக் கொண்டார்கள். இரண்டு டைப்ரைட்டிங் மெஷின்களை, அவைத் தலைவர் அவர்களே, உங்களுக்குத் தான் சொல்கிறேன், எதிர்க்கட்சித் தலைவர் இரண்டு டைப்ரைட்டிங் மெஷின்களைக் கூட பயன்படுத்த முடியாமல் பால் கமிஷன் அறிக்கையை வெளியிட்டதன் விளைவாக அதைக் கூட இந்த அரசு பறித்துக்கொண்டிருக்கிறது. அந்தளவிற்குக் கடுமையான நடவடிக்கைகள் — முரசொலி செல்வத்தை ஏதோ பெரிய பயங்கரவாதியைப்போல், கட்டபொம்மன் போல்,

அல்லது மருது பாண்டியர்கள் போல் அல்லது கம்யூனிஸ்ட் இயக்கத்தில் மிக பெரும் தலைவர்கள் அண்டர் க்ரவுண்டில் செல்வார்கள் என்று சொல்வார்களே அதைப்போல் அவர் சென்று விடுவார் என்பதுபோல முரசொலி செல்வத்தை வீட்டில் வந்து கைது செய்வதற்குப் பதிலாக விமான நிலையத்திற்குச் சென்று எங்கே விமானத்தில் ஏறி வெளிநாட்டுக்கு ஓடிவிடுவார் என்று பயந்தோ என்னவோ — அப்படி டிக்கட் வாங்கியிருக்கிறாரா என்பதைக் கூட ஆராயாமல் விமான நிலையத்தில் போலீஸ் உடுப்பு அணியாதவர்கள், சாதாரண உடுப்பில் சென்றவர்கள் திடீரென்று சுற்றி காரிலே ஏற்றி, அங்கே சென்றிருந்த பெண்மணிகளை, என்னுடைய வீட்டார் யாரோ என்று தெரியாமல் தடுத்த நேரத்தில் அவர்களை அடித்து வீழ்த்தி அவர்களுக்கும் காயங்கள் உண்டாக்கி கேவலப்படுத்துகிற அளவிற்கு, சண்முகநாதன், சதாசிவம் என்ற அதிகாரி, முரசொலி செல்வம் இவர்களை பால் கமிஷன் அறிக்கை வெளியிட்ட காரணத்தை யொட்டிய சூழ்நிலையில் இந்தப் பாடுபடுத்தியிருக்கிற இந்தஅரசு பால் கமிஷனிலே வந்திருக்கின்ற இந்த உண்மைகளின் அடிப்படையிலே நடவடிக்கை எடுக்க ஏன் தயக்கம் என்பதுதான் என்னுடைய கேள்வியாகும்?

(முற்பகல் 10-10)

எப்படி அதிகாரிகள் எல்லாம் இருக்கிறார்கள்? இங்கே பேசிய போது அருமை நண்பர் சங்கரய்யா அவர்கள், நம் அருமை நண்பர்கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்கள், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சுந்தரராஜன் அவர்கள், நெடுமாறன் அவர்கள், குமரி அனந்தன் அவர்கள், ஆண்டித் தேவர் அவர்கள் விஜய ராகவன் அவர்கள் இப்படி எல்லாக் கட்சியைச் சார்ந்த தலைவர்களும் எடுத்துச் சொன்னார்கள். அதிகாரிகள் எந்த அளவிற்கு தவறாக நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதிலும் அருமை நண்பர் நெடுமாறன் அவர்கள் பேசும்போது, அன்றைக்கே தான் 80 ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 18 ஆம் தேதி திருச்செந்தூருக்குச் சென்றதாகவும், உடனடியாக கோவில் அதிகாரிகள் வைத்திருக்கின்ற ரெக்கார்டுகளையும், ரெவின்யூ துறையைச் சார்ந்த அதிகாரிகள் வைத்திருக்கின்ற ரெக்கார்டுகளையும், அறங்காவல் துறையிலே உள்ளவர்கள் ரெக்கார்டுகளையும், போலீஸ் அதிகாரிகள், மருத்துவத் துறையினர் ரெக்கார்டுகளையும் அரசாங்கம் கைப்பற்ற வேண்டுமென்று சொன்னதாகவும், அந்தக் காரியங்கள் நடைபெறவில்லை என்றும் சொன்னார்கள்.

ஜகந்நாத ஆழ்வார் என்ற தாசில்தார் இன்னொரு குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறார். அதைப் பாருங்கள். கொலையை மறைக்க எந்த அளவிற்கு அதிகாரிகள் பயன்படுத்தப் பட்டிருக்கிறார்கள் என்பதற்காகச் சொல்கிறேன்.



'Jagannatha Alwar Tahsildar and Executive Magistrate, Tiru chendur (from) to the Assistant Director of Regional Forensic Science Laboratcry, Madurai Medical College Buildings, Tirunelveli-2." எழுதுகிறார். என்ன எழுதுகிறார் தெரியுமா?

'The Inspector of Police, Tiruchendur has reported that the deceased Shri Subramania Pillai of Eraniel village has comitted suicide by consuming poison. The body of the deceased was examined by the Medical Officer, Tirunelveli in TNC. No. 225/80 dated 27.11.80 and he has preserved the vicera for chemical analysis. The vicera of the deceased is sent through the Police constable 995,

ஆக அவர் விஷம் சாப்பிட்டு தற்கொலை செய்து கொண்டார் என்கிற அளவிற்கு கதையை ஜோடிப்பதற்கு அதிகாரிகள் பயன்படுத்தப் பட்டிருக்கிறார்கள். அதிகாரிகள் அதற்கு முன் வந்திருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் அறங்காவலர்கள் குழுவைக் கலைக்க வேண்டுமென்று சொல்லுகின்ற நேரத்திலே, அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்திலே, கொலைக் காரர்கள் மீது கிரிமினல் குற்ற வழக்கு தொடுத்து, கைது செய்ய வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்கின்ற நேரத்திலே, என்னைப் பார்த்து திருப்பிக் கேட்பார்கள். நீ ஆட்சி நடத்தினாயே, இப்படிப்பட்ட நடவடிக்கை எடுத்தாயா? என்று. நேற்றைக்கு நெடுமாறன் அவர்கள் பேசுகின்ற நேரத்திலேகூட, அருமை நண்பர் வீரப்பன் அவர்கள் பழைய உதாரணங்களையெல்லாம் எடுத்துச் சொல்ல இருக்கிறேன் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள்.

நான் முதலமைச்சர் அவர்களைப் பார்த்து கேட்க விரும்புகிறேன். அவர்கள் இங்கே இப்போது இல்லாவிட்டாலும், தன் அறையிலே இருந்து கேட்டுக் கொண்டிருப்பார்கள் என்பதற்காகச் சொல்கிறேன். பாளையங்கோட்டையில் நடந்த ஒரு சம்பவத்திற்கு கோதண்ட ராமராஜன் என்ற நீதிபதி விசாரணை வைத்து 4 போலீஸ் காவலர்கள், இரண்டு தலைமைக் காவலர்கள், இன்ஸ்பெக்டருடைய மகன்கள் இருவர் மீது வழக்கு தொடர்ந்து, அவர்கள் தண்டனை பெற்று, வேலையிலிருந்து நீக்கப்படுகிற அளவிற்கு நடவடிக்கை எடுத்த கருணாநிதிதான் நம்முடைய முதலமைச்சர் எம். ஜி. ஆரைப் பார்த்து, இந்த நடவடிக்கையை இப்போது மேற்கொள்ளுங்கள் என்று கேட்கிறானே அல்லாமல் வேறல்ல. இளைஞர் ஆஸ்டல் சம்பவத்தின்மீது நீதிபதி குப்பண்ணன் விசாரணை அமைத்து, அவர் அறிக்கையைப் பெற்று, அந்த அறிக்கைக்கு எதிர் அறிக்கை வைக்காமல், அந்த அறிக்கையின்படியே போலீஸ் அதிகாரிகள், போலீஸ் சூபரின்டென்ட் ஹரிஹரன்

டிபுடி போலீஸ் சூப்ரின்டெண்ட் குணசேகரன், ஆர்.டி.ஓ. ராமசாமி ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க ஆணை பிறப்பித்தது, இலாகாபூர்வமான நடவடிக்கை எடுக்க திரு. கார்த்திகேயன் அவர்களை, போலீஸ் உயர் அதிகாரிகளை நியமித்த கருணாநிதிதான் இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பார்த்து இந்தக் கோரிக்கையை வைக்கிறேன்.

இதே போன்று இந்த மாமன்றத்திலே ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம்தான் கொண்டு வரப்பட்டது. சென்னை மாநகராட்சியில் நடைபெற்ற ஒரு சம்பவம் குறித்து, கண்டனத் தீர்மானம்கூட அல்ல. அப்படி அந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் வந்த நேரத்திலே, அதற்கு முன்பு விஜிலன்ஸ் மூலம் அதிகாரிகள் கைது செய்யப்பட்டு, வழக்கு நடைபெற்றாலுங்கூட, மாநகராட்சி உறுப்பினர்களும் இதிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டு, அதற்கு சி. பி. ஐ. விசாரணை வேண்டுமென்று டாக்டர் ஹண்டே அவர்கள் எழுந்திருந்து கேட்டபோது, அன்புக்குரிய கே. டி. கே. தங்கமணி அவர்கள் கேட்ட நேரத்தில், சட்ட சபையிலேயே எழுந்து நின்று, சென்னை மாநகராட்சியில் தவறு நடந்ததை சட்டசபையில் எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் சொல்லியிருக்கிற காரணத்தினால் மாநகராட்சி மன்றம் கலைக்கப்படுகிறது என்று சட்ட சபையிலே அறிவித்து மேயர், முன்னாள் மேயர், துணை மேயர் போன்ற என் பழம் பெரும் நண்பர்களையெல்லாம் உள்ளிட்ட அத்தனை பேர்களையும் கைது செய்து நடவடிக்கை எடுத்த கருணாநிதிதான் இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பார்த்து நீங்கள் அந்த வழியைப் பின்பற்றக் கூடாதா என்று கேட்கிறேனே அல்லாமல் வேறு அல்ல.

தஞ்சை மத்திய கூட்டுறவு வங்கியிலே ஒரு கையாடல் நடந்து விட்டது என்பதைச் சுட்டிக்காட்டி தஞ்சை நகரிலே உள்ள அனைத்துக் கட்சித் தோழர்களும் ஒரு ஊர்வலம் நடத்தி மாணிக்கவாசகம் என்ற என்னுடைய ஆருயிர் நண்பர், வழக்கறிஞர், அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னவுடனே நடவடிக்கை எடுத்து கைது செய்து இரண்டாண்டுக்காலம் சிறைத்தண்டனைப் பெற்று, அது மாத்திரமல்ல, வழக்கறிஞர் தொழிலையே இன்றைக்கு அவர் நடத்த முடியாத அளவுக்கு — ஆளாக்கப்படுகின்ற அளவுக்கு நடவடிக்கை எடுத்த கருணாநிதிதான் இன்றைக்கு முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்களைப் பார்த்து இந்தக் கோரிக்கையை வைக்கிறேனேயல்லாமல் வேறு அல்ல.



திருத்தணியிலே திருவேங்கடம் என்ற ஒரு அறங்காவலர் குழு உறுப்பினர் ஒரு பெண்ணிடம் தவறாக நடந்தார் என்ற செய்தி வந்தவுடனே அவரை அந்தக் குழுவிலிருந்து நீக்குவதற்கு ஆணை பிறப்பித்த கருணாநிதிதான் முதலமைச்சர் அவர்களைப் பார்த்து இந்தக் கோரிக்கையை வைக்கிறேனே அல்லாமல் வேறல்ல.

குன்றத்தையிலே ஒரு அறங்காவலர் நம்முடைய நாவலருக்கு நன்றாகத் தெரியும். நம்முடைய செயலாளருடைய சகோதரர் அவர் அங்குள்ள கோயில் பிரகாரத்திலே கடைகள் வைப்பதற்காக பிரகாரத்தை இடித்தார் என்று கேள்விப்பட்டவுடன் அவர் மீது நடவடிக்கை எடுக்க ஆணை பிறப்பித்த கருணாநிதிதான் இன்றைக்கு முதலமைச்சர் அவர்களிடத்திலே அதே நியாயத்தை எதிர்பார்த்து, கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு இந்தக் கோரிக்கையை வைக்கிறேனே அல்லாமல் வேறல்ல.

நாம் எல்லாம் ஒன்றாக இருந்தபோது நான் மாண்புமிகு நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன், அமைச்சரவையில் இருக்கின்ற 3 அமைச்சர்கள் மீது முழுமையாகக் கூட அல்ல, சூசகமாக, ஜாடையாக சில குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்ட நேரத்திலே நம்முடைய கழக செயற்குழுவைக் கூட்டி அதிலே தீர்மானம் போட்டு 3 அமைச்சர்களை நாம் நீக்கி வைத்தோம், அப்போது அந்தப் பொறுப்பிலே நாம் எல்லோரும் சேர்ந்து எடுத்த அந்த முடிவை நிறைவேற்றிக் காட்டிய கருணாநிதிதான் இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பார்த்து இங்கே கேட்கிறேனே அல்லாமல் வேறு அல்ல.

நான் கேட்பது அறங்காவலர் குழு கலைக்கப்பட வேண்டும், அந்தக் குழுவிலே உள்ள குற்றவாளிகளும், நிர்வாகிகளும், கிரிமினல் வழக்கிற்கு ஆளாக்கப்பட வேண்டும். கொலைக்கு உட்ந்தையாக இருந்த ரிக்கார்டுகளை மாற்றிப் பொய் ஆவணங்களைப் புனைந்த கோயில் அதிகாரிகள், போலீஸ் அதிகாரிகள், மருத்துவத் துறையினர், அதிகாரிகள், ரெவின்யு அதிகாரிகள் சஸ்பென்ட் செய்யப்பட்டு அவர்கள் மீது இவர்கள் எல்லாம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இவ்வளவையும் முடி மன்றக்கின்ற வகையிலே பல காரியங்களை ஆற்றுகின்ற மாண்புமிகு அமைச்சர் திரு. வீரப்பன் அவர்கள் ராஜினாமா செய்ய வேண்டுமென்று நான் சொல்ல மாட்டேன். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒன்றைச் சரியாகப் புரிந்து கொண்டு...

"பழுதுஎண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்ஓர்
எழுபது கோடி உறும்."

என்ற திருக்குறளைப் புரிந்து கொண்டு 70 கோடி பகைவர்களை விட பக்கத்திலே இருந்து பழுது எண்ணிக் கொண்டிருக்கின்ற மந்திரி ஆபத்தானவர் என்பதைமாண்புமிகுமுதலமைச்சர் அவர்கள் உணர்ந்து அந்த அமைச்சர் மீது நடவடிக்கை எடுத்து அவரைப் பதவியிலிருந்து விலக்கம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு, இந்த அவையிலே நீங்கள் வைத்த இந்த அறிக்கையில் இது போல் (விசாரணைக் கமிஷன் அறிக்கையைக் காட்டி) இது விஷம் (அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய குறிப்பைக் காட்டி) நல்லவேளை, இரண்டையும் கலக்காமல் தனித்தனியாக வைத்திருக்கிறீர்கள். இதைக் கலக்காமல் திரு. சுந்தரராஜ் சொன்னதைப்போல் ஒன்றைத் திரும்ப பெற்று பால் கமிஷன் பரிந்துரை மீது நடவடிக்கை எடுங்கள் என்று கேட்டுக் கொண்டு அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூர் ஆலயத்தில் நடைபெற்ற ஒரு மரணம் தொடர்பான நிகழ்ச்சிகளை ஒட்டியும்அது கொலையா தற்கொலையா என்ற உண்மையை கண்டறிந்து அரசுக்கு ஒரு தெளிவான நிலையை எடுப்பதற்கு வழிவகைகளைக் காண்பதற்காக அமைக்கப்பெற்ற மாண்புமிகு உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி பால் அவர்களுடைய ஒருநபர் கமிஷன் அளித்த அறிக்கையை ஒட்டியும்

[முற்பகல் 10-20]

அந்த அறிக்கையை Commision of Enquiry Act என்று அழைக்கப் படும் அந்த விசாரணைக் கமிஷன் சட்டத்தின்படி ஆறு மாத காலத்திற்குள் அரசு எடுத்த நடவடிக்கைக் குறிப்புக்களோடு சட்டமன்றத்தில் வைக்கப்பட வேண்டுமென்று திட்டவட்டமாக அந்தச் சட்டத்திலே கூறப்பட்டிருக்கிற விதிகளையொட்டி அதற்கு மதிப்பளித்து இந்த அரசு ஆறு மாதங்களுக்கு முன்பாகவே சட்டவிதிகளில் சுட்டிக் காட்டியபடி எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பற்றிய குறிப்போடு இந்த அவையிலே வந்திருக்கிற அந்த குறிப்புகளையொட்டியும், இதுவரை இந்திய பாராளுமன்ற மரபியிலேயே இல்லாமல், எந்தச் சட்டமன்றத்திலேயும் இல்லாமல், ஒரு விசாரணைக் கமிஷனுடைய அறிக்கையின் மீது இரண்டு அல்லது மூன்று நாட்கள் மாண்புமிகு உறுப்பினர்கள் பங்கு கொண்டு விவாதிக்கின்ற ஒரு புதிய நிலையை, புதிய மரபை இந்த அரசு, குறிப்பாக மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவரவர்கள் ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்ற ஒரு மிகச் சிறந்த ஜனநாயக மரபை ஒட்டி இங்கே உறுப்பினர்களெல்லாம் கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள்.



அதிலே ஏறத்தாழ 13 உறுப்பினர்கள் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள், இறுதியாக மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் இங்கே கருத்துக்களை எடுத்து வைத்திருக் கிறார்கள்.

இந்த விசாரணைக் கமிஷன் அமைக்கப்படுகின்ற இந்த நிகழ்ச்சி தொடங்கியதிலேயிருந்து இந்தியாவில் சுமார் 1,300-க்கு மேற்பட்ட கமிஷன்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இதுவரையில் அமைக்கப்பட்ட கமிஷன்கள் எல்லாவற்றிற்கும் ஒரு வேறுபட்ட நிலைமையிலே பால் கமிஷன் அமைக்கப் பட்டது என்பதை நான் உங்கள் மூலமாக இந்த மன்றத்திற்கும், நாட்டுக்கும் எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கமிஷன்கள் எதற்காக அமைக்கப்பட்டிருக்கின்றன? அதிகாரத்திலே இருப்பவர்கள், ஆட்சியிலே இருப்பவர்கள் அல்லது அதிகாரிகள் தவறுகள் செய்திருக்கிறார்கள் என்று, இலஞ்சக் குற்றச் சாட்டுக்கள், ஊழல்கள், அதிகார துஷ்பிரயோகங்கள் என்று வகைப்படுத்திக் குற்றச் சாட்டு களைச் சுமத்துகின்றபொழுது அந்தக் குற்றச் சாட்டுகளிலே அடிப்படை இருக்கிறதா என்பதை ஆராய்வதற்காக கமிஷன் கள், சில நேரங்களிலே அரசுத் துறைகள், அரசுத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் சில நடவடிக்கைகளிலே ஈடுபடுகின்ற பொழுது அது பொதுமக்களுக்கு விரோதமாக அல்லது சட்டத்தை மீறி, வரம்பை மீறி அதிகார துஷ்பிரயோகங்கள் அல்லது நடவடிக்கைகள், அத்து மீறிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதா என்பதைக் கண்டறிவதற்காக அதிகாரிகளின் நடவடிக்கைகளைப் பற்றித் தெரிந்துகொண்டு அரசுக்குத் தெரிவிப்பதற்காக கமிஷன்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன அல்லது பொது மக்களிடத்திலே, சமுதாயத்திலே ஏதாவது சூழ்நிலைகள் காரணமாக மோதல்கள் ஏற்பட்டு அங்கே துப்பாக்கிப் பிரயோகங்களெல்லாம் ஏற்பட்டு அப்படிப்பட்ட சூழ்நிலைகள்-அந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடத்துவதற்கான அடிப்படை எழுந்ததா, அது தேவையானதா, அது தவிர்க்கப்பட்டிருக்கலாமா என்பதைப் பற்றிக் கண்டறிவதற் காக விசாரணைக் கமிஷன்கள் வந்திருக்கின்றன.

ஆனால், நீதிமன்றத்தில் நீதிபதிக்கு முன்னால் மட்டுமே ஒருவர் குற்றம் சாட்டப்பட்டு, அவர் குற்றவாளி என்று சுட்டிக்காட்டப்பட்டு அதற்கான அத்துணை ஆதாரங்களும் ஐயந்திரிபற எடுத்துக்காட்டப்பட்டு, சாட்சியங்களையெல்லாம் எடுத்து வைத்து இவர் குற்றவாளிதான் என்று குற்றம் சாட்டியவர்கள் நிரூபிக்கவும், நான் குற்றம் அற்றவன் எந்தக் குற்றத்தையும் செய்யவில்லை, அப்படி ஒரு வேளை குற்றம் நிகழ்ந்திருந்தாலும் எந்தச் சூழ்நிலைகளிலே செய்தேன், அதனால் நான் குற்றவாளி அல்ல, திட்டமிட்டு நான் இந்தக்

குற்றத்தைச் செய்யவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டவர் எடுத்து வைக்கவும், குற்றம் சுமத்தியவர்கள் சாட்சியங்களையெல்லாம் முன்னால் நிறுத்தி அந்த நீதிபதிக்கு தொண்ணூற்றுஒன்பதே முக்கால் சதவீத அளவிற்கு அங்கே சாட்சியங்களையெல்லாம் நிரூபிக்கப்பட்டாலும், கால் சதவீத அளவிற்குத் சந்தேகம் தோன்றுமேயானால் அந்தக் கால் சதவீத சந்தேகத்தின் பலனைக் குற்றம் சாட்டப்பட்டவருக்குக் கொடுத்து, அவரைக் குற்றவாளிக் கூண்டிலேயிருந்து விடுதலை செய்கின்ற அந்த மதிப்பு மிக்க நீதிமன்றத்திலே நடைபெறவேண்டிய, ஒரு குற்றத்தின் அடிப்படை என்று நிர்ணயிக்கப்படுகிற, சொல்லப்படுகிற குற்றம் காட்டப்படுகிற, ஒரு சம்பவத்தை, இன்றைக்கு விசாரணைக் கமிஷன் நீதிபதி அவர்களே எடுத்துக் காட்டியதைப் போல, நான் யாரையும் குற்றவாளியாகவோ, யாரையும் நிரபராதி ஆகவோ குறிப்பிடுவதற்கு வரவில்லை, என்னாலே தெரிவிக்கப்படுகிற கருத்துகள் சட்ட சம்பந்தமானது என்பதும் இல்லை, அங்கே வைக்கப்படுகிற ஆவணங்கள், சாட்சியங்கள், நீதிமன்றத்தின் முன்னாலே நிராகரிக்கப்படலாம், அடிப்படை அற்றது என்று தள்ளிவிடலாம் என்று அவர்கள் தன்னுடைய முன்னுரையிலேயே மிகத் தெளிவாக எடுத்துக் காட்டிவிட்டு, நடத்துகிற ஒரு விசாரணைக் கமிஷன் முன்னாலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தப் பிரச்னையை வைத்திருக்கிறார்கள் என்கின்ற ஒன்றே இந்த அரசாங்கம் இந்த நிகழ்ச்சியின் தொடர்பாக எந்த விதமான கருத்துக்களையும் தன்னிடத்திலே ஏற்படுத்திக் கொள்ளவில்லை. உண்மையில், குற்றம் நிகழ்ந்திருந்தால், அப்படி குற்றம் நிகழ்ந்து தொடர்புடைய குற்றவாளிகள் யாராவது இருந்தால், அவர்களைக் கண்டு பிடித்து, நியாயத்தின் முன்னாலே நிறுத்தி, தண்டிப்பதற்காகத்தான் முன் வந்திருக்கிறது என்பதை அடிப்படைக் கருத்தாக நான் உங்கள் மூலம் இந்த மன்றத்திற்கும் நாட்டிற்கும் எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்தச் சம்பவம் நிகழ்ந்த நாளிலிருந்து தொடர்ந்து அவர்கள் எந்த நேரத்திலே இதிலே தலையிட்டார்கள் என்பதையும் அப்படித் தலையிட்ட நேரத்திலே அவர்களுக்கு எழுந்த ஐயத்தையும், அந்த ஐயத்தின் காரணமாக, சி.ஐ.டி. விசாரணை கேட்டார்கள் என்பதையும் அருள்கூர்ந்து இந்த மாமன்றம் நினைவிலே வைத்துக்கொள்ள வேண்டும்—எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டது ஒரு சி.ஐ.டி. விசாரணை. அதைக் கேட்டு பிரதமருக்கு தந்தி அனுப்புகிறார்கள், முதலமைச்சருக்குத் தந்தி அனுப்புகிறார்கள், ஆளுநருக்குத் தந்தி அனுப்புகிறார்கள். அப்படி ஒரு சந்தேகத்தின் அடிப்படையிலே, நான் கேட்டேன், என்னை, இந்த அறநிலைய அமைச்சர் 'அரசியல் மோசடி செய்திறவன்' என்று குற்றம் சாட்டி இருக்கிறாரே, இழித்துப் பேசியிருக்கிறாரே, 'நான் பிணத்தை வைத்துக்கொண்டு அரசியல்



நடத்துகிறவன், என்று கூறி இருக்கிறாரே என்று அன்றைக்கும் குற்றம் சாட்டினார்கள், இன்றைக்கும் இந்த மன்றத்திலே நினைவுபடுத்தியிருக்கிறார்கள். என்மீது அவருக்கு மிகுந்த அன்பு இருக்கிறது. அந்த அன்பின் காரணமாகத்தான் எதற்காக அமைச்சரவையிலேயிருந்து இந்த வீரப்பன் அல்லல்பட்டுக் கொண்டிருக்க வேண்டும், போய் ஏதாவது தொழிலைப் பார்த்துக் கொண்டிருக்கலாமே, அல்லது. வெளியிலே இருந்தால் கட்சிக்கு இன்னும் கொஞ்சம் பயன்படலாமே என்ற நல்ல எண்ணத்திலே தான் அவர்கள் இந்த அமைச்சர் இராஜிநாமா செய்யவேண்டும் இராஜிநாமா செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள் என்று நான் எடுத்துக் கொள்கிறேன் ஆனால், அவர்கள் என்மீது ஒரு குற்றத்தைச் சாட்டிவிட்டு அந்தக் கருத்தைச் சொல்லக் கூடாது என்பதற்காக உங்கள் மூலம் நான் ஒரு விளக்கம் கூறுகிறேன்.

அவர்கள் சொன்னதைப் போலவே 26 ஆம் தேதி நிகழ்ச்சி நடக்கிறது. அரசாங்கம், அன்றாடம் செய்திகளை, தகவல்களைப் பெற்றுக் கொண்டிருக்கிறது, எந்தக் கருத்தையும் சொல்லவில்லை. பத்திரிகைகளிலே எப்படி தகவல்கள் வருகின்றன? அவர்களே அதை எடுத்துச் சொன்னார்கள். நான் அதற்குள்ளே நுழைய விரும்பவில்லை, நேரத்தை நீட்டிக்கொண்டு போக விரும்பவில்லை. 'தற்கொலை', மர்ம மரணம்', 'கொல்லப்பட்டார்' என்று நாளொரு வண்ணம், ஒவ்வொரு பத்திரிகைகளில் ஒவ்வொரு செய்திகள் வந்து கொண்டேயிருக்கின்றன. அப்பொழுதுதான், அவர்கள் சொன்னதைப் போல, 3 ஆம் தேதி இந்த நாட்டிலே பொறுப்புமிக்க சட்டமன்றத்தின் எதிர்க்கட்சித், தலைவர் அவர்கள், இந்த நாட்டிலே இருக்கிற முக்கிய பொறுப்பிலே இருப்பவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறார்கள்.

[முற்பகல் 10–30]

நான் அதை ஏற்றுக் கொள்கிறேன். மறுக்கவில்லை. நான் அதை தவறு என்று எப்போதும் சொன்னதே இல்லை. ஆனால் அவர்கள் சொல்லுகிற அந்த சந்தேகங்கள், விளக்கங்கள் எப்போது சி.ஐ.டி. விசாரணை வைத்து, இதிலே நீங்கள் உண்மையைக் கண்டு பிடிக்கவேண்டும் என்று கேட்கிறீர்களோ அந்த செய்தி வருகிற அதே நாளில், அவருடைய பத்திரிகையிலே, அவர் பொறுப்பிலே நடத்துகிற பத்திரிகை முரசொலியிலே—விசாரணை வேண்டும், சி. ஐ. டி. விசாரணை வேண்டும் என்று சொல்லுகிறபோதோ, சந்தேகம் இருக்கிறது என்றுதான் பொருள். குற்றவாளி யார் என்று தீர்மானிக்கப்படவில்லை, குற்றம் நடந்ததா என்பதும் தீர்மானிக்கப்படவில்லை. அதைக் கேட்கிறார்கள். நான் அதை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அதே நாளில் அதே குறிப்பிட்ட செய்தி வருகிற அந்த நாளிலேயே அவருடைய பத்திரிகையிலே, அண்ணா தி.மு.க. வினர் அடித்துக் கொன்றுவிட்டார்கள் என்று 8 காலம் தலைப்பிலே செய்தி வருகிறது. 'தென் மாவட்டங்களை உலுக்கிய பரபரப்பான சம்பவம் திருச்செந்தூர்

கோவில் அதிகாரியை அண்ணா தி.மு.க.வினர் அடித்துக் கொன்றனர். தலைவர் உட்பட அறங்காவலர் குழுவினர் அனைவரும் தலைமறைவு'. இது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் இதைத் தீர விசாரிக்க வேண்டும் என்றும் சி.ஐ.டி. மூலம் விசாரிக்கவேண்டும் என்றும் கேட்கிற நாளிலேயே இப்படி அவர்கள் நடத்துகிற பத்திரிகையிலே இந்தச் செய்தி வந்தது. அதுவரை நாங்கள் அரசாங்கத்தின் தரப்பிலே எந்த கருத்தையும் சொல்ல முன்வரவில்லை, இன்னும் கூட பொறுத்துக் கொண்டிருப்போம். இன்னும் முழுமையான செய்தி கிடைக்கவேண்டும் என்று காத்துக் கொண்டு இருப்போம். வேறு ஏதாவது இதிலே தவறுகள் நிகழ்ந்திருக்கிறதா என்பதை இன்னும் தீர விசாரிக்கவும் நாங்கள் பொறுமை காட்டி இருப்போம்.

ஆனால், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே இவ்வளவு வேகமாக ஒரு கட்சியின் மீது, கட்சியினுடைய உறுப்பினர் மீது குற்றச்சாட்டு சுமத்துகிற நேரத்திலே, நான் அமைச்சர் என்ற பொறுப்பிலே அந்தக் கருத்தைச் சொல்ல வில்லை, நான் ஒரு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர் என்ற வகையில்....

* டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அண்ணா பத்திரிகையிலே கூட இப்படிப்பட்ட செய்திகள், கொட்டை எழுத்துச் செய்திகள் முதல் பக்கத்திலே வருகின்றன. அதற்கெல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான் பொறுப்பு என்று பத்திரிகையிலே வருகிற கொட்டை எழுத்துச் செய்திகளுக்கு எல்லாம் நான் முதலமைச்சர் மீது குற்றம் சுமத்தமாட்டேன். ஆனால் முரசொலிப் பத்திரிகையிலே வந்த செய்தியை அமைச்சர் மறுத்திருக்கவேண்டுமே தவிர, எதிர்க்கட்சித் தலைவரைப் பழித்து விமர்சிக்க வேண்டிய அவசியம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, நான் தொடர்ந்து விளக்கம் அளிக்க இருக்கிறேன். அன்றைக்கு வந்த முரசொலிப் பத்திரிகை செய்தி குறித்து, அதற்குப் பின்னாலே 6 ஆம் தேதி எதிர்க்கட்சித் தலைவர் கருத்துத் தெரிவிக்கிறார்கள், இந்த ஓராண்டுக் காலத்திலே எப்படி இந்த நாட்டிலே ஜனநாயக விதிமுறைகள் மீறப்பட்டு, ஒரு முன்னாள் முதலமைச்சராலே நொறுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் சொல்லுகிறேன். இங்கே நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைப் பற்றி நான் தெரிவித்த சில கருத்துக்கள் பத்திரிகையிலே சரியாக வெளியிடப்படவில்லை. காரணம் பத்திரிகைகளுக்கு எந்த செய்தி சூடாக இருக்குமோ அதை எடுத்துக் கொள்வார்கள். வருகிற பத்திரிகை செய்திகளுக்கு எல்லாம் அதை மறுத்துக் கொண்டோ, அல்லது விளக்கம் அளித்துக்கொண்டு இருப்பதோ இயலாத காரியம். ஆனால் இந்த சம்பவம் சம்பந்தமாக, 3 முறைகள்தான், கடந்த 1½ ஆண்டுகளிலே அரசின் சார்பிலும் அல்லது என்னுடைய சொந்த சார்பிலும் கருத்துகள் தெரிவிக்கப்பட்டன.





அது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன 4 ஆம் தேதி பத்திரிகையாளர்கள் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்து. இரண்டாவது சென்ற ஆண்டு 23-1-1981 அன்று மேலவையிலே ஆளுநர் உரை மீது நடைபெற்ற விவாதத்தில் குறுக்கிட்டுப் பேசுகிற சூழ்நிலை வந்தபோது, சட்டமன்றத்திலே அதிகார பூர்வமான ஒரு கருத்தைத் தெரிவித்தோம். அதற்குப் பிறகு, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கடந்த ஆண்டு நவம்பர் மாதத்திலே கூனூர், கோவை பகுதிகளிலே சுற்றுப் பயணம் செய்தபோது இந்தக் கமிஷன் அறிக்கையை ஏன் மூடி மறைக்கிறார்கள் என்று கேட்ட கேள்விக்கு நான் ஸ்ரீவில்லிபுத்தூரில், மதுரையில் பதில் அளித்திருக்கிறேன்.

இந்த மூன்று நேரங்களில் தான் அரசுத் தரப்பிலிருந்து, என்னிடத்திலிருந்து கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. அதற்குப் பிறகு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துக்காட்டியது போல், முதலமைச்சரவர்கள் சில ஐயங்களை எழுப்பியிருக்கிறார்கள். நான் சட்டமன்ற மேலவையில் குறுக்கிட்டுச் சொல்கிறபோது தெரிவித்த கருத்துக்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

"மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள், இந்த ஆட்சியிலே நிர்வாகம் சீர்கெட்டுப் போய்விட்டது என்பதற்கு எடுத்துக்காட்டாக திருச்செந்தூரில் நடைபெற்றிருக்கிற ஒரு மரணத்தைக் குறிப்பிட்டுப் பேசிக்கொண்டிருக்கிறார்கள், அது நீதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு இருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் எடுத்துக் காட்டியபிறகும், தான் இந்த விசாரணை சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளுக்குள் நுழையமாட்டேன் என்று சொல்லி விட்டு, நிர்வாகச் சீர்கேட்டைப் பற்றி விளக்குகிறேன் என்றும் சொல்லி விட்டு, மேலும் சில தகவல்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

மரணம் சம்பவித்துவிட்டது என்ற செய்தி பத்திரிகைகளில் வந்தது, அதைத் தொடர்ந்து அரசாங்கம் செய்திகளை சேகரித்துக் கொண்டிருக்கிறது. அரசாங்கம் என்னென்ன செய்து கொண்டிருக்கிறது என்று ஒவ்வொரு வினாடியும் வெளியே சொல்லிக்கொண்டிருக்காது. எப்போது அவசியம் நேர்கிறதோ அப்போதுதான் அரசாங்கம் தகவல்களை வெளியே சொல்லும். அரை குறையாகத் தெரிந்து கொண்டு அதை வெளியே சொல்லும் அதுதான் நல்ல நிர்வாகத்திற்கு அடையாளம். அரைகுறையாக நிர்வாகத்தை நல்ல நிர்வாகம் என்று திரு. நீலநாராயணன் அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று கருதுகிறேன். ஆகவே, அரசாங்கம் அக்கறையோடு அந்த நிகழ்ச்சிகளைக் கவனித்து அடிப்படைக் காரணங்களைச் சேகரித்துக் கொண்

டிருக்கிற நேரததில், பேரவை எதிர்க்கட்சித் தலைவர், சந்தேகம் இருக்கிறதென்று ஒரு பெரிய பிரச்னையைக் கிளப்பி முதலமைச்சர் அவர்களுக்கும், ஆளுநர் அவர்களுக்கும், பிரதமர் அவர்களுக்கும் தந்தியைக் கொடுத்திருக்கிறார். நீதி விசாரணை வேண்டும் என்று பேரவை எதிர்க்கட்சித் தலைவர் கேட்டதை அது அவர் செய்யவேண்டிய கடமை என்று அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் அந்தச் செய்தி வருகிற நேரத்தில், விசாரணை வேண்டும் என்று கோரிய பேரவை எதிர்க்கட்சித் தலைவர் அவரே பொறுப்போடு எடுத்து நடத்துகிற பத்திரிகையிலே 'அடித்துக் கொல்லப்பட்டார்' என்று குற்றம் சாட்டுவதைப் போல 8 காலம் தலைப்பில் போட்டு செய்தியை வெளியிட்டபோது தான் அதைத் தெளிவுபடுத்த வேண்டிய அவசியம் எங்களுக்கு ஏற்பட்டது. அப்போதுதான், ''வந்த அறிக்கையை அதிகாரிகளைக் கொண்டு படிக்க வைக்கிறோம். ஆனால் அரசின் சொந்தக் கருத்து எதையும் சொல்லவில்லை' என்று சொல்லியிருக்கிறோம்''. இதுதான் நான் மேலவையில் தெரிவித்த கருத்து.

ஒரு வேளை, நான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரின் உரிமையை ஏற்றுக்கொண்டு, அவர் செய்தது சரி என்று சொன்ன அந்தக் கருத்து அவருக்குக் கிடைக்காமல் இருந்து இருக்கலாம். ஆனால் அதற்குப் பிறகு நான் ஒரு அரசியல்வாதி என்கிற அடிப்படையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அடித்துக்கொன்று விட்டார்கள் என்று சொன்ன குற்றச்சாட்டை மறுக்கிற வகையில்—சந்தேகம் எழுப்பப்பட்டு இருக்கிற ஒரு நிகழ்ச்சியில், சந்தேகத்திலே ஆதாரம் இருக்கிற ஒரு நிகழ்ச்சியில் இப்படி குற்றம் சாட்டுவது அரசியல் மோசடி என்று நான் தெரிவித்தேன். அது இன்றைக்கும் தொடர்ந்து எப்படி நடந்து கொண்டு வருகிறது என்பதை நான், மற்ற விவரங்களை எடுத்துச், சொல்வதற்கு முன்னாலே, அடிப்படையாக அதையும் சொல்லிவிடுகிறேன்.

நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கேட்டது, சி.ஐ.டி. விசாரணை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நீதி விசாரணையையே ஒரு ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியைக் கொண்டு வைக்கிறார்கள். நீதிவிசாரணைக்கு ஆணையிட்டு விட்ட பிறகு என்ன நடைமுறை, என்ன மரபு பின்பற்றியாக வேண்டும். ஒரு நீதி விசாரணை நடக்கிறது என்றாலே, நீதி மன்றத்திலே இருக்கின்ற ஒரு நிலைமைக்கு ஒப்பானது தான். அதனால் தான் நாம் நீதி விசாரணையை மதிக்கிறோம். அதனாலேதான் ஒரு நீதிபதி அளிக்கின்ற தீர்ப்பின் மீது ஏதோ அரசாங்கம் மேல்கோர்ட்டு போல் உட்கார்ந்து தீர்ப்புகளைச் சொல்லலாமா என்ற கேள்விகளைக் கூட மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே எழுப்புகிறார்கள். ஆகவே, நீதிபதி தருகிற ஒரு கருத்துக்கு அல்லது ஆய்வு நடத்துகிற ஒரு



பொருளுக்கு எந்த அளவிற்கு இந்த நாட்டிலே பொதுமக்கள் மதிப்பு தரவேண்டும் என்பது கூட அல்ல, இந்த சட்டமன்றத்திலே பொறுப்பு வகிக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள், குறிப்பாக, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எந்த அளவிற்கு மதிப்புத் தரவேண்டும்? இங்கே என்ன நடந்தது? நீங்கள் சந்தேகம் எழுப்பினீர்கள். நீங்கள் கேட்டது சி.ஐ.டி. விசாரணை. முதலமைச்சர் அவர்கள் அதற்கு நீதி விசாரணையே வைத்து விட்டார்கள். அதற்குப் பிறகு சும்மா இருந்தார்களா என்பதை நான் பணிவன்போடு உங்கள் மூலம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 10.40]

அதற்குப் பிறகு 6-ஆம் தேதி எழுதுகிறார்கள். அவர்கள் ஒரு குழுவைப் போட்டு, அங்கேபோய் அந்த குழு அறிக்கை தருகிறது. அந்தக் குழு என்ன சொல்கிறது என்று கேட்கிறார்கள். அதன் பிறகு நீதிவிசாரணை வருகிறது. நீதிவிசாரணை போட்ட உடனே 'இந்த அரசை நான் கேட்டது சி.ஐ.டி. விசாரணைதான்; மாண்புமிகு முதலமைச்சர் விசாரணைக் கமிஷனுக்கு உத்தரவிட்டார்' பாராட்டுகிறேன் என்று சொன்னார்களா என்றால் இல்லை. ஆனால் அவருக்கு அடுத்த இலக்கு குறியாக இருந்தது. திருநெல்வேலியிலே பத்திரிகையாளருக்குத் தெரிவிக்கிறார்கள். நீதி விசாரணை போட்டது பெரிதல்ல—அதை விட்டு விட்டார்கள்.—உடனடியாக அறநிலையத் துறை அமைச்சர் இராஜிநாமா செய்ய வேண்டும். அப்படி ஒருவேளை அவரை இராஜிநாமா செய்ய வைப்பதில் முதலமைச்சருக்கு சங்கடம் இருக்குமானால் குறைந்தபட்சம் அந்த அறநிலையத் துறை பொறுப்பையாவது அவரிடம் இருந்து மாற்ற வேண்டும். இது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருடைய வேண்டுகோள்.

நடந்த சம்பவம் கொலையா, தற்கொலையா, குற்றவாளிகள் யாராவது இருக்கிறார்களா என்று கண்டுபிடிப்பதற்காக எடுத்துக் கொண்ட ஒரு முயற்சியைப் பாராட்டுவதற்கு அவர்களுக்குத் தாராள மனம் வரவில்லை. ஆனால், அப்போதும் அவர்கள் குறி வைக்கிறார்கள். இந்த நீதிவிசாரணை மாத்திரம் நடந்துவிட்டால் போதுமா; இந்த அமைச்சர் வீரப்பன் வெளியே போக வேண்டாமா என்று கேட்கிறார்கள். அதைத் தொடர்ந்து கடந்த ஓராண்டு காலமாக ஒரு பக்கத்திலே நீதிவிசாரணை நடந்து கொண்டிருக்கிறது. இன்னொரு பக்கத்திலே அந்த நீதிவிசாரணைக்குக் குந்தகம் ஏற்படுகிற வகையில் நாடெங்கும் அவதூறு பிரச்சாரம், பழி சுமத்தும் பிரச்சாரம் நடக்கிறது; பத்திரிகைகளிலே எழுதுகிறார்கள், குற்றச்சாட்டுகள் என்று. நடக்கலாமா? ஒரு ஆளுகிற பொறுப்பிலே இருக்கிற கட்சி அல்லது அரசாங்கம் வாயைத் திறந்தால் தவறு. திறக்கமாட்டோம். காரணம் சட்டத்திற்கு மதிப்பு அளிப்பவர்கள். நடைமுறைக்கு மதிப்பு அளிப்பவர்கள். ஆகவே, நாங்கள் வாயைத் திறக்கவில்லை; கருத்து சொல்லவே இல்லை.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1982 பிப்ரவரி 13

நீதிவிசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, கடந்த ஒன்றரை ஆண்டு காலத்திலே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், அவர்களுடைய கட்சியினரும், அவர்களுக்கு ஆதரவான பத்திரிகைகளிலே, அவர்களுடைய பத்திரிகையிலே இத்தகைய பிரச்சாரத்தை நடத்தினார்கள். இது நீதி விசாரணைக்கு உதவி செய்வதா? நீதியைக் கண்டுபிடிப்பதற்காக உதவுகிற காரியமா? இது ஜனநாயக முறையில் அனுமதிக்கப்படுகிற ஒன்றா?

நீதிபதியை மதிக்கிறோம். நீதிபதி பால் அவர்கள் கொடுத்த தீர்ப்பை நீங்கள் மறுத்துரைப்பதுபோல கருத்தை வழங்கியிருக்கிறீர்களே என்று சொல்லுகிற மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடத்திலே உங்கள் மூலம் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்த நாட்டிலே நீதிபதிகளைப் பற்றி, உச்ச நீதிமன்ற நீதிபதிகளைப்பற்றி என்னென்ன கருத்துக்களை நீங்கள் வழங்கியிருக்கிறீர்கள்? இதை இந்த நாடு மறந்துவிட்டதா? இந்த நாட்டு மக்கள் இதை நினைவுபடுத்த மாட்டார்கள் என்கிற எண்ணமா? நீதிபதி அவர்களுடைய கருத்துக்கள்மீது அரசுக்கு ஏற்பட்ட ஐயப்பாடுகளை இந்த அவையிலே வைத்திருக்கிற காரணத்திற்கு பின்னாலே வருகிறேன்.

நான் அடிப்படையைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறேன். நீதிவிசாரணைக் கமிஷன் போட்டதற்குப் பிறகு பொறுப்புள்ள மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த நாட்டிலே ஒரு கருத்தை வலியுறுத்தி குற்றவாளி, குற்றவாளி, கொலை செய்தார்கள் என்று பத்திரிகையிலே பக்கம் பக்கமாக எழுதுவதும் கூட்டங்களைப் போட்டுப் பேசுவதும் இதற்கான ஆதாரங்களை அங்கே போய்ச் சொல்ல மாட்டோம்; ஆனால் அவதூறுகளைப் பத்திரிகையிலே எழுதுவோம்; மேடைகளிலே பேசுவோம் என்று நடத்திக்கொண்டிருப்பது இந்த நாட்டிலே நீதியை, நியாயத்தை, நேர்மையை நிலைநிறுத்துகிற காரியமா என்று நான் உங்கள் மூலம் இந்த மன்றத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். அமைச்சரவர்கள் ஒரு தவறான தகவலைத் தருகிறார்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். தேவையானால் அவர்கள் கேட்பார்கள்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் உச்சநீதிமன்ற நீதிபதியைப் பற்றி அவதூறாகப் பேசினார் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்தச் சூழ்நிலையில் யாரைப்பற்றி என்ன பேசினேன் என்பதை அவர்கள் விளக்கவேண்டும்.



1982 பிப்ரவரி 13]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே தகவல்களைச் சொல்லிக் கொண்டிருக்கிற போது ஆதாரம் இல்லாமலா சொல்வேன். அங்கே நான் வருவேன். ஒருவது வரை அவர்களும் இருந்து கேட்கவேண்டும். இந்த மன்றமும் கேட்கப் போகிறது. நான் ஒன்றைச் சொல்கிறேன். நான் பழைய கதைக்குப் போக வில்லை.

(குறுக்கீடுகள்—குழப்பம்)

* * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவையெல்லாம் அவைக் குறிப்பிலே வராது. மாண்புமிகு உறுப்பினர்கள் அமர வேண்டும்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஒரு கமிஷன் போட்டுவிட்டாலே அதைப்பற்றி பேசக்கூடாது என்று அமைச்சர வர்கள் சொல்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி நடைபெற்றபோது அமைச்சராக இருந்த திரு. ப. உ. ச. அவர்கள் மீது ராமபிரசாத் ராவ் கமிஷன் போடப்பட்டது. அப்போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே மேடையிலே அதுபற்றிப் பேசாமல் இருந்தார்களா என்பதை அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்-குழப்பம்)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மற்றவர்கள் கேட்கின்ற கேள்விகளுக்குப் பதிலளிக்க நேரம் இல்லை. தாங்கள் நேரம் தந்தால் அதற்கும் பதிலளிக்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு ஐயத்தை எழுப்பினார்கள். 'நான் உச்ச நீதிமன்ற நீதி பதியைப் பற்றி எப்போது கருத்து தெரிவித்தேன்' என்று கேட்டார்கள்.

சமீபத்திலே ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி கைலாசம் கமிஷன் நியமிக்கப்பட்டபோது நீதிபதி கைலாசம் அவர் களைப் பற்றி என்ன கருத்து தெரிவித்தார் என்பது இன்னும் பசுமையாக இருக்கின்றது. அதன் பசுமை கொஞ்சம் மறந்து விட்டிருந்தாலும் அதனை நினைவுபடுத்துகிறேன். இவர் ஓய்வு பெற்ற நீதிபதி. ஆனால் அன்றைக்குப் பதவியிலே இருந்த நீதிபதி சர்க்காரியா அவர்கள். அந்த சர்க்காரியா கமிஷன் அமைக்கப்பட்டபோது அவர்களைப் பற்றி மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள்.

(*) மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

"ஏற்கெனவே நீங்கள் எழுதி வைத்திருக்கின்ற ஒரு முடிவை அளித்துவிடுங்கள்" என்று சொன்னதன் மூலம் அவர் ஒரு முடிவை எழுதி வைத்துக் கொண்டு விசாரணைக்கு வருகிறார் என்ற அந்தத் தகவல்கள் இங்கே இருக்கின்றன. அதைப்போலவே இங்கே மாண்புமிகு ஓய்வுபெற்ற நீதிபதி சதாசிவம் பற்றி என்னென்ன விமர்சனங்கள் செய்யப்பட்டது என்பதெல்லாம் தெரியும். ஆகவே நீதிபதி அவர்களிடத்திலே இவர்களுக்கு என்ன மரியாதையும் மதிப்பும் இருக்கின்றது என்பதும் தெரியும்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, பால் கமிஷன் அறிக்கை வக்கப்பட்டு, அரசினுடைய மறுப்பு குறிப்புகள் அல்லது ஆய்வுக் குறிப்புகள் வைக்கப்பட்டு அவை மீது விவாதம் நடைபெற்றது. நாங்களும் அந்த கட்டுதிட்டங்களுக்குள்ளேயே நின்றுதான் எங்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறி இருக்கிறோம். ஆனால் இப்போது அமைச்சரவர்கள் 'அவுட் ஆஃப் வே' என்ற வகையிலே அதற்கு வெளியிலே சென்று பல விஷயங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். எனவே இதற்கு ஒரு நாள் நீங்கள் நீட்டித்துத் தந்தால்தான் பதிலளிக்க முடியும். நீங்கள் 12 மணிக்குள் அவையை முடித்துவிட்டுச் செல்வது இயலாத காரியம்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, விதிகளுக்கு உட்பட்டுத்தான் நாங்களும் விவாதம் நடத்துகிறோம். ஆனால் பால் அவர்கள் தந்த அறிக்கையின் மீது நீங்கள் கருத்துச் சொல்லலாமா என்ற ஒரு பிரச்சினை எழுப்பப்பட்டிருக்கிறது. இங்கே பேசிய பல்வேறு கட்சியினரும் அரசாங்கம் ஏதோ ஒரு குற்றம் செய்துவிட்டது, தவறு செய்துவிட்டது என்பதுபோல் எடுத்துக்காட்டிப் பேசிய நேரத்தில் குறிப்பாக நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முன்னாள் முதலமைச்சர் அவர்களும் பேசினார்கள். முன்னாள் முதலமைச்சரவர்கள் முன்பு எப்படி நடந்து கொண்டார் என்பதை எடுத்துச் சொல்ல வேண்டியது அரசாங்கத்தின் கடமை இல்லையா? நீதி விசாரணைக் கமிஷன் வைத்ததற்கு பிறகு அதைத் தெருவிலே விவாதமாகக் கொண்டுவருவது சரியா? நியாயமா என்று நாங்கள் கேட்க வேண்டாமா?

டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நீங்கள் நீதிபதி பால் அவர்களின் மீது குற்றம் சொல்லலாமா என்று நானும் கேட்கவில்லை. யாரும் கேட்கவில்லை. கண்டுபிடிக்கப்பட்டுள்ள அந்த முடிவுகளுக்கு மாறாக நீங்கள் வைத்திருக்கின்ற குறிப்புகள் பொருத்தமற்றது என்பதைத்தான் எல்லாக் கட்சியினரும் வாதிட்டிருக்கிறோமே அல்லாமல் பால் மீது நீங்கள் குற்றம் சொல்லலாமா என்று யாரும் கேட்கவில்லை,

1982 பிப்ரவரி 13]

(முற்பகல் 10.50)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, நீதிபதி பால் அவர்கள் மீது இந்த அரசுக்கு முழு நம்பிக்கையிருக்கிறது. பால் அவர்கள் மீது மாத்திரம அல்ல, எந்த நீதிபதிகளின் மீதும் இந்த அரசு நம்பிக்கை வைத்திருக்கிறது. எந்த நீதிபதிகளுக்கும் அரசு என்ற முறையிலும் சரி, தனிப்பட்டவர்கள் என்ற முறையிலேயும் சரி இந்த நாட்டு குடிமகன் என்ற முறையிலேயும சரி மரியாதை தரவேண்டும் என்பது மரபு. அதை நாங்கள் கடைப்பிடிக்கிறோம். அந்த நியதிக்கு தலைவணங்குகிறோம். அதிலே எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை,

இங்கே வைக்கப்பட்டிருக்கிற அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய குறிப்புகள் நீதிபதி பால் அவர்களுடைய ஃபைண்டிங்க்ஸ் என்று சொல்லப்படுகிற. அந்தப் பரிந்துரைகளின் மீது தரப்படுகிற விமர்சனம் அல்ல. அவர்கள் விவாதித்து வைத்து இருக்கிற வழிகளிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் எந்த நோக்கத்தினாலே நீதி விசாரணைக் கமிஷன் அமைத்தார்களோ அந்த நோக்கம் இன்னும் நிறைவு பெறமுடியாமல், சில ஐயப்பாடுகள மேலும் வருகிறது. இது கொலையா, தற்கொலையா என்ற சந்தேகத்தை தீர்க்கவேண்டும் என்று அரசாங்கம், நீதிபதி அவர்களுடைய கமிஷனைக் கேட்டிருக்கிறது. நீதிபதி அவர்கள் பரிந்துரைத்து கருத்துக்களை எல்லாம எடுத்துச் சொல்லி, இது ஒருவராலோ சிலராலோ தாக்கப்பட்டு, அதனாலே ஏற்பட்ட மரணமாக இருக்கலாம், அதற்கான நம்பிக்கையிருக்கிறது. நம்பிக்கைக்கான ஆதாரங்கள் இருக்கின்றன. ஆகவே இது என்னுடைய முடிவான முடிவு அல்ல. இதை நீங்கள் ஒரு தனியாக மாநில அளவிலே குற்றப் புலனாய்வுத் துறை மூலம விசாரணை செய்ய வேண்டும் என்பது மிக முக்கியமான பரிந்துரை.

அவர் ஒரு முடிவுக்கு வந்திருந்தார் என்றால், நீங்கள் விசாரணை செய்யவேண்டும் என்று சொல்லியிருக்க மாட்டார். நடவடிக்கை எடுக்கலாம் என்று பரிந்துரைத்து இருப்பார். ஏனெனில் நடவடிக்கை எடுங்கள் என்று விசாரணைக் கமிஷன் நீதிபதி என்ற முறையில் அவர் சொல்ல முடியாது. அவர் உயர்நீதிமன்ற நீதிபதியானதாலே மிகுந்த ஜாக்கிரதையாகவே சொல்லியிருக்கிறார்கள். இங்கே கூட சர்க்காரியா கமிஷன் அளித்த தீர்ப்பில் ஒன்றைப் படித்துப் பார்த்தேன். அது முன்னாள் முதல்வர் அவர்கள் மீது வருகிற குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் ஒன்றைத் தீர்ப்பாக சொல்லியிருக்கிறது. அதிலே, மிக மிக எச்சரிக்கையாக, சான்றுகள் எல்லாம் தெரிகிறது. சந்தர்ப்ப சூழ்நிலைகள் இருக்கின்றன. நம்புவதற்கும் இடம் இருக்கிறது. எல்லாவற்றிற்கும் ஆதாரம் இருக்கிறது. ஆனால் அது லஞ்சமாகப் பெற்ற பணம்தானா என்று சொல்வதற்கு

ஐய திரிபு அற கூறுவதற்கு. சந்தேகம் இல்லாமல் அந்தக் குற்றச்
சாட்டை சுமத்த நீதிபதி என்ற அந்த உணர்வு என்னைத் தடுக்
கிறது என்று கூறியிருக்கிறார்கள்.

அதற்காகத்தான் நாம் நீதிவிசாரணைக்கே மதிப்பு அளிக்
கிறோம். அதனாலேதான் பால் கமிஷனும் மிகுந்த எச்சரிக்கை
யோடு அந்தப் பரிந்துரைகளை தருகிறது. ஆனால் எந்த
முடிவையும் தெரிவிக்கவில்லை. சந்தேகத்திற்கு இடம் இருக்கிறது.
அந்த சந்தேகத்தை நீக்குவதற்கு நீங்கள் புலன் விசாரணைக்கு
ஏற்பாடு செய்யுங்கள் என்று சொல்லியிருக்கிறது. அதைத்தான்
அரசாங்கம் உடனடியாக செய்திருக்கிறது என்பதை மாண்புமிகு
முதல்வர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இங்கேயும்
தெரிவித்திருக்கிறார்கள்.

இப்பொழுது எங்கே வந்து நிற்கிறோம் என்றால், மாண்புமிகு
எதிர்க்கட்சித் தலைவர் 1980-லே கேட்டார்களே சி.ஐ.டி.
விசாரணை வேண்டும் என்று. அந்த இடத்திலேதான் வந்திருக்
கிறோம். ஆகவே, சி.ஐ.டி. விசாரணைக்கு ஏற்பாடு செய்திருக்
கிறோம். சாட்சியங்கள் இருந்தால் அங்கே வழங்கலாம்.
தடயங்கள் கிடைந்தால், கொடுக்கலாம். அங்கே குற்றவாளிகள்
கண்டுபிடிக்கப்பட்டால், குற்றம் நடந்திருக்கும் என்பதற்கான
ஆதாரங்கள் கிடைத்தால் இந்த அரசு எந்தக் காரணத்தைக்
கொண்டும், எந்தக் குற்றவாளிகளையும், எந்தக் குற்றத்திற்கு
காரணமாக இருப்பவர்களையும் விட்டு விடாது என்பதைத்தான்
இந்திய அரசியலிலே இல்லாத வகையில் முதல் முறையாக
இப்படிப்பட்ட ஒரு நீதிவிசாரணை ஏற்படுத்தி, சந்தேகம் இருக்
கிறது. மற்ற சாட்சியங்களையும் சூழ்நிலைகளையும் ஆராய்ந்து
விசாரணை செய்து, ஒரு நல்ல தெளிவை அரசுக்கு வழங்குங்கள்
என்று கேட்டிருக்கிறது.

ஆகவே நீதிபதி பால் கமிஷன் தந்திருக்கிற அந்தப் பரிந்துரை
களிலே ஆட்சேபணையில்லை. முதல் பரிந்துரை முக்கியமான
பரிந்துரை. குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு, உண்மையைக்
கண்டறிவதற்கு, குற்றத் தடையங்களைக் கண்டுபிடிப்பதற்கு
சி.ஐ.டி. விசாரணையை அரசாங்கம் போட்டுவிட்டது. 2-வது
பரிந்துரையை எப்படிச் செய்கிறார்கள் என்பதற்கு, அவை
களுக்கு பின்னால் வருகிறேன். ஆனால் இங்கே வைக்கப்பட்டிருக்
கிற அறிக்கை, எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், அறிக்கை
என்றால் பால் அவர்கள்மீது அவர்களுடைய பரிந்துரைகள் மீது
எழுப்பப்படுகிற ஐயம் அல்ல. மீண்டும் ஆய்வுக்குப் போகிறது.
ஒன்றேகால் ஆண்டு நாங்கள் வாய்மூடிக்கொண்டிருந்தோம்.
அரசாங்கத் தரப்பிலிருந்து எந்தக் கருத்தையும் சொல்லவில்லை.
நாங்கள் எந்தக் கருத்தையும் சொல்லமுன்வரவில்லை. நீதி
விசாரணை நடந்து முடியட்டும் என்று காத்துக்கொண்டிருந்
தோம். இங்கே என்னென்ன நடக்குமோ? அவ்வளவும் நடந்து
முடிந்துவிட்டது. விசாரணைக் கமிஷன் அறிக்கை எங்களிடம்



வருகிறது. வந்ததும் உடனடியாக முதல் அமைச்சர் அவர்கள்
சி.ஐ.டி. விசாரணைக்கு இரகசியமாக உத்தரவும் போட்டு
விட்டார்கள். அதற்கு மேலே அது மொழிபெயர்ப்புத் துறைக்குப்
போகிறது. அச்சாகிக் கொண்டிருக்கிறது. இவ்வளவிற்கும்
இடையிலே ஆத்திரப்படுகிறார்கள். அவசரப்படுகிறார்கள்,
வெளியே அறிக்கையில் உள்ள சில பகுதிகள் அங்கொன்றும்
இங்கொன்றுமாக இந்த மன்றம் மாத்திரம் முதலில் தெரிந்து
கொள்ளவேண்டிய உரிமை பெற்றிருக்கிற........

டாக்டர் மு. கருணாநிதி: இந்தச் சட்டமன்றம் மாத்திரமே
முதலில் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற உரிமை பெற்றிருக்
கிற என்று கூறுகிறார்கள் அதை நான் மறுக்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: சட்டத்தில் விதிகள்
இருக்கின்றன. நான் அதற்குள்ளே நுழைய விரும்பவில்லை.
** ** **

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத்தலைவர்
அவர்களே, அமைச்சர் அவர்கள் * * *
நீக்கிவிடுவது
என்று சொன்னதெல்லாம் அவைக்குறிப்பிலிருந்து
பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல் அமைச்சர்
அவர்களின் கருத்தை நானும் ஏற்றுக்கொள்கிறேன். அமைச்சர்
* * * * *
அவைக் குறிப்பிலிருந்து நீக்க ஆணையிடுகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர்
அவர்களே, நீதிபதி அவர்களின் கருத்தின் மீது அரசாங்கம்
எந்தவிதமான மாற்றுக் கருத்துக்களையும் எடுத்து வைக்க
வில்லை. விசாரணை வரப்போகிறது. இதைப்பற்றி பொது
மேடைகளில் பேசிவிட்டார்கள். ஒரு பக்கத்தில் குற்றச்சாட்டு
களை சுமத்திக்கொண்டே இருக்கிறார்கள். அரசாங்கம் ஆதரவாக
இருக்கிறது, ஆதரவாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டுகளை
அடுக்கிக்கொண்டே இருக்கிறார்கள். கடந்த மூன்று நாட்கள்
விவாதத்தில்கூட ஒரு துர்ப்பாக்கியகரமான நிலைமை இது ஒரு
குற்றம், இது ஒரு கொலை நடந்திருக்கிறது என்பதை
ஆதரிக்கிற கருத்துக்கள் இங்கே எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன.
அதற்கான கருத்துக்களை உறுப்பினர்கள், தலைவர்கள் எடுத்து
வைத்திருக்கிறார்கள்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1982 பிப்ரவரி 13

(முற்பகல் 11-00)

இதற்கு வேறுவிதமான கருத்துக்களைச் சொல்லுகிற வாய்ப்பு கிடைக்கவில்லை. நேரமில்லாத காரணத்தினால். ஆகவே, நான் அரசின் தரப்பிலே அதற்குள்ளே நுழைந்து, இந்தக் கருத்துக்களையெல்லாம் எடுத்து விவாதிக்க விரும்பவில்லை. அப்படி விவாதித்தால், அரசிலே இருப்பவர்கள் ஆதரவாக இருக்கிறோம் என்ற குற்றச்சாட்டைச் சுமத்துகின்ற சூழ்நிலை மீண்டும் ஏற்படும். அரசில் இருப்பவர்கள் ஒரு தர்மசங்கடமான நிலையிலே இருப்பவர்கள். சர்க்கஸ்காரன் கம்பியில் நடக்கும் போது ஜாக்கிரதையாக நடக்க வேண்டும். மற்ற எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள் சொல்கிறபோது, அவர்கள் பாதுகாப் பான இடத்தில் நின்றுகொண்டு, அந்தக் கருத்துக்களைச் சொல்வதற்கு அவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால், அந்த மரபுகள் இரண்டு தரப்பினருக்கும் இருக்க வேண்டும். அப்படி ஒரே மரபைப் பின்பற்றும் வாய்ப்பை ஏற்றுக்கொண்டால்தான் எந்தக் கருத்துக்கும் வரமுடியும்.

பால்கமிஷன் அறிக்கையின்மீது அரசாங்கம் எந்த குற்றங்குறை களையும் கண்டுபிடிக்கவில்லை. ஆனால், இதிலே உண்மையைக் கண்டுபிடிக்க கமிஷன் எடுத்துக் காட்டியிருக்கின்ற உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டியவர்களுக்கு என்னென்ன சந்தேகங்கள் மேலும் இருக்கின்றன; இந்தச் சந்தேகங்களை நிவர்த்தி செய்ய வேண்டும்; இந்தச் சந்தேகங்களை களைய வேண்டும்; இப்படி இந்தச் சந்தேகங்கள் களையப்பட்டால்தான் உண்மை குற்றவாளி களை அல்லது குற்றம் நடந்திருந்தால், அவர்களை வழக்கு மன்றத்தில் நிறுத்த முடியும். ஆகவே, இந்த ஐயப்பாடுகள் நீக்கப்பட வேண்டுமென்பதுதான் அரசின் தரப்பில் தெரிவித்திருக் கின்ற கருத்து.

ஒரு கமிஷனுடைய அறிக்கையை நிராகரிக்கலாம் என்கிற உரிமை அரசுக்கு இருக்கிறபோது, அந்த உரிமையை அரசுக்கு தந்திருக்கிறபோது, அதிலே எழுகின்ற ஐயப்பாடுகளை எடுத்துச் சொல்வதில், அந்தக் கமிஷனுடைய கண்ணியத்தை, திறமையை, நேர்மையை, மாண்பை நாங்கள் மதிக்கவில்லை என்று யாரும் எடுத்துக்கொள்ளக்கூடாது. இந்த நோக்கம் அரசுக்கு இல்லை என்பதை பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சில பிரச்சினைகளை சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கமிஷனுடைய அறிக்கை, அதிலே எடுத்துக்காட்டியிருக்கிற அந்த குறிப்புகள், அதைத் தொடர்ந்து அரசாங்கம் எழுப்பியிருக்கின்ற ஐயப் பாடுகளை அவர்கள் தவறு என்று சொன்னதோடு, அதை



1982 பிப்ரவரி 13] [திரு. ஆர். எம். வீரப்பன்]

அவர்கள் பிரச்சினையாகவும், கேள்வியாகவும் வைத்திருக் கிறார்கள். விசாரணை வரம்பு மீறியது என்பது அறநிலைய சட்டத்தைப் பற்றி வந்திருக்கின்ற விவகாரமே தவிர, வேறு அல்ல.

கமிஷனிலே அவர்கள் முதல் பகுதியாக, இதை ஒரு சி.ஐ.டி. விசாரணைக்கு வைக்க வேண்டும் என்று சொன்னதை, அரசு உடனே ஏற்றுக் கொண்டு, விசாரணைக்கு ஆணையிட்டிருக்கிறது. ஆனால், நடந்திருக்கிறது என்னவென்று சொன்னால், அதனுடைய முடிவுகளை வெளியிலே தெரிவித்ததன் மூலம், இந்த விசாரணைக்கு குந்தகம் ஏற்படுத்தி இருக்கிறார்களோ என்கிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதன் மூலம் விசாரணை நடை பெற்று, உண்மையான குற்றவாளிகள் கண்டுபிடிக்க வேண்டு மென்பதைவிட, அதை எப்படி அரசியல் பிரச்சினையாக்குவது என்பதிலேதான் அதிக அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. ஆகவேதான், முதல் பகுதியைப் பொறுத்தவரையில் பிரச்சினை எழவில்லை. இரண்டாவது பகுதியில், அறங்காவலர் குழுவில் இருப்பவர்களை நீக்கிவிட்டு இந்த விசாரணையைத் தொடங்க வேண்டும் என்று சொல்லுகிற கமிஷன், அறங்காவல் குழுவின் மீது ஒரு குற்றச்சாட்டைச் சொல்லி, இவர்கள் இதிலே ஐயத்திற்குரியவர்கள் என்று சொல்லி, அவர்களை நீக்குங்கள் என்று சொன்னால், அதை அரசு அந்த அடிப்படையில் பரிசீலிக்க இயலும். ஆனால், கமிஷன் அப்படி சொல்ல விரும்பவில்லை. சொல்லவேண்டுமென்று முன்வரவில்லை.

கமிஷன் என்ன சொல்லுகிறது என்றால், விசாரணை வைக்கப் படுமானால், அவர்கள் அங்கே வேண்டாம், அதற்கு என்னுடைய ஆணையின் மூலம் நடவடிக்கை எடுக்க முடியாது. அறநிலைய சட்ட விதிகளின்கீழ் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லுகிறபோதுதான், அறநிலைய சட்ட விதிகளின்கீழ் குற்றம் இழைக்கப்பட்டு, அந்தக் குற்றத்தைப் பரிசீலிப்பதற்கு கமிஷனுக்கு டேர்ம்ஸ் ஆப் ரெபரென்ஸ் வழங்கி, அவர்கள் பரிந்துரை செய்து சொல்வார்களானால், அது சட்ட வரம்பிற்குள்ளே வரும். இல்லையானால், அரசு எப்படி நடவடிக்கை எடுத்தாலும், அது 'மாலபைட்' என்று இதற்கு உள்நோக்கம் இருந்து இருக்கிறது என்று சொல்லக்கூடிய வாய்ப்புகள் வருகின்றன.

அதைத்தான் நீதிமன்ற தீர்ப்புக்களையும் சுட்டிக்காட்டி நாம் இங்கே எடுத்து வைத்து இருக்கிறோம். கமிஷனே கூட நேரடியாக நீங்கள் இந்த நடவடிக்கையை எடுக்கலாம் என்று சொல்லியிருந்தால் அரசாங்கத்திற்குக் கொஞ்சம் பிரச்சினை இல்லாமல் கூட இருந்திருக்கலாம். ஆனால் கமிஷன் தன்னை அந்தப் பொறுப்புக்குட்படுத்தி கொள்ளாமல் நீங்கள் அறநிலையத் துறையின் விதிகளின்கீழ் நடவடிக்கை எடுங்கள் என்று சொல்கிற போது, அறநிலையத் துறை விதிகளின்கீழ் எப்படி எப்படி நட வடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதற்கு இங்கே விவகாரங்கள் எல்லாம் இருக்கின்றன, அதைத் தான் சுட்டிக் காட்டியிருக்கிறோம்,

அடுத்து அதன் தொடர்பாகவே புலன்விசாரணை செய்யும்
அதிகாரம் கமிஷனுக்கு உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன் இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவா 'அ' தரப்
பினர் பல்வேறு சாட்சியங்களை பல்வேறு வழக்குகளை எடுத்து
வைத்திருக்கிறார்கள். ஆனால் 'ஆ' தரப்பினருக்கு அப்படிப்பட்ட
வாய்ப்புகளே இல்லை என்று குறிப்பிட்டார்கள். ஆனால் பல
கமிஷன்களைப் பற்றி அவர்களுக்குத் தெரியும். பல கமிஷன்களை
அமைத்தவர்கள் அவர்கள், கமிஷன் நடவடிக்கைகள் என்ன
என்பதும் தெரியும். உண்மையைக் கண்டறிவதற்காக அமைக்கிற
போது கமிஷனுக்குத் தேவையான எல்லா அதிகாரிகளையும்
அவர்கள் கேட்கிறபோது எல்லாம் அரசாங்கம் வழங்குகிறது. இந்த
அரசாங்கம் அதிலே எப்படி நடந்துகொண்டிருக்கிறது என்பதை
கமிஷன் தன்னுடைய அறிக்கையிலேயே பாராட்டியிருக்கிறார்கள்
அறநிலையத் துறையில் திருச்செந்தூர் ஆலய நிர்வாக அதிகாரி
எப்படி எல்லா ஆவணங்களையும் தந்தார் என்று பாராட்டியிருக்
கிறார். அரசு எப்படி முழு ஒத்துழைப்பையும் தந்தது,
நான் கேட்டபொழுது எல்லாம் எல்லா அதிகாரிகளையும் தந்தார்
கள். வசதிகளையும் தந்தார்கன் என்று குறிப்பிட்டு இருக்கிறார்
கள். ஆனால் இங்கே பிரச்சினையாக மன்றத்திலே விவ தத்
திற்கு வந்துவிட்ட காரணத்தினாலே கமிஷன் குறிப்பிடாதது
நடந்திருப்பதை நான் ஆய்வு சம்பந்தமாக எடுத்துச் சொல்ல
விரும்புகிறேன். கமிஷனுக்கு ஒரு தனி புலனாய்வு அதிகாரியை
போட்டுக்கொள்ள அதிகாரம் இருக்கிறது. அவர்கள் கேட்டுப்
பெற்றுக் கொள்ளலாம். இன்றைக்கு சி.ஐ.டி. மூலம் விசாரணை
என்று சொல்கிறார்களே அதை அவர்களே நடத்தியிருக்க
முடியும். நடத்தியிருந்தால் இந்தப் பிரச்சினை வந்திருக்காது.
ஆனால் அவர்கள் கேட்கிறார்கள், அது ரிப்போர்ட்டிலே வர
வில்லை. அவர்கள் நான் இதிலே தீவிரமாகப் புலன் விசாரணை
செய்ய ஒரு அதிகாரி வேண்டுமென்று கேட்கிறார்கள். அப்படிக்
கேட்கிறபோது ஒரு பேனலை எனக்குக் கொடுங்கள் என்று
கேட்கிறார்கள். ஒரு பேனலை அனுப்புவதற்கு அரசாங்கம்
தயாராக இருக்கிறது. அடுத்து அவர்கள் ஒரு ஓய்வுபெற்ற
டி.எஸ்.பி.,போலீஸ் அதிகாரியை குறிப்பிட்டு இவரை அனுப்புங்கள்
என்று கேட்கிறார்கள். உடனே அரசாங்கம் அந்த ஓய்வுபெற்ற
அதிகாரியையே நியமிக்கிறது. அந்த ஓய்வுபெற்ற டி.எஸ்.பி,
போலீஸ் அதிகாரியை கமிஷன் அறிமுகப்படுத்தி இதே இந்த
டி.எஸ்.பி., இந்த போலீஸ் அதிகாரிதான் புலன் விசாரணை
செய்வதற்கு நியமிக்கப்பட்டு வந்திருக்கிறார் ஓய்வுபெற்றவர்
என்று சொல்கிறார் உடனே அங்கேயிருந்த 'ஆ' தரப்பினர்
அவரை நியமிக்கக்கூடாது என்று தடுக்கிறார்கள். ஏன் நியமிக்கக்
கூடாது சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிற விதிகளின்படி ஒரு
அதிகாரி நியமிக்கப்பட வேண்டுமே தவிர ஓய்வுபெற்றவரை
நியமிக்கக்கூடாது, ஓய்வுபெற்றவருக்கு அதிகாரி என்ற அந்தஸ்து
இல்லை. ஆகவே, அவரை நியமிப்பது சட்டப்படி செல்லாது
என்று 'ஆ' தரப்பினர் சொல்லியிருக்கிறார்கள். உடனே நீதிபதி



பால் அவர்கள் அதை ஏற்றுக்கொண்டு அப்படி நியமித்ததை
வேண்டாம் என்று அரசுக்குத் தெரிவிக்கிறார். அதற்குப் பிறகு
புலனாய்வு துறை அதிகாரி பற்றி கமிஷன் கைவிட்டுவிட்டது.
அதற்குப் பிறகு அவர்கள் மீண்டும் அதிகாரி வேண்டுமென்று
கேட்கவே இல்லை. ஆனால் பின்னாலே என்ன வருகிறது
என்றால் அந்த அதிகாரி அரசாங்கத்திற்கு எழுதுகிறார்.
என்னை ரீஅப்பாயிண்ட் செய்து எனக்கு அதிகாரி என்ற
அந்தஸ்தைக் கொடுத்து என்னை கமிஷனுக்கு அனுப்புங்கள்
என்று கேட்கிறார். அரசாங்கம் நிறுத்தி வைத்தது. காரணம்
கமிஷன் அதற்குப் பிறகு புலனாய்வு அதிகாரி பற்றிக் கேட்கவே
யில்லை என்பதுதான். ஆகவே கமிஷனுக்குப் புலனாய்வு
செய்வதற்கு அதிகாரம் இருக்கிறது. புலனாய்வு செய்கிற
அதிகாரியை வைத்து அவர்கள் புலனாய்வு செய்திருக்கலாம்.
அதற்குத்தான் இந்தக் கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது.

அரசுத் தரப்பு வழக்கறிஞர் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.
அரசு தரப்பு வழக்கறிஞர் அல்ல. 'அ' பிரிவினர், 'ஆ' பிரிவினர்
ஏ.பி., என்ற இரண்டு தரப்பினர் இருக்கிறார்கள் என்று கமிஷனே
சொல்கிறது. 'அ' தரப்பினர் தேவஸ்தானத்தைச் சேர்ந்தவர்கள்
மற்றவர்கள், அதாவது இது தற்கொலை என்று சொன்னவர்கள்.
அவர்களுக்கு திருச்செந்தூர் தேவஸ்தானத்தின் சார்பிலே ஒரு
வழக்கறிஞர் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்றால் அவர்கள் என்ன
குற்றவாளிகளா? குற்றவாளிகள் என்று முடிவு செய்யப்பட்டதா?
குற்றம் செய்த ஒருவருக்கு தேவஸ்தானமும் வழக்கறிஞரை
நியமிக்காது. அரசாங்கமும் வழக்கறிஞரை நியமிக்காது.
குற்றத்தைச் சாட்டுகிற அரசாங்கமே நீதிமன்றத்திலே ஏழையாக
இருப்பவனுக்கு இலவச சட்ட உதவியைத் தருகிறோம் என்று
சொல்கிற சட்ட விதியை வைத்துக்கொண்டிருக்கிறபோது யார்
குற்றவாளி என்பதைத் தெரிந்துக் கொள்ள முடியாத ஒரு
விசாரணைக்கு அங்கே என்ன நடந்தது என்பதைச்
சொல்வதற்கு தேவஸ்தானத்தின் சார்பிலே ஒரு வழக்கறிஞர்.
போலீஸ் தரப்பிலே நடைபெற்ற சம்பவங்கள் என்ன என்று
எடுத்துச் சொன்னவர்கள் சார்பிலே அவர்களுக்காக வாதாடு
வதற்காக ஒரு வழக்குரைஞர் அரசுத் தரப்பிலே எந்த வாதமும்
கிடையாது; எந்த வழக்குரைஞர்களும் கிடையாது. அதை
நான் அருள் கூர்ந்து இங்கே தெரிவித்துக் சொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 11-10]

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, இந்த அறிக்கை
யினுடைய பக்கம் 36-லே தேவஸ்தானத்தின் சார்பில் வாதிட்ட
வழக்குரைஞர் திரு. விருத்தாச்சலம் ரெட்டியாரும், அரசு சார்பில்

வாதிட்ட வழக்குரைஞர் திருமதி பத்மினி ஜேசுதுரையும் கூறினர்
என்று இருக்கக்கூடிய அந்தப் பகுதியைத் தாங்கள் ஆட்சேபிக்
வில்லையே ; அரசினுடைய ஜீ. ஓ.—விலே ஆட்சேபிக்கவில்லையே

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, நா
அதைத்தான் முன்னாலேயே சொன்னேன். நீதிபதி அவர்கள
னுடைய விவாதத்திலே நுழைந்து அதை மறுத்துக் கொண்டு
ருப்பது அரசாங்கத்தினுடைய வேலை அல்ல : எங்கே ஐயப்
பாடுகள் தோன்றியிருக்கின்றனவோ அந்த ஐயப்பாடுகள் களையப்
பட்டால்தான் புதிய குற்றவாளிகளை அல்லது குற்ற நடந்
திருந்தால் கண்டுபிடிக்க இயலும் என்கிற நோக்கத்திலேயே
எடுத்து வைக்கப்பட்டதுதான். அதனாலே அதற்குள்ளே, நீதிபதி
அவர்கள் ஏன் அரசு வழக்குரைஞர்கள் என்று சொன்னார்கள
என்றால் அங்கே ரிக்கார்டுகள் இருக்கின்றன, எங்கேயாவது
கவர்ன்மெண்ட் ப்ளீடர் என்று யாரையாவது அங்கே அனுப்பி
யிருக்கிறோமா ? சர்க்கார் தரப்பிலே அவர் ஆஜர் ஆகிறார் என்று
சொல்லியிருக்கிறோமா ? சர்க்கார் தரப்பிலே அங்கே வாதம்
செய்யப்பட்டதா ? அவரே தெளிவாகச் சொல்கிறார் 'அ'
தரப்பினர் 'ஆ' தரப்பினர்; 'ஏ' தரப்பினர் 'பி' தரப்பினர்.
ஆகவே, இதில் அரசு எந்த முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை.

இன்னொன்றை இங்கே மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம்
சொன்னார்கள். இந்த நீதிபதியினுடைய அறிக்கையிலே இருக்
கின்ற பல விவரங்களை எடுத்துச் சொல்லி, இப்படியெல்லாம்
மோசடி நடந்திருக்கிறது இந்த மோசடிக்கு காரணமாக அரசாங்கம்
இருக்கிறது என்று சொன்னார்கள். நான் அதையே உங்கள்
மூலம் அவர்களுக்குச் சொல்கிறேன். இப்படிப்பட்ட அங்கே
தயாரிக்கப்பட்ட அறிக்கைகள் அனைத்தும் கமிஷன் முன்ன லை
வைத்திருப்பது ஒன்றே இந்த அரசாங்கம் அதிலே தலையிட
வில்லை என்பதற்கு எடுத்துக்காட்டு என்பதைப் பணிவன்போடு
தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசாங்கம் தலையிட்டிருந்தால் அங்கே முரண்பாடான
அறிக்கைகள் மிஷனுக்கு போயிருக்குமா ? தலைமைச் செயல
கத்திலேயிருந்து ஆணையாளர்—செயலாளரை அழைக்கிறார்கள்.
அவர் டெலிபோனிலே ரிசீவ் செய்கிற ஒரு சிட் ; பென்சிலிலே
நோட் பண்ணி வைத்திருக்கிறார். அது உள்பட கமிஷனுக்குப்
போகிறது. அதை எடுத்துக் கொண்டுதான் கேட்கிறார்கள்,
ஹேங்கப், ஹோல்ட் என்று. இங்கே தலைமைச் செயலகத்திலே
இருக்கின்ற செயலாளரைக் கேட்டார்கள், ஆனால் அந்த 'ஆ'
தரப்பினர் பக்கத்திலேயே இந்தச் செய்தி கொடுத்த ரேஞ்சு
ஆட்சித் தலைவர் அவரைக் கூப்பிட்டு என்ன கொடுத்தீர்கள்
என்று கேட்க விருப்பவில்லை. அவர்களுக்கு அதெல்லாம் தேவை
யில்லை. அவர்கள் வேறு எதையோ தேடிக்கொண்டிருக்கிறார்கள்.



அரசாங்கம் இதிலே தலையிட்டு ஏதாவது விவகாரங்களைப்
பண்ணி இருக்கிறதா என்று தெரிந்து கொள்ள வேண்டுமென்பது
ஆவல். அதற்காக அவரைக் கூப்பிடு, இவரைக் கூப்பிடு
என்கிறார்கள்.

இதைத் தற்கொலை என்று அரசாங்கத்திற்கு அறிக்கை
கொடுத்த மாவட்ட ஆட்சித் தலைவரைக் கூப்பிட்டுக் கேளுங்கள்.
திருநெல்வேலியிலே இருக்கிறார். ஆனால் இந்த 'ஆ' தரப்பினர்
கேட்கவில்லை. போலீஸ் சூப்பிரண்டெண்டெண்ட் இருக்கிறார்.
'ஆ' தரப்பினர் கேட்கவில்லை. ஒரு தகவலும் தெரியாத இங்கே
யிருக்கிற செயலாளரை அழைக்கச் சொல்கிறார்கள் ; அதற்குப்
பிறகு அமைச்சரையே அழைக்கச் சொல்கிறார்கள். நீதிபதி
அவர்களே தெரிவித்திருக்கிறார்கள் ; இந்த அமைச்சருக்கு இதிலே
என்ன ஐயா சம்பந்தம், அவர் நேரிலேயும் இல்லை, பார்க்கவும்
இல்லை ; அவரை அழைத்து இன்னும் பிரச்னையை ஏன் பெரிது
படுத்த வேண்டுமென்று. இப்பொழுதே இது....

திரு. அ. ரகுமான்கான் ; மாண்புமிகு மன்றத்தினுடைய
தலைவரவர்களே, அறிக்கைக்கு மாறாக ஒரு கருத்தைச்
சொல்கிறார். அறிக்கையை நான் படித்த காரணத்தால்
சொல்கிறேன். அறிக்கையில் இல்லாததைச் சொல்கிறார். அந்த
அறிக்கையிலே நீதிபதி பால் அவர்கள் தெளிவாக் குறிப்பிடுகிறார்
இது கொலைதான் நடைபெற்றது என்று சொல்பவர்களினுடைய
வாதத்தை நான் எற்றுக்கொள்ளவில்லை ; இது தற்கொலைதான்
என்று சொல்பவர்கள் சம்பந்தப்பட்ட பிரச்னைகளை எடுத்துக்
கொண்டு, அதிலே வருகின்ற சாட்சிகளை விசாரிப்பதைத்தான்
நான் முறையாக வைத்திருக்கிறேன். யாரை விசாரிப்பது,
யாரைக் கூப்பிடுவது இது சம்பந்தமாக என்பது என்னுடைய
முடிவானது என்று அவர்கள், கொலைதான் என்று சொல்லப்
பட்ட வாதங்களை விசாரிக்க வேண்டிய அவசியமே இல்லை ;
தற்கொலைதான் என்று நிரூபிப்பவர்களைத்தான் நான் விசாரிக்கப்
போகிறேன் என்று தெளிவாக அறிக்கையிலே இருக்கிறது.
எனவே, அமைச்சரவர்கள் "ஆ" தரப்பைச் சார்ந்தவர்கள்
இவர்களை விசாரிக்க வேண்டுமென்று கேட்கவில்லை ; கூப்பிட
வில்லை என்று சொல்கின்ற வாதமே அடிப்பட்டுப் போகிறது
அதற்கு மாறாக அமைச்சரவர்கள் தவறான தகவலைத்
தருகிறார்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, நான் கமிஷன் அழைக்கவில்லை என்று இங்கே
குறிப்பிடவில்லை. இந்த "ஆ" தரப்பினர், குற்றம் சாட்ட முன்
வந்திருக்கின்ற தரப்பினர் ஏன் இவர்களையெல்லாம் அழைக்க
வில்லை என்றுதான் கேட்கிறேனே தவிர நான் கமிஷன் அழைக்க

வில்லை என்று கேட்கவில்லை. (குறுக்கீடு) அவர்கள் அழைக்கச் சொன்னல் கமிஷன் அழைக்கிறது. அதற்கு மேலே கமிஷன் அதை ரிஜக்ட் செய்திருக்க வேண்டும். அழைக்கச் சொல்லி, நான் மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்க மாட்டேன், எஸ்.பி.ஐக் கேட்க மாட்டேன் என்று கமிஷன் நிராகரித்திருந்தல் அது வேறு.

டாக்டர் மு. கருணாநிதி ; 'ஆ' தரப்பினர் தான் அழைக்க வில்லை, 'அ' தரப்பினர் ஏன் அழைக்கவில்லை ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : 'அ' தரப்பினர் யாரை அழைக்கச் சொல்வது என்பதற்குத்தான் நீதிபதி அவர்கள் முன்னாலே ரூலிங் கொடுத்துவிட்டார் என்று சொல்கிறீர்களே, 'அ' தரப்பினர் அழைக்க விருப்பவில்லை, காரணம், 'ஆ' தரப்பினர் சம்பந்தப்பட்டவர்களை — யாரும் குற்றம் சுமத்துகிறவர்கள் வந்து கூண்டேறி சாட்சி சொல்ல வேண்டுமே தவிர, அந்தக் குற்றம் சுமத்துகிறவரைக் கூப்பிடு, கூப்பிடு என்று மற்றவர்கள் சொல்லமாட்டார்கள். குற்றத்தை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு எப்போதுமே குற்றம் சுமத்துகிறவருக்குத்தான் உண்டு, பிராசிக்யூஷன் தரப்பிற்குத்தான் உண்டு. ஐயம் திரிபுற சாட்சியங்களை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு, யார் குற்றம் சுமத்துகிறார்களோ அவர்களுக்குத்தான் உண்டு. நான் குற்றம் செய்யவில்லையென்று சொல்கிறவன், அந்தக் குற்றம் சுமத்துகிறவனைக் கூப்பிடு, கூப்பிடு என்று கேட்க வேண்டிய அவசியம் இல்லை. அவன் எங்கே நீதி மன்றத்திற்கு வரவில்லையோ, வழக்குமன்றத்திற்கு வர வில்லையே , குறுக்கு விசாரணைக்கு தன்னை உட்படுத்த விரும்பவில்லையோ, அங்கே வலுவிழந்த வாதம் இருக்கிறது என்பது பொது நியதிப்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். ஆகவேதான், இங்கே நான்......

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தவறான தகவலை அடுக்கிக் கொண்டே போனால் நல்லதல்ல. ஏனென்றால் 'அ' தரப்பு—சுப்பிரமணியபிள்ளை தற்கொலை செய்து கொண்டார் என்று வாதிக்கின்ற தரப்பாகும். அவர்கள் தங்களுடைய வாதத்திற்கு வலுவூட்டுகின்ற வகையில், அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த அதிகாரிகளை அழைக்க மனு போட்டிருக்க வேண்டுமே அல்லாமல் அது 'ஆ' தரப்பினருடைய வேலை இல்லை.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த விவாதத்திற்குள்ளே நுழைந்தால், இவைகள் நீதிமன்றத்திலே நடைபெற வேண்டிய வாதம். இங்கே சட்ட மன்றத்திற்குள்ளே நடத்துகின்ற ஒரு நிலைமையை நாம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே, இங்கே எல்லா கட்சிகளைச் சேர்ந்தவர்களும், பல்வேறு தரப்புகளைச் சேர்ந்தவர் களும், கட்சிகளைச்சேர்ந்த உறுப்பினர்களும், இந்த கருத்துக்களை எடுத்துச்சொல்கிற சூழ்நிலையில், நாங்கள். இதற்குள்ளே நுழைந்து கருத்து சொல்ல முன்வருவதே கூட, மீண்டும் அரசாங்கத்திற்கு உள்நோக்கம் இருக்கிறது, உள்நோக்கம் இருக்கிறது என்று



சொல்கிற நிலைக்கு ஆளாக்கப்படுவோம். அதனாலேதான், இப்பொழுது உங்களால் காட்டப்படுகிற இந்த மாறுபட்ட ஆவணங்கள் என்று சொல்லப்படுகிற, இந்த சாட்சியக் குறுப்புகள் அனைத்துமே அரசாங்கத் திட்டத்திலேயிருந்து கொண்டு போய் தரப்பட்டது ; துறையினிடத்திலேயிருந்து கொண்டு போய் தரப் பட்டதிலிருந்தே அரசாங்கம் அதிலே எந்தவிதமான தலையீடும் இல்லாமல், அந்த விசாரணையை நடத்தியிருக்கிறது என்பதை நான் இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இங்கே, டாக்டர் இராமமூர்த்தி அவர்களுடைய சாட்சியத்தை பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட் டார்கள். அந்த நிபுணர் பிரேதப் பரிசோதனையைச் செய்கிறவர், அவர் வேட்டியைப்பற்றிக் கூறமுடியாது என்று குறிப்பிட்டார்கள். ஆனால், மிகப் புகழ்பெற்ற Forensic Export, 20,000 பிணங்களை அறுத்து புகழ் பெற்ற கோபாலகிருஷ்ணன்—அவர் அந்த ர்ட்டிபி கேட்ட, வைத்துக் கொண்டு மாத்திரம் கருத்தைச் சொல்லாமல், அங்கே உள்ளே போய், எங்கே தூக்கிட்டார்கள், எந்தத் தாழ்ப்பாளை உடைத்தார்கள், அதை எப்படி வெளியிலே இருந்தே, அந்தத் தாழ்ப்பாளைப் போட முடியும் என்று மிகப்புகழ் பெற்ற கிரிமினல் வழக்குகளிலே ஈடுபட்டிருக்கிற ஒரு குற்றவாளியினுடைய புத்திக்குக் கூட உதயமாகாத அவைகளையெல்லாம் அந்த நிபுணர் மாத்திரம் இங்கே சொல்லி இருக்கிறார். அது ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது. ஆனால், டாக்டர் இராமமூர்த்தி பிரேத பரிசோதனை செய்கிறவர், இந்த வேட்டியைப் பற்றியெல்லாம் சொல்லக் கூடாது. அதிலே, இன்னொன்றும் நடந்திருக்கிறது. நான் அதை பின்னாலே பல உண்மைகள் வர இருக்கின்றன. இந்த பிரச்னைகளின் ஆழத் தையெல்லாம் இங்கே சொல்கிறபொழுது, ஐயப்பாடு வருவதற்கு அரசு திற்குதானோ போனால் தேவையற்ற ஐயப்பாடு வருவதற்கு இடம் அளித்து விடக்கூடாது என்பதற்காகத் எந்த நிலையிலும் இடம் அளித்து விடக்கூடாது என்பதற்காகத் தான் நாங்கள் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறோம். காரணம், அரசாங்கத்திலே இருப்பவர்கள் தான் ஒரு கணவனுக்கு அடங்கிய சட்டத்திற்கு அடங்கியவர்களாக இருக்க வேண்டுமென்பது நியதி. அரசாங்கத்திலே இல்லாதவர்கள் யாருக்கும் அடங்க வேண்டிய தில்லை. ஆகவே, அவர்கள் எதையும் சொல்லலாம். நாங்கள் சொல்கிற பொழுது அதற்கு உள்நோக்கம் வந்துவிடும், சட்டத்தை மீறியதாகிவிடும், நீதிமன்றத்தை அவமதித்ததாக ஆகிவிடும், நீதிபதியைக் குறைத்துச் சொன்னதாக ஆகிவிடும். ஆகவே, எப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த நிபுணர் வாதம் எப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத்தான் அரசாங்கம் எடுத்துச் சொல்லியிருக்கிறது.

ஏன், கோபாலகிருஷ்ணன் வாதத்தைப் பற்றி அரசாங்கம் அக்கறை செலுத்தியுள்ளது என்றால், நாளைக்கு இது நீதிமன்றத் திற்கு முன்னால் போய் நிற்க வேண்டாமா? அப்படி ஒரு குற்றவாளி அங்கே நிறுத்தப்பட வேண்டும் என்பதற்கு முன்னால்,

நாமே அவனை சிரச்சேதம் செய்து விடலாமா? இதிலே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக் கிறார்கள், கிளைவ் ஹாஸ்டலைப் பற்றி நான் நடவடிக்கை எடுக்கவில்லையா என்றெல்லாம் சொன்னார்கள். கிளைவ் ஹாஸ்டலைப் பற்றி, மற்றவைகளைப் பற்றி இங்கே விவாதங்கள் வந்தபொழுது என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பது தெரிகிறது.

[முற்பகல் 11.20]

என்ன, நாம் நினைத்த உடனேயே அவருடைய தலையை சீவுவதற்கு அந்தக் காலத்து ராஜதர்பாரா நடத்துகிறோம்? நட வடிக்கை முயற்சிகளை எடுக்கிறபோது, சட்டப்படி நடவடிக்கை எடுக்கவில்லையானால் அவர்கள் பின்னாலே நீதிமன்றத்திலே போய், தவறான நோக்கத்தில் என்மீது நடவடிக்கை எடுத் தார்கள் என்று சொல்லி தப்பித்துக் கொள்ள முடியும் என்பதை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இந்தச் சட்டமன்றத்திலேயே தெரிவித்திருக்கிறார்கள்.

ஆகவே, நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று வருகிறபோது, நாளைக்கு நீதிமன்றத்திலே போய் நாம் சாட்டுகின்ற குற்றங்கள், கண்டுபிடிக்கிற குற்றங்கள் அதிலே சம்பந்தப்பட்டிருக்கிற குற்றவாளிகள் இருந்தால் அவர்கள் தண்டனை பெற வேண்டுமென்றால், இந்தச் சாட்சியம் போதாது. காரணம் இந்தச் சாட்சியத்தைப் பற்றி உச்சநீதி மன்றமே என்ன சொல்லி இருக்கிறது என்பதையும், இந்த நாட்டுக்கும் நினைவுபடுத்துகிறோம். சட்டமன்றத்திற்கும் நினைவு படுத்துகிறோம். ஓய்வு பெற்ற அந்த மிகப்பெரிய பரிசோதனை நிபுணரை நீதிபதி அவர்கள் அழைக்கிறார்கள். அது அவர் களுக்குள்ள உரிமை, அவர்களே சொல்லுகிறார்கள். இவருடைய சாட்சியத்தை நாம் நம்பலாம் நம்ப மறுக்கலாம், என்று சொல்லிவிட்டு நம்புகிறேன் என்கிறார்கள். அது அவர்களுக்குள்ள உரிமை. நாளைக்கு—நம்ப மறுத்திருக்கிறதே உச்சநீதி மன்றம்— அதுதானே வரப்போகிறது. உயர்நீதி மன்றத்திற்கு வழக்கு போனால் அந்தச் சான்றுகள்தானே எடுத்துத் தரப்படும். இந்தக் கமிஷனுடைய முடிவுகள் அங்கே வந்து நிற்காதே. நாம் நம்ப லாம் கோபாலகிருஷ்ணனை. என்னைவிட மாண்புமிகு எதிர்க் கட்சித்தலைவர் அவர்கள் மிக அதிகமாகத் தெரிந்தவர்கள். அவர்கள் நம்பலாம். அவருடைய ஆட்சிக் காலத்திலே 2, 3 ஆண்டுகளுக்குப் பதவி நீட்டிப்பு கொடுக்கப்பட்டவர். தெரியாது என்று சொல்லுகிறார்கள்—அப்படி ஓய்வு பெற்றவரை முன்னாள் ஆட்சிக் காலத்திலே பதவி நீட்டிப்பு கொடுக்கப் பட்டவரை, தேடிக் கண்டுபிடித்து, அவர் சாட்சிக்கு அழைக் கப்படுகிறார்.





அப்படியானால் அரசாங்கத்தினிடத்திலே கேட்டிருக்க வேண்டும். ஒரு பேனல் ஆப் எக்ஸ்பெர்ட்ஸ் கொடுங்கள் என்று நாங்கள் மீண்டும் அதை பரிசோதனை செய்கிறோம். பரிசீலனை செய்கிறேன், விசாரிக்கிறேன் என்று கேட்டுப் பெற்றிருக்கலாம். அது அவர்களுக்கு உள்ள உரிமை. கமிஷனுக்குள்ள உரிமை. நாங்கள் அதிலே தலையிட விரும்ப வில்லை. அப்படி அவர்கள் ஓய்வுபெற்ற அதிகாரியைக் கேட்டு, அரசாங்கமே கொடுத்தது. நீங்கள் ஏன் கேட்கிறீர்கள் என்று எந்த இடத்திலும் தலையிடவில்லை. ஆனால் அங்கே வந்திருந் தவர்கள்தான் தடுத்து நிறுத்தி விட்டார்கள் அந்த போலீஸ் அதிகாரியை. ஆனால் கோபாலகிருஷ்ணனை யாரும் தடுத்து நிறுத்தவில்லை. ஆனால் இந்த "அ" தரப்பில் இருக்கின்ற வர்கள். தற்கொலை என்று சொன்னவர்கள், அவர்களுக்கே தெரியாது கோபாலகிருஷ்ணன் வரப்போகிறார் என்று, கடைசியாக சாலையிலே தெரிகிறது. கோபாலகிருஷ்ணன், எம்.பி.பி.எஸ். வருகிறார் அவர் யார், பாரன்சிக் எக்ஸ்பர்ட்டா, அவர் ரிட்டையரானவரா, உத்தியோகத்தில் இருக்கிறவரா? ஒரு தகவலும் தெரியவில்லை. அதைவிட கோபாலகிருஷ்ணனை பற்றி நாம் ஏன் எடுத்துக் கொள்கிறோம் என்றால் நம்முடைய கமிஷன் அடிப்படையாக சந்தேகிப்பதற்கு ஆதாரம் என்று ஏற்றுக்கொள்கிற ஒரே சாட்சி கோபாலகிருஷ்ணனுடைய சாட்சி தான். ஆகவே அஸ்திவாரம் நாளைக்குத் தகர்க்கப்பட்டு விடு மானால் நாம் எங்கே போய் வழக்குமன்றத்திலே நிறுத்துவது? அந்தக் குற்றவாளியைக் கொண்டு போய் நிறுத்துவது? அதனாலேதான் கோபாலகிருஷ்ணனைப் பற்றி ஆராய்ந்திருக் கிறோம். இனிமேல் கண்டுபிடிக்கிறவர்களாவது இந்த கோபால கிருஷ்ணனை மனதிலே வைத்துக் கொள்ளாமல் இன்னும் தக்க ஆதாரங்களைக் கண்டுபிடிக்க வேண்டும் என்பதற்காக பகிரங்க மாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

நான் கேட்கிறேன், இதுவரையில் இந்தச் சட்டமன்றத்திலே இப்படிப்பட்ட எந்த அறிக்கைகளாவது காலத்திலே வைக்கப் பட்டிருக்கிறதா? ஓராண்டு காலம் கழித்து வைக்கப்பட்ட தில்லையா? 1¼ ஆண்டு காலம் சட்டமன்றத்திலே போராடி வாதாடிப் பெற்றிருக்கிறார்களே, இங்கே சான்றுகள் இல்லையா? ஆனால் 6 மாத காலத்திற்குள்ளே இந்த அரசாங்கம் அறிக்கையை வைக்கிறது. மொழிபெயர்ப்போடு வைக்கிறது. எடுக்கப்பட்ட நடவடிக்கைக் குறிப்புகளோடு வைக்கிறது. முன்னாலே எடுக்கப்பட்ட நடவடிக்கைக் குறிப்புகளோடு, இந்த மன்றம் அறிக்கைகளைப் பார்த்ததே கிடையாது. எடுக்கப்பட்ட நடவடிக்கைக் குறிப்புகளை, இந்த அரசாங்கத்திற்கு உள் நோக்கம் இருந்தால் இரண்டே வரிகளிலே சொல்லிவிட்டுப் போயிருக்கலாம். கமிஷனுடைய பரிந்துரையை ஏற்றுக் குற்றப் புலனாய்வுத் துறைக்கு ஆணையிடப்பட்டிருக்கிறது, இரண்டாவது பரிந்துரை அறநிலையத் துறை மூலம் நடவடிக்கை எடுக்க

ஆணையிட்டிருக்கிறோம் என்று சொல்லி இருந்தால், இந்த
விவாதமே வந்திருக்காதே, இந்தப் பிரச்சினையே வந்திருக்காதே.
அப்படியானால் இதிலிருந்தே எங்களுக்கு எவ்வித மான உள்
நோக்கமும் இல்லை என்பதை நீங்கள் தெரிந்து கொண்டிருக்க
முடியுமே. நீங்கள் நாடு முழுவதும் பிரச்சாரம் செய்ததற்குப்
பிறகு இந்தச் சட்டமன்றத்திலே பேசுவதற்கு ஒரு வாய்ப்பை
அரசு இன்றைக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. நாங்கள்
வெளியே போய் சொல்ல முடியாது. அரசின் நிலையை எடுத்துப்
பொதுக்கூட்டத்திலே பேசுவது முடியாது. அதற்காகத்தான் சட்ட
மன்றத்திலே இன்றைக்கு விவாதத்தை நடத்துவதற்குத்
துணிந்து நாங்கள் முன் வந்தோம். எங்களுடைய மடியிலே
கனம் இல்லை, அதனால் வழியிலும் பயமில்லை என்ப
தனாலேதான் இந்தக் கருத்தை நாங்கள் எடுத்துச் சொல்வதற்
காக வைத்திருக்கிறோம். அதற்குப் பிறகு, நம்முடைய எதிர்க்
கட்சித் தலைவர் அவர்கள், நம்முடைய முதலமைச்சர் அவர்கள்,
குற்றவாளிகளை எங்கே சுட்டிக் காட்டினார்கள் சொல்லுங்கள்
என்று கேட்டார்கள், என்று கேட்டு, நம்முடைய கமிஷன்
அறிக்கையிலே முதலுதவி செய்யப்படாத சூழ்நிலையைக் குறிப்
பிட்டுக் காட்டினார்கள். நான் கேட்கிறேன், முதல் உதவி
செய்யப்படாத ஒரு சூழ்நிலை கொலைக் குற்றமா? இங்கே இந்தச்
சாலைகளிலே நூற்றுக்கணக்கான விபத்துகளிலே சம்பவங்கள்
நடைபெற்று, நூற்றுக்கணக்கான மக்கள் பார்த்துக்கொண்டு
நின்று கொண்டு இருக்கிறார்கள், பயணம் செய்கிறார்கள்,
முதல் உதவி செய்வதா இல்லையா என்பது பிரச்னையே
இல்லை. யாரும் கிட்டே போய் நெருங்கி தொடமுடியாத
நிலையில் இருக்கிறார்கள் — நான் வாதத்திற்குக் கேட்கிறேன்,
யாரும் கிட்டே போய் எதுவும் செய்ய முடியாமல் பார்த்துக்
கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் கொலைக்
குற்றம் சாட்டப்படக்கூடியவர்களா? அவர்கள் மீது எல்லாம்
குற்றம் சாட்டிவிட முடியுமா? ஆனால் இங்கே என்ன நடந்தது?
அவரை உடனடியாகக் காரிலே ஏற்றி ஆஸ்பிடலுக்கு அனுப்பி
யிருக்கிறார்கள். அதன் உள்ளே நான் நுழைய விரும்ப
வில்லை.

ஆனால், நீங்கள் குற்றவாளிகளைக் கைது செய்யுங்கள்
குற்றவாளிகளைக் கைது செய்யுங்கள், அதற்கு ஆதாரம்
இதோ, விசாரணைக் கமிஷனின் இத்தனையாவது பக்கத்திலே
சொல்லியிருக்கிறார், அந்த அதிகாரியை யாருமே
காப்பாற்றுவதற்கு முயலவில்லை, முதலுதவி செய்ய
முயலவில்லை என்று சொல்கிறார்கள். அந்த சரிபார்க்கும்
அதிகாரி, உண்டியல் உடைத்து இருப்பதைப் பார்த்து கோபம்
அடைந்து அங்கேயிருந்து வெளியேறி வந்துவிட்டார். ஆனால்,
அவர் மேல் அதிகாரிகளுக்கு அதைப் பற்றி ஏன் தெரிவிக்க
வில்லை என்பது விடை காணப்படவேண்டிய கேள்வியாக
இருக்கிறது என்று அரசுத் தரப்பிலே எடுக்கப்பட்ட நடவடிக்கைக்
குறிப்பிலே நம்முடைய ஐயத்தை எழுப்பி இருப்பதற்கு



மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களும், மற்ற உறுப்பினர்
களும், நம்முடைய குமரி அனந்தன் அவர்களும் சொன்னார்கள்,
அவரை எங்கே போன் செய்யவிட்டு இருப்பார்கள் என்று.
நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உரிய
இலக்கியச் சுவையோடு அவர் உட்கார்ந்து கொண்டு அறிக்கையை
எழுதிக்கொண்டு இருப்பார், அந்த நேரத்திலே போய் இருப்
பார்கள், பார்த்து இருப்பார்கள் — என்று இப்படியெல்லாம்
பார்த்து இருப்பார்கள், இருந்து இருப்பார்கள் என்று சொல்லி
விட்டு — யாருமே அங்கே சாட்சி சொல்ல வரமாட்டார்கள்,
யாருமே அதை சான்றாக நிரூபிக்க வர மாட்டார்கள், ஆனால்
நடவடிக்கை எடுத்து யாரையாவது கொண்டு போய் நிறுத்த
வேண்டும் என்று வெளியே இருப்பவர்கள் சொல்லலமே
தவிர, ஒரு சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை
மையில் இருக்கிறவர்கள் எப்படி நடவடிக்கை எடுக்க முடியும்
என்பதைப் பார்க்க வேண்டும்.

கமிஷனே யாரைக் குறிப்பிட்டு இருக்கிறது என்பதற்கு
மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பட்டியல் போட்டுத்
தந்தார்கள். நான் கேட்கிறேன். குற்றவாளிகளைப் பட்டியல்
போட்டுக் காண்பிக்கிறது கமிஷன் என்று சொல்கிறீர்களே, இது
வரையில் ஒரு இடத்திலாவது, அந்த அறங்காவலர் குழுவைப்
பற்றிக் குறிப்பிட்டு, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று
சொல்லியிருப்பது போல், இங்கே இருக்கும் எக்சிகியூடிவ் ஆபீசர்
அந்த நகை சரிபார்க்கும் அதிகாரியின் தரத்தில் உள்ள
அதிகாரி ஒரு அசிஸ்டென்ட் கமிஷனர் அவர்களை இ. ஓ.
அவரைப் பற்றி எங்காவது குறிப்பிட்டு இருக்கிறீர்களா,
யாருடைய கவனத்திலும் அது வரவில்லையே, இப்போதுதானே
சொல்கிறீர்கள். இந்த 1¼ வருஷமாக யார் யாரையோ
குற்றவாளிகள் என்று சொன்னீர்களே, எந்த ஒரு இடத்திலாவது
இதைச் சொன்னீர்களா? இங்கே பேசிய உறுப்பினர்கள் எல்லாம்
அறங்காவலர் குழுவைக் கலையுங்கள், அறங்காவலர் குழுவைக்
கலையுங்கள் என்று சொன்னீர்களே, நான் கூறுகிறேன்—
நீங்கள் எங்கோ ஒரு இடத்தைக் குறியாக வைத்துக் கொண்டு,
அதையே பார்த்துக்கொண்டு இருக்கிறீர்கள். நமக்குப் பல
நேரத்தில் ஒரு இடத்தில் ஒரு குறியை நிலைநிறுத்தி விட்டால்
வேறு குறி நம்முடைய கண்ணில் படாது அல்லது படவேண்டிய
குற்றவாளிகள் தப்பித்துக் கொண்டு போய்விடக்கூடும். எதிலும்
சந்தேகம் உண்மையைக் கண்டுபிடிக்க உதவுமே தவிர
சந்தேகமே உண்மையாகி விடாது.

திரு. துரைமுருகன் : அந்த அசிஸ்டென்ட் கமிஷனர்—
அதாவது எக்சிகியூடிவ் ஆபீசர்—அவரையும் வேண்டுமானால்
குற்றவாளி லிஸ்டில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : எனக்கு அதைப் பற்றிக் கவலை இல்லை. நீங்கள் வைக்கின்ற வாதம் எப்படி இருக்கிறது என்பதற்குச் சொல்கிறேன். அறங்காவலர் குழுவை ஏன் கலைக்கவில்லை, அதிலே இந்த அரசுக்கு என்ன அக்கறை இருக்கிறது, ஏன் அவர்களைக் காப்பாற்றுகிறீர்கள் என்று எல்லாம் நீங்கள் கேட்டுக் கொண்டு இருக்கிறீர்களே, உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடியுங்கள், அங்கே யார் யார் இருந்தார்களோ அவர்கள் அத்தனை பேரையும் சொல்லி, அவர்கள் மீது நடவடிக்கை எடுங்கள் என்று சொல்லி இருக்க வேண்டுமா வேண்டாமா? சரி, அங்கே இருந்தது யார்? அறங்காவலர் என்று நம்முடைய கமிஷன் சொல்கிறது, நீங்களும் சொல்கிறீர்கள். அங்கே வந்தவர்கள் 3 பேர். 2 பேர் அந்த இடத்திற்கே வரவில்லை. அவர்களையும் சேர்த்துக் கலையுங்கள், அவர்களையும் சேர்த்துக் குற்றவாளியாக்குங்கள் என்று சொல்வது என்ன தர்மம், என்ன நியாயம், என்ன சட்டம்? அந்த இடத்திலே இருந்தவர்கள் சம்பந்தப்பட்டவர்கள் 3 அறங்காவலர்கள்.

சொல்லுகிற கமிஷனாவது இங்கே இருந்தவர்கள் மீது நடவடிக்கை எடுங்கள், சொல்லுகிற கமிஷன் எங்களுக்கு இவர்களிடத்திலே சந்தேகம் இருக்கிறது என்று சொல்லி இருந்தால் கூட நாங்கள் மிகத் தெளிவாக நடவடிக்கை எடுக்க முடியும். கமிஷனே எங்களுக்கு ஆணையிடுகிறது. நீ என்னுடைய பரிந்துரையை வைத்து நடவடிக்கை எடுக்காதே, நீ அறநிலையத் துறையின் சட்டத்திற்குள்ளே நுழைந்து, அறநிலையத் துறை விதிகளுக்குள்ளே நுழைந்து போய் நடவடிக்கை எடு என்று சொல்லியிருக்கிறது. பழி போட்டு தலைவாங்குவது என்பது பழமொழி தமிழகத்திலே. ஒரு நாயைக் கொல்ல வேண்டுமானால் கூட அந்த நாய்க்கு வெறிபிடித்துவிட்டது என்று சொல்லி கொன்றுவிடு என்று சொல்வார்கள்.

(முற்பகல் 11-30)

ஒரு ஓநாய், ஆட்டுக்குட்டி கதை சொல்வார்கள். ஒரு ஓநாய் மேல் கரையில் தண்ணீர் குடிக்கிறது. ஆட்டுக்குட்டி கீழ்க் கரையில் தண்ணீர் குடிக்கிறது. மேல் கரையில் இருக்கிற ஓநாய்க்கு எப்படியாவது ஆட்டுக்குட்டியை அடிக்க வேண்டுமென்ற எண்ணம். அதற்காக வம்பு இழுக்கிறது. நீ அங்கிருந்து தண்ணீரைக் கலக்கி விடுகிறாய், அது மேலே வருகிறது என்று சொல்லி அதன் மீது பாய்கிறது.

நியாயமாக இந்த அறங்காவலர் குழுவிலே இருப்பவர்கள் யாராவது அல்லது அறநிலையத்துறை அதிகாரிகள் யாராவது இதிலே ஐயப்பாட்டிற்கு உரியவர்கள், இந்தச் சம்பவத்திலே சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருந்தால், அரசு அதைப்பற்றி உடனடியாகப் பரிசீலிக்கும். இங்கே எங்களையும் கையைக் கட்டிப்போட்டுவிட்டு, நீ இந்த பரிந்





துரையை வைத்து நடவடிக்கை எடுக்காதே; நீ அறநிலையத் துறை சட்டத்திற்குள்ளே நுழைந்து நடவடிக்கை எடு என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப் பார்க்கிறபோது என்ன குற்றச்சாட்டுகள் வருகின்றன? நம்முடைய நீதிபதி என்ன குற்றச்சாட்டை எடுத்துக்காட்டுகிறார் என்றால் உண்டியல் திறக்க வரவில்லையென்பது. உண்டியல் திறக்க வராதது இதற்கு முன்னால் எத்தனை முறை நடந்திருக்கிறது? எத்தனை கோவில்களில் நடந்திருக்கின்றது? அது ஒரு மிகப் பெரிய குற்றமாக எப்படி எடுக்கப்படுகிறது? இங்கே வருகிற பிரச்னை அறங்காவலர்களை நீக்க வேண்டுமென்பது. அறநிலையத் துறை சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமானால் எடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் பட்டியல் சொன்னார்கள். நாங்களும் ஒன்றும் சோடை போகிறவர்கள் அல்ல. சுவாமிமலையில் ஒரு அறங்காவலரை நீக்கியிருக்கிறோம். திருவண்ணாமலையிலே 'ஷோ காஸ் நோட்டீஸ்' கொடுத்திருக்கிறோம். இந்த அறங்காவலர்கள் மீதும் இதற்கு பின்னாலேதான் சில புகார்களைத் தந்தார்கள். அதை வைத்துக்கொண்டு, ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று கேட்டிருக்கிறோம். அதிலே நமக்கு சட்ட பூர்வமான அடிப்படைகள் கிடைக்காமல், கமிஷனுடைய பரிந்துரை மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது சட்ட பூர்வமானதா இல்லையா என்பது கூட அல்ல. அந்தச் சூழ்நிலையில் நீங்கள் குற்றவாளி, குற்றவாளி என்று சொல்லி முதலுதவி செய்யாத காரணத்தாலே, முயற்சிக்காத காரணத்தாலே என்கிறார்கள். முயற்சி நடந்திருக்கிறதா இல்லையா என்பதெல்லாம் விசாரணை வருகிறபோது வரலாம். எப்படி காரை அனுப்பினார்கள், எப்படி டாக்டரை அழைக்கப் போனார்கள் என்பதெல்லாம் வருகிறது. ஆகவே, இந்தச் சூழ்நிலையில் அங்கே இருந்தவர்கள் எல்லாம் குற்றவாளிகள் என்றால் அங்கே இன்னும் பலபேர் இருந்திருக்கிறார்கள். அவர்களிலே யாரைக் குற்றவாளி என்று நீங்கள் அடையாளம் காட்டச் சொல்கிறீர்கள்? ஏன் இந்த அறங்காவலர்களை மாத்திரம் வைத்துக்கொண்டு இதற்கும் அரசாங்கத்திற்கும் இணைப்புப் போடுகிறீர்கள்? இதைத்தான் நாங்கள் பணிவன்போடு கேட்கிறோம்.

கமிஷன் கூட சஸ்பென்ஷன், ரிமூவல் ஆர் டிஸ்மிஸ் என்று ஒன்றைச் சொல்லியிருக்க வேண்டும். அப்படி இல்லாமல் இதிலே எப்படி நடவடிக்கை எடுப்பது? அவர்களுடைய கையை காலை வாங்கு; உயிரைப் போக்கு, இல்லையானால் குற்றுயிரும் குலையுயிருமாக்கு என்று சொன்னால் இப்படிப்பட்ட தண்டனை எப்படி கொடுக்க முடியும்? சஸ்பென்ஷன் என்றாவது சொல்லியிருக்க வேண்டும்; ரிமூவல் என்றாவது சொல்லியிருக்க வேண்டும் அல்லது டிஸ்மிஸல் என்றாவது சொல்லியிருக்க வேண்டும். எங்கள் கைகளையும் கட்டிப்போட்டுவிட்டு, நீ நடவடிக்கை எடு,

நடவடிக்கை எடு என்று சொன்னால் அரசாங்கம் சட்டமன்றத்திலே இந்த அறிக்கையை வைப்பது வரை காத்துக்கொண்டிருக்க வேண்டும். ஆகவே, சட்டபூர்வமான உருவம் தரப்படுவது வரை நாங்கள் காத்து இருக்க வேண்டி வந்தது. இதுதான் எங்களுக்கு இருந்த சங்கடம்.

ஆனால் இங்கே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விஷம் சாப்பிட்டாரா என்பது பற்றி ஒரு விஷயத்தை தாசில்தார் அனுப்பினார் என்று சொன்னார்கள். நான் அதற்குள்ளே நுழைய வேண்டாம் என்றுதான் இருந்தேன். ஆனால் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே சொன்ன பிறகு சொல்கிறேன். இந்த அறிக்கையும் அதாவது இந்தக் கடிதமும் அரசாங்கத்தினால் தரப்பட்டிருக்கிறது. எதற்காக அனுப்பியிருக்கிறார்கள் என்று விவாதத்திலிருந்து தெரிகிறது என்றால் இவர் மரணம் அடைந்திருக்கிறார். தற்கொலை என்று இருந்தால் வேறு ஏதாவது திரவங்கள் உள்ளே இருக்கிறதா என்று பார்ப்பதற்காக அனுப்புகிறார்கள். அப்படிப் பார்ப்பதற்கு அனுப்புகிற கடிதத்தை அங்கே கமிஷனுக்கு வைக்கிறார்கள். எங்கே அரசாங்கம் மறைத்தது? இங்கே எந்த ஆவணத்தையும் மறைக்கவில்லை என்று கமிஷனே பாராட்டியிருக்கிறது. அரசைப் பாராட்டியிருக்கிறார்கள். அறநிலையத்துறை அதிகாரிகளைப் பாராட்டி இருக்கிறார்கள். இந்த விசாரணைக்கு ஒத்துழைப்பு தந்ததைப் பற்றி அவர்களே பாராட்டியிருக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட ஒரு சிறிய சான்றை எடுத்து வைத்துக்கொண்டு இங்கே நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களும் மற்றவர்களும் இந்தக் கருத்தை இங்கே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

அரசாங்கத்தின் தரப்பிலே இருந்து மிகத் தெளிவாக இந்தக் கருத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன். இதிலே எங்களுக்கு எந்தவிதமான உள்நோக்கமும் கிடையாது, ரிசர்வேஷனும் கிடையாது. குற்றவாளிகள் இருந்தால், குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்கள் நீதிமன்றத்தின் முன்னாலே நிறுத்தப்பட வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய நோக்கம். அதிலே தலையிட வேண்டும் என்பதில் எங்களுக்கு அக்கறையே கிடையாது. இங்கே கமிஷன் போட்டதும் அந்த விசாரணையை இங்கே வைத்ததும் எவ்வளவு வெளிப்படையாக இந்த அரசு நடந்துகொண்டிருக்கிறது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு. அதனாலேதான் முதல் முறையாக இந்தச் சட்டமன்றம் ஒரு கமிஷனுடைய அறிக்கையை விவாதித்துக் கொண்டிருக்கிறது. இதற்கு முன்னாலே ஓராண்டு கழித்தெல்லாம் விவாதம் வந்திருக்கின்றது, அச்சாகிக்கொண்டிருக்கிறது என்றெல்லாம் சொல்லிவிட்டு பிறகு அச்சுக்கு அனுப்பிய வரலாறுகள் எல்லாம் இருக்கின்றன. சட்டமன்றத்திற்கே தவறான தகவலைத் தந்திருக்கிறார்கள். அதை எல்லாம் எடுத்துக்காட்ட நான் விரும்பவில்லை.



இந்த விஷயத்தைப் பொறுத்தவரை அரசாங்கம் மிகத் தெளிவாக இருக்கின்றது. நயமுடைய நீதிபதி பால் அவர்களுடைய அறிக்கையிலே அவர்கள் தந்திருக்கின்ற பரிந்துரையிலே எங்களுக்கு உள்ளே நுழைந்து விவாதிக்க வேண்டும், குறை காண வேண்டும் என்ற எண்ணம் இல்லை. எங்களை இருட்டுக்குள்ளே தள்ளிவிட்டு நீ மீண்டும் வெளிச்சத்துக்கு வா என்று கூறுகிற போது நாங்கள் ஆங்காங்கே தோன்றுகின்ற தடயங்களை எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். சந்தேகங்களை எடுத்துக்காட்டி இருக்கிறோம். இந்தச் சந்தேகங்களுக்கு எல்லாம் விளக்கம் கிடைத்தால், உண்மையான குற்றவாளி இருந்தால் அந்தக் குற்றவாளி கண்டுபிடிக்கப்பட முடியும் என்பது அரசாங்கத்துனுடைய எண்ணம். அதனாலேதான் இப்போது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப்பற்றி இங்கே அறிக்கை வைத்திருக்கிறோம். ஆகவே, குற்றவாளிகளைக் கண்டுபிடியுங்கள், கண்டுபிடியுங்கள் என்று சொல்கின்றவர்கள் எல்லாம் வந்து இதற்கு உதவ வேண்டும். இதற்காக வழிநடைப் பயணம் சென்றுவிட்டால் மாத்திரம் நாம் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க முடியாது என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நான் ஏதோ ஒரு வார்த்தையைச் சொல்லியதாலே அதையே அவர்கள் பிடித்துக்கொண்டு அமைச்சர் சொல்லலாமா, அமைச்சர் சொல்லலாமா என்று சொன்னால் பின்னாலே நடைபெற்றிருக்கிற சம்பவங்கள் அதைத்தான் நிரூபித்துக் கொண்டிருக்கின்றன. அதற்கு நான் இங்கே பதில் சொல்ல விரும்பவில்லை. நாங்கள் வெளியே பதில் சொல்லிக்கொள்கிறோம். ஆனால் அவர் நான் எப்படிச் சொல்லலாம், எப்படிச் சொல்லலாம் என்று கேட்டார். நான் அமைச்சர் என்ற அதிகாரத்தில் சொல்லவில்லை. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒரு தொண்டன் என்ற முறையிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அடித்துக் கொன்று விட்டார்கள் என்று சந்தேகப்படுகின்ற சூழ்நிலையிலே சொல்லப்பட்ட குற்றச்சாட்டை மறுப்பதற்காகச் சொன்ன வார்த்தையே தவிர வேறல்ல. இந்த 1 ஆண்டு காலத்திலே அரசாங்கத்தின் தரப்பிலே இரண்டு முறைகள்தான், சட்டமன்றத்திலே ஒரு முறை, முதலிலே பத்திரிகையாளர்களிடத்திலே ஒரு முறை இந்தத் தகவல் தரப்பட்டிருக்கின்றது. அரசாங்கம் முதல் தகவலைப் பெற்று நாட்டிற்கு அறிவித்தது. அதற்குப் பிறகு ஆய்வு நடத்தவேண்டும் என்று விரும்புகிற நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சி.ஐ.டி. விசாரணை வேண்டும் என்று கேட்டார்கள். ஆனால் நமது முதலமைச்சர் அவர்கள் நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்தார்கள், அந்த நீதி விசாரணைக்குத் துணையாக நிற்க வேண்டியவர்கள் இதை அரசியலாக்கி நாடு முழுவதும் நீதிபதியின் உள்ளத்தையே குழப்புவதற்குரிய வகையிலே இதைப் பிரச்சினையாக ஆக்கி இருக்கிறார்கள். ஆகவே இந்த அறிக்கையை வைத்து இந்த மன்றத்திலே அரசு எடுத்த நடவடிக்கைகளையும் இங்கே

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்)

*மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்; பேரவைத் தலைவர் அவர்களே, அறங்காவலர் குழுவிலே இருக்கிற 5 உறுப்பினர்களும் தங்களுடைய ராஜினாமாக்களை அனுப்பியிருக்கிறார்கள் என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அவர்கள் பல காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். தாங்கள் நிரபராதிகள் என்பதையும், அந்த நிரபராதிகள் என்ற நிலையில் உண்மைகள் வெளியாகின்ற வரையில் நாங்கள் காத்திருக்கிறோம் என்பதையும், அதுமட்டுமல்லாமல், அதற்குப் பிறகு மக்கள் ஏற்றுக்கொண்டால், அரசு ஏற்றுக்கொண்டு பதவி தந்தால் அதற்குப் பிறகு பொறுப்பை ஏற்றுக் கொள்வோமே தவிர எங்களுக்கு இது பெரிது அல்ல என்றும் கூறி அவர்கள் ராஜினாமா செய்திருக்கிறார்கள். அவர்களுடைய இந்த நடவடிக்கைக்கு அரசு அவர்களுக்கு நன்றி கூறகிறது. அதோடு முன்பே சொன்னது போல் நீதிபதி திரு. பால் அவர்கள் என்ன உத்தரவு இட்டிருக்கிறார்களோ, எடுத்துச் சொல்லியிருக்கிறார்களோ அதைப்போல, குற்றப்புலனாய்வுத் துறை அவைகளை மீண்டும் விசாரித்து அரசுக்கு அறிக்கை தரும் என்பதையும், நடவடிக்கை எடுக்கும் என்பதையும் அரசின் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* திரு. எல். இளையபெருமாள்: முக்கியமான இந்த விசாரணையில் அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும் அக்கறை எடுத்ததோடு மட்டுமல்ல, சங்கனாங்குளத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் நடந்ததுபோல் இதில் பணி செய்த ஆறுமுகம் என்ற ஒரு ஹரிஜன சகோதரர் நேரடியாக சாட்சியம் சொல்வேன், உண்மையைச் சொல்வேன் என்ற காரணத்தால் அவர்கள் கொலை மர்மமாக இருக்கிறது. அது சம்பந்தமாக பால் கமிஷனிலே தீர்க்கமாக விசாரிக்கப்படவில்லை. நம் முதல் அமைச்சர் அவர்கள் சி. ஐ. டி. மூலம் விசாரணை என்பதால் அந்த ஆறுமுகம். துப்புறவுத் தொழிலாளி நேரடியாக சாட்சியம் சொல்வேற உண்மையைச் சொல்வேன் என்று சொன்ன காரணத்தால் அவர்கள் கொலை மர்மமாக இருப்பதால் நம் முதல் அமைச்சர் அவர்கள் இதையும் சேர்த்து விசாரணைக்குக் கொண்டுவர, பால் கமிஷனில் இல்லாத நிலை இருப்பதால் அதைச் செய்யவேண்டும் என்று ஹரிஜன மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.



*மாண்புமிகு திரு. எம். ஜி. இராமசந்திரன்: குற்றப்புலனாய்வுத் துறை விசாரணை ஏற்கும்போது இது எந்தெந்த அடிப்படையிம் எந்தெந்த சூழ்நிலையில் இந்தப் பிரச்னையெல்லாம் எழுந்திருக்கின்றனவோ அவைகள் அனைத்தையும் அது பரிசீலிக்கும், கண்டு பிடிக்க முயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் இதோடு முடிவடைந்தது. பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 15-2-1932ம் தேதி திங்கள் கிழமை காலை 9-00 மணிககுப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 11,46 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(3) பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும் எதுவுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

21. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவின் நகல் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 1/1982 )

22. தமிழ்நாடு 1982–ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்டமுன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண், 2/1982-)

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

*திங்கட்கிழமை, 1982 ஆம் ஆண்டு பிப்ரவரி 15. மாசி 3, துன்மதி,—திருவள்ளுவர் ஆண்டு 2013.*

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9,00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"அருவினை என்ப உளவோ கருவியான்*
*காலம் அறிந்து செயின்."*

*ஒரு செயலைச் செய்து முடிப்பதற்குரிய உதவிகளோடு செய்தற்குரிய காலத்தையும் நன்கு அறிந்து செய்தால், செய்தற்கரிய செயல்கள் என்பன இல்லாமல் போய்விடும்.*

**1. வினாக்கள்—விடைகள்.**

*(உடுக்குறியிட்ட வினாக்கள்.)*

## Fishing Harbour at Chinna Muttom

***Q. No. 201: THIRU P. VIJAYARAGHAVAN:** Will the Hon the Minister for Finance be pleased to state: what is the present stage of the proposal for establishment of a Fishing Harbour at Chinna Muttom in Kanyakumari District?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறைமுகம் கட்டுவதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளதாகச் செய்தித்தாள் குறிப்புத் தெரிவிக்கிறது. அதிகாரபூர்வமான தகவல் விரைவில் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

**திரு பொ. விஜயராகவன்:** *பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாநில அரசு மத்திய அரசோடு, இந்த மீன்பிடி துறைமுகத்தை அமைப்பதற்குக் கேட்டுக்கொண்டிருக்கிறதா? அப்படி கேட்டுக்கொண்டிருக்கிறது என்று சொன்னால், எந்த அடிப்படையில் இதை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறது? அதற்கு எவ்வளவு நிதி ஆதாரம் தரவேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்?*

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாண்டுக் காலமாக சின்ன முட்டத்தில் ஒரு மீன்பிடித்துறைமுகம் கட்டவேண்டுமென்ற ஒரு செயற் குறிப்பு மாநில அரசால் மத்திய அரசுக்கு ஒப்புதலுக்காக அனுப்பிவைகப்பட்டுள்ளது. 4–2–82 தேதியில் செய்திதாளில் இதற்கு மத்திய அரசு அனுமதி அளித்துவிட்டதாக வந்துள்ளது அதிகாரபூர்வமான மகடிதத்தை மத்திய அரசிடமிருந்து தமிழக*

அரசு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அந்தச் செய்தியில் 2.34 கோடி செலவில் இது கட்டி முடிக்கப்படுமென்றும், 240 எந்திரப் படகுகள் தங்குவதற்கும், 10 பெரிய மீன்பிடி படகுகள் தங்குவதற்கும் ஏற்ற வகையில் இந்தத் துறைமுகம் அமைக்கப் படும்.

திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் செய்தித் தாளில் வந்த செய்தியின் அடிப்படையில் மாநில அரசு 50%ம் மத்திய அரசு 50%ம் அளிக்க வேண்டுமென்பதான ஒரு குறிப்பு இருப்பதாக நான் அறிகிறேன். அப்படி மாநில அரசும் மத்திய அரசும் செய்கின்ற நேரத்தில், ஆளுக்குப்பாதி என்கின்ற அளவில் இந்தத்திட்டம் அமைய வேண்டுமென்பது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச்செலவு முழுவதையும் மத்திய அரசே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற விண்ணப்பத்தை நாம் போட்டிருக்கிறோம். அவர்கள் என்ன நிபந்தனைகளைப் போட்டிருக்கிறார்கள் என்பதை அந்தக் கடிதம் முழுவதையும் பார்த்த பிறகு, அதற்கேற்றபடி நாம் நடவடிக்கை எடுக்க இயலும்.

திரு. டி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச்சின்ன முட்டத்தில் மீன்பிடித் துறைமுகம் கட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்வது பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மிக்கநன்றி. அதே நேரத்தில், கடலரிப்பைத் தடுப்பதற்கு பல்வேறு பகுதி களில் இப்போது தடுப்புச் சுவர்கள் கட்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனால், மீன்பிடிப்பதில் சிரமம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அதை அடிப்படையாக எடுத்துக் கொண்டு, தூத்தூர் போன்ற பகுதிகளில் சிறிய மீன்பிடி துறை முகங்களை அபிவிருத்தி செய்ய இந்த அரசு சிபார்சு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்; தலைவர் அவர்களே, கடலோரப் பகுதிகளில் தடுப்புச் சுவர்கள் ஆங்காங்கு கட்டப் பட்டு வருகின்றன. அதுபற்றிய குறிப்புகள் தனியாக கேள்வி கேட்டால் தர இயலும்.. மற்ற இடங்களில் துறைமுகங்கள் கட்டுவதுபற்றி கேட்டார்கள். அதற்கும் தனிக் கேள்வி போட வேண்டும். ஆனால் வேறு இடங்கள் என்று சொல்லும்போது வாலிநோக்கம் என்ற இடத்தில் ஒரு துறைமுகம் கட்டு வதற்கான ஒரு செயற் குறிப்பை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறோம்.

திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு எந்த மாவட்டங்களில் இப்படி மீன்பிடித் துறைமுகங்கள் கட்டுவதற்கான திட்டங்கள் இருக்கின்றன? இருந்தால் அவைகள் என்னென்ன?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, வேறு மாவட்டங்களில் மீன்பிடி துறைமுகங்கள் கட்டுவதற்கான திட்டங்கள் இருக்கின்றன. சில இடங்களில் துறைமுகங்கள் கட்டப்பட்டு, திறக்கப்பட்டு வருகின்றன. இதற்குத் தனிக் கேள்வி போட்டால், முழு விவரங்கள் தரப்படும்.

### மேட்டூர் அணையில் மீன்குஞ்சுகள் உற்பத்தியைப் பெருக்கும் திட்டம்.

*வினா எண். 262.—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் அணையில் மீன் குஞ்சுகள் உற்பத்தியைப் பெருக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் நன்னீர் மீன் உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன் மீன் குஞ்சுகள் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் பிரத்யேகத்திட்டம் ஒன்று செயல்படுத்தப்படவுள்ளது. இத் திட்டத்தின்கீழ் மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்கள் கட்ட தேர்ந் தெடுக்கப்பட்ட 10 இடங்களில் மேட்டூர் அணையும் ஒன்றாகும். இங்கு ரூ. 11,17,500 செலவில் 20 மீன்குஞ்சு வளர்ப்பு நாற்றங்கால்களும் 20 மீட்டர் சுற்றளவு கொண்ட ஒரு வட்ட வடிவ மீன்குளமும் அமைக்கப்படுகின்றன. கட்டிட வேலைகள் யாவும் 31–3–82க்குள் முடிந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டத்தினால் மேட்டூர் அணையில் ஆண்டொன்றுக்கு கூடுதலாக சுமார் 75 இலட்சம் நுண்மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்ய இயலும்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேட்டூர் அணையில் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யும் திட்டம் இருப்பதாக அறிவித்தார்கள். பொதுவாக சின்ன மீன்களை பெரிய மீன்கள் தின்றுவிடும் என்று சொல்வார்கள். மேட்டூர் அணையில் பெரிய மீன்கள் சிறிய மீன்குஞ்சுகளை விழுங்கி விடாதவாறு தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்துள்ளதை விட அதிகாரிகளுக்கு மிக அதிகமாகத் தெரியும். மேட்டூர் அணையில் மீன்குஞ்சுகளை வளர்ப்பதில்லை. 20 மீட்டர் சுற்றளவில் 20 நாற்றங்கால்களை வைத்து அவற்றிலே மீன்குஞ்சுகளை வளர்க்க திட்டமிடப் பட்டிருக்கிறது. பெரிய மீன்களோடு சிறிய குஞ்சுகளை விடுவதில்லை.

திரு. இரா. தாமரைக்கனி: அணைக்கட்டிலிருந்து தண்ணீரைத் திறந்துவிடும்போது மீன்குஞ்சுகளும் இழுத்துச்செல்லப்படுகின்றன. பெரிய மீன்களும் போய்க் கொண்டிருக்கின்றன. அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நான் முதலிலேயே சொல்லினேன். மீன்குஞ்சுகளை வளர்ப்பது அணையில் அல்ல. தனியான இடத்தில் வளர்த்து பெரிதாக ஆனவுடன் அவை மேலும் வளர அணைக்கட்டில் விடப்படுகிறது.

திரு உ. சுப்பிரமணியன்: மேட்டூர் அணைக்கட்டில் வளர்க்கப் படும் மீன்களுக்கு கல்கத்தா போன்ற மேற்கு வங்கப் பகுதியில் அதிகமாகக் கிராக்கி இருக்கிறது. அந்த ஏற்றுமதியை அதிகரிக்க நன்னீரில், செந்நீரில் மீன்களை வளர்க்க இராமநாதபுரம் மாவட்டத்தில் அதிகமான குளங்கள் இருப்பதால் அந்தப் பகுதியில் மீன்களை வளர்த்து ஏற்றுமதியை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் நன்னீர் மீன் வளர்ப்புத் திட்டத்தின் அடிப் படையில் ஐந்து கோடி மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்து வருகிறோம். இயற்கையாக 3 கோடி மீன் குஞ்சுகளும் செயற்கை யாக 2 கோடி மீன்குஞ்சுகளும் ஆக 5 கோடி மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மேட்டூரில் 11,17,500 ரூபாய் செலவில் திட்டமிடப்பட்டு 75 லட்சம் மீன் குஞ்சுகள் வளர்க்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இதைத் தவிர கிருஷ்ணகிரி, பவானி சாகர், ஆளியாறு, சாத்தனூர், மணிமுத்தாறு, மஞ்சளாறு, பாலாறு, புரந்தலாறு போன்ற பகுதிகளிலும் மீன்குஞ்சுகளை வளர்க்க திட்டமிடப்பட்டிருக்கிறது. அதோடு உள்நாட்டில் இருக்கும் ஏரிகள், குளங்களிலும் மீன்குஞ்சுகள் உற்பத்தியைப் பெருக்க திட்டம் இருக்கிறது. மத்திய அரசிடம் இந்தத் திட்டங்கள் பற்றி எடுத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முக்கியத்துவம் கொடுக்க திட்டமிடப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். துரைசாமி: தர்மபுரி மாவட்டத்தில் ஏரிகள் மிகவும் அதிகமாக இருக்கின்றன. இதுவரை அங்கு எத்தனை ஏரிகளில் மீன்குஞ்சுகள் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது? எவ்வளவு குஞ்சுகள் விட்டிருக்கிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: கேள்வி மேட்டூரில் மீன்குஞ்சுகள் வளர்ப்பது பற்றியது. தர்மபுரி பற்றித் தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் கொடுக்க முடியும்.

திரு ப. பொன்னுரங்கம்: சேலம் போன்ற மாவட்டங்களில், உள்நாட்டு மீனவர்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். சென்னை, செங்கற்பட்டு, தென்னாற்காடு, கன்னியாகுமரி பகுதிகளில் கடலில் சென்று மீன் பிடிக்கக்கூடிய மீனவர்கள்



இருக்கிறார்கள். இந்த உள்நாட்டு மீனவர்களைப் பொறுத்த வரை அந்த மீன்களைக் கொண்டு பிழைப்பு நடத்தவேண்டியவர் களாக இருக்கிறார்கள். பிஷரிஸ் கார்ப்பரேஷன், டெண்டர் அல்லது ஆபரிங்ஸ் தரும்போது மீனவர்கள் அல்லாதவர்களுக்குத் தருவதால் குளத்தை, ஆற்றை நம்பி இருக்கும் உள்நாட்டு மீனவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. Priority must be given to the fishermen who are living there. அப்படி குறை இருப்பது அரசுக்குத் தெரியுமா? அந்த மீனவர்களுக்கு இந்த டெண்டர் போன்றவற்றை வழங்க அரசு முன்வருமா?

(முற்பகல் 9·10)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர் களே, உள்நாட்டு மீன்பிடிக்கின்ற தன்மைகள் ஆங்காங்கு இருக்கின்ற மீனவர்கள் அடங்கிய கூட்டுறவுச் சங்கத்திற்கு முதலிடம் கொடுக்கின்ற வகையிலே தரப்படவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறோம். பல இடங்களிலே பொது ஏலத்திலே விட்டால் அதிகமாக வரும் என்றாலும்கூட மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப்போன்று மீனவர்களுடைய வாழ்வு வளம் பெறவேண்டுமென்ற வகையில் தான் மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தரவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டு இருக்கிறது. மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் மீனவர்கள் குறைவாகவும் மீனவர்கள் அல்லாதார் அதிகமாகவும் இருந்துகொண்டிருக்கிறார்கள் என்ற நிலைமை வந்தபோது அரசு ஆணையிட்டு அவர்களை நீக்கிவிட்டு முழுப் பயனும் மீனவர்களுக்கே செல்ல வேண்டு மென்ற முறையிலே அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறது.

திரு என். வரதராஜன்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பல ஆண்டுக்காலமாக மீன் குஞ்சு உற்பத்தியிலே நம்முடைய அரசு அதிகமான அக்கறை செலுத்தி வருகிறது. மீன் உற்பத்தி யிலும் வெளிநாட்டு வியாபாரத்திலும் இன்னும் சிறப்பு நிலை ஏற்படவில்லை என்று இங்கே உள்ள அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. இந்த இடைவெளி காரணமாக இதிலே மாறுதல் செய்ய அரசு விரும்புகிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர் களே, அதற்கான பெருமுயற்சியை கடலோரப் பகுதியிலே மேற் கொண்டு வருகிறோம். உள்நாட்டுப் பகுதியிலும் மேற்கொண்டு வருகிறோம். உள்நாட்டு நீர்நிலைகளிலே கிட்டத்தட்ட முதலாவது இரண்டாவது நிலை வருகிறது. கேரளத்திலே உள்ள கடலோரப் பகுதிகளிலே உப்பங்கழிகள் அதிகமாக இருக்கின்ற காரணத் தினால் அதிகமாக மீன் உற்பத்தி ஏற்பட்டு ஏற்றுமதி செய்யக் கூடிய நிலைமை இருக்கிறது. இங்கே உள்ள கடலோரப் பகுதி களிலே உப்பங்கழிகள் அதிகமாக இல்லாத காரணத்தால் மீன் உற்பத்தியும் குறைவாக இருக்கிறது. இந்தியாவிலேயே கேரளாவி லேயும், மங்களூரிலும், கோவாவிலும் உப்பங்கழிகள் அதிகமாக

இருப்பதால் அவர்கள் ஏராளமாக ஏற்றுமதிசெய்யக்கூடிய தன்மையைப் பெற்றிருக்கிறார்கள். இருந்தாலும் கடலோரப் பகுதிகயிலே எந்த அளவுக்கு அதை மேம்படுத்தமுடியுமோ அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம், இதற்கிடையிலே உள்நாட்டு நீர்நிலைகள், குளங்கள் ஆகியவற்றில் அரசு மீன்குஞ்சுகளைப்போடுகிற நடவடிக்கையை எடுக்கிறபோது அதை வளர்க்கிற விற்பனை செய்கிற நடவடிக்கைகளை கூட்டுறவு சங்கங்கள் எடுக்க முன்வர வேண்டும் என்ற வகையிலே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. எம். எஸ். மாணிக்கம்: தலைவர் அவர்களே, உள்நாட்டு மீன்பிடிக்கிறபோது மீனவர்கள் என்று குறிப்பிடுகிறபோது மீனவர்கள் மட்டுமே அந்தப் பயனைப் பெறக்கூடிய அளவுக்கு மீனவர்களுக்கு இடம் கொடுத்து மீனவர்கள் அல்லாதவர்களை—தலைவர்களை—வெளியேற்றுவதற்கு உத்திரவு போடப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இன்னும்கூட பல இடங்களிலே மீனவர்கள் அல்லாதார் தலைவர்களாக இருந்து கொண்டு வழக்கு மன்றங்களுக்குச் சென்று தடையாணை பெற்று இருந்துகொண்டிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கூறி அப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்து மீனவர்கள் மட்டுமே பலன்பெறக்கூடிய ஏற்பாட்டை அரசு செய்யுமா? அந்த உத்திரவு இந்த அரசினால் தான் போடப்பட்டதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சென்ற ஆண்டுக்கு முதல் ஆண்டு இந்த உத்திரவு போடப்பட்டது. தஞ்சை மாவட்டத்திலும் பிற இடங்களிலும் அப்படிப்பட்ட உத்திரவு போடப்பட்டு இருக்கிறது. வேறு எங்காவது அவர்கள் சொல்கிற அந்த சூழ்நிலை இருக்குமானால் அதைப் பற்றி அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கலாம்.

### மரம் ஏறும் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணம்

*வினா எண் 203—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 1980–8 -ல் தமிழ்நாடு முழுவதும் மரம் ஏறும் தொழிலாளர்கள் மரத்திலிருந்து விழுந்து மரணமடைந்தவர்களுக்கு எத்தனை பேருக்கு நிவாரணத்தொகை வழங்கப்பட்டது?

(ஆ) இந் நிவாரணத் தொகையை உயர்த்திக் கொடுக்க அரசுக்கு உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு எஸ். டி சோமசுந்தரம்: விடை (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பூராவும் 45 பேர்களுக்கு 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது.



திரு. இரெ இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரம் ஏறுகிறபோது விழுந்து மரணம் அடைந்த தொழிலாளர்கள் 45 பேர்களுக்கு தமிழ்நாடு முழுவதும் உதவித்தொகை வழங்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த அரசு பெண்களுக்கு மரம் ஏறுகிற பயிற்சியை அளிக்கப்போவதாக அறிவித்திருக்கிறது. அப்படி பெண்கள் மரம் ஏறுகிறபோது தவறி விழுந்து இறந்திருப்பதாக தகவல் இருக்கிறதா? அவர்களுடைய குடும்பத்திற்கு எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது ஒரு நபருக்கு எவ்வளவு உதவித்தொகை வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, ஒரு நபருக்கு 5 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படுகிறது. பெண்கள் இப்போது பழக்கப்படுகிறார்கள். இன்னும் பழகவில்லை. நல்ல வேளையாக விழமாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மி. வின்சென்ட்: தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்திலே 20-க்கும் மேற்பட்டவர்கள் மரத்தில் ஏறும்பொழுது விழுந்து இறந்துவிட்டார்கள், அவர்கள் இறந்து 1 ஆண்டுகாலமாகியும் இன்னும் அவர்களுக்கு நிவாரணத் தொகை வழங்கப்படவில்லை. அவர்களுக்கு நிவாரணத் தொகை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா? இந்த நிவாரணத் தொகை வழங்கப்படுவதற்கு என்ன என்ன 'நார்ம்ஸ்' உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மரத்திலிருந்து விழுந்து இறந்தவர்கள் எவ்வளவு பேர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. யாருக்குக் கொடுக்கப்படவில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மரத்திலிருந்து கீழே விழுகிறவர்கள் நிதானத்துடன் இருக்க வேண்டும். நிதானத்தில் இருக்க வேண்டுமென்றால் கள், சாராயம் குடித்துவிட்டு மரத்தில் ஏறியிருந்து கீழே விழுந்திருந்தால் பிறகு டாக்டர்கள் பரிசோதனை செய்வார்கள், மேலேயிருந்து எவ்வளவு உயரத்திலிருந்து விழுந்திருக்கிறார்கள், போதைப் பொருட்கள் அருந்தியிருக்கிறார்களா என்பதையெல்லாம் பார்த்து டாக்டர் சர்ட்டிபிகேட் கொடுக்க வேண்டும். அப்படி எதுவும் இல்லாமல் மரத்தில் ஏறியதால் கீழே விழுந்துதான் இறந்திருக்கிறார்கள் என்று தெரிந்தால் நிச்சயமாக அரசு நிவாரணம் வழங்கும்.

திரு. மு. அய்யாதுரை: பேரவைத் தலைவரவர்களே, மரம்ஏறும் தொழிலாளர்கள் மரத்திலிருந்து விழுந்து மரணமடைந்தால் அவர்களுக்கு அளிக்கப்படும் நஷ்டயீட்டிற்குப் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக மனுசெய்தால்தான் அது கொடுக்கப்படுமா? அல்லது பாதிக்கப்பட்டவர்களின் வாரிசுகள் நேரடியாக மனுச் செய்து கொண்டால் போதுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பாதிக்கப்பட்டவரின் நேரடி வாரிசு மனுச் செய்து கொள்ளலாம்.

திரு. சோ. அழகர்சாமி; பேரவைத் தலைவரவர்களே, மாண்பு மிகு அமைச்சரவர்கள் கூறும்பொழுது மரம் ஏறும் தொழி லாளர்கள் கீழே விழுந்து இறந்து போய்விட்டால் அவர்கள் நிதானத்தோடு இருந்து விழுந்து இறந்தார்களா அல்லது மது அருந்தியிருந்தார்களா என்பதற்கு மருத்துவர் சர்டிபிகேட் கொடுப்பதாகச் சொன்னார்கள். விளாத்திகுளத்தில் மூன்றாண்டு களுக்கு முன்னால் ஒருவர் நியாயமாக இறந்தும்கூட மருத்துவர் அவர் மது அருந்தியிருந்தார் என்று சொன்னதன் காரணமாக அவருக்கு நிவாரணத் தொகை கிடைக்கவில்லை. சுண்ணாம்பு போடாத பதநீர் இருக்கிறது. அதைக்கூட கள் என்று சொல்வார் கள், அதைச் சாப்பிடுவது வழக்கம்தான். அதன்காரணமாக், கீழே விழுந்தவரின் அந்தக் குடும்பததைப் பரிதவிக்க விடுவது நியாயமா? எனவே, அந்தக் குடும்பத்திற்கு விதிவிலக்கு அளித்து நிவாரணத் தொகை வழங்கப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அவர் பதனீர் சாப்பிட்டுப் பழக்கம் உண்டோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால் நான் பதநீர் சாப்பிட்டுப் பழக்கப்பட்டவன்தான், அதற்கு அடுத்தப் படியாகப் போகவில்லை. பதநீர் சாப்பிட்டவர்களை அந்த டாக்டர் பரிசோதனை செய்யும்போது அவர் மது அருந்தியவர் என்று கண்டுபிடிக்க முடியாது. (குறுக்கீடு) சுண்ணாம்பு போடாவிட்டால் மதுவாகத்தான் கொள்ளப்படும்.

மாயவரம், வேதாரண்யம், கோடம்பாக்கம் ஆகிய ஊர்களின் பெயர்களை மாற்றியமைக்கும் திட்டம்

*வினா எண். 204—திரு. நன்னிலம் அ. கலையரசன்: திரு. த. வீராசாமி: திரு. மா. சுப்பிரமணியன்: திரு. எம். எஸ். மாணிக்கம் திரு. வி, வி. சுவாமிநாதன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மாயவரம்—வேதாரண்யம்-கோடம்பாக்கம் ஆகிய ஊர்களுக்கு பெயர் மாற்றம் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) அதற்கு மத்திய அரசின் அனுமதி வேண்டுமா?

(இ) ஆம் எனில் மத்திய அரசுடன் தொடர்பு கொள்ளப் பட்டுள்ளதா?



மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) (ஆ) மற்றும் (இ) ஏற்கனவே "பாயவரம்" என்னும் ஊரின் பெயரை மாயூரம் என்று மாற்றியிருக்கிறார்கள். இப்பொழுது "மாயூரம்" என்ற பெயரை "மயிலாடுதுறை" என்று மாற்றுவ தற்காக மத்திய அரசின் அனுமதியைக் கோரி தற்போது அனுமதி பெற்றுள்ளோம். மயிலாடுதுறை என்ற தமிழ்ச் சொல்லுக்கு இணையான ஆங்கில எழுத்துக் கூட்டுச் சொல்லை இந்திய நில அளவ இயக்குநரிடமிருந்து உத்தரவை அதற்கு எதிர்பார்க் கிறோம். அது வந்த பிறகு "மாயூரம்" என்ற பெயர்போய் "மயிலாடுதுறை" என்ற பெயர் வரும்.

"வேதாரண்யம்" என்ற ஊர்ப் பெயரைத். திருமறைக்காடு என்று மாற்றுவதற்கான செயற்குறிப்பு அரசிடத்திலே இப் பொழுது இல்லை.

கோடம்பாக்கத்தின் பெயரை "கலைவாணர் கிருஷ்ணன் நகர்" என்று மாற்றியமைக்க இவ்வரசின் கோரிக்கைக்கு மத்திய அரசு இணங்க, சம்மதிக்க விரும்பவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேதாரண்யம்" என்ற பெயரைத் திருமறைக்காடு என்று மாற்றியமைப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு இல்லை என்று அமைச்சரவர்கள் அறிவித்துள்ளார்கள். அதை உடனடி யாகப் பரிசீலனை செய்து அதை மாற்ற வேண்டுமென்ற அந்த பொதுமக்களுடைய கோரிக்கையை ஏற்று மாற்றியமைக்கப் படுமா? திருமறைக்காடு என்பது பெயர் மாற்றம் அடைந்து வேதாரண்யம் என்று எப்படி மாறியது என்பதையும் அமைச் சரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ்.டி.சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எப்படி மாறியிருக்கிறது என்பதற்கான வரலாறு முழுவதையும் என்னால் சொல்ல இயலாவிட்டாலும். இடைக்காலத்தில் வடமொழி ஆதிக்கம் தென்னகத்தில் புகுந்தது. அப்படி வடமொழி ஆதிக்கம் தென்னகத்தில் புகுந்ததால் தமிழ்ச் சொற்களைக் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றி அவைகளை எல்லாம் அவர்கள் வடமொழியில் ஏற்றுக்கொண்டார்கள். இது எப்படி வந்தது என்றால், மயில் என்ற சொல் வடமொழியில் மாயூரம் என்று ஆயிற்று: அந்த வடசொல்லோடு துறை என்ற சொல் இருந்து, அந்தத் துறை என்பதைப் புரம் என்று சொன்னார் கள். இப்படி மாயூரபுரம் என்று ஆயிற்று. பிறகு நாளாவட்டத் தில் மாயவரம் என்று ஆயிற்று. யாரும் மாய்வதற்கு வரம் கேட்க மாட்டார்கள். ஆகவே இந்த அரசு மாய வரம் கேட்க வேண்டா மென்று கருதி, மயிலாடுதுறை என்று மாற்றியமைக்க வேண்டு மென்று மத்தியப் பேரரசின் அனுமதியைப் பெற்றிருக்கிறது. ஆனால், வேதாரண்யத்தைப் பொறுத்தவரை, மாற்றுவதற்கான செயற்குறிப்பு இங்கே இல்லை. மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்தால், அதைப்பற்றி அரசு கவனிக்கும்.

(முற்பகல் 9.20)

திரு. வி.வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாகாணம் என்பதற்குப் பதிலாக, தமிழ்நாடு என்ற பெயரை வைக்க வேண்டுமென்று முதன்முதலிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து வாதாடினார்கள். ஒரு மாநிலத்தின் பெயரை மாற்றுவதற்குத் தான் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து அனுமதி பெற வேண்டுமென்று கருதினேன். ஆனால், சென்னையிலுள்ள சாதாரண, கோடம்பாக்கம் என்ற பெயரை மாற்றக் கூடவா, மத்திய அரசின் அனுமதி வேண்டும்? அதை, கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் நகர் என்று மாற்றக் கூடாது என்பதற்கு மத்திய அரசு கூறும் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: கோடம்பாக்கம் என்ற பெயர் சரித்திர முக்கியத்துவமானது அல்ல, தொல்பொருள் ஏட்டிலும் கோடம்பாக்கம் என்ற பெயர் இல்லை. ஆகையினாலே, அதை மாற்றுவதாலே தமிழகத்திற்கு எந்தவிதமான பணச்செலவும் பொதுமக்களுக்கு எந்தவிதமான கஷ்டமும் இல்லையென்று குறிப்பு எழுதியிருந்தாலும், மத்திய அரசு, இதனால் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும், பொருட்செலவு ஏற்படும் என்று தெரிவித்து உள்ளது. அந்தப் பெயரை மாற்ற அரசு மீண்டும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

திரு. என். இட்டப்பா: தலைவர் அவர்களே, மாயவரத்தினுடைய பண்டைய பெயரான மயிலாடுதுறை என்ற பெயரில் அது மீண்டும் வழங்கப்படுவதற்கான முயற்சியை 'இந்த அரசு மேற்கொண்டது குறித்து, அந்தத் தொகுதியினுடைய சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையிலும், கடந்த 10, 12 ஆண்டு காலமாக, இதே மன்றத்திலே, அந்தப் பெயர் மாற்றத்திற்காக வலியுறுத்தியவன் என்ற முறையிலும், அரசுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்திலே அதை விரைவுபடுத்தி, அமுல் நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென வேண்டுகோளை விடுத்து, மாயூரம் ஊராட்சிப் பகுதியில், மாயூரம் புறநகர்ப் பகுதி ஒன்று, கிராமப்பகுதி, பஞ்சாயத்துப் பகுதி, இருக்கிறது. அதன் பெயரை மாற்றுவதற்கான முயற்சியை அரசு ஏற்கனவே மேற்கொண்டு, மயிலாடுதுறை என மாற்றலாம் என ஆணை வழங்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். அதையும் விரைவிலே அமுல்படுத்த, இரண்டையும் மயிலாடுதுறை என அழைக்க, அரசு விரைந்து முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: இந்த அரசு இதற்காக முயற்சி எடுத்து, மத்திய அரசிடத்திலே அனுமதி பெற்றிருக்கிறது. இருந்தபோதிலும், அதைப்பற்றி இந்தியப்பேரரசினுடைய 'சர்வே' துறையிடம் தெரிவித்து, அதற்குக் கூட்டுச்சொல்லை பயன்படுத்துவதற்கு அனுமதி பெற்றிருக்கிறோம். மாயூரத்திலே இருக்கிற வருவாய்க் கோட்டம், வருவாய் வட்டம், ஊராட்சி ஒன்றியங்கள், அரசு அலுவலகங்கள், தஸ்தாவேஜிகள் ஆகிய எல்லாவற்றிலும் மயிலாடுதுறை என்ற பெயர் மாற்றப்படும்.



டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, இலக்கியத்திலும், வரலாற்றிலும் தமிழ்நாடு என்று தானே பெயர் இருக்கிறது. அது சென்னை ராஜதானி என்று யாரால் எப்பொழுது, எப்படி மாற்றப்பட்டது? சங்கரலிங்கம் அவர்கள் சென்னை ராஜதானியை, தமிழ்நாடு என்று மாற்ற வேண்டுமென்று.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த வரலாற்றையெல்லாம் இப்பொழுது எப்படிச் சொல்ல முடியும்?

டாக்டர் கே. சமரசம்: தமிழ்நாடு சென்னை ராஜதானி என மாறியதைப் போல், கிராமங்களிலும் பல வேறு வடமொழி சொற்கள் வந்து விட்டன. ஆகவே அவற்றைத் தமிழ்ச் சொற்களாக மீண்டும் மாற்ற, பொதுவான நடவடிக்கையை அரசு எடுககுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கிற எல்லா கிராமங்களின் பெயரையும், வருவாய் கிராமங்களின் பெயரையும், அகர வரிசையில் அச்சிட்டு வெளியிட்டுள்ளோம். அதாவது, இப்பொழுது எந்தப் பெயரால் அழைக்கப்படுகிறதோ, அந்தப் பெயர், அதைப் படித்து பார்த்துவிட்டு இப்பொழுது எந்தஎந்தப் பெயரை மாற்ற வேண்டுமோ, அதற்கு அரசே நடவடிக்கை எடுத்துக் கொள்ளும். அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அங்கே இருக்கிற பொதுமக்கள் முறையாக மனு செய்தால், அதையும் பரிசீலித்துப் பார்த்து நடவடிக்கை எடுக்கலாம். தமிழ்ப் பெயர்கள் எல்லாவற்றிற்கும் வரலாறு உண்டு. மயிலாடுதுறை என்ற பெயரும், திருமறைக் காடு என்ற பெயரும் தேவாரத்தில் இருக்கின்றன. 3 பேர்களும் பாடி இருக்கிறார்கள். அதைப் போல் வரலாற்றுச் சிறப்புமிக்க சொற்கள் இருந்தால் அவற்றை ஏற்று மாற்ற அரசு தயாராக இருக்கிறது.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, வடமொழி ஆதிக்கம் என்று சொன்னார்கள். அது எப்பொழுது ஏற்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன். மற்றொன்று, 15 மொழிகளும் தேசியமொழி என்ற பிறகு, இனிமேல் ஒருமொழி ஆதிக்கம் என்று சொல்கின்ற நிலைமை ஏற்பட்டது என்று சொல்வதால், இந்த ஆதிக்கம் எப்படி, எப்பொழுது ஏன் ஏற்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, வடமொழி ஆதிக்கம் எப்படி வந்தது என்றால் தென்னாட்டுக்காரர்கள் ஏமாந்து போய் தமிழிலே பேசாமல் மணிப்பிரவாள நடையிலே பேசினால்தான் மதிப்பு பொதுமக்களிடத்திலே கிடைக்கும் என்று அவர்கள் சுய உணர்வை இழந்த காரணத்தினால் வடமொழி ஆதிக்கம் வளர்ந்தது. இன்னொன்று வடமொழி மட்டும் தேசிய மொழி அல்ல. 14க்கும் மேற்பட்ட தேசிய மொழிகளில் வடமொழியும் ஒன்று. எல்லாவற்றிற்கும் [illegible]க்கும் ரைட்ஸ் உள்ளது. வடமொழியை [illegible] மொழியாக நாம் இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை.

[1982 பிப்ரவரி 5]

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கபாடி விளையாட்டைக் கட்டாயமாக்கும் திட்டம்.

*வினா எண். 205—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சடுகுடு (கபாடி) விளையாட்டை பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கட்டாயமாக்க அரசுக்கு உத்தேசமுண்டா?

(ஆ) சடுகுடு விளையாட்டில் சிறந்து விளங்கும் மாணவர்களின் கல்விச் செலவை அரசே ஏற்றுக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) பள்ளியளவில் கட்டாயமாகப்பட்டுள்ள உடற்பயிற்சிக் கல்வித் திட்டத்தில் கபாடி விளையாட்டும் ஒன்றாகும் ஆனால் கல்லூரிகளில் உடற்பயிற்சிக் கல்வி (கபாடி விளையாட்டு உட்பட) கட்டாய பாடமாக்கப்படவில்லை.

(ஆ) சடுகுடு விளையாட்டில் சிறந்து விளங்கும் மாணவர்களின் கல்விச் செலவை அரசு ஏற்றுக் கொள்வதற்கான திட்டம் ஏதுமில்லை.

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விளையாட்டானது பழந்தமிழர் விளையாட்டா கும். அதுவும் இப்படி விளையாடும்போது தமிழ்ச் சொல்லைப் பயன்படுத்தாமல் விளையாடுகின்றனர். ஆகவே இனிமேலாவது சடுகுடு விளையாட்டில் தமிழ்ச் சொல்லைப் பயன்படுத்தவேண்டும் என்று அரசு தக்க உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அகில இந்திய அளவில் இந்த கபாடி என்ற பெயர் இருந்து வருகிறது. நாம் சடுகுடு என்று சொல்லிக்கொண்டு இருப்பதிலே எந்தவிதமான தடையும் இல்லை. ஆனால் அகில இந்திய அளவிலே போகும்போது அந்தப் பெயரைத்தான் மற்றவர்களுக்காக ஏற்றுக் கொள்ளவேண்டும்,

திரு. எம். சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விளையாட்டை தினத்தந்தி பத்திரிகையின் உரிமையாளர் மறைந்த பெரியவர் ஆதித்தனார் அவர்கள் தொடங்கி தமிழகம் பூராவும் ஊக்கம் கொடுத்து விட்டார்கள். ஆகவே அவருடைய பெயரிலே ஒரு கேடயத்தை உருவாக்கி, சிறந்த சடுகுடு விளையாட்டு வீரர்களுக்கு இந்த கேடயத்தை வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே. அது பற்றித் தனியாகக் கேள்வி கேட்கவும்.



1982 பிப்ரவரி 15]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சடுகுடு, கபாடி விளையாட்டு விளையாடுபவர்கள் மாணவர்கள் என்றுதான் இருக்கிறது. இது பெண்களாலும் விளையாடப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, மாணவர்கள் என்றால் மாணவிகளும் அதிலே இருக்கிறார்கள்.

திரு மி. வின்சென்ட். பேரவைத் தலைவர் அவர்களே, மாநில விளையாட்டுகளில் கலந்து கொண்டு வெற்றிபெறுகின்ற முதல் மாணவர்க்கு ரூ. 600 ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுவதாக அறிவிப்பு வந்ததே அது உண்மையா? அத்தகைய ஊக்க உதவித் தொகை இந்தச் சடுகுடு விளையாட்டு வீரர்களுக்கும் பொருந்துமா என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிபெறுகின்ற பள்ளிகளுக்கு வழங்கிக் கொண்டு இருக்கிறோம். ஆனால் மாணவர்கள் என்ற குறையில் 1980-81-ல் சென்னை, கோவை? அண்ணாமலை நகர் ஆகிய 3 இடங்களிலும் விளையாட்டுப் பள்ளிகளை ஆரம்பித்திருக்கிறோம். திருச்சி, மதுரை, திருநெல்வேலி, ஆகிய இடங்களில் விளையாட்டு விடுதி களை ஆரம்பித்திருக்கிறோம். அந்த இடங்களில் இருக்கின்ற மாணவர்களுக்கு நாம் தங்குகின்ற வசதியும், உணவும் தந்து, சிறப்புப் பயிற்சியும் நாம் தருகிறோம். அதே நேரத்தில் கல்வியையும் அவர்கள் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

திரு தி. க. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விளையாட்டு நாளுக்கு நாள் அபிவிருத்தி அடைந்து கொண்டு வருகிற காரணத்தாலும், அதிகமாக விளையாட்டு வீரர்கள் ஊக்கம் செலுத்துகின்ற காரணத்தினாலும். உலக அரங்குகளில் இந்த விளையாட்டை விளையாடுவதற்கு மாநில அரசே மத்திய அரசுக்கு சிபாரிசு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது இந்தக் கபாடி என்று சொல்லப்படுகிற சடுகுடு விளையாட்டுக்காக அரசு நல்ல ஆதரவு தந்து கொண்டிருக்கிறது. அண்மையில் கூட கோவையிலே அகில இந்தியப் பெண்களும் ஆண்களும் சேர்ந்து மிகப்பெரிய அளவிற்கு அளவிற்கு விளையாட்டுப்போட்டி நடைபெற்றது. இன்னும் 4, 5 மாதங்களில் இன்னும் ஒரு போட்டி தமிழ்நாட்டிலே நடைபெற இருக்கிறது என்று அவர்கள் சொன்னார்கள். அந்த அளவுக்கு இந்த விளையாட்டுக்கு தமிழ்நாடு அரசு சிறந்த ஆதரவு தந்து கொண்டிருக்கிறது. உலக அளவிலே இந்தப் போட்டி நடைபெற வலியுறுத்த வேண்டும் என்று சொன்னார்கள் அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

[முற்பகல் 9-30]

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, சடுகுடு விளையாட்டில் 'குடு குடு' என்று மூர்ச்சை அடக்கி கொண்டு கூறிவருவதுபோல், 'உடன்குடி வெத்திலையை, பறிச்சுட்டான், பிடிச்சுட்டான், விட்டுட்டான்,' என்று பாடிக் கொண்டே நெல்லை மாவட்டத்தில் உள்ளவர்கள் விளையாடுகிறார்கள். நாம் தற்போது பாரதிவிழாவைக் கொண்டாடிக் கொண்டு வருகின்றநேரத்தில், அவர் நினைவாக அவர் பாடிய

"உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்,
அச்சமில்லை அச்சமில்லை...."

என்று சொல்லிக்கொண்டு 'சடுகுடு' ஆடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த விளையாட்டில் மூச்சைப்பிடித்துக்கொண்டு விளையாடவேண்டும் என்பது தான் அதிலே உள்ள மிக முக்கியமான அடிப்படையாகும். மூச்சைப்பிடித்துக்கொண்டு தான் விளையாடுகிறார்களா என்று தெரிந்து கொள்வதற்குத்தான் 'சடுகுடு' என்று சொல்லிக் கொண்டு விளையாடுகிறார்கள். அதற்கு ஏற்ற வகையில் வேறு என்ன வார்த்தைகள் சொன்னால் பொருத்தமாக இருக்குமோ அதைச் சொல்லிக் கொண்டும் விளையாடுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் பாரதியார் பாடலைப் பற்றிச்சொன்னார்கள். விளையாடுகின்றவர்களுக்கு அது பொருத்தமாக இருந்தால் பயன்படுத்திக்கொள்ளலாம். அதற்கு நாம் ஒன்றும் தடை விதிக்கப்போவது இல்லை. ஆனால் கவிதை பாடிக் கொண்டு விளையாட்டிலே தோற்று விடக் கூடாது.

## Facilities for learning Sanskrit

*Q. No.206—THIRU S. RAJARAMAN: Will the Hon. the Minister for Education be Pleased to state;—

(a) weather the State Government has been asked by that Centre about the facilities given in this state for the study of Sanskrit

(b) if so, the details thereof

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) தமிழ் நாடு கல்விக் கூடங்களில் சமஸ்கிருத படிப்பிற்கு அளிக்கப் படும் ஊக்கம் குறித்து லோக் சபையில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கத் தேவையான விவரங்களை மைய அரசு கேட்டது. தமிழ்நாட்டில் பின்பற்றிவரும் இருமொழித்திட்டத்தின்படி தமிழ் அல்லது தாய்மொழியுடன் ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது. இவைகளைத் தவிர மூன்றாவது மொழி படிக்க இடமில்லை என்றும், சமஸ்கிருதம் தமிழ் நாட்டிலுள்ள 22 ஓரியண்டல் பள்ளிகளில் கற்பிக்கப்பட்டு வருகிறது என்றும், இவைகளில் படிக்கும் மாணவர்கள் உதவித்தொகை பெறுகின்றனர் என்றும் மைய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டது.



## கோவையில் துவங்கப்பட்டுள்ள வழக்கறிஞர்கள் கூட்டுறவுச்சங்கம்.

*வினா எண். 207 திரு கு. ரமணி: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் வழக்கறிஞர்கள் கூட்டுறவுச் சங்கம் ஒன்று துவங்கப்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில் வழக்கறிஞர்களின் எந்தவிதமான தேவைகளை அக்கூட்டுறவு அமைப்பு நிறைவேற்றுகிறது?

(இ) அதற்கு அரசின் உதவி ஏதாவது கொடுக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) வழக்கறிஞர்களின் தொழிலுக்கும், வாழ்க்கைக்கும் தேவையானவற்றை வழங்கும் குறிக்கோள்களுடன் அச்சங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது, உறுப்பினர்களுக்குத் தேவையான காகிதங்கள், முத்திரை காகிதங்கள் முதலியவற்றை வாங்கி விற்பனை செய்கிறது. மற்றும் ஆங்கில தட்டச்சு வேலையும் செய்து கொடுக்கிறது.

(இ) இல்லை.

## தமிழகத்தில் திறந்த வெளிச் சிறைச்சாலைகள் ஆரம்பிக்கும் திட்டம்

*வினா எண். 208 திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் திரு.ச. பாலகிருஷ்ணன்; திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் திறந்த வெளிச் சிறைச் சாலை ஆரம்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன?

(இ) எங்கெங்கு ஆரம்பிக்க உத்தேசமுள்ளது?

மாண்புமிகு திரு, சி. பொன்னையன்: (அ) ஆம்

(ஆ) ஏழாவது நிதி உதவிக் குழுவின் உதவியுடன் நாட்டில் நான்கு திறந்த வெளிச்சிறைச்சாலைகளை ஆரம்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளது.

(இ) இராமநாதபுரம் மாவட்டம் சிவகங்கைக்கு அருகில் உள்ள முத்துப்பட்டி, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சமீன் சிங்கம்பட்டி, தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள வேலப்பாக்கம் மாநில விதைப்பண்ணை, செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள வேங்கடமங்கலம், ஆகிய இடங்களில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[1982 பிப்ரவரி 15

திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திறந்த வெளிச் சிறைச்சாலைகள் தற்போதுள்ள சிறைச்சாலைகளில் இருந்து எந்த வகையில் வேறுபட்டு இருக்கும். திறந்த வெளிச் சிறைச்சாலைகளில் வசதிகளுக்கு என்னென்ன வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கின்ற சிறைச்சாலைகளை விட அதிகமான மாற்றம் ஒன்றும் இராது. ஆனால் இடப்பரப்பை பொறுத்தவரையில் அதிகப்படியான இடப்பரப்பு குறிப்பாக பயிரிடுதல் போன்ற பணிகளுக்கு தேவைப்படுவதால்—பெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திறந்த வெளிச் சிறைச்சாலைகளுக்கு அதிகப்படியான நிலப்பரப்பு தேவை என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இப்போது புதிதாக தமிழகத்தில் துவக்கப்பட இருக்கும் திறந்தவெளிச் சிறைச்சாலைகளுக்கு அரசு பெற உத்தேசித்துள்ள நிலப்பரப்பு என்ன, அரசுக்கு ஏற்படும் செலவு எவ்வளவு என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறகனவே நான் முன்பொரு வினாவிற்குச் சொன்னது போல் அதிக இடம் திறந்த வெளிச் சிறைசாலைகளுக்குத் தேவைப்படுகிறது. அதிகமான அக்காமோடேஷன் வேண்டும் என்ற முறையில் அது நடைமுறைப்படுத்தப்படுகிறது. தற்போது கொண்டு வர இருக்கும் சிறைச்சாலைகளுக்குத் தேவைப்படுகிற நிலம் முத்துப்பட்டிக்கு 102 ஏக்கரும சமீன் சிங்கம்பட்டிக்கு ஆரம்பக் கட்டமாக 54 ஏக்கரும், வேலப்பாக்கத்திற்கு ஆரம்ப கட்டமாக 89 ஏக்கரும், வேங்கடமங்கத்திற்கு 126 ஏக்கரும் ஆகும். இதற்கான செலவு முறையே 18 லட்சம், 17 லட்சம், 17 லட்சம், 18 லட்சம் ஆகும் என்று அரசு உத்தேசித்துள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இந்தத் திறந்த வெளிச்சிறைச்சாலைகளிலே எந்தெந்த வகையான கைதிகள் அனுமதிக்கப்படுகிறார்கள் என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, குற்றங்கள் பல வகைகளில் இருக்கின்றன. கைதிகள் சிறைச்சாலைக்கு சென்று, பிறகு அவர்களுடைய நன்னடைத்தை அடிப்படையில், அவர்கள் நன்னடத்தை உள்ளவர்கள் என்று அறியும்போது அவர்கள் திறந்த வெளிச் சிறைச்சாலைக்கு மாற்றப்படுகிறார்கள்.



1982 பிப்ரவரி 15]

திரு. உ. சுப்பிரமணியன்: தலைவரவர்களே, திறந்தவெளிச் சிறைச்சாலைக்கும் அதிக சிறைக்கும் இப்போது இருக்கிற வித்தியாசம் இல்லை என்று சொன்னார்கள். இப்போது இருக்கிற சிறைச்சாலைகளில் கட்டிடங்கள் கட்டப்பட்டு, இரவில் தங்க வாய்ப்பு இருக்கிறது. திறந்த வெளிச் சிறைச்சாலைகளிலும் அப்படி இருக்குமா? அங்கும் கட்டிடங்கள் கட்டப்படுமா? அங்கேயும் கட்டிடங்கள், மற்ற வசதிகள் எல்லாம் செய்ய வேண்டுமானால் அவை தேவையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, கட்டிடம் இல்லை என்றால் கைதிகள் எல்லாம் வெயில், மழையில் இருந்து கொண்டிருக்க முடியாது. அதற்காக கண்டிப்பாக கட்டிடம் இருக்க வேண்டும்; இருக்கும். இரவில் கட்டிடத்திலேதான் தங்குவார்கள். ஆனால் அவர்கள் தொழில் செய்யும்போது திறந்த வெளியிலே மற்றவர்களைப்போல செய்கிறார்கள். அவர்கள் வேலை செய்கிறார்கள், கைத்தொழில் செய்கிறார்கள். அப்படிப்பட்ட நேரங்களில் அவர்கள் சிறையிலே இருக்கிறோம் என்ற எண்ணமில்லாமல் மற்றவர்களைப்போலத் திறந்தவெளியில் வசதியாக இருந்து வேலை செய்கிறார்கள்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு அவைத் தலைவரவர்களே மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்ட இடங்களிலே புழல் என்ற இடம் இடம்பெறவில்லை. ஆனால் புழலிலே ஒரு திறந்த வெளிச் சிறைச்சாலை அமைப்பதற்கான திட்டம் இருந்தது. ஒரு வேளை செங்கற்பட்டு மாவட்டத்தில் அறிவித்த வேங்கட மங்கலம் என்ற இடமும் புழலும் ஒன்றாக இருக்குமோ என்று கருதுகிறேன். புழலிலே வேலை கூட ஆரம்பிப்பதாக ஏற்கனவே தெரிவித்திருக்கிறார்கள். அதுபற்றி அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, புழல் என்ற இடத்தில் ஆரம்பிக்கும் சிறையைப் பொறுத்தவரையில், அங்கே சென்னையிலே இருக்கிற மத்தியச் சிறைச்சாலையை, நவீன வசதிகளோடு இடநெருக்கடி இருக்கின்ற காரணத்தால் எல்லா வசதி அதை புழலில் அமைக்கும் திட்டம் இருக்கிறது. கிட்டத்தட்ட களோடும் அங்கே அமைக்க வசதி இருப்பதால் நடவடிக்கை 150 ஏக்கர் நிலப்பரப்பில் சிறைச்சாலை அமைக்க தெரிவித்துக மேற்கொள்ளப் பட்டிருக்கிறது என்பதைத் கொள்கிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு: தலைவரவர்களே, திறந்த வெளிச் சிறைச்சாலை ஆரம்பிப்பதற்கு என்ன நோக்கம் என்றும் அந்த நோக்கம் நடைமுறையிலே வெற்றிப்பெற்று வருகிறதா என்றும் அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, குற்றம் செய்தவர்கள் எல்லாம் தண்டனைக்கு உட்பட வேண்டும். அவர்கள் [illegible] கடுமையான நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட

வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் ஒரு குற்றவாளி குற்றம் செய்த பிறகு, தண்டனை பெற்ற பிறகு மீண்டும் அவர்கள் நல்லவர்களாக வேண்டும், நல்ல பண்பு உள்ளவர்களாக மாறவேண்டும் என்பதற்காக இப்படிப்பட்ட வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. இத்தகைய திறந்த வெளிச்சிறைச் சாலைகளில். தண்டனைப்பெற்று நன்னடத்தை உள்ளவர்களை தங்கச் செய்து, அங்கே அவர்களுக்கு அதிகமான உரிமைகள் தந்து, Pscyhologically they should nct get depresed என்ற முறையிலே இதைப்போன்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திரு. க. பாலசுப்பிரமணியன்; தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது திறந்தவெளிச் சிறையிலே நன்னடத்தை உள்ள கைதிகள் அனுமதிக்கப்படுகிறார்கள் என்று தெரிவித்தார்கள். சில கைதிகள் ஆத்திரத்திலே சில காரியங்களை, செய்துவிட்டு பின்னால் நல்லவர்களாக இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஆத்திரத்திலே செய்த குற்றத்திற்காக சிறைக்குச் செல்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் சிறையிலே நல்லவர்களாக, தொழிலிலே திறமை மிக்கவர்களாக இருந்து சில தொழில்களை நல்லமுறையில் கற்றுக்கொள்கிறார்கள். அப்படிப்பட்ட நல்லவர்களை வெளியிலே நல்லமுறையில் தொழில் செய்து சம்பாதிக்க அனுமதி கொடுத்து, இரவு நேரங்களில் மட்டும் திறந்தவெளிச் சிறையிலே அவர்கள் வந்து தங்குவதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு வழக்கறிஞர். ஆகவே அவர்களுக்கு இதுபற்றி நன்றாகத் தெரியும். A murder on provocaction செய்த குற்றத்தின் தன்மை என்ன என்பதும், அதற்கு என்ன தண்டனை என்பதும் அவர்களுக்குத் தெரியும். அவர்கள் குற்றத்திற்கு ஏற்ற தண்டனை பெற்று, விடுதலை பெற்றபிறகு அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொருட்டு பல வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான நடைமுறைகள் ஏற்கெனவே இருக்கின்றன. அவர்கள் சிறைச்சாலையிலே தொழில்கள் செய்ய ஏற்கெனவே வசதி இருக்கிறது. அந்தத் தொழில்களிலே அவர்கள் ஈடுபட அனுமதிக்கப்படுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மாதிரி தண்டனைப் பெற்றவர்கள் பகலிலே எங்கே வேண்டுமானாலும் சென்று தொழில் செய்துவிட்டு, இரவிலே மட்டும் சிறைச்சாலையில் வந்து தங்கிக் கொள்வதற்கு நடைமுறை சாத்தியம் இல்லை; உகந்ததும் அல்ல.



### ஏழைகளுக்கு வழங்கப்படும் இலவச சட்ட உதவி

*வினா எண். 209— திரு. து. புருஷோத்தமன் திரு. எம். சின்னசாமி திருமதி த. இராசம்பாள்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.

Free legal aid என்ற அமைப்பின் மூலம் 1979–1980ம் ஆண்டில் எத்தனை ஏழைகளுக்குச் சட்ட ஆலோசனை வழங்கியுள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: ஏழைகளுக்கு இலவச சட்ட உதவி திட்டத்தின் கீழ் 1979-80 ஆம் ஆண்டில் 6,504 ஏழைகளுக்குச் சட்ட ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9–40)

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஃப்ரீ லீகல் எய்ட் என்ற இந்த அமைப்பு இருப்பது என்பதே கிராமங்களிலே உள்ள ஏழை எளிய மக்களுக்கு இன்னும் தெரியாத நிலை இருக்கின்றது. ஆகவே இப்படி ஒரு அமைப்பு இருக்கின்றது என்றும் அதன்மூலம் ஏழைகள் சட்ட ஆலோசனை பெறலாம் என்றும் சினிமாவிலே சிலைடுகள் போடுவது போன்று சரியான விளம்பரங்கள் மூலம் மக்கள் எல்லாம் அறிகின்ற வகையிலே ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, தமிழ்நாடு சட்டஉதவி மற்றும் ஆலோசனைக் கழகம் 1977-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் வாரத்திலிருந்து செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற கரூர் தொகுதியிலிருந்தும் பல வழக்கறிஞர்கள் இதிலே சேர்ந்திருக்கிறார்கள். அங்கேயும் ஒரு கிளை இருக்கின்றது. இந்த அமைப்பிலே மொத்தம் 105 கிளைகள் இருக்கின்றன. இந்தத் திட்டம் பற்றி நன்கு விளம்பரப்படுத்துவதன் மூலம் அதிகமாக மக்களுக்கு அதன் பலன் கிடைக்க வேண்டும் என்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தை ஏற்கிறேன். அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்துப்படி வானொலி மூலமும், பத்திரிகைகள் மூலமும் இதுபற்றி அதிகமான அளவிலே பரப்பவேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர், பப்ளிக் ரிலேஷன்ஸ் ஆபீஸர் மற்றும் ஆங்காங்குள்ள செய்தி துறையின் மூலமாகவும் இதைப் பரப்ப வேண்டும் என்று அரசு கோரியுள்ளது.

திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இலவசச் சட்ட ஆலோசனைக் குழுவிலே யார் யார் இருக்கிறார்கள்? மாவட்ட அளவிலும் தாலுக்காவிலும் ஆலோசனைகுழு இருக்கின்றதா? அவ்வாறு இருந்தால் யாரிடம் இதுகுறித்து அணுக வேண்டும் என்பதை விளக்குவார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, இலவசச் சட்ட ஆலோசனைக் குழுவினைப் பொறுத்தவரை ஆளுநர் அவர்களும், உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி அவர்களும், சட்டப் பொறுப்பிலே இருப்பதால் நானும் அதிலே இறுப்பினர்களாக இருக்கிறோம். ஆனால் அன்றாட நிர்வாகப் பணியை மேற்கொள்வதற்காக இரண்டு ஓய்வுபெற்ற நீதிபதிகளான மாண்புமிகு ராமகிருஷ்ணன், மாண்புமிகு கிருஷ்ணசாமி ரெட்டியார் ஆகியோர் இந்த குழுவுனைக் கண்காணித்து வருகிறார்கள். ஏ பிரிவு, பி பிரிவு என்ற வகையிலே அதாவது சீனியர் அட்வகேட்ஸ் ஜூனியர் அட்வகேட்ஸ் என்ற வகையிலே இரண்டு பிரிவினர் மாவட்ட அளவிலும் வட்ட அளவிலும் அமைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தக் குழுவினர் இந்தப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

திரு. கு. பா. பழனியப்பன்: தலைவரவர்களே, இலவசச் சட்ட உதவி என்பது நல்ல பலனைக் தரக்கூடிய ஒரு திட்டம். தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டங்களின்படி தாசில்தார் கோர்ட்டிலே ஏழை எளியவர்களுக்காக இந்த இலவச சட்ட உதவியின் மூலமாக வழக்கறிஞர்கள் ஆஜர் ஆகலாம் என்ற அனுமதியை வழங்கிட அரசு தயாராக இருக்கின்றதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, அனுமதி வழங்காவிட்டாலும் கூட விதியின்படி they can have their own representatives, though not an Adtvocated ஆனால் அட்வகேட் வேண்டாம் என்று சொன்னதற்குக் காரணம் பல கட்டங்களில் ஏழைகளுக்கு அது ஒரு பளுவாகக் கூட ஆகிவிட்டது. என்பது அரசுக்கு வந்த காரணத்தால் இதுபோன்று ஏழைகளுக்கு வழக்கறிஞர்கள் வேண்டாம் என்று முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல் இலவச சட்ட ஆலோசனைக் குழுவின் மூலமாக அவர்களுக்கும் பரிகாரம் வேண்டும் என்றும் இதை அவர்கள் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள்,



பள்ளப்பட்டிக்கு குடிநீர் வழங்கும்திட்டம்,

வினா எண்: 210. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) நிலாகோட்டத் தொகுதி பள்ளப்பட்டியின் குடி தண்ணீர் பிரச்சினை தீர்க்க எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

(ஆ) அதற்காக செலவு செய்துள்ள பணம் எவ்வளவு?

(இ) இவ்வேலை இன்னும் முடியாமல் இருப்பதற்கு காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ் இராகவானந்தம்: (அ) ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) ரூ. 24,939.88 ஆகும்.

(இ) திட்ட ஆய்வுத் தொகையினைக் கட்டாததால் பணியில் தாமதம் ஏற்பட்டது. தற்போதுள்ள விதிப்படி ஆய்வுத் தொகையையும் தோராய மதிப்பீட்டில் சேர்த்துவிட வழிவகை இருப்பதால் களப்பணியாளர்கள் பணிகளைத் தொடரக் காரப் பட்டுள்ளார்கள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பள்ளப்பட்டி திட்டம் 1979 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இதுவரையிலும் ஆய்விலே உள்ளது, ஆய்விலே உள்ளது என்று சொல்லிக் கொண்டு வருவதைப் பார்க்கின்றபோது மிகுந்த வேதனைப்படுகிறேன். ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்ட சிலுக்குவார்பட்டி திட்டத்தோடு இணைத்து பக்கத்திலுள்ள 13 கிராமங்களுக்கும் உடனடியாகத் தண்ணீர் கிடைக்க வழிவகை செய்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வுத் தொகையை கொடுக்க முடியாத நிலையிலே இருப்பது மிகுந்த வேதனை தரக்கூடிய விஷயம் தான். ஆனாலும் இப்பொழுது அதை, தோராய மதிப்பீட்டிலே சேர்த்து விடுவது என்ற முடிவு எடுக்கப்பட்டு விட்ட காரணத்தால் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகிறது என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: பேரவைத் தலைவர் அவர்களே, பணிகள் தொடங்கி விட்டதாக அமைச்சர் அவர்கள் கூறினார். அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி பணிகள் தொடங்கி நடைபெறும் போது அதைச் சுற்றி 1/2 மைல், 1 மைல் சுற்றுவட்டாரத்திலுள்ள கிராமங்களையும் இணைத்து அந்தக் வேலைகளை முடிக்கும் வகையில் செய்யப்படுமா? தேவையானால் அந்த கிராமங்களின் லிஸ்ட் வைத்திருக்கிறேன், தருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே. ஆய்வு எப்படி செய்யப்பட்டிருக்கிறதோ, அதைப்போலத்தான் பணிகள் நடக்கும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை சந்தித்து எந்தெந்தக் கிராமங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிந்து கொண்டு, ஏதாவது கிராமங்கள் விடுபட்டிருக்குமேயானால், அவைகளைச் சேர்க்க வேண்டும் என்பதைச் சொன்னால், கூடுமானவரையில் அவைகளை சேர்ப்பதற்கு அரசு முயற்சி எடுக்கலாம்.

நரிக்குடி ஒன்றியப் பகுதிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

* வினா எண். 211 திரு க. பாரமலை : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் நரிக்குடி ஒன்றியம் வாகைக்குளம், புளியங்குளம், பட்டனந்தல் ஆகிய கிராமங்களுக்கு பொதுவாக ஒரு கூட்டுக்குடிநீர் திட்டம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அத்திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) இத் திட்டம் நடப்பு நிதியாண்டில் (1981-82), இரண்டாம் கட்ட தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்.

திரு க. பாரமலை: பேரவைத் தலைவர் அவர்களே, இத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று அறிவித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே தன்னிறைவுத் திட்டம் இந்த வட்டாரங்களில் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக இதனை முடிப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே 69 ஒன்றியங்களை எடுத்துச் செய்தோம். இப்பொழுது 150 ஒன்றியங்களை எடுத்திருக்கிறோம். அதிலேயே இதுவும் வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுக்குடிநீர் திட்டம் என்பது மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக, அந்தக் கஷ்டத்திலிருந்து அவர்களை நிவர்த்தி செய்வதற்காக போடப்படுகிற திட்டம். அதை நான் வரவேற்கிறேன். ஆனால், இந்தத் திட்டங்களில் எல்லாம், பவர்கட் எலக்ட்ரிக் பம்புதான் வைத்திருக்கிறார்கள். வருகிற நேரத்தில், அல்லது மின்சாரப் பற்றாக்குறை ஏற்படுகின்ற நேரத்தில் அவைகள் இயங்குவது இல்லை. ஆகவே அப்படிப்பட்ட இடங்களில் ஆயில் என்ஜின்கள் வைத்து தண்ணீர் இறைபதற்கான முறையில் ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணியை தனிப்பிரிவின்கீழ் கொண்டுவரும் திட்டம்

* வினா எண் 212 திருகுமரி அனந்தன் ; மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குழாய்க்கிணறு அமைப்புப் பணியை தனியமைப்பாகப் பிரிக்கும் யோசனை உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடை "இல்லை.

திரு. குமரி அனந்தன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்ட இடங்களில் சில சீராக இயங்காத காரணத்தினாலும், செப்பனிடப்படாத நிலையில் செம்மையாக நீர் இறைக்க முடியாத காரணத்தினாலும், அரசும் அமைச்சரும் எதிர்பார்க்கிற பலன்கள் விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் கிடைக்க முடியாத சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால் தான் இதில் தனிப்பட்ட அக்கறை செலுத்துவதற்கு ஒரு தனி அமைப்பு வேண்டும் என்று கேட்கப்பட்டது. ஆகவே, அதற்கான முயற்சிகளை அரசாங்கம் எடுக்குமா மீண்டும் அதை பரிசீலிக்குமா என்று கேட்க விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ; பேரவைத் தலைவர் அவர்களே, பராமரிப்பைப் பற்றி ஒரு பரிசீலனை செய்து கீழ்க்கண்ட முடிவை எடுத்திருக்கிறோம்.

[1982 பிப்ரவரி 15

### தமிழ்நாட்டிலுள்ள வேளாண்மை பொறியியல் பணிக் கூட்டுறவு மையங்கள்

*வினா எண் 214—திரு. செ. செம்மலை: மாண்புமிகு நீர்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மொத்தம் எத்தனை வேளாண் பொறியியல் பணிக் கூட்டுறவு மையங்கள் (Agro Engineering Service Co-operative Centres) உள்ளன?

(ஆ) அவற்றை அதிகரிக்கும் எண்ணம் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது (அ) தமிழ்நாட்டில் வட்டார அளவில் மொத்தம் 217 வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) தற்போது இல்லை.

திரு. செ. செம்மலை: பெரும்பாலான பணி கூட்டுறவு மையங்கள் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருவதாகத் தெரிகிறது. அந்த மையங்களின் நிதி ஆதாரங்களைப் பெருக்கத்தக்க வகையில் ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா? இது போன்ற மையங்கள் தற்போது ஆற்றிவருகிற பணிகளோடு வியாபார ரீதியான பணிகளையும் இந்த மையங்களிடம் ஒப்படைக்க அரசிடம் திட்டம் ஏதாவது உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பொதுவாக இப்போது இயங்கி வருகிற 217 மையங்களில் பெரும்பாலான மையங்கள் நட்டத்தில்தான் இயங்கி வந்திருக்கின்றன. ஆனால் சமீப காலத்தில், ஒரு ஆறு மாத காலமாக 120க்கு மேற்பட்ட மையங்கள் இலாபகரமாக நடப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் சில மையங்களை லாபகரமாக நடத்த முடியும் என்றும் அரசு நம்புகிறது. சில மையங்கள் என்ன முயற்சி எடுத்தாலும் இலாபகரமாக நடத்தமுடியாது என்ற சூழ்நிலையில் அவைகளையெல்லாம் துணை மையங்களாக நடத்த அனுமதித்து வேறு புதிய இடங்களில் இலாபகரமாக நடத்த சாத்தியக்கூறு இருக்குமானால் அதை தயார்படுத்தலாமா என்று அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. செ. செம்மலை: தற்போது அது போன்ற மையங்கள் டிராக்டர்கள் போன்ற வேளாண்மைக் கருவிகளை வாடகைக்கு விடுவதோடு அந்தப் பணிகளை முடித்துவிடுகிறது. அதுபோன்ற மையங்களை இலாபகரமாக இயங்குவதற்கு பூச்சி மருந்து, பெஸ்டிசைட்ஸ் போன்ற பொருள்களை விற்பனை செய்கிறவகையிலும் வியாபார ரீதியில் அந்த மையங்களை நடத்த அரசு முன்வருமா?



1982 பிப்ரவரி 15]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பொதுவாக இந்த மையங்கள் விவசாயத் தொடர்பான விதைகள், உரங்கள், பூச்சி மருந்துகள், டீசல், ஆயில், விதைதெளிப்பான், விவசாய உபகரணங்கள், விவசாயக் கருவிகளுக்குத் தேவையான உதிரி பாகங்கள், இந்தத் தொழில்களை நடத்தலாம், வியாபாரத்தை நடத்தலாம் என்றுதான் மையங்களுக்கு நாம் அறிவுறுத்தியிருக்கிறோம். சில மையங்கள் நிதி ஆதாரம் இல்லாத சூழ்நிலையில் பெரும்பாலான வியாபாரங்களை மேற்கொள்ள முடியவில்லை. அவைகளுக்கு ஏதாவது உதவி செய்து சிறந்தமுறையில் அவைகளை நடத்துவதற்கு அந்த மையங்களை தயார்படுத்தலாமா என்று அரசு இப்போது யோசித்துக்கொண்டிருக்கிறது.

திரு. செ. இராமலிங்கம்: இந்த 217 மையங்கள் தவிர இன்னும் பல மையங்கள் துவங்குவதற்காக விவசாயிகளிடம் இருந்து பங்குத் தொகை வசூலிக்கப்பட்டிருக்கிறது. மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன்னால். ஆனால் அந்த மையங்கள் எல்லாம் துவங்கப்படவில்லை. ஆனால் அவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட பங்குத் தொகை மட்டும் டெப்பாஸிட் செய்யப்பட்டுள்ளது. எனவே ஒன்று அந்த மையங்கள் ஆரம்பிக்கப்படவேண்டும் அல்லது வசூலிக்கப்பட்ட அந்தப் பங்குத் தொகை திருப்பித் தரப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, எந்தெந்தப் பகுதிகளிலே அப்படி பங்குத் தொகை வசூலிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தகவல் தந்தால், அதுகுறித்துப் பதில் சொல்ல முடியும்.

### வேடசந்தூர் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கனிமங்கள் குறித்த ஆய்வுகள்.

* வினா எண்—215. திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வேடசந்தூர் பகுதியில் பீங்கான் பொருள்களுக்கு தேவைப்படும் மூலப்பொருள் எடுக்கும் சாத்தியக்கூறுகள் பற்றி ஆய்வு செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) ஆம்.

(ஆ) மதுரை மாவட்டம் வேடசந்தூர் வட்டம் ரெங்கமலை வரையறுக்கப்பட்ட வனங்களில் வெங்கக்கல் (quartz) மற்றும் களிமம் (feldspar) முதலிய கனிமங்கள் இருப்பது அறியப்பட்டது. இக்கனிமங்களைப் பற்றிய தரம் மற்றும் இருப்பு அளவினை அறிவதற்கு களப்பணி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 1980 ஆம் ஆண்டில் மேற்கூறிய கனிமங்களுக்கு தமிழ்நாடு கனிம நிறுவனத்தினர் சுரங்க குத்தகைக்கு மனு செய்துள்ளனர். அது அரசின் ஆய்வில் இருக்கிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வினா வேடசந்தூரைப் பற்றி இருந்தாலும்கூட, வேடசந்தூர் பகுதியில் ரெங்கமலையிலிருந்து, திண்டுக்கல் பகுதியில் தாடிக்கொம்பு வரையில் மூலப்பொருள்கள் ஏராளமாக இருக்கின்றன. எனவே, ஆய்வு நடத்தி அந்தப் பகுதியில், அதாவது வேடசந்தூர் பகுதியில் பீங்கான் தொழிற்சாலை அமைக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியில் மேற்கண்ட சுமார் 96,700 டன்கள் வெங்கக் கல்லும், 16,750 டன்கள் கனிமமும் உள்ளதாக ஆய்வில் கணக்கிடப் பட்டுள்ளது. அந்தப் பகுதிகளில் தொழிற்சாலை வைப்பதற் கான எண்ணமில்லை. அதை ஒட்டியிருக்கிற அந்தப் பகுதி களில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு அரசின் ஆய்விலே இருக்கிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பீங்கான் மூலப்பொருளுக் கான வெங்கக்கற்களை தனியார் யார்யாரோ லாரிகளில் எடுத்துக் கொண்டு போகிறார்கள். சிமெண்ட் தொழிற்சாலை ஏற்படுத்து வதற்கான திட்டம் இந்த அரசின் ஆய்விலே இருந்தாலும்கூட, தமிழக கனிவள நிறுவனம் மூலமாக அந்தக் கற்களை விற்பதற் கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். டாமின் நிறுவனம் விண்ணப்பித்திருக்கிறது. அது ரிசர்வ்ட் பாரஸ்ட் பகுதியாக இருப்பதால், மத்திய அரசின் அனுமதியைப் பெற வேண்டும். அதற்காகக் காத்திருக்கிறது. வெகு விரைவிலே அந்த டாமின் நிறுவனத்திற்கு அந்தப் பகுதிகளைக் கொடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அப்போது அந்தப் பகுதி களிலே இருக்கும் வெங்கக்கற்களை டாமின் நிறுவனம் வியாபார முறையில் விற்க ஈடுபடும்.

திரு என். வரதராஜன்: தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் வேடசந்தூர் வட்டாரத்தில் கனிமப் பொருள்கள் பற்றி ஆராய்ச்சி இருப்பதாகச் சொன்னார்கள். அங்கே மிக விலை உயர்ந்த நீலக் கற்கள் இருக்கின்றன. அதைத் தனி நபர்கள் எடுத்துச் செல்லுகிறார்கள். ஆகவே, இந்தப் பகுதியிலே இதற்கான ஆய்வையும் இந்த அரசு மேற்கொண்டு, பொது மக்களுக்கு பயன்படும் வகையில் ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப் படுமா? அல்லது அதற்கான ஆய்வைச் செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?



மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல், அங்கே 40 கோடி ரூபாய் மதிப்பில் சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிப் பதற்கு மத்திய அரசின் அனுமதியைக் கேட்டுள்ளோம். மத்திய அரசின் அனுமதி கிடைக்காமல், அங்கே தேங்கியிருக்கிறது. நீல நிற கற்கள் அங்கே எவ்வளவு இருக்கின்றன என்ற விவரம் என்னிடத்திலே இல்லை. இதற்கு முன்னால் ஆய்வு மேற் கொள்ளப்படாமல் இருந்தால், அதற்கான ஆய்வு அரசின் சார்பிலே மேற்கொள்ளப்படும்.

### தமிழ்நாட்டில் உப்பு உற்பத்தி.

*வினா எண் 216—திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உப்பு எங்கெங்கு அதிமாக உற்பத்தி செய்யப்படுகிறது?

(ஆ) விற்பனை செய்வதற்கு தமிழ்நாடு அரசின் உதவி என்ன?

(இ) நவீன முறையில் உப்பு உற்பத்தியை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட இடங்களில் அதிக அளவிலான உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது:—

(1) திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடி மற்றும் வேப்பலோடை;

(2) கன்னியாகுமரி மாவட்டத்தில் மனக்குடி மற்றும் கோவளம்.

(3) இராமநாதபுரம் மாவட்டத்தில் மாரியூர், வாலி நோக்கம்.

(4) தஞ்சாவூர் மாவட்டத்தில் அதிராமபட்டினம் மற்றும் வேதாரண்யம்.

(5) தென்னாற்காடு மாவட்டத்தில் மரக்காணம்.

(6) செங்கல்பட்டு மாவட்டத்தில் சூணாம்பேடு கோவளம் மற்றும் எண்ணூர்.

(ஆ) விற்பனை செய்வதற்கு தமிழ்நாடு அரசின் உதவி ஏதும் இல்லை.

(இ) மாரியூர்—வாலிநோக்கத்திலுள்ள அரசு உப்பு தொழிற்சாலை, கோவளத்திலுள்ள இணை உப்பு நிறுவனமான மாருதி உப்பு நிறுவனம், வேதாரண்யத்திலுள்ள தனிப்பட்ட நிறுவனங்களான விம்கோ மற்றும் மேட்டூர் கெமிகல்ஸ் அண்டு இண்டஸ்டிரியல் கார்ப்பரேசன் ஆகியவை உப்பு தயாரிப்பதற்கான நவீன முறைகளை மேற்கொண்டுள்ளன.

[முற்பகல் 10.00]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. எம். எஸ். மாணிக்கம்: தமிழ் நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிற உப்பு மேற்கு வங்கம், பீகார் போன்ற மாநிலங்களுக்கு அதிகமாக விற்பனை செய்யப்படுகிறது. இந்த உப்பை ரயில் மூலம் கொண்டு சென்றால்தான் அதிகமாக விற்பனை செய்ய முடியும். ஆனால் ரயில் மூலம் உப்பைக் கொண்டு போக மத்திய அரசு தடை செய்திருப்பதால் உப்பை விற்பனை செய்ய சிரமம் இருப்பதால் தமிழ்நாடு அரசு மத்திய அரசை வற்புறுத்தி உப்பை ரயில் மூலம் எடுத்துச் செல்ல உதவி அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: இந்தியாவிலேயே, குஜராத் மாநிலத்திற்கு அடுத்தபடியாக தமிழ்நாட்டில்தான் அதிகமாக உப்பு உற்பத்தி ஆகிறது. ஏறக்குறைய 45,889 ஏக்கரில் 16,75,000 டன் உப்பு உற்பத்தியாகிறது. தமிழ்நாடு உப்பு உற்பத்தியில் இந்தியாவிலே இரண்டாவது இடத்தை வகிக்கிறது. மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்தச் சிரமங்கள் குறித்து மத்திய அரசுக்குத் தமிழ்நாடு அரசு எழுதி வற்புறுத்தும்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில் செங்கற்பட்டு மாவட்டத்தில கூணாம்பேட்டிலும கோவளத்திலும் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். செங்கற்பட்டு மாவட்டம், செய்யூர் கிராமத்தில் அரிசன மக்கள் கூட்டுறவுச் சங்கங்களின் சார்பில உப்பு உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. 1966, 1978-79ல் வீசிய புயலின் காரணமாக உற்பத்தி பாதிக்கப்பட்டிருப்பதால் அரசு நிவாரணம் அளிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: அரசின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட பகுதிகளில் உப்பு உற்பத்தி செய்யப்படுவதில்லை. தனியார் உப்பு உற்பத்தி செய்து அல்லது சொசைடி மூலம் உற்பத்தி செய்து வந்தது. நிறுத்தப்பட்டிருக்கும் நிலையில் அரசுக்கு உதவி கோரி கோரிக்கை வந்தால் அரசு பரிசீலிக்கும்.



திரு. மு. அப்பாதுரை: எங்களுடைய நெல்லை மாவட்டத்தில் மட்டுமல்லாமல் தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதிகளில் அதிகமாக உப்பு உற்பத்தி செய்யப்பட்டுகிறது. தனியார் முதலாளிகள் உப்பை ஏற்றுமதி செய்து அதிகமாக லாபம் சம்பாதிக்கிறார்கள். மேற்கு வங்க அரசு இந்த உப்பை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த அடிப்படையில் தமிழக சர்க்காரே நேரடியாக இந்த உப்பை ஏற்றுமதி செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: ஏற்கனவே சொன்னது போல் 16,75,000 டன் உப்பு தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ் நாட்டில் உப்பு நிறுவனத்தின் சார்பாக உற்பத்தி செய்யப்படுகிற உப்பு அந்த நிறுவனத்தின் சார்பாக நேரடியாகவும், ஏஜண்டுகள் மூலமாகவும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதேபோன்று விற்பனை செய்கிறது. தனியாரும் வியாபாரம் செய்ய வருகிறார்கள். அரசே அனைத்தையும் ஏற்று வியாபாரம் செய்ய உத்தேசம் இல்லை.

தொழில் வளர்ச்சிக்குழு அமைக்கும் திட்டம்.

வினா எண். 217—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு அரசு தொழில் வளர்ச்சிக்குழு அமைக்க பரிசீலனை செய்து கொண்டிருக்கிறதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) மற்றும் (ஆ) தொழில் ஆலோசனைக்குழு ஒன்று மாநில அளவில் அமைக்க அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாநில தொழில் ஆலோசனைக் குழு அமைக்க குறிப்பு அரசின் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதனை விரைவாக அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? அப்படி அமைக்கிறபோது அதில் யார் யார் அங்கம் வகிக்கும் நிலைமை ஏற்படும்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பில் சில அதிகாரிகளையும் தனியார் துறையில் — அந்தந்த துறைகளுக்கு ஏற்ப, எடுத்துக்காட்டாக சிமின்ட் உற்பத்தி என்று வருகிறபோது சிமின்ட் தொழில் சம்பந்தப்பட்ட ஒருவர், அதேமாதிரி சர்க்கரை உற்பத்தி என்று வருகிறபோது சர்க்கரை தொழில் சம்பந்தப்பட்ட ஒருவர் — அந்த அந்தப் பிரிவுகளிலே முன்னணியிலே இருக்கின்ற தனியார்கள், தொழிலதிபர்கள் இதைத்தவிர [illegible] — அவர்களுக்கு ஆகியவர்களைக் கொண்ட ஒரு குழுவை — ஏற்படுகின்ற சிரமங்களை அரசு தெரிந்துகொள்வதற்காகவும் தொழில் அபிவிருத்திக்கு அரசு என்ன என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதை அரசு புரிந்து கொள்வதற்கு சுமார் 20 பேர்களுக்கு மேற்படாத [illegible] —வெகு விரைவில் [illegible] அளவில் ஒரு குழுவை அமைக்க அரசு முடிவு செய்திருக்கிறது.

திரு. கே. ஆர். சுந்தரம் : தலைவர் அவர்களே, மாநில அளவிலே தொழில் வளர்ச்சியைக் கண்டறிவதற்காக ஒரு குழுவை அமைக்கப்போவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதேபோன்று மாவட்டங்களிலேயும் அத்தகைய குழுக்களை அமைத்து தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துவது பற்றி அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அளவிலே குழுவை அமைக்கிறபோது பல் வேறு மாவட்டங்களில் இருந்தும் பிரதிநிதிகள் அதிலே இடம் பெறுவார்கள். தற்போது மாவட்ட ஆட்சித் தலைவர், டிஸ்ட்ரிக்ட் இன்டஸ்ட்ரீஸ் சென்டர்களின் மானேஜர்கள் இவர் களையெல்லாம் அழைத்து, மாண்புமிகு ஊரகத் தொழில் வளர்ச்சி அமைச்சர் அருமை அண்ணன் திரு. கே. ஏ. கே. அவர்களும் நானும் இதுபோன்ற ஆலோசனைக் கூட்டங்களைக் கூட்டி தொழில் முனைவர்களை ஊக்குவித்துக் கொண்டிருக் கிறோம்.

படித்து பதிவு செய்து வேலைவாய்ப்பு நிவாரணத்திற்குக் காத்திருக்கும் காலத்தைக் குறைக்கும் திட்டம்.

* வினா எண். 218 திரு. என். பழனிவேல்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) படித்து வேலையில்லாமலிருக்கும் பட்டதாரிகளுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தில் பதிவு செய்திருக்கும் காலத்தை 5 ஆண்டுகளிலிருந்து 3 ஆண்டுகளாகக் குறைக்கக் கோரி விண்ணப்பம் எதுவும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன்மீது எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம். 1981 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம், இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம், மதுரை கிளை ஒரு மனு கொடுத்தது. வேலைவாய்ப்பு நிவாரணத் திற்கு காத்திருக்கும் காலத்தினை 5 ஆண்டுகளிலிருந்து 3 ஆண்டு களாகக் குறைப்பது அதில் உள்ள கோரிக்கைகளில் ஒன்றாகும்.

(ஆ) இத் திட்டம் இப்பொழுதுதான் செயல்படுத்தப்பட்டு வருவதால் அந்தக் கோரிக்கை மீது மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

திரு. எம். ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது வாலிபர் சங்கத்தின் மூலமாக கோரிக்கை வரப்பெற்றதாகவும் பரிசீலிப்ப தாகவும் சொன்னார்கள். படித்துவிட்டு வேலையில்லாத பட்டதாரிகளுக்கு உதவித் தொகை வழங்கப்படும் என்று கடந்த ஆண்டு அரசு அறிவித்ததற்கு இணங்க இதுவரையில் எத்தனை பேர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?



மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, மாவட்ட வாரியாக தற்போது இல்லாவிட்டாலும்கூட 1980-81 ஆம் ஆண்டில் செலவழிக்கப்பட்ட தொகை 22 லட்சத்து 4 ஆயிரம் ரூபாய். இதனால் பயன் பெற்றோர் எண்ணிக்கை 1–7–80 முதல் 31-3-1981 முடிய 4,538. நடப்பு ஆண்டில் 1981–82 நிதியாண்டில் செலவழிக்கப்பட்ட தொகை 30-11-81 வரை 43,60,972. ரூபாய் 15–1–1982 முடிய உதவித் தொகை வழங்கப்பட்டவர்கள் 11,815 நபர்கள்.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் படித்துவிட்டு வேலையில்லாது இருக்கும் பட்டதாரிகள் லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்று அரசின் கணக்கை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வேலையற்ற வர்கள் தமிழ்நாட்டில் 11 லட்சம் பேர்கள் இருப்பதில் லட்சத் திற்கும் மேற்பட்டவர்கள் பட்டதாரிகளாக இருக்கிறபோது இந்தத் திட்டத்தினால் பலன் பெற்றவர்கள் 4 ஆயிரம் என்றும் 11 ஆயிரம் என்றும் அமைச்சர் கணக்கைத் தருகிறார்கள். மற்ற வர்கள் மனு செய்யவில்லையா? அல்லது மனுசெய்து அவைகளின் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லையா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு முதல் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டது. இந்தத் திட்டம் அமலாக்கப்பட்டபோது இத் திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெறுவதற்காக தகுதியுடை யோர் பதிவு செய்து 5 ஆண்டுகாலம் காத்திருந்தோர் சுமார் 26 ஆயிரமாக இருந்தது. பலன்பெறும்வண்ணம் தாசில்தாரிடம் மனுச்செய்தவர்களின் எண்ணிக்கையைத்தான் நான் பதிலிலே குறிப்பிட்டிருக்கிறேன்.

திரு. என். வரதராஜன் : வேலையில்லாத பட்டதாரிகள் நாளுக்குநாள் பெருகிக் கொண்டு வருகிறார்கள். சமுதாய நலக் காரியங்களில் இவர்களுக்கு உதவித் தொகை வழங்குவதும் ஒன்றாகும். கேரள மாநிலத்திலே இந்த ஆண்டுகூட 10 கோடி ரூபாய் நிவாரணம் கொடுத்திருக்கிறார்கள் என்று அறிகிறோம். ஆகவே, தம்முடைய அரசு இந்த ஐந்தாண்டு என்பதை மூன்றாண்டாகக் குறைத்து இந்த உதவித் தொகையை இன்னும் ஒரு கோடி இரண்டு கோடி என்று உயர்த்துவதற்கு அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

(முற்பகல் 10.10)

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நடப்பு நிதியாண்டில் இதற்காக 150 இலட்சம் ரூபாய் இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் எடுத்துச் சொன்னதைப்போலத் தற்பொழுது மூன்றாண்டுக் காலமாக இதைக் குறைத்தால் தற் போது வழங்கப்படும் 26,000 பேர்களுக்கு அதிகமாக மூன்று மடங்கிற்கும் சற்று அதிகமாக ஏறத்தாழ 79,000 பேர்களுக்கு

வழங்க வேண்டியிருக்கும். இதனால் சுமார் நான்கரை கோடி ரூபாய்க்கு ஒதுக்க வேண்டியிருக்கும். இந்தத் தொகை மிகவும் கணிசமான தொகை என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் அறிந்திருப்பார்கள். அரசு பல முன்னேற்றகரமான திட்டங்களில் கவனம் செலுத்த வேண்டியிருப்பதால், பல முன்னேற்றகரமான திட்டங்களுக்கு நிதிப் பற்றாக் குறையாக இருக்கின்ற சூழ்நிலையில் இந்த அதிகச் செலவை ஏற்படுத்தினால் அரசுக்குப் பெரிய பளுவாக ஏற்பட்டு விடும் என்பதல் இதைத் தற்பொழுது மூன்றாண்டுகளாகக் குறைக்கும் எண்ணம் அரசுக்குக் கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. இரா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்த பட்டதாரிகளுக்கு உதவித் தொகை வழங்கும் இந்தத் திட்டத்தின் அடிப்படையில் தமிழகத்திலே இதுவரையில் கொடுத்திருக்கின்ற எண்ணிக்கையை அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படி உதவித் தொகை வாங்குகின்றவர்களுக்கு அரசுப் பணிகளில் முன்னுரிமை தரலாம் என்று கணித்திருக்கிறதா? அப்படி இந்த உதவித் தொகை பெற்றவர்களில் எத்தனை பேர்கள் அரசுப் பணிகளுக்குப் போயிருக்கிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதவித் தொகை கொடுப்பதப்பற்றி அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் அரசாங்கப் பணிக்குச் செல்ல வயது வரம்பு 25 வயது என்று இருக்கிறது; பின் தங்கியவர்களுக்கும், ஷெட்யூல்ட் காஸ்டைச் சேர்ந்தவர்களுக்கும் ஐந்து வருடங்கள் எக்செம்ஷன் கொடுத்திருக்கிறோம். ஆகவே, உதவித் தொகை கொடுத்துக் கொண்டு வந்து அவர்களுக்கு ஓவர் ஏஜ் ஆகிவிட்டால் அவர்கள் எப்படி அரசாங்கப் பணிகளுக்கு வருவதற்கு முடியும்? ஆகவே அவர்களுக்கு ஏஜ் எக்செம்ப்ஷன் கொடுப்பதற்கு அரசு பரிசீலிக்குமா அல்லது உதவித் தொகை பெற்றவர்களுக்கு இந்த அவல நிலை உருவாகாமல் இருப்பதற்கு என்ன திட்டங்களை அரசு வைத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசின் உதவித் தொகையைப் பெறக்கூடிய பட்டதாரிகள் அவர்கள் விருப்பப்படுகின்ற பணிகளுக்குச் செல்வதற்கும், அவர்கள் பதிவு செய்திருக்கக்கூடிய காலத்தின் அடிப்படையில் அவர்களுக்குப் பணிகள் ஏற்கனவே ஒதுக்கப்படுகின்றன. ஆனால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்கக்கூடிய அளவில் தற்போது பரிசீலனை செய்வதற்கில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





TIRU L. Elayaperumal : My very important question was not answered உதவித் தொகை வாங்குபவர்களுக்கு ஏஜ் எக்சம்ஷன் கொடுக்கப் போகிறார்கள்? அல்லது எவ்வளவு காலத்திற்குக் கொடுப்பார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்விக்கு ஏற்கனவே அமைச்சர் பதிலளித்து விட்டார்.

ஐ. டி. ஐ. மாணவர்களுக்கான வினாத்தாள்களைத் தமிழில் வழங்கும் திட்டம்

* வினா எண். 219—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) I. T. I மாணவர்களுக்கு வினாத்தாள்கள் ஆங்கிலத்தில் கொடுக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) தமிழ் மொழியில் வினாத்தாள் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(ஆ) வினாத்தாள்கள் டெல்லியிலுள்ள "தொழில்கள் சம்பந்தப்பட்ட பயிற்சிக்கான தேசிய மன்றத்தால் " ஆங்கிலத்திலும், இந்தியிலும் தயாரிக்கப்பட்டு எல்லா மாநிலங்களுக்கும் விநியோகிக்கப்படுகின்றன. வினாத்தாள்கள் தேர்வு நடக்கும் சமயத்தில்தான் பிரிக்கப்படுகின்றன. எனவே தொழிற் பயிற்சி நிலைய மாணவர்களுக்குத் தமிழில் வினாத்தாள்களை வழங்க இயலவில்லை. எனினும் தேர்வு நடக்கும் சமயம் வினாத்தாள் களை அந்த இடத்திலேயே வாய்மொழியாக தமிழில் மொழி பெயர்த்துத் தேர்வு எழுதும் பயிற்சியாளர்களுக்குச் சொல்ல வேண்டுமென்று தொழிற்பயிற்சி முதல்வர்கள் அறிவுறுத்தப் பட்டுள்ளார்கள்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஐ. டி. ஐ. மாணவர்களுக்கு விடை எழுதுவதற்கு மட்டும் தமிழில் அவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால் வினாத் தாள்கள் மட்டும் ஆங்கிலத்தில் தான் கொடுக்கப்படுகின்றன. ஆகவே, அந்த மாணவர்கள் சரியாகப் புரிந்து கொண்டு ரியான முறையில் விடை அளிக்க முடியாத காரணத்தால் மீண்டும் அரசு பரிசீலனை செய்து வினாத்தாள்களைத் தமிழில் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, புதுடெல்லியிலே இருக்கக்கூடிய வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறைத் தலைமை இயக்குநரோடு இது குறித்துப் பேசப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் தமிழில்

வினாத்தாள்கள் அனுப்பப்பட்டால் அது ஒரு முன்மாதிரியாக அமைந்து, ஏனைய மற்ற மாநில மொழிகளிலும் அனுப்பப்பட வேண்டுமென்பதற்காகவும், போதுமான மொழிபெயர்ப்பாளர்கள் பற்றாக்குறையாலும், வினாத்தாள்களுடைய இரகசியத்தைப் பாதுகாக்கும் பொருட்டும் தமிழில் வழங்க இயலாது என்று தெரிவித்திருக்கின்றார்கள். ஆகவே, இத்தகைய அடிப்படையின் கீழேதான் தொழிற்பயிற்சி நிலைய முதல்வர்களுக்கு வினாத் தாள்களை விநியோகிக்கின்றபொழுது தேர்வு நடக்கின்ற இடங்களிலேயே மொழி பெயர்க்க வேண்டுமென்ற ஆணையை அரசு பிறப்பித்திருக்கிறது.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்கத்தினுடைய எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற அந்தக் கொள்கை என்னவாயிற்று ஆகவே, மீண்டும் பரிசீலனை செய்து, அவர்களை உற்சாகப் படுத்துகின்ற வகையில், டெக்னிக்கல் வார்த்தைகளைப் புரிந்து கொள்ள, ஆட்சிச் சொல் அகராதி அளிக்கப்பட்டிருப்பதைப்போல் அந்த மாணவர்களுக்கு டெக்னிக்கல் சொல்லகராதியைக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொல்கின்ற கருத்தின் அடிப் படையிலே, வருங்காலங்களில், இதை நடைமுறைப்படுத்த, மீண்டும் அரசு புது டெல்லியில் இருக்கக்கூடிய தலைமை இயக்குநரோடு கலந்து பேசும்.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, சிவில் கோர்ட்டிலே மாத்திரம் அல்ல, மற்ற எல்லா கோர்ட்டுகளிலும் தமிழில் தீர்ப்பு எழுத வேண்டுமென்ற நிலையை அரசு எடுத்திருக்கும்போது, இதற்கு மாத்திரம் கால தாமதம் செய்வது சரியாக இருக்குமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புவதோடு, எவ்வளவு சீக்கிரமாக, சர்க்கார் இதை அமுல்படுத்த முன்வரும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் நடவடிக்கை எடுக்கும்.

பள்ளாபாளையம் கிராம அரிசனக் குடியிருப்புகளுக்கு ஏற்பட்ட தீ விபத்து.

* வினா எண். 220—திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் வட்டம் பள்ளாபாளையம் கிராம அரிசன மக்களின் வீடுகள் தீப்பிடித்து எரிந்தது உண்மையா?





(ஆ) ஆம் எனில் அரசு அவர்களுக்கு வீடு கட்டித்தரும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(ஆ) கிராமப்புற வீட்டுவசதி திட்டத்தின் மூலம் அவர் களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க தக்க நடவடிக்கை எடுக்குமாறு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியருக்கு பணிக்கப்பட்டுள்ளது.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பள்ளாபாளையம் கிராமத்தில் தீ பிடித்து ஓராண்டு காலமாகிறது. இப்பொழுதே, கிராமப்புற வீடு கட்டும் சங்கங்களில் ஏராளமான மனுக்கள் தேங்கியிருக் கின்றன. ஆகவே, அதை மாற்றி, தாட்கோ மூலம் அரசு வீடு கட்ட ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அத்தகைய எண்ணம் அரசுக்கு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக் குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### காவிரி நீர்ப் பிரச்சினை.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, காவிரி நீர்ப் பிரச்னையில் கர்நாடக மாநில முதல்வர் குண்டுராவ் குறிப் பிட்டது குறித்து......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப் பற்றி நாளை மறுநாள் எடுத்துக் கொள்ளலாம்.

## 3. அறிவிப்பு

### நிதி நிலை அறிக்கை அளிக்கப் பெறும் தேதி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 202 (1) மற்றும் தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை விதி 196 (1) ஆகியவற்றின் கீழ் 1982-83-ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை 26-2-1982 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்குச் சட்ட மன்றப் பேரவைக்கு அளிக்க வேண்டுமென ஆளுநர் அவர்கள் குறித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 4. கவன ஈர்ப்புகள்.

### (அ) தீப்பெட்டி தொழிற்சாலை தீ விபத்தில் ஆறு பேர்கள் இறந்துள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், பாபு ஜனார்த்தனன், ஆர். நவநீத கிருஷ்ண பாண்டியன், இ. முத்துராமலிங்கம், ஜே. ஹேமச்சந்திரன், ரா. கிருஷ்ணன். டி. மணி, சோ. அழகர்சாமி, இரா. கருப்பையா, பொ. உத்திராபதி, எம். ஆறுமுகம், தி. கா. நல்லப்பன், இரா. தாமரைக்கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் திரு. ப. பொன்னுரங்கம் இதை மாண்புமிகு அவை முன்னவரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, சங்கரன் கோவில் அருகில் உள்ள செல்லப்பட்டியிலுள்ள தீப்பெட்டி தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தினால் ஆறுபேர் இறந்தது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு அவை முன்னவரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

1-2-82 அன்று திருநெல்வேலி மாவட்டம் சங்கரன் கோயில் அருகே திருவேங்கடம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட செல்லப்பட்டி கிராமத்தில் உள்ள ஜெயந்தி ஃபயர் ஒர்க்ஸ் Jayanthi fire works என்னும் தொழிற்சாலையின் கிடங்கு அறையில் பட்டாசுகள் செய்து கொண்டிருக்கும் போது, வெடி விபத்து ஏற்பட்டது. இவ்விபத்தில் கிழக்கு திருவேங்கடத்தைச் சேர்ந்த 15 வயது முத்தையா (த/பெ. இருளப்பன்) உடனே இறந்து விட்டார். வெடி விபத்து ஏற்பட்ட சில நேரம் கழித்து அந்த இடத்திலேயே கிழக்கு திருவேங்கடத்தை சேர்ந்த 15 வயது இராமன் (த/பெ. முத்தையா) இறந்து போனார். மேலும், செல்லப்பட்டியைச் சேர்ந்த 13 வயது கங்கம்மாளும் (த/பெ. கங்கையா நாய்க்கர்) சங்குப்பட்டியைச் சேர்ந்த 13 வயது காளியம்மாள் த/பெ. ஆச்சியப்பன்) மற்றும் 13 வயது மாரியம்மாள் த/பெ. இராமசாமி) 14 வயது தவமணி த/பெ. ஜகந்நாதன்) ஆகியோரும் சங்கரன் கோயில் அரசு மருத்துவ மனைக்கு சிகிச்சைக்காக எடுத்துச் சென்ற போது வழியிலேயே இறந்து போனார்கள். கோயில் பட்டி காவல்துறை ஆய்வாளர் விபத்து நடந்த இடத்திற்கு விரைந்து சென்று புலன் விசாரணையைத் தொடங்கினார். இறந்தவர்களின் உடல் மீது பிரேத பரிசோதனை நடத்தப்பட்டது. ஜெயந்தி தொழிற்சாலையின் மேலாளர் மகாலிங்கம் (த/பெ ஆவுடைசங்கு) என்பவர் கைது செய்யப்பட்டு ஜாமீனில் உள்ளார்.



வழக்கமாக இந்தத் தொழிற்சாலையில் 15 நபர்கள் வேலை செய்து வந்தனர். வெடி விபத்து ஏற்பட்டதற்கான காரணங்களை தெரிந்துக் கொள்ள, புலனாய்வு செய்யப்படுகிறது. திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர், காவல்துறை கண்காணிப்பாளர், தென்காசி துணை காவல்துறை கண்காணிப்பாளர் ஆகியோர் விபத்து நடந்த இடத்திற்கு விரைந்து சென்று பார்வையிட்டனர். இது சம்பந்தமாக திருவேங்கடம் காவல்நிலைய குற்ற எண் 15/82-ல் இ.த.ச. 286, 338, 364 (எ) இதனுடன் 5 (3) (பி) இந்திய வெடி மருந்து சட்டம் ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணையில் உள்ளது.

[முற்பகல் 10.20]

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1.2.82 அன்று இந்த விபத்து நடைபெற்றிருக்கிறது. ஆனால், இந்த விபத்திற்கான காரணம் நம்முடைய அரசாங்கம் தந்திருக்கின்ற அறிக்கையிலே சொல்லப்படவில்லை, 2 வாரம் ஆகியும் கூட, என்ன காரணத்தால் விபத்து ஏற்பட்டது The reason is not known ஒன்று. இரண்டாவது, இந்த விபத்திலே இறந்த கங்கம்மாள், காளியம்மாள், மாரியம்மாள் ஆகியோர் 13 வயதுள்ளவர்கள் என்று அரசு அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. பாக்டரி ஆக்ட் பிரகாரம் 14 வயது முதல் 18 வயது வரை From 14th to 18th that too with Medical certificate இருந்தால் தான் வேலைக்கு வைத்துக் கொள்ளலாம் என்று இருக்கிறது. 18 வயதுக்கு மேல் இருந்தால் அப்ஜக்ஷன் இல்லை. ஆனால், 13 வயதுள்ள பிள்ளைகளை இந்தத் தொழிலிலே எப்படிப் பயன்படுத்தினார்கள். அதை அடிக்கடி இன்ஸ்பெக்ட் செய்கின்ற இன்ஸ்பெக்டர் எப்படி வாளாவிருந்தார். இரண்டாவது எனக்குக் கிடைத்தத் தகவல் இங்கே 3 போர்ஷனாக, இரண்டு இரண்டு பேராகப் பிரித்து விட்டதாகச் சொல்லப்படுகிறது. அந்த இடத்திலே கூட, ஒரு இடத்தில்தான் விபத்து ஏற்பட்டிருக்கின்றது. அப்படி இருந்தும் மற்றவர்கள் வெளியே வரமுடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. 3 போர்ஷன்களிலே அமைத்து ஒவ்வொரு பக்கமும் இரண்டிரண்டு பேர்களாக அமைக்கப்பட்டிருந்தும், விபத்தில் 4 பேர்கள் தப்பித்துக் கொள்ள முடியும். ஆனால் அவர்களும் தப்பித்துக் கொள்ள இயலாத அளவுக்கு இந்த பாக்டரி அமைந்துள்ளது எப்படி, அதற்கான லைசன்சு தொடர்ந்து கொடுக்கப்பட்டது எப்படி என்பதும் புரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. ப. பொன்னுரங்கம்: அதுமட்டுமல்ல ஒரு பத்திரிகைச் செய்தி ஒரு கல்லெறிந்ததாலே அந்த தீ விபத்து ஏற்பட்டது என்று சொல்லப்படுகிறது. வெளியில் இருந்த யாராவது கல் எறிந்தால் உடனே தீப்பிடிக்கின்ற நிலை இருக்கிறது. ஆக எப்படிப்பட்ட ஆபத்தான நிலையிலே அந்த பாக்டரி இருக்கிறது என்பதைப்

[திரு.ப.பொன்னுரங்கம்] [1982 பிப்ரவரி 15

பார்க்க வேண்டும். ஆக இப்படிப்பட்ட பேக்டரிக்கு ஒரு சர்க்கார் இப்படித் தொடர்ந்து லைசன்சு வழங்கி வருவது ஆச்சரியமாக இருக்கின்றது. அதுவுமில்லாமல் அவர்களுக்குச் சேரவேண்டிய நிவாரணத்தைக் கேட்டால் கோர்ட்டுக்குப் போ என்று சொல்லு கிறார்கள். தகவல் வந்திருக்கின்றது. இது மிகவும் அக்கிரமான நிலை. எனவே மிகவும் கேள்விக்குரிய, சந்தேகத்திற்குரிய பிரச்சினைகள் எல்லாம் இந்த விவாதத்திலே சம்பந்தப்பட்டிருக் கின்ற காரணத்தினால் அதன் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். எனவே அரசு துரிதமாக, ஏன் என்றால் சம்பவம் நடந்து 15 நாட்கள் ஆகியும் முழுவிவரம் கிடைக்கவில்லை, முறையான நடவடிக்கை எடுத்து அனைத்து நிவாரணமும் அளிக்க அரசு முன் வருமா் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்த விபத்து பற்றி விரிவான புலன் விசாரணை செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சில பல சூழ்நிலைகளை விளக்கிக் காட்டியிருக் கிறார்கள். எல்லா சூழ்நிலைகளையும் ஆராய்ந்தறிந்து அதன் மேல் எந்தெந்த வகையிலே யார்யார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அது மட்டுமல்லாமல், இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் 286, 338, 364 (எ) வெடிமருந்து சட்டம் 5(3) (பி) யின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை நடைபெறுகிறது. அவசரப்பட்டு நாம் எந்த முடிவுக்கும் வந்துவிடக் கூடாது. எல்லா சூழ்நிலைகளைப் பற்றியும் கவனிக்கவேண்டும். வயது வரம்பு பற்றி மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார்கள். அதை யும் சேர்த்து தான் நாம் கவனித்து, எல்லாவற்றையும் புலன் விசாரணை செய்ததற்குப் பிறகு யார்யார் மேல் தவறிருக்கிறது என்பதைப் பற்றி தக்க நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது.

திரு. பாபுஜனார்த்தனன்: தலைவர் அவர்களே, ஜெயந்தி பயர் ஒர்க்ஸில் மொத்தம் 15 பேர்கள் வேலை செய்து வந்தனர். இந்த வெடிவிபத்தில் 6 பேர்கள் இறந்திருக்கிறார்கள். இளம் தளிர்கள் 13 வயதுக்கு உட்பட்ட 3 பேர்கள் இறந்திருக்கிறார்கள். இப்படி திடீரென்று 6 பேர்கள் இறந்து அந்தக் குடும்பங்களை நிர்க்கதியான நிலையில் விட்டிருக்கிறார்கள். எனவே இவர்கள் குடும்பத்திற்கு முதலமைச்சர் நிதியிலிருந்தாவது நிதி உதவி செய்து உதவ அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, இது பற்றி முழு விசாரணை வெளிவந்து உண்மை குறிப்புகள் எல்லாம் தெரிந்ததற்குப் பிறகு அந்த நிறுவனம் எவ்வளவு நட்ட ஈடு தரும் என்று அறிவித்ததற்குப் பிறகு. அவசியப்பட்டால் மாண்புமிகு முதலமைச்சர் இது பற்றி ஆராய்வார்.



982 பிப்ரவரி 15]

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. இந்த மாதிரியான வெடி விபத்துக்கள் அடிக்கடி நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. இத்தகைய விபத்துக்கள் சில நேரங்களில் மின்சாரக் கோளாறு காரணமாகவும், தீ விபத்துத் தடுப்பு வசதிகள் சரிவரச் செய்யப் படாததாலும் என்றும் சொல்லப்படுகிறது. ஆகவே, தீ விபத்து தடுப்பு வசதிகள் சரியாகச் செய்யப்பட்டுள்ளனவா என்பதை அடிக்கடி சென்று சோதனை இடவும், மற்றும் இத்தகைய விபத்துக்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து வசதி களும் செய்யப்பட்டுள்ளனவா என்பதை தீவிர ஆய்வுகள் மூலம் கண்டுபிடித்து, நடவடிக்கை எடுக்கவும் அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப் பினர் சொல்வதைப் போன்ற தவறுகள் அங்கே நடைபெற்று உள்ளனவா என்பது புலன் விசாரணை அறிக்கை வந்ததற்குப் பிறகுதான் தெரிய வரும். புலன் விசாரணை மூலம் கண்டறியப் படுகிற நிலைமைகளை ஒட்டி, அரசு நடவடிக்கையை மேற் கொள்ளலாம்.

திரு. டி. மணி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, .-2-82 மாலை $4\frac{1}{2}$ மணியளவில் ஜெயந்தி பயர் ஒர்ச்சில் ஏற்பட்ட விபத்தில் 6 பேர் மரணம் அடைந்து இருக்கிறார்கள். இப்படிப் பட்ட தொழிற்சாலைகளில் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து விபத்துகள் நடைபெற்றுள்ளன என்பது குறித்து நமக்குத் தகவல்கள் வந்துள்ளன. அவைகள் நாளுக்கு நாள் கூடுதலாகிக் கொண்டு வருவதாகத் தெரிகிறது. ஆகவே, இத்தகைய விபத்துக் களை தடுப்பதற்கு அதிகாரிகள் எடுத்த நடவடிக்கை என்ன? மேலும் வெடி மருந்துகளை ஸ்டாக் செய்வதற்கு ஒரு இடமும், தொழிற்சாலைகளில் வேலை செய்ய ஒரு இடமும் என்கிற முறையில் அந்தத் தொழிற்சாலை அமைக்கப்பட வேண்டும் என்கிற விதிமுறையை அந்த லைசென்சு கொடுக்கின்றபோதே கடை பிடிக்கின்ற நடைமுறை பின்பற்றப் படுமா? விபத்தில் பலியாகி இருக்கும் குடும்பங்களுக்கு போதுமான நிதி உதவியைச் செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே. நான் முதலிலே கூறியபடி வெடி மருந்துத் தொழிற் சாலைகளில் எந்தவிதமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்கிற விதிமுறைகள் ஏற்கனவே இருந்து கொண்டு இருக்கின்றன. அந்த விதிமுறைகள் பல நேரங்களில் பலரால் கடைபிடிக்கப்படாததன் காரணமாக சில விபத்துகள் ஏற்பட்டுள்ளன. இந்த விபத்தைப் பொறுத்தவரையில், அவை எந்தக் காரணத்தால் ஏற்பட்டுள்ளது என்பது குறித்து புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. அந்த அறிக்கை வந்த பிறகு அது எதனால் ஏற்பட்டது என்பதை தெரிந்து

கொள்ள முடியும். அப்படி அந்தக் காரணங்களை நாம் தெரிந்து கொண்டபிறகு அதை நீக்குவதற்கான முயற்சிகளை அரசு எடுக்கும். புலன் விசாரணை அறிக்கை வந்ததற்குப் பிறகு அந்தத் தொழிற்சாலையின் உரிமையாளர் எந்த அளவிற்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டி வரும் என்பதை ஆராய்ந்து பார்த்து, அதற்கு மேல் தேவைப்பட்டால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நிதியில் இருந்து தரஇயலுமா என்பதைக் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆராய்ந்து பார்த்து, பரிசீலனை செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செல்லப்பட்டி என்ற இடத்தில் உள்ள ஜெயந்தி பயர் ஒர்க்ஸில் 1-2-82 மாலை 4½ மணிக்கு ஏற்பட்ட தீவிபத்தில் 15 வயது முத்தையா, 15 வயது இராமன், 13 வயது கங்கம்மாள், 13 வயது காளியம்மாள், 13 வயது மாரியம்மாள், மற்றும் 14 வயது தவமணி ஆகிய 6 சிறுவர்கள் இறந்துள்ளனர். பள்ளிக்குச் செல்லவேண்டிய வயதில் உள்ள இந்தப் பிள்ளைகள் பாக்டரிக்குச் சென்று தங்களுடைய உயிரை இழந்து இருக்கிறார்கள். இப்படி இவர்கள் சென்றதற்குக் காரணம், அவர்களுடைய தரித்திரம் தான். பிழைப்புக்கு வேறு வழியில்லை என்கிற நிலையில்தான் இந்தச் சின்னப் பிள்ளைகளை, பள்ளிக்குச் செல்லவேண்டிய இந்தப் பிள்ளைகளை அந்தப் பெற்றோர்கள் பாக்டரிக்கு அனுப்பியுள்ளார்கள். அந்த வெடி விபத்தில் அவர்கள் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். இப்படிப் பட்ட கொடுமையான தீ விபத்து நிகழ்ச்சிகள், அதுவும் அதிலே சிறுவர்கள் கொல்லப்படுகின்ற செய்திகள் நமக்குக் கிடைப்பதற்குக் காரணம், அவர்களுடைய தரித்திர நிலைமை தான். ஆகவே, தங்களுடைய தரித்திர நிலைமையின் காரணமாக அந்தச் சிறுவர்களை அனுப்பி, அவர்களையும் இழந்து நிற்கும் அந்தக் குடும்பத்திற்கு, புலன் விசாரணை அறிக்கை வந்த பிறகு, நஷ்ட ஈடு அல்லது உதவி தருகிறோம் என்று சொல்லிக்கொண்டு இருக்காமல், உடனடியாக அவர்களுடைய தரித்திர நிலையைப் போக்குகின்ற வகையில் முதலமைச்சர் நிவாரண நிதியில் இருந்து உதவி அளிக்க அரசு முன் வருமா? இந்த விபத்து எப்படி நடந்தது என்பதைக் கண்டறிந்து அதற்கான கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா? இப்படிப்பட்ட விபத்துகளைத் தடுக்க ஏராளமான விதிமுறைகள் இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த விதிமுறைகளைக் கடைபிடிக்காமல் இருந்த உரிமையாளர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா? இப்படி விதிமுறைகளுக்கு மாறாக பாக்டரி அமைத்த அந்த பாக்டரி மானேஜர் கைது செய்யப்பட்டு இருந்தாலும் அவர் இன்றைக்கு ஜாமீனில் வந்து விட்டார். ஆகவே, விதிமுறைகளை கடுமையான முறையில் பின்பற்றவும், ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 5,000 நிதியுதவி மாண்புமிகு முதலமைச்சர் நிவாரண நிதியில் இருந்து உடனடியாக் கொடுக்கவும் அரசு முன்வருமா?





[முற்பகல் 10.30]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்று இந்தக் குடும்பங்களுடைய சூழ்நிலைகள் பற்றி ஆராய்ந்து அறிக்கை அனுப்பும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். குடும்ப சூழ்நிலைகள் பற்றி அவரிடமிருந்து அறிக்கை வந்ததும், அதுபற்றி முடிவு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதியிலிருந்து வழங்குவது பற்றி பரிசீலனையை தனியாக மேற்கொள்ளலாம். அதே நேரத்தில் விதிமுறைகளைத் திருத்த வேண்டிய அவசியம் இருக்கிறது என்று சொன்னார்கள். அந்தக் கருத்தை உள்ளத்திலே கொண்டு, விதிமுறைகளை எந்த வகையிலே திருத்தலாம். எதிர்காலத்திலே இப்படிப்பட்ட நேர்வுகள் நடைபெறாமல் இருக்க எத்தகைய கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பது பற்றி அரசு ஆலோசிக்கும். புலன் விசாரணை அறிக்கை வந்தபிறகு மற்ற நடவடிக்கைகள் எடுக்கப் படும்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, சங்கரன்கோவில் அருகே செல்லப்பட்டி என்ற கிராமத்திலே நடைபெற்றிருக்கிற இந்த தீப்பெட்டித் தொழிற்சாலை (ஃபயர் ஒர்க்ஸ்) விபத்து மிகவும் துர்பாக்கியமான ஒன்று. அதிலும் 15 வயது குழந்தைகள், சிறார்கள் உயிர்கள் பறிக்கப் பட்டிருக்கின்றன. இது தொடர்ச்சியாக நடைபெறுகிற ஒரு சம்பவமாக இருக்கிற காரணத்தால் இம்மாதிரியான விபத்துக்கள் நடைபெறுவதற்கான காரணத்தை ஆராய்வதற்கும், எதிர்காலத்திலே இப்படிப்பட்ட விபத்துக்கள் நடைபெறாமல் தடுத்து நிறுத்துவதற்கும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா? அதோடு இந்த விபத்து பற்றி ஆராய்வதற்கும், எதிர்காலத்தில் இத்தகைய விபத்துக்கள் ஏற்படாமல் தடுப்பதற்கும் ஆராய்ந்து அரசுக்கு யோசனை கூறுவதற்கு ஒரு நீதிபதி விசாரணைக் கமிஷனை அரசு நியமிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி முதலிலே குறிப்பிட்டேன். புலன் விசாரணை நடந்த பிறகு தக்க நடவடிக்கை எடுக்கப்படும். இத்தகைய நிகழ்ச்சி நடைபெறாமல் இருக்க என்ன செய்ய வேண்டும் என்பதை ஆராய்ந்து செய்யலாம். சட்டத்தைத் திருத்த வேண்டுமானால் அதற்கும் தகுந்த நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் விசாரணைக் கமிஷன் அமைக்கும் நோக்கம் அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : துணைத் தலைவரவர்களே, சங்கரன் கோவிலில் செல்லப்பட்டி கிராமத்தில் தீப்பெட்டித் தொழிற் சாலையில் ஆறு குழந்தைகள் இறந்திருக்கிறார்கள். இது ஒவ்வொரு ஆண்டும் நடைபெறுகிற ஒரு காரியமாக இருக்கிறது. ஒவ்வோராண்டும் தமிழகத்தில் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணியாற்றும் குழந்தைகள் இறந்துகொண்டே இருக்கிறார்கள். ஒவ்வொரு சட்டமன்றம் கூடும்போதும் நாங்கள் இதைப் பற்றி கேட்கிறோம்; கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுக்கிறோம். அமைச்சர் அதற்கு பதில் சொல்கிறார். இது ஒரு தொடர் நிகழ்ச்சியாக இருக்கிறது. இத்தகைய விபத்துக்கள் இனிமேல் நடைபெறாமல் இருக்க வேண்டும். அது மட்டுமல்ல. இந்த குழந்தைகளை இழந்த குடும்பங்கள் மிகவும் ஏழை எளிய குடும்பங்களாகத்தான் இருக்கும். ஏழ்மையில் இருந்த காரணத் தால்தான் குழந்தைகளை வேலைக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதிகாரிகள் விசாரித்து அறிக்கை அனுப்ப எவ்வளவு நாள் ஆகும் என்பது நமக்கு எல்லாம் நன்றாகத் தெரியும். ஆகவே, அவசர உதவியாக, உடனடி செய்யவேண்டிய உதவிக்காகத்தான் முதலமைச்சர் நிவாரண நிதி இருக்கிறது; அந்த நிதியிலிருந்து உடனடியாக அந்தக் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் 10,000 ரூபாய் கொடுக்க அரசு முன்வருமா? முதலாளிகள் எப்போதுமே சட்டத்தில் இருக்கிற ஓட்டையைப் பயன்படுத்தி தப்பித்துக் கொள்கிறார்கள். அவர்கள் அப்படி தப்பித்துக்கொள்வதைத் தடுக்க, தமிழக அரசு அப்படிப்பட்ட அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு துரித நடவடிக்கையை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவ ரவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டேன். அந்தக் குடும்பச் சூழ்நிலையைப் பற்றி ஆராய்ந்து அறிக்கை அனுப்பும்படி மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டிருக்கிறோம். அவருடைய அறிக்கை வந்த பிறகு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவித் தொகை அளிப்பது பற்றி பரிசீலனை செய்யலாம். சட்டத்தில் இருக்கிற ஓட்டையைப் பயன்படுத்தி தப்பித்துக் கொள்கிறார்கள் என்றால் அதற்குத் தனியாக நடவடிக்கை எடுக்கலாம். எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் நடை பெறாமல் இருக்க, எந்த அளவுக்கு சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டுமோ அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பது பற்றி அரசு ஆராயும்.

திரு. எம். ஆறுமுகம் : துணைத் தலைவரவர்களே, இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிற விளக்கத்தின் அடிப்படையில் தொழிற்சாலை சட்டத்தின்படி 18 வயதிற்கு குறைவாக இருக்கக் கூடியவர்களை தொழிற்சாலையில் வேலைக்கு அமர்த்தக்கூடாது. அப்படி இருக்கும்போது 15 வயதிற்கு குறைவான இந்த இளம் சிறார்களை அங்கே பணியில் அமர்த்தியிருக்கிறார்கள் என்றால் அந்தத் தொழிற்சாலையை பார்வையிடுவதற்காக நியமிக்கப்பட்ட தொழிற்சாலை ஆய்வாளர் அங்கே சென்று பார்வையிட வில்லையா என்பதைத் தெரிவிக்க வேண்டும்.





அதோடு இந்திய வெடி மருந்துச் சட்டத்தின்படி அங்கே இருக்கக்கூடிய ஃபையர் ஒர்க்ஸ் வைத்திருக்கக்கூடிய வெடி மருந்துகளைப் பார்வையிடுவதற்கு ஆய்வாளர்கள் சென்று நடவடிக்கை எடுத்திருப்பார்களேயானால் இப்படிப்பட்ட விபத்துக்களைத் தடுத்து இருக்க முடியும். ஆகவே தொழிற் சாலை ஆய்வாளர்களுக்கு..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சுருக்கமாக, கேள்வி யாகக் கேட்க வேண்டும். நீண்ட விளக்கம் வேண்டாம்.

திரு. எம். ஆறுமுகம் : துணைத் தலைவரவர்களே, தொழிற் சாலை ஆய்வாளர்கள் முறையாக பார்வையிட்டார்களா? இந்திய வெடி மருந்துச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப் பட்டதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவ ரவர்களே, புலன் விசாரணையின் முழு அறிக்கையும் வந்ததற்குப் பிறகுதான் இந்த விபத்து எந்த காரணத்தால் ஏற்பட்டது என்பதெல்லாம் தெரிய வரும். அப்போதுதான் அங்கு வேலை பார்த்தவர்கள் சிறுவராக இருந்த காரணத்தினால் தான் விபத்து ஏற்பட்டதா என்கின்ற அந்த நிலைமைகளை எல்லாம் உள்ளத்திலே கொண்டு நடவடிக்கை எடுக்க முடியும். பொதுவாக தீப்பெட்டி தொழிற் சாலை, வெடி மருந்து தொழிற்சாலைகளில், 15 வயதுக்குக் கீழே உள்ளவர்கள் வேலை செய்யக் கூடாது என்று சொல்லி விட்டால் மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் குறிப்பிட்டபடி ஏழ்மை நிலைமையிலே உள்ள பல குடும்பங்கள் கஷ்டத்திற்கு ஆளாகும். ஆனால் இந்த விபத்து எதனால் ஏற்பட்டது என்பதைப் பொறுத்தவரையில் புலன் விசாரணை அறிக்கை வந்ததற்குப் பிறகுதான் நடவடிக்கை எடுக்கவும் கடுமையான தண்டனை கொடுக்கவும் முடியும். அதற்காக சட்டத்தைத் திருத்த வேண்டும் என்ற அவசியம் ஏற்படுமே யானால் அப்போது அதுபற்றியும் அரசு ஆலோசிக்கும் என்று நான் முன்பே குறிப்பிட்டேன். ஆகவே அதை மீண்டும் தெரிவித் துக்கொள்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1–2–1982 அன்று நடைபெற்ற இந்த தீ விபத்தில் 6 குழந்தைகள் இறந்திருக்கின்றன. ஆனால் ஃபையர் கம்பெனியினுடைய மேலாளர் திரு. மகாலிங்கம் என்பவர் மட்டுமே கைது செய்யப்பட்டிருக்கிறார். அதனுடைய உரிமை யாளர் என்ன ஆனார்? இந்தப் புலன் விசாரணை நடந்து கொண்டிருக்கும்போது அவர் ஏன் விடுதலை செய்யப்பட்டிருக் கிறார் என்பதை அரசு அறிவிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவரவர்களே, அவர்களும் குறிப்பிட்ட சட்டப்படி கைது செய்யப்பட்டிருக்கிறார். ஆனால் வழக்கு மன்றத்திலே ஜாமீனிலே அவர் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார். வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. புலன் விசாரணை அறிக்கை வந்ததற்குப் பிறகு தான் உரிமையாளராக இருந்தாலும் மற்றும் யாராக இருந்தாலும் இந்தக் குற்றங்களுக்கு உள்ளாகி இருக்கிறார்கள் என்றால் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை அரசு எடுக்க இயலும்.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே தீப்பெட்டித் தொழில் ஒரு குடிசைத் தொழிலாக இருக்கின்றது. இதனால் ஏகப்பட்ட பேருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கின்றது. வெளி மாநிலங்களுக்கெல்லாம தீப்பெட்டியை அதிகமாக ஏற்றுமதி செய்து கொண்டு இருக்கிறார்கள். ஆனால் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் அடிக்கடி விபத்து ஏற்படுகின்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சுருக்கமாகக் கேள்வி கேளுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி :** சிவகாசி செல்லம்பட்டி போன்ற இடங்களில் இப்படி தீ விபத்துக்கள் நடப்பதைத் தடுக்க அரசிடம் திட்டம் ஏதாவது இருக்கின்றதா அல்லது அப்படிப்பட்ட இடங்களில் தீயணைப்பு நிலையங்களை அதிகப்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஜெயந்தி ஃபையர் ஒர்க்ஸ் என்பது வெடி மருந்துத் தயார் செய்யும் தொழிற்சாலைதான். அது தீப்பெட்டித் தொழிற்சாலை அல்ல. ஆனாலும் கூட தீப்பெட்டித் தொழிற்சாலை, வெடி மருந்துத் தொழிற்சாலை போன்றவை இருக்கின்ற பகுதிகளில் தேவையான அளவுக்கு தீயணைப்புப் படைகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. மேலும் அவை தேவை என்று கருதுகின்ற இடத்திலே அரசு அதை அமைக்கவும் முயலும்.

## (ஆ) சிமெண்ட் கிடைக்காமல் பலர் அல்லற்படுவது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திருவாளர்கள் சு. பாலன், ப. நெடுமாறன், க. பரமலை, ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம், ரா. உமாநாத், எம். சின்னசாமி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.





**திரு. சு. பாலன் :** துணைத் தலைவரவர்களே, "சிமெண்ட் கிடைக்காததால் வீடு கட்டவோ பழுதுபார்க்கவோ முடியாமல் பொதுமக்களும், வீடுகட்ட கடன் வாங்கிய அரசு ஊழியர்களும், வேலையின்றி கட்டிடத் தொழிலாளர்களும் இன்னல் படுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

பொதுவாக தமிழ்நாட்டில் சிமெண்ட் தேவை காலாண்டிற்கு 6 லட்சம் மெட்ரிக் டன்களாகும். 1981 மற்றும் 1982—ல் மைய அரசு நமக்களித்த ஒதுக்கீடு விபரம் பின்வருமாறு :—

| துறை. | டன்கள். |
|---|---|
| 1981 | 4,32,400 |
| முதல் காலாண்டு | 4,30,400 |
| இரண்டாம் காலாண்டு | 4,59,400 |
| மூன்றாம் காலாண்டு | 3,71,400 |
| நான்காம் காலாண்டு | |
| 1982 | 3,71,400 |
| முதல் காலாண்டு | |

2. இம்மாநிலத்தில் மொத்த சிமெண்ட் தேவையில் பறக்தாழ பாதி அளவிற்குத்தான் சிமெண்ட் ஒதுக்கீடு செய்யப் ஏடுகிறது. ஆனால் வெவ்வேறு துறைகளின் தேவைகள் நாளுக்கு நாள் அதிகரித்தே வருகிறது. இதனால் தன்னிறைவு திட்டங்களுக்கு சிமெண்ட் தேவை அதிகமாக உள்ளது. சிமெண்ட் பற்றாக்குறை இருப்பதனால், கிடைக்கும் சிமெண்டை தேவைக்கேற்ப பகிர்ந்தளிக்கும் பொருட்டு தொழில்துறை செயலாளர் ஒவ்வொரு காலாண்டின் ஆரம்ப கட்டத்தில் பல்வேறு துறைகளின் அதிகாரிகளை வரவழைத்து கூட்டம் நடத்தி முடிவு எடுக்கிறார். நாம் ஒவ்வொரு காலாண்டும் நமது தேவையை பூர்த்தி செய்ய கூடுதல் ஒதுக்கீட்டிற்காகவும் மைய அரசை வற்புறுத்திக் கொண்டே வருகிறோம். மைய அரசும், பொதுவாக உற்பத்தியையும், தேவைகளையும் கருத்தில் கொண்டு சிற்சில சமயங்களில் சிறிதளவு கூடுதல் ஒதுக்கீடு செய்துள்ளது.

3. நமது மாநிலத்திலுள்ள அரசு துறையில் இரண்டும் தனியார் துறையில் ஆறும் ஆக எட்டு சிமெண்ட் தொழிற்சாலைகளின் மொத்த உற்பத்தி ஆண்டுக்கு சுமார் 38·72 லட்சம் மெட்ரிக் டன்களாகும். இந்த உற்பத்தித் திறன் குறைவதற்கான காரணங்கள் அப்போதைக்கப்போது ஏற்படும் மின்சார வெட்டு, நிலக்கரிப் பற்றாக்குறை, இயந்திர கோளாறுகள் போன்றவை. பொதுவாக உற்பத்தியில் மிகவும் பற்றாக்குறையாக உள்ள நமது இந்திய நாட்டில் நமது மாநிலத்தில் இறப்பத்தியாகும் சிமெண்ட் மற்ற மாநிலங்களுக்கும் அனுப்பியாக வேண்டும். பொது மக்கள் தங்கள் வீடுகளை புதுப்பிக்கவும், பழுது பார்க்கவும், அரசு அலுவலர்கள் வீடுகளை புதிதாக கட்டவும் சிமெண்ட் பொது விநியோகம் மூலம் வழங்கப்படுகிறது.

4. நடப்பு காலாண்டிற்கு மைய அரசு மாநில அரசுக்கு 3,71,400 டன்கள் சிமெண்ட் ஒதுக்கீடு செய்துள்ளது. இதை கீழே கண்டவாறு ஒதுக்கப்பட்டுள்ளது:—

| இனம். | ஒதுக்கப்பட்ட அளவு (டன்களில்). |
|---|---|
| மின்சாரம் மற்றும் நீர்பாசனத்துறை | 80,900 |
| சிறுதொழில்கள் மற்ற ஒதுக்கப்பட்ட இனங்கள். | 32,340 |
| ஒதுக்கப்பட்ட இனம் (அரசுத்துறைகள் நிறுவனங்கள், நகராட்சிகள் போன்றவை). | 1,08,160 |
| பொது விநியோகம் | 1,50,000 |

பொது விநியோகத்தையும் மற்ற ஒதுக்கப்பட்ட இனங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் 1,82.340 டன்கள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இது மாநிலத்திற்கு ஒதுக்கப்படும் மொத்த சிமெண்டின் அளவில் பாதிக்கு மேலேயே வரும்.

5. மைய அரசிடமிருந்து கிடைக்கப்படும் சிமெண்டைக் கொண்டு எல்லா இனங்களின் தேவையை முடிந்த அளவில் நிறைவு செய்து வருகிறோம். மைய அரசு கூடுதல் ஒதுக்கீடு செய்தாலன்றி, மேலும் பல இனங்களுக்கு ஒதுக்கீட்டை அதிகரிக்க இயலாது.

6. நாட்டில் சிமெண்ட் தட்டுப்பாடு இருப்பதால் மைய அரசின் அறிவுரைக்கேற்ப 1979-ம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டில் தமிழ்நாடு சிமெண்ட் விநியோகம் கட்டுப்பாடு ஆணையின் கீழ் சிமெண்ட் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தேவைக்கு அதிகமாக சிமெண்ட் ஒதுக்கப்பட்டாலன்றி சிமெண்டின் அனுமதிச் சீட்டு வழங்கும் முறையை ரத்து செய்ய முடியாது.



7. கலப்படத்தை தடுக்கவும் மேலும் கள்ள சந்தையில் சிமெண்ட் விற்பதை தடை செய்யும் பொருட்டும், தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்படி கூடுதல் பொது காவல்துறை குற்ற புலனாய்வு ஆய்வாளர் (உணவு வழங்குதுறை) அவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

8. எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், சிமெண்ட் விநியோக முறையில் சீர்கேடுகள் எழாவண்ணம் தடுக்க கீழ்க்கண்ட சில அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது:—

1. சிமெண்ட் கோரி வரும் விண்ணப்பங்களை மாத கணக்கில் நடவடிக்கை எடுக்காமல் வைத்திருக்கக் கூடாது.

2. பர்மிட்கள் கண்டிப்பாக முதுநிலைப்படிதான் வழங்கப் படவேண்டும்.

3. பர்மிட் வழங்கும் அதிகாரியினால் பர்மிட்டில் கையெழுத்திடப்பட்டுவிட்டால், இது உடனே சம்பந்தப் பட்டவருக்கு அனுப்பப்படவேண்டும்.

4. பர்மிட்டுகள் தயாரிக்கப்பட்ட பின் கையெழுத்திடுவதில் காலதாமதம் செய்வது தவிர்க்கப்படவேண்டும்.

5. பர்மிட் வழங்கும் அதிகாரிகள் பர்மிட்டின் அசல் மற்றும் நகல் இரண்டிலும் ஒரே சமயத்தில் கையெழுத்திட வேண்டும்.

6. பர்மிட் வழங்கும் அதிகாரிகள் பர்மிட்களை வரிசை கிரமப்படிதான் அனுப்பவேண்டும்.

7. பர்மிட் வழங்கும் அதிகாரி பர்மிட்டுகளில் திருத்தங்கள் மேலெழுத்தல் ஆகியவற்றை தவிர்க்கவேண்டும்.

8. பர்மிட் வழங்கும் அதிகாரி, பர்மிட்டில் ஏதேனும் திருத்தங்கள் செய்தால் அதனை பர்மிட் தேவை பதிவேட்டிலும் அதே சமயத்தில் திருத்தம் செய்யவேண்டும்.

9. சிமெண்ட் பெற அனுமதிச்சீட்டு கோரி ஒவ்வொரு நாளும் பெறப்படும் விண்ணப்பங்களின் விவரத்தையும் ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் எவ்வளவு சிமெண்டுக்கு அனுமதிச்சீட்டுக்கள் வழங்கப்பட்டன என்ற விவரங்களும் அவ்வப்போது அறிவிப்பு பலகையில் நாள்தோறும் வெளியிட்டால் முறைகேடுகள் புகார்கள் குறையும் என்று அரசு கருதி மேற்கண்ட முடிவை உடனடியாக நிறைவேற்றுவதற்கு தக்க நடவடிக்கைகளை

எடுக்குமாறு மாவட்ட 56 ஆட்சித் தலைவர்களுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. சிமெண்ட் கோரி விண்ணப்பம் கிடைத்த பிறகு அதற்கு அத்தாட்சியாக ஒரு சான்றினை (token) அனுமதி சீட்டு வழங்கும் அலுவலர்கள் கொடுக்க வேண்டும். அனுமதி சீட்டுக்களுக்கான விண்ணப்பங்கள் அவைகளுக்கு சிமெண்ட் அனுமதிக்கப்பட்ட அளவு போன்ற விவரங்களை நாள்தோறும் தவறாமல் அறிவிப்பு பலகையில் அனுமதி சீட்டு வழங்கும் அலுவலர்கள் வெளியிட வேண்டும் என்றும் ஆணை பிறப்பித்துள்ளது.

10. சிமெண்ட் விநியோகத்தை ஒரு சீரான முறையில் விநியோகம் செய்வதற்காக, மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் ஒரு ஆலோசனைக்குழு அமைப்பது அரசின் கவனத்தில் இருந்து வருகிறது.

(முற்பகல் 10-40)

திரு. சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே விவர அறிக்கையிலே இருப்பதைப்போல நமக்கு மைய அரசு கால் ஆண்டுக்கு ஏறக்குறைய 40 லட்சம் மெட்ரிக் டன் கொடுப்பதாக அரசு அறிவித்திருக்கிறது. ஆனால் சிமெண்ட் பெர்மிட் வழங்கக்கூடிய அதிகாரிகள் அதனை அளவுகோலாக கொள்ளாமல், அதற்கும் மேலாக பெர்மிட்டுகள் கொடுத்து, அதை கள்ள மார்க்கெட்டிலே விற்க உந்ததையாக இருந்து வருவதன் காரணமாக, ஏராளமான சிமெண்ட் கள்ள மார்க்கெட்டிலே பதுக்கப்பட்டு, 80ரூ. 100 ரூ. என்ற அளவில் விற்கப்படுகிறது. இப்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் நடவடிக்கையைப் பற்றி அரசுக்குத் தெரியுமா என்று கேட்க விரும்புகிறேன்?

அதுமட்டுமல்லாமல், உண்மையான பெர்மிட் வைத்திருப்பவர்களுக்கு கடந்த,11/2, 2, ஆண்டுகாலமாக சிமெண்ட் கொடுக்காமல் நிறுத்தப்பட்டிருப்பதை தவிர்க்க, அவர்களுக்கு மீண்டும் சிமெண்ட் பெர்மிட் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புவதோடு, வீடு கட்டிய சொந்தக்காரர்கள் அதனை பழுது பார்க்கக்கூட முடியாமல் கடந்த $1\frac{1}{2}$, 2 ஆண்டுககால காலமாக தவித்துக் கொண்டிருக்கிறார்களே, அவர்களுக்கு முன் உரிமை கொடுத்து சிமெண்ட் வழங்க அரசு முன் வருமா? இவைகளுக்கெல்லாம் முறையாக வழங்க அரசு ஏற்பாடு செய்யும் முறையில்.... (மணியடிக்கப் பெற்றது) கேள்விதான் கேட்கிறேன். முடித்துவிடுகிறேன். தயவு செய்து அனுமதியுங்கள். சிமெண்ட் விநியோகத்தை சீரான முறையில் செய்வதற்காக மாவட்ட அளவில் ஒரு குழு அமைக்கவிருப்பதாக அந்த அறிக்கையில் அரசு கூறியிருக்கிறது. அதனை உடனடியாக அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அவைமுன் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதைப்போல சுமார் 20 மூட்டை சிமெண்ட்டுகளுக்கும் பெர்மிட் வழங்குவதற்கு இப்பொழுது பி.டி.ஓ., தாசில்தார் மட்டத்திலேயிருந்து கொடுப்பதற்கு உத்தரவு இடப்பட்டிருக்கிறது. கீழ் மட்டத்திலே தவறுகள் நடப்பதாக அரசின் கவனத்திற்கு அடிக்கடி கொண்டு வரப்படுகிற காரணத்தினால்தான் அதனை மேல் மட்டத்திற்கு மாற்றியிருக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவரும், மற்றும் காவல் துறை அதிகாரியும், அடிக்கடி பீரியாடிகல் செக் அப் செய்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அதன் ரிப்போர்ட்டை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஒவ்வொரு பி.டி.ஓ. அலுவலகத்திலும், அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பதைப்போல, எவ்வளவு ஒதுக்கீடு தரப்படுகிறது, ஒவ்வொரு நாளும் எவ்வளவு மனுக்கள் தரப்படுகின்றன அந்த ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் எவ்வளவு சிமெண்டுக்கு அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டது என்ற விவரங்களை வெளியிலே உள்ள நோட்டீஸ் போர்டில் போடவேண்டும் என்றும், அந்த விவரங்களை உயர் மட்ட அதிகாரிக்கு அனுப்ப வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டிருக்கிறது. இம்மாதிரி நடவடிக்கைகள் மூலம் முறைகேடுகள் நடப்பது ஓரளவு தவிர்க்கப்பட்டிருக்கிறது.

(குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதுபோன்று உறுப்பினர் நேரடியாக அமைச்சருடன் பேசக்கூடாது. ஏதாவது விவரங்கள் விட்டிருந்தால், திரும்பவும் பதில் அளிக்கும்போது சேர்த்துச் சொல்வார். அமருங்கள். திரு. க. பாரமலை.

திரு. க. பாரமலை: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சிமெண்ட் பற்றாக்குறை காரணமாக அரசாங்க அலுவலர்கள் வீடுகட்டிக் கொள்ள முடியாமல் சிரமப்படுகிறார்கள். இதன் காரணமாகவே வீடுகட்டும் தொழிலாளர்களும் வேலை இழந்து சிரமப்படுகிறார்கள், ஆகவே, அவர்களுக்கு தாராளமாக சிமெண்ட் கிடைப்பதற்கு ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி தரவேண்டும் என்று கட்டுக் கொள்கிறேன். அதற்காகவே நாங்கள் கொடுத்த கவன ர்ப்பில், அரசாங்கத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட அறிக்கையில் ள்ளதுபோல், ஏறத்தாழ 39 லட்சம் டன் சிமெண்ட்டை றபத்தி செய்கிற தமிழ்நாட்டிற்கு தேவை 24 லட்சம் டன் ான், ஆகையினால் உற்பத்தியில் 60 சதவீதம்ஒதுக்கீடு கிடைத் ால் நம் தேவை பூர்த்தியாகிவிடும். ஆகவே, அதிகமாக றபத்தி செய்கிற தமிழ்நாட்டிற்கு அதனைக் கருத்தில் காண்டாவது, உற்பத்தியில் 65 சதவீத ஒதுக்கீட்டைத்தர வேண்டும் என்று நமது அரசு மத்திய அரசைவற்புறுத்தி பெறு தற்கு நமதுஅரசு நடவடிக்கை எடுக்கமுன் வருமா என்ப தாடு, சிமெண்ட் வழங்குவதிலே பல முறைகளை அரசாங்கம் [illegible]. அதிலே பெர்மிட் வழங்குகிற அதிகாரிகள்

பெர்மிட்டுகளை கிரமப்படிதான் அனுப்ப வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் பெர்மிட்டுகளை அதிகமாக வழங்கி விடுவதன் காரணமாக - உண்மையாக தேவை இருப்பவர்களுக்கு சிமென்ட் ஒதுக்கீடு கிடைக்காமல் போவதை தடுப்பதற்காக, எந்த அளவுக்கு சிமென்ட் ஒதுக்கீடு செய்ய வேண்டுமோ, அந்த அளவுக்குத்தான் பெர்மிட்டுகள் வழங்கப்படவேண்டும் என்ற அடிப்படையில் செய்தால் பலபேருக்கு சிமென்ட் வழங்க முடியும் என்ற காரணத்தால், அதைச் செய்வதற்கு அரசு முன் வருமா என்று கேட்பதோடு.... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: திரு. சு. பாலன் அவர்கள் கேட்ட கேள்வியின் கடைசிப்பகுதிக்குச் சொல்கிறேன். மாநில அளவில் ஒரு ஆலோசனைக் குழு சிமென்ட் தொழிற்சாலைகள் சார்பில் அவர்களுடைய பிரதிநிதிகள் அல்லது உரிமையாளர்கள், அதேபோல் விநியோகஸ்தர்கள், அதேபோல் வாங்கி உபயோகிப்பவர்கள், அரசாங்கச் சார்பில் உயர்மட்ட அதிகாரிகள் இப்படிப்பட்டவர்களைக் கொண்ட ஒரு குழு விரைவில் அமைக்க அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. அடுத்தபடியாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டியதுபோல் நம்முடைய உற்பத்தி ஏறக்குறைய கால் ஆண்டுக்கு சுமார் ஒன்பது இலட்சம் டன்களாகும். நமக்குக் கிடைக்கிற ஒதுக்கீடு சுமார் 3.75 இலட்சம் டன்களாகும். நம் தேவை ஏறக்குறைய ஏழு இலட்சம் டன்களாகும், எனவே இதையெல்லாம் மைய அரசின் கவனத்திற்கு, மைய அமைச்சர்களை நேரடியாகச் சந்திக்கிற-போதும் நாங்களும் அதேபோன்று மாண்மிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களும் நேரடியாகவும் கடிதங்கள் மூலமாகவும் மைய அரசோடு தொடர்பு கொண்டு எழுதிக்கொண்டிருக்கிறோம், வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். எனவே அவ்வப்போது ஒரு பத்தாயிரம் டன், இருபதாயிரம் டன் என்றளவிற்கு ஒதுக்குகிறார்கள். தர்மம் போடுவது போல் அல்லாமல் ஓரளவு கணிசமான அளவிற்கு உயர்த்தித்தர வேண்டும் என்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம்; மைய அரசு கவனிக்கும் என்று நம்புகிறோம்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: அமைச்சர் அவர்கள் கூறும்போது மைய அரசிடம் நாம் கேட்டிருக்கிறோம், தர்மம் போடுவதுபோல் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை தர்மம் என்று கௌரவமாகச் சொன்னார்கள் என்று நினைக்கிறேன். பிச்சை கொடுக்கிற மாதிரி கொடுக்கிறார்கள். கேளுங்கள் கொடுக்கப்படும் என்பது அங்கே நடக்காது. ஆனால் அதேசமயத்தில் சிமென்ட் இல்லாமல் இல்லை. கேளுங்கள் இரவு 12 மணிக்குமேல் வீட்டைத் தட்டி வருகிறது ரூ. 80, ரூ. 85 கொடுத்தால். ஆக, சிமென்ட் இருக்கிறது. அதை முறையாக





விநியோகிக்கிற முறையில், விநியோக முறையில் விசேஷ ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வருமா? அதோடு, பெர்மிட் வழங்குகிற முறையில் சில முறைகேடுகள் ஏற்பட்டு அப்படிப்பட்ட முயற்சிகளில் கையும் களவுமாக பிடிக்கப்பட்டிருக்கின்றனர். அந்த அரசாங்க அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறதா? விண்ணப்பித்தவர்களுக்கு அனுமதித்த இவ்வளவு வாரங்களுக்குள் அல்லது இவ்வளவு மாதங்களுக்குள் அதைக் கொடுக்க உத்தரவு போட அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: இப்பிரச்சனையை நாம் இரண்டு விதமாகப் பார்க்க வேண்டும். ஒன்று நம்முடைய தேவை, இன்னொன்று நமக்குக் கிடைக்கிற ஒதுக்கீடு, நமக்குக் கிடைக்கிற ஒதுக்கீடு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல், குறைவாக இருக்கிறது. பின்னால், ஒதுக்கப்படுகிறதை தவறு இல்லாமல் விநியோகம் செய்வது. தேவையைக் கருத்தில்கொண்டு பார்த்தால் நமக்கு தேவை அதிகமாக இருக்கிறது. அதை தொடர்ந்து மத்திய அரசுக்கு வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். ஏற்கெனவே நான் சட்டமன்ற மேலவையில் சுட்டிக் காட்டியதைப்போல் எல்லா மாநிலங்களுக்கும் இப்படி பொது ஒதுக்கீடு செய்கிறபோது அந்த முறையில் தமிழ்நாட்டுக்கும் ஒதுக்குகிறார்கள். தமிழ்நாட்டில்தான் கிராமப்புறங்களில் அதிக நன்மைகளைச் செய்வதற்கு தனியானதொரு திட்டத்தை, ஒரு முக்கியமான திட்டத்தை தமிழ்நாடு அரசு புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. அதுதான் தன்னிறைவுத் திட்டம் என்ற திட்டமாகும்.

இந்தத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் சிறிய சிறிய கல்வெர்ட்ஸ், பாலங்கள், பள்ளிக்கூடங்கள் எல்லாம் கட்ட திட்டமிடப்பட்டு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ. 40 இலட்சத்திலிருந்து ரூ. 60 இலட்சம் வரை ஒதுக்கீடு செய்து அதற்கு சிமென்ட்டும் ஒதுக்கப்படுகிறது. நமக்கு வருகிற அல்லது கிடைக்கிற ஒதுக்கீடு 3.75 இலட்சம் டன்களாகும். அதில் சுமார் 50,000 டன்கள் நாம் தன்னிறைவுத் திட்டத்திற்காக ஒதுக்குகிறோம். அப்படி ஒதுக்கப்படுவதால் பொது விநியோகத்திற்கு வருகிற அளவு குறைகிறது. இதையும் மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு போய் தமிழ்நாடு மட்டும்தான் இந்தியாவில் இப்படிப்பட்ட தன்னிறைவுத் திட்டத்தை, கிராமப்புறங்களுக்கு நன்மை செய்ய நாம் செய்துகொண்டிருக்கிறோம், ஆகவே கிராமப்புறங்களுக்கு நன்மை செய்யும் இந்தத் தன்னிறைவுத் திட்டத்திற்காக ஒதுக்கப்படுகிற 50,000 டன் சிமென்ட் தனியாகக் கொடுக்க வேண்டும் என்று மைய அரசை வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம். புரட்சித் தலைவர் அவர்களும் வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதெல்லாம் நமக்குக் கிடைத்தால் பிரச்சினை எளிதாக இருக்கும்.

அடுத்து, கொடுக்கப்படுகிற சிமெண்ட்டை பிரித்துக் கொடுக்கிற முறையில் பி.டி.ஓ., தாசில்தார் மட்ட அதிகார வரம்பை ஆர்.டி.ஓ. மட்டத்தில் மாற்றவும் மேலும் தவறுகள் நடக்காமல் இருக்க ஆட்சித் தலைவர்கள், காவல் துறையினர் அடிக்கடி கண்காணிக்கவும் இதற்கு மேல் ஏற்படுகிற பிரச்னைக்கு மாநில அளவில் குழு அமைத்து பிரச்னையைத் தெரிந்து கொண்டு நடவடிக்கைகள் எடுக்கவும் பல்வேறுவிதமான முயற்சிகளையும் அரசு மேற்கொண்டிருக்கிறது.

(முற்பகல் 10-50)

திரு. ரா. உமாநாத்: துணைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் சில ஹைகோர்ட் முடிவுகளைப் பார்க்கிறபோது, சில மாநிலங்களிலே பப்ளிக் அக்கவுண்ட்ஸ் ரிப்போர்ட்டைப் பார்க்கிறபோது அந்த மாநிலங்களில் முதலமைச்சருக்கும், அமைச்சருக்கும் விசேஷ டிஸ்க்ரீஷனரி பவர்ஸ் சிமெண்ட் அலாட்மெண்ட் செய்வதிலே இருப்பதாகவும், அதன் விளைவாக சாதாரண ஜனங்களுக்கு கிடைக்காமல் போகக்கூடிய நிலைமையிலே பல ஊழல்கள் வெளிவந்ததும் உங்களுக்குத் தெரியும். அப்படி டிஸ்க்ரிஷனரி கோட்டா ஒதுக்கும் பவர் நம்முடைய மாநிலத்திலே இருக்கிறதா? அதேபோல், மத்திய அரசு ஒதுக்குகின்ற கோட்டாவானது மற்ற மாநிலங்களுக்கு ஒதுக்குவதற்கும், தமிழகத்திற்கு ஒதுக்குவதற்கும் குறைவா, அதிகமா அல்லது சமமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு காலாண்டிற்கும் சிமெண்டை மத்திய அரசு ஒதுக்குகிறபோது, இந்த மாநிலத்திலே இருக்கிற தொழிற்துறை செயலாளர், தொழிற் துறை இயக்குநர், அதிலே சம்பந்தப்பட்ட ஏனைய இணை இயக்குநர்கள், மற்றும் பல அதிகாரிகள் எதெந்தந்தத் துறைகளுக்கு சிமெண்ட் ஒதுக்கப்படுகிறதோ, பொதுப்பணித்துறை, மின் வாரியம் போன்றதில் உள்ள உயர்மட்ட அதிகாரிகள் கொண்ட குழுதான் அந்தந்த இலாக்காக்களுக்குத் தேவையான சிமெண்டைப் பற்றி பரிசீலித்து, அதை ஒதுக்குகிறார்கள், ஏறக்குறைய பாதியை பொதுவினியோகத்திற்கு ஒதுக்குகிறார்கள். அப்படி ஒதுக்கும்போது, அதிலே ஏறக்குறைய பாதி தனிப்பட்ட ஏஜெண்டுகள் மூலமாகவும், மற்றும் சிவில் சப்ளைஸ், அதேபோல் கூட்டுறவு சொஸைடி இவைகள் மூலமாகவும் வழங்கப்படுகிறது. இதுதான் நடைமுறை. அரசுக்கென்று தனியாக, பிரத்தியேகமாக முதலமைச்சருக்கோ அல்லது தொழிற் துறை அமைச்சரான நானோ தனியாக வைத்துக்கொண்டு பிரத்தியேகமாக தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் அலாட்மெண்ட் செய்வதில்லை. அப்படிப்பட்ட நடைமுறையை நாங்கள் வைத்துக்கொள்ளவில்லை. எனவே, இதிலே எந்தவிதமான பிரச்னை வருவதற்கும் இடமில்லை. மற்ற மாநிலங்களைப் பற்றி எனக்குத் தெரியாது.





திரு. ரா. பெரியசாமி: பாயின்ட் ஆப் ஆர்டர்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் கிடையாது; அமைச்சர் பதில் சொன்ன பிறகு நீங்கள் பதில் சொல்ல முடியாது. இது கவன ஈர்ப்பு. நாம் விதியைப் பின்பற்ற வேண்டும். எனவே உட்காருங்கள். இதே பிரச்னை குறித்து உறுப்பினர் திரு. சின்னசாமி அவர்கள் கொடுத்துள்ளார்கள். திரு. சின்னசாமி.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உமாநாத் அவர்கள் எந்தக் குற்றச்சாட்டையும் சொல்லவில்லை. அதைப்போலவே நானும் எந்தக் குற்றச்சாட்டையும் சொல்லவில்லை. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், அப்படிப்பட்ட நடைமுறை இல்லை என்று சொன்னேன். மற்ற மாநிலங்களிலே இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படி இருப்பதைச் சொன்னார்கள். அதிலே ஒன்றும் தவறில்லை.

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்திற்கு அதிகமான அளவு சிமெண்ட் தேவை என்று அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கப்படுகிற சிமெண்டை இந்தக் காலாண்டு ஒதுக்கீட்டில் உட்படுத்தாமல் இதற்கென்று தனியாக சிமெண்ட் ஒதுக்கவேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். பஞ்சாயத்து யூனியன்களிலே தனியாக தன்னிறைவுத் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. அதேபோல் டவுன் பஞ்சாயத்துக்களிலும் முனிசிபாலிடிகளிலும் தன்னிறைவுத் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. எனவே, இதற்கெல்லாம் சில திட்டங்கள் போடப்பட்டு அதற்காக பணம் ஒதுக்கப்படுகிறது. கிராமப்புறங்களுக்கு நன்மை செய்வதற்காக 20 அம்சத் திட்டம் போடப்பட்டு, அதற்காக பல சலுகைகள் வழங்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. எனவே இந்தப் பணிகளை நடைமுறைப்படுத்துகிற போது, மத்திய அரசு இதற்காக என்று பிரத்தியேகமான ஒதுக்கீடு செய்தால் நன்றாக இருக்கும். மத்திய அரசு அப்படி ஒதுக்குவார்கள் என்று நம்புகிறேன்.

## (5) அரசினர் தீர்மானம்.

### ''முருகேசன் கமிஷன்'' பரிந்துரைகள் மீதும் அரசு எடுத்த நடவடிக்கை குறித்தும் விவாதம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''30-4-1981 ஆம் தேதியன்று அவைமுன் வைக்கப்பெற்ற, திருச்சிராப்பள்ளி மத்திய சிறையில் கருப்பன் என்ற கைதி 23-8-1979 ஆம் தேதியன்றும், மாரியப்ப தேவர் என்ற கைதி 28-8-1979 ஆம் தேதியன்றும் மறைவு குறித்த காரணங்களைக் கண்டறிய நியமிக்கப்பெற்ற மதுரை கூடுதல் மாவட்ட நீதிபதி, திரு. எம். ஏ. முருகேசன் அவர்களது தனி நபர் விசாரணைக் கமிஷன் அறிக்கையில் அடங்கிய பரிந்துரைகளும், 27-3-1981 ஆம் தேதியிட்ட உள் துறையின் 683 ஆம் எண் அரசாணையின் இணைப்பில் குறிப்பிடப்பெற்றவாறு அரசு அவை மீது எடுத்த நடவடிக்கை குறித்தும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்''

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சரவைக்கு கூட்டுப் பொறுப்பு இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் ஒரு முக்கியமான விசாரணைக் கமிஷன் பற்றிய விவாதம் நடைபெற இருக்கும் போது அதற்குரிய சட்ட அமைச்சர் அதனை அவையில் மொழி வதற்கு இல்லை.

திரு. துரைமுருகன்: இது ஒரு முக்கியமான பிரச்சினை. இந்த அவையை விட முக்கியமான வேலை என்ன இருக்கிறது. இது இந்த அவையை அவமதிக்கிற செயலாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இரண்டு அவையும் ஒரேநேரத்தில் நடைபெற்றுக்கொண்டிருப்பதால் சட்ட அமைச்சர் இங்கே இல்லை. எந்தப் பிரச்சினை குறித்தும் விவாதிக்க வேண்டுமென்கிற தீர்மானத்தை எந்த அமைச்சரும் மொழியலாம்.

திரு. ரா. உமாநாத்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கமிஷன் ரிப்போர்ட்டின் உள்விவரங்களுக்குச் செல்லுவதற்கு முன்னால் ஒரு விஷயத்தை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்த விவாதத்தின் மூலம், இது பற்றிய விளக்கங்கள் மூலம் தங்களுக்கு சற்று நியாயம் கிடைக் காதா என்று பல்லாயிரக்கணக்கான கைதிகள் தமிழ்நாட்டு சிறைகளில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்களின் பதிலையும் அரசாங்கத்தின் முடிவுகளையும் சட்டாயமாக எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கனம் அமைச்சர் அவர்களும் இந்த அவையும் மனத்தில் கொள்ள வேண்டும்.



முருகேசன் கமிஷன் ரிப்போர்ட் சிறை நிர்வாகத்தின் உண்மைகளைப் பார்ப்பதற்கு உதவக் கூடிய சானலாக அமைந் துள்ளது. அந்த அதிகாரிகளுக்கு ஒரு கடிவாளம் இட முருகேசன் கமிஷன் ரிப்போர்ட் ஒரு அருமையான நல்ல வாய்ப்பாக அரசாங் கத்திற்கு அமைந்துள்ளது. ஆனால் அந்த வாய்ப்பை முறையாகப் பயன்படுத்த அரசாங்கம் தவறிவிட்டது என்பதுதான் என்னுடைய கருத்து. அதன் பிறகு நம்முடைய மாநிலத்தில் அனேக சிறைகள் 'கொதிகனலாக' இருக்கின்றன என்பதை அவையின் கவனத் திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திருச்சி சம்பவத்திற்குப் பிறகு, கமிஷன் ரிப்போர்ட்டில் குறிப் பிட்ட சம்பவங்களுக்குப் பிறகு, சமீபத்தில் மதுரைச் சிறையில் ஒரு கைதி அடித்துக் கொல்லப்பட்டார் என்று கிளர்ச்சி நடந்தது. 12-1-82 ஆம் தேதியில் சிறை விதிகளைத் தளர்த்தக் கோரி கைதிகள் திருச்சி சிறையில் உண்ணாவிரதம் இருந்ததாகத் தெரி கிறது. இந்த மாதம் 1ஆம் தேதி சொந்த ஊர்ப் பக்கம் மாறுதல் தேவை என்று வேலூர் சிறையில் மாஸ் உண்ணாவிரதம் இருந்ததாகத் தெரிகிறது. சிறை நிர்வாகத்தில் ஒவ்வொரு சிறை யிலும் கோளாறுகள் இருக்கின்றன என்ற தகவல்கள் வந்து கொண்டுதான் இருக்கின்றன. திருச்சி மத்திய சிறையில் 1979ல் நடந்தது என்ன? 23-8-79 அன்று இரவு கருப்பன் என்ற ஜன்ம தண்டனைக் கைதி மரணம் அடைந்தான். தற்கொலை என்று சிறை அதிகாரிகள் கூறிவிட்டார்கள். அது தற்கொலை அல்ல—அடித்துக் கொல்லப்பட்டான் என்று மறு நாள் இரண்டாயிரத்திற்கு மேற் பட்ட திருச்சி சிறைக் கைதிகள் சாப்பிடாமல் கூடினார்கள். பிணத்தைப் பார்க்க அனுமதி கேட்டனர். சிறை அதிகாரிகள் மறுத்து போலீசை வரவழைத்து லத்தி சார்ஜ் செய்து, கண்ணீர்ப் புகை விட்டு அவர்களைக் கலைத்து விட்டனர். சிறையில் தடியடி நடந்தது.

எதிர்காலத்தில் இப்படிப்பட்ட கோளாறுகள் நடக்கக்கூடாது என்பதற்காக, அதை ஒடுக்குவதற்காக, முக்கியமான கைதிகளை, தனிக் கொட்டகையில் அடைப்பது, தனித் தனியாகப் பூட்டி வைத்து பிறகு கும்பலாக அதிகாரிகள் சென்று கைதியை வெளியே கூப்பிட்டு அல்லது உள்ளே நுழைந்து வேட்டை நாயை அடிப்பது போல் கைதியை லத்தியால் அடிப்பது, மீண்டும் கொட்டகையில் போடுவது என்பது பிரிட்டிஷ் காலத்தில் கையாண்ட முறை என்பதை நினைவுபடுத்துகிறேன்.

(முற்பகல் 11.00)

அந்த முறையை நாங்கள், நமது தோழர்கள் 1948 ஆம் ஆண்டு வேலூர் சிறையில் அனுபவித்தோம். அந்த முறையை சேலம் சிறையில் நாங்கள் அனுபவித்தோம். அந்த முறைதான் திருச்சி சிறையிலே நடந்திருக்கிற சம்பவம் என்று நான் நினைக்கிறேன். நீதிபதி முருகேசன் முதல் மரணம் தற்கொலை

என்று தீர்ப்பளித்தார், ஆனால் இரண்டாவது மரணம் அதாவது திரு மாரியப்பத் தேவர் மரணம் தற்கொலை அல்ல என்று தீர்ப்பு அளித்திருக்கிறார். முதல் மரணம் தற்கொலை என்பது எனக்குத் திருப்தியளிக்கவில்லை. இருப்பினும் இரண்டாவது மரணம் கொலை என்ற முருகேசன் கமிஷனின் தீர்ப்பு எல்லோருக்கும் எதிர்காலத்திலே விமோசனம் அளிக்கப்படவேண்டும் என்பதற்காக நான் அந்த விஷயத்தை மட்டும் எடுத்துக் கொள்கிறேன். இரண்டாவது மரணம் பற்றி கமிஷன் தன்னுடைய அறிக்கையிலே 73 ஆம் பாராவிலே தமிழிலே கொடுத்திருப்பதை நான் படிக்கிறேன்.

''போஸ்ட் மார்ட்டம் செய்த டாக்டரின் மருத்துவ அறிக்கைப்படி மாரியப்பத் தேவரின் நாக்கின் நிறம் மாறவில்லை; வாயிலிருந்து எச்சில் துளிதுளியா வெளியில் வந்தகில்லை, வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் நுரை வரவில்லை; முஷ்டி இறுக்கப் பிடித்திருக்கவில்லை.... போஸ்ட் மார்ட்டம் செய்கிற நேரத்தில் மாரியப்பத் தேவர் தூக்குப்போட உபயோகித்ததாகக் கூறப்படும் துண்டு டாக்டரிடம் காட்டப்படவில்லை.''

மேலும் கமிஷன் ரிப்போர்ட்டின் பாரா 75 இல் சொல்லப் பட்டிருப்பதைப் படிக்கிறேன்;

''மாரியப்பத் தேவர் தூக்குப் போட்டதாகக் கூறும் நேரத்தில், அதற்காக அவர் உபயோகப்படுத்தியதாகக் கூறப் பட்ட துண்டு, அவரிடம் இருந்திருக்கவே முடியாது, ஆகவே மாரியப்பத் தேவர் தூக்குப் போட்டுச் செத்திருக்க முடியாது'' என்று நீதிபதி கூறியுள்ளார்.

அப்படியானால் அவர் எப்படி செத்திருக்க முடியும்? கமிஷன் ரிப்போர்ட்டிலே பாரா 74இல் சொல்லப்படுகிறது, படிக்கிறேன்.

''மாரியப்பத் தேவர் முதுகில் ஒரு வீக்கம் இருந்ததாக ஒத்துக் கொள்ளப்படுகிறது.... பலவகை காயங்களுக்காக (multiple injuries) மாரியப்பத் தேவர் சிகிச்சை செய்யப்பட்டதாக சிறை மருத்துவ மனைப் பதிவேட்டில் இருக்கிறது என சிறை டாக்டர் ஒத்துக் கொள்கிறார். இரண்டு கால் முட்டிகளும் (னீ கேப்ஸ்) வீங்கியிருந்ததாக சாட்சியங்கள் இருக்கின்றன.''

மேலும் சொல்லப்பட்டிருக்கிறது, ''..மாரியப்பத் தேவரின் உடலில் பல காயங்கள் இருந்தன என்பதை யாரும் மறுக்க முடியாது..'' ''ஆகவே இந்த சாட்சியங்கள் அனைத்தும் மாரியப்பத் தேவர் அடிக்கப்பட்டுள்ளார் என்ற யூகத்திற்கு நம்மை கொண்டு செல்லப் போதுமானது.'' இப்படிப் பல்வேறு இடங்களிலே இந்த ரிப்போர்ட்டிலே சொல்லப்பட்டு இருப்பதைப் பார்க்கிறபோது சிறை அதிகாரிகளால் நாய்மாதிரி அடித்தே கொல்லப்பட்டார் என்பதற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்,





24-8-79 ஆம் தேதி நடந்த தடியடி கண்ணீர் புகைக்குப் பின் இனிமேல் கிளர்ச்சி ஏற்படாமல் ஒடுக்க வெள்ளையன் காலத்திய பழக்கப்படி தனிக்கொட்டடைக் கொடுமையின் விளைவாக ஏற்பட்ட கொலை என்பதற்குச் சிறை அதிகாரிகள் சமர்ப்பித்த அறிக்கையே சான்று.

சிறை அதிகாரி சமர்ப்பித்த அறிக்கையிலிருந்து பாரா 10 ஐ நான் படிக்கிறேன். ''24-8-79 ஆம் தேதி நடந்த இந்த கிளர்ச்சிக்குப் பின், சிறையில் சகஜ நிலை ஏற்பட்டது. சிறைக்குள் இனிமேல் எதிர்காலத்தில் இத்தகைய கிளர்ச்சிகள் நிகழாமலிருக்க, அந்தக் கிளர்ச்சியில் பங்குகொண்டவர்களை உள் சிறையில் 2-வது, 3-வது நம்பர் பிளாக்கில் தனித்தனியாகப் பிரித்து பூட்டி வைத்தோம்'' என்று அதிலே சிறை அதிகாரிகள் கூறு கிறார்கள். அதற்குப் பின் என்ன நடந்தது. மாரியப்பத் தேவரின் உடல் காயங்கள் பேசின. மாரியப்பத் தேவரின் கடைசி மூச்சு—எந்த மூச்சை நம்மால் கேட்கமுடியவில்லையோ— நமது காதுக்கெட்டாத மூச்சு பேசியது, அவருடைய பிணம் பேசியது என்ன நடந்தது என்பதற்கு அவருடைய பிணம்தான் சாட்சி. இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் சிறை நிர்வாகம் இப்படித்தான் நடக்கும் என்று மறைந்த திரு. சிட்டிபாபுவின் டயரி பேசுகிறது. வெள்ளையன் காலத்திய இந்த முறையை ஒழிக்க நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்?

இஸ்மாயில் கமிஷன் ரிப்போர்ட்டிலேயே இது வெளியான பிறகு ''இந்த முறைகளைக் கையாண்டால் சிறை சூப்பிரண்டெண் டெண்டும் ஜெயிலரும் தண்டிக்கப்படுவார்கள்'' என்று வார்ன் பண்ணி பர்ம் சர்க்குலர், சுற்றறிக்கை விட்டீர்களா? இல்லை. விளைவு என்ன? மாரியப்பத் தேவர் கொலை செய்யப்பட்டார். சரி. மாரியப்பத் தேவர் கொலைக்குப் பின்னராவது ஜெயில் சூப்பிரண்டெண்டும், ஜெயிலரும் பர்ம் ஆக டீல் பண்ண படுவார்கள் என்ற சர்க்குலரை அதற்குப் பிறகாவது அனுப்பி னார்களா? இல்லை. அதன் விளைவு மதுரையில் மீண்டும் இன்னொரு அடித்துக் கொலை. திராவிட முன்னேற்றக் கழக மிசா கைதிகளைக் கொடுமைப்படுத்தியதற்கு பொறுப்புடைய வித்யாசாகருக்கு சிறை டி.ஐ.ஜி. யாகப் ப்ரமோஷன் கொடுத்துள்ள தாக அறிகிறேன். ஆகவே, சிறைக் கொடுமை ப்ரமோஷனுக்கான ஒரு குவாலிபிகேஷனாகத்தான் சிறை அதிகாரிகள் இந்த நடவடிக்கைகளிலிருந்து புரிந்து கொள்வார்கள். இப்படி அவர்கள் புரிந்து கொள்கிறபொழுது இந்த முறையை நீங்கள் எப்படி ஒழிக்க முடியும்? இன்னும் ஆபத்து வராதா சிறைக்குள்ளே என்று நான் கேட்க விரும்புகிறேன்.

திருச்சி கொலையில் அடிப்பதிலும், துன்புறுத்துவதிலும் கொலைக்குக் காரணமானவர்களும் அசிஸ்டெண்ட் ஜெயிலர் சில்வர்ஸ்டர், வார்டர் திருநாவுக்கரசு, ஜே. டபிள்யூ- 28 என்று போட்டிருக்கிறது என்று அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர்களை ஏன் டிபார்ட்மெண்டல் விசாரணை முடியும்வரை

சஸ்பெண்ட் செய்யவில்லை? அப்படி சஸ்பெண்ட் செய்ததாக எனக்குத் தெரியவில்லை. செய்திருந்தால் அமைச்சரவர்கள் பிறகு சொல்லட்டும். ஒருக்கால் அமைச்சர் கூறுவார், ஜுடிஷியல் என்கொயரி அடிப்படையில் சஸ்பெண்ட் செய்யக் கூடாது என்று கோர்ட் தீர்ப்பு இருக்கிறது என்று. நான் கேட்கிறேன், ஜுடிஷியல் என்கொயரி அடிப்படையில் என்று நீங்கள் ஏன் கூற வேண்டும்? அந்த என்கொயரியில் பல சாட்சியங்கள் வந்திருக்கின்றன அல்லவா? அந்த சாட்சியங்களின் அடிப்படையில் ஜுடிஷியல் என்கொயரியோடு நீங்கள் இணைக்காமல், அதைப் பற்றி சார்ஜ் ஷீட்டிலே குறிப்பிடாமல், அந்த பிரைமரி சாட்சியங்களை வைத்துக்கொண்டே அவர்களை சஸ்பெண்ட் செய்திருக்கக் கூடாதா? ஏன் செய்யவில்லை?

மேலும், போலீஸ் புலனாய்வு நடக்கிறபொழுதே ஏன் இவர்களை கொலைக் குற்றத்திற்கு கைது செய்யவில்லை? இப்பொழுது செய்வதில்லையா? இன்வெஸ்டிகேஷன் கம்ப்ளீட் ஆனபிறகுதான் இன்றைக்கு தமிழ்நாட்டிலே அக்யூஸ்டை அரெஸ்ட் பண்ணுகிறீர்களா? இல்லையே. பிரிலிமினரி சிலது கிடைத்தவுடனேயே அரெஸ்ட் செய்கிறார்கள்; பிறகு இன்வெஸ்டிகேஷன் தொடர்ந்து நடத்திக் கொண்டுதானே இருக்கிறீர்கள். ஆகவே, கமிஷனுடைய ரிப்போர்ட் இப்படி வந்த பிறகு கொலைக் குற்றத்திற்காக ஏன் கைது செய்து இன்வெஸ்டிகேஷனைத் தொடரவில்லை?

இவ்வளவு உண்மைகளைக் கண்டுபிடித்த கமிஷன் இந்தச் சம்பவங்களில் ஜெயிலர் விஜயநாராயணனுக்கு பங்கே இல்லை என எப்படி எழுதினார் என்பது எனக்கு ஆச்சரியமாகத்தான இருக்கிறது. அதையும் நான் கூற வேண்டுமல்லவா? ''ஜயிலர் அவருடைய சொந்த அஃபிடவிட்டில் கூறுகிறார். நாங்கள் 37 ஆம் நம்பர் கொட்டடிக்குப் போனோம். அங்கு ஒரு துண்டால் கொட்டடிக்கதவில் ஒரு கைதி தூக்குப் போட்டதை பார்த்தேன். பிறகு கதவு திறந்தோம். அந்த கைதியை கீழே இறக்கினோம். துண்டை எடுத்தோம்'' என்பது ஜெயிலர் தன்னுடைய சொந்த அஃபிடவிட்டில் கூறியிருப்பது.

நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், தூக்குப் போட்டது என்பது உண்மையல்ல என்றும், அடித்ததால் செத்தார் என்றும், துண்டு இருந்திருக்கவே முடியாது என்றும் கமிஷன் முடிவாகக் கூறியிருக்கும்பொழுது தூக்குப் போட்டதை ஜெயிலர் எப்படிப் பார்த்திருக்க முடியும்? இல்லாத துண்டை எப்படிப் பார்த்திருக்க முடியும்? ஆகவே, அது உண்மை அல்ல என்று கமிஷன் கூறுகிறது. நான் பார்த்தேன் என்று ஜெயிலர் கூறுகிறார். அது எப்படி உண்மையாக இருக்க முடியும்? இல்லாத துண்டை எப்படி ஜெயிலர் பார்த்திருக்க முடியும்? ஆகவேதான் நான் சொல்ல விரும்புகிறேன். கொலையை மறைக்க முயற்சித்ததற்காக, அதற்கான தடயங்களை மறைக்க முயற்சித்ததற்காக, தற்கொலையென பொய்யாக நிரூபிக்க





கழுத்தில் வேண்டுமென்றே ஒரு கயிற்றுக் குறி அடையாளம் உண்டாக்கியதற்காக, பொய்ச் சாட்சியம் உண்டாக்க ஒரு துண்டு கொண்டு வந்ததற்காக ஏன் அந்த ஜெயிலரை சஸ்பெண்ட் செய்ய வில்லை? ஏன் அந்த ஜெயிலரைக் கைது செய்து கிரிமினல் ப்ரொசீடிங்க்ஸ் இந்தக் குற்றத்திற்காக எடுக்கவில்லை?

நான் சட்டப்பேரவையில் பேசியதற்காகவே ஆத்திரப்பட்டு இவருக்கு குண்டு போதும் என்று ஆத்திரத்தோடு பேசிய இந்த ஜெயிலர்—இவர்தான் இந்த ஜெயிலர், அந்தச் சம்பவத்திலே இருந்தவர், இங்கே பேசியதற்காக ஆத்திரம் வரக் கூடியவருக்கு ஒரு கைதியைப் பொறுத்தவரைக்கும் என்ன ஆத்திரம் ஏற்பட்டிருக்கும்? எப்படி நடந்திருப்பார் என்பதைக் கமிஷன் ஃபைண்டிங்க்ஸ் போக இதிலேயிருந்து நாம் புரிந்துகொள்ள முடியாதா?

மாரியப்பத் தேவர் மரணம் சம்பந்தமாக போலீஸ் இன்வெஸ்டிகேஷனுக்கு உத்தரவிட்டதாக அரசு உத்தரவில் குறிப் பிட்டுள்ளனர். ஆனால் அந்த போலீஸ் விசாரணை நடத்தும் பொழுது போலீஸ் அதிகாரிகள் சிறைக் கைதிகளை அச்சுறுத்திய செய்தியை நான் இதே அவையில் ஒரு செஷனில் சொல்லியிருக் கிறேன். அது என்னவென்று எனக்குத்தெரியாது என்று நான் சொன்னதற்கு அமைச்சர் என்னிடம் சொன்னார். அந்த இன் வெஸ்டிகேஷன் நடக்கிறது என்று சொன்னார்கள். அந்த இன்வெஸ்டிகேஷனில் எந்தக் கைதிகள் ஜெயிலர் பெயரைச் சொன் னார்களோ அந்தக் கைதிகளை அச்சுறுத்தியிருக்கிறார்கள் என்று ரிப்போர்ட் எனக்கு வந்து நான் இந்த அவையிலே சொல்லியிருக் கிறேன். ஆகவே, சர்க்கார் உத்தரவு போட்டிருக்கக்கூடிய அந்த போலீஸ் இன்வெஸ்டிகேஷனிலே அந்தப் போலீஸ் அதிகாரி கைதி களை அச்சுறுத்தியிருக்கிறார் என்றால் இன்வெஸ்டிகேஷனுடைய ரிசல்ட் என்னவாகத்தான் இருக்கும்? அமைச்சர் சொன்னதற்குப் பிறகுதான் இன்வெஸ்டிகேஷன் சக்சஸா இல்லையா என்பது நமக்குத்தெரியும், சக்சஸ்புல் என்றால் நல்லது. சக்சஸ்புல் இல்லை என்றால் இந்த அச்சுறுத்தலினுடைய விளைவு என்றுதான் நான் எடுத்துக்கொள்வேன்.

இப்படிப்பட்ட நிலைமைகள் மீண்டும் நிகழாமல் இருப்பதற்கு ஜெயிலரி லிருந்து அதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை—ஜயிலர், உதவி ஜெயிலர் முதலில் சம்பந்தப்பட்ட அனைவரையும், எந்தெந்த வார்டர்களோ அவர்களையும் கொலைக் குற்றத்திற்கும், குற்றத்தை மறைக்க முயற்சித்ததற்கும், சான்றுகளை மறைக்க முயற்சித்ததற்கும் உடனே சஸ்பெண்ட் செய்ய வேண்டும். செய்யவில்லையென்றால், உடனே கைது செய்ய வேண்டுமென்று நான் கோருகிறேன்.

அடுத்தபடியாக, கைதிகளின் அதிருப்திக்கு அஸ்திவாரமான காரணங்களை நீக்க இஸ்மாயில் கமிஷன் சிபாரிசுகளையும், நரசிம்மன் கமிஷன் சிபாரிசுகளையும் அமுல்படுத்த வேண்டுமென முருகேசன் கமிஷன் வலியுறுத்தியுள்ளது. இதனைத் தொடர்ந்து நான் சில யோசனைகளை வலியுறுத்த விரும்புகிறேன்.

(முற்பகல் 11.10)

உடனடியாக ஆயுள் தண்டனைக் கைதிகளை அவரவர்கள் ஊர்பக்கம் இருக்கக் கூடிய சென்ட்ரல் ஜெயில்களுக்கு மாற்ற ஏற்பாடு செய்ய வேண்டும். டென்ஷனுக்கு இது ஒரு முக்கிய காரணம். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே தெரியும். அவர் அங்கே வந்தது, ஒரு நல்ல இனிஷியேடிவ் என்று நான் சொல்கிறேன். குறைகளைக் கண்டறிய நீங்களும் வாருங்கள் என்று அழைத்தார். அங்கே போய், அங்கே இருக்கக்கூடிய கைதிகளிடம் உறுதி சொன்னார். நீங்கள் நிச்சயம் பகிரங்கமாக, பயப்படாமல் சொல்லுங்கள்; சூப்பரின்டென்டன்ட் இருக்க மாட்டார், ஜெயிலர் இருக்க மாட்டார், உங்கள் பேரில் எந்த வித நடவடிக்கையும் எடுக்க மாட்டார்கள் என்று அளித்த அந்த வாக்குறுதியை நம்பி பலபேர்கள் அமைச்சரிடம் சாட்சியம் சொன்னார்கள். அமைச்சர் திரும்பி வந்த சில நாட்களுக்குள், ஏதோ ஒரு சம்பவத்தைப் பயன்படுத்தி, சாட்சி சொல்லியிருக்கக் கூடிய பல கைதிகளை, வேலூர் சிறைக்கு மாற்றினார்கள். நான் சொல்ல விரும்புவது, அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியை மீறுவதற்கு இன்றைக்கு இவ்வளவு தெம்பு அதிகாரிகளுக்கு இருக்கிறது என்று சொன்னால், who is runn ng the Government? Is it the Ministe or the offic als? நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்திற்குக் கட்டுபட்டுத்தான் எந்த அதிகாரியாக இருந்தாலும் நடக்க வேண்டுமென்று விரும்பக் கூடியவன் நான். ஆனால், அமைச்சர் கொடுத்த வாக்குறுதியை மீறி கைதிகளை டிரான்ஸ்பர் செய்துள்ளார்கள். ஆகவே, அமைச்சர் வாக்குறுதி கொடுத்தாலும், கைதிகளுக்குப் பாதுகாப்பு இல்லை என்ற நிலைமையிலே அவர்கள் இருக்கிறார்கள். ஆகவேதான் நான் கூறுகிறேன், உடனடியாக எல்லாக் கைதிகளையும் அவர்கள் ஊர்களுக்குப் பக்கத்திலே இருக்கக்கூடிய சிறைச்சாலைகளுக்கு மாற்றவேண்டும்.

இரண்டாவதாக, சுப்ரீம் கோர்ட் உத்தரவின்படி விடுதலை செய்யப்பட வேண்டிய ஆயுள் கைதிகளை விடுதலை செய்வதில் சற்று தாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதில் பெரிய அதிருப்தி ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தத் தாமதம் இல்லாமல், போலீஸிடம் கேட்காமல், அதற்கான பரிசீலனை போர்டின் உத்தரவுப்படி, உடனடியாக அவர்களை விடுதலை செய்வதற்கான ஏற்பாடு செய்ய வேண்டும். உத்தரவு போட்டால் மட்டும் போதாது, அதை அமுல்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்களே நேரில் பொறுப்பெடுத்து, செய்து வைக்க உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



மூன்றாவதாக, கைதிகளுக்கு முழு அளவு உணவு நல்லரகமாகக் கிடைக்க தடையாக உள்ள ஊழலையும், திருட்டையும் ஒழிக்க வேண்டும். ஆகவே கைதிகளின் உணவைப் பாதுகாக்க, உடனடியாகச், செய்யக்கூடியது, ரேஷன் டெப்டி ஜெயிலர் ஸ்டோரா ரூமிலிருந்து–ரேஷன் இஷ்யூ பண்ணுகிற இடத்தில்தான் முதல் கண்காணிப்பு இருக்க வேண்டும். ஸ்டோரிலிருந்து இஷ்யூயிங் பாய்ன்ட் அதுதான். ஏனென்றால், பல வருஷங்கள் நாங்கள் ஜெயிலில் இருந்ததால், அது எங்கே நடக்கிறது என்பது எங்களுக்குத் தெரியும் ரேஷன் டெப்டி ஜெயிலர், ரேஷன் இஷ்யூ பண்ணுகிற அளவிலே கரெக்டாக இஷ்யூ செய்கிறாரா என்று கண்காணிக்க வேண்டும். அடுத்தது, ரேஷன் கொடுத்த பிறகு, சமையலறைக்குச் சென்றபின், கொடுத்த அளவு முழுவதும் சமையல் செய்யப்படுவதற்குச் சென்றிருக்கிறதா என்று பார்க்க சமையலறையில் கண்காணிப்பு இருக்கவேண்டும். இந்தக் கண்காணிப்பை அதிகாரிகளே செய்ய முடியாது. ஏனென்றால், வேலிக்கு ஓணான் சாட்சி மாதிரியாகும். ஆகவே, நரசிம்மன் கமிஷன் ஒரு சிபாரிசு செய்திருக்கிறது. பல சிபாரிசுகளை அமுல் நடத்த சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறது. ஆனால், முக்கியமான ஒரு பரிந்துரையை அமுல் செய்ய சர்க்கார் உத்தரவு போடவில்லை. நரசிம்மன் கமிஷன் அறிக்கையில் என்ன இருக்கிறது? கேரள சிறைகளில் வெற்றிகரமாகச் செயல்படும் கைதிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட கண்காணிப்பு கமிட்டிகள் அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அந்தக் கமிட்டியினரும் அதிகாரிகளும் கூட்டு சேர்ந்தால், 'கொளுட்' செய்தால், அதைத் தவிர்க்க 6 மாதமொரு முறை கமிட்டிகளை புதுப்பிக்கவேண்டும். இது நரசிம்மன் கமிஷனுடைய சிபாரிசு. இதை அரசாங்கம் இன்னும் அமுல்படுத்தவில்லை. இதை அமுல்படுத்தினாலும், ஊழலின் ஊற்றை அடைக்காமல், அதாவது, பெரிய அதிகாரிகளின் மத்தியில் நிலவும் ஊழலை ஒழிக்காமல் கைதிகளுக்கு நிச்சயமாக நல்ல உணவு கிடைக்காது. நீங்கள் எந்தத் திட்டத்தை அமுல்படுத்தினாலும், முதலில் அங்கே கையை வைக்கவில்லையென்றால் எதுவும் முடியாது. ஆகவே, நரசிம்மன் கமிஷனே சோர்வுற்று எழுதியதை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

பெரிய அதிகாரிகளின் மேல் நடக்கக் கூடிய அந்த ஊழலைப் பற்றி Tamil N du Prison Reforms Commission "சிறை இலாக்காவின் உயர்மட்ட அதிகாரிகள் மத்தியில் உலவும் லஞ்ச ஊழல்" நரசிம்மன் கூறுவது நான் ஏற்கனவே கூறியதைப் போல, கான்ட்ராக்டர்களிடம் கமிஷன் வசூல் செய்வதும், சிறைக்கு உணவுப் பொருள்கள், சிறைத் தொழிற்சாலைக்கு தேவையான பொருள்களும், மூலப்பொருள்களும் பெருமளவில் சப்ளை பண்ணும் மற்ற ஸ்தாபனங்களிடமும் கமிஷன் வசூல் செய்வது போன்ற வழியில்தான் சிறைகளின் பெரிய அதிகாரிகள் லஞ்சம் வசூல் செய்வது. டெண்டர் விடுவதன் மூலமும், கூட்டுறவு சூப்பர் மார்க்கட் போன்ற மற்ற ஸ்தாபனங்கள் மூலம்

பொருள்கள் கொள்முதல் செய்வதன் மூலமும் இந்த ஊழலைத் தடுக்க சில முயற்சிகள் எடுக்கப்பட்டு உள்ளது. இருந்தாலும், மட்டரகப் பொருள்களை நல்லரகப் பொருளென தள்ளிவிடுவதற்கும் அல்லது பில்லில் குறிப்பிட்ட அளவைவிட குறைந்த அளவு சப்ளை பண்ணவும், அதை வாங்கும் அதிகாரிகளுக்குக் கமிஷன் கொடுப்பது ஒரு வியாபார தந்திரமாக சப்ளையர்கள் கருதுகிற வரையிலும், அந்தக் கமிஷனுக்கு பணியும் அதிகாரிகள் இருக்கும் வரையிலும் இப்படிப்பட்ட ஊழலை ஒழிக்க முடியாது என்று பிரஸ்டிரேஷனோடு, சோர்வடைந்து எழுதி இருக்கிறார். அவர் மட்டுமல்ல, திரு. டயஸ், திரு. வெங்கோபராவ் மற்றும் திரு. நரசிம்மன் அவர்களும்தான்.

இப்படிப்பட்ட ஒரு உயர்மட்டக் கமிஷன் ஒரு லாங் டெர்ம்' லாங் பீரியட் எடுத்து இன்வஸ்டிகேட் பண்ணியும், ஃபிரண்டலாக ஃபிராங்காக டாப்மோஸ்ட்டில் இருக்கக் கூடிய அதிகாரிகள் செய்கிறார்சள். நான் சொல்லுகிறேன், டெப்டி ஜெயிலரை நாம் கண்காணித்தால் கூட, வெளியே இருந்து கமிஷன் வாங்கி மட்டரக பொருள்களை சப்ளை பண்ணுகின்றவர்களை நாம் என்ன பண்ண முடியும். ஆகவே நரசிம்மன் கமிஷன் சோர்வடைந்தாலும் பெரும் அதிகாரிகள் லஞ்சம் வாங்கி மட்டரகப் பொருள்களையும், அளவையும் குறைத்து சப்ளை செய்வதைத் தடுக்க நம்முடைய சர்க்கார் என்ன செய்தது என்று கேட்கவிரும்புகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுவார். சமீபத்தில் ஒரு சூப்பிரன்டென்டை சஸ்பென்டு செய்தது அதற்காகத்தான் என்று கூறுவார். அது உதாரணமாக இருக்க முடியாது. அதற்குக் காரணங்கள் பல இருக்கின்றன. அந்த சூப்பிரன்டன்டை டி. ஐ. ஜி. ஆக்கவேண்டும் என்று அரசு நிர்ப்பந்திக்க ஒரு மஞ்சள் பத்திரிகை அமைச்சர் மீது அபாண்டமாக எழுதியுள்ளது. டி.ஐ.ஜி. யாராக இருக்க வேண்டும் என்பதிலே There are so many reasons for that ஆகவே இந்த நடவடிக்கை எடுத்திருப்பது இதிலே வராது. ஆகவே அந்த உதாரணம் பயன்படாது.

பெரிய அதிகாரிகளையும், அவர்களின் பர்ச்சேஸ்களையும் கண்காணிக்கச் சிறையுடன் சம்பந்தமில்லாத விசேஷ விஜிலன்ஸ் செல் ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

சமீபத்திலே வெளியிடப்பட்டுள்ள விடுப்பு முறை உத்தரவு ரத்து செய்யப்படவேண்டும். இது சம்பந்தமாக திருச்சி சிறையிலே உண்ணாவிரதம் கூட நடந்தது. 15 நாட்களை, 5 நாட்களாகக் கொண்ட மூன்று முறை விடுப்பாக மாற்றவேண்டும்; 3 ஆண்டுகள் பூர்த்தியானவர்களுக்குத்தான் விடுப்பு என்ற நிபந்தனை நீக்கப்படவேண்டும். போலீஸ் சிபாரிசு செய்யவேண்டும் என்ற நிபந்தனை இருக்கக் கூடாது. Probation Officers இடமிருந்து சான்றிதழ் பெற்று வரவேண்டும் என்று இப்போது சேர்க்கப்



பட்டிருக்கிறது. அந்த நிபந்தனை கூடாது. எல்லாவற்றிக்கும் மேலாக சிறைக்கொடுமைகளை ஒழிப்பதற்கு விசேஷ நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று கூறுகிறேன். அதற்கு முதலிலே செய்யவேண்டியது கான்விக்ட் வார்டர் சிஸ்டத்தை, கைதிகளைக் காவலராக்குகின்ற சிஸ்டத்தை அபாலிஷ் செய்ய வேண்டும். இதை முருகேசன் கமிஷன் சிபாரிசு செய்துள்ளது. நரசிம்மன் கமிஷன் சிபாரிசு செய்துள்ளது; இஸ்மாயில் கமிஷன் சிபாரிசு செய்துள்ளது. ஏன் டி.ஐ.ஜி. தேவாரம் கூட, தன்னுடைய அபிடிவிட்டிலே நரசிம்மன் கமிஷன் விசாரணையின் போது கொடுத்த அபிடவிட்டிலே சொல்லி உள்ளார். உடனடியாக இவர்கள்எடுக்கப்பட வேண்டும். இவர்களை எடுப்பதன் மூலமாக அரசுக்குபைனான்சியல் செலவு அதிகமானாலும் இவர்களை எடுக்கவேண்டும். எவ்வளவு செலவானாலும் இந்த கான்விக்ட் வார்டர்களை ஒழிப்பதில் ஏற்படும் நஷ்டம் அவர்களால் ஏற்படும் மனக்கஷ்டத்தை விட குறைவாகத்தான் இருக்கும் என்று சொல்லிஇருக்கிறார்.

மேலும் இன்று கைதிகள் சிறையில் அடிக்கப்படும்போது, எந்தக் காவலர் அடித்தாரோ அவர் மூலம்தான் புகார் செய்ய வேண்டும். எந்த வார்டர் அவரை அடித்தாரோ அவர் மூலம் தான் சூப்பிரன்டென்டுக்கு புகார் செய்யவேண்டும். அது சாத்தியமில்லை. எனவே ஒவ்வொரு பிளாக்கிலும், சீல் செய்யப்பட்ட மனுபோடும் பெட்டிகள் வைக்கப்படவேண்டும். அந்தப் பெட்டிகள் வாரம் ஒரு முறை நேராக அரசுக்குத்தான் செல்ல வேண்டுமே தவிர, அங்கே இருக்கின்ற சூப்பிரன்டென்டு கைக்குப் போகக் கூடாது. அந்த முறையிலே நம்பிக்கை வைக்கக் கூடிய வகையிலே செய்யவேண்டும். நேராக கவர்ன்மென்டுக்குத் தான் போக வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக ஒவ்வொரு மத்திய சிறையினை பார்வையிடும் அதிகாரத்துடன் சிறைக் கைதிகள் அவர்கள் மேல் அக்கறை கொண்டுள்ள எம். பி. எம். எல். ஏ. ஸ்தல கவுன்சிலர்கள் கொண்ட கமிட்டிகளை அமைக்கவேண்டும்.

(முற்பகல் 11.20)

அதேபோல், மாநிலத்தில் எந்தச் சிறையையும் பார்வையிடும் அதிகாரத்துடன் கூட எம். பி., எம். எல். ஏ,க்களைக் கொண்ட 'மாநிலக் கமிட்டி' என்று அமைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்,

சமீபத்தில் சுப்ரீம் கோர்ட்டில் இருந்து ஒரு கட்டளை மாநில அரசுக்கு வந்து இருக்கிறது. அது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். கைதிகளை நடத்துவதற்கான 'கெய்டுலைன்ஸ்' அனுப்பியிருக்கிறார்கள். அந்த 'கெய்டுலைன்ஸ்கள்' உடனடியாக நிறைவேற்றப்படவேண்டியவைகள், ஆனால் அதை இங்கே நீங்கள் அமல்படுத்தவில்லை என்பது தான் நான் அறிந்த வரையில் உள்ள நிலைமை. அதிலே தப்பு இருந்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது சொல்லட்டும். நான் அறிந்த வரையில், 'யு டிட் நாட் இம்பிளிமென்ட்.'

நான் அமைச்சர் அவர்களுக்கு ஒன்றைக் கூற விரும்புகிறேன். ஆபீசர்ஸ் அதையெல்லாம் விரும்பமாட்டார்கள். They will think that they are all shackles on their hands அவர்களுடைய சுதந்திரத்தின் மீது ஏதோ சங்கிலி போடுவது மாதிரி அவர்கள் நினைப்பார்கள். ஏனென்றால் அவர்களுக்கு ஒரு குறுக்குவழி தான் தெரியும். கைதி என்றால் அவன் மாற்றப்பட வேண்டியவன் என்பது எல்லாம் புத்தகத்தில்தான் இருக்கிறது. ஆனால் நடைமுறையில் என்ன நடைபெறுகிறது என்றால், என்னுடைய கையில் துப்பாக்கி இருக்கிறது. நினைத்தால் நான் போன் செய்வேன், போன் செய்தால் போலீஸ் வரும் ஆகவே குறுக்கு வழியில் சுட்டுக் கொள்வது, பினிஷ் பண்ணுவது என்பதுதான் அவர்களுடைய தியரி. சுட்டால் சாவு, அல்லது அடித்துக் கொலை செய்யப்பட்டால் அது தற்கொலை என்று ரிக்கார்ட் செய்வது என்கிற முறையைத் தான் அவர்கள் கடைபிடித்து வருகிறார்கள்.

மாரியப்பத் தேவர் கொலையைப் பொறுத்தவரையில் ஆரம்பத்தில் டாக்டர் ரிப்போர்ட் 'டெத் பை ஹேங்கிங்' என்பதாகும். ஆனால் அவரைக் கோர்ட்டிலே ஏற்றிக் குறுக்கு விசாரணை செய்கிறபோது, வாயில் நுரை வரவில்லை. காதிலே அது வரவில்லை, இதிலே இது வரவில்லை என்று சொல்கிறார். ஆகவே சுப்ரீம் கோர்ட்டின் கெய்டுலென்ஸ் அமல்படுத்தப்பட வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன். அதை இந்த மாநிலத்தில் ஏன் நீங்கள் அமல்படுத்தவில்லை, அப்படி அமல் நடத்த முடியாமல் இருப்பதற்கான காரணங்கள் என்ன என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன். மேலும் அந்த கெய்டுலைன்சில் எது அமல்படுத்தப்பட்டு இருக்கிறது என்றும் அறிய விரும்புகிறேன்.

இங்கேயிருக்கின்ற அரசாங்கத்திற்கும், ஆளும் கட்சிக்கும், நான் ஒரு எச்சரிக்கையை விடவிரும்புகிறேன். இந்த மன்றத்தில் உள்ள அனைத்து அமைச்சர்களும், அனைத்து உறுப்பினர்களும், இந்தப் பக்கத்தில் இருக்கக்கூடிய உறுப்பினர்களும், நன்றாக கவனிக்க வேண்டும். இதை நீங்கள் இப்போதே உணர்ந்து போர்க்கால அடிப்படையில் திருத்தி நடவடிக்கைகளை எடுப்பது நல்லது. Otherwise it will be to late when you realise.

நீங்கள் காலம் கடந்து உணர்வீர்கள். இப்போது நடவடிக்கை எடுக்கவில்லையென்றால், உணரவில்லை என்றால், பின்னாலே உணர்ந்தாலும் பலன் இல்லாமல் போய்விடும். அப்போது வருத்தப்படுவீர்கள். அதைத்தான் நம்முடைய நண்பர் சிட்டிபாபு அவர்கள் தன்னுடைய 'டைரி' மூலம் உலகத்திற்கு படம் பிடித்துக் காட்டியிருக்கிறார் அவர் சிறைக்கொடுமையை அனுபவித்த போது எழுதியதை உங்களுக்காக நான் 'கோட்' செய்ய விரும்புகிறேன். திரு. இஸ்மாயில் அறிக்கை பக்கம் 21-ல் அது சொல்லப் பட்டு இருக்கிறது, ''தி.மு.க. அமைச்சரவையில் சிறை



அமைச்சராக இருந்தவர், அப்பொழுதே சிறையைச் சீர்திருத்த எதுவும் செய்யவில்லை'' என்று தன்னுடைய டைரியில் சிட்டிபாபு எழுதியுள்ளார் என்று இஸ்மாயில் கமிஷன் அறிக்கையில் குறிப்பிடப் பட்டு இருக்கிறது.

இஸ்மாயில் கமிஷன் அறிக்கையில் 22-ம் பக்கத்தில் மேலும் சிட்டிபாபு எழுதியுள்ளதைப்பற்றி சொல்லப்பட்டு இருக்கிறது. ''நான் ஏற்கனவே கூறியபடி, சிறை சீர்திருத்தம் செய்ய தி.மு.க. அமைச்சர் போதிய கவனம் செலுத்தவில்லை என அமைச்சரைக் குறை கூறி எழுத சிட்டிபாபு தயங்கவில்லை''. அதைப்போலவே ஜஸ்டிஸ் இஸ்மாயில் கமிஷன் அறிக்கையின் பக்கம் 23-ல் சிட்டிபாபு டைரியில் எழுதியுள்ளது குறிப்பிடப்பட்டுள்ளது. ''நாமும் அதிகாரத்தில் இருந்தபோது செய்யவேண்டியதை செய்யவில்லை'' என்று வருத்தத்துடன் எழுதினார், சிட்டிபாபு என்று கூறப் பட்டுள்ளது. திரு. சிட்டிபாபு அவர்கள் சிறைக்குள்ளே இருந்த போது, அகங்காரமாக அந்த சிறை அதிகாரிகள் வருவதைப் பார்த்துவிட்டு, இதைக் குறிப்பிட்டு இருக்கிறார். 'நேற்று வரைக்கும் எங்களுடன் சொந்தக்காரர்கள் போல் காட்சி அளித்த வர்கள் இன்று அதிகாரிகளாக அகங்காரத்துடன் காட்சி அளிக்கிறார்கள்' என்று குறிப்பிட்டு இருக்கிறார் மறைந்த சிட்டிபாபு தன்னுடைய டைரியில் என்பதை நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

உங்களுக்கு இதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எங்களுக்கு இதைப்பற்றிக் கவலை இல்லை. நாங்கள் அவ்வப்போது அதிகாரிகளால் பிடிக்கப்படுகிறோம். சிறையில் கொடுமைப் படுத்தப்படுகிறோம். இன்றைக்கு நான் கைது செய்யப்படலாம். நாளைக்குக் காலையில் 'தற்கொலை செய்துகொண்டார் உமாநாத்' என்று கூட சொன்னாலும் ஆச்சர்யப்படுவதற்கு இல்லை. நாங்கள் அதற்குத் தயாராக இருக்கிறோம். அதற்கு நீங்கள் தயாரா இல்லை என்று சொல்ல நான் விருப்பவில்லை. உங்களுடைய வீரத்தை குறைத்து மதிப்பிட விரும்பவில்லை. இருந்தாலும் அதற்கு இடம் கொடுக்கக்கூடாது. நண்பர் சிட்டிபாபு அவர்களின் உணர்வை நீங்கள் உணர்ந்து இப்பொழுதே அத்தகைய நிலைமைகளைப் போக்குவதற்கான முறையில் அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதிலே 'பிரிஸ்டிஜ்' குவஸ்சன், பார்க்கக்கூடாது. சிட்டிபாபு சொல்லியிருக்கிறாரே என்று பார்க்கக்கூடாது. இது ஒரு சீரியஸ்ஸான மேட்டர். இதிலே நடவடிக்கை எடுக்க தயக்கம் காட்டினீர்கள் என்று சொன்னால், எதிர்காலத்தில் பல சிறைக்கொடுமைகளுக்கு, ஆயிரக்கணக்கான சிறைக்கொடுமைகளுக்கு வழிகோலியதாக ஆகிவிடும் என்று சொல்லி, இத்தகைய முறைகள் தவிர்க்கப்படுகின்ற வகையில் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்று சொல்லி, அதற்காக உத்தரவாதம் அளிக்கின்ற வகையில் பதில் இருக்கவேண்டும் என்று சொல்லி, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவரவர்களே, திருச்சி மத்திய சிறையில் இரண்டு ஆயுள் கைதிகள்—ஒருவர் கருப்பன், இன்னொருவர் பெயர் மாரியப்பதேவர்—இவர்கள் இரண்டு பேர்களும் 23-8-79 அன்றும் 28-8-79 அன்றும் மரணம் அடைந்தார்கள் சிறைக்குள்ளே. இவர்கள் இறந்துபோன காரணம் குறித்து தமிழக அரசு, அகில இந்திய அண்ணா தி.மு.க. ஆட்சி நீதிபதி முருகேசன் அவர்களைக் கொண்டு விசாரணைக் கமிஷன் நியமித்தது. அந்த விசாரணைக் கமிஷனுடைய தீர்ப்புகள் அடங்கிய அறிக்கை இந்த மன்றத்திலே வைக்கப்பட்டு இப்போது இங்கே விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சிறை அதிகாரிகள் இந்த இரண்டு ஆயுள் கைதிகளுடைய மரணத்தைப்பற்றி என்ன சொல்கிறார்கள் என்றால் கருப்பன் என்ற ஆயுள் கைதி இன்னொரு ஆயுள் கைதியின் போர்வையைத் திருடிவிட்டார். விசாரணைக்குப் பயந்து வேப்பமரத்திலே தூக்கிலே தொங்கினார். எனவே கருப்பன் மாண்டது தூக்கிலே தொங்கிதான்., தற்கொலைதான் காரணம் என்று சிறை அதிகாரிகள் சார்பாகச் சொல்லப்படுகிறது.

அதைப்போலவே இரண்டாவதாக மாண்டு போனவர் மாரியப்பத்தேவர் என்ற ஆயுள் கைதி. அவர் எப்படி இறந்தார் என்றால் சிறையில் இருக்கிற அவருக்குப் பக்கத்தில் இருக்கிற 'கிளோஸ்ட் செல் நம்பர் 37'–ல் துண்டை பயன்படுத்தி தூக்குப் போட்டு இறந்துபோனார் என்று சொல்லப்படுகிறது. ஆக கருப்பனும் அதைப்போல மாரியப்ப தேவரும்—இந்த இரண்டு ஆயுள் கைதிகளும் தற்கொலை செய்துகொண்டார்கள், தூக்குப் போட்டுக்கொண்டு இறந்தார்கள் என்று சிறை அதிகாரிகள் காரணம் சொல்கிறார்கள்.

ஆனால் அந்தச் சிறையிலே இருக்கிற மற்ற கைதிகள் எல்லாம் அதற்கு வேறு ஒரு காரணத்தைச் சொல்கிறார்கள். கருப்பன் என்ற ஆயுள் கைதியும் மாரியப்பத்தேவர் என்ற ஆயும் கைதியும் அடித்தே கொல்லப்பட்டார்கள் என்று அவர்கள் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்கள், இதில் வேடிக்கை என்னவென்றால் கருப்பன தற்கொலை செய்யவில்லை; அப்படிச் சொல்வது உண்மையல்ல; அவர் அடித்தே கொல்லப்பட்டார் என்று திருச்சி மத்திய சிறையில் இருக்கிற கைதிகள் எல்லாம் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவருடைய பிணத்தைக் காட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். சிறை அதிகாரிகள் அதை மறுத்துவிட்டார்கள். அதன் காரணமாக அவர்கள் அங்கே உண்ணாவிரதம் இருந்த போது அந்த சிறைக்குள்ளே வெளியிலே இருந்து போலீஸ் அழைக்கப்படுகிறது. அங்கே தடியடிப்பிரயோகம் மத்திய சிறையில் நடைபெறுகிறது; கண்ணீர்ப்புகை பிரயோகம் நடைபெறுகிறது. அந்த நான்கு சுவர்களுக்குள்ளே தடியடிப்பிரயோகம் நடக்கிறது. கண்ணீர்ப்புகை பிரயோகம் நடக்கிறது, துப்பாக்கிப் பிரயோகம் நடக்கிறது. அதிலே பலர் காயம் அடைந்தார்கள்; அவர்கள்



மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்கள். சிலர் கண் பார்வை இழந்தார்கள். சிலர் கேட்கும் ஆற்றலை இழந்தார்கள். அதைப் பற்றி எல்லாம் அவர்கள் அங்கே நீதிபதி முன்னால் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அந்த நீதிபதி முருகேசன் அவர்கள் தன்னுடைய அறிக்கையிலே, இந்த அரசாங்கம் என்னை இதுகுறித்து விசாரிக்கச் சொல்லவில்லை, 'டேர்ம்ஸ் ஆஃப் ரெஃபரன்ஸ்'-சிலே சொல்லவில்லை; கைதிகள் மீது தாக்குதல் நடைபெற்றது பற்றி நான் விசாரிக்க வரவில்லை; ஆனால் நடைபெற்றது என்று கைதிகள் சொல்கிறார்கள்; நான் என்ன செய்வது என்று சொல்லுகிறார்.

நான் கேட்கிறேன். இந்த சர்க்காரை கேட்கிறேன். நடைபெற்ற தாக்குதல் பற்றி கமிஷனிடம் கைதிகள் சொல்கிறார்கள். ஆனால் கமிஷன் அதை விசாரிக் வரவில்லை என்கிறது. இரண்டு ஆயுள் கைதிகள் மரணம்; அதிலே சந்தேகமிருப்பதால் விசாரணைக் கமிஷன் நியமித்தோம் என்று சொல்கிறவர்கள் இந்த கலவரங்களைப்பற்றி விசாரிக்க ஏன் விசாரணைக்கமிஷன் நியமிக்க வில்லை? மாண்புமிகு உமாநாத் அவர்கள் இதற்குக்கூட விசாரணைக் மிஷன் தேவை, வேண்டுமென்று கேட்டார்கள். துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றதற்கு, தடியடிப்பிரயோகம் நடைபெற்றதற்கு, கண்ணீர்ப்புகை பிரயோகம் நடைபெற்றதற்கு நீதிவிசாரணை வேண்டுமென்று கேட்டார்கள். ஆனால் அதுபற்றி விசாரிக்கவில்லை. அந்தக் கொடுமைகளுக்கு காரணமான அதிகாரிகள் யார், யார்? அந்தக் குற்றங்களைச் செய்தவர் யார்? இந்த சர்க்கார் அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி எடுத்தால்தான், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்தால்தான் சிறையிலே இத்தகைய சம்பவங்கள் நடைபெறாமல் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீதிபதி இந்த இரண்டு ஆயுள் கைதிகள் பற்றி விசாரித்து, மரணமா அல்லது தற்கொலையா என்று விசாரிக்கத் தொடங்கி. அவர் ஒரு முடிவுக்கு வருகிறார். ஆயுள் கைதிகள் தற்கொலைதான் செய்து கொண்டார்கள், என்று சொல்கிறார். போர்வையைத் திருடிய கருப்பன் அவமானம் தாங்காமல் தற்கொலை செய்து கொண்டார். அதுமட்டுமல்ல. 1975-லே கருப்பன் தற்கொலை செய்துகொள்கிற மனோபாவத்தில் முயற்சி செய்தார்.

[முற்பகல் 11.30]

பினாயிலைச் சாப்பிட்டுச் சாவதற்கு முயற்சி செய்தார். ஆகவே அவருடைய மனோநிலை ஒரு தற்கொலை மனோநிலை, அப்படிப் பட்ட மனோநிலை ஏற்கெனவே அவருக்கு இருந்திருக்கின்றது. எனவே கருப்பன் தற்கொலைதான் செய்துகொண்டார், வேப்ப மரத்திலே தொங்கினார் என்பதை ஒப்புக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்று சொல்லி கைதிகளுடைய சாட்சியங்கள் முன்னுக்குப் பின் முரணாக இருக்கின்றன என்று சொல்லி கருப்பனுடைய சாவு, அந்த ஆயுள் கைதியினுடைய சாவு தூக்கிலு

போட்ட சாவுதான், தற்கொலைதான் என்று நீதிபதி முருகேசன் முடிவுக்கு வருகிறார். ஆனால் ஆயுள் கைதி மாரியப்ப தேவரைப் பற்றி சொல்கிறபோது நீதிபதி முருகேசன் சொல்கிறார், இது தற்கொலை அல்ல தூக்கு என்று சொல்வது தவறு, மருத்துவரின் சான்றிதழ் இது தூக்குதான் என்பதை நிரூபிக்காமல் அடித்துக் கொல்லப்பட்டதற்கான காயங்கள் மற்றும் ஏராளமான சான்றுகள் இருக்கின்றன.

அதுமட்டுமல்லாமல், 37-வது செல்லில் க்ளோஸ்ட் பிரிசினில் அந்த ஆயுள் கைதி மாரியப்ப தேவர் துண்டைப் பயன்படுத்தி தூக்குப் போட்டார் என்ற வாதமே தப்பானது. காரணம் அவர் சொல்கிறார். மெட்ராஸ் பிரிசன் அன்ட் ரீஃபர்மேட்டரி மேனுவல் விதியின் 301-ன்படி துண்டு அணிவது சிறைச்சாலைக்குள்ளே சட்டவிரோதமானது அரைஞான் கயிறு கூட செல்லின் உள்ளே கட்டுவதற்கு அனுமதிக்கமாட்டார்கள். எனவே இந்த விதிகளுக்குப் புறம்பாக உள்ளே ஒரு கைதி துண்டை அணிந்திருக்க முடியாது. அதுமட்டுமல்ல. இந்த சிறைச்சாலையை ஒரு விசாரணைக்குழு பார்வையிடுகிறது. அந்த விசாரணைக்குழு அரசியல் வாதிகளைக் கொண்ட குழுவல்ல, ஒரு பொதுவான குழு. அந்த குழு சொல்கிறது , மாரியப்ப தேவர் துண்டு அணிந்திருந்தார் என்ற கூற்று உண்மை அல்ல. காரணம் அதே ப்ளாக்கிலே அதே க்ளோஸ்ட் பிரிசனில் இருக்கக்கூடிய செல்களில் உள்ள மற்ற கைதிகளை நாங்கள் பார்வையிட்டோம். அங்கே அவர்கள் துண்டு அணிந்திருக்கவில்லை, ஆகவே துண்டு அணிந்திருந்தார் என்று சொல்கிற வாதம் தப்பானது என்ற தெளிவான முடிவுக்கு வந்து இந்த மாரியப்ப தேவருடைய மரணம் சந்தேகத்திற்குரியது, வேறு வார்த்தைகளில் சொல்வது என்று சொன்னால் இது தற்கொலை அல்ல, அடித்து காயப்படுத்தப்பட்டு மரணம் சம்பவித்திருக்கிறது என்ற அர்த்தத்தை உறுதிபடுத்துகின்றது என்ற விதித்திலே நீதிபதி முருகேசன் அவர்கள் தெளிவான தீர்ப்பை வழங்கி இருக்கிறார்கள். இதிலே என்ன வேடிக்கை என்று கேட்டால் இந்தத் தீர்ப்பை இந்த அறிக்கையை இந்தச் சர்க்கார் ஒப்புக்கொள்கிறது. இதிலே சாட்சியங்கள் தவறாக இருக்கின்றது என்றோ அல்லது டாக்டருடைய எவிடென்ஸ் ஒரு மாதிரியாக இருக்கின்றது என்றோ இந்த சர்க்கார் ஒரு முடிவுக்கு வரவில்லை. பால் கமிஷன் அறிக்கையின்போது டாக்டர் கோபாலகிருஷ்ணனின் சாட்சியம் எக்ஸ்பர்ட் எவிடன்ஸ் அல்ல என்று வாதிட்ட இந்த சர்க்கார் இங்கே இருக்கக்கூடிய டாக்டர் கொடுத்த எவிடன்ஸை அப்படியே ஏற்றுக்கொள்கிறது. பால் கமிஷன் அறிக்கையில் சுப்பிரமணியபிள்ளை செத்துப் போனதற்குக் காரணம் அடித்துக் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்பதற்கு ஆதாரமாக எந்த டாக்டர் கோபாலகிருஷ்ணன் எவிடென்ஸ் கொடுத்தாரோ அவர் சரியான டாக்டர் அல்ல, கைகள் நடுங்குகின்ற டாக்டர், அவரை ஒப்புக்கொள்ள முடியாது என்று மற்ற மாநிலத் தீர்ப்புகளை எல்லாம் காட்டிப் பேசிய இந்த சர்க்கார், அறிக்கைக்கு மேல் அறிக்கை வைத்த இந்த சர்க்கார் இந்தத் தீர்ப்பையும், டாக்டர் சாட்சியத்தையும் அப்படியே ஒப்புக்கொள்கிறது.



அப்படி ஒப்புக்கொண்டதற்குப் பிறகு நான் ஒன்று கேட்கிறேன், என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்? மாரியப்ப தேவருடைய மரணத்திற்குக் காரணமான அந்தச் சிறை அதிகாரியின் மீது இந்தச் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? புலன் விசாரணை உண்டா? கைதுகள் உண்டா? வழக்கு உண்டா? டிப்பார்ட்மென்டல் ஆக்‌ஷன் உண்டா? இருந்தால் அமைச்சர் இந்த அவையிலே தெரிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்திலே வருத்தத்தோடு ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன். குற்றவாளிகள் யாராக இருந்தாலும் தப்பக் கூடாது. இந்தப் பிரச்னையில் இந்த சர்க்கார் தயக்கம் காட்டக் கூடாது. இஸ்மாயில் கமிஷன் பற்றி நண்பர் உமாநாத் அவர்கள் கூட சுருக்கமாகச் சொன்னார்கள் அமைச்சரின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன், மிசா இருந்த காலம் அது. அவசரப் பிரகடனம் அமலில் இருந்த நேரம் அது. சென்னை மத்திய சிறைச் சாலையிலே பல கொடுமைகள் இழைக்கப்பட்டன. முரசொலி மாறன், ஸ்டாலின், ஆற்காடு வீராசாமி, சித்தரபதி போன்றவர்களும், கழகத் தோழர்களும், கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்தவர்களும், அரசியல் இயக்கத்திலே இல்லாதவர்களும், திராவிட சமூகத்தைச் சேர்ந்த சம்பந்தம் போன்றவர்களெல்லாம் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள். சிறுத்தையாக சிறைக்குச் சென்ற சிட்டிபாபு அவர்கள் செத்த பிணமாக வருவதற்கான சூழ்நிலைகள் எல்லாம் அங்கே நடைபெற்றது. ஆனால் அந்த நீதிபதி இஸ்மாயில் தன்னுடைய தீர்ப்பிலே தன்னுடைய அறிக்கையிலே என்ன சொல்கிறார் என்று சொன்னால்—நான் சுருக்கமாக உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். 1976 ஆம் ஆண்டு சிறைச்சாலையில் காவல் கைதிகள் அடிக்கப்பட்டது, துன்புறுத்தப்பட்டது, இழிவாக நடத்தப்பட்டது ஆகியவற்றுக்கு மத்திய சிறைச்சாலை கண்காணிப்பாளர் திரு. வித்தியாசாகரன் தான் பொறுப்பு என்பது முந்திய அத்தியாயங்களில் நான் குறிப்பிட்டுள்ள முடிவுக்குத் தெளிவாகத் தெரியவருகின்றது.

1976 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1 ஆம் நாள் மாலை சென்னை மத்திய சிறைச்சாலையில் திரு. வித்யாசாகர் இருந்தார், அப்போதிருந்த ஜெயிலர் திரு. கையூமின் உதவியோடு மேற்சொன்ன காரியங்கள் அனைத்திற்கும் ஏற்பாடு செய்தார். 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2 ஆம் நாள் இரவு காவல் கைதிகள் அடிக்கப்பட்டபோது அவர் அங்கு இருந்தார். அவர் அதை மேற்பார்வையிட்டார் என்று என்னால் பதிவு செய்யப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ளது. சென்னை மத்திய சிறைச்சாலையில் அப்போதிருந்த கண்காணிப்பாளர் வித்யாசாகருக்குத் தெரியாமல். அவருடைய இசைவு இல்லாமல் அவைகள் நடைபெற்றிருக்கலாம் என்று கூறுவது ஏலாததாகும் என்று வித்யாசாகர் என்ற துறை கண்காணிப்பாளர்தான் அவ்வளவு கொடுமைகளுக்கும் காரணமான குற்றவாளி என்று இஸ்மாயில் கமிஷன் தீர்ப்பில் 181வது பக்கம் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதைப்போலவே சிறைச்சாலையில் அன்றைக்கிருந்த ஐ.ஜி. அவர்களைப் பற்றி. அதே இஸ்மாயில் கமிஷன் சொல்கிறார். 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1 ஆம் தேதியன்று, மத்திய சிறைக்கு கொண்டுவரப்பட்ட காவல் கைதிகளுக்கு ஒழுங்காக இடம் அளிக்கப்படாத .. (குறுக்கீடு)

திரு. ந. வீராசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையிலே இஸ்மாயில் கமிஷன் ரிப்போர்ட்டின் மீது விவாதம் நடைபெறுகிறதா? முருகேசன் கமிட்டி ரிப்போர்ட்டின் மீது விவாதம் நடைபெறுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவர் அவர்களே, இப்படிப் பட்ட நடவடிக்கை எடுக்கிறோம் என்ற உங்கள் நல்ல எண்ணத்தை காட்டுவதான கமிஷன்களின் ரிப்போர்ட்டுகள் எப்படி இருக்கிறது என்பதை கோடிட்டுக் காட்டுவதற்காகத் தான் இவைகளைச் சொன்னேன். அவர்கள் மீது எல்லாம் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுத்திருகிறீர்கள் அந்த வித்யாசாகரன் அவர்களை டி.ஐ.ஜி. ஆக்கியிருக்கிறீர்கள். அவர் அவ்வாறு டி.ஐ.ஜியக ஆக்கப்பட்டதற்குப் பிறகு, பலபேர் மீது பழி வாங்குகிற முறையில் சஸ்பெண்ட் போன்ற வேலைகளை செய்து கொண்டிருக்கிறார்.

அதைப்போலவே இன்னொருவருக்கும் பதவி உயர்வு கொடுக்கக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். அதற்குள் நான் போக விரும்பவில்லை. இந்த முருகேசன் கமிஷனுடைய அறிக்கையின் அடிப்படையில் நீங்கள் நடவடிக்கை எடுக்கின்ற முயற்சியில் ஈடுபடுவீர்களா என்பதே சந்தேகத்திற் குரியதாக இருக்கிறது. அதற்காகத்தான் நான் அதை கோடிட்டுக் காட்டினேன். உங்களுக்கு வேண்டிய அதிகாரி என்பதற்காக காப்பாற்றாதீர்கள் காரணம் தவறு செய்பவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

பால் கமிஷன் அறிக்கை சம்பந்தமாக சதாசிவம் கைது செய்யப் பட்டார். கோர்ட்டிலே வழக்கு இருக்கிறது. அதற்குள்ளே நான் போக விரும்பவில்லை. ஆனால் தவறு செய்கிற அதிகாரி கள் தண்டிக்கப்படுகிறார்களா என்றுதான் கேட்கிறேன். முருகேசன் கமிட்டி அறிக்கையிலே தவறு செய்திருக்கிறார்கள் என்று கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கிற அதிகாரிகள் மீது நட வடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் உங்களுடைய கடந்த காலச் செயல்கள் அப்படி இல்லை என்று கோடிட்டுக் காட்டுவதற் காகத்தான் சொல்கிறேன்.

மருத்துவக் கல்லூரி தேர்வுப் பட்டியல் வேண்டுமென்றே புத்தகம் செய்யப்பட்டு, மாற்றம் செய்யப்பட்டு, பொய்த் தகவல்கள் பொய் சாட்சிகள், ஃபால்ஸ் எவிடன்ஸ்கள் கோர்ட்டிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. தேதி மாற்றத்தை தகவண்டும் என்றே செய்திருக்கிறார்கள். தப்பாக கொடுத்திருக்



கிறார்கள் என்று குற்றம் சாட்டி மெட்ராஸ் ஹைகோர்ட் கண்டனம் அளித்தபோது அட்வகேட் ஜெனரல் அவர்கள் நீதி மன்றத்திலேயே எழுந்து, அந்தத் தவற்றுக்கு காரணமானவர்கள் யாராக இருந்தாலும். எந்த அதிகாரியாக இருந்தாலும், அவர்கள் மீது நடவடிக்கை எடுப்போம் என்று அன்றைக்கு உங்கள் சார்பாகச் சொன்னார். முதலமைச்சரும் சொன்னார். அந்தத் திருத்திய பட்டியலைக் கொடுத்த தப்பான தகவல்களை கொடுத்த அந்த அதிகாரிகள் மீது இதுவரைக்கும் நடவடிக்கை எடுத்திருக்கிறீர்களா என்று கேட்க விரும்புகிறேன்?

நான் இன்னொன்றையும் கேட்க விரும்புகிறேன். எஸ்,ஐ. செலக்ஷனில் ஊழல் நடைபெற்றிருக்கிறது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே சொன்னார். அந்த ஊழலைச் செய்தது யார்? அந்த அதிகாரியின் பெயரைச் சொல்ல முடியுமா அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியுமா என்று கேட்ப தோடு, முருகேசன் கமிட்டி பரிந்துரை செய்த குற்றவாளிகள் மீது நீங்கள் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இது வரையில் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்பதையும் அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும்.

ஆனால் அதே நேரத்தில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன் உங்களுக்குச் சாதகமான கமிஷனாக இருந்தால் எவ்வளவு சீக்கிரமாக, கடுமையாக நடவடிக்கை எடுக்கிறீர்கள். நாயுடு கமிஷனை எடுத்துக் கொண்டால் காடம்பாறையில் வேலை பார்த்த தொழிலாளர்கள். சி.ஐ.டி.யூ.வைச் சேர்ந்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு எல்லாம் சீனியாரிட்டியை ஓவர் லுக் செய்து வேலை போடப் பட்டது என்ற குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்ட போது அதை போர்டுக்கு பெயர் செய்யுங்கள் என்று நாயுடு கமிஷன் சொல்லி யதற்கு உடனடியாக ஆக்ஷன் எடுத்தீர்கள். ஆனால் ஏதாவது விசாரித்தீர்களா கிடையாது. மாறாக உடனேயே எந்தவிதமான விசாரிப்பும் இல்லாமல் அவர்கள் அத்தனை பேரையும் ரிவர்ட் செய்தீர்கள் அது மட்டும் அல்ல. புதிதாக 80—க்கும் மேற்பட்ட வர்களை அந்த இடங்களிலே போட்டிருக்கிறீர்கள். அதையாவது சட்ட ரீதியாக செய்தீர்களா என்றால் இல்லை. எந்த சீனியாரிட்டி ஓவர் லுக் செய்யப்பட்டது என்று சொன்னார் களோ. அந்த சீனியாரிட்டியை ஓவர்லுக் செய்து இதை செய்திருக்கிறீர்கள். அதற்கான வழக்கும் நீதிமன்றத்திலே இருக்கிறது. அதனால் நான் அதற்குள் போக விரும்பவில்லை. ஆகவே நான் சொல்ல விரும்புவது இதற்காவது நீங்கள் முறையாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான். அடுத்து நான் ஒன்றை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நீங்கள் நியாயமாக நடந்து கொள்கிறீர்களா என்று கேட்டால் இல்லை.

[முற்பகல் 11.40]

நான் கேட்கிறேன். திண்டுக்கல்லில் ஒரு டி.எம்.ஓ. அப்ஸல்கான், அந்த மருத்துவ அதிகாரி ரூ. 100 லஞ்சம் வாங்கியதாக குற்றச்சாட்டு. அந்த அதிகாரி தவறு செய்திருக்கிறாரா இல்லையா என்று விசாரிப்பதற்காக ஒரு கமிஷன் போட்டீர்களே. ஞாபகம் இருக்கிறதா? திரவியம் கமிஷன் போட்டீர்கள். இந்த சர்க்கார்—ஸீஸரின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவர்களாக இருக்க வேண்டும். குற்றம் செய்தவர்களை தப்பவிட மாட்டோம் என்று சொன்னீர்கள். திரவியம் கமிஷன் அறிக்கை வைக்கப்படாததன் மர்மம் என்ன என்று நான் கேட்கிறேன். அதில் அப்ஸல்கான் நிரபராதி என்று சொல்லப்பட்டிருக்கிறதா என்று கேட்கிறேன், அப்ஸல்கான் அவர்கள் மீது அநியாயமாக குற்றச்சாட்டு சுமத்திய போலீஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று அந்தக் கமிஷன் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறதா என்று கேட்கிறேன். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். எந்த மருத்துவ அதிகாரி மீது ரூ. 100 லஞ்சம் வாங்கியதாக குற்றம் சாட்டினார்களோ அந்த அப்ஸல்கான் இன்றைக்கு இல்லை. அந்த அப்ஸல்கான் அவமானத்தின் காரணமாக இந்த உலகை விட்டே போய் விட்டார். இன்று அவரது குடும்பம் நடுத்தெருவில் நின்று கொண்டிருக்கிறது. ஒன்றரை ஆண்டுகளாகின்றன. அந்தக் கமிஷன் இன்றைக்கு நம் சர்க்காரின் தலைமைச் செயலாளராக இருக்கிற திரு திரவியம் அவர்கள் தலைமையில் போடப்பட்ட கமிஷன் கமிஷன் அறிக்கை கொடுத்து ஒன்றரை ஆண்டுகளாகின்றன. திரவியம் கமிஷன் அறிக்கையை ஏன் இந்தச் சட்டமன்றத்தில் வைக்கவில்லை என்று கேட்கிறேன். பயப்படுகிறீர்களா, அஞ்சுகிறீர்களா, அமைச்சர் அவர்கள் விளக்கம் தரவேண்டும் என்று கேட்கிறேன். இதைச் சொல்வதின் நோக்கம் முருகேசன் கமிஷன் அறிக்கைக்கு அந்த நிலைமை வந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான். (மணியடிக்கப்பட்டது)

அதேபோல் நான் இன்னொன்றையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்தக் கமிஷன் ரிப்போர்ட்டிங் மீது சரியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இந்தச் சர்க்கார் பல்வேறு கமிஷன்களைப் போட்டிருக்கிறது. அப்பு மறைவுக்காக கமிஷன் போட்டீர்கள். அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? வெங்கட்ராமன் கமிஷன் போட்டீர்கள் தூத்துக்குடியில் டூரிங் டாக்கீஸில் பல பிணங்கள் விழுந்தன. தீ விபத்து காரணமாக, இது குறித்து என்ன நடவடிக்கைகள் எடுத்தீர்கள்? வள்ளியூரில் விவசாயக் கிளர்ச்சியின் போது தாய்மார்கள் பலர் கொடுமைப் படுத்தப்பட்டார்கள். பல தாய்மார்கள் போலீஸ் லாக்கப்பில் வைக்கப்பட்டார்கள். ஒரு படித்த பெண்மணியைப் பார்த்து இங்கிலீஸ் படித்த விபசாரியா என்று போலீஸார் கேட்டிருக்கிறார்கள். அதற்காக சதாசிவம் கமிஷன் போட்டீர்கள்.



அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? ஹால்டாவில் துப்பாக்கிச் சூடு நடைபெற்ற சம்பவம் உங்களுக்கு ஞாபகம் இருக்கும். அதற்கு சோமசுந்தரம் கமிஷன் போட்டீர்கள். திராவிடக் கழக பொதுச் செயலாளராக இருந்த தந்தை பெரியார் அவர்களின் ஐயாவின் பாசத்திற்குரிய மணிஅம்மையார் அவர்களிடம் அன்றைக்கு ஒரு போலீஸ் அதிகாரி காலித்தனமாக தவறாக நடந்தது தப்பு என்ற குற்றச்சாட்டின் பேரில் அவர் மீது சர்க்கார் நடவடிக்கை எடுக்கலாம் என்று சோமசுந்தரம் சொல்லியிருக்கிறார். அது குறித்து என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்?

இன்னொன்றையும் நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நீங்கள் நினைத்துப்பார்க்க வேண்டும். நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். முருகேசன் கமிஷன் அறிக்கையை வைத்திருக்கிறீர்கள், நடவடிக் கைகள் எடுப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள்.

திரு. ஆர். மணிமாறன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்றைய நிகழ்ச்சிநிரல்படி முருகேசன் கமிஷன் அறிக்கை மீதுதான் விவாதம் நடந்து கொண்டிருக்கிறதாக நாங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறோம். இது அந்தக் கமிஷன் விவகாரமா அல்லது ஒட்டு மொத்தக் கமிஷன்கள் விவகாரமா என்பதைப் பற்றி மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் பதிலுரை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: முருகேசன் கமிஷன் அறிக்கை பின்பற்றிப் பேசுவார்கள்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே. முருகேசன் கமிஷன் போடப்பட்டிருக்கிறது. அதன் அறிக்கை மீது சர்க்கார் நடவடிக்கை எடுப்பதற்கு ஒப்புக் கொள்வதாகச் சொல்லியிருக்கிறது. எனக்கு சர்க்கார் இதன் மீது நடவடிக்கை எடுக்காது என்ற சந்தேகம் ஏற்படுகிறது. ஏன் சந்தேகம் ஏற்படுகிறது என்று சொன்னால் இந்தச் சர்க்காரால் பல்வேறு கமிஷன்கள் போடப்பட்டுள்ளன. அவைகள் மீது நடவடிக்கை எடுக்கிறதா என்று கேட்கிறேன். ஏன் திரவியம் கமிஷன் அறிக்கையை சபையில் வைக்கவில்லை என்று உங்கள் மீது குற்றச்சாட்டு சுமத்தி விளக்கம் பெறுவதற்காக இந்த ஒப்புவமையை சொன்னேனே தவிர இது சம்பந்தப்படாத பிரச்னை என்றால் நிச்சயமாக நான் பேச மாட்டேன் என்பதை துணைத் தலைவர் அவர்களுக்கு பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, அதேபோல் சட்டமன்ற மேலவையில்கூட நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காஞ்சீபுரத்தில் பெரியவர் சங்கராச்சாரியார் அவர்கள் கொடுத்த தங்கவேல். அன்றைக்கு பெரியவர் அவர்கள் காஞ்சிபுரத்தில் கொடுத்த அந்த வேல்

திருத்தனி கோவிலுக்குத் தரப்பட்டது. அது திடீரென்று மாயமாக மறைந்துவிட்டால் அந்தக் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க கமிஷன் போடுகிறோம் என்று சொன்னார்கள். நடராஜ கமிஷன்; அந்த அறிக்கை விரைவில் வைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள், திரு. வீரப்பன் அவர்கேள் மேலவையில் குறிப்பிட்டார்கள். நான் கேட்கிறேன். அந்தக் கமிஷன் அறிக்கையை இங்கே வையுங்கள். விவாதத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள். ஏனென்றால் அதிலே பல்வேறு பிரச்னைகள் மக்களுக்கு சென்றடைய வேண்டும். அந்தக் கமிஷன் அறிக்கையை நீங்கள் இங்கே வைப்பீர்களா என்று கேட்க விரும்புகிறேன்.

அதேபோல் இந்த முருகேசன் கமிஷன் அறிக்கையில் சிறைச் சாலைகள் சம்பந்தமாக— திரு. மணிமாறன் அவர்களுக்காகச் சொல் கிறேன், சில ரிபார்மேஷன்ஸ், சிறைச்சாலைகள் சிறப்பாக இருக்க வேண்டும் என்று சொன்னால் என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டும் என்று கொடுத்திருக்கிறார்கள்.

ஆகவே, அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் இருக்கக் கூடிய சிறைகளில் 3,000-க்கு மேற்பட்ட கைதிகள் விசாரணை யின்றி, விசாரணைக் கைதிகளாக இருக்கிறார்கள். சந்தேகத்தின் பேரால் கைது செய்யப்பட்டு உள்ளே இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், அவர்களை சிறையிலே 15 நாட்களுக்கு மேல் ரிமாண்டிலே வைக்கக்கூடாது. வைக்க முடியாது. அதேபோல், சாதாரண குற்றமாக இருந்தால் 2 மாதங்களுக்கு மேல் இருக்கக் கூடாது. அதற்குமேல் இருக்கவேண்டுமானால், கொலைக் குற்றம் செய்தவர்களாக இருந்தால், 3 மாதங்கள் ரிமாண்டிலே வைக்கலாம். ஆனால், இன்றைக்கு ஆண்டுக் கணக்கில் சிறையிலே விசாரணைக் கைதிகளாக 5,000-க்கும் மேற்பட்டவர்கள் சந்தேகத்தின் பேராலே உள்ளே வைக்கப்பட்டிருக்கிறார்கள். நாளை அவர்களில் ஒருவர் ஹை கோர்டில் ஹேபியஸ் கார்பஸ் சட்டத்தின்கீழ் மனு போட்டால், உடனே 24 மணி நேரத்திற் குள்ளாக ஜெயில் சூபரின்டென்ட் அல்லது அங்கே இருக்கக்கூடிய அதிகாரி அந்தக் கைதியை ஹை கோர்டிலே புரட்டியூஸ் செய்ய வேண்டும். இத்தகைய குற்றத்திற்கு அவர்கள் பலியாக வேண்டி யிருக்கிறது.

சிறை அதிகாரிகளுக்கு போதிய வசதிகள் இல்லை. அதற்கு என்ன காரணம்? உங்களுடைய சர்க்கார் அவர்களுக்கு ஜீப் வாகனம் கொடுக்கவில்லை. உங்களுடைய சர்க்கார் அவர்களுக்கு எஸ்கார்ட் என்று சொல்லக்கூடிய போலீஸ் கொடுக்கவில்லை. உங்களுடைய சர்க்கார் கோர்டுகளில் முறையாக பப்ளிக் பிராசி கியூட்டர், அதைப்போலவே அடிஷனல் பப்ளிக் பிராசிகியூட்டர் களை நியமிக்கவில்லை. இன்னும் சொல்ல வேண்டுமென்றால், நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 36 நீதிமன்றங்களில் மாஜிஸ்திரேட்டுகள் இல்லை என்று சொல்லப்படுகிறது; 6 முன்சீப் கோர்டுகளிலே நீதிபதி இல்லை என்று சொல்லப்படுகிறது. இந்த லட்சணத்தில் எப்படி



களுக்கு நீதி கிடைக்கும்; எப்படி நியாயம் கிடைக்கும்? னவே, நான் கேட்டுக் கொள்ள விரும்புவதெல்லாம், இந்தச் றைச்சாலைகளைப் பற்றி இந்த முருகேசன் கமிஷனைப் பற்றிப் சுகின்ற நேரத்தில், விசாரணைக் கைதிகளையெல்லாம் _னே விடுதலை செய்ய வேண்டும். அல்லது கோர்டுக்குக் காண்டுபோய் அவர்களுக்குத் தீர்ப்பு வழங்குவதற்கான ற்பாட்டைச் செய்யவேண்டும். இதை இந்த சர்க்கார் சிறை திகாரிகள் மூலம் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, முருகேசன் கமிஷன் மேலும் பல்வேறு சிபார்சுகளைச் செய்திருக்கிறது. இன்றைக்கு வார்டர்கள் என்று சொல்லக் கூடியவர்கள் உள்ளே இருக்கிறார்கள், அவர்களைப் பொறுத்த வரையில் நீக்கப்பட வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அங்கே உள்ளே இருக்கும் இந்த கான்விக்ட் வார்டர்கள் தவறு செய்கிறார்கள் என்பதற்காக, இந்த முறையே கூடாது என்று சொல்வது முறையல்ல. அவர்கள் அவசரத்தின் காரணமாக அல்லது உணர்ச்சிவசப்பட்டு கொலை செய்திருக்கலாம். ஆனால், உள்ளே இருக்கும்போது அவர்கள் மனிதாபிமானத்தோடு இருக் கிறார்கள். அதை மறந்துவிடமுடியாது. இலங்கைத் தமிழர்கள் பிரச்னையில், எங்களைப் போன்றவர்கள் சிறைக்குள்ளே இருந்தோம். அன்றைக்கு அந்த கான்விக்ட் வார்டர்கள் எவ்வளவு மனிதாபிமானத்தோடு இருந்தார்கள் என்பதை எங்களால் காண முடிந்தது. சில இடங்களில் தவறுகள் இருக்கலாம். அதற்காக அந்த முறையை நீக்குவது என்பது முறையல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு சிறையிலே போதுமான அலுவலர்கள் இல்லை எனவே அதை அதிகமாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு மட்டுமல்ல. பல்வேறு வசதிகள் அங்கில்லை. அங்கே வேலை பார்க்கிற அதிகாரிகள், வார்டர்கள் ரௌண்ட் தி கிளாக் என்று சொல்வார்களே, அதைப்போல் 24 மணி நேரமும் வேலைசெய்ய வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு 8 மணி நேரம் வேலை என்றிருக்க வேண்டும். சம்பள உயர்வு போன்றவைகளையெல்லாம் இந்த சர்க்கார் வழங்கவேண்டும். இப்போது ஹெலிகாப்டர் வாங்கி, மக்கள் குறைகளையெல்லாம் கேட்பதற்கு முயற்சி எடுக்கின்ற அதே நேரத்தில், இதுபோன்ற காரியங்களையும் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து, நான் அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். பாரதி விழாவை நீங்கள் கொண்டாடு கிறீர்கள். ரொம்பவும் மகிழ்ச்சி. ஆனால், அதே நேரத்திலே, அந்த பாரதி விழாவோடு, சிறையிலே இருக்கக்கூடியவர்கள் பற்றி முருகேசன் கமிஷன் சிபார்சுபடி அவர்களிடம் நீங்கள் மனிதாபிமானத்தோடு நடந்துகொள்ள வேண்டும். சிறையிலே உள்ளவர்களிடம், சிறை அதிகாரிகள் மனிதாபிமானத்தோடு

நடந்துகொள்ள வேண்டும். இந்தச் சர்க்காரும், சிறை அதிகாரி களிடத்திலும், சிறை கைதிகளிடத்திலும் மனிதாபிமானத்தோடு நடக்க வேண்டும். ஆகவே, 10 ஆண்டுகளுக்கு மேலாக சிறையிலே இருக்கும் ஆயுட் கைதிகளை உள்ளே வைக்கக் கூடாது. செக்ஷன் 433(ஏ) படி, குறைந்தபட்சம் அவர்கள் 14 ஆண்டுகள் சிறையிலே இருக்கவேண்டும், அதிலே சட்டச் சிக்கல் இருக்கிறதென்று சொன்னால், சட்டத்தை மாற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். மத்திய அரசு அமைச்சர் திரு. சாத்தே அவர்கள் வந்தால், விருந்து கொடுக்கிறீர்கள்; அதேபோல் திரு. மக்வானா வந்தால் விருந்து கொடுக்கிறீர்கள். வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. ஆனால், திரு மக்வானாவைச் சந்திக்கின்ற போது, திரு சாத்தேவயச் சந்திக்கின்றபோது, அதுபோல் மத்திய சர்க்கார் அதிகாரிகளைச் சந்திக்கின்றபோது, நீங்கள் இந்த மாதிரி உள்ளேயிருக்கும் கைதிகள் சம்பந்தப்பட்ட சட்டதவைத மறு பரிசீலனைசெய்யவேண்டும் என்று கேட்கவேண்டும். உங்களுக்கு இந்த அதிகாரம் இருக்கிறதா என்று பார்க்கவேண்டும் என்டதை நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11.50)

அடுத்து, நான் கேட்க விரும்புவது. இன்றைக்கு மொத்தம் 119 ஜெயில்கள் இருக்கின்றன. ஆனால் 109 ஜெயில்கள் ரெவின்யூ டிப்பார்ட்மெண்டில் இருக்கின்றன. பிரிசன்ஸ் டிப்பார்ட் மெண்டில் இல்லை. பிரிசன்ஸ் டிப்பார்ட்மெண்டில் அவற்றை எடுத்து முறையாகச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, உங்கள் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். இன்றைக்கு இந்தச் சர்க்கார் உண்மையாகத் தவறு செய்பவர்கள் மீது, கொலையாளிகள் மீது, அதிகார துஷ்பிரயோகம் செய்பவர்கள் மீது முறையான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் சில காரியங்கள் செய்யப்படவில்லை என்ற குற்றச்சாட்டை யார் சொன்னாலும் அவர்கள் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். அன்றைக்கு ஆட்சிப் பொறுப்பில் இருந்த திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் பல்வேறு நல்ல காரியங்களைச் செய்திருக்கிறது. கன்விக்ட் பீரியடுக்கு ரெமிஷன் கொடுத்தது. அந்தக் கால கட்டத்தைக் குறைத்தது திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

திரு. ரா. உமாநாத் : திராவிட முன்னேற்றக் கழக அரசாங் கத்தின் போது சீர்திருத்தங்கள் செய்யப்படவில்லை என்பதைப் பற்றி நான் குறிப்பிட்டது—நம்முடைய நண்பர் சிட்டிபாபு அவர்கள் மனதார உணர்ந்து திரும்பத் திரும்ப எழுதியதைத்தான் சுட்டிக் காட்டினேன். ஆகவே எனக்கு பதில் சொல்லுவதற்குப் பதில் சிட்டிபாபு அவர்களுக்குப் பதில் சொல்லவேண்டும்.





திரு. அ. ரகும்ான்கான் : துணைத் தலைவர் அவர்களே, ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள் நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் எல்லா ஆட்சிக் காலத்திலும் நடை பெற்ற சில காரியங்களைக் கோடிட்டுக் காட்டுவது வரவேற்கத் தக்கதுதான். திராவிட முன்னேற்றக் கழக ஆடசியின்போது சிறை சம்பந்தமாக எந்தக் காரியமும் செய்யப்படவில்லை என்ற குற்றச்சாட்டு வந்து விடக்கூடாது என்பதற்காகத்தான் அதற்கான பட்டியலை, சிறை சீர்திருத்தம் கலைஞர் ஆட்சிக் காலத்தில் எவ்வாறு நடைபெற்றது என்பதற்கான புள்ளி விவரங்களைக் கொடுக்க விரும்புகிறேன். அன்றைக்கு கேழ்வரகு கொடுக்கப் பட்டதை மாற்றினார்கள்; கட்டம் போட்ட சட்டையைக் காலர் வைத்த சட்டையாக மாற்றினார்கள்; நவீன கழிப்பிடங்களை சிறையில் அமைத்துக் கொடுத்தார்கள். சிறையில் கைதிகளை சங்கிலியால் கட்டிப்போட்டதை நிறுத்தினார்கள். அதைத் தொடர்ந்து நீங்களும் அது போன்ற காரியங்களைத் தொடர்ந்து செய்யவேண்டுமென்றுதான் வற்புறுத்த விரும்புகிறேன்.

முருகேசன் கமிஷன் ரிப்போர்ட்டில் விளக்கமாகச் சொல்லி யிருக்கிறார்கள். இன்றைக்கு சிறைச்சாலையில் பல்வேறு கொடுமைகள், நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. யாரையும் சுட்டுப் பொசுக்கினாலும் கேட்பார் கிடையாது. நான் எல்லா சிறை அதிகாரிகளையும் குற்றம் சொல்லவில்லை. அவர்களிலே நல்லவர்களும் இருக்கிறார்கள்; மனிதாபிமானத்துடன் நடந்து கொள்பவர்களும் இருக்கிறார்கள்.

அமைச்சர் அவர்களுக்கு இன்னொரு வேண்டுகோள்' நக்சல்பாரிகள் மேற்கொள்ளும் கொள்கைகளை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. துப்பாக்கி முனையில்தான் சமுதாய மறு மலர்ச்சியைக் காண முடியும் என்ற மாவோவின் கொள்கையை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ,கத்தியைத் தீட்டாதே; புத்தியைத் தீட்டு' என்ற அண்ணாவின் கொள்கைதான் சமுதாய மாற்றத்திற்கு உகந்தது என்று கருதுகிறோம். ஆனால் அதே நேரத்தில் அந்த நக்சல்பாரிகளும் ஒரு சமுதாய மாற்றத்திற்காகப் பாடுபடுகிறார்கள் என்ற அடிப்படையில் அவர்களை முறையாக நடத்தவேண்டும். இன்றைக்கு சிறைச்சாலைகளில் அவர்கள் மிகவும் கேவலமாகக் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள். மனித உரிமையின் அடிப்படையில் சொல்ல விரும்புகிறேன். சிறையில் எந்தக் கைதியையும் அடிக்க எந்தச் சிறை அதிகாரிக்கும் உரிமை கிடையாது. ஒரு நாயைக்கூட கொல்ல யாருக்கும் உரிமை கிடையாது. சட்டத்தை அவர்கள் கையில் எடுத்துக் கொள்ளக் கூடாது. நீதிமன்றந்தான் தீர்ப்புக் கொடுக்கவேண்டும். பகல்பூரில் 15 கைதிகளின் கண்களைப் பறித்தது பற்றி நீதிமன்றம் கடுமை யாகக் கண்டனம் தெரிவித்திருக்கிறது.

ஆகவே இவைகளை யெல்லாம் கவனத்தில்கொண்டு குறிப்பாக முருகேசன் கமிஷன் அறிக்கை சம்பந்தமாக நான் அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். இன்றைக்கு மாரியப்பத் தேவர் மரணம் அடைந்திருக்கிறாரே, அந்த மரணத்திற்குக் காரணம் அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறார், தூக்கல்ல, என்று சொல்லப்பட்டிருக்கிறதே, இது குறித்து என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் என்று உங்கள் பதிலுரையில் சொன்னால் நாடு உங்களை ஏற்றுக் கொள்ளும். கடந்த கால அனுபவத்தைப் பார்க்கிறபோது நீதிக்குத் தலைவணங்காமல் அநியாயத்திற்குத் தலைவணங்கு கிறீர்கள், என்பதுதான். சட்டம் என் கையில் இருக்கிறது என்று சொல்கிறீர்கள், சட்டத்தை உங்களுடைய சார்பாக படைத்துக் கொண்டிருக்கிறீர்கள். மறைந்த தலைவர் அடிக்கடி கேட்பார், 'மங்கை சூதகமானால் கங்கையில் நீராடலாம். ஆனால் கங்கையே சூதகமானால் எங்கே நீராடுவது என்று'. அதைப்போலத்தான் நான் இன்றைக்கு உங்களைப் பார்த்துக் கேட்கிறேன், மங்கை சூதகமானால் கங்கையிலே நீராடலாம், ஆனால் கங்கையே சூதக மானால் எங்கே நீராடுவது? நீங்கள் கங்கையாக இல்லை, பரவாயில்லை, வேறு ஏதோ மாதிரி இருக்கிறீர்கள், ஆகவே தான் குற்றவாளிகளுக்கு பாதுகாப்புக் கொடுக்க முயற்சிக்கிறீர்கள் என்று குற்றஞ்சாட்டி முடிக்கிறேன். வணக்கம்.

டாக்டர் கே. சமரசம் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசுகின்றபோது நடராஜன் கமிஷன் அறிக்கையை இங்கே வைக்கவேண்டுமென்றும் விவாதிக்கவேண்டுமென்றும் சொன்னார்கள். இதுவரையில் தி.மு.க. ஆட்சியின்போது ஏதாவது அறிக்கையை சட்டசபையிலே வைத்து விவாதித்து இருக்கிறார்களா? 'ஊருக்குத்தானடி உபதேசம், உனக்கில்லையடி கண்ணே' என்ற முறையிலே கேட்கிறாரா? அதிலே நியாயம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, இது எதிர்பார்க்கப்பட்ட கேள்விதான். நான் மாண்புமிகு உறுப் பினருக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். உதயகுமார் பிரச்சினையாக இருந்தாலும், பாளையங்கோட்டை லூர்துநாதன் பிரச்சினையாக இருந்தாலும் கிளைவ் ஹாஸ்டல் சம்பவமாக இருந்தாலும் நாங்கள் இந்தப் பிரச்சினைகளை யெல்லாம் பற்றி சட்டமன்றத்திலே விவாதம் தேவையில்லாத அளவுக்கு—விவாதம் என்ற பெயர் இல்லையே தவிர, அதற்கான விளக்கத்தையெல்லாம் கொடுத்திருக்கிறோம்........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமருங்கள் அந்தப் பிரச்சினையெல்லாம் இப்போது வேண்டாம். அடுத்து திரு இரா. கருப்பையா.



திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) திருச்சிராப்பள்ளி மத்திய சிறையில் 23-8- 1979 ஆம் நாளன்று கருப்பன் என்ற கைதியும், 28-8-1979 ஆம் நாளன்று மாரியப்பத் தேவர் என்ற கைதியும் மரணம் அடைந்தது பற்றி விசாரிப்பதற்காக நியமிக்கப் பட்ட மாவட்ட நீதிபதி முருகேசன் அவர்களுடைய விசாரணை அறிக்கை சம்பந்தமாக கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கருத்துக் களை கூற நான் விரும்புகிறேன். விசாரணைக் குழு 7-9-1979 அன்று நியமிக்கப்பட்டது. விசாரணைக் குழு தன்னுடைய விசாரணையை முடித்து 19-2-1980 அன்று தன்னுடைய அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்திருக்கிறது. அரசு 198' மார்ச் 27 ஆம் தேதியன்று அந்த விசாரணை அறிக்கையின் மீது அரசு தன்னுடைய முடிவுகளை அறிவித்திருக்கிறது. இன்றைய தினம் அரசு இந்த முடிவுகளை ஏற்று அறிவித்ததற்குப் பிறகு கிட்டத்தட்ட ஒரு ஆண்டுக்காலத்தை நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோம். இந்த விசாரணைக் குழுவின் அறிக்கையில் நீதிபதி முருகேசன் அவர்கள் குறிப்பிட்டு இருப்பது முதலாவதாக, கருப்பன் என்பவர் தற்கொலை செய்துகொண்டார் என்பது உண்மை என்றும் அவர் அடித்துக்கொல்லப்பட்டார் என்பது உண்மையில்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறார். இது சம்பந்தமாக அவர் தற்கொலை செய்து கொண்டதுதான் உண்மை என்று அவர்

(நண்பகல் 12.00)

குறிப்பிட்டிருந்தாலும், இதிலே சந்தர்ப்பவசத்தால் ஏற்பட்டிருக் கின்ற சில நிலைமைகளை நான் அரசின் கவனத்திற்கும், அமைச்சரின் கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன். கருப்பன் தற்கொலை செய்து கொண்டார், அவருடைய பிணம் சிறையிலிருந்த அரசு மருத்துவமனையில் வைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பிணத்தைப் பார்க்க வேண்டுமென்று அங்கேயுள்ள திருச்சி மத்திய சிறையிலுள்ள கைதிகள் சிறை அதிகாரிக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். அதைப் பார்க்க அனுமதி தர மறுத்தது மட்டுமல்ல; கடுமையான முறையில் கண்ணீர்ப் புகை விட்டு, தடியடிப் பிரயோகம் நடத்தி அதற்கு மேலே துப்பாக்கி பிரயோகமும் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது சாதாரணமாகத் தற்கொலை செய்து கொண்ட ஒருவரின் பிணத்தைப் பார்க்க அங்கே உள்ள கைதிகள் அனுமதிக்கப் பட்டிருந்தால் இந்தப் பிரச்சனைக்கே இடமில்லாத அளவிற்கு நிலைமைகள் முடிந்திருக்கும். நம் தமிழகத்தின் மாபு. சாதாரண மாக ஒருவர் இறந்துவிட்டார் என்றால் அந்தக் கிராமத்திலுள்ள வர்கள் இறந்தவனைக் கடைசியாக வந்து முகத்தைப் பார்த்து விட்டு வர வேண்டுமென்று நினைப்பது தமிழர்களின் மரபு, நியதி; அது இன்றைக்கும் இருக்கிறது. அந்த முறையிலே பல ஆண்டு களாக அந்தச் சிறையிலுள்ள கைதிகள் தங்களோடு நெருங்கிப் பழகியவன் இறந்துவிட்டான் என்று கூறுகிறார்கள், தற்கொலை என்று கூறுகிறார்கள், அதில் சந்தேகம் இருக்கிறது என்று அந்தக்

கைதிகள் நினைக்கிறார்கள். அவர்களை கருப்பனுடைய பிணத்தைப் பார்க்க அனுமதித்திருந்தால் இந்தத் தடியடிப் பிரயோகம் நடந்திருக்க வேண்டிய அவசியமில்லை. அதன் தொடர்பாக மாரியப்பத் தேவரும்—அவர் அடித்துக் கொல்லப் பட்டார் என்பது நீதிபதியின் முடிவு அவரும் இறந்திருக்க வேண்டியதில்லை. எனவே, அந்த அளவிற்குத் துர்ப்பாக்கியமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். அந்த நிலையில், இந்தச் சந்தேகத்தை இன்றையதினம் நீதிபதி முருகேசன் கருப்பன் தற்கொலை செய்து கொண்டார் என்று அவர்கள் தன்னுடைய முடிவாக அறிவித்திருந்தாலும் இன்றைக்கும் எங்களைப் போன்றவர்களால் அதுசம்பந்தமாகஒரு தெளிவான முடிவிற்கு வர முடியவில்லை, தற்கொலைதான் என்று திட்டவட்டமாக ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் இருக் கிறோம் எல்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து. 28—8—79 ஆம் நாளன்று அதிகாலையில் இரண்டு மணி அளவில் மாரியப்பத் தேவர் சி.பி. இரண்டாம் பிளாக்கில் 37 ஆம் அறையில் தூக்குப் போட்டுக் கொண்டார் என்று சிறை அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள். நீதிபதி முருகேசன் அவர்கள் அவர் தூக்குப் போட்டுக்கொண்டார் என்று கூறுவது ஐயப்பாடாகத்தான் இருக்கிறது; அந்தக் கூற்றை ஏற்றுக்கொள்வதற்கில்லை என்ற முறையிலேதான் தன்னுடைய முடிவை அறிவித்திருக் கிறார்கள். ஆகவே, அந்த அடிப்படையில் நான் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டதைப்போல, ஒரு சிறு சம்பவத்தைத் தவிர்த்திருந்தால் மாரியப்பத் தேவர் இறந்திருக்க வேண்டிய அவசியமில்லை. 24 ஆம் தேதியன்று அந்தக் கைதிகள் அந்தப் பிணத்தைப் பார்க்க வேண்டுமென்று கூறிய கட்டத்திலே, அவர்கள் சிறைக்குள்ளே நான்கு சுவர்களுக்குள்ளே கடுமையாகத் தாக்கப்பட்டார்கள். பல நூற்றுக் கணக்கான பேர்கள் காயமடைந்திருக்கிறார்கள். இன்றைக்கும் பலர் தங்களுடைய அங்கங்களை இழந்த நிலையில் இருக்கிறார்கள். அந்த அளவிற்குக் கடுமையாகத் தாக்கப் பட்டது மட்டுமல்லாமல், யார் யாரை வஞ்சம் தீர்க்க வேண்டு மென்று சிறையதிகாரிகள் நினைத்தார்களோ அவர்கள் அனை வரையும் தனித்தனியாகப் பிடித்துச் சென்று தனி அறைகளில் அடைத்துத் தனியாகக் கொடுமைப்படுத்தித் தாக்கியிருக் கிறார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அம்மாதிரி தாக்கப்பட்ட மாரியப்பத் தேவர் என்பவருடைய உயிரும் பறிக்கப் பட்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆகவே, இது சம்பந்தமாகத் தற்கொலை அல்ல, மாரியப்பத் தேவரின் மரணம் தற்கொலை அல்ல, அவர் கொலை செய்யப் பட்டிருக்கலாம் என்ற எண்ணத்தோடு நீதிபதி அவர்கள் தீர்ப்பு கொடுத்த பிறகு இதுசம்பந்தமாக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதற்குப் பொறுப்பான சிறை அதிகாரிகள் J.W.S 12, 13, 14 ஆகியவர்கள், அதிலே முதல் நிலைக் காவலர் கிருபாவக்கரசு



என்பவரும், இரண்டாம் நிலைக் காவலர் பாப்புவும், துணை ஜெயிலர் சில்வர்ஸ்டரும் தங்களுடைய கடமையைச் சரியாகச் செய்யவில்லை என்கின்ற காரணத்தைக் கூறி அவர்கள் மீது நட வடிக்கை எடுக்கவேண்டும். அவர்கள் தங்களது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துகின்றார்கள் என்பதைக் கூறி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் கூறி இருக் கிறார்கள். என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதுபற்றி மற்றவர்கள் தெரிந்து கொள்ளக்கூடிய நிலைமையிலே,—இந்த சிபாரிசுகள் வெளிவந்து ஓராண்டாகின்றது இந்த ஓராண்டுக் காலத்தில், இன்ன, இன்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, இன்னின்னார் மீது நாங்கள் வழக்கு பதிந்திருக்கிறோம், அல்லது இவர்களை வேலை நீக்கம் செய்திருக்கிறோம், அல்லது தற்காலிக வேலை நீக்கம் செய்திருக்கிறோம், என்கின்ற முறையிலே—அந்த நடவடிக்கைகளையும் சேர்த்து அமைச்சர் அவர்கள் அளித்திருந் தால் பயனுள்ளதாக இருந்திருக்கும்.

பால் கமிஷன் அறிக்கை விவாதத்தின்பொழுது, அரசு தனியாக ஒரு அறிக்கையை அரசினுடைய உத்தரவாக, அது சம்பந்தமாக, அரசினுடைய எண்ணம் என்ன என்பதை வெளியிடக்கூடிய முறையிலே, அந்த அறிக்கையோடு சேர்த்து வைத்திருந்தது. அந்த முறையிலே, இது சம்பந்தமாகவும் என்ன, என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்ற விளக்கம் பற்றி அறிக்கையாக தந்திருந்தால், அது பயனுள்ளதாக இருந்திருக்கும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அரசு இன்னொன்றையும் கூறியிருக்கிறது. மாரியப்ப தேவர் மரணத்திற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது இ.பி.கோ. 302, 304—ன்கீழ் நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதைக் கண்டறிய காவல் துறை குற்றப் பிரிவு துணை இன்ஸ்பெக்டர்—ஜெனரலுக்கு அரசு ஆணையிட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்கள். இன்றைக்கு ஓராண்டு காலமாகியிருக் கிறது. காவல்துறை புலனாய்வுத் துறை என்ன செய்திருக்கிறது வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறதா, யார், யார் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது என்கின்ற விவரமும் விளக்கமும் இன்றைய தினம் வைக்கப்பட்டிருக்குமானால், கமிஷனுடைய அறிக்கைய அரசு ஏற்றுக்கொண்டதற்கு அடையாளமாக, முழுமையாக, இந்தத் துறையிலே நீதியை நியாயத்தை வழங்கும் முறையிலே அரசு தன்னுடைய கடமையைச் செய்திருக்கிறது என்று அனைவரும் ஏற்றுக்கொள்ள முடியும். ஆனால், அந்த முறையிலே, அறிக்கை வந்து ஓராண்டுக்காலத்திற்குப் பிறகு, தெளிவான நிலைமைகள் இன்னும் அறிவிக்கப்படவில்லையென்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, சிறையிலே ஏற்படக்கூடிய இம்மாதிரியான மைகள் சம்பந்தமாக, இதற்கான காரணங்கள் சம்பந்த பல்வேறு ஆராய்ச்சிகள் இன்றைதினம் மேற்கொள்ளப்பட் கின்றன. இந்தக் கமிஷனுடைய நீதிபதி முருகேசன் அவர்க தன்னுடைய அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

சிறையிலே அதிகமான கைதிகள் வைக்கப்படுவதன் காரண மாக, பல்வேறு சூழ்நிலைகள் உருவாகின்றன. குற்றங்க ஏற்படுகின்ற நிலைமைகள் ஏற்படுகின்றன. கைதிகள் நெருக்கம் அதிகமாக இருப்பதன் காரணமாக, ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றியும் இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே அந்த அடிப்படையில், இன்றையதினம் சிறையிலே இருக்கக்கூடிய நிலைமைகளைப் பற்றியும் ஓரளவு இந்தக் கமிஷன் பகுத்து ஆராய்ந்திருக்கிறது.

இன்றையதினம் சிறைக்கூடங்கள் எவ்வாறு இருக்கின்றன என்பதை நான் இந்தமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். சிறையிலே கைதிகளாக வரக்கூடியவர்கள் சந்தர்ப்ப வசத்தால், ஏதோ ஒரு காரணத்தால், குற்றங்களை இழைத்துவிட்டு, சிறைக்குள்ளே வருகிறார்கள். அவர்கள் நிரந்தரமாக சிறைவாசிகளாக இருக்க வேண்டுமென்று எந்தச் சமயத்திலும் யாரும் விரும்புவதில்லை. அந்த மாதிரியான முறையிலே அரசும் விரும்புவதில்லை. அவர்கள் தாங்கள் செய்த குற்றத்திற்காகத் திருந்தி, சமுதாயத்தில் நல்ல மனிதர்களாக, நல்ல பண்புள்ளவர்களாக, மீண்டும் இந்தச் சமுதாயத் தோடு ஒட்டி வாழக் கூடிய முறையிலே, திருந்திய மனிதர்களாக வர வேண்டுமென்ற உணர்வோடுதான் அந்தச் சிறையில் இருக்கின்ற கைதிகளை நடத்த வேண்டுமென்ற நிலைகள் இருக்க வேண்டுமென்பது அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ள நியதி. அப்படியிருக்கும்போது, சிறைக்குள்ளே கைதிகளுக்கு ஏற்படக்கூடிய கொடுமைகளை இன்றையதினம் அவர்களுக்கு ஏதாவது ஒரு சிறிய குறையிருக்கிறது. உணவிலே குறை ஏற்பட்டிருக்கிறது. அளவு குறைகிறது. அல்லது அரசு நிர்ணயித்திருக்கின்ற தரமான உணவு அவர்களுக்குக் கொடுக்கப் படவில்லை. மற்றச் சிறைகளிலே கைதிகளுக்குக் கொடுக்கப் படவேண்டிய வசதிகள் இவர்களுக்குக் கிடைக்கவில்லை, அவர் களுக்குக் கிடைக்க வேண்டிய லீவ் சம்பந்தமாக, அவர்களுக்கு ஏதாவதுஒருகுறை இப்படி, ஏதாவதுஒன்றுசம்பந்தமாக,யாராவது ஒரு சிறிய வார்டனிடத்திலே அதாவது காவலரிடத்திலே, கைதி தைரியமாகப் பேசி, அவர் மீண்டும வருவதற்கான சூழ்நிலை இன்றையதினம் இருக்கிறதா என்பதை நான் கேட்க விரும்பு கிறேன். வாய் திறந்து கேட்டுவிட்டால், அந்த இடத்திலேயே அந்தக் கைதியை, ஆடுமாடுகள் அடிக்கப்படுவதைப் போல் கொடுமைப்படுத்தப்படுகிற நிகழ்ச்சிகள் இன்றைக்கும் நடந் துகின்றன.



(பிற்பகல் 12-10)

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

இன்றையதினம் சிறைச் சீர்திருத்தக் குழுவும், பல்வேறு குழுக் களும், கைதிகள் அடிமைகள் அல்ல, என்கிற வாசகத்தை எல்லாச் சிறைகளிலும் ஒவ்வொரு கைதியும் இருக்கக்கூடிய அறைக்கு முன்பும் பொறிக்கப்பட வேண்டும், அவர்கள் மனிதர்களாக நடத்தப்படவேண்டும் என்கிற அந்த வாசகத்தை ஒவ்வொரு சிறைக் கைதி இருக்கும் அறைகளின் முன்புகொட்டை எழுத்துகளில் பொறித்து வைக்கப்படவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறது. ஆனால் எவ்வாறு நடத்தப்படுகிறார்கள்? ஆடுமாடுகளுக்கு இருக்கும் சுதந்திரம் கூட இந்தக் கைதிகளுக்கு இல்லை. ஆடுமாடுகளை விடக் கேவலமான நிலையில் அவர்கள் நடத்தப் படுகிறார்கள். இதற்குப் பல்வேறு நிகழ்ச்சிகளைக் காட்ட முடியும், பல்வேறு உதாரணங்களைக்கூற முடியும். இருந்தாலும் நான் இவை அனைத்தையும் தொடர்பாகக் கூறி, நேரத்தை எடுத்துக் கொள்ள விரும்பவில்லை இன்றையதினம் சிறையில் கைதிகள் நடத்தப்படுகின்ற முறையில் மாற்றம்தேவை. சிறை யிலே இருக்கின்ற கைதிகளில் தனிப்பிரிவாக உள்ளார்கள். கான்விக்ட் வார்டர்கள். அதாவது, கைதிகள் காவலர்கள், உள்ளார் கள் அப்பேற்பட்ட பிரிவினைச் சேர்ந்த அவர்களுக்கு எந்த விதமான பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன என்பதையும் உணர்ந்து இன்றையதினம் சிறை சீர்திருத்தக் கமிஷனும் இஸ்மாயில் கமிஷனும் நீதிபதி முருகேசன் கமிஷனும் அந்தக் கைதிகள் காவலர்கள் அமைப்பு முறை மாற்றப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதே மாதிரி அடுத்துகைதிகளுக்கு பல்வேறு குறைகள் இருக் கின்றன. கைதிகளுக்கு அவசர விடுப்புகள் கொடுக்கப்படவேண்டும். வெளியேஇருக்கிற அவருடைய குடும்பத்தாருடன் ஒன்றிப் பழகு வதற்கான வாய்ப்பை அறிவிக்க வேண்டும். அவருடைய குடும்பத் திலே ஏற்படுகின்ற நல்லகாரியங்கள், துக்க காரியங்கள் அவருடைய தாயார், தகப்பனார், மனைவி அல்லது குழந்தைகள் இவர்களுக்காக ஏற்படுகிற காரியங்களில் பங்குகொள்வதற்கான வாய்ப்புகள் கொடுக்கப்படவேண்டும்.

தங்களுடைய குடும்பத்திலே இருக்கின்ற நெருங்கிய உறவினர் கள் சகோதரர்கள், சகோதரிகள், இவர்களுக்கான திருமணங்கள், மற்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்கான வாய்ப்பைக் கொடுக்கவேண்டும் என்ற முறையிலே நம்முடைய அரசாங்கம் ஏற்கெனவே அவசர கால விடுப்பை அனுமதித்து வந்தது. ஆனால் திடீரென்று சென்ற ஆண்டு மார்ச்சு மாதத்திலே மதுரை சிறை யிலிருந்து விடுப்பிலே சென்ற ஒரு கைதிக்கு ஏற்பட்ட அசம்பா விதமான நிகழ்ச்சியை சாக்கிட்டு அரசு அந்த உத்தரவை இன்றைய தினம் மாற்றிவிட்டிருக்கிறார்கள். அதன் காரணமாக அவர்கள் அனுபவித்துவந்த சலுகைகள் பறிக்கப்பட்டுள்ளன. திருச்சி மத்திய சிறையிலே சனவரி 12 ஆம் தேதி முதல் 13 ஆம்

தேதி வரையில், அங்கே கைதிகள் அனைவரும் முழுமையான உண்ணாவிரதத்தை மேற்கொண்டு அவர்களுக்கு ஏற்கனவே எந்த முறையிலே அவசர கால விடுப்புகள் கொடுக்கப்பட்டதோ என்ன என்ன காரியங்களுக்காகக் கொடுக்கப்பட்டதோ அந்த முறையிலே அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் அவசர காலவிடுப்புக்களை கொடுப்பதற்கான அதிகாரம் முழுமையாக சிறை கண்காணிப்பாளருக்கு இருக்கவேண்டும் என்றும், அது வெளியிலே இருக்கின்ற, போலீஸ் துறையினரிடமோ அல்லது புரபேஷன் ஆபீசரிடமோ நன்னடத்தை அலுவலர்களிடமோ அல்லது மற்றவர்களிடமோ சான்றிதழ் பெற வேண்டுமென்ற அடிப்படையிலே இல்லாமல் அது வந்ததற்குப்பிறகுதான் விடுப்பிலே செல்ல வேண்டும் என்று நிலையில்லாமல் சிறைக்கண்காணிப்பாளரிடமிருந்து, ஏற்கெனவே இருந்த முறையின்படி அனுமதிபெற்று அந்த விடுப்புகள் கொடுக்கப்படவேண்டுமென்றும் போராட்டத்தை நடத்தியிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையை உடனடியாகத் தீர்க்கவேண்டியது அவசியம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்,

அது மட்டுமல்ல, இன்றைய தினம் சிறையிலே அதிகமான கைதிகள் வருவதன் காரணமாக இட நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது இன்றைக்கு சிறையிலே மாநிலம் முழுதும் சிறையிலே அடைக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கை 15 ஆயிரமாக இருக்கிறது. ஆனால் சில சந்தர்ப்பங்களிலே திருச்சி போன்ற மத்திய சிறைச்சாலைகளில் மட்டும்ஒரே நேரத்தில் அந்த 15 ஆயிரம் பேர்களை அடைக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. 1970 ஆம் ஆண்டு நடைபெற்ற நில மீட்சிப் போராட்டத்தின்போதும், விவசாயிகளின் போராட்டங்களின்போதும், சமீபத்திலே ஜனவரி 19ஆம் தேதி நடைபெற்ற பொது வேலைநிறுத்த போராட்டத்தின் போதும் பல ஆயிரக்கணக்கானவர்கள் சிறையிலே அடைக்கப்பட்டார்கள். பொதுவேலை நிறுத்தப் போராட்டத்தின்போது திருச்சி சிறையில் மட்டும் நாலாயிரத்திற்கும் அதிகமானவர்கள் அடைக்கப்பட்டார்கள்.

உணவு, காலத்தில் வழங்கப்படவில்லை. காலை 6 மணிக்குக் கொடுக்க வேண்டிய கஞ்சியை மாலை 6 மணிக்குத்தான் கொடுக்கப்படும் நிலை இருக்கிறது. இப்படி சிறைச்சாலைக்குள்ளே இருக்கும் சீர்குலைந்த நிலைமையை, "மெஸ்ஆர்கனைஸ்டு" நிலைமையைத் தவிர்க்கவேண்டும் என்று சொன்னால், ஏற்கனவே சிறை சீர்திருத்தக் குழு அளித்துள்ள பரிந்துரைகளின் அடிப்படையில், உணவுக் கூடங்கள் பரவலாக அமைக்கப்படவேண்டும். 200 பேர் அல்லது 300 பேர் என்கிற அளவிற்கு சமைப்பதற்கான வகையில் ஆங்காங்கு உணவுக் கூடங்கள் அமைக்கப்பட்டு, அந்த உணவை எடுத்துச்செல்லத் தேவையான வண்டிகள்—பாத்திரங்களும் அளிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும். ஏன் இன்னும் இந்த பரிந்துரைகள் அமல் செய்யப்படாமல், இருக்கின்றன என்பது எங்களுக்குத் தெரியவில்லை.



அடுத்து, நவீன கழிப்பிடங்கள் அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்துச் சொல்லவிரும்புகிறேன். சனவரி மாதம் 18ஆம் தேதி அன்று திருச்சிசிறையில் 4000 பேர்கள் அடைக்கப்பட்டார்கள். அந்த 4000 பேர்களும் இயற்கை அழைப்பை. மலஜலம் கழிப்பது எப்படி முடிப்பது என்கிற பெரிய கேள்வி எழுந்து, அதை எப்படி சுத்தம் செய்வது என்கிற பிரச்னையும் எழுந்தது. அதற்குப் போதிய சுகாதாரத் தொழிலாளர்கள் கிடைக்கவில்லை. அதனால் ஒவ்வொரு முனிசிபாலிடியாக சென்று ஸ்ரீரங்கம், திருச்சி, பொன்மலை ஆகிய முனிசிபாலிடிகளிடமிருந்து முறையே 25 தொழிலாளர்கள் தர முடியுமா என்று கேட்டு, அந்த ஏற்பாடுகள் முடிவதற்கு இரண்டு தினங்கள் ஆகிவிட்டன. அந்த இரண்டு தினங்களில் அங்கேயுள்ள சுகாதார நிலைமையில் எந்த அளவிற்கு இருந்து இருக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே, சிறைகளில் தேவையான அளவிற்கு மலஜலம் கழிக்க வசதிகள் ஏற்படுத்தவேண்டும். நவீன கழிப்பிடங்கள், தண்ணீர் வசதிகளோடு கூடிய கழிப்பிடங்கள் அமைக்க வேண்டும். இவற்றைச் செய்வது அவசியம் என்று சிறை சீர்திருத்தக் குழு பரிந்துரைத்திருந்தும், இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

அதைப்போலவே, அவர்கள், சமுதாய நலன் குறித்தும் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளும் விதத்தில் மாலை 6 மணிக்கு மேல் அவர்களுக்கு வாய்ப்புகள் வழங்க வேண்டும் என்றும், இரவு 9 மணிக்கு மேல் தான் கைதிகள் லாக்கப்பிற்குள்ளே அடைக்கப்படவேண்டும் என்றும், சிறை சீர்திருத்தக் குழு பரிந்துரைத்துள்ளது. அதுவும் நம்முடைய மாநிலத்தில் இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. அதைப்போலவே, பத்திரிகை சம்பந்தமாக கொடுக்கப்பட்ட பரிந்துரைகளும் சரியாக நிறைவேற்றப்படவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக சிறைகளுக்குள் பஞ்சாயத்து முறை அமுல் செய்யப்படவேண்டும் என்று சிறை சீர்த்திருத்தக்குழு கூறியுள்ளது. பஞ்சாயத்துக்கள், தேர்தல் நடத்தி அமைக்கப்படவேண்டும் என்று கோருகிறார்கள் நிர்வாகத்தில் அவர்கள் பங்கு கேட்கிறார்கள் என்று இதை கருதக்கூடாது. அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கும் சலுகைகளையும் வசதிகளையும் முறையாகப் பெறுவதற்கும் அந்த வசதிகள் குறைவு இல்லாமல் எல்லோருக்கும் கிடைக்கச்செய்வதற்கும், அந்த முறைகளைக் கண்காணிப்பதற்கும் அவர்கள் பஞ்சாயத்து முறைகளைச்சிறையில் அமல் செய்ய வேண்டும் என்று கேட்கிறார்கள். அதற்காக பஞ்சாயத்துகளைத் தேர்ந்தெடுக்க, 6மாதத்திற்கு ஒரு முறை தேர்தல்நடத்த வேண்டும் என்று சொல்கிறார்கள். இது சீர்திருத்தக் குழுவால் சிபார்சு செய்யப்பட்டு இருக்கிறது. மற்ற மாநிலங்களில். குறிப்பாக மேற்கு வங்காளம், கேரளம், ஆந்திரம், கருநாடகம். மகாராஷ்டிரா, புதுடெல்லி, போன்ற சிறைகளில் அமல் செய்யப்பட்டு இருக்கிறது. நம்முடைய தமிழகத்தில் அமல் செய்யப்படாமல் இருக்கிறது. முன்பெல்லாம் இப்படிப்பட்ட நலத் திட்டங்கள் எல்லாவற்றையும் நிறைவேற்றுவதில் தமிழகம் முன்னணியில் இருந்து, பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருந்தது. ஆனால், இப்போது ஏனோ இந்தப் பொறுப்புகள்

அமல் செய்யப்படாமல் இருக்கின்றன. ஆகவே, இப்படிப்பட்ட பரிந்துரைகளை நிறைவேற்றுவதன் மூலம் சிறைக்குள்ளே இருக்கும் குறைபாடுகளை அவர்களுக்குள்ளே விவாதித்து, அதிகாரிகளிடத்தில் அதை ஒரு முறையான வகையில் எடுத்துச் சொல்வதற்கு வழியேற்படும் என்பதால், அதற்கான நடவடிக்கை எடுத்து, பஞ்சாயத்துக்களை அமைக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறையில் கைதிகளை அதிகமான எண்ணிக்கை வைப்பதைப் பற்றி ஆரம்பத்திலேயே நான் குறிப்பிட்டேன், இன்றைக்கு அரசியல் போராட்டங்கள் அல்லது இயக்கங்கள் அல்லது வேறு போராட்டங்கள் எதுவாக இருந்தாலும், அந்த நேரத்தில் போலீஸ் அதிகாரிகளோடு சிறை அதிகாரிகள் தொடர்பு கொண்டு, எவ்வளவு நபர்களை அவர்கள் அரெஸ்ட் செய்து இருக்கிறார்கள், எவ்வளவு நபர்கள் சிறைக்குள்ளே எடுத்துவர நேரிடும் என்கிற விவரங்களைக் கேட்டு, அதற்குத் தகுந்த வகையில் உணவு மற்றும் பிற வசதிகளைச் செய்ய வேண்டும். இந்த வசதிகளை முன்கூட்டியே செய்து வைப்பதன் மூலம், குடிநீர் வசதி இல்லை, சுகாதார வசதி குறைவு போன்ற குறைபாடுகள் தவிர்க்கலாம். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இத்தகைய நடவடிக்கையை எடுப்பதற்கு முன்வரவேண்டும் என்று நாங்கள் சொல்லிக்கொண்டு வந்தாலும் ஏனோ இதிலே கேளாக் காதினராக இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக் காட்டவிரும்புகிறேன்.

[முற்பகல் 12.20]

1970 ஆம் ஆண்டு நடைபெற்ற நிலமீட்சிப் போராட்டத்தில் திருச்சி சிறையில் 10000 பேர் அடைக்கப்பட்டார்கள். அப்பொழுது நானும் கைது செய்யப்பட்டு சிறையிலிருந்தேன். நான் இந்தக் கஷ்டங்களை அனுபவித்தேன்.

ஆனால், கடந்த 19—ந்தேதி நடைபெற்ற போராட்டத்திலே எனக்கு வாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்த்தேன்; அந்த வாய்ப்பு எனக்கு கிடைக்கவில்லை; வாய்ப்பை இழந்துவிட்டேன். இருந்தாலும் கைதிகள் சிறையிலே மதிலுக்கு உள்ளே இருந்தாலும் வெளியிலே இருந்து அவர்களைப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது எந்த அளவுக்கு அவர்கள் கொடுமையான துன்பங்களை அங்கே அனுபவித்தார்கள் என்பதை நான் பார்த்தேன். மல ஜலம் கழிப்பதற்கு இடம் இல்லை. சாப்பாட்டுத் தட்டு கிடையாது. தண்ணீர் கிடையாது. சுகாதார சிப்பந்திகள் கிடையாது தஞ்சை மாவட்டத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் மீது லத்தி சார்ஜ் நடத்தி, அவர்களுக்கு ஏற்பட்ட இரத்தக் காயங்களோடு சிறைக்கு கொண்டுவரப்பட்டார்கள். அங்கே அவர்களுக்குமருத்துவ வசதி செய்து கொடுக்கவில்லை. அதற்கு டாக்டர் இல்லை. ஆயிரக்கணக்கானவர்களுக்கு மருந்து கொடுக்க வேண்டும்;



சிகிச்சை செய்யவேண்டும். குறைந்தது நான்கு டாக்டர்களையாவது உடனடியாக அனுப்பி வைக்க வேண்டுமென்று நான், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் நான்கு பேர்கள் அனுப்பப் பட்டார்கள், இம்மாதிரியான ஒரு சந்தர்ப்பத்தில் உடனடியாக கைதிகளுக்கு மருத்துவ வசதி செய்து கொடுக்க வேண்டியிருப்பதால் அதிகமான கைதிகளை சிறையில் கொண்டு வந்து அடைக்கும் போது அவர்களுக்கு தேவையான மருத்துவ வசதிக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

சிறையிலே ஏற்படக்கூடிய இடநெருக்கடியைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஏற்கெனவே இந்த மன்றத்தில் பலமுறை பேசப்பட்டு வந்திருக்கிறது. திருச்சி மாவட்டத்திலே இன்றைக்கு எங்களைப்போன்றவர்களுக்கு ஒரு பெரிய சங்கடம் ஏற்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலுள்ள கைதிகளையும் திருச்சியிலேதான் கொண்டுவந்து அடைக்கிறார்கள். அதனால் அங்கே இடநெருக்கடி அதிகமாக இருக்கிறது. சாதாரணமாக தஞ்சை மாவட்டத்திலிருந்து நிறைய கைதிகள் வருகிறார்கள். ஆகையால் தஞ்சை மாவட்டத்தில் ஒரு மத்திய சிறைச்சாலையை ஏற்படுத்தி விட்டால் இந்தப் பிரச்சனை தீர்க்கப் பட்டுவிடும்.

அது மட்டுமல்ல, தர்மபுரி மாவட்டத்திற்கு நேற்று சென்று வந்தேன். அங்கே உள்ள கைதிகளை சேலம் மாவட்டதிற்குக் கொண்டுவருகிறார்கள். அதனால் சேலம் சிறையில் இடநெருக்கடி ஏற்படுகிறது. ஆகவே, தர்மபுரி மாவட்டத்திற்கும் தனியாக ஒரு மத்திய சிறைச்சாலையை ஏற்படுத்த வேண்டும் என்று கோருகிறார்கள். அந்த மாவட்டத்திற்கு தனி சிறைச்சாலை அமைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். பொதுவாகக் எல்லா மாவட்டங்களுக்கும் மாவட்டத்திற்கு ஒரு மத்திய சிறைச்சாலை என்று இருக்கவேண்டும்; அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் சிறைச்சாலை வேண்டுமென்று கேட்கலாமா என்று நீங்கள் கேட்கலாம். இன்றைய தினம் இந்த சமுதாயமே ஒரு சிறைச்சாலையாக இருந்தாலும், இதிலே ஏற்படுகின்ற கொடுமைகளை அதிகமாக அனுபவிக்கிறவர்கள் நாங்கள்தான்; சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கிற மக்கள்தான். அடிதளத்திலே இருக்கிற மக்களின் கஷ்டங்களை உணர்ந்து, அவரவர்கள் வாழக்கூடிய மாவட்டத்தில் இருக்கின்ற சிறைகளிலேயே குற்றவாளிகளை வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏதோ குற்றம் செய்தார்கள் என்பதற்காக தண்டனை கொடுக்கிறார்கள். அந்த தண்டனையை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். தண்டனை அனுபவித்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இன்னொரு தண்டனை மாதிரி அவர்களை மாவட்டம் விட்டு மாவட்டம் மாற்றக்கூடாது. திருச்சியிலே உள்ளவரை வேலூரிலே கொண்டு வைப்பது, வேலூரிலே உள்ளவரை கோவை

யிக் கொண்டு வைப்பது, கோவையிற் உள்ளவரை வேறு இடத்தி கொண்டு வைப்பது என்ற இந்த நிலையை நீக்க வேண்டும் அந்தந்த மாவட்டத்திலேயே அவர்களை சிறையில் வைக் வேண்டும். செய்த குற்றத்திற்காக தண்டனை அனுபவிப்பவ களை கொடுமைப்படுத்த வேண்டும், துன்புறுத்த வேண்டு என்பதல்ல அரசாங்கத்தின் நோக்கம். சிறையிலே இருப்பவை அவருடைய உறவினர்களோ நண்பர்களோ சென்று பார்க் வேண்டுமானால், வேறு மாவட்டங்களிலே கைதிகள் வைக்க படுவதினால் அவர்களுக்கு நிறைய பண விரையம் ஏற்படுகிறது அதனால் கஷ்டப்படுகிறவர்கள் அடித்தளத்து மக்கள்தான். அவ களுடைய உணர்வை அரசு புரிந்து கொள்ள வேண்டும். சிறை களுக்குள்ளே எங்கே இருந்தாலும், கோவையிலே இருந்த லும் திருச்சியிலே இருந்தாலும், ஒன்றுதான். ஆனால் அவ களுடைய குடும்பங்களுக்கு ஏற்படும் சிரமங்களைக் கணக்கில் எடுத்து அவரவர் மாவட்டத்திலே உள்ள சிறையில் வைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக நான் ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன். இந்த கமிஷன் அறிக்கை கொடுக்கப்பட்டு ஓராண்டு காலத்திற்குமேல் ஆகிவிட்டது. இன்றைய தினம் நீதி கேட்கிறோம். கமிஷன் தன்னுடைய முடிவை அறிவித்திருக்கிறது. கொலை செய்யப் பட்டார்கள். அவர்களுக்கு நீதி வழங்கவேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. கொலை செய்தவர் யார் என்று கண்டுபிடித்து அவர்களுக்கு தகுந்த தண்டனை கொடுக்கின்ற பொறுப்பும் அரசாங்கத்திற்கு இருக்கிறது. கமிஷன் அமைத்துவிட்டோம்; அறிக்கை கொடுத்துவிட்டார்கள்; புலன் விசாரணைக்கு அனுப்பிவிட்டோம்; ஆகவே அவர்கள் செய்ய வேண்டிய நேரத்திலே செய்ய வேண்டியதை செய்து முடிப்பார் கள் என்று அரசாங்கம் இருக்காமல் அரசாங்கத்தின் சார்பிலே உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். குற்றம் இழைத்த வர்களுக்கு தண்டனைக் கொடுப்பதற்காக அரசு நியாயமாகச் செயல்பட்டு வருகிறது என்ற முறையிலே உடனடியாக வழக்கு பதிவு செய்யப்பட வேண்டும்.

இந்த மாரியப்ப தேவரைக் கொலை செய்தவர்களின் மீது அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த கமிஷன் அறிக்கையை இந்த மன்றத்திலே விவாதிப்பதன்மூலமாக மட்டும் நாம் நியாயம் செய்துவிட்டோம் என்று யாரும் கூற முடியாது. நடவடிக்கை எடுத்தால் இம்மாதிரி நடவடிக்கைகளை நாம் எடுத்திருக்கிறோம் என்பதை நாட்டுக்கும் மக்களுக்கும் இந்த மன்றத்திற்கு மட்டு மல்ல—தெரிவிப்பதன்மூலம் நாம் நியாயம் வழங்கியவர்கள் ஆவோம். ஆகவே இதன்மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து நியாயத்தை வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.





*திரு. நா. சுந்தரராஜ்: மாற்றுத்தலைவரவர்களே, திருச்சிமத்திய சிறையில் 23–8–1979 அன்றும் 28-8–1978 அன்றும் முறையே கருப்பன் என்பவரும், மாரியப்ப தேவர் என்பவரும் ஆகிய இரண்டு கைதிகளும் மரணம் அடைந்தது குறித்து நம்முடைய அரசாங்கம், நீதிபதி திரு. முருகேசன் அவர்கள் தலைமையிலே கமிஷன் அமைத்து சம்பவம் குறித்து விரிவாக விசாரணை நடத்தி அரசுக்கு ஆலோசனை தெரிவிக்கவேண்டும் என்று கேட்கப் பட்டது. அதன்படி கொடுக்கப்பட்ட அறிக்கையின் மீது நடை பெறுகின்ற விவாதத்திலே என்னுடைய கருத்தையும் நான் சார்ந் திருக்கின்ற இயக்கத்தின் கருத்தையும் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நீதிபதி முருகேசன் அவர்களின் அறிக்கையில் கைதி கருப்பன் தற்கொலையால்தான் இறந்திருக்கிறார் என்றும் மாரியப்பத் தேவரின் மரணத்திலேதான் சந்தேகம் இருக்கின்றது என்றும் அவர் தற்கொலையால் சாகவில்லை என்றும் சொல்லப்பட்டிருக் கின்றது. அவர் அடித்து கொல்லப்பட்டிருக்கிறார் என்ற குற்றச்சாட்டையும் வைத்து அரசாங்கம் உரிய நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும் என்றும் நீதிபதி முருகேசன் அவர்கள் கருத்தினை வழங்கி இருக்கிறார். ஆனால் நமக்கு ஒரு சந்தேகம் ஏற்படுகின்றது. ஆயுள் கைதி கருப்பன் என்பவர் பரோலிலே வெளியே செல்லவேண்டும் என்று மனு போட்டிருக் கிறார். மனுவை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு அவருக்கு ஜாமீன் வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைப்பதற்காக அவருடைய தாயார் ஜாமீன் தயார் செய்து கொண்டிருந்திருக்கிறார். அப்படி இன்னும் இரண்டு மூன்று நாட்களிலே வெளியே செல்லக்கூடியவர் சாதாரண ஒரு போர்வையைத் திருடிவிட்டார் என்பதற்காக அவர் தன்னைத்தானே மாய்த்துக்கொள்ள வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பது பற்றி அனைவரும் சிந்திக்கவேண்டும். இரண்டு நாட்களிலே விடுதலை ஆகி தன்னுடைய குடும்பத் தினரைச் சந்திக்கவேண்டிய நிலையிலே இருக்கக்கூடியவர் எப்படி சாதாரண ஒரு போர்வை திருடியதற்காக தன்னைத்தானே மாய்த்துக்கொண்டிருக்க முடியும் என்பது நமக்குத் தெரியவில்லை.

நீதிபதி முருகேசன் அவர்கள் மாரியப்பத் தேவர் அவர்கள் அடித்துக்கொல்லப்பட்டிருக்கிறார் என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டதற்குப் பிறகும் இதுவரையிலே விசாரணை மேற் கொண்டிருக்கிறது என்றுதான் அரசு தெரிவித்திருக்கின்றதே தவிர யார் யார் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்றும், யார் யார் மீது வழக்கு தொடரப்பட்டிருக்கின்றது, யார் யார் தண்டிக்கப்படுவார்கள் என்றும் அரசு தெரிவிக்கவில்லை. சம்பவம் நடந்தது 1979 ஆம் ஆண்டு, கமிஷன் நியமித்தது 27-3–81 அன்று. இப்போது ஓர் ஆண்டுக்காலம் ஆகிவிட்ட பிறகும் இன்னும் முழுமையான தகவல் நமக்குக் கிடைக்கவில்லை என்றால் நான் மிகவும் வருத்தப்படுகிறேன். அரசாங்கத்தின் மெத்தனமாக போக்கைக் கண்டிப்பதற்கு நான் கடமைப்பட்டி ருக்கிறேன்.

மாரியப்பத் தேவரை அடித்த முறை என்பது சாதாரணமாக சிறைச்சாலையிலே தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்ற ஒரு முறைதான் என்றால் அது மிகையாகாது. வெள்ளைக்காரன் காலத்திலிருந்து கைதிகளில் யார் ரிங் லீடர் என்ற வகையிலே மொத்தமாக பிரச்சினைக்கு ஆளாகின்றாரோ அவரைக் கொட்ட டியிலோ அல்லது ஆட்கள் நடமாட்டம் இல்லாத இடத்திற்கோ கொண்டு சென்று செம்மையாக அடித்து நொறுக்கி அதன்மூல மாக அவனை ஒரு புதிய மனிதனாக, அடங்கிய ஒடுங்கிய மனிதனாக, அடிமையாக ஆக்கவேண்டும் என்பது சிறை அதிகா கள் எடுத்து வருகின்ற நடவடிக்கைதான். அந்த முறையிலே தான் அவரையும் அடித்து நொறுக்கி இருக்கிறார்கள். அவருக் ரத்தக் காயம் ஏற்பட்டிருக்கிறது, பலமான அடியின் காரணமா அவர் இறந்திருக்கிறார். ஆகவே இதுபோன்ற நடைமுறைகள நாம் சிந்தித்துப்பார்த்தால் எவ்வளவு கொடுமையா காரியங்கள் சிறைச்சாலைகளுக்குள்ளே நடக்கின்றது என்ப தெரிகின்றது. சிறைக்குச்சென்ற மனிதனைத் திருத்தவேண்டு என்ற நிலையில்லாமல் அந்த மனிதனை மிருகமாக்கி வெளியே கொண்டு வருகின்ற மோசமான நிலையில் காரியங்கள் நடந் கொண்டிருக்கின்றன என்பதை நான் சுட்டிக் காட்ட கடமை பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12.30)

குறிப்பாக சமுதாயத்திலே ஒருவனைக் குற்றவாளி என்று சொன்னால் அவனைத் திருத்தவேண்டும் என்பதற்காகத்தான் சிறையில் அடைக்கவேண்டும். சாதாரண குற்றவாளியாக இருந்தால் சிறைத்தண்டனை, கடுமையான குற்றவாளியாக இருந்தால், அதிலேயே வேறு விதமான தண்டனைகளை கொடுத்து திருத்துவதுதான் சமுதாயத்திலே உள்ள சமூக அமைப்பு. ஆனால் அதற்குப் பதிலாக சிறைச்சாலைக்கு ஒருவன் ஒரு தடவை சாதாரணமான வழக்கிலே சென்று விட்டால்கூட, அவன் திரும்பி வந்ததற்குப் பின்னால், தொடர்ந்து பல குற்றங் களைச் செய்யத்தான் நினைக்கிறானே தவிர, திருந்துவதற்கான உணர்வு அவனுக்கு வருவதில்லை. காரணம் நாம்தான் சிறைச் சாலைக்கு போய் வந்துவிட்டோமே, தொடர்ந்து அங்கேதான் போகப்போகிறோம். அதைச் செய்தால் என்ன? இதைச் செய்தால் என்ன என்ற எண்ணத்தில் அவன் தொடர்ந்து குற்றங்களையே செய்து வருவதை பார்க்கிறோம்.

என்னுடைய ஊரில் ஒரு சிறு பையனை சிறு தவறு ஒன்றிற் காக கைது செய்து, சிறைச்சாலையில் அடைத்துவிட்டார்கள். தொடர்ந்து அவன் இன்று வரையில் 8, 9 தடவைகள் சிறைச்சாலைக்கு போய் வந்துவிட்டான். திருந்துவதற்கான முயற்சியே இல்லை. நமக்கு என்ன பெண்டாட்டியா, பிள்ளையா சிறைச்சாலைதான் நமக்கு வீடு, ஆகவே எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்று அவன் நினைத்து அதன்படியே நடப்பதை பார்க்கிறோம்.



அதைப்போல தமிழகத்தில் கிட்டத்தட்ட 4,000 கைதிகள் சிறைச் சாலையில் அடைக்கப்பட்டு, விசாரணைக்கே அவர்களை கொண்டு வராமல், சிறையிலேயே ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டுகள் அடைக்கப்படுவதினால் வாடி வதங்குகிறார்கள் என்ற நிலைமையை நான் சில நாட்களுக்கு முன்னால் பத்திரிகையில் பார்த்தேன். இது எவ்வளவு கொடுமை. காரணம் கேட்டால், அவர்களை சிறைச்சாலைகளில் இருந்து விசாரணைக்கு அழைத்து வர போதிய காவலர்கள் இல்லை, விசாரிக்க போதிய மேஜிஸ்ட் டிரேடுகள் இல்லை, கோர்ட் விசமுறை இப்படி பல காரணங் களைச் சொல்கிறார்கள். அங்கேயே அவர்களை 2,3 ஆண்டு களுக்கு ரிமாண்டில் வைத்திருக்கிறார்கள். இப்படி 4,000 பேர் கள் சிறையிலே வாடி வதங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அந்தச் செய்தி சற்று வேதனையைத் தருகிறது.

அரசாங்கம் இந்த விஷயத்தில் உடனடியாக நடவடிக்கை எடுத்து உடனடியாக அவர்களை விடுதலை செய்யும் வகையில், அதற்காக தீர்ப்பு வழங்குகிற முறையிலே நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளவிரும்புகிறேன்.

இதைப்போலவே இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். சிறைச்சாலை என்று சொன்னாலே ஜனங்களுக்கு ஏதோ ஒரு அச்ச உணர்வு ஏற்படுகிறது. குற்றம் செய்தவன் எப்படி அச்சப்படுகிறானோ, அதுபோலவே குற்றம் செய்யாதவனும் அச்சப்படுகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. காரணம் எங்களைப் போன்றவர்கள்—அதாவது அரசியல்வாதிகள் ஏதாவது ஒரு காலககட்டத்தில் சிறைச்சாலைக்கு செல்வது என்பதுதான். மக்களிடையே மரியாதை உணர்வை தோற்றுவிக்கும் ஒரு செயலாகும். நான் இப்போது சொல்வதால் திருடு போன்ற குற்றங்களைச் செய்துவிட்டு சிறைச்சாலைக்குப் போவது அல்ல, சமுதாயத்திற்காக, மக்கள் நலனுக்காக போராட்டங்களில், கிளர்ச்சிகளில் ஈடுபட்டு, சிறைச்சாலைக்கு சென்று வந்தால்தான், அரசியல்கட்சியில் உள்ளவர்களை முழு அரசியல்வாதி என்று இந்தியாவிலும் சரி' தமிழகத்திலும் சரி, ஒப்புக் கொண்டுள்ளார் கள். அந்த வகையில் நாம் எல்லோருமே சிறைச்சாலை சென்ற வர்கள்தான், ஒரிருவர்களைத் தவிர. அப்படிச் செல்லும்போது அங்கே நடைபெறுகிற காரியங்களைப் பார்க்கிறபோது நமக்கே மிகவும் வேதனையாக இருக்கிறது.

காரணம் பெரிய குற்றங்களைச் செய்தவனோடு, கொலை காரர்களோடு சாதாரணமான பிக்பாக்கெட் போன்ற குற்ற வாளிகளை சேர்த்து அடைத்து வைக்கிறார்கள். அதன் விளை வாக அங்கே பல்வேறு குற்றங்கள் நடைபெறுகின்றன. அதனால், அவர்கள் விடுதலைப்பெற்று வெளியே வரும்போது மேற்கொண்டு பல குற்றங்களை அறிந்தவர்களாகவே வெளியே வருகிறார்கள். அதைப்போல 1,600 பேர்களை அடைக்க வேண்டிய இடங்களில் 2,400, 2,600 பேர்களையும் அடைக்

கிறார்கள். எமர்ஜென்சி போன்ற காலங்களில் 10,000 பேர்களை அடைக்கிறார்கள். வெளியிலே இருக்கக் கூடிய இரும்புக்கம்பி களுக்குள்ளும் அவர்களை அடைத்து வைக்கிறார்கள். ஆனால் இவ்வளவு பேர்களையும் ஒன்றாக அடைக்கிற நேரத்தில், அவர்களுக்கு வேண்டிய சுகாதார வசதிகளைக்கூட செய்துக் கொடுக்க அரசு தவறிவிடுகிறது.

ஒரு சமயம் விலைவாசி போராட்டத்தில் சிறைச்சாலை சென்றிருந்தோம். மற்றொரு சமயம், காமராசர் அவர்கள் உயிரோடு இருந்த நேரத்தில் என்று நினைக்கிறேன்—அப்போது மதுவிலக்கை ஆதரித்து, மதுக்கொண்டு வந்ததை எதிர்த்து போராட்டம் நடத்தி சிறையிலே இருந்த நேரத்தில், எங்களுக்கு அரசியல் கைதிகளுக்கு தண்ணீர் கிடைக்கவில்லை. உணவு கூட கிடைக்கவில்லை. உணவு கொடுக்கவேண்டும் என்று சொன்னால், திடீரென்று அடைக்கப்பட்ட 5,000 பேர்களுக்கு உணவு சமைத்துப் போட ஆள் இல்லாத காரணத்தால், சிறு சிறு பையன்கள் யாராவது ரோட்டிலே போய்க்கொண்டிருந்தால், அவர்களை சந்தேக கேஸில் கைது செய்துக்கொண்டு வந்து அரசியல் கைதி களுக்கு சமைத்துப்போட, எடுபிடி வேலை செய்ய, துணிகளைத் துவைக்க, உணவு அண்டாக்களைத் தூக்கி வைக்க என்ற வகை யில் வேலைகளை வாங்கினார்கள். இது எவ்வளவு கொடுமை யான முறை. இந்த முறைகள் மாற்றப்படவேண்டும். தேவை யான பணியாளர்களை அமைக்கவேண்டும். எங்கே சந்தேக கேஸில் பிடிக்கப்பட்டுவிடுவோமோ என்று சாதாரண மக்களும் இதனால்தான் பயப்படுகிறார்கள். ஆகவே, தேவையான பணி யாளர்களை சிறைச்சாலைகளில் போட்டு, கைதிகளைத் திருத்தி அவர்கள் வெளியே வரும்போது, ஒரு புதிய வாழ்க்கையை சரியான முறையில் அமைத்துக் கொள்ளும் வகையில் அவர்களுக்கு நெறிமுறைகளையும், வசதிகளையும் சிறையில் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறைச்சாலைகளிலிருந்து வரும் நன்னடத்தை கைதிகளுக்கு நம் அரசு மத்திய அரசோடு பேசி தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் பேசி ஏதாவது ஒரு வகையில் கடன் வழங்கி அதன்மூலம் அவர்கள் நல்வாழ்க்கை, புது வாழ்க்கையை ஆரம்பிக்கும் ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அதன் மூலம் அவர்கள் திருந்தியவர்களாக வெளியே வர வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் கமிஷன் அறிக்கையைப் பொறுத்த அளவிற்கு இந்த அரசாங்கம் என்னென்ன நடவடிக்கைகளை எடுத்தது என்பதை ஓராண்டு ஆகியும்கூட இன்னும் தெரிவிக்காதது சற்று வியப்பாகவும், அதோடு வருத்தத்தைத் தருவதாகவும் இருக் கிறது. இந்த அறிக்கையின்மீது எடுத்த நடவடிக்கைகள் பற்றி வெளியே சொல்லியிருந்தால், இன்னின்ன நடவடிக்கைகளை



எடுத்திருக்கிறோம் என்று சொல்லியிருந்தால் இன்றைக்கு இந்த விவாதமே வந்திருக்காது என்று சொல்லிக்கொண்டு இந்த அறிக்கைமீது விரைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டு மென்று கேட்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மத்திய சிறையில் 1979 ஆம் ஆண்டு இறந்த இரண்டு ஆயுட் கைதிகள் மறைவு குறித்து மாவட்ட நீதிபதி திரு. எம். ஏ. முருகேசன் கமிஷன் அறிக்கைமீது சில கருத்துக்களை காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பாக சொல்ல விழைகிறேன்.

சுதந்திரப் போராட்டக் காலத்தில் ஜாலியன்வாலாபாக்கில் ஜெனரல் டயர் சுட்டுக் கொன்றதைப் போன்று நான்கு சுவர் களுக்கு மத்தியில் சிறைக்காவலர்களால் சுட்டுப் பொசுக்கிய சம்பவம் நடைபெற்றிருக்கிறது. கைதிகளுடைய வாக்குமூலங்களி லிருந்து நாம் அறிவது கருப்பையா அவர்கள் அடித்துக் கொல்லப் பட்டார்கள். அவர்களுடைய பிரேதத்தை நாங்கள் பார்த்துத் தானாகவேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். அதிகாரிகள் அதை மறுத்து அவர்களை அடித்துத் துரத்தி துப்பாக்கியால் சுட்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், சிறை அதிகாரிகள் நிரபராதிகள் என்று சொல்வதற்கு காரணம் இல்லை என்பதற்கு ஒரு காரணம் அவர்கள் நிரபராதிகளாக இருந்திருப்பார்கள் என்று சொன்னால் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் அங்கே ஒரு கைதியைச் சந்திக்க வேண்டும் என்று கேட்டபோது அவர்களுக்கு அதற்கான அனுமதி ஏன் மறுக்கப்பட வேண்டும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அடிபட்ட கைதியின் உடலில் எங்கு எப்படிப் பட்டக் காயங்கள் இருக்கின்றன என்று மருத்துவ அதிகாரி கேட்டபோது அவர்களுக்கும் பதில் சொல்ல மறுத்திருக்கிறார்கள் ஒரு சட்டமன்ற உறுப்பினர் கேட்டும் அந்தக் கைதியைப் பார்க்க அனுமதிக்காமல், அந்தக் கைதியின் உடலில் உள்ள காயங்களுக்கு என்னென்ன மருந்துகள் போடப்பட்டன என்று மருத்துவ அதிகாரிக்குச் சொல்லாமல் இருந்ததும் அவர்கள் குற்றத்தை மறைக்க உடந்தையாக இருந்திருக்கிறார்கள் என்பதாகும்.

கமிஷன் அறிக்கையில்கூட மாரியப்ப தேவர் உடலில், முதுகில் வீக்கம் இருந்தது, அவர் தற்கொலை செய்துகொள்ள காரணமில்லை என்பது போன்ற காரண காரியங்களையெல்லாம் கூறியிருக்கிறார்கள்.

பொதுவாக சிறைச்சாலைகளில் இருப்பவர்கள் அத்தனை பேர்களும் குற்றவாளிகள் என்று நாம் சொல்லிவிட முடியாது. சந்தர்ப்பவசத்தால் நிரபராதிகள்கூட குற்றவாளிகளாக அங்கே செல்ல நேரிடும். சிறைச்சாலைகளுக்குச் செல்கிற குற்றவாளி களிடம் சிறைச்சாலைகளிலுள்ள அதிகாரிகள் குற்றவாளிகளை

திருத்துவதற்குரிய வகையில் நல்ல தாய் மனப்பான்மையோடு இருக்கவேண்டுமே தவிர காக்கி உடை அணிந்தவுடன் பந்த பாசங்களையெல்லாம் விட்டுவிட்டு, கடமை உணர்வோடு செயல்படவேண்டும் என்பதை மறந்துவிட்டு, இன்று தங்கள் சொந்த காழ்ப்புணர்ச்சிகளை அங்கே காட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத்தான் இந்த சம்பவம் எடுத்துக்காட்டுகிறது.

அதேபோல் அரசையும் பொது மக்களையும் ஏமாற்றி விட்டு சிறைக்கு வருகிறவர்கள் வேறு, பொது மக்கள் நலன் கருதி அரசின் கவனத்தை ஈர்க்க சிறைச்சாலைக்குச் செல்பவர்கள் வேறு. அங்கேயும் அரசியல் கைதிகளுக்கிடையே பாகுபாடு ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலைகூட சமீபத்தில் நாங்கள் நடத்திய மக்கள் எதிர்ப்புப் போராட்டத்தில் மதுரைசிறைச்சாலையில் நடைபெற்றது. எங்கள் போராட்டத் தொண்டர்கள் உள்ளே இருக்கிறார்கள். அங்குள்ள கிரிமினல் குற்றவாளிகளிடம் உங்களைப்பற்றி இவர்கள் தவறாகப் பேசுகிறார்கள் என்று சிறை அதிகாரிகள் தூண்டிவிட்டு அவர்கள் சிறையில் இருந்த தொண்டர்களை அடிக்க வரக்கூடிய ஒரு சூழ்நிலைகூட ஏற்பட்டது. இத்தகைய நிலைமைகளெல்லாம் சிறைச்சாலைகளில் இருந்து தவிர்க்கப்பட வேண்டும்.

இஸ்மாயில் கமிஷன் குற்றவாளிதான் என்று தீர்ப்பளித்தப் பிறகும்கூட வித்தியாசாகர் போன்றவர்களுக்கு பதவி உயர்வு அளித்திருப்பது மிகவும் மனதிற்கு சங்கடத்தைத் தருகிறது. அதேபோன்று இந்த முருகேசன் கமிஷன் அறிக்கையில் மாரியப்ப தேவர் இறந்தது தற்கொலை அல்ல என்று சொன்னபிறகும்கூட சம்பந்தப்பட்டவர்கள் மீது சரியான நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்றால் சிறைச்சாலைகளில் யாரை வேண்டுமானாலும் அவர்கள் அடித்துக்கொன்றாலும் தற்கொலை செய்துகொண்டார் என்று வெளியே சொன்னால் அரசாங்கம் நம்பிவிடும் என்ற எண்ணம் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு ஏற்பட்டு விடும். இந்தக் கமிஷன் அமைத்து இவ்வளவு காலமாகியும், காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்த்து உடனடியாக அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டு விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

(பிற்பகல் 12-40)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நீதிபதி முருகேசன் கமிஷனுடைய அறிக்கையின் முடிவுகள் பற்றி நடந்த விவாதத்தின் போது, குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் ஏ.குமான்கான் அவர்கள் சிலவற்றைச் சுட்டிக்காட்டினார்கள். நான் முதலிலே அதற்கு பதிலைத் தந்துவிட்டு, அடுத்து மற்றவற்றைப் பற்றிப் பேச விரும்புகிறேன்.

இது முருகேசன் கமிஷன் அறிக்கை பற்றிய விவாதத்திற்குத் தொடர்பில்லை என்றாலும்கூட, நீதிமன்றங்களில் பப்ளிக் பிராசிகியூட்டர், அடிஷனல் பப்ளிக் பிராசிகியூட்டர் போடாத நிலை இருக்கிற காரணத்தால், விசாரணைக் கைதிகள் நீதிமன்றங்களுக்கு வரமுடியாத நிலைமை இருக்கிறது என்ற பொருள்பட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். எந்த ஒரு நீதிமன்றத்திலும் பப்ளிக் பிராசிகியூட்டர் அல்லது அடிஷனல் பப்ளிக் பிராசிகியூட்டர் இல்லை என்ற நிலை இல்லை என்பதை நான் அவைக்கு முதலில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இதுகுறித்து ஏற்கனவே கூட, அரசு சார்பிலே ஒரு அறிக்கை விடப்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

சில நீதிமன்றங்களைக் குறித்து, பப்ளிக் பிராசிகியூட்டர் காலம் முடிந்து விடுகின்றபோதுகூட, முறைப்படி மனுக்கள் கோரப்பட்டு,

அடுத்தவர் நியமனம் செய்கின்றவரை, ஏற்கனவே பதவியில் இருந்தவர் தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்ற விதியின் அடிப்படையில் அவர்கள் அங்கே நீடித்திருப்பதால், அடிஷனல் பப்ளிக் பிராசிகியூட்டர் இல்லை என்ற நிலை எந்த நீதிமன்றத்திலும் இல்லை.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் நீதிமன்றங்களைப் பொறுத்தவரைக்கும் 34 நீதி மன்றங்களிலே சப்மாஜிஸ்திரேட்டுகள் இல்லை, 6 டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டுகளிலே நீதிபதிகள் இல்லாத நிலை இருக்கிறதென்று சொன்னார்கள். இந்த நிலை இருந்தது கடந்த காலத்தில், அதற்கான காரணத்தை இந்த அவையில் பலமுறை விளக்கிச் சொல்லியிருக்கிறேன். பத்திரிகைகளுக்கு ஒரு அறிக்கை இந்த அரசு மூலம் தரப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 52 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களை அனுமதிக்குமாறு உயர் நீதிமன்றம் கேட்டபோது, அரசுக்கு அதை ஆய்வு செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. காரணம், 1965-ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து சப்மாஜிஸ்ரேட்டுகள் பதவிகளைப் பொறுத்தவரைக்கும், வழக்கறிஞர்கள் மத்தியில் இருந்து யாருமே எடுக்கப்படாமல், அலுவலர்கள் மத்தியிலிருந்து, குறிப்பாக, செகரட்டேரியட் டிபார்ட்மென்டிலே இருந்தும், ஹெல்த் டிபார்ட்மென்டிலே இருந்தும், பி.டபிள்யூ.டி., அக்ரிகல்சர் டிபார்ட்மெண்டுகளிலே இருந்தும் இப்படி பலதுறைகளிலே இருந்து, அவர்கள் சட்டப் படிப்பு தபால் மூலம் படித்திருந்தால் கூட போதும், 3 ஆண்டுகள் அல்லது 5 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருந்தால் போதும் என்று, அவர்களை உயர்நீதி மன்றத்தைச் சார்ந்த இரண்டு நீதிபதிகள் அடங்கிய ஒரு குழு, அதற்கான தேர்வை நடத்தி, உயர்நீதி மன்றமே அவர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். அப்படித் தேர்ந்

தெடுக்கும்போது, வழக்கறிஞர்கள் மத்தியிலே இருந்து யாருமே தேர்ந்தெடுக்காமல் விட்டுவிட்ட காரணத்தால், இந்த அரசு வந்தபிறகு, அதற்கான ஒரு கொள்கை முடிவு எடுத்தோம்.

கிட்டத்தட்ட 1965 ஆம் ஆண்டில் இருந்து அப்படி எடுத்து விட்டார்கள். வழக்குரைஞர்கள் மத்தியிலிருந்து நீதிபதிகள் நியமிக்கப்படும்போதுதான் நீதிபரிபாலனம் மேலும் செம்மையாக இருக்கும் என்ற காரணத்தால் 11:9 என்ற ரேஷியோவில் நியமிக்கப்பட்டு வந்தது. 5:1 என்ற ரேஷியோவுக்கு மாற்றப் பட்டது. அதாவது ஐந்து பேர் வழக்குரைஞர்கள் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டால் ஒருவர்தான் அலுவலர்களிலிருந்து நியமிக்கப்பட வேண்டுமென்றும் அந்த ஒருவர்கூட சட்டம் பயின்றவராக சட்டத் துறையில் அனுபவம் பெற்றவராக அல்லது நீதிமன்றத்தில் சட்டம் பயின்ற அலுவலராக இருக்க வேண்டுமென்றும் விதிமுறைகள் கொண்டுவர அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. ஆக, 52 பேரில் தகுதிக்குட்பட்டவர்கள் 35 பேர் மட்டுந்தான் இருக்கிறார்கள். 17 பேர் குறைந்த பட்சம் ஐந்தாண்டுக் காலம் அனுபவம் கூட இல்லாதவர்களாக இருக்கிறார்கள் என்ற காரணத்தால், நேரடிபிகேஷனுக்கு மாறாக தேர்ந்தெடுக்கப்பட்ட காரணத்தால் விதிமுறைகளுக்கு மாறாக இருக்கிறது என்பதை அரசு உயர்நீதி மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தது. உயர்நீதி மன்றமும் அதனை ஏற்றுக்கொண்டு, தற்போது 34 நீதிமன்றங்களில் நீதிபதிகளும் 6 டிஸ்ட்ரிக்ட் முன்சீப்களும் தற்போது போடப்பட்டிருக்கின்றனர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து திரு. ரகுமான்கான் அவர்கள் ஒன்றைக் கூறினார்கள். கிரிமினல் ப்ரொசிஜர் கோட் 433—ஏ யில் மாற்றம் கொண்டு வரவேண்டும். ஆயுள் கைதிகளைப் பொறுத்தவரை 14 ஆண்டுக் காலம் முழுமையாக இருந்த பின்னால்தான் விடுதலை ஆக முடியும் என்ற நிலைமை இருக்கிறது. முன்னாலேயே விடுதலை செய்ய சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று சொன்னார்கள். நான் ஒன்றை அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதே அவையில் ஒரு சட்டத் திருத்தம்-சி. பி. சி. 433—ஏக்கு ஒரு அமெண்ட்மெண்ட்-433 பி என்ற அமெண்ட்மெண்ட் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பெற்று மத்திய அரசுக்கு அனுப்பப்பெற்றது. மத்திய அரசு அதை ஏற்றுக் கொள்ள வில்லையென்ற போதிலும் பத்தாண்டுகளுக்குமேல் சிறையில் இருக்கும் கைதிகளை விடுதலை செய்ய உச்ச நீதிமன்றம் 1978 ல் அளித்த தீர்ப்பு ஒருவாறு உறுதுணையாக இருக்கின்ற காரணத்தால் அதையொட்டி அட்வைசரி போர்டு பரிந்துரை பெற்று அந்த நடவடிக்கையை அரசு தொடர்ந்து மேற்கொண்டு செய்து வருகிறது. ஆனாலும் கூட 1978க்குப் பின்னால் சிறைக்குச் செல்லும் கைதிகள் கட்டாயமாக 14 ஆண்டுக்காலம் இருந்தாக வேண்டுமென்ற சூழ்நிலை இருக்கும் காரணத்தால் அந்தச் சட்டத் திருத்தத்தை மீண்டும் வலியுறுத்தி மத்திய அரசுக்குத் தெரிவிக்க அவையில் சட்ட முன்வடிவு வர இருக்கிறது

என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் பல்வேறு கமிஷன்கள் பற்றி எல்லாம் குறிப்பிட்டு அவைக்கு அறிக்கை வந்ததா என்றெல்லாம் கேட்டார்கள்.

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவர் அவர்களே, அப்போது கமிஷன் ரிப்போர்ட் அவையில் வைக்கவில்லை என்று சொல்லவில்லை. அவையில் வைக்கப்பட்ட அறிக்கைகளின்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றுதான் கேட்டேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இறுதியாக அவையில் பேசிய மாண்புமிகு சுந்தரராஜ் அவர்கள் பேசும்போது மத்திய அரசினுடைய சிறை நிர்வாக சீர்திருத்தப் பணிகள் இன்னும் அதிகமாக இருக்கவேண்டுமென்று கூறினார்கள். நான் மாண்புமிகு சுந்தரராஜ் மூலமாகச் சொல்லிக் கொள்ள விரும்புவது-சிறை நிர்வாக சீர்திருத்தத்தைப் பொறுத்த வரை மாநில அரசினுடைய பண வரம்பு என்ன என்று தெரியாதது அல்ல. மாநில அரசுகள் மத்திய அரசை வற்புறுத்தி, வற்புறுத்திக் கேட்டு சிறை நிர்வாகத்தைப் பொறுத்தவரை அதிகப்படியான நிதி ஒதுக்கீடு தரவேண்டுமென்று பல முறை கேட்டும் தேவையான அளவு நிதி ஆதாரத்தை ஒதுக்காமல் இருப்பது இதற்கு ஒரு முக்கிய காரணம் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12.50)

அரசைப் பொறுத்தவரைக்கும் சிறையில் இட வசதி அதிகமாக்கப்பட வேண்டும், சிறையில் இருக்கிற கைதிகள் மனிதாபிமான முறையில் கண்டிப்பாக நடத்தப்பட வேண்டும். நல்ல உணவு அவர்களுக்குத் தரப்பட வேண்டும், ஏனைய சுகாதார வசதிகளும் அவர்களுக்குக் கண்டிப்பாகத் தரப்படவேண்டும் என்பதிலே அரசு மிக அக்கறையோடு இருக்கிறது. ஆனால் நிதியைப் பொறுத்தவரையில் இருக்கிற பிரச்சினைகளின் காரணமாய் இன்றல்ல, நேற்றல்ல, கிட்டத்தட்ட 20 ஆண்டுக் காலமாக அந்த முயற்சி காங்கிரஸ் ஆட்சியிலே மேற்கொண்டும் அடுத்து தி.மு.க. ஆட்சியிலே மேற்கொண்டும் தற்போது மேற்கொண்டும் மைய அரசு வேண்டுகோளுக்கு செவிசாய்க்காமல் இருப்பதுதான் புதிய மேம்பாட்டுத் திட்டங்களை அமல்படுத்த முடியாத நிலைமைக்குக் காரணம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசிடம் வாதாடி சிறை நிர்வாகத்துறைக்கு அதிகப்படியான நிதியை ஒதுக்கித் தந்தால் பல ஆண்டுக் காலம் கூட அதற்காகக் காத்திருக்க வேண்டி இருக்காது, ஒரு ஆண்டுக் காலத்திலேயே இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னொன்றைச் சொன்னார்கள். அரசியல் கைதிகள் திடீரென சிறைக்கு வருகிறபோது சிறையிலே சமையலுக்கு ஆள் இல்லாமல் தெருவிலே செல்கிறவர் மீது ஏதோ ஒரு குற்றத்தைச் சுமத்தி உள்ளே இழுத்துச் சென்று சமையலுக்கு அல்லது சமையல்காரர்களுக்கு உதவியாக வேலை செய்யச் சொல்கின்றார்கள் என்று சொன்னார்கள். எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள், மாண்புமிகு திரு. சுந்தரராஜ் போன்றவர்கள் பொறுப்பானவர்கள் இதுபோன்ற ஆதாரமற்றவற்றைச் சொல்லக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களே, இன்னொன்றையும் சொன்னார்கள். கிட்டத்தட்ட 4 ஆயிரம் பேர்கள் விசாரணைக் கைதிகளாக சிறையிலே நீதிமன்றத்திற்குக் கொண்டு வரப்படாத நிலையில் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அது கூட முழுக்க சரியல்ல, 2 ஆண்டுக் காலம் 3 ஆண்டுக் காலம் இருப்பதாகச் சொன்னார்கள். இரண்டாண்டுக் காலம் மூன்றாண்டுக் காலம் என்ற நிலை இல்லை. தற்போது வந்த முல்லா கமிஷன்கூட பாரதத்திலேயே மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிறபோது தமிழ்நாட்டில்தான் விசாரணைக் கைதிகளிலே சிறைக்கு எடுத்துச் செல்லப்படாமல் இருக்கிற குறைபாடு குறைவாக இருக்கிறது—குறைபாடே இல்லை என்று சொல்லவில்லை—மிகக் குறைவாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறபடி 4 ஆயிரம் என்பதை முழுமையாக வாதத்திற்காக ஏற்றுக்கொண்டாலும்கூட அந்த 4 ஆயிரத்தில் ஒருவரை சமையலுக்குத் தேர்ந்தெடுக்கலாமே தவிர தெருவிலே போகிற நல்லவனை—நிரபராதியை சிறைக்கு இழுத்துச் சென்று வழக்குந் தொடர்ந்து சமையலுக்குப் பயன்படுத்த மாட்டார்கள், பயன்படுத்தவில்லை, ஆதாரங்களைச் சொல்லுங்கள், நடவடிக்கை எடுக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த முருகேசன் கமிஷனுடைய அறிக்கையைப் பொறுத்தவரைக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் பேசுகின்றபொழுது பல பிரச்சினைகளைப் பற்றி மிக ஆழமாகவும், தெளிவாகவும் எடுத்துக் கூறினார்கள். கமிஷன் அளித்திருக்கின்ற தீர்ப்பைப் பொறுத்த வரைக்கும் "As d scussed above I am of the v ew that the death of Karuppan is due to suic de by hanging with a rope is a fact and there is no truth in the Statem ut that he was b aten to death. என்ற தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அதையடுத்து "But the death of Mariappa Thevar by hanging with a t wel remains to be doubtf ul" எனும் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையையொட்டி அரசைப் பொறுத்தவரைக்கும் நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பேசுகின்றபோது தவறு செய்கிற அதிகாரிகள் என்று சொல்லப்படுகிற அதிகாரிகள் மீது என்ன நடவடிக்கை எடுத்தது, கமிஷன் தீர்ப்பை வழங்கியதற்குப் பிறகு மேற்கொண்டு



தொடர்ந்து என்ன நடவடிக்கை எடுத்தது என்று கேட்டார்கள். அதையொட்டி மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் பேசுகின்றபோது சொன்னார்கள். சட்ட சிக்கல்கள் இருக்கலாம். Thouh it is not possible to straightaway take action based on the finding of a Commission of Enquiry, action should have been pr ceeded on independent material" என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் சொல்லியதைப் போலவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே வார்டர், சங்குப் பிள்ளை பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். உதவி ஜெயிலர் சில்வஸ்டர். கிரேட் 1 வார்டர் திருநாவுக்கரசு கிரேட் 2 வார்டர் பாப்பு ஆகியவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. சி. ஐ. டி. கிரைம் பிராஞ்சை சேர்ந்த குற்றப் புலனாய்வுத் துறை இந்த விசாரணையை மேற்கொண்டு நடத்திவருகிறது.

விசாரணையின் அறிக்கைகூட அரசுக்குத் தற்பொழுது வந்திருக்கிறது; எனக்கு வந்துச் சேரவில்லை என்பதற்காகச் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்களும், மற்றவர்களும் பேசும்பொழுது புலனாய்வுத் துறை விசாரித்த பிறகு நடவடிக்கை பழுதுண்டு போகுமே என்ற அளவிற்குச் சிறையிலே சிலர் அச்சுறுத்தப்பட்டார்கள் என்பதைச் சுட்டிக் காட்டினார்கள். என்னிடத்திலேயும் நேரிலே சொல்லியிருக்கிறார்கள். இதுகுறித்துக்கூட சம்பந்தப்பட்ட துறைக்கு நான் கூறியிருக்கிறேன். கண்டிப்பாக குற்றவாளிகள் தப்பிக்க இந்த அரசு ஒருக்காலும் இடம் தராது என்பதை நான் ஆணித்தரமாகச் சொல்ல விரும்புகிறேன். புலனாய்வு அறிக்கையின் அடிப்படையில் கண்டிப்பாக நடவடிக்கைகளை உடனே அரசு எடுக்கும் என்று முதற்கண் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு உமாநாத் அவர்கள் பேசும்பொழுது பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னாலே சிறைத் துறை மேம்பாட்டுத் திட்டங்களை, சீர்திருத்த மேம்பாடுகளை இன்னும் விரைந்து நடைமுறைப்படுத்த வேண்டுமென்று சுட்டிக்காட்டினார்கள். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல நிதி ஆதாரப் பற்றாக்குறை ஒன்றுதான் இதற்கெல்லாம் தடைகற்களாக இத்தனை ஆண்டுகளாக இருந்து வந்திருக்கிறதே தவிர, நிதி போதிய அளவிற்கு மைய அரசிடத்திலிருந்து கிடைத்திருந்தால் இவைகளெல்லாம் எப்பொழுதோ நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்று என்பதை அரசு உணர்கிறது. இன்னும் பல்வேறு மேம்பாடுகளை விரைவாகக் கொண்டு வர வேண்டும் என்பதில் அரசு மிகவும் அக்கறையோடு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல சீர்திருத்தங்களைக் குறித்துப் பல ஆலோசனைகளை கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா அவர்களும் சுட்டிக் காட்டினார்கள். ஆயுள் தண்டனைக் கைதிகளை முடிந்த அளவிற்கு அவரவர்கள் இருக்கின்ற ஊர்களுக்குப் பக்கமாக இருக்கும்பொழுது பிரச்னைகள் மிகவும் குறைய வாய்ப்பிருக்கிறது என்று சொன்னார்கள். அரசு அதை ஒத்துக்கொள்கிறது. ஆனால் தற்போதிருக்கின்ற இடவசதி மிகவும் குறைவாகப் இருக்கின்ற காரணத்தால் சில சிறைச்சாலைகள் அதிக இட வசதியைக் கொண்டதாகவும், சில சிறைச்சாலைகள் குறை வான இடவசதியைக் கொண்டதாகவும் இருக்கின்ற காரணத் தால் சில மாவட்டங்களிலிருந்து தண்டிக்கப்படுகின்றவர்கள் எல்லாம் இடம் அதிகமாக இருக்கின்ற சிறைச்சாலைகளுக்கு அனுப்பப்பட வேண்டிய கட்டாயம் இருக்கிறது. ஆனால் இந்தக் குறைபாட்டைக் களைவதற்காக அரசு தீவிர நடவடிக்கை களை எடுத்து வருகிறது. இவ்வாறு பல சிறைச்சாலை களுக்கு இடவசதியை அதிகப்படுத்துவதன் மூலமும், மற்ற வசதிகளைச் செய்து தருவதன் மூலமும் கூடிய விரைவில்— நடப்பாண்டு பல இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்து இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதால் கிட்டத் தட்ட ஓராண்டு, ஒன்றரை ஆண்டுக் காலத்திற்குள் இந்த இட நெருக்கடிப் பிரச்னையைப் பெரிய அளவிற்குச் சமாளிக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

அதைப்போலவே, சுப்ரீம் கோர்ட் உத்தரவுப்படி விடுதலை செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். 1978–ஆம் ஆண்டில் அந்தத் தீர்ப்பு வழங்கியதற்குப் பிறகு நடவடிக்கை எடுக்கப் பட்டது. அவையிலே சட்ட முன்வடிவும் கொண்டு வந்தோம். ஆனால் மைய அரசு மறுத்துவிட்டது. மீண்டும் கொண்டுவர இருக்கிறோம். அதுமட்டுமல்ல, இந்தப் பிரச்னைபற்றி, 1978 ஆம் ஆண்டுக்கு முன் கைது செய்யப்பட்ட கைதிகள், பத்தாண்டுகளுக்கும் அதிகமாகச் சிறையில் இருந்திருந்தால் அவர் களை விடுதலை செய்ய வேண்டும் என்று உத்தரவு போட்டுக் கிட்டத்தட்ட கடந்த நான்கு மாத காலமாகப் பலர் விடுதலை செய்யப்பட்டு வருகிறார்கள். கிட்டத்தட்ட அனைவருமே விடுதலை செய்யப்பட வேண்டிய நிலைமை ஏற்படும் உச்ச நீதிமன்றத்தின் உத்தரவு நமக்கு உறுதுணையாக இருப்பதால் என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, கைதிகளினுடைய உணவைப் பாதுகாக்க, தரம் சீராக இருக்க, அதைப்போலக் குறைந்த அளவு அவர்களுக்குச் சென்று சேர்கிறது என்றக் குற்றச்சாட்டு வராமல் இருக்க பஞ்சாயத்துக்களை ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கருப்பையா அவர்களும் திரு. உமாநாத் அவர்களும் சொன்னார்கள். அதைப்பற்றி



திரு. உமாநாத் அவர்கள், நான் திருச்சிக்குச் சென்றபொழுது, சிறைச்சாலைக்குச் சென்றபொழுது சொன்னார்கள். அதைப் பரீட்சார்த்தமாக மதுரை சிறைச் சாலையில் நடைமுறைப் படுத்தினோம். அது வெற்றிகரமாகச் செயல்பட்டு வருவதால் அனைத்துச் சிறைகளுக்கும் அந்தத் திட்டத்தை அரசு நடை முறைப்படுத்தும். ஒவ்வொரு சிறைச்சாலையிலும் தேர்ந் தெடுக்கப்பட்ட கைதிகளைக் கொண்ட கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டு, அவர்களே உணவின் தரத்தையும், அதைப் போல உணவின் அளவையும் கண்காணிக்கின்ற பொறுப்பு ஏற்படும்பொழுது அதிகாரிகளில் சிலர் தவறு செய்ய எத்தனிக் கின்றபொழுது அப்படிப்பட்ட சிலரும் சிக்கிக்கொள்ளும் வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால் விரைவில் அரசு அதை நடை முறைப்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன்.

(பிற்பகல் 1.00)

பொருள்கள் வாங்குவதில்கூட, ஏற்கனவே பல குழுக்கள் கூறிய ஆலோசனையின் அடிப்படையில், தனியர் டெண்டர் மூல மாகத்தான் பெற வேண்டுமென்ற நிலையை எல்லாம் மாற்றி, கூட்டுறவுச் சங்கங்கள், அதுவும் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், ஊட்டியிலே இருக்கிற காய்கறி உற்பத்தி செய்கின்ற உற்பத்தியாளர் சங்கங்களிலிருந்து வருகின்ற காய்கறிகளை, சிறைச்சாலைகள் நேரடியாக வாங்க வேண்டுமென்று அண்மை யிலே உத்தரவிட்டிருக்கிறோம். கண்காணிப்புக் குழு வருகின்ற பொழுது இரண்டும் ஒருங்கிணைந்து செயலாற்றும்போது, கண்டிப்பாக வெற்றி கிடைக்கும் என்று அரசு நம்புகிறது.

அதைப் போலவே, கான்விக்ட் வார்டர் சிஸ்டத்தைப் பொறுத்த வரையில், அதை நீக்க வேண்டுமென்ற ஆலோ சனையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் அந்த முறை தொடர வேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் சொல்வதிலும் பொருள் இருக்கிறது என்று கருது கின்றேன். இவர்கள் சொல்வதிலும் பொருள் இருக்கின்றது என்று கருதுகின்றேன். இரண்டையும் ஆய்ந்து எது சரியான முடிவோ, அந்த முடிவுக்கு அரசு வரும் என்று சொல்லிக் கொள்கிறேன். (குறுக்கீடு) I understand that several commissions have recommended the abolition of convict warders.

அடுத்து, சிறையிலே இருக்கிற கைதிகள், அவர்களுக்குக் குறைகள் ஏற்படுகின்றபொழுது, அந்தக் குறைகளை, அவர் களுக்கு நேரடியாக இருக்கிற மேலதிகாரிகள் மூலமாகத் தெரி விக்கும்போது, அந்தக் குறைகள் அரசினுடைய கவனத்திற்கு வராமல் போகின்ற காரணத்தால், குறைகள் தொடர் குறை களாக இருக்கின்ற நிலைமையையும் அதை மாற்ற நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும் உமாநாத் அவர்கள் சொன்னார்கள். அந்த நல்ல ஆலோசனையை நான் ஆதரிக்கின்றேன். சீல் வைக்கப்பட்ட ஒரு பெட்டியிலே கைதிகள் மனுக்களைப்

போட்டு, அரசுக்கு நேரடிய க வராவிட்டாலும்கூட, ஐ. ஜி. என்ற அளவிலே, ஒரு உயர் அதிகாரிக்கு நேரடியாக வருகின்ற பொழுது, அதுவும் முறையாக இருக்கும் என்ற காரணத்தால, அந்தக் குறைபாடுகளைக் களைய முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதை நடைமுறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று கருதுகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலைக்குள்ளே, சட்டமன்ற உறுப்பினர்கள் சென்று பார்க்கக்கூடிய முறை முன்னால் இருந்ததே, இப்பொழுது அவர்கள் செல்லக் கூடாது, உள்ளே சென்று பார்க்கக் கூடாது என்று தடை விதிக்கப்படுகிறதே, அந்தத் தடையை நீக்கி, சட்டமன்ற உறுப்பினர்கள் சிறைச்சாலைகளுக்குச் சென்று அங்குள்ள நடைமுறைகளைப் பார்க்க அனுமதி வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் சிறைச்சாலைக்குச் சென்று வருகின்ற அனுமதி எப்பொழுது இருந்தது என்பது எனக்குத் தெரியவில்லை. But that would have been at the time when the Advisory Board was in existence என்று நான் கருதுகிறேன். ஆலோசனைக் குழுவை அரசு அமைக்க இருக்கிறது. அந்த ஆலோசனைக் குழுவில் சட்டமன்ற உறுப்பினர்களும் கண்டிப்பாக இடம் பெறுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர்களே, அதைப் போல, பல்வேறு நடவடிக்கைகளை, சிறைச் சீர்திருத்தம் குறித்து கடந்த கால வரலாற்றில் இல்லாத அளவிற்குத் தற்போது நாம் எடுத்து வருகிறோம். தற்போதுகூட கிட்டத்தட்ட ரூ. 8 கோடியே 62 இலட்சம் செலவில், கூடுதல் படியான அக்காமடேஷன் பெசிலிட்டிஸ், சிறைச்சாலைகளுக்குச் செய்வதற்கும், அதன்மூலமாக கைதிகளிடையே இடநெரிசல் இல்லாமைக்கும், வசதிகள் ஏற்படுத்துவதற்காக, இன்னும் ரூ. 6 கோடியே 31 இலட்சம் செலவில், சில திட்டங்களையும் அரசு நடைமுறைப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. இவையெல்லாம் பூரணமாக, முன்னேறக் கிட்டத்தட்ட 1½ ஆண்டுகாலத்திருந்து 2 ஆண்டுக் காலம் ஆகலாம். காரணம் கட்டிட வேலைகள் முதற்கொண்டு பல வேலைகள் இருக்கின்றன. இவை அனைத்தும் முடியும்போது, இந்தப் பிரச்னைகள் அனைத்தும் தீரும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

பரோல் கன்டிஷன்களைப் பொறுத்தவரையிலே, மதுரையிலே நடந்த நிகழ்ச்சியின் காரணமாக, அங்கு சில கட்டுப்பாடுகளை அதிகமாக விதிக்க வேண்டிய கட்டாய நிலை



ஏற்பட்டது. ஒரு கைதியை, விடுதலை செய்யக்கூடிய, தனக்கிருந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி, சூப்பரின்டென்டன்ட் விடுதலை செய்ய, கைதியுடைய நன்னடத்தை பற்றியும் கருதாமல், அவர் வெளியே சென்றால், அந்தப் பகுதியிலே அவருக்கு இருக்கிற எதிர்ப்பை அல்லது, அவர் கொண்டிருக்கிற கோப உணர்வு எப்படி இருக்கும் என்பதனையும் ஆராயாமல், விட்டுவிட்ட காரணத்தால, இரண்டு கொலைகள் நிகழ்ந்துவிட்டன என்பதை ஒட்டி, இதைச் சற்றுக் கண்டிப்பாக நடைமுறைப்படுத்த வேண்டுமென உத்தரவிட்டு, அது நடைமுறையில் இருந்து வந்தது. ஆனால் தற்போது, மாதங்கள் சில ஆகிவிட்ட காரணத்தாலும், அதனால் சில நல்லவர்களுக்கும், கிடைக்க வேண்டிய சலுகைகள், வசதிகள் கிடைக்க வாய்ப்பில்லாத காரணத்தாலும், அதை ஓரளவுக்குக் கண்டிப்பாக தளர்த்த வேண்டுமென்று அரசு முடிவு செய்து அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்சி ஜெயிலர் விஷயத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் சில குறைபாடுகள் இருப்பதாக என்னிடத்தில் சொன்னார் நானும் அவரிடம் வருகிறேன். என்று சொல்லி, நானே திருச்சி சிறைச்சாலைக்குச் சென்றேன் மாண்புமிகு உறுப்பினர் அவர்களையும் உடன் வாருங்கள் என்று அழைத்துச் சென்று குறைகளைக் கேட்டோம். அப்போது சில பிரச்சினைகளை பற்றி என்னிடத்திலே சொன்னார்கள். ஜெயிலரிடம் நான் விளக்கம் கேட்டேன், இவரைப் பற்றி அப்படி கூறியது உண்மையா என்று கேட்டதற்கு அவர் ஒரு விளக்கம் தந்திருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் மிகவும் பண்புமிக்க, திறமை மிக்க ஒரு அரசியல் வாதி. அவர் ஒரு பொது தொண்டிலே மிகச் சிறப்பாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். அவர் மீது மதிப்பும் மரியாதையும் அதிகமாக இருக்கிறது. அவரைப் பற்றி நான் அப்படிக் கூற வில்லை, அப்படிக் கூறுவதாக எண்ணுவதும் தவறு. அதற்காக வருத்தப்படுகிறேன் என்று சொல்லி இருக்கிறார். அதைத்தான் இந்த அவையின் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். கூட்டுறவுத் துறை மூலமாக நேரடியாகக் கொள்முதலை மேற்கொண்டு வாங்குகின்ற முறையினை மேற்கொண்டு இருக்கும்போது, இந்த டெண்டர் சிஸ்டம் என்ற ஒன்றிலே தலையிட்டு தவறு செய்கின்ற வாய்ப்பு அறவே ஒழிக்கப்பட வேண்டும் என்ற காரணத்தால் இந்த முறையை நடைமுறைப்படுத்துகின்ற போது குறைகள் களையப்படும் என்று கூறி நான் என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: துணைத் தலைவர் அவர்களே, டெண்டரை விட்டுவிட்டு, கூட்டுறவுத் துறையின் மூலம் சப்ளை வாங்குவதன் மூலம் வாங்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் அந்தக் கூட்டுறவுத் துறையில் உள்ள அதிகாரிகளும் கொல்லூட் பண்ணி, தனியார் சப்ளை செய்வதற்குரிய வாய்ப்பை ஏற்பாடு செய்து கூட்டுறவு வசதிகளும் கொடுக்கிறார்களே, அதற்கு என்ன செய்யப் போகிறீர்கள்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே தெளிவாகச் சொன்னேன். உற்பத்தியாளர்களிடமிருந்து இது பெறப்படுகிறது என்று சொன்னேன். நீலகிரியில் உள்ளகாய்கறி உற்பத்தியாளர்கள் கூட்டுறவு அமைப்பின்மூலம் விவசாயிகளே அங்கத்தினர்களாக உள்ள அந்த அமைப்பு நேரடியாகத் தரவேண்டும் என்று நடைமுறைக்குக் கொண்டு வருவதாக நான் சொன்னேன்.

திரு. வி.வி. சுவாமிநாதன்; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறைதண்டனையில் உள்ளவர்களை பரோலில் விடுவது அரசு உரிமையா? ஏன் என்றால், இப்போது உச்சநீதி மன்றம் பரோலில் விட்டுக் கொண்டிருக்கிறது, அதைப் பற்றி அமைச்சர் அவர்கள் என்ன கூறுகிறார்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பரோலில் விடுகின்ற அதிகாரம் சிறைக் காவலர்களுக்கும் இருக்கின்றது, அரசுக்கும் இருக்கின்றது. சில தனிப்பட்ட சூழ்நிலைகளில் உச்ச நீதிமன்றத்தில் வருகின்றபோது அதுவும் உத்தரவிடுகிறது.

திரு. அ. ரஹ்மான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஒரே ஒரு கேள்விக்கு மட்டும் விளக்கம் தரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். காரணம் அவர்கள் அதற்குப் பதில் சொல்லவில்லை. நேற்று கூட திரு. கிருஷ்ணய்யர் அவர்கள் இஸ்மாயில் கமிஷன் ரிப்போர்ட்டின் பேரில் இந்தச் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று கேட்டிருக்கிறார்கள். . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த விவாதத்திலே அது வராது. விவாதம் இத்துடன் முடிவுற்றது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (16-2-1982) காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.09 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

– எதுவுமில்லை –

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1981 பிப்ரவரி 16

மாசி 4, துன்மதி திருவள்ளுவர்–2013

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''திறன் அறிந்து சொல்லுக சொல்லை அறனும்

பொருளும் அதனின்ஊங்கு இல்''

கேட்போருடைய உள்ளம் ஏற்கும் பாங்கினை அறிந்து சொல்லுக. அதைவிட அறத்தின் பயனையும், பொருளின் பயனையும் தருவன வேறு ஒன்றும் இல்லை.

1. வினாக்கள்— விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

பெரியார் மாவட்டத்தில் குடிசைகளுக்கு மின்ஒளி வழங்கும் திட்டம்.

*வினா எண் 171—திரு ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) பெரியார் மாவட்டத்தில், மின்சார சாதனங்கள் இல்லை என்ற காரணத்தால் குடிசைகளுக்கு மின் ஒளி வழங்கும் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) மீண்டும் உடனடியாக அத்திட்டத்தைச் செயல் படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) அவ்வாறு மின் ஒளி வழங்கும் திட்டம் நிறுத்திவைக்கப்படவில்லை. (ஆ) இக்கேள்விக் இடமில்லை.

[1982 பிப்ரவரி 16

திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள விதிகளின்படி குடிசைகளுக்கு மின்னொளி கொடுக்கப்படவேண்டுமானால், அந்தக் குடிசை 200 சதுர அடி உள்ளதாகவும், அந்தக் குடிசையின் சுவர் மண்ணால் கட்டப்பட்டதாகவும் இருக்கவேண்டும் என்று இருக்கிறது. அதை மாற்றி, குடிசையின் பரப்பளவு 300 சதுர அடியாக இருக்கலாம் என்றும், அந்தக் குடிசையின் சுவர் கல்லால் கட்டப்பட்டு இருந்தாலும் மின்சாரம் கொடுக்கலாம் என்றும் அரசு ஆணையிடுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, 200 சதுர அடிக்கு மேற்படாமல் மண் சுவர் வைத்து கூரைவேயப்பட்டுள்ள வீடுகள் தமிழகத்தில் இன்னும் ஏராளமாக இருக்கின்றன. ஆகவே, முதலில் அத்தகைய இல்லங்களில் வாழ்கின்ற ஏழை எளிய மக்களுக்கு ஒளிதருகின்ற திட்டத்தை நிறைவேற்றிவிட்டுத்தான் மற்றவைகளைப் பற்றிப் பரிசீலிக்க இயலும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏராளமான விண்ணப்பங்கள் ஏற்கனவே அரசு அறிவித்த அந்த விதிகளின்படி வந்திருந்தாலும்கூட, பலமாதங்களாகியும் அதிகாரிகள் அதைப் பார்க்காமலேயே இருக்கிறார்கள் என்பதால் அரசாங்கம் ஏதாவது நிறுத்தி வைக்கவேண்டும் என்று உத்தரவிட்டுள்ளதா? அப்படியில்லையென்றால், அவற்றை உடனடியாகப் பரிசீலித்து இணைப்புக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்த அரசாங்கமே, அதை நிறுத்த வேண்டும் என்று உத்தரவிட்டு இருக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் எப்படி நம்புகிறார் என்று எனக்குத் தெரியவில்லை. இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரையில் 4,75,946 ஆகும். அவற்றில் மின்விளக்கு அளிக்கப்பட்ட இடங்கள் 4,09,370. மீதம் இருக்கின்ற 66,576 மனுதாரர்களுக்கும் விரைவில் மின்விளக்கு கொடுக்கவேண்டும் என்று மின்வாரியத்தை அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, இந்தக் குடிசைகளுக்கு மின் ஒளி வழங்கும் திட்டம் பேரூராட்சிப் பகுதிகளுக்குக் கிடையாது என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். ஆகவே, இந்தத் திட்டத்தை பேரூராட்சிப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கும் அடிப்படையில் அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



1982 பிப்ரவரி 16]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரிகள் சொல்வது உண்மைதான். விஸ்தரிப்பதற்கான திட்டம் எதுவும் இல்லை.

திரு. எல். இளையபெருமாள். பேரவைத் தலைவர் அவர்களே, இராமனாதபுரம் ஜில்லாவில் கலவர சமயத்தில் பாதிக்கப்பட்டு மின் விளக்கு வசதிகளை இழந்தவர்களுக்கு மீண்டும் மின் விளக்கு வசதி தேவை என்று எழுதிக் கொடுத்தும் அளிக்கப் படாமல் இருக்கிறது என்பது அமைச்சருக்குத் தெரியுமா? அவர் களுக்கு மின் விளக்குகளை உடனடியாகத் தரச்சொல்லி உத்தர விட்டு, அந்த மக்களுக்கு உதவி செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்கள, அது பற்றிய தகவல் இல்லை. அப்படி இருந்து இருக்குமானால் அது விரைவில் நிவர்த்திக்கப்படும், இராமனாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 22,528 மனுக்கள் வந்தன. அவற்றில் 22,522 குடிசைகளுக்கு ஒளி விளக்கு வழங்கப்பட்டு இருக்கிறது. 6 மனுக்கள்தான் பாக்கியிருக்கின்றன. அவற்றிற்கும் விரைவில் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. கே. ஆர். சுந்தரம்: தலைவரவர்களே, பேரூராட்சி களுக்கு இந்தத் திட்டத்தை விஸ்தரிக்கும் எண்ணம் இல்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். பேரூராட்சிகளிலும் பின் தங்கிய மக்கள், குடிசையில் வாழும் மக்கள் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கும் இந்தத் திட்டத்தை விஸ்தரிக்கும் நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன். தலைவரவர்களே, ஊர்ப் புறங்களிலுள்ள குடிசைகளுக்கு முதலிலே மின்சாரம் வழங்க வேண்டுமென்பது நோக்கம். மேலும் ஊர்ப் புறங்களில் இருக்கிற குடிசைக்கு மின்சாரம் வழங்கினால் அது அந்த குடிசையோடு தான் நிற்கும். ஆனால் நகராட்சிகளில் இருக்கிற அல்லது நகரப்புறங்களில் இருக்கிற குடிசைகளுக்கு மின்சாரம் வழங்கும் போது அது எங்கெங்கே போகும் என்பது தெரியும். ஆகையால் தான் ஊர்ப்புறங்களுக்கு மட்டும் இத்திட்டத்தை அமுல்படுத்து கிறோம்.

திரு. தி. கா. நல்லப்பன்: தலைவரவர்களே, இந்த குடிசை களுக்கு மின்சாரம் வழங்கும் திட்டத்தில் குடிசையாக இருந் தாலும் கீழே ஒரு அடி கல்சுவர் கட்டியிருந்தால் அது குடிசை வீடு அல்ல என்று சொல்லி, மின்சாரம் கொடுப்பதில்லை. அதை மாற்றியமைத்து, அதுவும் குடிசைதான் என்று சொல்லி, மின்சாரம் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, குடிசைகள் என்று சொல்லும்போது பல்வேறு வகைப்பட்ட குடிசைகள் இருக்கின்றன. நாங்கள் சொல்வது 200 சதுர அடி என்ற வரையறை உள்ள குடிசைகள். ஏனென்றால் மிகவும் மோசமாக இருக்கிற ஏழைகளுக்கு முதலில் இத்திட்டத்தை அமுல்படுத்த வேண்டும். 200 சதுர அடி என்கிறபோது 20–க்கு 10 என்ற அளவில்தான் வரும். இந்த அளவுள்ள குடிசைகள் கூட இல்லாமல் எத்தனையோ பேர் நடுவீதிகளிலே குடியிருக்கிறார்கள். 200 சதுர அடி கொண்டதும் வெறும் மண் சுவர் மட்டுமே எழுப்பி, கூரை வேய்திருக்கக்கூடியதுமான குடிசைகளுக்கு மின்சாரம் வழங்குவதுதான் இத்திட்டம். அது முடிந்தபிறகு ஒரு அடி கல்சுவர் வைத்திருந்தால் என்ன செய்யலாம், முழுவதும் கல் சுவராக இருந்தால் என்ன செய்யலாம் என்பது பற்றி பின்னால் பரிசீலிக்கலாம்.

திரு. இல. பலராமன்: தலைவரவர்களே, இத்திட்டத்தின்கீழ் குடிசையில் வாழ்கின்ற சாதாரண மக்கள் மின்சாரத்தைப் பெற்றுக்கொண்டு, அதை நல்லமுறையில் பயன்படுத்த முடியவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? போடக்கூடிய பல்புகள் சில மணி நேரத்திலேயே 'பியூஸ்' ஆகிவிடுகின்றன. காரணம், வோல்டேஜ் அதிகமாக இருக்கிறது. அவர்களாலும் மீண்டும் பல்பு வாங்கிப் போட முடியவில்லை. ஆகவே, வோல்டேஜை கட்டுப்படுத்தி பல்பு தொடர்ந்து எரிய உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, ஒரு பல்பு போடுகிறோம். பியூஸ் ஆனால் வேறு பல்பு அவர்களே போட்டுக்கொள்ளலாம். அதுகூட முடியவில்லை என்றால் நாம் என்ன செய்வது?

### தெருவிளக்குகளுக்கு பியூஸ் யூனிட் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 182— திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பரா—

தெருவிளக்குகளுக்கு பியூஸ் யூனிட் அமைக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இத் திட்டம் ஏற்கனவே அமுலில் உள்ளது.

திரு. தி. அன்பழகன்: தலைவரவர்களே. தற்போது எல்லா தெரு விளக்குகளுக்கும் இந்த 'ஃபியூஸ் யூனிட்' அமைக்கப்படவில்லை. எல்லா தெருவிளக்குகளுக்கும் பியூஸ் யூனிட் அமைத்தால் இப்படி அடிக்கடி ஃபியூஸ் போவது குறைக்கப்படும். ஆகவே தெருவிளக்கு எரியவில்லை என்ற குறையைப் போக்க இதை முழுமையாகச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தெரு விளக்கு எரியாததற்கு பல காரணங்கள் இருக்கின்றன. அவைகளில் இது ஒரு காரணம். ஆகையால் எங்கெங்கே இத்தகைய அமைப்புகள் தேவையோ அங்கெல்லாம் வைக்கச் சொல்லியிருக்கிறோம். அதேநேரத்தில் தெருவிளக்குகள் எரியாததற்கு தொழில் நுட்ப ரீதியான காரணங்கள் என்னென்ன என்பதை ஒவ்வொரு வட்டாரத்திலும் கண்டறிந்து தெரிவிக்க ஒவ்வொரு கோட்ட மின் பொறியாளரும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு. பாபு ஜனார்த்தனன்: தலைவரவர்களே, தெருவிளக்குகளுக்கு 'ஃபியூஸ் யூனிட்' அமைக்கும் முயற்சி இருந்தாலும் வடாற்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலைக் கோட்டத்தில் 70 சதவீதம் பல்பு போடப்பட்டிருந்தும் 20 சதவீதம் அல்லது 25 சதவீதம் கூடச் சரியாக எரியவில்லை. அதுபற்றி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும் தெரிவித்திருக்கிறோம். 'ஃபியூஸ் யூனிட்' அமைப்பது பற்றி மக்களுக்குக் கவலையில்லை; விளக்கு எரிய வேண்டும். ஆகவே, தெரு விளக்கு எரியாமல் போவதற்கு என்ன காரணம் என்பதைக் கண்டறிந்து, எல்லா விளக்குகளையும் எரியவைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் சொல்லியிருப்பதால் அங்கேயே பதில் பெற்றிருப்பார்கள் என்று கருதுகிறேன். இருந்தாலும், தெருவிளக்குகள் இப்போது பெருமளவுக்கு சீர் செய்யப்பட்டிருக்கின்றன என்பதுதான் மின்சார வாரியத்தைப் பொறுத்த வரையிலான தகவல். இன்னும் தொழில் நுட்ப ரீதியாக சில சிக்கல்கள் இருக்கின்றன. உதாரணமாக, பகலிலே வோல்டேஜ் குறைகிறது; நடுநிசியில் அதிகமாகிறது. அதனால் குண்டு பல்பு தாங்கவில்லை. போட்ட சில நாட்களிலேயே ஃபியூசாகி விடுகிறது. இந்தக் குறையை நிவர்த்திக்க 4 அடி குழல் விளக்குகளை எல்லா இடங்களிலும் அமைக்க வேண்டுமென்று மின்சார வாரியம் அண்மையில் உத்தரவிட்டிருக்கிறது. எந்தெந்த ஊராட்சி மன்றங்கள் அல்லது நகராட்சி மன்றங்கள் மின்சார வாரியத்திற்கு சேரவேண்டிய பணத்தை பாக்கியில்லாமல் ஒழுங்காக செலுத்தி வருகின்றனவோ அங்கெல்லாம் மின்சார வாரியத்தின் சொந்தச் செலவிலேயே இந்த 4 அடி குழல் விளக்குகளைப்போட இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற உள்ளாட்சி அமைப்பிலும் ஒழுங்காக பணம் கட்டினால் இந்த குறை மின்சார வாரியத்தினால் நிவர்த்தி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9.10)

**திரு. ந. குலசேகரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளக்குகள் இருந்தும் பல்புகளைப் பொருத்துவதற்கு ஆட்கள் குறைவாக இருக்கிறார்கள் என்று மின் திட்ட ஆலோசனைக் குழுக் கூட்டத்திலே அவர்கள் சொல்கிறார்கள். ஆகவே உடனடியாக ஆட்களை அதிகமாக அமர்த்துவதற்கு அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, ஆட்களை அதிகப்படுத்த வேண்டாமா அல்லது இருக்கின்ற ஆட்களினுடைய வேலைகளை மாற்றியமைப்பதன் மூலம் செய்ய முடியுமா என்பதைப் பற்றியெல்லாம் ஆராய்ந்துதான் முடிவு எடுக்க வேண்டும்.

**திரு. செ. சிவசாமி:** பேரவைத் தலைவரவர்களே, போடப்படுகின்ற பல்புகள் ரொம்பவும் சீப் க்வாலிட்டியாக இருப்பதால் தான் அடிக்கடி ஃபியூஸ் போய்விடுகிறது. ஆகவே உண்மையிலேயே நல்ல தரமான க்வாலிட்டி பல்புகளைப் போடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, நல்ல க்வாலிட்டியாகப் போடலாம். காஸ்ட்தான் அதிகமாகும்.

**திரு. செ. செம்மலை:** தலைவரவர்களே, சில சமயங்களில் ஏற்படுகின்ற அதிக மின் அழுத்தத்தின் காரணமாகத்தான் அடிக்கடி தெரு விளக்குகளின் பல்புகள் ஃபியூஸ் போகின்ற நிலைமை இருப்பதால் அதைத் தடுப்பதற்கு எலிமினேட்டரை ஒவ்வொரு கம்பத்திலும் பொருத்துவதற்கு ஏற்பாடு செய்து மின்சாரத்தைச் சீராக்குவதற்குரிய வழிமுறையினை அரசு ஆராயுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, இது போன்ற தொழில் நுட்ப விவரங்களைப் பற்றி எல்லாம் கேள்வி நேரத்திலே எடுத்து விளக்குவது கடினம். ஆகவே மின் வாரிய நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தின் போது விரிவாகப் பேசலாம்.

**திரு. மு. அப்பாதுரை:** தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது இருக்கின்றவர்களுக்கு எப்படி வேலை கொடுப்பது என்று கேட்டார்கள். அமைச்சரின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். ஹெல்ப்பர் என்று சொல்லக்கூடிய அடிப்படை ஊழியர்கள் உயர் பதவி பெற்று மேலே சென்றுவிட்டார்கள். ஆகவே இப்போது ஹெல்ப்பர்கள் குறைவாக இருக்கிறார்கள் என்று கேள்விப் படுகிறேன். ஆகவே அடிப்படை ஊழியர்களை உடனடியாக அதிகமான அளவிலே வேலைக்கு அமர்த்துவதற்கு அரசு ஆலோசிக்குமா?



**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, பதவி உயர்வு பெற்றுப் போவது பாவம் இல்லை. ஆனால் இந்த வேலைகளைச் செய்வதற்குப் புதிதாக ஆட்களைப் போட வேண்டுமா அல்லது இருக்கின்ற பணிகளை பங்கிட்டுச் சீரமைப்பதன்மூலம் இதைச் சரி செய்வதற்கு வேறு வழிகள் இருக்கின்றனவா என்பதைத்தான் நான் சொன்னேன். ஆகவே இவற்றை எல்லாம் யோசித்து அதற்குப் பிறகுதான் முடிவு எடுக்க வேண்டும்.

**திரு. ச. பாவகிருஷ்ணன்:** தலைவரவர்களே, கிராமப்புறங்களிலும் சென்னை நகரிலே இருப்பதைப்போல் சோடியம வேப்பர் விளக்குகளைத் தெரு விளக்குகளாக அமைக்க அரசு முன்வருமா? அப்படிப்பட்ட விளக்குகள் நல்ல ஒளி வெள்ளமும் தரும், நீண்ட நாட்களுக்கும் உழைக்கும். ஆகவே அதுபோன்ற விளக்குகளை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, முதலீடு அதிகம் தேவைப்படும். ஊராட்சி மன்றங்கள் தாங்காது.

**திரு. மு. ப. முனுசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிகள் கலைக்கப்பட்ட பின் ஊராட்சிகளின் நிதியினை மின் கட்டணம் செலுத்தாமல் பலவிதமான செலவுகளுக்கு ஈடுகட்டி இருப்பதால் அதன்பேரில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

(பதில் இல்லை.)

### ஈரோட்டிலுள்ள கால்நடைத் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலை

***வினா எண். 183—திரு கு. ரமணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) பெரியார் மாவட்டம், ஈரோட்டில் கால் நடைத் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலையில் தீவனம் உற்பத்தி நடைபெறுகிறதா?

(ஆ) ஆம் எனில், என்னென்ன பொருட்களால் அந்தத் தீவனம் தயாரிக்கப்படுகிறது?

(இ) விவசாயிகளுக்கு தீவனத்தை விநியோகிக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** தலைவரவர்களே, (அ) சோதனை அடிப்படையில் இதுவரை சுமார் 100 டன்கள் கால் நடைத் தீவனம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

(ஆ) கீழ்க்கண்ட மூலப் பொருட்களிலிருந்து கால்நடைத் தீவனம் தயாரிக்கப்படுகிறது. எண்ணை எடுத்த கடலைப் புண்ணாக்கு, கோதுமைத்தவிடு, எண்ணெய் எடுக்கப்பட்ட அரிசித் தவிடு, வெள்ளைச்சோளம், மக்காச்சோளம், பருத்திக்கொட்டை புண்ணாக்கு, தாதுப்பொருட்கள், சாதாரண உப்பு, கரும்புச்சாறு கழிவு முதலியவைகள்.

(இ) இவ்வாலையின் பாதாள அறையில் தண்ணீர் (சீப்பேஜ் வாட்டர்) அதிகமாகப் புகுந்துவிட்டபடியால் இயந்திரங்கள் சிறிதளவு பழுதடைந்து உற்பத்தி தடைப்பட்டது. தேசிய பால்வள நிறுவனப் (நேஷனல் டெய்ரி டெவலப்மென்ட் போர்ட்) பொறியாளர்கள் இவ்வறையில் தண்ணீர் ஊடுருவதைத் தவிர்க்க பல முயற்சிகள் செய்து இப்போது வெற்றி பெற்றுள்ளனர். இதன் பின்னர் பழுதடைந்த இயந்திரமும் சரிபார்க்கப் பட்டுள்ளது. ஆனால் சிறு வில்லைகள் (பெல்லட்ஸ்) தயாரிக்கும் இயந்திரம் இன்னும் சரிவர வேலை செய்யவில்லை. இதுவும் பழுதுபார்க்கப்பட்டு இன்னும் ஒரு மாதகாலத்திற்குள் முறையான உற்பத்தி துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேற்கூறிய காரணங்களினால் இதுவரை முறையான உற்பத்தி தொடங்கவில்லை. உற்பத்தியாகும் கால்நடைத் தீவனம் இம்மாவட்டத்தில் உள்ள பால் கூட்டுறவு சங்கங்களுக்கு அவர்கள் தேவைக்கேற்றவாறு விநியோகம் செய்யப்படும். இதற்கான விலை அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய பால் விலையில் இருந்து கழித்துக் கொள்ளப்படும். கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையானது போக மீதி உள்ள உற்பத்தியைத் தனியார்களுக்கும் விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, அமைக்கப்பட்ட இரண்டு இயந்திரங்களில் ஒன்று பழுதடைந்துவிட்டது, ரிப்பேர் பண்ண வேண்டியிருக்கிறது என்றும், இன்னொரு முறை தொழிற்சாலைக்குள்ளே தண்ணீர் வந்து அதனால் உற்பத்தி நிறுத்திவைக்கப்பட்டதென்றும் கூறினார்கள். ஆரம்பத்திலே தொழிற்சாலையைத் துவங்கும் போதே இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படும் என்று ஆலோசனைகள் கூறப்படவில்லையா? அப்படியென்றால், அதற்குத் தேவையான முன்னேற்பாடுகள் செய்துகொள்ளவில்லையா? இதற்கு அரசு என்ன செய்திருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, எல்லா முன்னேற்பாடுகளுடனும், தக்க பாதுகாப்புகளுடனும்தான் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் பாதாள அறையில் தண்ணீர் வந்தது என்பது எதிர்பாராத வகையில் ஏற்பட்ட ஒன்று.





திரு. கு. ரமணி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இனி உற்பத்தி ஆரம்பித்து, நிறைய உற்பத்தி ஆனபிறகு, அந்தக் கூட்டுறவும் பால் சப்ளை ஸ்தாபனங்களில் இருக்கும்படியான விவசாயிகளுக்கு மட்டுமல்லாமல், கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய ஏழை விவசாயிகளுக்கு, மாட்டுத்தீவனம் கிடைக்காமல் கஷ்டப்படும் விவசாயிகளுக்கு, தற்போது நியாயவிலைக்கடைகளில் பொதுமக்களுக்கு உணவுப் பொருள்கள் கொடுப்பதுபோன்று இந்த மாட்டுத் தீவனங்களையும், கிராமப்புறங்களில் உள்ள ஏழை விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் மூலக் கேள்விக்கு விடையளிக்கிறபோது விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். கூட்டுறவு சம்பந்தப்பட்ட பால் உற்பத்தியாளர்களுக்கு முதன்மையான உரிமை கொடுக்கப்படும். அதற்கு மிகுதியாக இருக்கிற தீவனங்கள் மற்ற விவசாயிகளுக்கும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையில் விநியோகிக்கப்படும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் துறையில் கால்நடைத் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றே ஒன்றுதான் இயங்கி வருகிறது. அதே போல அனைத்து மாவட்டங்களிலும் ஒவ்வொரு தொழிற்சாலையை அமைக்கும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா? கால்நடைத் தீவனத்தைப்போல கோழித் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலையையும் துவங்குவதற்கு நாமக்கல் வட்டாரம் போன்ற இடங்கள் அதற்கு உகந்ததாக இருக்கும். அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் தொடங்கப்பட்டிருக்கிற இந்தத் தொழிற்சாலையைத் தவிர, ஏற்கெனவே இரண்டு தொழிற்சாலைகள் வட ஆற்காடு மாவட்டத்தில் ஆம்பூரிலும், சென்னை மாதவரத்திலும் கால்நடைத் தீவனம் தயாரிப்பதற்கென இயங்கி வருகிறது. இவைகளிலே 16 ஆயிரம் டன் அளவுக்கு மாட்டு தீவனங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பெரியார் மாவட்டத்தில் இருப்பது 3-வது தொழிற்சாலை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மற்ற ஆலோசனைகள், அவ்வப்போது உரிய நேரத்தில் பரிசீலிக்கப்படும்.

**மருந்து உற்பத்திக்கென தனி தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம்.**

*வினா எண் 184—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மருந்து உற்பத்திக்கென தனியாக தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டத்தின் விவரங்கள் யாவை?

(இ) எப்பொழுது இத்திட்டம் செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை—மகாபலிபுரம் நெடுஞ்சாலையில் ஆலத்தூர் கிராமத்தில் மருந்துத் தொழிலுக்கென தனியாக ஒரு தொழிற்பேட்டை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அத் தொழிற்பேட்டைக்குத் தேவைப்படும் 156 ஏக்கர் நிலங்களில், 145 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலங்களாகவும் மீதி பட்டா நிலங் களாகவும் உள்ளது. புறம்போக்கு நிலங்களை உரிமை மாற்றம் செய்தல், பட்டா நிலங்களைக் கையகப்படுத்துதல் சம்பந்த மானவை செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியருடன் கலந்து ஆலோசிக்கப்பட்டு வருகின்றன.

(அ) மேற்கூறிய தொழிற்பேட்டை அமைக்கப்பட்ட பிறகு அது தமிழ்நாட்டிலேயே மருந்துத் தொழிலுக்கான முதலாவது தொழிற்பேட்டையாக இருக்கும். First functional Industrial Estate for Pharmaceutical Industries in TamilNadu.

(இ) மேற்கூறிய தொழிற்பேட்டையில் நிலம் மற்றும் தொழிற்கூடங்கள் ஒதுக்கக்கோரி 83 தொழில் முனைவோர்கள், (Entrepreneurs) தலா ரூ. 2,000 கேட்பு வரைவோலை யுடன் 'சிப்காட்' நிறுவனத்திற்கு விண்ணப்பங்கள் அனுப்பி யுள்ளனர். மேற்கூறிய தொழிற்பேட்டையை 'சிப்காட்' நிறுவனத்திலிருந்து 'சிட்கோ' நிறுவனத்திற்கு மாற்றுவதற்கான செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 9-20)

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: இத் திட்டம் கூட்டுறவுத் துறையில் செயல்படுத்தப்படுமா அல்லது ஜாயின்ட் செக்டாரில் செயல்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: இந்தத் தொழிற்கூடங் களுக்கு மட்டும் ரூ. 48 இலட்சம் இப்போது ஒதுக்கப்பட்டிருக் கிறது. அதன் அடிப்படையில் தொழிற் கூடங்கள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. தனியாக அங்கே அவர்கள் தொழிலை நடத்தலாம்.

திரு. எம். ஆறுமுகம்: கோவை மாவட்டத்தில், நீலகிரி மாவட்டத்தில் சின்கோனாவிலிருந்து கொய்னா தயாரிக்கப் படுகிறது. அதே போல் வால்பாறையில் உள்ள சின்கோனா விலிருந்து தைலம் தயாரிக்கப்படுகிறது......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வி மருந்து உற்பத்திக்கென தனி தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் பற்றியது. அதையொட்டி துணை வினாக்களைக் கேளுங்கள்.





திரு. எம். ஆறுமுகம்: அதேபோல் சின்கோனாவிலிருந்து குடும்பக் கட்டுப்பாட்டிற்கான மருந்துகளும் தயாரிக்கப் படுகின்றன. எனவே கூட்டுறவுத் துறையில் அம்மாதிரி தொழில்கள் ஆரம்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: என்னிடம் தற்போது இதுபற்றிய விவரங்கள் இல்லை. தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: தமிழ்நாட்டிலே, ஏன் இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகத்தில் மருந்து உற்பத்திக்காக தனியாக ஏற்பட்டிருக்கக்கூடிய இந்தத் தொழிற்பேட்டையில் தனியாரிட மிருந்து எவ்வளவு தொகை பங்காக ஏற்க அனுமதிக்கப் பட்டுள்ளது? அரசு எந்தெந்த வகைகளில் இதில் முதலீடு செய் கிறது? எவ்வளவு பங்கு மூலதனத்தில் இதை ஏற்பாடு செய்ய அரசு தீர்மானித்திருக்கிறது என்ற விவரங்களையெல்லாம் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: ஏற்கெனவே நான் விவரமாக பதில் அளித்திருக்கிறேன். ரூ. 48 இலட்சம் அரசாங்கம் இதற்காக தொழிற்கூடங்கள் அமைக்க ஒதுக்கியிருக்கிறது. 83 பேர்கள் ரூ. 2000 என்றளவில் அவர்கள் முன்பணம் கொடுத் திருக்கிறார்கள். தொடர்ந்து பலரும் விண்ணப்பித்துக் கொண் டிருக்கிறார்கள். ஏறத்தாழ முதல் கட்டமாக 100 பேர்களுக்கு ஒதுக்கப்பட முடிவெடுத்திருக்கிறது. இதனால் அந்தத் தொழிற் பேட்டையில் ஏறத்தாழ பத்து கோடி ரூபாய் மூலதனம் அங்கே வர இருக்கிறது.

திரு. என். வரதராஜன்: மருந்து உத்பத்திக்காக தொழிற் பேட்டை என்பது சிறப்பானதுதான். ஆனால் நம் நாட்டில் இன்று மருந்து உற்பத்தித் தொழிலில் ஏகபோக உரிமையாளர்கள் ஒரு சிலர்தான் அதிக ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள் என்று ரிப்போர்ட் இருக்கிறது. ஆகவே இந்தத் தொழிற்பேட்டையில் இடம் பெறுகிறவர்கள் நடுத்தரத் தொழில் செய்கிறவர்களுக்கு இடம் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: முதல் கட்டமாக சிறிய அளவில் உற்பத்தி செய்கிற ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸில் உள்ள அந்தத் தொழில் முனைவர்களுக்குத் தான் இந்த முயற்சி. ஸிப்காட் மூலம் நடுத்தர, பெரிய தொழிற் கூடங்களுக்கு நாம் திட்டமிட்டு அதைச் செய்ய இருக்கிறோம்.

சென்னை மிருகக்காட்சி சாலையை வண்டலூருக்கு மாற்றும் திட்டம்.

*வினா எண் 185 திரு. இ. கணேசன்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) சென்னை மிருகக்காட்சி சாலையை தாம்பரத்திற்கு அருகில் உள்ள வண்டலூருக்கு மாற்றப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில் எப்போது மாற்றப்படும்?

(இ) யார் பராமரிப்பில் இயங்கும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) ஆம்.

(ஆ) 31-3-1982-க்குள் மாற்றப்படும்.

(இ) வனத்துறையின் பராமரிப்பில் இயங்கும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: 31-3-82க்குள் மாற்றப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதை மாற்றுவதற்கான காரணங்கள் என்ன? அதனால் என்ன பலன் என்று அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இது ஏன் மாற்றப் படுகிறது என்பதற்கு இந்த அவையிலே பலமுறை பதில் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே மூர்மார்க்கட்டுக்கு அருகில் உள்ள அந்த வன விலங்குப் பகுதி மத்திய ரெயில்வே விஸ்தரிப்புத் திட்டத்தையொட்டி அந்த இடத்தை அவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற சூழ்நிலை ஏற்பட்டு விட்டதும் இயற்கைச் சூழ்நிலை அங்குள்ள மிருகங்களுக்கு ஒத்துவராத நிலையிலும் நீண்ட காலமாக அதை மாற்றவேண்டுமென்று கருத்தை யொட்டியும் நல்ல சுற்றுப்புற சூழ்நிலையில் உள்ள இடத்திற்கு அந்த மிருகங்களை மாற்றவேண்டும் என்ற முடிவு எடுக்கப் பட்டது. அதையொட்டித்தான் வண்டலூர் பகுதியில் இந்த விலங்ககம் அமைக்கப்படும் திட்டம் உருவாகி இப்போது நிறை வேற்றப்பட்டு வருகிறது.

திரு. சு. பாலன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூர் மார்க்கட்டுக்கு அருகிலுள்ள மிருகக்காட்சிசாலை, சுற்றுப்புற சூழ்நிலை சரியாக இல்லாததால் வண்டலூருக்கு மாற்றப்படுவ தாகச் சொன்னார்கள். அப்படி மாற்றப்படுகிற நேரத்தில் இப்போது மிருகக்காட்சிசாலையில் உள்ள மிருகங்கள் பழமை யானவையாக இருக்கின்ற காரணத்தால் புதிய மிருகங்களை வெளிநாடுகளிலிருந்து கொண்டு வந்து புதிதாக அமைக்கப்பட இருக்கிற மிருகக்காட்சி சாலையில் அமைக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இப்போது அமைக்கப் படுகிற அந்த விலங்ககம், காட்சிசாலை உலகத்தரத்திலே ஒன்றாக அமையவேண்டும் என்ற கருத்தில் அது அமைக்கப் படுகிறது. ஆகவே அங்கே பல்வேறு மிருகங்கள், பறவைகள் நீர்வாழ் இனங்கள் எல்லாம், புதிய பறவைகளாக, மிருகங்களாக கொண்டு வந்து அங்கே வளர்க்கப்படும். அந்தத் திட்டமும் அதில் இணைக்கப்பட்டிருக்கிறது.



திரு. உ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே இருந்து சிறிது தூரத்தில் அமைக்கப்பட இருக்கின்ற இந்த மிருகக் காட்சிசாலை, தென் ஆப்பிரிக்கா விலே கூபேர்ட்ஸ் நேஷனல் பார்க்கில் இருப்பதுபோல் இயற்கையாக அந்த மிருகங்கள் பழகக்கூடிய வகையில் பார்ப் பவர்களுக்கு ஏற்றவாறு அமைக்கும் உத்தேசம் இந்த அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் இதைத்தான் முன்னாலே சொன்ன பதிலி லேயே குறிப்பிட்டேன். ஆப்பிரிக்கா கண்டத்தில், அந்த நாடு களில் இருக்கின்ற மிருகக்காட்சிசாலைகளை ஒட்டிய அளவிலே தான், இந்த மிருகக்காட்சி சாலையும் அமைக்கப்பட இருக் கிறது. அதனாலேதான், கிட்டதட்ட 800 ஏக்கர் நிலப் பரப்பு அங்கே ஆர்ஜிதம் செய்யப்பட்டு, இந்த விலங்ககம் அமைக்கப் பட்டு வருகிறது.

திரு. ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு தலைவர் அவர் களே, வண்டலூரில் அமைக்கப்பட இருக்கின்ற இந்த மிருகக் காட்சிசாலையைக் காண்பதற்கு பஸ் போக்குவரத்து வசதி, மற்றும் எலக்ட்ரிக் டிரெயின் வசதிகள் செய்து தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போதே அந்தப் பகுதிவரை மின்சார ரயில் போய்க்கொண்டிருக்கிறது. நகர பேருந்துகளும் போய்க் கொண்டிருக்கின்றன. பின்னாலே, அங்கேவிலங்ககம் உருவாக்கி யதற்குப் பிறகு. தேவைப்படுகின்ற அளவிற்கு இயற்கையாகவே அந்த வசதிகள் அப்போதைய சூழ்நிலைக்கு ஏற்றவாறு அதிகரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, புதியதாக் அமைக்கப்பட இருக்கின்ற மிருகக்காட்சி சாலைக்கு புதிய மிருகங்களும், பறவைகளும் வரயிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அண்மையில் பத்திரிகையில் பார்த் தேன். அஸ்ஸாம் மாநிலத்திலே உள்ள காண்டாமிருகங்களை பிற மாநிலங்களுக்கு மாற்றச் சொல்லியிருப்பதாக செய்தி வந்திருக்கிறது. அப்படி மாற்றுகின்றபோது, அந்த மிருகங் களை நம் மாநிலத்திலே அமைக்கப்பட இருக்கின்ற மிருகக் காட்சி சாலைக்கு கொண்டு வருவதற்கு ஆவன செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தப் பதிலைத்தான் முதலிலேயே தெரிவித்திருக் கிறேன். புதிய மிருகங்கள் அல்லது பறவைகள் கொண்டு வருகின்ற திட்டத்திலே, இதுபோன்ற அந்தக் கருத்துக்களும் அடங்கியிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மிருகக்காட்சி சாலையை வண்டலூருக்கு மாற்றுவதன் காரணமாக, அரசுக்கு ஏற்படக்கூடிய செலவு என்ன இதை ஈடுசெய்ய மத்திய அரசிடமிருந்தோ அல்லது ரயில்வே துறையிடமிருந்தோ ஏதாவது ஈடுதொகை பெறப் பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நீண்டகாலமாகவே மூர் மார்க்கெட் அருகில் இருக்கின்ற இந்த மிருகக்காட்சிசாலையை மாற்ற வேண்டு மென்று சென்னை மாநகராட்சியிடம் திட்டமிருந்தது. அரசிடமும்திட்டமிருந்தது. பொது மக்களும் அதை வற்புறுத்தி கொண்டு வந்தார்கள். நல்ல வேளையாக, ரயில்வே துறையினர் அந்த இடத்தை வேண்டுமென்று கேட்டதனால், அந்த நிலத் திற்கு அவர்கள் நஷ்ட ஈடுதொகையை வழங்கியிருக்கிறார்கள். ஆகவே இந்த மிருகக்காட்சிசாலையை மாற்றுவதற்கென தனியாக தொகை அவர்கள் வழங்கவில்லை.

## 1979 முதல் 1981 வரை தமிழ்நாடு அரசு தயாரித்த செய்திப்படங்கள்

*வினா எண் 186—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு 1979–1980, 1980-1981-ல் எத்தனை செய்திப்படங்கள் எவ்வளவு செலவில் தயாரித்து வெளியிடப்பட்டன?

(ஆ) 1981–82-ல் எத்தனை படங்கள் தயாரிக்க உத்தேசம்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) 1979-80, 1980-81 ஆண்டுகளில் தயாரிக்கப்பட்ட படங்கள் செலவழிக்கப்பட்ட தொகை பற்றிய விவரங்கள்:

| ஆண்டு. | படம். | எண்ணிக்கை. | செலவழிக்கப்பட்ட தொகை. |
|---|---|---|---|
| 1979–80 | செய்திப்படங்கள் | 14 | ரூ. 11,48,600.00 |
| | விளக்கப்படங்கள் | 6 | ரூ. 1,57,623.20 |
| 1980–81 | செய்திப்படங்கள் | 13 | ரூ. 9,49,600.00 |
| | விளக்கப்படங்கள் | 2 | ரூ. 82,768.37 |



(ஆ) 1981–82-ல் உத்தேசமாக தயாரிக்கப்படவிருக்கும் டங்கள் பற்றிய விவரம்:

| படம். | எண்ணிக்கை. |
|---|---|
| செய்திப்படம் | 18 |
| விளக்கப்படம் | 7 |

(முற்பகல் 9.30)

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்திப்படங்கள் அல்லது விளக்கப்படங்கள் என்று அறிவித் தார்கள். செய்திப்படங்கள் என்று சொல்லும்போது அமைச்சர் பெருமக்கள் கலந்து கொள்ளுகின்ற நிகழ்ச்சிகள்தான் செய்திப் படங்களா? விளக்கப்படங்கள் என்றால் என்ன விளக்கப்படங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: செய்திப் படங்கள் என்பது அமைச்சர் பெருமக்கள் கலந்து கொள்கிற அந்த நிகழ்ச்சிகள் என்று பொருள் அல்ல. அரசினுடைய செயல் திட்டங்கள், ஆக்கப்பணிகள், பல்வேறு முக்கியமான நிகழ்ச்சிகள் மத்திய அரசு அல்லது அமைச்சர்கள் தொடர்பான நிகழ்ச்சிகள் எவை மக்களுக்கு முக்கியம் என்று கருதப்படுகிறதோ அவை செய்திப்படங்களாகும். விளக்கப்படங்கள் என்பது சில துறை களுடைய கொள்கைகளை, திட்டங்களைத் தனியாக மக்களுக்கு விளக்குவது. விவசாயத்துறை, சுகாதாரத் துறை, கல்வித் துறை போன்ற துறைகளைச் சார்ந்த விவரங்களை மக்களுக்கு அளிக்க வேண்டுமென்ற அந்தக் காரணத்தின் அடிப்படையில் எடுக்கப் படுவது விளக்கப்படங்கள்.

திரு. கோவைத்தம்பி: செய்தித் துறை விளக்கப் படங்கள் என்று பல்வேறு துறைகளைப் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சினிமாத் துறையைக் குறித்து ஒரு விளக்கப் படம் எடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? சினிமாத் துறையில் எருமை மாடு என்று எழுதுகிற எருமை புத்தி எழுத் தாளர்கள் இருப்பதால் அந்தத் துறையில் இப்படித்தான் சினிமா எடுக்க வேண்டும். இளைஞர்களை, மாணவர்களைக் கெடுக்காது எப்படி எடுக்கவேண்டுமென்று விளக்கப்படம் எடுப்பார்களா?

மாண்புமிகு ஆர். எம். வீரப்பன்: சினிமாத்துறை எப்படி இருக்கவேண்டுமென்று விளக்கப்படம் எடுக்க முடியாது. சினிமா படங்களில் வருகிற கருத்துக்கள் ஆட்சேபனைக்குரியதாக இல்லையா என்பதை ஆராய தணிக்கை போர்டு இருக்கிறது. அது பொது மக்கள் பார்க்கக்கூடிய படம் என்று பார்த்து சான்றிதழ் வழங்குகிறார்கள். அவர்கள்தான் அதைப் பார்த்து பரிசீலிக்க வேண்டும்.

[1982 பிப்ரவரி 16

திரு பெ. சு. திருவேங்கடம்: மத்திய அரசு வெளியிடுகிற செய்திப் படங்களில் கூட எதிர்க்கட்சி மாநாடுகள், மற்றைய நிகழ்ச்சிகள் காண்பிக்கப்படுகின்றன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை எல்லா அரசியல் கட்சிகளில் மாநாடுகள் நடக்கின்றன. குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவர் திருச்செந்தூர் செல்லும் நெடும் பயணம், ஆளும்கட்சி செல்ல இருக்கும் நெடும் பயணம் போன்றவற்றையும் செய்திப்படங்களாக எடுத்துக் காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மத்திய அரசினுடைய செய்தித் துறை எந்த அடிப்படையில் அவர்களுடைய படங்களைத் தயாரிக்கிறார்கள் என்பது பற்றி அரசிடத்தில் தகவல் இல்லை. தமிழக அரசைப் பொறுத்தவரை நீண்ட நெடுங் காலமாக எந்த வழிமுறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றனவோ அந்த முறைகள்தான் இப்போதும் பின்பற்றப்பட்டு வருகின்றன.

திரு. எ. சி. சண்முகம்: அரசு செய்திப் படங்களை இவ்வளவு செலவில் தயாரித்தும் பல தியேட்டர்களில் காட்சிகளுக்கு முன் காட்டுவதில்லை. அவசியம் அந்தப் படங்களைக் காட்ட வேண்டுமென்று உத்தரவிட்டு நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இந்தக் குற்றச்சாட்டு பரவலாக இப்போது வந்து கொண்டிருக்கிறது. நாம் எடுக்கிற செய்திப் படங்களை மத்திய அரசினுடைய பிலிம் டிவிஷன் மூலந்தான் அரங்குகளுக்கு வழங்கி வருகிறோம். திரைப்படங் களுக்கு வழங்குகின்ற உரிமத்திலேயே இந்தத் திரைப் படங் களைக் காட்ட வேண்டுமென்பது முக்கியமான விதி. பல நேரங் களில் பல அரங்குகளின் சொந்தக்காரர்கள் செலவு கருதியோ, நேரத்தைக் கருதியோ இப்படிப்பட்ட செய்திப் படங்களைக் காட்டுவதில்லை என்ற புகார் வந்துக் கொண்டிருக்கிறது. அதைத் தடுக்கவும் முறையாகச் செய்திப் படங்கள் காட்டப் படவும் காட்டத் தவறினால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதற்கும் அரசு முயற்சிகளை மேற் கொண்டிருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி: ஆளுநர் உரை நிகழ்ச்சிகள், நிதிநிலை அறிக்கை நிகழ்ச்சிகள் போன்ற செய்திப்படங்களை எடுக்கும் போது ஆளும் கட்சிப் பகுதியில் க்ளோஸ் அப் ஆக காட்டப்படு கிறது. எதிர்த் தரப்பு வரிசையை அவ்வாறு காட்டுவதில்லை. அப்படி காட்டினாலும் லாங் ஷாட்டில்தான் காட்டப்படுகிறது எங்களையும் க்ளோஸ் அப்பில் காட்ட செய்தித் துறை முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: சட்டமன்றத்தின் மொத்தத் தோற்றத்தைக் காட்டுகிற நேரத்தில் இந்த அவை முழுவதும் தெரிய வேண்டுமென்ற அவசியத்தில் எடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப் போல் ஆளுநர் உரை என்று சொன்னால் ஆளுநர் படம் முக்கியமாகத் தெரிய வேண்டும். எதைச் சொல்ல வேண்டும், எதை விளக்க வேண்டுமென்று கருதுகிறோமோ அதை விளக்கியாக வேண்டும். ஆகவே ஆளுநர் உரையின்போது மற்றவர்களை எப்படிக் காட்ட வேண்டுமோ அந்த அளவுக்கு படம் எடுக்கப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : சமீபத்தில் இந்திய அரசின் செய்திப்படத் துறை வெளியிட்ட இரண்டு படங்களை நான் பார்த்தேன். ஓ, என். ஜி. சி. (ஆயில் அன்ட் நேச்சுரல் கேஸ் கமிஷன் சம்பந்தமாக) ஆராய்ச்சி பற்றிய படத்தையும் அதே போல் கவிஞர் இக்பால் அவர்களின் வரலாற்றுப் படத்தையும் கலரில் காட்டினார்கள். அது பார்ப்பதற்கு மிகவும் ரம்மியமாக இருந்தது. தமிழக அரசும் அதைப்போன்று கலரிலே செய்திப் படங்களைக் காட்டுவதற்கு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இப்போது கருப்பு வெள்ளை படத்தைப் பார்ப்பதற்கே மக்கள் பின்வாங்குகிற சூழ்நிலை உருவாகிக்கொண்டு இருக்கிறது. ஆகவே சில விளம்பரப் படங்கள் எல்லாம்கூட மிக அழகாகவும் கவர்ச்சிகரமான முறையிலேயும் தொழில் நுட்பங்கள் முன்னேற்றம் அடைந்திருக்கின்ற வகையிலேயும் இன்றைக்கு வண்ணத்திலே எடுத்துக்காட்டப்பட்டு வருகின்றன. இந்தச் சூழ்நிலையில் மக்கள் தெரிந்துகொள்ளக்கூடிய செய்திப்படங்கள் கவர்ச்சிகரமான முறையிலேயும் வண்ணத்திலேயும் எடுக்கப் படுவதுதான் நியாயம். ஆனால் அதற்காகும் செலவைப் பார்த்தால் அதிகமாக இருக்கிறது. மிக முக்கியமான மக்களுக்குப் பயன்படுகின்ற சில நிகழ்ச்சிகளையாவது கவர்ச்சி கரமாக வண்ணப் படத்திலே எடுக்க முடியுமா என்பதை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

மயில்களைப் பாதுகாக்கும் திட்டம்.

* வினா எண் 187 திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தேசிய பறவையான மயிலைப் பாதுகாக்கவும் இனப் பெருக்கம் செய்யவும் என்னென்ன திட்டங்கள் வகுக்கப் பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : 1972 ஆம் ஆண்டு வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாக்கப்படவேண்டிய விலங்குகளுள் மயில்களும் சேர்க்கப்பட்டுள்ளதால் இதனை யாரும் வேட்டையாடி பிடிக்க முடியாது. இதன் இனத்தைப் பெருக்குவதற்கும், இவைகளை நல்ல முறையில் பராமரிக்கவும், மரங்கள் வளர்த்தல், செக்டேம் அமைத்தல் போன்ற அபிவிருத்தி பணிகளை அரசு செய்து வருகிறது. விராலி மலையில் இப்பறவைகள் அதிகம் காணப்படுவதால் இதைப் பாதுகாக்க தனி அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

திரு. எஸ். என். இராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, வேடந்தாங்கல், விரா மலை சரணாலயங்களில் இத்தகைய பறவைகள் அதிகமாக இருக்கின்றன. அங்கே மயில் இனத்தைப் பெருக்குவதற்காக தனி கவனம் செலுத்தி இன விருத்தி செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, மயில்களைப் பொறுத்தவரையில் தனியாக இன விருத்தி செய்வதற்கான திட்டம் இப்போது எடுக்கப்படவில்லை என்று தெரிகிறது. அது இயற்கையாகவே அபிவிருத்தி அடைந்து வருகிறது. சுதந்திரமாகத் திரிகின்ற பறவையாக அது இருந்து கொண்டிருக்கிறது. ஒரு வேளை அது குறைந்து அரிதாகி விடுகின்ற நிலை ஏற்படுமானால் அதைப்பற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. மி. வின்சென்ட் : தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டில் ராட்சஸ மயில்கள் உள்ளனவா? சமீபத்திலே சிம்லாவில் ஒரு ராட்சஸ மயில் கமலஹாசனைத் தாக்கி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக பத்திரிகைகளிலே செய்தி வந்தது. ராட்சஸ மயிலுக்கும் தேசியப் பறவை மயிலுக்கும் இருக்கிற வேறுபாடு என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : தலைவர் அவர்களே, மயில் தேசியப் பறவை என்பது எந்தத் தகுதியின் அடிப்படையிலே கருதப்படுகிறது. அழகாக இருக்கின்ற காரணத்தினாலேயா அல்லது எண்ணிக்கையில் அதிகமாக இருப்பதாலா? எண்ணிக்கையிலே அதிகமாக இருக்கிற காரணத்தினால் என்றால் காகம் தான் இருக்கிறது என்று கருதுகிறேன். இதைப்பற்றிய தகவலை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தேசியப் பறவை என்று தேர்ந்தெடுத்தது மத்திய அரசு. ஆனால் எதனாலே தேர்ந்தெடுக்கப்பட்டது என்ற ஆராய்ச்சி தேவையில்லை. மயிலைப் பார்த்து மயங்காதவர்கள் உலகத்திலேயே யாரும் இருக்க முடியாது. அப்படிப்பட்ட அற்புதமான அழகையுடைய மயில் தேசியப் பறவையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதைப் பற்றி தெரிந்துகொள்ளக்கூடிய விவரங்கள் ரகசியங்கள் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.



### தமிழ்நாட்டில் சணல் சாகுபடி

* வினா எண். 188 திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் சணல் சாகுபடியைப் பற்றி ஆராய்ச்சி ஏதும் நடத்தப்பட்டனவா?

(ஆ) இது குறித்து விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) விவர அறிக்கை * அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

### மாநிலத்தில் தென்னைப் பயிரிடுவதை மேம்படுத்தும் திட்டம்

*வினா எண் 189 திரு. மெ. ஆண்டிஅம்பலம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மாநிலத்தில் தென்னை வளர்ப்பு திட்டத்தின் மூலம் அடுத்த ஐந்து ஆண்டுகளில் எவ்வளவு உயர்த்த அரசு திட்டமிட்டுள்ளது?

(ஆ) இந்த திட்டத்தின் மூலம் விவசாயிகளை மற்ற மாநிலங்களுக்கு அனுப்பி பார்வையிட அரசு முன்வருமா

(இ) சிங்கப்பூர், இலங்கையிலுள்ள ரகங்களை தமிழ் நாட்டில் பயிர் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) அடுத்த ஐந்து ஆண்டுகளில் 1985–86 முடிய கீழ்க்கண்டவாறு தென்னை பயிரிடும் பரப்பளவையும் தேங்காய் உற்பத்தியையும் அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது:—

(உற்பத்தி : கோடி தேங்காய்)

| | |
|---|---|
| 1981-82 உற்பத்தி. | 137.30 |
| 1982-83 உற்பத்தி. | 133 |
| 1983-84 உற்பத்தி. | 141.70 |
| 1984-85 உற்பத்தி | 153.40 |
| 1985-86 உற்பத்தி | 169.30 |

(ஆ) (இ) திட்டம் ஏதுமில்லை.

* 123ஆம் பக்கத்தில் இணைப்பு-I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[1982 பிப்ரவரி 16

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தென்னை மரங்களுக்கு நூற்றுக்கணக்கான மரங்களுக்கு நோய்கள் ஏற்பட்டு பாதிக்கப்பட்டு இருக்கிறது. அதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்பு கிறேன்.

[முற்பகல் 9.40]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அறியும். அதைத் தடுக்க முறையான நடவடிக்கைகளை வேளாண்மைத்துறை எடுத்து வருகிறது,

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர வர்களே, இந்தத் தென்னை உற்பத்தியில் அரசு அதிக கவனம் செலுத்தி வருகிறது என்பதை விவசாயிகளாகிய நாங்கள் அறிந்திருக்கிறோம். இருந்தாலும், கிராமங்களில் தென்னை உற்பத்தி செய்யும்பொழுது ஏற்கனவே பாதி விலைக்குத் தென்னம் பிள்ளைகளை அரசு கொடுத்து வந்தது. இப்பொழுதும் பாதி விலையில் கொடுக்கும் அந்தத் திட்ட அளவில்தான் இருக்கிறது. இப்படி பாதி விலையில் கொடுப்பது மட்டு மல்லாமல். உரத்தையும் மானியமாகக் கொடுப்பதற்கான வழி வகைகளை அமைச்சரவர்கள் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, தென்னை உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் ஒன்பதிற்கும் மேற்பட்ட திட்டங்களை நாம் கடைப்பிடித்து வருகிறோம். மாண்புமிகு உறுப்பினரவர்கள் தந்திருக்கின்ற விவரங்களின்படி இன்னும் அதை அதிகப்படுத்த என்னென்ன ஏற்பாடுகள் செய்ய வேண்டுமோ அவற்றை அரசு செய்யும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கிராமங்களில் தென்னை வளர்ப்பதற்காக முன்பு ஊராட்சி மன்றங்களில் 1/2 பாகம், 2/3 பாகம் என்ற அளவிற்கு மானியம் கொடுத்துத் தென்னைகள் வளர்க்கப் பட்டன. அந்தத் திட்டத்தை இப்பொழுது மீண்டும் அமல் படுத்தவும், ஊராட்சிகளில் கண்டிப்பாக 100 தென்னம்பிள்ளை களையாவது வைக்க வேண்டுமென்றும் ஆணையிட்டு கட்டாயமாகப் கிராமப் பகுதிகளில் தென்னை வளர்ப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அது குறித்து அரசு ஆராயும்.



1982 பிப்ரவரி 16]

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்லும்பொழுது துறை கவனித்து வருகிறது என்று சொன்னார்கள். குறிப்பாகச் சென்ற ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்திலும், தென்னார்க் காடு மாவட்டத்திலும் அதிகமான தென்னை மரங்கள் நோயினால் அழிக்கப்பட்டது அரசுக்குத் தெரியுமா? துறை எந்தெந்த இடங்களைக் கவனித்து வருகிறது என்பதைத் தெரிவிப்பதோடு, இப்படி நோயினால் தென்னை மரங்கள் அழிக்கப்பட்டு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவி செய்வதற்கு அரசு முன் வந்ததா? அப்படி எவ்வளவு உதவி செய்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மூலக் கேள்வி, மாநிலத்தில் தென்னை வளர்ப்புத் திட்டத்தின் மூலம் அடுத்த ஐந்து ஆண்டுகளில் எவ்வளவு உயர்த்த அரசு திட்ட மிட்டுள்ளது என்பது பற்றியது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் நோயைப்பற்றித் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

திரு. பொ. உக்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, ஆளுநர் உரையில் பட்டா வழங்கும்பொழுது ஒவ்வொருவருக்கும் ஒரு தென்னங்கன்றைக் கொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகச் சொல்லப்பட்டிருந்தது. விவசாயத் தொழிலாளர்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ஒரு தென்னம் பிள்ளையாவது கொடுத்துப் பரவலாகத் தென்னை உற்பத்தி செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, தென்னை உற்பத்தியை எவ்வளவு அதிகரிக்கச் செய்ய வேண்டுமோ அந்த வகையில் அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்பதுதான் அரசின் நோக்கம். மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவிக்கின்ற கருத்துப்படி அரசுக்கு விருப்பம் இருக்கக் கூடும். இருந்தாலும் நிதி நிலைமையைப் பொறுத்துத்தான் நாம் இதை முடிவு செய்ய முடியும்.

கூடுதல் நெல் விளைச்சலுக்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள்

* வினா எண் 190.—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா?

பகுப்பரட்சித் திட்டத்தின்கீழ் கூடுதல் நெல் விளைச்சலுக்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : * ஒரு விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

---

* 125ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்று உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி. பேரவைத் தலைவரவர்களே, அதிசய மனிதர் ஜி. டி. நாயுடு அவர்கள் பூசணிக்காய் அளவிற்குத் தக்காளி, கத்தரிக்காயெல்லாம் உற்பத்தி செய்து கண்காட்சியில் வைத்தார்கள். அதுபோலப் பூசணிக்காய் அளவிற்கு இல்லா விட்டாலும் வேர்க்கடலை பருமனுக்காவது நெல் உற்பத்தி யினைக் கோவை விவசாயப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, அரிசியைப் பொறுத்த அளவிலே நாம் விரும்பி உண்ணுகின்ற உணவு அது. அதிலே நாம் கண்காட்சி வைக்கின்ற ஆராய்ச்சி செய்ய முடியாது. எந்த அளவிற்குத் தேவையோ அந்த வகையிலே நாம் உற்பத்தியைப் பெருக்குகின்ற ஏற்பாடு களைச் செய்து கொண்டிருக்கிறோம். 1981-82—ல் நம்முடைய உற்பத்திக் குறியீடாக 65 இலட்சம் மெட்ரிக் டன்கள் இருக்கின்றன ஆகவே, எந்த வகையில் தேவையோ அந்த அளவிற்கு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே, சமீபத்தில் மேற்கொண்டுள்ள டி. என். ஏ. ஆராய்ச்சி மூலம் கிரீன் ரெவல்யூஷன் செய்ய முடியும் என்றும், பத்து அடி, பதினைந்து அடி உயரமுள்ள இராட்சச மனிதர்களையே உருவாக்க முடியும் என்று கூறி ஞாயிற்றுக்கிழமை இந்து பத்திரி கையில் பிரபல நியூரோ சர்ஜன் டாக்டர் இராமமூர்த்தி அவர்கள் இதே கருத்தைக் கூறியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட இராட்சச மனிதர்களையே உற்பத்தி செய்தால் இப்பொழுதுள்ள சிறிய நெல்மணி போதுமா? அதற்காகவாவது பெரிய அளவில் நெல் உற்பத்தியைச் செய்ய அரசு ஆராய்ச்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் வழங்கியிருக்கின்ற ஆராய்ச்சிக் கருத்துக்களுக்கு அரசின் சார்பாக நன்றியைக் கூறி, நம்முடைய வேளாண்மை ஆராய்ச்சித் துறை நிச்சயமாக அதையும் எந்தவகையில் பரிசீலிக்க வேண்டுமோ அந்த வகையில் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய நெல்லின் உற்பத்தியை அதிகரிக்க இங்கே அமைச்சரவர்கள் வைத்திருக்கின்ற அறிக்கையில் உயர் விளைச்சல் ரகங்களையெல்லாம் அறிமுகப்படுத்தியிருக்கின்றார்கள். பிரதான மாக இந்த விளைச்சல் கூடாததற்கான காரணம் பெரும்பகுதி யாக உள்ள சின்னச் சின்ன விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்காததால் விளைச்சல் உயர்வதற்குத் தடங்கலாக இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் உணர்ந்து நியாய விலை கிடைப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அமைச்சர் உணர்கிறார். உணர வேண்டியவர்கள் உணர வில்லையே என்பதுதான் இப்பொழுதுள்ள நிலைமை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளைப்பொன்னி என்கின்ற புதுரக நெல் இப்போதிருப்பதைவிட 50 சதவீதம் கூடுதல் மகசூல் கொடுக்கிறது என்றும் அதைப் போய் நோய்களே தாக்கவில்லை யென்றும் ஆனால், அதனுடைய அடிப்படை வித்துக்கள் தமிழகத்திலே விநியோகிக்கப்படவில்லை, சிங்கப்பூர் பகுதியிலே யிருந்து கடத்திக் கொண்டு திருச்சிப் பகுதியிலே போடுகிறார்கள் என்றும் பத்திரிகையிலே எழுதியிருக்கிறார்கள். ஆகவே, அந்த வெள்ளைப் பொன்னி என்ற அதிக மகசூல் கொடுக்கின்ற நெல்லை தமிழக விவசாயத் துறையில் புகுத்தி, விவசாயிகளுக்கு வழங்க அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இதுபற்றி தகவல் இல்லை. இருந்தாலும் பயன்படக்கூடிய நெல் ரகம் எதுவாக இருந்தாலும் அதை ஆராய்ச்சித் துறை ஏற்று, நிச்சயமாகப் பரிசீலிக்கும்.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மூன்றில் ஒரு பங்கு நிலப்பரப்பில்தான் பாசன வசதி உள்ளது. மூன்றில் இரண்டு பகுதி வானம் பார்த்த பிரதேசம். குறைந்த தண்ணீர் வசதியோடு உற்பத்தி செய்யக்கூடிய நெல் வகைகள் ஆராய்ச்சியிலிருந்ததே, அது முழுமையாக இன்று வெற்றி அடைந்து விதைக்குத் தகுந்த அளவுக்கு வந்து விட்டதா? இந்த அரசு கவனத்தில் வைத்துக்கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, ஓரளவுக்கு அதிலே வெற்றி கிடைத்திருக்கிறது. முகவை மாவட்டம் போன்ற பகுதிகளில் புழுதி நெல் என்ற நெல் ஓரளவு நன்றாக உற்பத்தியாகி வந்திருக்கிறது. ஆகவே, அரசு அதிலே கவனம்செலுத்துகிறது.

மருங்காபுரி தொகுதியிலுள்ள அரசு சாலைகளைப் பராமரிக்கும் பணி.

*வினா எண் 191—திரு. மே. அ. இராஜ்குமார்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:—

(அ) திருச்சி மாவட்டம் மருங்காபுரி தொகுதியில் உள்ள மிகவும் பழுதுபட்டுள்ள P.W.D. ரோடுகளை சரி செய்ய அரசுக்கு முறையீடு வந்துள்ளதா?

(ஆ) இதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது?

(இ) எப்பொழுது பழுது பார்க்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) அரசுக்கு முறையீடுகள் வரவில்லை.

(ஆ மற்றும் இ) இருப்பினும் இத்தொகுதியில் உள்ள அரசு சாலைகளைப் பராமரிக்க 1980–81 ஆண்டு பராமரிப்பு நிதியில் ரூ 3,03,300 ஒதுக்கீடு செய்யப்பட்டும், பேருந்து சாலைகள் திட்டத்தின்கீழ் ஐந்து சாலைப் பணிகளுக்கு ரூ. 24.87 இலட்சம் மதிப்பீட்டிற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

### சங்கனூர் பள்ளத்தின் மீது கட்டப்படும் பாலம்.

*வினா எண். 192—திரு. மா. சின்னராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கோவை பெருநகரோடு இரத்தினபுரி பகுதியை இணைக்கும் சங்கனூர் பள்ளத்தின் மீது கட்டப்பட உள்ள பாலம் கட்டும் பணி எந்த நிலையில் இருக்கிறது?

(ஆ) இத்திட்டத்தை விரைவில் முடிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) சங்கனூர் பள்ளத்தின் குறுக்கே கட்டப்பட வேண்டிய பாலப்பணி தமிழ்நாடு மாநில கட்டுமான வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டு வேலை துரிதமாக நடந்து கொண்டு வருகிறது.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது மேம்பாலத்திற்காக என்ன முதலீடு செய்யப்படுகிறது. திட்டத்தினுடைய காலம் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, ஏறத்தாழ ரூ. 4½ இலட்சம். ஓராண்டுக் காலத்தில் முடிக்கப்படும்.

திரு. மா. சின்னராசு: இதே இரத்தினபுரி பகுதியில், 1979-இல் மேட்டுப்பாளையம் நெடுஞ்சாலையை சத்தியமங்கலம் நெடுஞ்சாலையோடு இணைப்பதற்கான இணைப்புச்சாலைக்கு, அன்றைக்கு டெண்டர் கூட விடப்பட்டது. ஆனால், அந்தப் பகுதி மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட காரணத்தினால், அந்தத் திட்டத்தை மாநகராட்சிதான் ஏற்று நடத்த வேண்டுமென்று துறை முடிவு செய்ததால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது. அல்லது, அதை விரைவில் எடுத்து நடத்த அரசு பரிசீலனையில் இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, மாநகராட்சியே எடுத்துச் செய்ய வேண்டுமென்று தற்போது ஆணையிடப்பட்டிருக்கிறது.

திரு. கு. ரமணி: பேரவைத் தலைவர் அவர்களே, சங்கனூர் பெரிய பள்ளத்தில் பயங்கரமான அளவுக்குத் தண்ணீர் வந்து நாசக்கேடு உருவாகி, ஏற்கனவே ஒரு பாலம் கட்ட முயற்சித்த பொழுது, அந்தப் பாலத்துக்குக் கூட ஆபத்து ஏற்பட்டது. ஆகவே, பாலங்கள் கட்டப்படுவதற்காகப் பாதுகாப்பு வேண்டுமென்ற அடிப்படையில், அந்தப் பள்ளத்தினுடைய கரைகளைப் பலமான அளவுக்குக் கட்டுவதற்கு ஏற்பாடும் அதோடு சேர்த்து செய்யப்படுமா? அதற்கு ஏதாவது திட்டங்கள் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, கரைகளைப் பலப்படுத்துகிற திட்டமும் உள்ளது. அதையும் நிறைவேற்றுவோம்.

### 1-4-1974-க்கு முன் ஓய்வு பெற்ற ஊராட்சி ஒன்றிய பணியாளர்களுக்கான ஓய்வூதியம்.

*வினா எண். 193—திரு. க. வேணுகோபால்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—

ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரிந்து 1-4-1974-க்கு முன் ஓய்வு பெற்ற பணியாளர்கள் சங்கத்திடமிருந்து ஓய்வு ஊதியம் அளிக்கக்கோரி, கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஆம் தற்போது உள்ள விதிகளின்படி அவர்களுக்கு ஓய்வூதியம் அளிக்க இயலாது. எனினும் ஒரு குறிப்பிட்ட ஓய்வூதியம் Adhoc Pension அளிப்பது பற்றி பரிசீலிக்கப்படுகிறது.

திரு. க. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கிற நிலையிலே ஓய்வூதியம் அளிக்கப்படாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். இந்த விகிதாச்சார அடிப்படையில் வருகின்றவர்கள், தற்போது குறைந்த எண்ணிக்கை உடையவர்களாக இருப்பதால், அவர்களின் வயது வரம்பைக் கருத்தில் கொண்டும், அவர்களின் முதுமை நிலைமையைக் கருத்தில் கொண்டும், தற்கால நிலைமையை அனுசரித்தும் அவர்களுக்கு தற்காலப் பென்ஷன் அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, 1-4-1974-க்கு முன் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு குறிப்பிட்ட ஓய்வூதியமாக ரூ. 100 வழங்கும் செயற்குறிப்பு இப்பொழுது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

(முற்பகல் 9—50)

திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பென்சன்களை அந்தந்த நகராட்சிகளில் ஏற்படுத்துவதைப் போல, ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அளிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இதுபோன்ற பரிசீலனை தற்போது இல்லை.

திரு. உ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கும், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் ஸ்கேல் ஆப் பே-வில் வித்தியாசம் இருக்கிறது. அதை மாற்றி அவர்களுக்கும் அரசு ஊழியர்களைப் போல சம்பளம் தருவதற்கு அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பென்ஷன் பற்றிய கேள்வி. மூலக்கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, 1-4-1974-க்கு முன்பு, 1-4-1974-க்குப் பின்பு என்று பிரித்துக் காட்டுவது, நல்லதல்ல. அவர்களும் நம்முடைய ஊழியர்களாக இருந்து சேவை செய்து ரிட்டையரானவர்கள். அவர்களுக்குள் பாகுபாடு காட்டுவது சரியல்ல. அதை நீக்கி இருவருக்கும் ஒரே அளவு பென்சனை கொடுக்க அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அதுபோன்ற பரிசீலனை இல்லை.

திரு. ஏ. இராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணியாளர்களில் கார்டனர், வாட்ச்மேன் ஆகிய பணியாளர்கள் அடங்குவார்களா? இல்லையெனில் அவர்களுக்கும் இந்த ஓய்வு ஊதியம் வழங்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நிரந்தரமாகப் பணியாற்றுகிறவர்கள், 10 ஆண்டுகளுக்கு மேல் பணி செய்கின்றவர்கள் என்கின்ற வகையில் 1974-க்கு முன், 1974-க்குப் பின் என்று பாகுபாடு செய்யப்பட்டிருக்கிறது. அதன்படிதான் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம்.

திரு. க. இரா. சின்னராசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, 1974-க்கு முன் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்கு முன் என்றால் எந்தத் தேதியில் இருந்து அந்த ஓய்வூதியம் 100 ரூபாய் அரசு கொடுக்க முன் வந்திருக்கிறது.



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இந்த 1-4-1974-க்கு முன் என்றால் அதற்கு முன்னாலே பணியாற்றியவர்கள் அதற்குப் பின்னாலே 10 ஆண்டுகள் பணியாற்றியவர்கள் என்று பாகுபாடு செய்யப்பட்டிருக்கிறது

பெருந்துறை, கருமாண்டி செல்லிபாளையம் ஆகியவைகளை

இணைத்து நகராட்சியாக்கும் திட்டம்.

*வினா எண். 194—திரு. டி. கே. நல்லப்பன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பெருந்துறை வட்டம், பெருந்துறை, கருமாண்டி செல்லிப்பாளையம் ஆகிய இரு பேரூராட்சிகளை இணைத்து நகராட்சி ஆக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் செயல் திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்

(ஆ) பெரியார் மாவட்ட ஆட்சியாளர் இதற்கான செயற்குறிப்பை அரசுக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளார். அவரது செயற்குறிப்பு கிடைத்தவுடன் இதன் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி ஆக்குவதற்கு 'ஆம்' என்று மாண்புமிகு அமைச்சர் குறிப்பிட்டார்கள். ஆனால் அந்த இரண்டு பேரூராட்சிகளையும் இணைத்து, எந்த தேதியில் இருந்து நகராட்சியாக செயல்படும் என்று அமைச்சர் தெரிவிப்பாரா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, பெருந்துறை, கருமாண்டிசெல்லிப்பாளையம் என்ற இரு பேரூராட்சிகளையும் இணைத்து நகராட்சியாக்கவேண்டும் என்ற செயற்குறிப்புதான் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அவருடைய செயற்குறிப்பு அரசுக்குக் கிடைத்த உடன் பரிசீலிக்கப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன்: தலைவர் அவர்களே, இது நீண்ட நெடுங்காலமாக இருக்கின்ற பிரச்சினை. அதே சமயத்தில் மக்களுடைய தொகையும், 2 பேரூராட்சிகள் இணைக்கப்படுகின்றபோது நகராட்சிக்குத் தேவையான மக்கள் தொகை இருக்கின்றன. போதிய வருவாயும் இருக்கின்றது. ஆகவே இது செயற்குறிப்பிலே இல்லாமல் நடைமுறைக்கு வருவதற்கு அமைச்சர் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, செயற்குறிப்புகள் வைத்துத்தான் நடவடிக்கை எடுக்கப்படும். ஆகவே அந்த செயற்குறிப்புகள் கேட்கப்பட்டிருக்கின்றன. அது கிடைத்ததும் அதன் பேரில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப் படும்.

திரு ஆ. வெள்ளைச்சாமி : தலைவர் அவர்களே, பொதுவாக பேரூராட்சியை நகராட்சியாக உயர்த்துவதற்கு என்னென்ன தகுதிகள் தேவை. அனைத்துத் தகுதிகளிருந்தும் பொருளா தாரத் தகுதி பெறாவிட்டால் அரசே உதவி செய்து அந்தப் பேரூராட்சியை நகராட்சியாக ஆக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஒரு பேரூராட்சியை நகராட்சியாக மாற்றுவதற்கு சில விதி முறைகள் இருக்கின்றன. குறிப்பாக பொது இனங்களின் கீழ் அதன் ஆண்டு வருமானம் 2 லட்சம் ரூ. இருக்க வேண்டும். இதர வருவாய்களின் கூடிய மொத்த வருவாய் ஆண்டுக்கு 3 லட்சம் ரூபாய் இருக்க வேண்டும் மக்கள் தொகை 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டு இருக்க வேண்டும்.

**வேடசந்தூர் நகரில் பொது மருத்துவமனை அமைக்கும் திட்டம்.**

* வினா எண் 195—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வேடசந்தூர் தாலுக்காவிற்கென வேடசந்தூர் நகரில் பொது மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனை யில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வேடசந்தூரில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையத்தை எரியோட்டுக்கு மாற்றும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. வேடசந்தூர் வி. பி பாலசுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் தாலுக்காவாக மாற்றப்பட்டு, 13 ஆண்டுகள் ஆகிவிட்டன. இருப்பினும் தாலுக்கா மருத்துவ மனை இல்லாத தாலுக்காவாக வேடசந்தூர் உள்ளது. அங்கே யுள்ள மருத்துவ மனையில் படுக்கை வசதிகள் மற்றும் தாலுக்கா மருத்துவ மனையில் இருக்க வேண்டிய வசதிகள் செய்து தரப் படவில்லை. குறைந்த பட்சம் அந்தப் பகுதி மக்கள் 35 முதல் 70 கிலோ மீட்டர் வரையில் பயணம் செய்து தான் படுக்கை வசதி பெற்று மருத்துவ உதவி பெற வேண்டிய நோயா களுக்கு மருத்துவ வசதி பெற வேண்டியுள்ளது. ஆகவே, அங்கே உடனடியாக படுக்கை வசதி செய்து கொடுக்க வேண்டும். அல்லது அங்கேயுள்ள சுகாதார மருத்துவ நிலையத்தில் 25 முதல் 30 படுக்கை வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, அங்கே தாலுக்கா மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்றுதான் சொன்னேன். ஆனால் அங்கே இருக்கும் ஆரம்ப சுகாதார நிலயத்தை 20 படுக்கைகள் கொண்ட ஒரு பெரிய மருத்துவ மனையாக உயர்த்து வதற்கு 29-6-81 ஆம் நாளிட்ட அரசாணையில் உத்தரவிடப் பட்டுள்ளது ரூ 2.2 லட்சம் படுக்கை வசதிகள் செய்யவும், 2 லட்ச ரூபாய் கட்டிடங்கள் போன்றவற்றிற்காகவும் என்கிற அடிப்படையில் கிட்டத்தட்ட 5 லட்ச ரூபாய் செலவில் அங்கே யுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை விஸ்தரிக்க அரசு ஆணை யிட்டுள்ளது. அந்த மருத்துவமனை ஒரு தாலுக்கா மருத்துவ மனையில் உள்ள வசதிகளுக்கு ஒப்ப விஸ்தரிக்க உத்தரவிடப்பட் டுள்ளது இந்த உத்தரவு போட்டு 8 மாதங்கள் ஆகியிருக் கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு வேடசந்தூர் வி பி பாலசுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே. திண்டுக்கல்லில் இயங்கி வருகின்ற மருத்துவ மனையில் சிகிச்சை பெறுகின்ற நோயாளிகளில் 30% முதல் 50% வரையில் வேடசந்தூர் பகுதியைச் சேர்ந்த மக்களாகத்தான் இருப்பார்கள். ஆகவே, வேடசந்தூருக்கு அருகில் உள்ள எரி யோட்டில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் எச் வி. ஹண்டே : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். வேடசந்தூரில் இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையம் விஸ்தரிக்கப்படும். பக்கத்திலேயே இன்னொரு ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிப்பதைப்பொறுத்த வரையில், ஒரேதொகுதியில் இப்படி ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருப்பதை விட, பரவலாக அவைகள் அமைக்கப்பட வேண்டும் என்பதால், அது பற்றி இப்போது சிந்திப்பதற்கு இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**தாலுகா அரசு மருத்துவமனைகளில் முடம் நீக்கும் சிகிச்சை நிலையம் ஆரம்பிக்கும் திட்டம்.**

* வினா எண் 196—திரு.செ. செம்மலை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா —

தாலுகா தலைமை அரசு மருத்துவமனைகளில் முடம் நீக்கு சிகிச்சை நிலையம் (Physiotherapy Section) ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச் வி ஹண்டே : தற்போது சில தாலுக்கா அரசு மருத்துவ மனைகளில், முடம் நீக்கும் சிகிச்சை நிபுணர்கள் (Physiotherapists) நியமிக்கப்பட்டுள்ளார்கள். மேலும் இதை விஸ்தரிக்கும் வாய்ப்பு உள்ளது.

[1982 பிப்ரவரி 1

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவ அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலில் எலும்பு சிகிச்சைப் பிரிவு இருக்கும் இடங்களில் தான் பிசியோ தெராபிஸ்ட்ஸ் நியமிக்கப்படுவதாகச் சொன்னார்கள். எலும்பு சிகிச்சைப் பிரிவு இல்லாத தாலுக்கா மருத்துவமனைகள் நிறைய இருக்கின்றன. எனவே அவைகளிலும் குறைந்தபட்சம் பிசியோ தெராபிஸ்ட்டுகளை நியமிக்க அரசு முன்வருமா?

Hon, Dr. H. V. HANDE : Speaker Sir, at present Physiotherapists have been sanctioned to all the prthopaedic Wings functioning in the 15 district Head quarters Hospitals like Ramanathapura etc. In the Govt. Hospitals at Palani, Petiakulam, Raiapalayan Tenkasi, Aruppukkottai also we intend to start shortly, ஆகவே இங்கேயெல்லாம் நாம் ஆரம்பிக்க இருக்கிறோம். எல்லா உடனடியாகச் செய்ய முடியாது. ஆனால் மற்ற மாநிலங்களிலே இந்த பிசியோதெராபிஸ்ட்ஸ் கோர்ஸ் இல்லாமல் இருப்பதா அந்த மாநிலத்தில் இருந்து 1–2 பேர்களை இங்கே பிசியோ தெராபிஸ்ட்ஸ் டிரெயினிங் எடுப்பதற்காக இங்கே அனுப்பி கொண்டு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, இந்தப் பிரி ஆரம்பிக்கப்பட்டுள்ள சில மருத்துவ மனைகளில் கூட, போதிய பயிற்சிபெற்றவர்கள் இல்லை என்கிற காரணத்தால், அந்தப் பதவிகள் காலியாக இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, அந்தப் பயிற்சி பெறுவோர் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, டாக்டர் எம். நடராசன் அவர்கள் தலைமையில் ஒரு நிபுணர் குழு அமைக்கப்பட்டு, இதுகுறித்துப் பரிந்துரை செய்யச் சொல்லி யிருக்கிறோம். அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில் அந்த எண்ணிக்கையை உயர்த்த இருக்கிறோம். To increase the aanual intake of Stipendary Physiotherapists from 10 to 20. இவைகள் எல்லாம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் உள்ள தாலுக்கா மருத்துவ மனைகள் எதுவெதில் இந்த முடம்நீக்கு சிகிச்சை நிலையம் ஆரம்பிக்க அரசு உத்தேசித் துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட தலைமை மருத்துவ மனைகளைப் போல் சில தாலுக்கா மருத்துவ மனைகளை விஸ்தரிப்பதற்கு நாம் முயற்சி எடுத்துக் கொண்டு இருக்கிறோம். நமக்குத்



1982 பிப்ரவரி 16]    [திரு. எச். வி. ஹண்டே]

தேவையான அளவிற்கு பிசியோதெராபிஸ்ட்ஸ் கிடைக்காத நிலைமை இருக்கிறது. அவர்களின் எண்ணிக்கை உயர்த்தியதற்குப் பிறகு தாலுக்கா மருத்துவ மனைகளில் துவக்கலாம் என்று இருக்கிறோம்.

(முற்பகல் 10–00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் அவையின் முன் அனுமதியுடன் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

டாக்டர் கே. சௌரிராஜன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்து ஏதோ எலும்பு முறிவு சிகிச்சைக்கு மட்டும்தான் பிசியோதரபிஸ்ட் தேவை என்பதுபோல் தெரிகிறது. அது மட்டுமல்ல, இளம்பிள்ளை வாதம், பச்சை வாதம் போன்ற இன்னும் பல வியாதிகளுக்கும் சிகிச்சை அளிக்க பிசியோதரபிஸ்ட் தேவைப்படுகிறார்கள். ஆகையால் எலும்பு முறிவு சிகிச்சை என்ற அடிப்படையில் மட்டும் பார்க்காமல் எல்லாத் தாலுகா மருத்துவ மனைகளிலும் இந்த பிசியோதரபிஸ்ட் அவசியம் தேவை என்பதால் அங்கெல்லாம் அவர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, அது ஒரு நல்ல கோரிக்கை. இப்போது கே.கே. நகர் மருத்துவ மனை யில் ஒரு பெரிய டிபார்ட்மென்ட் அதற்காக இயங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல பல நோய்களுக்கு சிகிச்சை செய்ய பிசியோதரபிஸ்ட் தேவைப்படு கிறார்கள். ஆனால் இந்த 'ஆர்த்தோ' சிகிச்சைக்கே போது மான அளவுக்கு அவர்கள் கிடைக்கவில்லை. ஆகையால் மற்ற பிரிவுகளுக்கு இப்போது விஸ்தரிக்க இயலவில்லை. அவர்களின் எண்ணிக்கையைப் பெருக்கிக் கொள்வதற்கு முதலிலே நடவடிக் கைகள் எடுத்து, அதன் பிறகு படிப்படியாக மற்ற பிரிவுகளுக்கும் விஸ்தரிக்கும் ஏற்பாடுகளைச் செய்யலாம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவரவர்களே, ஒவ்வொரு தாலுகா தலைநகர் மருத்துவமனையிலும் இந்த பிசியோதரபிஸ்ட் செக்ஷன் ஆரம்பிக்கப்பட இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். இருந்தாலும் கூட எங்கெல்லாம் ஆக்சிடென்ட் கை ஒடிந்து, கால் ஒடிந்து அதிகமாக 'கேஸ்' வருகிறதோ அப்படிப்பட்ட இடங்களில் போர்க்கால நடவடிக்கை போல் விரைவாக இந்த பிசியோ தரபிஸ்டுகளை நியமிக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, நான் அதைத்தான் சொன்னேன். முதலில் டிஸ்டிரிக்ட் ஹெட் குவார்டர்ஸ் மருத்துவமனைகள், அதன் பிறகு தாலுக்கா ஹெட் குவார்டர்ஸ் மருத்துவ மனைகள் என்ற அடிப்படையில் எடுத்துக் கொள்ள இருக்கிறோம். Priority will be given wherever they are

going to start Accident Department. ஆக்ஸிடென்ட் டிபார்ட் மென்ட் என்று ஒரு பெரிய ஸ்கீம் போட்டு அதுபற்றி விரிவாக பட்ஜெட்டில் அறிவிக்க இருக்கிறோம்; ஆகையால் இங்கே இப்போது அறிவிப்பது சரியல்ல. படிப்படியாக விஸ்தரிக்க இருக்கிறோம். ஆக்ஸிடென்டாகி அதிகமாக கேஸ் வரும் இடங் களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா என்ற முறையில் கேட் டார்கள். நேஷனல் ஹைவேய்ஸ், ஸ்டேட் ஹைவேய்ஸ் இருக் கின்ற இடங்களிலுள்ள தாலுகா தலைமையிட மருத்துவ மனைகளுக்கு முதலிடம் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தஞ்சை மாவட்டத்தில் மினி பஸ் வசதி

*வினா எண்—197. திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

(அ) தஞ்சை மாவட்டத்தில் மினிபஸ் (சிறிய) வசதி கோரி அரசுக்கு ஏதேனும் மனுக்கள் வந்ததா ?

(ஆ) ஆம் எனில் அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

அரசுக்கு வந்துள்ள மனுக்கள் மண்டலப் போக்கு வரத்து அலுவலரின் மேல் நடவடிக்கைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

திரு. எம். செல்லமுத்து : தலைவரவர்களே, தஞ்சை மாவட் டத்தில் சிறிய பஸ்களை விடுவதற்கு சேசிஸ் கிடைக்கவில்லை என்று மண்டலப் போக்குவரத்து இயக்குநர் சொல்கிறார். அதை உடனடியாக அரசு ஆராய்ந்து, அதற்காக ஒரு தொழிற் சாலையை அரசு அமைத்து, தஞ்சை மாவட்டத்தில் இருக்கக் கூடிய குறையை நிவர்த்தி செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : தலைவரவர்களே, ஏற்கனவே இருந்ததைவிட இப்போது கொஞ்சம் சுலபமாக சேசிஸ் கிடைக் கிறது. அரசாங்கம் அதை தயாரிக்க வேண்டுமென்று போனால் இந்த வேலைகளை சரியாக கவனிக்க முடியாமல் போகலாம். ஆகவே, அதற்காக தொழிற்சாலை அமைக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை. அங்கே தேவையான பேருந்துகள் விட வாய்ப்பு இருக்கிறது.

**திரு. எம். கே. ராஜமாணிக்கம் :** தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் மட்டும் மினி பஸ்கள் விட மனுக்கள் வந்திருக்கின்றனவா என்று கேட்டதற்குப் பதில் சொன்னார்கள். இந்தத் திட்டம் தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும்தான் செயல்படுத்தப்படுமா, அல்லது மற்ற மாவட்டங்களுக்கும் செயல்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, கேள்வி தஞ்சை மாவட்டத்தைப் பற்றி மட்டும் கேட்டிருந்தார்கள்; அதனால் அந்த பதிலைச் சொன்னேன். எல்லா இடங்களுக்கும் சிறிய பேருந்துகள் விடும் திட்டம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதனால் இந்தக் கேள்வியைக் கேட்டார்கள், இதற்கு ஒரு கேள்வி தேவையா என்பது என்னுடைய கேள்வியாக இருக்கிறது.

**திரு. எம். செல்லமுத்து :** தலைவரவர்களே, மண்டலப் போக்குவரத்து அலுவலரின் ஆய்வில் இருப்பதாக சொன்னார்கள். உடனடியாக ஆய்வை முடித்து சிறிய பஸ்களை விட நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, விரைவான நடவடிக்கையின் காரணமாகத்தான் இத்தனை பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. நீங்கள் அனுப்பியிருக்கிற மனுக்களை இப்போது பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். இதற்கு முன்னாலே கூட ஏழு வழித்தடங்களில் விட வேண்டுமென்று பரிசீலனை செய்து வைத்திருக்கிறோம். ஆகவே, படிப்படியாக மினி பஸ்கள் விடப்படும்.

**திரு. த. வீராசாமி :** மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் நஞ்சை நிறைந்த மாவட்டம். அங்கே சாலைகள் மிகக் குறுகலாகவும், வளைந்தும் செல்வதால் பெரிய பேருந்துகள் செல்ல முடியவில்லை. எனவே அங்கே சிறிய மினி பஸ் விடுகின்ற திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவுபடுத்தி அங்குள்ள மக்களுடைய குறையினைப் போக்க முன் வருவார்களா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, ஏற்கெனவே அந்தப் பகுதியிலே ஓடிக்கொண்டிருக்கின்ற பேருந்துகள் அவ்வளவு பெரிய இடையூறாகத் தெரியவில்லை. அவை ஓரளவுக்கு ஓடிக்கொண்டுதான் இருக்கின்றன. பெரிய பேருந்துகளை விட முடியாமல் சிறிய பேருந்துகளை விட்டால்தான் முடியும் என்று இருக்கின்ற அந்த இடங்களுக்காகத்தான் அரசாங்கம் இந்த திட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றது.

**திரு. கே. சொக்கலிங்கம் :** தலைவரவர்களே, மினி பஸ் விடுகின்ற திட்டத்தை தஞ்சை மாவட்டத்திற்கு மட்டுமல்லாமல் சென்னையை அடுத்து இருக்கின்ற செங்கற்பட்டு மாவட்டத்திற்கும் விரிவு படுத்தும் உத்தேசம் உண்டா? எல்லா மாவட்டத்திற்கும் இவ்வாறு மினி பஸ் விடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதுபோன்ற கேள்விதான் ஏற்கெனவே கேட்கப்பட்டு அமைச்சரவர்களும் அதற்குப் பதில் சொல்லிவிட்டார்களே; ஆகவே மீண்டும் கேட்க வேண்டாம்.

**விரைவுப் பேருந்துகளில் திரைப்படம் காண்பிக்கும் திட்டம்.**

* வினா எண் 198— **திரு. ஜே. சி. டி. பிரபாகரன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு விரைவுப் பேருந்துகளில் திரைப்படம் காண்பிக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) வேறு புதிய பேருந்து தடங்களுக்கும் இத் திட்டம் விரிவாக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, (அ) சென்னை—திருவனந்தபுரம், சென்னை—பெங்களூர் ஆகிய தடங்களில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப் படும் சொகுசு குளுமை விரைவுப் பேருந்துகளில (ஏர் கண்டிஷன்ட் டீலக்ஸ் கோச்சஸ்) திரைப்படம் காண்பிக்கப்பட்டு வருகின்றது.

(ஆ) இத் திட்டத்தை வேறு புதிய பேருந்துத் தடங்களுக்கு விரிவாக்கும் திட்டம் ஏதும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் பரிசீலனையில் தற்போது இல்லை. ஆனால் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. ஜே. சி. டி. பிரபாகரன் :** தலைவரவர்களே, நீண்டதூரம் பயணம் செய்கின்ற பயணிகளுக்குப் பொழுது போவதற்கு இது போன்று வேறு ஏதேனும் சாதனங்களைப் பொருத்துகின்ற யோசனை எதுவும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, திரைப் படம் காட்டுவதைத்தான் பொழுது போக்காகக் காட்டிக் கொண் டிருக்கிறோம். வேறு எப்படிப்பட்ட நிலைமைகளை உருவாக்க வேண்டும் என்பது தெரியவில்லை. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களே கொஞ்சம் யோசனையும் சேர்த்து சொல்ல வேண்டும். பயணிகள் தொடர்ச்சியாக அமர்ந்து கொண்டு செல்ல வேண்டிய சூழ்நிலை இருப்பதால் இப்போது தூங்குவதற்குக் கூட ஏற்பாடு செய்யவேண்டும் என்று அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக் கின்றது. இன்னும் படிப்பதற்குரிய ஏற்பாடு ள் போன்றவற்றைச் செய்யவேண்டும் என்று கேட்கின்ற சூழ்நிலைகள் இருந்தால் அரசு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கின்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவையிலே சத்தம் சற்று அதிகமாகிக் கொண்டிருக்கின்றது. எனவே உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ரா. உமாநாத் :** மாண்புமிகு அவைத்தலைவர் அவர்களே, இப்படி சினிமா காட்டுகின்ற பஸ், சினிமா காட்டுகின்ற பஸ் என்பது பற்றி அடிக்கடி பத்திரிகையில் படித்துக் கொண்டிருக் கிறேன். இந்த சினிமா காட்டுகின்ற பஸ்ஸிலே இரண்டு மூன்று தடவை ட்ராவல் பண்ணினேன். ப்ரொஜக்டர் சரியாக இருந்தால் ஸ்க்ரீன் கிழிந்துவிட்டது என்று சொல்கிறார்கள். ஸ்க்ரீன் சரியாக இருந்தால ப்ரொஜக்டர் சரியாக இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே சினிமாவுக்காகச் சேர்த்து உயர்ந்த ரேட் சார்ஜ் பண்ணு கிறார்கள் அந்த பஸ்ஸிலே, ஆனால் செய்த ப்ராமிஸை நிறை வேற்றாமல் இருக்கின்ற காரணத்தா சினிமாவுக்காகவும் சேர்த்து வாங்கப்படுகின்ற அந்தக் கட்டணத்தைக் குறைக்கத் தயாராக இருக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, சில நேரங்களிலே பேருந்துகள் செல்கின்ற பாதையிலே அதிகமான அதிர்ச்சி இருப்பதால் ஃபிலிம் கட் ஆகிவிடுகின்றது என்று சொல்கிறார்கள். அந்த நிலைமையை மாற்றவேண்டும் என்று இப்போது நடவடிக்கை எடுத்து வீடியோ டேப்புகள் வைத்துக் கொள்ளவேண்டும் என்று நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஆகவே எந்தப் பிரச்சினையும் இல்லை என்று சொ வி இருக் கிறார்கள். அரசாங்கம் இதை எல்லாம் ஒரு பயிற்சியாகத்தான் செய்துகொண்டிருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் இதற்குக்கூட ஒத்துழைப்புத் தராமல் பணத்தைக் திருப்பித் தர வேண்டும் என்று கேட்கிறார்கள். பல நேரங்களிலே எவ்வளவோ வசதிகளைச் செய்து கொடுத்ததற்குப் பிறகும் அதற்கெல்லாம் பணம் கொடுக்கப்படாமல் இருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்திருப்பார்கள்.

**திரு. ஜே. சி. டி. பிரபாகரன் :** தலைவரவர்களே, பொழுது போக்குவது பற்றிய கேள்வி எழுந்தபோது படுத்துக் கொண்டு செல்வதற்கும் வசதிகள் செய்ய முயற்சி இருக்கின்றது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, அதை விளக்குவதற்குக் கொஞ்சம் நேரம் ஆகும். தலைவரவர்கள் அனுமதிக்க மாட்டார்கள். அது மட்டுமல்லாமல் நாளைய தினமும் இதுபற்றிய கேள்வி வர இருக்கின்றது. ஆகவே அதை இப்போதே சொல்லிவிட்டால் சரியாக இருக்காது. எனவே நேரம் கிடைக் கின்றபோது விளக்கமாகச் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன்.

(முற்பகல் 10-10)

**திரு. மு. அம்பிகாபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகளில் எத்தகைய படங்கள் காட்டப்படுகின்றன. சிவப்பு மல்லி, தண்ணீர் தண்ணீர் போன்ற படங்களைக் காட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிவப்புத் துண்டு போட்டிருப்பதால் சிவப்பு மல்லி படம் வேண்டும் என்று விரும்புகிறார்கள். இப்பொழுது வீடியோ—கேசட்டில் ஏறத்தாழ 15 படங்கள் காட்டப்படுகின்றன. இதற்கு முன்னால் 16 எம்.எம். திரையில் போடப்படுகிற படங்கள் கிட்டத்தட்ட 72 படங்கள் காட்டியிருக்கிறோம். இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய படங்கள் புதியதாக வந்தவை. எனவே அதைப்போட சிலகாலம் ஆகும். ஆகவே இதற்குப் பின்னால் தான் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**திரு. துரைமுருகன் :** தலைவர் அவர்களே, பேருந்துகளில் திரைப்படம் காட்டும் பணியை பெங்களூரிலிருந்து மெட்ராஸ் போகும் சில ஏ.சி. வண்டிகளில்தான் காட்டுகிறார்கள். திருவனந்தபுரம் போகும் வண்டிகளில் 5 நாட்களில் 1 நாளில் கூட எந்தப் படமும் காட்டப்படவில்லை. அதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்பதை ஒத்துக் கொள்கிறேன். அதிலே இன்னொரு விஷயம் என்னவென்றால், அந்தப்படங்கள் என்னவென்றே தெரியவில்லை. அலை அலையாகத்தான் தெரிகிறது. அதைப் பார்த்தால் 4 கண்ணாடி போட வேண்டிய நிலை ஏற்படுகிறது. நல்ல டாக்குமெண்டரி படங்களாக, ப்ளூ வீ படங்களாக போடக்கூடாதா ? முடிந்தால் நல்லமுறையில் ஒழுங்காக படங்களை ஓட்டுங்கள் இல்லையென்றால், பஸ்ஸை மட்டும் ஓட்டுங்கள். ஆக இந்த நிலையை மாற்ற ஆவன செய்யப்படுமா என்று கேட்க விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பேருந்துகளில் பயணம் செய்திருக்கிறார் என்பது தெரிகிறது. மகிழ்ச்சி. படங்கள் சரியாக தெரியவில்லை என்று சொன்னார். அதற்காகத்தான் இப்போது முறையை மாற்றி வீடியோ கேசட்டைப் போட்டிருக்கிறோம். ஆகையினால் அவர் இனிமேல் 4 கண்ணாடிகள் போடவேண்டிய அவசியம் இல்லை அந்தப் படங்கள் என்ன படங்கள் என்றே தெரியவில்லை என்று சொன்னார்கள்; தெரியாத பார்க்காத படங்களைத் தான் போடவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன படங்கள் எல்லோரும் பார்க்க வசதியிருக்கிறது. ஆகவே பார்க்க முடியாத படங்களைப் போடுகிறோம் என்று இதை எடுத்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





ப்பணித் துறை அமைச்சுப் பணியாளர்களுக்கான
பதவி உயர்வு

ா எண் 199 —திரு. எஸ் ஆண்டித்தேவர் : மாண்புமிகு பாதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பொதுப்பணித்துறையில் பணிபுரியும் மைச்சுப் பணியாளர்களுக்குப் பதவிஉயர்வுக்கு வாய்ப்பின்மையை ருதி தற்போது கோட்டங்களில் பணிபுரியும் மத்திய அரசு கோட்ட ணக்கர்களுக்குப் பதிலாக பொதுப்பணித்துறையில் பணிபுரியும் அமைச்சுப் பணியாளர்களுக்கு இப்பதவியைக் கொடுக்க நிர்வாக சீர்திருத்தக் குழு (Administrative Reforms Commission) பரிந்துரை செய்துள்ளதை அரசு ஒப்புக்கொண்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :** (அ) ஒப்புக் கொண்டுள்ளது.

(ஆ) இச்செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளது.

**டாக்டர் கே. சமரசம் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு இந்த திட்டத்திற்காக ஒப்புக் கொண்டதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாகவே ஒரு துறையை நியமித்தல் என்று சொன்னால், அந்தத் துறையிலேயே ஆடிட் துறை—அதாவது தணிக்கைத் துறையும் இருக்கும். அதுதான் முறை. ஆகவே இப்படி மாற்றப்படுவதற்காக எவ்வளவு சீக்கிரத்தில் இவைகளை முறைப்படுத்த முடியுமோ, அவ்வளவு விரைவில் வேலைகளை ஆரம்பிக்க அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்துறையில் உள்ள பணியாளர்கள், கணக்கு வேலைகளை கவனிக்க இயலும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படலாம் என்று சீர்திருத்த ஆணைக் குழுவின் பரிந்துரைகள் இருக்கிறது. இதை பரிசீலனை செய்து, அது கேட்டுக் கொண்டதற்கு இணங்க 3-12-1981 அன்று தமிழ்நாடு மாநிலத்தில் உள் கணக்கு ஆய்வுத் தலைவர், நிர்வாக சீர்திருத்த ஆணைக் குழு மேற்கொண்ட பொருள் குறித்த பரிந்துரையை ஏற்றுக் கா குறித்து மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று தெரிவித்துள் ஆகவே, பொதுப்பணித்துறை செயலரும், நிதித்துறை செ மாநில கணக்காய்வுத் தலைவரோடு பேசி முடிவு எ ன்று தற்போது முடிவெடுக்கப்பட்டுள்ளது.

## வறட்சிப் பகுதிகளிலுள்ள கால்நடைகளுக்கு நோய் வராமல் தடுக்க மேற்கொண்ட நடவடிக்கை

* வினா எண். 200 திரு. வி. வி. சுவாமிநாதன், திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள கால்நடைகளுக்கு நோய் வராமல் தடுப்பதற்காக அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

(ஆ) அதற்காக அரசு ஒதுக்கீடு செய்த தொகை எவ்வளவு?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: அ. வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் கால்நடைகளுக்கு ''கோமாரி நோய்'' (Foot and moul h Disecase[ தடுப்பூசியை இலவசமாக போடுவதற்கும் குணப்படுத்தும் மருந்தை வாங்கி விநியோகம் செய்யவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

ஆ. 1. கோமாளி நோய் தடுப்பு மருந்துக்காக. ரூ. 15.40 இலட்சம்

2. குணப்படுத்தும் மருந்துக்காக. ரூ. 50,00 இலட்சம்

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் கால்நடைகளுக்கு தீவனம் இல்லை என்று கருதிய அரசு, தஞ்சை மாவட்டத்தில் நத்தம்பாளையத்தில் ஏராளமான அளவு வைக்கோலை வாங்கி வைத்திருக்கிறது இவை டெண்டர் கோரி முறையாக வாங்கப்பட்டதா அல்லது அதிகாரிகள் தன்னிச்சையாகவே இதை வாங்கியிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மாட்டுத் தீவனத்தை வாங்கி வினியோகம் செய்வதற்கென்று 20 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. அது டெண்டர் மூலமாக வாங்கப்பட்டதா? அதிகாரிகள் மூலமாக வாங்கப்பட்டதா என்று என்னிடம் குறிப்பு இல்லை. தனிக்கேள்வி போட்டால் விரிவாகப் பதில் அளிக்கப்படும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் இயங்கிவருகிற கால்நடை பராமரிப்பு நிலையங்களில் பணியாற்றக்கூடிய பணியாளர்கள் இல்லாமல், இன்றைய தினம் அங்கே கால்நடைகள் நோயால் இறந்து வருகின்றன என்று சொல்லப்படுகிறதே, ஆகவே உடனடியாக அப்படிப்பட்ட இடங்களில் கால்நடை ஆய்வாளர்களை நியமிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்? என் தொகுதியில் நக்கன்பட்டியில் ஏராளமான கால்நடைகள் இறந்து வருகின்றன. அதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?



மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மூலக் கேள்வி, வறட்சி பகுதிகளிலுள்ள கால்நடைகளுக்கு நோய் வராமல் தடுக்க மேற்கொண்டுள்ள நடவடிக்கை பற்றியதாகும். கால்நடை ஆய்வாளர்கள் பற்றி அல்ல. ஆகவே தனிக் கேள்வி போட்டால் விடை அளிக்கலாம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள மாடுகளுக்கு காலை நோய் என்ற நோய் வருகிறது. அதற்கு சிகிச்சை செய்ய மருந்தகத்திற்குப் போனால் அதற்கான மருந்து இல்லை என்று சொல்லப்படுகிறது. அது உண்மையா? அப்படி இருந்தால் அப்பேர்ப்பட்ட பகுதிகளில் உடனடியாக மருந்துகள் கொடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: கால்நடை மருந்தகங்களைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட அளவு மருந்துகள் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்கேயாவது கால்நடைகளுக்கு மருந்துகள் கிடைக்கவில்லை என்று, கூறுவார்களானால் அதைப் பற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. உ. சுப்பிரமணியன்: வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள கால்நடைகளுக்கு நோய்கள் வராமல் தடுக்க மருந்துகளுக்கு அரசு பணம் ஒதுக்கியிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் பலயிடங்களில் விவசாயிகளே தனிப்பட்ட முறையில் மருந்துகள் வாங்கி வரும்படி கூறப்படுகிறார்கள். கால்நடை மருந்தகங்களில் உள்ள மருந்துகள் திருட்டுப் போவதாகச் சொல்லப்படுகிறது. இது பற்றி புகார் வந்ததா? அதன்பேரில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: எந்தயிடங்களில் திருட்டுப் போகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவார்களானால் அது பற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்

திரு சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் தொடர்ந்து நடைபெற்று வரும் போலீஸ் அடக்கு முறை சம்பந்தமாகவும், ஏற்கனவே 14-ஆம் தேதி, எங்கள் கண்களுக்கு முன்னால் எங்கள் கட்சியைச் சேர்ந்த லகுமையா என்ற தொழிற்சங்கத் த லைவர் மண்டையை உ டைத்து காயப் படுத்தி அவர் உயிருக்கு ஆபததான நிலையில் பங்களூர் மருத்துவ மனையில் இருக்கிறார்கள். அது சம்பந்தமாக புகார் செய்யப் போனவர்கள்மீது கொலை வழக்கு போட்டு செக்ஷன் 307ன் கீழ் அவர்களை கைது செய்திருக்கிறார்கள். இவ்வளவு கொடுமை யான காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அந்த அடக்குமு ற சம்பந்ததாக விவாதிக்க தங்களிடம் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். அரசுக்குப் போய் பதில் வந்த பின் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு ரா. உமாநாத் இது ஒரு சீரியஸான க்வெஸ்டின் எம். எல். ஏ. க்கு முன்னால் போலீஸார் அடித்திருக்கிறார்கள் என்று சொன்னால்—

The Police are challenging the authority of the House நேற்று கொடுத்த நோட்டீஸுக்கு கவர்ன்மென்ட் இன்றைக்கு தயாராயில்லை என்று சொன்னால் . . ...

Where is the seeurity to a person in this State?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பதில் வந்தவுடன் அதை அவைக்கு வைக்கிறேன்.

(ஆ) விருது நகரில் எதிர்க்கட்சித் தலைவர் பேசியிருக்கும் கூட்டத்திற்கு அனுமதி அளிப்பது

திரு அ ரகுமான்கான்: எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பாத யாத்திரை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். பல ஆயிரக்கணக்கான பேர்கள் அவர்களோடு செல்கிறார்கள். ஆன ல் விருதுநகரில் அவர்கள் பேசுவதற்கு, மேடை அமைப்பதற்கும் சர்க்கார் அனுமதி கொடுத்து விட்டது. இப்போது பே லீஸ் அதிகாரிகள் அந்த மேடைக்கு அனுமதி ரத்து செய்யப்பட்டிருக்கிறது என்று ஏற்கனவே அனுமதி கொடுத்துவிட்டு இப்போது திடீரென்று ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் தலையிட்டிருப்பதால் இந்த நடவடிக்கை என்று தெரிகிறது. நான் உங்கள் கவனத் திற்குக் கொண்டுவர விரும்புவது என்னவெனில், டிராபிக்—க்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. கலைஞர் எங்கு பே னாலும் டிராபிக்தான், மேடை அமைப்பதற்கும் அனுமதி கொடுத்து விட்டு....... .............. ..



[முற்பகல் 10—20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பற்றி நோட்டீஸ் கொடுக்காமல் திடீரென்று எழுந்து கேட்டால் நான என்ன பதில் அளிக்க முடியும்.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இதை திடீரென்று எழுப்புகிற பிரச்னையாகக் கருதாமல் ஒரு அசம்பாவிதமான சூழ்நிலை உருவாவதற்கு ஏதோ சில காரணங்கள் இருந்து அதன் விளைவாக அதற்குப் பின்னர் வேறுவிதமான நிலைமை கள் ஏற்படக்கூடாது என்பதற்காக அரசாங்கத்தின் கவனத்திற்கு திடீரென்று கொண்டு வர நேரிடுகிறது. ஏனென்றால், இன்று மாலை அந்தப் பகுதிக்கு அவர்கள் செல்கிறார்கள். ஆகவே அந்தக் கூட்டம் தடுக்கப்படுமானால், கொடுத்த அனுமதி நிறுத்தப்படுமானால் ஒரு 50,000 பேர்கள் கூடுகிற இடத்தில் தவறான சூழ்நிலை உருவாகும்? அரசின் கவனத்திற்கு இதை....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பற்றி எழுதிக் கொடுங்கள், அதற்கு நான் அமைச்சர் அவர்கள் பதிலை வாங்கித் தருகிறேன். இதிலே பிரச்னை ஒன்றுமில்லை.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, தாங்கள் எடுத்துக் காட்டிய கருத்திலே எங்களுக்கு மாறுபாடு இல்லை, கடிதம் எழுதி, அது போய் வருவதற்கு 3 நாட்கள் ஆகும். ஆனால் இங்கே நான் உங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புவது....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கருத்துக்களை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு போகிறேன்.

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்— தொடர்ச்சி

திரு மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இன்றைக்கு கானரா வங்கி செயல் படாமல் இருக்கிறது. அங்கே கொந்தளிப்பு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. திருசெந்தூரில்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பற்றி தாங்கள் காலை 10 மணிக்கு வந்து என்ன 6.00 மணிக்கு எழுதிக் கொடுத்துவிட்டு, ஆயிற்று என்று கேட்பது, முறையல்ல. அதை இன்றே எடுத்துக் கொள்வதற்கு இல்லை.

(இ) அமைச்சர்கள் பங்கேற்ற நிகழ்ச்சிகளுக்கு அந்தந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் அழைக்கப் பெறுதல்

திரு. து. புருஷோத்தமன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொண்டு வருகின்ற இந்தப் பிரச்னை, சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்கள் உரிமைகளை பாதிக்கக்கூடிய விஷயமாகும். ஏற்கனவே, இந்த அவையிலே அமைச்சர்களும், முதலமைச்சரும் கலந்துகொள்கின்ற அரசாங்க விழாக்களிலே, அந்தந்த தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களை கலந்து கொள்ள அழைப்பு அனுப்ப வேண்டுமென்ற கோரிக்கை வைத்தபோது நம் முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல்தந்து. அப்படி விழாக்களுக்கு அழைக்கிறார்கள். ஆனால், அண்மையில் கடந்த 10 நாட்களாக................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப்பற்றி எனக்கு எழுதிக் கொடுங்கள்.

திரு. து. புருஷோத்தமன்: எல்லா விழாக்களிலும் வேண்டு மென்றே புறக்கணிக்கிறார்கள்;

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படி புறக்கணிக்கப்படுவதைப் பற்றி எழுதிக் கொடுங்கள்.

திரு. து. புருஷோத்தமன்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கடந்த 10 நாட்களாக, சென்னை நகரிலே நடக்கும் விழாக்களில் அமைச்சர்கள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், மற்ற அதிகாரிகள், ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டுமே கலந்து கொள்ளுகிறார்கள். எங்களைப் போன்ற எதிர்க்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களை அழைப்பதில்லை. மக்கள் குறைகளைக் கேட்கும் அரசாங்க விழாக்களில் அமைச்சர்கள், அதிகாரிகள் கலந்து கொள்கிறார்கள். எங்களை அழைப்பதில்லை, 119-வது வட்டத்திலே நடைபெற்ற இப்படிப்பட்ட ஒரு விழாவிலே, அந்தத் தொகுதி உறுப்பினர் மாண்புமிகு சவுரிராஜன் அவர்கள் அழைக்கப்படவில்லை .....(கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு திரு. ப.குழந்தைவேலு: தலைவர் அவர்களே, கடந்த ஒரு வார காலமாக சென்னை மாநகரில் உள்ள பல்வேறு பகுதிகளுக்கு, வட்டம் வட்டமாகச் சென்று மக்களுடைய குறைகளைக் கேட்டறிந்து, உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு, என்னென்ன வழிமுறைகளைச் செய்யலாம் என்ற வகையிலே செய்யப்பட்டு வருகிறது. இது விழாவாகக் கொண்டாடப் படுவதில்லை என்பதை மாத்திரம் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மக்களுடைய பிரதிநிதிகளாகிய நாங்கள் அழைக்கப்படவில்லை......



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, மக்கள் குறைகளை நேரில் கேட்டறிய நான் போகும் போது யாருக்கும் இன்விடேஷன்—அழைப்பிதழ் அச்சிட்டு, அனுப்பவில்லை. யார் வேண்டுமானாலும் கலந்து கொள்ள வாய்ப்பு இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் யார் வேண்டுமானாலும் குறைகள் கேட்கிற நாளில் வந்து கலந்து கொள்ளலாம். (குறுக்கீடுகள்—குழப்பங்கள்)

இதிலே பண விரயம் என்பது இல்லை. மக்களுடைய வரிப் பணத்தைத் தவறான வழியில் செலவழிக்க வேண்டுமென்ற நோக்கம் இந்த அரசுக்கு இல்லை. ஆனால் மக்களுடைய வரிப் பணம் மக்களுக்குப் போய்ச் சேர வேண்டுமென்ற எண்ணத்தோடு தான் குறை கேட்கும் நாள் என்று வைத்திருக்கிறோம். இதிலேயே குறை சொல்லுவது என்பது உண்மையிலேயே மக்களைக் குறை கூறுவது போலாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மாநகராட்சியில் இல்லையென்ற காரணத்தால் அந்தக் காரியத்தை நாங்கள் செய்கிறோம். ஒவ்வொரு வட்ட மாக நானே சென்று நேரில் பார்த்து குறைகளைக் கேட்பது எப்படித் தவறாகும் என்று புரியவில்லை.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அளித்த அந்த விடை இப்படி ஒரு சட்டமன்றம் இருக்கிறது என்பதையே அலட்சியப்படுத்தும் வகையில் தெரிவிக்கப்படுகிற கருத்து என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அழைப்பு அனுப்பி, பாராட்டி, சீராட்டி அழைத்துக் கொண்டு போகவேண்டுமென்பது கூட என்னுடைய வேண்டுகோள் அல்ல. எந்த ஒரு தொகுதியிலும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் போது அந்த உறுப்பினர்களுக்குத் தெரிவிக்காமல் ஒரு அமைச்சர் பொதுமக்களிடம் குறைகளைக் கேட்பார்கள் என்று சொன்னால் வேறுவிதமான விளைவுகளை எதிர்காலத்தில் ஏற்படுத்தும். இதிலே அமைச்சருக்கு மட்டும் தனி பொறுப்பு இல்லை. சட்ட சபையில் பிரதிநிதிகளாக இருக்கக்கூடிய சட்ட மன்ற உறுப் பினர்களுக்குச் சில உரிமைகள் உண்டு. அந்த உரிமைகள் காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலிருந்து காப்பாற்றப்பட்டிருக்கின்றன. ஏதாவது ஒரு விழா என்றால் அமைச்சர் எஸ்.டி.சோமசுந்தரம் அவர்கள் ஒரு நிகழ்ச்சிக்கு போகிறார் என்றால் எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் பெயரையும் அழைப்பிதழில் போடச்செய்து போவார். அதற்கு மாறாகச் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கமாட்டேன் என்று சொன்னால், அது இந்த அவையின் உரிமையை மறுக்கிற செயலாகும். உரிமையை மீறுகிற செயல் அல்லாவிட்டாலும் உரிமையை மதிக்க மறுக்கிற செயலாகும். அந்தந்தத் தொகுதியின் சார்பாக உள்ள உறுப்பினர்களுக்குத்

தெரிவித்து விட்டுப் போகிற கடமையுணர்ச்சியை அமைச்சரவையில் உள்ளவர்கள் மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அப்படிச் செய்ய முடியாது என்றால், எதிர்க்கட்சி எப்படிப்பட்ட முறையைக் கையாள வேண்டுமோ அதைக் கையாளும்.

[முற்பகல் 10.3 ]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, மன்ற உறுப்பினர்களை அலட்சியப்படுத்தவேண்டுமென்ற எண்ணம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இந்த அரசுக்கும் கண்டிப்பாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு தூய எண்ணத்தோடு ஒரு நல்ல எண்ணத்தின் அடிப்படையில் இவை செய்யப்படுகின்ற நேரத்திலே இங்கே இருக்கின்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுடைய ஆதரவும்கூட எங்களுக்குத் தேவை என்பதை ஏற்கெனவே நான் இந்த மன்றத்திலே தெரிவித்திருக்கிறேன். இங்கே உள்ள நம்முடைய இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. ஹாஜா செரீப் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே கேட்டபோது நான் அதைப்பற்றி இந்த மன்றத்திலே அறிவித்திருக்கிறேன். பொது மக்களுடைய குறைகளைக் கேட்பதற்காக நான் செல்கிறேன், உங்களுடைய ஒத்துழைப்புத் தேவை என்று அறிவித்திருக்கிறேன். (குறுக்கீடு) அது அவைக் குறிப்பிலே இருக்கிறது, காட்டவும் தயாராக இருக்கிறேன். அது மட்டுமல்லாமல் பொது மக்களுடைய குறைகளைக் கேட்கிற நேரத்திலே விளைவுகள் வரும் என்று என்னை பயமுறுத்துவது எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு தகுதியான வார்த்தைகளா என்பதை அவர் எண்ணிப் பார்க்க வேண்டும். அது மட்டுமல்ல, எப்படிப்பட்ட விளைவுகள் உண்டாகும் என்று......(குறுக்கீடுகள் ...., குழப்பம்)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கம் தருகிறார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் தெரிவித்தார்கள். அவர்கள் சொல்வதற்கு இவர்கள் பதில் சொல்கிறார்கள். இவர்கள் சொல்வதற்கு அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். அவர்கள் சொல்லி இருப்பது எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மிரட்டுவதாகத் தெரிகிறது என்று சொன்னார்கள். அது அவர்களுடைய தகுதிக்கு ஏற்றதல்ல என்ற ஒரு வார்த்தையை அவர்கள் சொன்னார்கள். ஆகவே மிரட்டுவது என்பது அவர்களுடைய தகுதிக்கு ஏற்றதல்ல என்று சொல்கிறார்கள். மிரட்டியதாக நான் கருதவில்லை. ஆகவே மிரட்டுகின்ற தன்மையினுடைய அடிப்படையில்லை. ஆகவே மாச்சரியங்களுக்கு இடம் தந்து கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வது நல்லதல்ல. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர்கள் 231 தொகுதிகளிலே எந்தத் தொகுதிக்குப் போவது என்றாலும் — பொது நிகழ்ச்சியாக இருந்தாலும், அரசு சம்பந்தமான விளக்கங்களைப் பெறுகின்றவையாக இருந்தாலும் — சட்டமன்ற உறுப்பினருக்கு அறிவிக்கவேண்டும் என்பதுதான் முறை. அதிலே கலந்து



கொள்வதும் கலந்து கொள்ளாததும் அவர்களுடைய விருப்பமே தவிர வற்புறுத்த இயலாது, கூடவே வரவேண்டுமென்று வற்புறுத்த இயலாது. ஆகவே அந்த முறை கடைப்பிடிக்க வேண்டுமென்ற முறையைத்தான் இந்த அரசு கொண்டிருக்கிறது. கட்சி சார்புடைய நிகழ்ச்சிகள், தனிப்பட்ட நிகழ்ச்சிகள் ஆகியவற்றிற்குச் செல்வார்களானால் அது வேறு. அரசு சம்பந்தமான விசாரணை அல்லது பார்வையிடலுக்காக மற்ற நிகழ்ச்சிகளுக்காகச் சென்றால் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அந்தத் தொகுதிகளிலே உள்ளவர்களுக்கு அறிவிக்கப்படும். ஆனால் வந்து கலந்து கொள்வதும் கலந்து கொள்ளாததும் அவர்களுடைய விருப்பம் என்ற முறையிலே இந்தப் பிரச்சினைக்கு முடிவு காணவேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(3) கவன ஈர்ப்புகள்.

(அ) நீலகிரி மாவட்டக் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் நட்டத்தில் இயங்குவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கே. கல்லன், மு. அரங்கநாதன், இரா. தாமரைக்கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

* திரு. கே. கல்லன் : தலைவர் அவர்களே, ''நீலகிரி மாவட்டத்தில் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் பெரும் நட்டத்தில் இயங்குவதாலும் மூடப்படும் நிலையில் உள்ளதாலும் சுமார் 10,000 சிறு விவசாயிகளின் வாழ்வு பாதிக்கப்படும் விஷயத்தைக் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

நீலகிரி மாவட்டத்தில் சுமார் 20,000 ஏக்கர் பரப்பில் தேயிலை உற்பத்தி செய்யும் 10,000 சிறு தேயிலை விவசாயிகள் உள்ளனர். ஒவ்வொரு சிறு விவசாயியும் அரை ஏக்கர் முதல் 25 ஏக்கர் வரை தேயிலைத் தோட்டங்கள் உடையவராவர். தற்போது நீலகிரி மாவட்டத்தில் 13 தொழில் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் உள்ளன. அவைகளில் 11 தேயிலைத் தொழிற்சாலைகள் தேயிலை உற்பத்தி செய்து வருகின்றன. மற்ற இரண்டும் புதிதாக ஆரம்பிக்கப்பட்டவை. இத் தொழில் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் தற்போது 13,594

ஏக்கர் தேயிலைத் தோட்டம் சொந்தமாக உள்ள 6,669 சிறு விவசாயிகள் அங்கத்தினர்களாக உள்ளனர். இவர்கள் விற்கும் பச்சைத் தேயிலையைக் கொண்டுதான் தேயிலைத் தொழிற் சாலைகள் தேயிலை உற்பத்தி செய்கின்றன. உற்பத்தி செய்யப் பட்ட தேயிலை கொச்சின், கூனூர் மற்றும் கோயம்புத்தூரில் உள்ள தேயிலை ஏல மையங்களில் விற்கப்படுகின்றன. பொதுவாக இந்த ஏல மையங்களில் தேயிலைக்குக் கிடைக்கும் விற்பனை விலையைப் பொறுத்துத்தான், பச்சை தேயிலை இலைக்கு விலை நிர்ணயிக்கப்படவேண்டும். ஆனாலும் அங்கத்தினர்களுக்கு அவர்கள் விற்கும் பச்சைத் தேயிலை இலைக்குக் கொடுக்கப்படும் விலை, நிர்ணயிக்கப்படவேண்டிய விலையைவிட அதிகமாகவே உள்ளது.

1977—ல் உற்பத்தியான தேயிலை நல்ல நிலையில் விற்கப்பட்ட சமயத்தில் சிறு தேயிலை உற்பத்தியாளர் தாங்கள் கொடுக்கும் பச்சைத் தேயிலை இலைக்கு நல்ல விலையைப் பெற்றனர். குறிப்பாக கிலோவுக்கு ரூ.4 வரை பெற்றனர். மத்திய அரசு 9-4-77 முதல் விதித்த ஏற்றுமதி வரியாலும் எரிபொருள் (கரி, விறகு, டீசல்) உரம், அலுமினியம் பாயில் ஆகியவைகளின் விலை ஏற்றத்தாலும் உற்பத்திக்கான செலவும் அதிகரித்தன. ஏற்றுமதி வரி 14-2-79 முதல் ரத்து செய்யப்பட்டது. எனவே 9-4-77 முதல் 14-2-79 வரையிலுள்ள காலத்தில் இந்திய தேயிலை ஏற்றுமதி வெகுவாகப் பாதிக்கப்பட்டது. இதனால் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளும் பாதிக்கப்பட்டது. ஏற்றுமதி வரி முழுவதும் ரத்து செய்யப்பட்டபின்கூட உடனடியாக தேயிலை விற்பனை விலையில் ஏற்றம் ஏற்படவில்லை. தற்போதுதான் விற்பனை விலையில் சிறிது ஏற்றம் ஏற்பட்டுள்ளது. அந்த ஏற்றம் உற்பத்திச் செலவு ஏற்றத்தைச் சரிக்கட்டும் வகையில் இல்லை. தற்போது பச்சைத் தேயிலைக்கு வழங்கப்படும் விலை தேயிலை ஏலத்தில் பெறப்படும் விலையைக் கணக்கெடுத்துக் கொடுக்கப்பட வேண்டிய விலையைக் காட்டிலும் அதிகமே. இந்த அதிகவிலை சிறு தேயிலை உற்பத்தியாளர் பயன்பெறவேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் கொடுக்கப்பட்டு வருகிறது. அதன் காரணமாகத் தான் தற்போது தேயிலை தொழிற் கூட்டுறவுச்சாலைகள் நட்டத் தில் இயங்கும் சூழ்நிலையில் உள்ளன. ஆனாலும் தரமான பச்சைத் தேயிலை உறுப்பினர்களிடமிருந்து பெறும் குந்தா, மஞ்சூர் போன்ற கூட்டுறவுத் தொழிற்சாலைகள் இலாபகர மாகவே இயங்கி வருகின்றன. மற்றைய இடங்களில், தனியார் தொழிற்சாலைகளின் கடுமையான போட்டியாலும் உற்பத்தியான தேயிலைக்கு நல்ல விலை கிடைக்காத காரணத்தாலும் நட்டம் ஏற்பட்டு வருகிறது. இந்நிலை கூட்டுறவுத் தேயிலை தொழிற் சாலைகளுக்கு மட்டுமே அல்லாமல் மற்றைய தனியார் தொழிற் சாலைகளுக்கும் பொருந்தும். எனினும், கூட்டுறவுத் தொழிற் சாலைகள் எதையும் மூடவேண்டிய நிலையில் இல்லை. எந்த சிறு விவசாயியின் வாழ்வும் பாதிக்கப்படவில்லை. கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் ஏற்படும் நட்டத்தைக் குறைக்க



அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு 1981-ல் இவ்வரசு மத்திய அரசை தேயிலை மீதான அயத்தீர்வையைக் குறைக்கும்படியும், சிறு விவசாயி களுக்குத் தேவையான உரங்களை குறைந்த விலையில் அளிக்க உரமானியம் அளிக்கும்படியும், தேயிலைத் தொழிற்சாலைகளில் தயாராகும் தேயிலையை இந்திய ராணுவத்துறை டெண்டர் கோராமல் நேரடியாக வாங்கிக் கொள்ளும்படியும் கேட்டுக் கொண்டது.

இம்முயற்சியின் விளைவாகவும், தேயிலைத் தொழிலின் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணும் பொருட்டு மைய அரசு கடந்த ஆகஸ்டு மாதம் தேசிய அளவில் நடந்த கூட்டத்தில் பரிந்துரை களின்படியும், மத்திய அரசு கூடலூரில் அல்லாத மற்ற தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு அயத்தீர்வையை ரூ. 1.10-லிருந்து 0.60 ஆகவும் கூடலூரில் உள்ள தொழிற் சாலைகளுக்கு ரூ. 0.40-லிருந்து 0.36 ஆகவும் குறைத்து ஆணை யிட்டுள்ளது. தமிழக அரசும் 9-11-81 முதல் கோயம்புத்தூர் மற்றும் கூனூர் ஏல மையங்களில் விற்கப்படும் தேயிலைக்குரிய விற்பனை வரியை ஐந்து சதவீதத்திலிருந்து 2½ சதவீதமாகக் குறைத்துள்ளது. மேலும் மலைப்பரப்பு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சிறு விவசாயிகளுக்கு குறைந்த விலையில் உரங்களை வழங்க ரூ. 5.00 இலட்சம் இந்த ஆண்டு மானியமாக வழங்கியுள்ளது. இந்திய தேயிலை வாரியமும் 25 சதவிகிதம் உரமானியமாக வழங்க முன்வந்துள்ளது. இக்காரணங்களினால் விற்பனை விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது. ராணுவத்திற்கு தேவைப்படும் தேயிலையை டெண்டர் கோராமல் நேரிடையாக "இன்கோசர்வ்" மூலம் வாங்கும் யோசனைக்கு மைய அரசு இசையவில்லை.

தரமான தேயிலைக்கு எப்போதும் நல்ல விலை கிடைக்கிறது. தரமான தேயிலை உற்பத்தி செய்யவேண்டுமானால் அங்கத் தினர்கள் தொழிற்சாலைகளுக்கு விற்கும் பச்சைத் தேயிலை தரமானதாக இருக்க வேண்டும். தற்போது ஏலத்தில் பெறப் படும் விற்பனை விலை சற்று சீரடைந்து வருகிறது. இந்நிலை மேலும் முன்னேற்றமடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

திரு. கே. கல்லன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எவ்வளவு நஷ்டம் என்று அறிக்கையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லவில்லை. ஏறக்குறைய ஒரு கோடி ரூபாய் அளவிற்கு நஷ்டத்தில் இயங்குகின்ற இந்தத் தொழிற் சாலைகள் உண்மையாகவே மூடப்படக்கூடிய நிலையில்தான் உள்ளன. அதற்குப் பல காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். முக்கியமாக அரசாங்கம் நியமித்த போர்டுகள் குறுகிய மனப் பான்மையோடும், கட்சிக் கண்ணோட்டத்தோடும் செய்யப்பட்டது

முதல் காரணம். இரண்டாவது காரணம், அங்குள்ள அதிகாரிகள் நிர்வாகஸ்தர்களுடன் சேர்ந்து, பொறுப்பில்லாத தன்மையில் நடந்து கொள்ளும் விதம். இந்தக் குறைபாடுகளைக் களையா விட்டால் நிச்சயமாக இந்தத் தொழிற்சாலைகள் மூடப்பட நேரிடும். உதாரணமாக, மகாலிங்கா இண்டஸ்டிரியல் கோவாப்பரேட்டிவ் டீ பேக்டரியில் கடந்த ஆண்டே ஏறக்குறைய ரூபாய் இலட்சத்திற்கும் மேற்பட்ட மதிப்புள்ள தேயிலைகள் இரண்டு ரூபாய்க்கும், மூன்று ரூபாய்க்கும் என விற்கப்பட்டிருக்கிறது. அதற்காக ஒரு விசாரணை நடந்தது. அந்த விசாரணையின் முடிவு என்னவானது என்பது இன்னும் தெரியவில்லை.

அடுத்து, மேற்கு நாடு பேக்டரியில் மாதாமாதம் ஏறக்குறைய 30,000 கிலோ பச்சைத் தேயிலைகள் பல வருடங்களாகத் திருடப் பட்டுக் கொண்டிருப்பதாக ஜெனரல் பாடியில் கண்டுபிடிக்கப் பட்டது. அதற்கும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சுருக்கமாகக் கேள்வி கேட்க வேண்டும்; உரையாற்ற அனுமதிக்க முடியாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இதுபற்றிய குறிப்புகளைத் தாங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடலாம். தாங்கள் தான் இந்த அவையின் முழுப் பொறுப்பையும் ஏற்று நடத்த வேண்டிய பொறுப்பில் இருப்பதால் அதை நீக்கி விடுவதுதான் முறை. அதற்குப் பிறகு எதிர்காலத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டு மென்பதற்கு உறுப்பினர்களுக்கு அதுவே பாடமாகும்.

(முற்பகல் 10–40)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதுமாதிரி இனி மேல் நடக்காமல் மாண்புமிகு உறுப்பினர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்; வார்த்தைகளை உபயோகிக்கும் முன்னாலே யோசித்து அதனுடைய விளைவுகளை எதிர்பார்த்து உபயோகிக்க வேண்டும். இந்த விவகாரம் ஆரம்பத்தில் இருந்து இதுவரை நடந்த அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெறுகிறது.

* *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க** அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கல்லன் அவர்கள் கருத்துக்களைத் தெரிவிக்கின்றபொழுது, நீலகிரியில் இருக்கிற கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் அனைத்தும் மூடப்படுகின்ற ஒரு காலகட்டத்தில் இருக்கின்றன என்ற ஒரு கருத்தை இம்மன்றத்திலே வைத்தார்கள். அவர் இந்த மன்றத்திற்கு முன்னாலே வைத்திருக்கின்ற கருத்துக்கள் பற்றிய முழு விவரங்களை இந்த அறிக்கையிலேயே அளித்திருக்கிறேன். குறிப்பாக, நீலகிரியில் இருக்கிற தேயிலைத் தொழிலைப் பொறுத்தவரையில், கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு மட்டும் அல்ல, ஒட்டுமொத்தமாகத் தேயிலைத் தொழிற் சாலைகளுக்கே ஒரு நெருக்கடி, ஒரு மந்தம், அண்மையில் 3 ஆண்டுகளாக இருந்து இந்த ஆண்டுதான் அது தவிர்க்கப்பட்டு ஒரு நல்ல முன்னேற்றத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறது. குறிப்பாக, நீலகிரியிலே இருக்கிற குந்தா, மஞ்சூர் போன்ற இடங்களிலே இருக்கிற கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் இலாபத்திலேயே இயங்கிக்கொண்டிருக்கின்றன. மற்றவைகள் எல்லாம் நான் ஏற்கனவே சொன்னதைப் போல, பொதுப் போக்கு காரணமாக, இரண்டு மூன்று ஆண்டுகளாக நட்டத்திலே இயங்குகின்றன என்றாலுங்கூட, அந்த நட்டத்தை ஈடு செய்யவும், அந்த நட்டத்தைத் தூர்க்கவும், தவிர்க்கவும், தமிழக அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. டெல்லி அரசு கூட அண்மையில், ஆகஸ்டு மாதம், டெல்லியிலே கூடிய ஒரு மாநாட்டில், சில ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும், தேயிலைத் தொழிலை வளர்க்கின்ற ஒவ்வொரு மாநிலத்திற்கும் நல்கியது. நம்முடைய அரசின் சார்பாகவும் சிலமாற்றுப் பரிகாரங் களை அந்த மாநாட்டில் நாம் எடுத்து வைத்திருக்கிறோம். கடந்த 3 மாத காலத்திற்குள்ளாக, குறிப்பாக, மத்திய அரசைப் பொறுத்தவரை, ஆயத் தீர்வையை, எக்சைஸ் டியூட்டியை அவர்கள் குறைத்திருக்கிறார்கள். தமிழக அரசைப் பொறுத்த வரையில், விற்பனை வரியில் 5 சதவீதமாக இருந்ததை 2½ சதவீதமாக, கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்கூடங்களுக்கு, தொழிற்சாலைகளுக்கு, நாம் குறைத்திருக்கிறோம். அதனைப் போல், சிறு விவசாயிகளுக்கு, பெர்ட்டிலைசர் சப்சிடி என்ற வகையில் உர மானியங்களுக்காக ரூ. 5 இலட்சம் ஒதுக்கீடு செய்து அதனைச் செயல்படுத்தி வருகிறோம். அதைப் போல், சிறு தேயிலைத் தொழிற் கூடங்களிலே உற்பத்தியாகிற தேயிலையை இந்திய இராணுவத் துறை பெற வேண்டுமென்ற கோரிக்கையை நாம் டெல்லி அரசுக்கு வைத்து, அது இயலாது என்று அவர்கள் சொல்லி, மீண்டும் காப்டிவ் மார்க்கெட் வேண்டுமென்ற வகையிலே தமிழக அரசு வற்புறுத்தி வருகிறது. ஆகவே, இப்படிப்பட்ட ஒட்டுமொத்தமான காரணங்களினால், நட்டமாகிக் கொண்டிருக்கிற சிறு தேயிலைத் தொழிற்சாலை களுடைய சேதாரத்தைக் கூட விரைவில் முறையாக்கத் தமிழக அரசு எல்லா முயற்சிகளையும் எடுதது வருகிறது.

**திரு. மு. அரங்கநாதன் :** துணைத் தலைவர் அவர்களே, நீலகிரியில் கூட்டுறவு தொழிற்சாலைகள் எல்லாம் நட்டத்தில் ஓடுகின்றன. மற்ற தனியார் தொழிற்சாலைகள் அவர்களுக்குள்ள குறைந்த வசதியின் காரணமாக ஓரளவு லாபகரமாக ஓடிக்கொண்டு இருக்கும்போது, சகல வசதிகளும் படைத்த இந்தக் கூட்டுறவுத் தொழிற்சாலை நஷ்டம் அடைவதற்குக் காரணம் என்ன? கூட்டுறவுத் தொழிற்சாலைகள் அதிக நட்டத்தில் நடக்கும் காரணம் நிர்வாகக் கோளாறா? வியாபார நோக்கம் இல்லாததா? அதிகமான நிர்வாகச் செலவா? அதை மாற்றி நியமனங்களை ரத்து செய்துவிட்டு, அரசு ஆங்காங்கே சுயேச்சையாக, சுதந்திரமாக இயங்க தேர்தலை நடத்த முன் வருவார்களா?

[முற்பகல் 10.50]

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தேயிலைத் தொழிலில் இருக்கின்ற மந்தமான போக்கு அகில இந்திய ரீதியில் இருக்கும் ஒரு தேசியப்போக்கு என்று சொன்னேன். அதற்கு மாற்றாக எடுத்து வருகின்ற நடவடிக்கைகளையும் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதுபோல் இது ஏதோ கூட்டுறவு தேயிலை தொழிற்கூடங்களுக்கு மட்டும் இருக்கும் போக்கு அல்ல. தனியார் தொழிற்கூடங்களிலும் இந்தப் போக்கு இருக்கிறது, அதைக் கட்டுப்படுத்த எடுத்துச் சொல்லி வருகிறார்கள். நான் ஏற்கனவே கூறியதுபோல், இந்த நஷ்டத்தைத் தூர்க்கவும் அதை லாபகரமாக ஆக்கவும் எல்லா முயற்சிகளையும் தமிழக அரசு செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேயிலைத் தொழிலை நல்ல முறையில் அபிவிருத்தி செய்யும் பொருட்டு ஒரு நல்ல ஆலோசனைக் குழு போடுவதற்கு அரசு ஆவன செய்யுமா? என்னென்ன பிரச்னைகளைப் பற்றி இந்த ஆலோசனைக் குழு முடிவு எடுக்கும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தேயிலைத் தொழிலுக்கென தனியாக ஒரு ஆலோசனைக் குழு 'டீ இன்டஸ்டிரீஸ் அட்வைசரி போர்ட்' என்ற வகையில் போடுவதற்கு அரசு முடிவு எடுத்து இருக்கிறது. அதிலே யார் யார் உறுப்பினர்களாக இருப்பார்கள் என்ற விவரத்தோடு, அது என்னென்ன பணிகளைச் செய்யும், என்னென்ன குறைகளைப் போக்கும் என்பதையும் விரைவில் அரசு வெளியிடும்.





**ஆ. மருத்துவப் பட்ட மேற்படிப்பிற்கு (எம்.டி.) பட்டயப் படிப்புடையோரை மட்டுமே அனுமதிக்கும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு.**

**டாக்டர் வே. சௌரிராஜன் :** துணைத் தலைவர் அவர்களே, ''மருந்தியல் பட்ட மேற்படிப்பிற்கு (எம். டி) பட்டயப் படிப்புடையோரை மட்டுமே (எம்.பி.பி.எஸ். படிப்பிற்குப் பின்) அனுமதிக்கவேண்டும் என்ற உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் விளைவாக நமது மாநிலத்தில் உள்ள மருத்துவக் கல்லூரி மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை.**

*1981–82 ஆம் ஆண்டிற்கு முன்னர், எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்ற அனைவரும் பட்டப்படிப்பு தகுதி மட்டும் உடையவரானாலும் அல்லது பட்ட மேற்பட்டயப்படிப்புத் தகுதி பெற்றவரானாலும் பாகுபாடு இன்றி பட்ட மேற்படிப்புக்கு மனு செய்ய தகுதியானவராவர். இதன் விளைவாக ஏராளமான மகப்பேறு மருத்துவ பட்டமேற்படிப்பு (எம். டி. ஓ & ஜி) போன்ற மகப்பேறு மருத்துவ பட்டயப் படிப்பு (டி.ஜி.ஓ.) படித்தவர்களைப் பாதிக்கும் வகையில் பட்டமேற்படிப்புக்கு தேர்வு செய்யப் பட்டனர். இந்த மாதிரியான சீராகயில்லாத தேர்வு பட்டய மேற்படிப்பு படித்த மாணவர்களின் மத்தியில் மனக்கொதிப்பை ஏற்படுத்தியது.*

*2. இத்தேர்வு முறையை மாற்றும் நோக்கோடும் பட்ட மேற்பட்டயப் படிப்புப் படித்தவர்களுக்கும் போதுமான சந்தர்ப்பங்கள் அளிக்க வேண்டும் என்ற நோக்கோடும், ஒரு குறிப்பிட்ட துறையில் ஏற்கனவே தகுதிபெற்றவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கும் வகையில் 1981–82 ஆம் ஆண்டிலிருந்து பின்வரும் வழிமுறைகள் பின்பற்றப்படவேண்டுமென்று 1981 ஆம் ஆண்டு மே மாதத்தில் அரசு ஆணையிட்டது.*

*(1) எம். டி. (பொது மருத்துவம்), எம். எஸ். (பொது அறுவையியல்) போன்ற பட்டமேற்படிப்புக்கு, எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்றவர்கள் மனு செய்ய தகுதியானவர்கள்.*

*(2) பட்ட மேற்படிப்புக்கு முன்னோடியாக அதே படிப்பில் பட்டயப் படிப்பும் இருக்கும் பிரிவுகளில் பட்டயப்படிப்பு படித்தவர்கள் மட்டுமே மனு செய்ய தகுதியானவர்கள்.*

*முதல்வழி முறைப்படி எம்.பி.பி.எஸ். படித்தவர்கள் எம்.டி (பொது மருத்துவம்) மற்றும் எம். எஸ். (பொது அறுவையியல்) போன்ற பட்ட மேற்படிப்புக்கு மனு செய்யலாம். மற்றும் பட்டயப்படிப்பு படித்தவர்கள் மட்டுமே எல்லா பட்ட மேற்*

படிப்புக்கும் படிக்க தகுதி உடையவர்கள் என்று அரசு வ முறைகள் பிறப்பிக்கவில்லை. இரண்டாவது கொள்கை விளக்க படி பட்ட மேற்பட்டய படிப்பு இருக்கும் மற்ற பிரிவுகளுக் பட்டயப்படிப்பு படித்தவர்கள் தான் பட்டமேற்படிப்புக் மனு செய்யலாம் என்பது பொருந்தும்.

3. எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்றவர்கள் அல்லது பட்ட மேற்படிப்புப் பட்டயப் படிப்பு படித்தவர்கள் இந்த வழிமுறைகள் பற்றி எந்தவிதமான பதட்டநிலை அடைய வேண்டியதில்லை உயர்நீதிமன்றமோ அல்லது உச்ச நீதிமன்றமோ இந்த வழி முறைகள் பற்றி எந்தவிதமான எதிரான கருத்தும் கூறவில்லை

டாக்டர் கே. ஸ்ரீராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையைப் படிக்கின்ற நேரத்திலே எனக்கு எழுந்த ஒரு சில வினாக்களை இங்கே எழுப்பக் கடமைப்பட்டு இருக்கிறேன். இந்த அறிக்கையிலே வெகு அழகாக அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள் 1981–82 ஆம் ஆண்டுக்கு முன்பு ஒரு குழப்பமான நிலைமை இருந்தது என்பதை ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள். அப்படிப் பட்ட குழப்பமான நிலைமையை உருவாக்கியவர்கள் யார்? அரசியல்வாதிகள் தான் அப்படிப்பட்ட குழப்பத்தை உருவாக்கி யவர்கள் என்று நான் கருதுகிறேன். இரண்டு ஆண்டுகள் எம்.டி. படிப்பை திடீரென்று நிறுத்திவிட்டு, அதற்கு டிப்ளமோ ஹோல்டர்ஸ் தேவை என்று மூன்று ஆண்டுகள் ஆக்கி, அதற்குப் பின்னாலே ஏகப்பட்ட குழப்பங்களை உண்டாக்கி, அதன்பிறகு தான் இப்படிப்பட்ட முடிவு எடுத்து இருக்கிறார்கள். 1981–82 ஆம் ஆண்டில் சரியானது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இந்தக் குழப்பத்தை உருவாக்கியதன் விளைவாக 3 ஆண்டுகள் எம்.டி. படித்துவிட்டு, அந்தப் பட்ட மேற்படிப்பும் இல்லாமல் பட்டயப்படிப்பும் இல்லாமல் இன்று நடுவில் நின்றுகொண்டு இருக்கிறார்களே அவர்களுடைய கதி என்ன? அவர்களுக்கு மீண்டும் அந்தப் பட்டயப் படிப்போ அல்லது மேல் பட்டப்படிப்பு எம்.டி. படிப்போ படிப்பதற்கு அனுமதி கொடுக்கப்படுமா? ஏனென்றால் எம்.டி. கிடைப்பது கஷ்டம். பலமுறை கஜினிமுகமது போல் படையெடுத்தும் எம்.டி. கிடைக்காமல் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இந்த 3 ஆண்டுகால படிப்பை நம்பி எம்.டி. கிடைக்காமல் இதையும் பாஸ் செய்ய முடியாத நிலையில் இருப்பதைத் தடுப்பதற்கு, அவர்கள் டி.ஜி.ஓ.-வில் சேருவதற்காவது சந்தர்ப்பம் அளிக்கப்படுமா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** துணைத் தலைவர் அவர்களே, நான் மிகத் தெளிவாக அந்த அறிக்கையில் சொல்லி யிருக்கிறேன். இரண்டு வகைகளிலே அந்தப் போஸ்ட் கிராஜுவேட் குவாலிபிகேஷன்கள் இருக்கின்றன. எம்.டி. ஜெனரல், எம்.டி. (ஓ & ஜி). எம்.டி. ஜெனரலுக்கு டிப்ளமோ தேவையில்லை. எம்.டி. (ஓ & ஜி)-க்கு டிப்ளமோ தேவை என்று நாம் போட்டு இருக்கிறோம். முன்பெல்லாம் அந்த டிப்ளமோ இல்லாதவர்கள் நேரடியாகக் கூட அந்த போஸ்ட் கிராஜுவேட் டிகிரி—எம்.டி.—



பெற முடியும். ஆனால் இந்த ஆண்டு நாம் அதைப் பிரித்து விட்டோம். கேரள மாநிலத்தில் இதைப் போன்று கொண்டு வந்து இருக்கிறார்கள். மற்ற மாநிலங்களிலும் இந்த முறையைப் படிப்படியாக பின்பற்ற இருக்கிறார்கள். இருந்தாலும் டி.ஜி.ஓ. படித்தவர்களுக்கு எம்.டி. (ஓ & ஜி) படிக்க வாய்ப்பு இல்லாமல் இருக்கக்கூடுமே என்ற அச்சத்தின் காரணமாக, டி.ஜி.ஓ. படித்தால் தான் அதற்கு வாய்ப்பு இருக்கிறது என்ற திட்டத்தில் உத்தரவு போட்டு இருக்கிறோம். ஆகவே எந்தவிதமான கன்ப்யூஷனும் இல்லை. டி.ஜி.ஓ படித்து விட்டால், எம்.டி. (ஓ & ஜி) சேரலாம். அதே மாதிரி எம்.... செஸ்ட் டிசீஸ் பொறுத்தவரையில், செஸ்ட் டிசீசில் டிப்ளமோ பெற்றவர்கள் எம்.டி. செஸ்ட் டிசீஸ் படிக்கலாம் என்று வைத்து இருக்கிறோம். இதிலே எந்தவிதமான குழப்பமும் இல்லை.

இப்போது கேள்வியை எழுப்பினார்கள், ஏற்கனவே இந்த டிகிரி படிக்கக்கூடியவர்களுக்கு ஏதாவது பிரச்சினை உண்டா என்று. அவர்களுக்கு எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. அவர்கள் தங்கள் படிப்பை முடித்துவிடலாம். அதிலே பிரச்னை எழவில்லை.

டாக்டர் கே. ஸ்ரீராஜன்: துணைத்தலைவரவர்களே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என் கேள்வியை சரியாகப் புரிந்துகொள்ள வில்லை என்று கருதுகிறேன். 1981 ஆம் ஆண்டுக்கு முன்னல் 3 ஆண்டு எம்.டி. பட்டப்படிப்புக்கு ஒருவர் சேர்ந்திருக்கிறார். அவரால் எம்.டி. பாஸ் செய்ய முடியவில்லை. அதில் இருக்கிற கஷ்டம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆகையால் பல தடவை படையெடுத்து, படையெடுத்து பாஸ் செய்ய முடியாமல் இருக்கிறவர்கள் டி.ஜி.ஓ. பட்டயப் படிப்புக்குச் செல்ல வழிவகை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** துணைத் தலைவரவர்களே, அது முடியாது. டி.ஜி.ஓ—வுக்கு ஃப்ரஷாகத்தான் போக வேண்டும். இதை ஒரு உதாரணம் மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு விளக்க விரும்புகிறேன். முன்பு ஒரு காலத்தில் பி.ஏ. (ஆனர்ஸ்) இருந்தது. இன்டர்மீடியேட் முடித்த பிறகு 3 ஆண்டுகள் படித்த பி.ஏ. (ஆனர்ஸ்) தேர்ச்சிக்குச் செல்ல வேண்டும். பி.ஏ. (ஆனர்ஸ்) படித்த பிறகு அதிலே பாஸ் செய்ய முடியவில்லை என்றால் அவரை பி.ஏ-க்கு எழுது என்று சொல்லமுடியாது; அனுமதிக்கவும் முடியாது. பி.ஏ. படித்து அதிலே பாஸ் செய்ய முடியாதவர்களுக்கு ஒரு பரிகாரம் செய்யவேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அதை தற்போது ஏற்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### 4. அறிக்கை அளித்தல்.

### மேட்டூர் கால்வாயிலிருந்து பாசனத்திற்குத் தண்ணீர் வழங்குவது.

**மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 106-ன் கீழ் நான் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை அவையில் வைக்க விரும்பு கிறேன் :

(திரு. கே. இராஜாமுகமது) [1982 பிப்ரவரி 16

"என் பயிரிடுவதற்காக இம்மாதம் (பிப்ரவரி) 17-ம் தேதியில் இருந்து ஏப்ரல் மாதம் 21-ம் தேதிவரை மேட்டூர் கால்வாயில் தண்ணீர் வழங்குவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

மேலும் தஞ்சாவூரில் தாளடி நெற்பயிர்களுக்காக மேட்டூர் நீர்த்தேக்கத்தில் இருந்து தண்ணீர் வழங்குவதை இம்மாதம் 15-ம் தேதிக்குமேல் 28-ம் தேதிவரை நீட்டிக்கவும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

சாத்தனூர் அணையையும் மேலும் ஒரு மாதத்திற்கு திறந்து மேற்கு பகுதிக்குத் தண்ணீர்விட அரசு ஒப்புதல் அளித்துள்ளது".

5. அரசினர் சட்டமுன்வடிவுகள்.

அ. பொது விற்பனை வரி (மூன்றாவது திருத்த)
சட்ட முன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1981-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 63/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் வேண்டும்."

திரு. துரைமுருகன் : துணைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்தில் நம்முடைய வருவாய்த்துறை அமைச்சரவர்கள் மொழிந்திருக்கின்ற பொது விற்பனை வரி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழகத்தினுடைய வருமானத்தில் பெரும்பகுதி-ஃபினான்ஷியல் ரீசோர்ஸஸ், நிதி ஆதாரத்தில் பெரும்பகுதி நமக்கு இந்த விற்பனை வரி மூலம்தான் கிடைக்கிறது. அதை கண்டுபிடித்துக் கொடுத்தார்கள். அது ஒரு காமதேனுவாக இருக்கிறது. ஆனால் அதிலே எவ்வளவுக்கு வரி போட முடியுமோ அவ்வளவுக்கு வரி போட்டு, கசக்கிப் பிழிந்து விட்டார்கள் இனிமேல் அந்த காமதேனு இரண்டு சொட்டு கூட கறக்க முடியாமல் ஓய்ந்து போய் இருக்கிறது. இதை நான் சொல்லவில்லை. சென்ற ஆண்டு ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட வரைவிலே நீங்கள் டெல்லிக்கு சொல்லியிருக்கிறீர்கள். அதிலே சேல்ஸ் டாக்ஸ் என்ற முறையில் இனிமேல் வரியே போட முடியாது என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆகையால் இப்போது இந்த சர்க்காருக்கு பணம் வேண்டும் என்பதற்காக நுணுக்கி, நுணுக்கிப் பார்த்து எங்கெல்லாம் பணம் கிடைக்கும் என்று பார்த்து, ஒரு முனை வரியில் வருமா, பலமுனை வரியில் வருமா என்று பார்த்து, ஒன்றைப் போட்டால் வியாபாரிகள் ஒப்புக் கொள்கிறார்கள்; இரண்டைப் போட்டால் நாங்களே போடு கிறோம் என்கிறார்கள் என்று சொல்கிறார்கள் நம்முடைய அமைச்சரவர்கள்.

* 1981 ஆகஸ்டு 22-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



(முற்பகல் 11-00)

1982 பிப்ரவரி 16] [திரு. துரைமுருகன்]

பில்லைப் பார்த்தால் ரொம்ப சிம்பிளாகத் தெரிகின்றது. ஆனால் இதிலே நான் ஒன்றைக் கேட்கிறேன். ஒரு ஆர்டினன்ஸ் போடப்பட்டு பிறகு அது பில்லாக வந்தது. அதிலே என்ன? இந்திய அரசின் சுற்றுலாத் துறையாலே வகைப்படுத்தப்பட்ட அல்லது ஏற்பளிக்கப்பட்ட வாடிக்கைக்காரர்களுக்கு விற்கப்படும் உணவுப் பொருட்கள், பானங்கள் ஆகியவற்றின் விற்பனை வரியை 15—-81-லிருந்து முதல் விவர அட்டவணையின் 150-வது பகுதியின் கீழே கொண்டு வருவார்கள். முன்னர் 3 நட்சத்திர, 4 நட்சத்திர 5 நட்சத்திர ஓட்டல்களில் விற்கப்பட்ட உணவுப் பொருட்கள், பானங்கள் ஆகியவற்றுக்கு மட்டுமே வரி விதிக்கப்பட்டது. அப்போது ஆர்டினன்ஸ் போடப்பட்டதற்குப் பிறகு ஒரு பில் கொண்டு வரப்பட்டு இந்த சபையிலே ரொம்ப நேரம் வாதிட்டோம். அப்போது ரெவின்யூ அமைச்சரவர்கள் 'இதிலே நீங்கள் ஏன் கஷ்டப்படுகிறீர்கள், நாம் போட்டிருப்பதெல்லாம் 3 ஸ்டார், 4 ஸ்டார், 5 ஸ்டார் ஓட்டல்களுக்குத் தானே, நாம் எல்லாம் ஏழைகள், நாம் எங்கே அங்கே போகப் போகிறோம், அடையார் கேட்டிலே போயா காபி சாப்பிடப் போகிறோம். சேப்பாக்கம் செரட்டானிலே போயா டிஃபன் சாப்பிடப்போகிறோம், தாஜ் கோரமண்டலிலே போயா டின்னர் சாப்பிடப் போகிறோம், எனவே சாப்பிடுகிறவன் யாரோ, அவன் கொடுக்கிறான், இருப்பவனிடத்திலே வசூல் பண்ணுவதிலே உங்களுக்கு என்ன கஷ்டம் என்று மந்திரி கேட்டார். நாங்களும் ஒத்துக்கொண்டோம். ஏனென்றால் நாங்கள் சோழா ரெஸ்டாரண்டைப் பார்க்கவில்லை, அடையார் கேட்டை எட்டிப் பார்க்கவில்லை. நாம் எங்கே அங்கே போகப் போகிறோம் என்று பேசாமல் விட்டுவிட்டோம். ஆனால் வரி போட்டுவிட்டீர்கள். எப்படிப் போட்டீர்கள்?

Wh re th rates of chages fo acc mm dation for residence including charges for Air-chnditioning, Tel vision, R dio, Mu ici ex r b d, light, and including charges for food ,drink, and tel phone call is Rs, 20 or more put l ss than Rs.50/-per p rson p r day, 5 of such rate அது ஒரு ரேட், அடுத்து where such a ra e is Rs. 50 or more for person for day 10 persent of such rate இப்படி 3, 4, 5 நட்சத்திர ஓட்டல்களுக்கு என்று போட்டு வசூல் பண்ணினீர்கள். இப்போது ரொம்பப் பேர் மறந்துபோய் இருப்பார்கள் அந்த ஆர்டினன்ஸை அந்த ரேட்டை என்று நினைத்து அதற்கு முன்னாலே இப்படி எல்லாம் நாங்கள் போடப் இருக்கிறோம் வரி என்று காரண காரிய விளக்கங்களைக் கூடச் சொல்லாமல் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரொம்ப நாசூக்காக 3 நட்சத்திர 4 நட்சத்திர 5 நட்சத்திர ஓட்டல்களில் விற்கப்படும் உணவுப் பொருட்கள், பானங்கள் ஆகியவற்றுக்கு மட்டுமே வரி என்று சொல்லி விதித்தார்கள். ஆனால் இப்போது மற்றக் கிளாஸிஃபைட் ஓட்டல்களுக்கும்

கொண்டு வருகிறேன் என்கிறார். இதே ரேட்டிலேதான் இந்தச் சார்ஜைதான் வசூல் பண்ணுவீர்களா? 3 ஸ்டார், 4 ஸ்டார், 5 ஸ்டார் ஓட்டல்களிலே இப்படி 5% 15% வசூலிக்கிறீர்களே, அதே விகிதத்தில் தான் இந்த 1-ஆம் ஸ்டார், 2-ஆம் ஸ்டார், 3-ஆம் ஸ்டார் ஓட்டல்களுக்கும் என்று இருக்கின்றதே. இந்த மூன்று வகையான ஸ்டார் ஓட்டல்களிலும் இதே பெர்சண்ட் என்ற விகிதத்திலேதான் வரி வசூல் செய்யப் போகிறீர்களா?

நான் ஒரு விளக்கத்திற்காகக் கேட்கிறேன். அப்படி ஆம் நாங்கள் அப்படித்தான் வசூல் செய்யப் போகிறோம் என்று சொன்னால் இது நியாயம்தானா? பார் வைத்திருந்தால் ஒரு ஸ்டார் என்று சொல்கிறார்கள். பாரோடு வேறு ஒன்று இருந்தால் அதற்கு ஒரு ஸ்டார் என்று சொல்கிறார்கள். இப்படி ஆறு ஸ்டார் வரை இருக்கிறது. ஆகவே ஸ்டார் என்பது ஸ்டேஜ் பை ஸ்டேஜாகப் போகிறது. ஆகவே இப்போது சின்னச்சின்ன ஓட்டல்களிலே கூட பார் இல்லாமல் இல்லை. பார்தான் வீதிக்கு வீதி இருக்கின்றதே. பார் இல்லாத ஓட்டலே கிடையாது. ஆகவே எங்கெல்லாம் நட்சத்திர ஓட்டல் என்று சொல்லி நீங்கள் வசூல் பண்ணக்கூடிய நிலைமைகள் உருவாகும். இப்போது ஏற்கனவே ஓட்டல்களிலே பண்டங்களின் விலைகள் ஆகாயத்திலே பறக்கின்றன. நாம் விலையைக் கேட்டால் பண்டங்களின் விலை உயரும் என்கிறார். ஏன் உயரும் என்றால் விலைவாசி ஏற்றம் என்கிறார். அதைக் கட்டுப்படுத்த சட்டம் கொண்டுவரப்படுமா என்றால் கொண்டுவர முடியாது. ஓட்டல் முதலாளி என்ன செய்கிறார், சைஸையும் குறைத்து விட்டேன், விலையையும் ஏற்றி விட்டேன் என்கிறார். ஆகவே ஒரு சாதாரண உடுப்பி ஓட்டலிலேயே போய் இன்றைக்குச் சாப்பிட முடியாத நிலைமையிலே விலை ஏறிப்போய் இருக்கின்றபோது இதைப் பார்த்துவிட்டால் எல்லோரும் விலையை ஏற்றி விடுவார்கள், 1-ஆம் ஸ்டார், 2-ஆம் ஸ்டார் என்று சொல்லி கொண்டு வந்தால் கூட அதிகமாக வசூல் பண்ணக்கூடிய நிலைமை உருவாகும்.

ஸ்டார் ஓட்டல் என்றால் பெரிதாக நினைத்துக் கொள்ளக் கூடாது. 2, 3, 4, ஸ்டார் ஓட்டல்களிலே தங்குவதற்கு டாட்டா, பிர்லா, பரம்பரையினர்தான் வரவேண்டும் என்ற பெரிய நிலைமை கிடையாது. சாதாரண ஓட்டல்களைக் கூட இன்றைக்கு அந்த நிலைமைக்குக் கொண்டு வந்து ஆகிவிட்டது. எனவே இப்போது கொண்டு வந்திருக்கின்ற இந்த சட்ட முன்வடிவைத் தவிர்த்திருக்கவேண்டும். 3, 4 நட்சத்திர ஓட்டலோடு நிறுத்தி இருக்கலாம். சோழா ரெஸ்டாரண்டிலே ஒரு தோசை 10 ரூபாய். — மெனுகார்ட் இருக்கின்றது. அதை வைத்துச் சொல்கிறேன்—ஒரு ஐஸ்கிரீம் 25 ரூபாய். அந்த ஒன், பாஸ்லெட் 40 ரூபாய்: ஒரு ரொட்டி கொடுக்கிறார், ஒரு



சிக்கன் கொடுக்கிறார் அவ்வளவுதான். அந்த ஓட்டல்களிலே இவ்வளவு பணம் நாம்தான் தருகிறோம். அந்த ஓட்டல்களுக்கு நாம் போனால் நம்மை ட்ரீட் பண்ணுவதைப் பாருங்கள். வேட்டி கட்டி இருப்பவர்களைப் பார்த்தால் ஒரு மாதிரியாக ட்ரீட் பண்ணுகிறார்கள். வேட்டி கட்டியவர்கள் எல்லாம் கீழே உட்காருங்கள், பேன்ட் போட்டவர்கள் எல்லாம் மேலே உட்காருங்கள் என்று ராதா ரத்தக்கண்ணீர் சினிமாவிலே சொல்வார். (குறுக்கீடு) அப்படி அதையெல்லாம் பார்த்துவிட்டு வந்தால் தான் தெரியும்—நான் இங்கே அதை தனியாகச் செய்ததாகச் சொல்லவில்லை. பொதுவாக நிலைமை அப்படி இருக்கிறது என்று சொல்கிறேன். ஆகவே, அந்த ஓட்டல்களில் வேட்டி கட்டியவர்களை ஒரு மாதிரியாகப் பார்க்கிறான். பேண்ட் போட்டவர்களை ஒரு மாதிரியாகத்தான் பார்க்கிறான். நாம் பணம் கொடுக்கிறோம். சாப்பிடுகிறோம். பணம் கொடுத்தவர்களை ஒரே மாதிரி நடத்தவேண்டியது தானே நியாயம். இது மட்டும் அல்ல. தமிழ்நாட்டில் ஓட்டல் நடக்கிறது. இந்த ஓட்டல்களில் மெட்ராஸ்காரர்கள் யாரும் சாப்பிடுவது இல்லையா? நார்த் இந்தியன்-வடநாட்டுக்காரர்கள்—தான் சாப்பிடுகிறார்களா? ஒரு தமிழ் பாட்டைக்கூட போடமாட்டேன் என்கிறார்கள். எல்லாம் இந்தி பாட்டு. இல்லையென்றால் இங்கிலீஷ் பாட்டு. நம்மிடம் ஒரு தோசைக்கு 10 ரூபாய் ஒரு காப்பிக்கு 15 ரூபாய் என்று வாங்கிக் கொள்கிறான். ஆனால் நம் விருப்பப்படி பாட்டு போடமாட்டானாம்.

ஒரு இரண்டு நாட்களுக்கு முன்பு இந்த பில் வரப்போகிறது என்று தெரிந்துதான் அடையார் கேட் ஹோட்டலுக்கு ஒரு காப்பி சாப்பிடலாம் எப்படி நிலைமைகள் இருக்கின்றன என்று நேரிடையாக அனுபவித்து வரலாம் என்று போனேன். நான் மட்டும் போகவில்லை. ஒரு அதிமுக எம். எல். ஏ.வோடு தான் போனேன். இரண்டு பேருமே இந்தச் சட்டமுன்வடிவிற்காகத் தான் போனோம். ஆனால் அங்கே அவன் கொடுத்தபில்லை யார் வாங்கி பணம் கொடுப்பது என்று கஷ்டமாகிவிட்டது. அவ்வளவு அதிகமாக பில் போட்டு விட்டான். அது போகட்டும் அங்கே ஒரு பாட்டாவது தமிழ் பாட்டுப் போடுகிறானா. எல்லாம் இங்கிலீஷ். இந்திதான். நாங்கள் கேட்டு கூட பார்த்துவிட்டோம். அதற்கு பதில் கூட 'நோ' என்று இங்கிலீஷில் தான் சொல்கிறான். நம் ஊரில் ஓட்டல் வைத்திருக்கிறார்கள். தமிழ்க்காரர்கள் அங்கே வரவேமாட்டார்களா? தமிழ் ஆட்சிமொழி என்கிறோம். செயல் மொழி என்கிறோம் பேச்சு மொழி என்கிறோம். எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்கிறோம். தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர் என்று பாடிய பாரதியாருக்கு நூற்றாண்டு விழா நடத்துகிறோம் ஆனால் ஆட்சிமொழி வேறு-ஓட்டல் மொழி வேறாக இருக்கிறது

[திரு. துரைமுருகன்] [1982 பிப்ரவரி 16

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்களுக்கு ஓட்டல்மொழி
என்று எடுத்துக் கொடுத்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்
கிறேன். இதை எதற்குச் சொல்கிறேன் என்றால், எவ்வளவு
பணம் அங்கே கொட்டிக் கொடுக்கிறோம். 10 சதவீதம் 20
சதவீதம் என்று வரி கொடுப்பவர்களுக்கு வேண்டிய சௌகரி
யத்தைச் செய்துக் கொடுக்க வேண்டும். பணத்தைக் கொடுப்
பவர்களுக்கு, பொது ஜனங்களுக்குத் தேவையான சௌகரியம்
இல்லை என்றால் அந்த ஓட்டல் எதற்கு?

அடுத்து மோட்டார் வண்டிகள் பொருத்தப்பட்ட சைக்கிள்
ரிக்ஷாக்களுக்கும், அதில் பயன்படுத்தப்படும் மோட்டார் என்ஜின்
களுக்கும், 8-7-1981 ஆம் நாளிலிருந்து 15 சதவீதம் ஒரு முனை
வரிவிதிப்பின் கீழ் கொண்டு வருகிறார்கள். இதற்கு முன்பெல்
லாம் ரிக்ஷாக்களில் மனுஷனை மனுஷன் கையினால் இழுத்துக்
கொண்டிருந்தான். அந்த அவல நிலையை மாற்றி அந்தக் கை
ரிக்ஷாக்களை சைக்கிள் ரிக்ஷாக்களாக எங்கள் காலத்தில் ஆக்கி
னோம். இரண்டு பேரை ஏற்றலாம் என்றாலும், வறுமையின்
காரணமாக மேற்கொண்டு 1/2 ரூபாய் 1 ரூபாய் கிடைக்குமே
என்று 3 பேர்களை ஏற்றிக்கொண்டு கஷ்டப்பட்டு இழுத்துப்
போகும் அந்தத் தொழிலாளி, சற்று ஈஸியாக இருக்கட்டுமே
என்று அந்த சைக்கிள் ரிக்ஷாக்களில் மோட்டார்களைப்
பொருந்துகிறான். அந்த மோட்டார்களுக்குப் போய் வரி
போடுகிறீர்களே, அது நியாயமா? நாங்கள் ஓட்டுகிறவனுக்குப்
போடவில்லையே உற்பத்தி செய்கிறவனுக்குத் தானே வரி
போடுகிறோம் என்று சொல்லலாம். ஆனால் வரி விதிப்பு
விலை ஏற்றத்தைச் செய்து, அது கடைசியில் அந்தத் தொழி
லாளியின் தலையில் தானே போய் விடியும். தன்னுடைய
ரிக்ஷாவில் அந்த மோட்டாரைப் பொருத்தலாம் என்று அந்தத்
தொழிலாளி நினைக்கும் போது, விலைவாசி ஏற்றத்தினால்,
அவனால் அதை பொருத்தமுடியாமல் போய்விடும் அல்லவா?
ஆகவே, அந்த ரிக்ஷாக்களைக் கூட விடாமல் நம்முடைய
ரெவின்யூ மினிஸ்டர் அவர்கள், சேல்ஸ் டேக்ஸ் அத்தனையையும்
நம்முடைய காலத்தில் வசூல் பண்ணியே தீருவது There is no
source at all என்ற நிலைமையை உருவாக்க எண்ணு
கிறீர்களா? அது கூட எவ்வளவு தெரியுமா? 15 சதவீதம் ஒரு
முனை வரி. போடத்தான் போடுகிறார்களே, அதை 4 சதவீதம்
5 சதவீதம் என்று போடக்கூடாதா? ரிக்ஷாக்களில் பொருத்தப்
படும் மோட்டார்களுக்கு 15 சதவீதம் ஒருமுனைவரி,
நட்சத்திர ஓட்டல்காரர்களுக்கு 4 சதவீதம் வரி. நம்முடைய
நிதியமைச்சர் அவர்கள் பார்க்கிறார். நம்முடைய பொக்கிஷம்
நிரம்பாவிட்டாலும் பரவாயில்லை. 15 சதவீதம் அந்த
ரிக்ஷாக்களுக்கு பொருத்தப்படும் மோட்டார்களுக்கு போடக்
கூடாது. 4, 5 சதவீதம் போதும். இதைநான் ஒப்புக் கொள்ள
மாட்டேன் என்று அவர் நினைப்பதுதெரிகிறது. அவர்
உள்ளம் இதை ஒப்புக்கொள்ளாது என்று எனக்குத் தெரியும்.
அதை நான் நம்புகிறேன்.



1982 பிப்ரவரி 16] திரு. துரைமுருகன்

அடுத்து இன்னொன்று: எழுது பொருட்கள், மெழுகுவர்த்தி
கள், பிளாஸ்டிக் பொருட்கள் போன்றவைகளுக்கு, வியாபாரிகள்
கேட்டுக் கொண்டதற்கு இணங்க பலமுனை விற்பனைவரி
கொண்டு வரப்படுகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.
அவர்கள் என்ன கேட்டார்கள். நீங்கள் என்ன கொடுத்தீர்கள்?
ஒன்றுமே தெரியவில்லையே. அவர்கள் என்ன கேட்டார்கள்
என்பது குறித்து, இத்துடனேயே ஒரு சீட்டை அச்சடித்து வைத்
திருந்தால் எங்களுக்கும் தெரியும். இன்னின்ன அவர்கள்
கேட்டிருக்கிறார்கள். இன்னின்ன கொடுக்கப்பட்டிருக்கிறது.
ஆகவே மீதி இருப்பதில் இன்னின்ன நாம் பேசலாம் என்று
நாங்கள் முடிவெடுப்போம். ஏனென்றால் இந்த அவையிலே பல
முறை நாங்கள் இந்த விற்பனை வரியைப் பற்றிப் பேசி அலுத்துப்
போயிருக்கிறோம்.

எனவே இதில் வந்திருக்கிற பிரச்னை என்னவென்றால்
ஹோட்டல்களை க்ளாஸிபை செய்து இதே ரேட்தான் உண்டா
என்பதை முதலில் சொல்லவேண்டும். கூடுமான வரையில்
1 ஸ்டார், 2 ஸ்ட்டார்ஸ், 3 ஸ்டார்ஸ் ஹோட்டல்களுக்கு 5
ஸ்டார் ஹோட்டல்களுக்கு இருப்பது போல் இருக்கக் கூடாது,
அந்த ரேட்டைக் குறைக்க வேண்டும். அடுத்தபடியாக, குறிப்பாக
சைக்கிள் ரிக்ஷாக்களுக்குப் பொருத்தும் என்ஜின்களுக்கு உள்ள
வரியை நிச்சயமாக அறவே நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக்
கொண்டு நான் அமர்கிறேன்.

(முற்பகல் 11.10)

*திரு எல். இளையபெருமாள்: பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்
கிற இந்த வரி விதிப்பு வசதிபடைத்த ஸ்டார் ஹோட்டல்களுக்கு
மட்டும் தான் என்று நினைக்க வேண்டாம். சாதாரணமாக இந்த
வரி ஏழை எளிய மக்களையும் பாதிக்கும். குறிப்பாக மாண்புமிகு
உறுப்பினர் திரு துரைமுருகன் அவர்கள் சொன்னதுபோல்
ரிக்ஷா வைத்திருக்கிறவர்கள் மட்டுமல்ல, ரிக்ஷாக்களில்
பிரயாணம் செய்கிறவர்களும் அதிகப்படியாக கொடுக்கவேண்டிய
ஒரு அவல நிலை ஏற்படுகிறது. இநத சேல்ஸ் டாக்ஸ் மறைந்த
பெரியவர் ராஜாஜி அவர்களால் கொண்டுவரப்பட்டது. அதை
அவர்கள் கொண்டுவரக் காரணம், மதுவிலக்குச் சட்டம் வந்த
போது அரசுக்கு பணம் இல்லை, அதைச் சரிக்கட்ட இந்த
விற்பனைவரியை ராஜாஜி அவர்கள் கொண்டு வந்தார்கள்
என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் இப்போது மது
விலக்கை எடுத்துவிட்டதால் அரசுக்கு அதிகப்படியாக வருமானம்
வருகிறபோது ஏன் இந்த வரியை வைத்துக்கொள்ளவேண்டும்
என்பதை அரசாங்கம் யோசிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். இந்த வரி உயர்வினால் பாதிக்கப்படுவது யார்?
இத்தகைய வரி விதிப்பினால், வரிகளை உயர்த்துவதால் மறை

முகமாகப் பாதிக்கப்படக்கூடியவர்கள் நடுத்தர மக்களும், ஏழை எளிய மக்களும்தான். அரசாங்கம், ஒரு முனை வரியாகக் கொண்டுவருவதாக உறுதி அளித்தார்கள். அது எந்த நிலையிலிருக்கிறது? சிலவற்றிற்கு விதிவிலக்குக் கொடுப்பார்களேயானால் நடுத்தர மக்களுக்கு, ஏழைகளுக்கு ஒரு வாய்ப்பாக அது இருக்கும். இதையெல்லாம் நீங்கள் விட்டுவிட்டால் கொடுத்த வாக்குறுதி என்னாவது?

இன்று மதுவிலக்கைத் தளர்த்தினோம் என்ற பெயரால் ஒரு அவலநிலை ஏற்பட்டிருப்பது உங்களுக்குத் தெரியும். மதுவிலக்குக் கொள்கைய தளர்த்தியிருப்பதால், வருமானம் நிறைய வந்திருப்பதாக தெரிகிறது. காண்ட்ராக்ட் மூலம், ஏலம் போடுவதன் மூலம் நிறைய வருமானம் வருவதாக பத்திரிகைகள் மூலம் தெரிய வருகிறது. கோடிக்கணக்கான ரூபாய் இதனால் கிடைத்திருக்கிறது. அப்படியிருக்க இந்த விற்பனை வரியை ரத்து செய்வதற்கு அரசு முன்வருவார்களா? அல்லது ஒருமுனை வரி என்ற நிலையை உருவாக்கிக் கொடுத்து அந்த வாக்குறுதியைக் காப்பாற்றுவார்களா?

இந்த வரி விதிப்பு பெரிய ஸ்டார் ஹோட்டல்களை மட்டும் பொருத்ததல்ல. ஏழை எளிய மக்களை, நடுத்தர வகுப்பினரை இதில் சிக்க வைக்கிற ஒரு அவல நிலை இருக்கிறது. சாதாரண கடை வியாபாரம் செய்யக்கூடியவர்கள் கூட விற்பனை வரி அதிகாரிகளால் சில சமயங்களில் பாதிக்கப்படக் கூடிய நிலை ஏற்படுகிறது. ஒருசில வியாபாரிகள் தவறு செய்கிறார்கள் என்பதற்காக ஒட்டுமொத்தமாக வியாபாரிகள் விற்பனை வரி அதிகாரிகளால் பாதிக்கும் அவலநிலை வந்திருக்கிறது. அரசாங்கத்தில் உள்ளவர்களுக்கு அனுபவரீதியாக, உண்மைகள் தெரியும். அவர்களுக்கு இரக்கம் காட்ட வேண்டும். மத்திய தர வகுப்பினருக்கு, ஏழை எளிய மக்களுக்கு நியாயம் வழங்க விரும்பவில்லை என்ற அவலநிலை, அவப்பெயர் அரசுக்கு வருகிற நிலையை ஏற்படுத்தாமல் சைக்கிள் ரிக்ஷாக்களில் பொருத்தப்படும் மோட்டார்கள், சாதாரண ஸ்டேஷனரி சாமான்கள் போன்றவற்றிற்கான விற்பனை வரியை ரத்து செய்யவேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த வரி விதிப்பைப் பொறுத்தவரையில் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் எடுத்த எடுப்பிலேயே இதை முழு மயாக கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு ஏழை மக்கள் பயன்படுத்தக்கூடிய சைக்கிள் ரிக்ஷாக்களில் மெஷின் பொருத்த அதிகச் செலவாகும் என்பதோடு மட்டுமல்லாமல் அதில் பிரயாணம் செய்கிற சாதாரண மக்கள்தான் இன்று அந்தளவிற்கு கட்டணத்தை உயர்த்திக் கொடுக்கும் அவசியம் ஏற்படும். சைக்கிளில் கூட இன்றைக்—



மோட்டார் பொருத்துகிறார்கள். குறைந்த வருமானம் உள்ளவர்கள் ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் வாங்க முடியாமல் சைக்கிளில் மோட்டார் வைத்து அதைப் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் கூட இதனால் பாதிக்கப்படக்கூடிய நிலை ஏற்படும் என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

அரசாங்கம், போதிய வருமானம் கிடைக்கவில்லையென்பதால் 8 சதவீதம் என்பதிலிருந்து 15 ஆக ஆக்குகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த வரி விதிப்பினால் அரசாங்கம் எதிர்பார்க்கிற நன்மைகள் நிச்சயமாகக் கிடைக்காது. அரசுக்கு இதனால் அவப்பெயர்தான் ஏற்படப் போகிறது. இதனால் ஏழை, நடுத்தர மக்கள்தான் பாதிக்கப்படுவார்கள் என்பதால் இந்த வரிவிதிப்பைக் கட்டாயம் கைவிடவேண்டுமென்றுகேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல்தான், இன்றைக்கு மற்றப் பொருள்களை எடுத்துக் கொண்டால், மெழுகுவர்த்தி, எழுதுபொருள்கள், பிளாஸ்டிக் சாமான்கள் ஆகியவற்றிற்கு விற்பனைவரி விதிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சாமான்களை எல்லாம் சமுதாயத்திலே யார் பயன்படுத்துகிறார்கள்? மிக ஏழ்மையான மக்கள். லட்சக்கணக்கான மாணவர்கள் இன்றைக்கு எழுதுபொருள்களை உபயோகப்படுத்துகிறார்கள். அவர்களுக்கு குறைந்தவிலையில் கொடுக்க வேண்டுமென்று, அரசே இன்றைக்கு அந்தத் துறையில் தலையிட்டு, மாணவர்களுக்கு குறைந்தவிலையில் எழுதுபொருள்களை விநியோகிக்கிறார்கள். ஆனால், அவைகள் போதுமானதாக இல்லை, அதன்காரணமாக, வெளி மார்க்கெட்டிலே வாங்கவேண்டியிருக்கிறது. சிறிய வியாபாரிகள் வாங்குகிறார்கள். சாதாரண மக்கள் வாங்குகிறார்கள். இந்தப் பொருள்களின் மீது விற்பனை வரி விதிப்பதால் விலைவாசி உயருகிறது.

சைக்கிள் மோட்டார்களுக்கு விதித்த பலமுனை வரியிலிருந்து அது ஒருமுனை வரியாக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். அதேபோல், எழுதுபொருள்கள், மெழுகுவர்த்தி, பிளாஸ்டிக் சாமான்களுக்கு ஒரு முனை வரியிலிருந்து, பலமுனை வரியாக கொண்டு வந்திருக்கிறோம், வியாபாரிகள் கேட்டுக் சொண்டார்கள் என்பதற்காக என்று சொல்கிறார்கள். அப்போது வரி ஏய்ப்பு ஏற்படாதா? இத்தகைய பொருள்களை எல்லாம் யார் வாங்குகிறார்கள்? சாதாரண மக்கள் தான் வாங்குகிறார்கள். காரணம், பித்தளை விலையும் உயர்ந்து விட்டது; அதேபோல் அலுமினிய பாத்திரங்கள் விலையும் உயர்ந்துவிட்டது. அவர்களால் இந்தச் சாமான்களை வாங்க முடிவதில்லை. எனவே, ஏழைமக்கள் உபயோகப்படுத்துகின்ற இந்த பிளாஸ்டிக் சாமான்கள் மீது, இந்த விற்பனை வரியைப் போடுவதால், அந்தச் சாமான்களின் விலை கூடும். அதனால், வெளி மார்க்கெட்டிலே,

[திரு. கே. ஆர். சுந்தரம்] [1982 பிப்ரவரி 16

வியாபாரத்திலே மந்த நிலை ஏற்படும். அதனால், சிறு தொழில்கள் பாதிக்கக்கூடிய நிலைமை ஏற்படும். எனவே, நான் அரசைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த எழுதுபொருள்கள், மெழுகுவர்த்தி, பிளாஸ்டிக் போன்ற சாமான்களுக்கு கட்டாயம் வரியை ரத்து செய்யவேண்டும்.

அதேபோன்று, சைக்கிள் ரிக்ஷாக்களுக்கும், சைக்கிள்களிலே பொருத்தப்படும் மோட்டார்களுக்கும் போடப்பட்டுள்ள வரியை யும் ரத்து செய்யவேண்டும். அதேபோல், இன்றைக்கு மக்கள் உபயோகப்படுத்தக்கூடிய அத்தியாவசிய பண்டங்கள் மீது ஒரு முனை வரியிலிருந்து பல முனை வரி போடப்பட்டிருக்கிறது. அதனால், பல தகராறுகள் ஏற்படுகின்றன என்பதை நாம் பார்க்கிறோம். வரி வசூலிப்பதற்குச் செல்லும் அதிகாரிகள், சிறு சிறு வியாபாரிகள் கடைகளுக்கு அடிக்கடி சென்று சோதனை யிடுவதோடு, அவர்களை மரியாதைக் குறைவாகவும் நடத்து கிறார்கள். இதுபற்றி நீண்டகாலமாக அரசுக்கு கோரிக்கைகள் வந்திருக்கின்றன. எனவே, இந்த அரசு அப்படிப்பட்ட அத்தியாவசியமான பண்டங்களுக்கு போடப்பட்டிருக்கும் பல முனை வரியை ரத்து செய்ய வேண்டும்.

எனக்குத் தெரியும், வெல்லத்திற்கு பல முனை வரி போடப் பட்டிருக்கிறது. அதற்கு ஒருமுனை வரி போடவேண்டும். அதை ஒருமுனை வரி ஆக்குவதன் மூலம் அரசாங்கம் எதிர் பார்க்கின்ற வருவாய் கிடைக்கும். அந்த முறையில் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அரசு இந்த வரிகளை விதிக்கக்கூடாது என்று சொல்லி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் என் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆரம்பத்திலே இந்த விற்பனை வரியானது ரூபாய்க்கு ½ பைசா என்று விதிக்கப்பட்டது. மதுவிலக்கு அமுல் செய்யப்பட்ட காலத்தில், அதனால் அரசுக்கு ஏற்படக்கூடிய வருவாய் இழப்பை ஈடு செய்வதற்காக இந்த விற்பனை வரி தமிழ் மாநிலத்திலே கொண்டுவரப்பட்டது. அது இன்றையதினம் ஒரு காமதேனுவாக இருக்கிறது. அரசாங்கத்திற்கு முதல்தரமான, அதிகப்படியான வருமானத்தைத் தரக்கூடிய ஒரு வரியாக அமைந்திருக்கிறது.

1957–58 ஆம் ஆண்டில் ரூ. 17.73 கோடி விற்பனை வரி மூலம் நமது மாநிலத்திற்கு வருமானம் கிடைத்தது. இன்றைய தினம் 1980–81 ஆம் ஆண்டை எடுத்துக்கொண்டால், இது 449 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. இது உயர்ந்து கொண்டே போகிறது. மேலும் இது உயர்ந்து செல்லக் கூடிய நிலைமை தான் இருக்கிறது.



1982 பிப்ரவரி 16] [திரு. இரா. கருப்பையா]

மதுவிலக்கு தளர்த்தப்பட்டது. அதன்மூலமாக அரசுக்கு வருமானம் அதிகரித்திருக்கிறது. ஆகவே, இந்த நிலையில் இம்மாதிரியான வரி மாற்றங்களை அரசு செய்வதன் மூலம், வரிகளை உயர்த்த எடுக்கக்கூடிய இந்த நடவடிக்கைக்கு நான் ஆட்சேபணையைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11.20)

இந்த விற்பனை வரியின் மூலமாக மக்கள் வாங்கக்கூடிய பொருள்கள் மீது வரிச்சுமை கூடி விலை உயரக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கம் வரி விதிப்பு சம்பந்தமான கொள்கையை முழுப் பரிசீலனை செய்து மக்களுக்கு நிவாரணம் கிடைக்கக்கூடிய முறையில் ஒரு கொள்கை உருவாக்கப்பட வேண்டுமென்பதை, விலைவாசி மேலும் உயராத அளவுக்கு ஒரு நிலைமையை உருவாக்க வேண்டுமென்பதைக் குறிப்பிட விரும்பு கிறேன்.

இன்றையதினம் மத்திய அரசு நம்முடைய மாநிலத்தில், பல் வேறு பொருள்கள் மீது விதிக்கக்கூடிய வரியை மாநிலஅரசு மத்திய எக்ஸைஸ் வரி மூலம் பெறக்கூடிய முறையில் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். மருந்துப்பொருள்கள், பருத்தி நூல், சிமெண்ட், உருக்குப் பொருள்கள், காகிதங்கள், காகித அட்டைகள், பெட்ரோலியம் பொருள்கள் ஆகியவற்றுக்கு எக்ஸைஸ் வரி விதிப்பதற்கான முறையில் மத்திய அரசு நடவடிக்கை எடுத்து மாநிலத்தின் விற்பனை வரி மூலமாகக் கிடைக்கக்கூடிய வரு மானத்தில் கை வைக்கக்கூடிய அளவுக்கு சென்று கொண்டிருக் கிறது. இப்படி மத்திய அரசு மாநிலங்களுக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தைப் பறிக்கக்கூடிய செயல்களை உறுதியாக எதிர்த்து நின்று தடுப்பதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு உறுதி யாக மேற்கொள்ளவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது சைக்கிள் ரிக்ஷாக்களுக்குப் பொருத்தும்படியான மோட்டார் எஞ்சின்களுக்கு வரி போட்டிருக்கிறார்கள். சாதாரணமாக மனிதனை மனிதன் இழுத்துச் செல்லுவதை எல்லாம் தடை செய்ய வேண்டுமென்ற நோக்கத்திலேதான் சைக்கிள் ரிக்ஷாக்களில் சிறு அரை எச்.பி. மோட்டார் எஞ்சின் களைப் பொருத்தி நவீனப்படுத்தி மனித உழைப்பைக் குறைக்கக் கூடிய முறையில் மோட்டார் எஞ்சின் பொருத்தும் முறை வந்திருக்கிறது. அந்த சைக்கிள் ரிக்ஷாக்கள் சாதாரண தொழி லாளிகள் ஓட்டக் கூடியவை. அதிலே பொருத்தப்படுகிற மோட்டார் எஞ்சின்களுக்கு 15 சதவிகித வரி கட்ட வேண்டு மென்று கொண்டு வருவது அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும்

சாதாரண உழைப்பாளி மக்களைப் பாதிக்கக்கூடிய நிலையில் இருக்கும் என்ற காரணத்தால் இதை ஏற்றுக் கொள்ள முடியாது; இதை ஆட்சேபிக்கிறோம்; இதைக் கைவிட வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இன்றையதினம் குறிப்பேடுகள், கணக்கேடுகள், பால் பாயின்ட் பேனா, எழுது பொருள்கள், பி.வி.சி. குழாய்கள் ஆகிய இவற்றுக்கெல்லாம் ஒரு முனை விற்பனை வரி இருந்ததை 8 சதவிகித வரி என்று இருந்ததை, பல முனை விற்பனை வரியாக மாற்ற வேண்டுமென்ற அடிப்படையில் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதன் விளைவாக என்ன நிலைமை ஏற்படும் என்று அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். சாதாரண பள்ளி மாணவர்கள் பயன்படுத்தும் புத்தகங்கள், நோட்டுகள், எழுது பொருள்களுக்கு வரி உயரும்போது அதைக் கொடுக்கக்கூடியவர்கள் அடித்தளத்தில் இருக்கக்கூடிய சாமானிய மக்கள்தான். இதன் மூலம் அரசுக்கு வருமானம் என்ன அதிகமாக வரும் என்றும் தெரியவில்லை. சாதாரண மக்கள் தலைமேல் இந்த சுமை விழுகிறது என்ற காரணத்தால் இந்த வரி விதிப்பை ஆட்சேபிக்கிறோம். இந்த அமைச்சர் அவர்கள் கைவிட வேண்டும். இந்தப் பலமுனை விற்பனை வரி விதிப்பதற்கு கம்யூனிஸ்ட் கட்சி தன்னுடைய ஆட்சேபனையை, கண்டனத்தைத் தெரிவிக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

நம்முடைய மாநிலத்தில் அரசால் விற்பனை வரியைப் பற்றி ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட கெய்வார் கமிட்டி அரசுக்குச் சிபாரிசை 1977ஆம் ஆண்டில் கொடுத்திருக்கிறது. அந்தக் கமிட்டி முழுமையாக இது சம்பந்தமாக ஆராய்ந்து பல சிபாரிசுகளைக் கொடுத்திருப்பதில், அரசாங்கம் பலமுனை விற்பனை வரி என்ற அடிப்படையில் பல்வேறு பொருள்கள் மீது விதித்திருப்பதைக் குறிப்பிட்டு, அவை அனைத்தையும் ஒரு முனை விற்பனை வரிக்கு படிப்படியாகக் கொண்டு வரக்கூடிய முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அந்தக் கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறது.

அது மட்டுமல்ல, அரசாங்கம் ஒரு முனை வரி விதிப்பது தான் சரியான முறையாக இருக்கும். உடனடியாக அதைக் கொண்டு வருவது சாத்தியம் இல்லை என்பதை ஏற்றுக்கொண்டாலும் அந்தக் கமிட்டி படிப்படியாக ஒரு முற்போக்கான அடிப்படையில் ஒரு சரியான அடிப்படையிலே அனைத்துப் பொருள்களுக்கும் ஒரு முனை வரி விதிக்கப்படவேண்டுமென்ற முறையிலே பரிந்துரைத்து இருந்தாலும் அதையும் வைத்துக் கொண்டு ஏற்கெனவே ஒரு முனை வரியாக இருக்கக்கூடிய பொருள்களுக்குக் கூடிய பல முனை விற்பனை வரியாக மாற்றுவது என்பது சரியானதல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



வரி வசூல் செய்யும் அதிகாரிகள் தவறான நடவடிக்கைகள் பற்றி கூற விரும்புகிறேன். இந்த வரி அரசாங்கத்திற்கு காமதேனுவாக அமைந்திருப்பது மட்டுமல்ல வசூல் பொறுப்பிலே இருக்கின்ற அதிகாரிகளுக்கெல்லாம்கூட இது காமதேனுவாக இருக்கிறது என்பதை எல்லோரும் கூறுகிறார்கள். இதற்கு யாரும் விதி விலக்கல்ல, எந்த வியாபாரியாக இருந்தாலும் நகரமாக இருந்தாலும் கிராமப்புறமாக இருந்தாலும் அவர்களுக்கு அப்பாற்பட்டு எதுவுமே செய்ய முடியாது என்ற நிலைமைதான் இருக்கிறது. இன்றைய தினம் அரசாங்கத்திற்குச் சேரவேண்டிய வரிப் பணம் அதிகாரிகளின் முறைகேடான நடவடிக்கைகளின் காரணமாக ஒரு பகுதி அரசாங்கத்திற்குச் சேராமல் வேறு பக்கம் செல்லக்கூடிய குறைஇருக்கிறது. இதைக் கண்காணிப்பதற்கு, தடுப்பதற்குஎன்ன நடவடிக்கைகள் எடுத்தாலும் விஜிலன்ஸ் செல் அது இது என்று போடப்பட்டாலும் நடைமுறையில் எந்த அளவுக்கு திருத்தப் படும் என்பது கேள்விக்குரியாகவே இருக்கிறது. நடைமுறையிலே வியாரிகளைப் பொறுத்தவரையில் நான் எல்லா வியாபாரிகளையும் குறிப்பிட விரும்பவில்லை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட வியாபாரிகளுக்காக கம்யூனிஸ்ட் கட்சியினர்கூட பரிந்து பேசக்கூடிய நிலைமை வந்திருக்கிறது என்று ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறார்கள். தவறு செய்யக்கூடிய வர்த்தகர்கள்மீது நடவடிக்கை எடுப்பதிலே யாரும் குறுக்கே நிற்க முடியாது. அதே நேரத்திலே அவர்களுக்குத் தொந்தரவு கொடுப்பதே தங்களுடைய வேலை என்ற முறையிலே அதிகார வர்க்கம் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். உதாரணத்திற்கு பல முறையீடுகள் என்னிடம் வந்திருக்கின்றன. ஒரே ஒரு விஷயத்தை மட்டும் நான் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். டி.வி.எஸ். லாரியிலே சாமான்கள் புக் செய்யப்பட்டு லாரி வருகிறது. பேங்கிலே பணத்தைச் செலுத்தி சாமான்களைப் பெற்றுக் கொள்வது என்ற முறையிலே சாமான்கள் அனுப்பப்படுகிறது. ஆனால் செக்போஸ்டிலே வழியிலே அந்த சாமான்கள் நிறுத்தப்படுகின்றன. அதற்குத் தேவையான எல்லா பாரங்களும் விவரங்களும் லாரி ரசீது வரை முறையாக எடுத்துச் செல்லப்படுகிறது. இருந்தாலும் அந்த லாரியில் வந்த சாமான்கள் தடுத்து நிறுத்தப்படுகிறது. அவர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்படுகிறது. தடுத்து நிறுத்தப்பட்ட பொருள்களை அனுப்பிய கம்பெனியின் பெயர் Salim Industries. (Registration No. 484191/82. sales Tax Registration No. 6566 RAM) 15.7.72 Invoice No.61 பொருள்களினுடைய மதிப்பு இனவாய்சிலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற தொகை ரூ. 2,910. மொத்த வெய்ட் 24 கிலோ 600 கிராம். அந்த சாமான்கள் புக் செய்யப்பட்டு தஸ்தாவேஜுக்கள் எல்லாம் இருக்கின்றன, 1-1-82 ஆம் தேதி கரூர் விஸ்வநாதன் செட்டியாருக்கு அந்த சாமான்கள் அனுப்பப்படுகின்றன. குறிப்பாக பண்டிகை காலத்திலே அந்த சாமான்களை விற்று அவர்கள் பயன்பெற வேண்டுமென்பதற்காக முன்கூட்டியே அந்த ஸ்டெயின்லஸ் ஸ்டீல் கூட்ஸ் அனுப்பப்படுகின்றன.

[திரு. இரா. கருப்பையா] [1982 பிப்ரவரி 16

(முற்பகல் 11.30.)

அந்தச் சாமான்கள் வழியிலே குளித்தலை செக்போஸ்ட்டில் தடுத்து நிறுத்தப்படுகிறது. அந்தக் கம்பெனிக்கு நோட்டீஸ் அனுப்பப்படுகிறது. அவர்கள் மூன்று தினங்கள் காத்துக் கொண்டிருந்தார்கள். கெய்வார் கமிட்டியின் சிபார்சில் ஒரு பகுதியைப் பார்க்கின்ற சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அதாவது, எந்த அதிகாரி செக் போஸ்டில் டீட்டெயின் செய்தாலும் டியூட்டியில் இருக்கின்றவருக்குஅடுத்தவர் வந்து ரிலீஸ் செய்வதற்கு, முறைப்படி கொடுப்பதற்கு அதிகாரம் இருக்கிறது என்று நடைமுறை உத்தரவிருக்கிறது என்ற முறையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அந்தக் கம்பெனியின் உரிமையாளர்களிடம், அந்தப் பொருள்களை டிடெயின் செய்த சம்பந்தப்பட்ட அந்த அதிகாரி இல்லை. எனவே, அடுத்த நாள் காலையிலே தான் அவர் டியூட்டிக்கு வருவார். அவர் வந்த பிறகு சாமான்களை எடுத்துச் செல்ல வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. முறையாக எல்லா தஸ்தாவேஜிகளும் இருக்கின்றபொழுது, அட்வான்ஸ் டாக்ஸ் கட்டிவிட்டு எடுத்துச் செல்லுங்கள் என்று சொல்லப்படுகிறது. இது என்ன நடைமுறை என்று நான் கேட்க விரும்புகிறேன். இந்தச் சம்பவம் மட்டுமல்லாமல் இதுபோன்று பல்வேறு சம்பவங்களை என்னிடத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

வேறொரு வர்த்தகர். ஒருவர் ஷு விற்பனை செய்யும் வர்த்தகர். சாமான்களை அனுப்பியிருக்கிறார். அவைகள் வழியிலே குளித்தலையில் தடுத்து நிறுத்தப்படுகின்றன. பேங்க் பாஸ் புத்தகம், மற்றும் முறையாக இருக்க வேண்டிய எல்லா விதமான சான்றுகளும் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆனால் அவர் அந்த இடத்திலே பொருள்களை முறையாக முறையிட்டும் திருப்பிப் பெறுவது விடுவிப்பது சாத்தியமில்லை என்பதால் வேறு முறையைக் கையாண்டு அந்தப் பொருட்களை விடுவித்துக் கொண்டிருக்கிறார். நான் அவருடைய பெயரைச் சொல்ல விரும்பவில்லை. இதுமட்டுமல்ல, இதுமாதிரி நூற்றுக் கணக்கான, ஆயிரக் கணக்கான சம்பவங்கள் தினசரி நடந்து கொண்டிருக்கின்றன. எனவே, இம்மாதிரியான தவறுகளை, முறைகேடுகளைப் போக்க என்ன நடவடிக்கைகளை எடுக்கப் போகிறார்கள் என்பது நமக்குப் புரியாத விஷயமாக இருக்கிறது.

வர்த்தகர்களிடத்திலிருந்து அரசுக்கு முறையாக வந்து சேர வேண்டிய பணம் அரசுக்கு வந்து சேரவில்லை; ஆனால் இடையிலே இருப்பவர்களுக்கு இம்மாதிரி சென்று கொண்டிருக்கிறது. ஏதாவது அற்ப காரணங்களைச் சொல்லி, சாமான்களை மறித்து முறையற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த முறைகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனவே, அரசுக்கு வந்து சேர வேண்டிய வரிகள் இலகுவாக வந்து சேரும் முறையில் நடவடிக்கைகளை மேற்காள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1982 பிப்ரவரி 16] [திரு. இரா. கருப்பையா]

கடைசியாக நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால், இது சம்பந்தமாக மாநில மட்டத்தில், மாவட்ட மட்டத்தில் ஆலோசனைக் குழுக்கள், டிவிஷன் மட்டத்தில் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டுமென்ற கெய்வார் கமிட்டியின் பரிந்துரை இருக்கிறது. ஆனால் மாவட்ட மட்டத்தில் மட்டுமே குழுக்கள் அமைக்கப்பட்டிருப்பதாக எனக்குத் தெரிகிறது. டிவிஷன் மட்டத்தில்-பிராந்திய மட்டத்தில் இது அமைக்கப்பட்டு வியாபாரிகளுக்கு ஏற்படுகின்ற சங்கடங்களைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கவும், முறையாக அரசுக்கு வந்து சேரவேண்டிய வரிகள் வந்து சேரவும் முறையான நடவடிக்கைகளை எடுக்கவும் பயன் உள்ள முறையில் செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தக் குழுக்கள் முறையாகச் செயல்படுவதன் மூலம் ஓரளவிற்குத் தவறான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியும் என்ற நிலைமை வரும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, அமைச்சரவர்கள் உத்தேசித்திருக்கின்ற இந்த வரி மாற்றத்தைப் பொறுத்த வரையில் மோட்டார் என்ஜின்கள் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷாக்கள் போன்றவைகளுக்கு வரி விதிப்பு என்பதையும், கணக்குப் புத்தகங்கள் பிளாஸ்டிக் சாமான்கள் போன்றவைகளுக்கும், பால் பாயின்ட் பேனா போன்றவைகளுக்கும் பலமுறை விற்பனை வரியாக மாற்றுவதைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை இதிலே தெரிவித்திருக்கின்றார்கள். அவர்கள் அப்படித் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கின்றபொழுது எல்லா உறுப்பினர்களுமே மிகவும் நிதானமாக எந்த அளவிற்குப் பேச வேண்டுமென்று எண்ணிப் பேசினாலும், சில நேரங்களிலே அவர்கள் நிதானத்தைத் தவறியும் பேச்சுக்கள் போய் இருக்கின்றன என்றால் (குறுக்கீடு) இந்தச் சட்ட முன்வடிவில் எவ்வளவு பேச வேண்டுமோ அதைவிட அதிகமாகவும், இதற்குச் சம்பந்தப்படாமலும் பேசியிருக்கிறார்கள் என்பதற்காகச் சொல்கிறேன்.

அதுமட்டுமல்ல, அவர்களுடைய உள்ள உணர்வுகள், எந்தக் கொள்கையின் அடிப்படையில் இருக்கிறதோ அதிலே அவர்கள் உறுதியாக இருந்தாலும், சில நேரங்களிலே இந்தச் சட்ட முன்வடிவைப் பற்றிப் பேசுகின்ற பொழுது தாங்கள் கொண்டிருக்கின்ற கொள்கைக்கு இது உகந்தது என்று முற்றிலும் அவர்கள் தெரிந்து கொள்ளுகின்ற வாய்ப்பைப் பெறாத காரணத்தினால் இதைக் கண்டித்துப் பேசுகிறார்கள் என்பதை மட்டும் நான் முன்னுரையாகச் சொல்ல முடியும்.

இங்கே பேசுகிறபொழுது, இது அரசுக்கு ஒரு காமதேனு என்று சொன்னார்கள். அரசுக்கு ஒரு காமதேனு என்று சொல்கின்றபொழுது, அரசு யாருடைய அரசு என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அரசு என்பது ஒரு பெரிய குடும்பம். அந்தப் பெரிய குடும்பத்தில் யார் சம்பாதித்தாலும், எத்தனை பேர் சம்பாதித்தாலும், அதை ஊதாரித்தனமாகச் செலவு செய்தால், கேட்கின்ற பொறுப்பு, அந்தக் குடும்பத்திலுள்ள அத்தனை பேருக்கும் உண்டு என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஒரு பெரிய குடும்பத்தில் வருகிற பணத்தை ஊதாரித்தனமாக யாரும் செலவு செய்ய முடியாது. செய்தாலும் தட்டிக் கேட்க அந்தக் குடும்பத்திலே ஆட்கள் இருப்பார்கள் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அது மட்டுமல்ல, அந்தக் குடும்பத்திற்கு வருகிற பணத்தை முறையாகச் செலவு செய்வதற்கு அந்தக் குடும்பம் ஒன்றாகக் கூடி, திட்டங்கள் வகுத்து, செலவு செய்கின்றது என்பதும் உங்களுக்குத் தெரியும். இது மன்னர் காலம் என்றால் நாம் முன்னாலேயே பேசியிருக்கிறேன்-வருகின்ற பணத்தை மன்னர் எப்படி வேண்டுமானாலும் செலவு செய்ய முடியும். ஆனால், இப்பொழுது வருகின்ற பணத்தை மக்களுடைய நன்மைகுத்தான் பயன்படுத்தலாமே ஒழிய, பயன்படுத்துகிறபொழுது, கட்சிக்குக் கட்சி, சிறிது மாறுபட்ட கருத்து இருக்குமே ஒழிய, முற்றிலும் மாறுபட்ட கருத்து, நிச்சயமாக இருக்க முடியாது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

வேறொன்றைச் சொல்கிறபொழுது, மது விலக்கு காரணமாக, விற்பனை வரி 1/2% முதலில் கொண்டு வரப்பட்டது என்று சொன்னார்கள். ஆனால், அந்தக் காலத்தில் அதைக் கொண்டு வராமல் இருந்தாலும், அதற்குப் பின்னாலே அது வந்திருக்கும். மது விலக்குக் காரணமாக அப்பொழுது புகுத்தப்பட்டாலும், பின்னாலே வந்திருக்கும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் நாம் மேலே ஏன் துண்டு போடுகிறோம் என்றால், மேலே வியர்க்கிறபொழுது, துண்டைப் போடுகிறோம். தோடு இப்பொழுது நிற்பதில்லை. இப்பொழுது நாம் என்ன செய்கிறோம். பட்டுத் துண்டை நாம் மேலே போடுகிறோம்.

நம்முடைய திரு. இளையபெருமாள் அவர்கள் பேசுகிறபொழுதுதான் சொன்னார், 1/2 பைசா அப்பொழுது கொண்டு வந்தோம். இப்பொழுது அது வளர்ந்திருக்கிறது, என்று. முதலிலே துண்டு போட்டது வியர்வையைத் துடைப்பதற்காகத்தான். இப்பொழு அவர் போட்டுக்கொண்டிருப்பது பட்டுத்துண்டு. பட்டுத்துண்டை வைத்துக் கொண்டு வியர்வையை துடைக்க முடியாது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆக, முதலில் இருந்த நிலைமைகுப் பிறகு, வசதிக்கேற்றவாறு அது மாறிக் கொண்டே போகிறது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

அருமை சகோதரர் துரைமுருகன் அவர்கள் பேசுகிறபொழுது, நல்ல விஷயங்களைச் சொன்னார். அன்றைக்கு அவர் சொன்னார். ஓட்டலுக்கு வேட்டி கட்டிக் கொண்டு போனால், 'நீ அங்கே





உட்கார், பேன்ட் போட்டிருந்தால், இங்கே உட்கார்' என்றெல்லாம் சொல்கிறார்கள் என்றார். அவர்கள் அன்றைக்குப் பேசும்பொழுது வேட்டி கட்டிக் கொண்டு வந்தார். கொஞ்சம் மாறிப் பேசியிருக்கிறார். இன்றைக்குப் பேன்ட் போட்டுக் கொண்டு வந்ததால், கொஞ்சம் மாறிப் பேசியிருக்கிறார்கள். அவர் பேன்ட் போட்டு வந்தால், எப்படி மாறிப் பேசியிருக்கிறார் என்றால், அவர் என்றைக்கும் வருவாய்த் துறை அமைச்சர் என்றுதான் சொல்வார். ஆனால், இன்றைக்கு ரெவின்யூ அமைச்சர் என்றுதான் சொன்னார். 'அமைச்சரே' என்பார்கள். ஆனால், இன்றைக்கு 'மந்திரியே' என்றார்கள். 'உணவு விடுதி' என்பார்கள். ஆனால், இன்றைக்கு ஓட்டல் என்றார்கள். பேன்ட் போட்டவுடனே மாறிவிட்டார்கள். என்னுடைய அருமை நண்பர் என்ற முறையிலே. அவரை நான் கேட்டுக் கொள்கிறேன். அவர் வேட்டியே கட்டிக் கொண்டு வரட்டும். அப்பொழுதுதான் வருவாய்த் துறை அமைச்சர் என்பார். இல்லாவிட்டால், ரெவின்யூ அமைச்சர் என்பார். (குறுக்கீடு) அவர் பேன்ட் போட்டுக் கொண்டு வந்து பேசினாரா, இல்லையா என்பதை நீங்கள் கவனமாகக் கவனித்திருந்தால் தெரிந்திருக்கும். அவர் பேன்ட் போட்டு வந்ததற்கும் இந்தத் துறையைப் பற்றிப் பேசியதற்கும் சம்பந்தம் இல்லையென்று உங்களுக்கு முன்பே தெரிந்திருந்தால், அவர் பேசும்போதே நிறுத்தியிருப்பீர்கள் என்று நான் கருதுகிறேன். இப்பொழுது நான் பேசுகிறபொழுது மட்டும் எப்படி உங்களுக்குத் தெரிகிறது என்று எனக்குத் தெரியவில்லை.

உறுப்பினர் துரைமுருகன் பேசுகிறபொழுது பல விஷயங்களைச் சொன்னார்கள். முதலிலே, கசக்கிப் பிழிந்தாகிவிட்டது என்றார்கள். ஏனென்றால், பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே கசக்கிப் பிழிந்தாகி விட்டது என்றார்கள். அதை ஏற்றுக் கொள்ள முடியும். அது மட்டுமல்ல, இன்றைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன், புதிதாக இன்றைக்கு விற்பனை வரியே போடவில்லை. போடப்பட்ட வரிகளில் சில மாற்றங்களை நாம் செய்கிறோம். ஏனென்றால், புதிதாக கோட்டை தைக்க நமக்குப் பணம் இல்லாவிட்டாலும், இருக்கிற கோட்டிலேயிருக்கிற ஓட்டைகளைத் தைப்பதைப் போல், தவறுகளைத் தவிர்க்க மாற்றங்கள் செய்கிறோமே தவிர, புதிதாக வேறு எதையும் செய்யவில்லை என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11.40)

இன்னொன்றையும் சொன்னார்கள். இன்றைக்கு அவர்களை மரியாதையாக நடத்தவில்லை என்று சொன்னார்கள், நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். பெரிய வியாபாரிகள், நிறைய வரி கொடுக்கிறவர்கள், அவர்களை மரியாதையாக் நடத்த வேண்டும் என்பதை நிச்சயமாக மனமுவந்து ஏற்றுக்

கொள்கிறேன். அதுமட்டும் அல்ல. வரிகொடுப்பதால் மட்டும் என்பதற்காக அல்ல. இந்த நாட்டின் குடிமகன் யாராக இருந் தாலும் அவர்களை மரியாதையாக மதிப்பாக நடத்தவேண்டும் என்பதில் யாருக்கும் மாறுபாடு இல்லை. சில இடங்களில் இது மாதிரி நடக்கிறது என்றால் தக்க நேரத்தில் அதைப்போக்கடிக்க தயாராக இருக்கிறேன்.

அடுத்து ஒரு முனைவரி, பலமுனைவரி இவைகளைப்பற்றிச் சொன்னார்கள். இந்த அவையிலேயே பல முறை நான் தெரி வித்து இருக்கிறேன். இன்றைக்கு பெரும்பாலான பொருள்களுக்கு ஒரு முனைவரிதான் போடுகிறோம். பலமுனை வரி போடு கிறோம் என்றால் எந்தப் பொருள்களில் வரியை ஏமாற்றி விடு வார்கள் என்று அரசு கருதுகிறதோ அவைகளுக்கு பலமுனைவரி போடுகிறோம் என்பதை இதற்கு முன்னாலும் தெரிவித்திருக் கிறேன். அதுமட்டுமல்ல, பலமுனைவரிகள் போடுவதால் சிறு விபாரிகளுக்கு நன்மை; ஒரு முனைவரி போடுவதால் அது பெரிய வியாபாரிகளுக்கு நன்மை பயக்கும். அதற்கு எடுத்துக் காட்டாகத்தான் இன்றைக்கு ஏறக்குறைய ஒரு 18, 20 வியாபார ஸ்தாபனங்கள் அந்தப் பொருள்களை எல்லாம் பலமுனைவரியாக ஆக்கித்தர வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள்.

Trichy District Master Printers' Association, Trichy.
Tamil Nadu Master Printers Association, Saleim.
Salem, Dharmapuri district Printers' Associaton Industrial Co-operative Society.
South India Printers' Association, Madras.

Virudunagar Chambers of Commerce Industry, Virudunagar.
Madurai Ramnad Candle Manufacturers' Association, Madurai.
Sankar Candle Works, Sankari.

இவைகளைச் சொல்லுவதற்குக் காரணம் இந்த நிறுவனங்கள் எல்லாம் ஒருமுனைவரி இருப்பதாலே மிகவும் சங்கடங்கள் ஏற் படுகின்றன, ஆகவே பலமுனைவரிகளாக ஆக்கவேண்டும் என்று கேட்டதில் அவைகளைச் செய்திருக்கிறோம். உண்மை என்ன வென்றால் ஒரு முனைவரியாக இருந்தால் 5 ருபாய்க்கும் 10 ரூபாய்க்கும் சாமான்கள் வாங்கினாலும் கணக்குஎழுத வேண்டும். அதுமட்டுமல்ல ஒரு முனைவரி செலுத்தவில்லை என்றால் இதற்கு முன்னாலே வரி செலுத்தப்பட்டது என்பதை நிரூபிக்க அவர்கள் கடமைப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் நிரூபிக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் அந்த வரிகளினால் அவர்கள் நன்மை பெறமுடியும். அதை எல்லாம் கருதித்தான் இன்றைக்கு அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்க ஒரு முனைவரியை நாம் விதிக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





ஓட்டலைப்பற்றிச் சொல்லும்போது முதலிலே ஸ்டார் ஓட்டலுக்கு மட்டும்தான் இங்கே வரிபோடப்பட்டது. பெரிய பெரிய ஓட்டல்கள் எல்லாம் ஸ்டார் ஓட்டலுக்கு அப்ளை செய் தால்தான் கொடுப்பார்கள். இன்றைக்கு இந்தியப் பேரரசு சுற்றுலா வாரியத்தின் மூலமாக அனுமதி பெறவேண்டும். சில பேர்கள் அப்ரூவ்டு ஓட்டலுக்கு அனுமதி பெற்றுவிட்டு, அப்ரூவ்டு ஓட்டலுக்கு எல்லாம் வரி போடுகிறார்கள் என்று என் அருமைச் சகோதரர் து ரமுருகன் அவர்கள் சொன்னார்கள்—உதாரணத் திற்கு சொல்லவேண்டுமானால், சோழா ரெஸ்டாரன்ட் போன்ற ஓட்டல்கள் ஸ்டார் வேண்டாம் என்று சொல்லிவிட்டு அப்ரூவ்டு ஓட்டல் ஆக்கிவிட்டு அவர்கள் வரி கொடுக்காமல் இருந்தால் அவர்களுக்கு எப்படி வரி போடுவது. நான் ஒன்றைச் சொல்லி கொள்கிறேன். 'அப்ரூவ்டு' ஓட்டல் என்பது நமது இந்தியப் பேரரசின் சார்பாக நடத்தப்படுகிற சுற்றுலா வாரியத்தின் அனுமதி பெற்ற 'அப்ரூவ்டு' ஓட்டல் ஆகும். அவர்கள் எல்லா உணவு விடுதிகளுக்கும் கொடுக்க மாட்டார்கள். பெரிய உணவு விடுதிகளுக்கு மட்டும்தான் கொடுப்பார்கள்.

இதனாலே சாதாரண உணவு விடுதிகள் பாதிக்கப்படவில்லை என்பதை நம்முடைய சகோதரர் துரைமுருகன் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். ஏதோ ஒரு ஓட்டலுக்குப் போய் சாப்பிட்டேன் என்று சொன்னார்கள். அந்த ஓட்டல் எப்படி இருக்கிறது, எப்படி வரிப்போட்டார்கள் என்று சொன்னார்கள். இந்த அப்ரூவ்டு ஓட்டல்ஸ்ஸும் அதைப்போல் பெரிய உணவு விடுதிகள்தான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகையினால்தான் அதற்கு இன்றைக்கு வரிபோடுகிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இப்போது வரி எதுவும் உயர்த்தவில்லை. இன்றைக்கு இங்கே போடுகின்ற வரி என்பது ஒருமுனையாக இருந்ததை பல முனையாக ஆக்குகிறோம் என்பதுதான். அப்படிச் செய்கிறபோது வரியைக் குறைத்து இருக்கிறோம் என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது மட்டுமல்ல, பள்ளி மாணவர்கள் உபயோகிக்கும் எல்லாப் பொருள்களுக்கும் வரி இல்லாது செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். முன்பு இல்லாததால் இப்போது வாங்கப்போகிற பொருள்களுக்கு எல்லாம் நிச்சயமாக வரியில்லை, இப்போது போடுகிறபோதும் நிச்சயமாக இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மெழுகுவர்த்தி, எழுதுபொருள்கள். பிளாஸ்டிக்ஸ் ஆகியவற்றிற்கு வரி ஏறியிருக்கிறது என்று சொன்னார்கள். மாறுதலாக வரி குறைக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு என். சங்கரய்யா: இந்த மாதிரிப் பொருள்களுக்கு வரியே வேண்டாம் என்பது தான் அதிலே அடங்கியிருக்கும் கோரிக்கை. மெழுகுவர்த்தி சாதாரணஜனங்கள் உபயோகிக்கிற ஒரு பொருள்.

[திரு என். சங்கரய்யா] 1982 பிப்ரவரி 16

சயப்பாத்திரத்தின் விலைகள் ஏறிவிட்டதால் மக்கள் பிளாஸ்டிக் பொருள்களை உபயோகிக்கிறார்கள். இதனால் அரசாங்கத்திற்கு எவ்வளவு வருமானம் வந்து விடப்போகிறது? ஆகவே, அதை விட்டு விடலாமே.

**மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்:** இங்கே மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இங்கே பேசப்பட்டது என்னவென்றால் சிங்கிள் பாயின்டிலிருந்து மல்டி பாயின்டிற்கு உயர்த்திவிட்டீர்கள் என்பதுதான். சிங்கிள் பாயின்டிலிருந்து மல்டி பாயின்டிற்கு மாற்றி இருக்கிறோம் என்று சொன்னால் இங்கே நான் ஒரு 10 பேர் கொண்ட லிஸ்ட் படித்தேனே அவர்களிடம் இருந்து கோரிக்கைகள் வந்தன, அதை ஒட்டி இதை மாற்றினோம். ஒரு கடிதத்திலாவது அதற்கு வேண்டாம் என்று அவர்கள் சொல்லவில்லை.

**திரு இரா. கருப்பையா:** மாஸ்டர் பிரிண்டர்ஸ்களிடமிருந்து கோரிக்கை வந்தது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் வாங்கக்கூடிய அச்சிடவேண்டிய காகிதத்திற்கு அவர்கள் முதலில் வரி கட்டிவிடுகிறார்கள். பிறகு அவர்கள் அங்கே செய்யக்கூடிய உழைப்பிற்கும், சேர்த்து, அந்த காகிதத்திற்கும் சேர்த்து அவர்கள் ஒரு முனை விற்பனை வரி கட்டவேண்டியது அதிகமாக வருவதால் அமைச்சர் அவர்களிடத்திலே இந்தக் கோரிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி அவர்கள் முறையிட்டது மட்டுமல்ல எங்களுக்கு கணக்குகள் வைத்துக் கொள்வதில் கஷ்டம் இருக்கிறது, ஆகவே, பலமுனை வரியாக்க வேண்டும் என்று கடிதத்தில் கூட குறிப்பிட்டு இருக்கிறார்கள். இப்படியெல்லாம் நான் சொல்கிறபோது, இவைகளுக்கு எல்லாம் வரி எங்குமே அதிகப்படுத்தவில்லை. வரியைக் குறைத்து இருக்கிறோம் என்பதைத்தான் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். அதுவும் எல்லோருடைய வேண்டுகோளின் பேரில்தான் இவைகளையெல்லாம் நாங்கள் செய்து இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் சொன்னார்கள். மோட்டார் இன்ஜின், சைக்கிள் ரிக்ஷா, சைக்கிள் ஆகியவற்றிற்கான வரிகள் பற்றிச் சொன்னார்கள். சைக்கிள் ரிக்ஷா. சைக்கிள் ஏழை எளிய மக்கள் உபயோகிப்பது. அவைகளுக்கு எல்லாம் முன்பு இருந்த வரி 6 சதவீதம். 3 சதவிகிதம் என்று அதைக் குறைத்து இருக்கிறோம். அது உங்களுக்கு நன்றாகத் தெரியும். இதை நான் சொல்வதற்குக் காரணம், இந்த அரசு வந்ததற்குப் பிற



1982 பிப்ரவரி 16] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

புதிய வரி எதுவும் போடவில்லை. பலவற்றிற்கு வரியைக் குறைத்து இருக்கிறோம். எடுத்து இருக்கிறோம். வேண்டுமானால் இது குறித்து மானியக்கோரிக்கை வருகிறபோது வரிசைப்படுத்தி காண்பிக்கிறேன்.

இன்றைக்கு மோட்டார் இன்ஜினுக்கு 15% என்று வரி இருக்கிறது. மோட்டார் இன்ஜினுக்கு 15% என்று இருக்கிறபோது, அதற்கு ஸ்பேர்பார்ட்ஸ் தனியாக வாங்குகிறபோது, அதற்கு வேறு விகிதத்தில் வரி இருப்பதால், இன்ஜினுக்குப் பொருத்துவதற்காக வாங்கினார்களா அல்லது தனியாக வாங்கினார்களா என்று கண்டுபிடிப்பது கஷ்டமான காரியமாக இருப்பதால், மோட்டார் இன்ஜினுக்கு எவ்வளவு வரி இருக்கிறதோ அந்தவரி இவற்றிற்கும் போட்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வரி போடுவதால் எவ்வளவு வரி வருகிறது என்று கேள்வி கேட்டார்கள். ஹோட்டல்களுக்குப் போடுகின்ற வரி மூலமாக 1 கோடி ரூபாய் அரசுக்கு வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். பெரிய ஹோட்டல்களுக்குப் போடுவதிலே கணிசமாக வரி வருகிறது. ஸ்டேஷனரி ஆர்ட்டிகல் மூலமாக 56 லட்சம் ரூபாய் வரி வருகிறது. பிளாஸ்டிக் மூலமாக கிட்டத்தட்ட 1 கோடி ரூபாய் வரி வருகிறது. மெழுகுவர்த்தி மூலமாக 80,000 ரூபாய் வரி வருகிறது. இப்படி சிறுதுளி பெரு வெள்ளம் என்பதைப் போல், கொஞ்சம் கொஞ்சமாக இவைகளையெல்லாம் சேர்த்து ஒரு நல்ல அரசு என்ன செய்யவேண்டும் என்று சொன்னால், அதற்கு வரவேண்டிய வரியைச் சிந்தாமல், சிதறாமல் ஒன்று சேர்த்து கஜானாவில் போட்டு; முறையாக எடுத்து, நியாயமாகச் செலவு செய்ய வேண்டும் - இதைத்தான் இந்த அரசு செய்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11.50)

**திரு துரைமுருகன்:** துணைத் தலைவரவர்களே, ஒரு விளக்கம் மட்டும் கேட்க விரும்புகிறேன். பெரிய ஓட்டலாக இருந்தாலும் சிறிய ஓட்டலாக இருந்தாலும் சாப்பிட்ட பிறகு பணம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். பணம் கொடுப்பதில் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் எல்லோருக்கும் ஒரு ஓட்டலில் ஒரேமாதிரியான சாப்பாடு போட்டுவிட்டு, அதற்கு ஒரே மாதிரியான கட்டணம்தான் வாங்குகிறார்கள். அதிலேயும் ஒரு வேறுபாடு வரவேற்பதிலே வைத்திருக்கிறார்கள். பெரிய ஓட்டல்களில் பேன்ட்' சோட்டு போட்டவன் பில்லுக்கு என்ன பணம் கொடுக்கிறானோ அதே பணம்தான் வேட்டி, சட்டைப் போட்டவனும் கொடுக்கிறான். அதிலே வேறுபாடு என்ன வேண்டியிருக்கிறது. அமைச்சரவர்களுக்கே தெரியும். சென்னையிலே சோழா ஓட்டல் இருக்கிறது. பேன்ட் கோட்டு போட்டவன் போனால் 'ஹேய், என்று சொல்லி, இரு பெண்கள் அவன் நெற்றியில் பொட்டு இடுகிறார்கள். ஆனால் வேட்டி

[திரு துரைமுருகன்] [1982 பிப்ரவரி 16

சட்டை போட்டவன் போனால் அப்படி யாரும் செய்வதில்லை. இரண்டு பேரும்தான் பணம் கொடுக்கிறார்கள். அதிலே குறைவு இல்லை. அப்படி இருக்கும்போது ஏன் இந்த வித்தியாசம்?

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: அதற்கு பதில் சொல்வதாக இருந்தால், நம்முடைய நாட்டின் நிலைமை இப்படி இருக்கிறது இதை நாம் எல்லாம் சேர்ந்து திருததுவோம். ஓட்டலிலே போனால் அங்கே ஹந்திப் பாட்டைப் போடுகிறார்கள். ஆங்கிலப் பாட்டைப் போடுகிறார்கள். தமிழ்ப் பாட்டைப் போடுவதில்லை. அதற்குக் காரணம் அங்கே போகிறவர்கள் உணர்ச்சி மங்கிப்போய் போகிறார்கள். அவர்கள் தமிழ் மக்களாக இருந்தால், அவர்களுக்கு அந்த உணர்வுகள் மங்கிப்போகாமல் இருந்தால் எப்படி ஓட்டல்காரர்களுக்கு அந்தத் துணிவு வரும்? எப்படி அந்தத் துணிவோடு போடுகிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். வேண்டுமென்றால் பழைய காலத்திற்குச் சென்று 10 அல்லது 15 ஆண்டுகளுக்குப் பின்னாலே சென்று, மீண்டும் அந்த உணர்வுகளைப் பெற முயற்சி செய்வோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றாவது திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 63/1981) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பற்று சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

### பிரிவு 1

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி-''பிரிவு 1 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.'

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர்களே, நான் கீழ்க்கண்டத் திருத்தத்தை மொழிகிறேன்:-

"In clause 1, in sub-clause (1), for the expression "(Third) Amendment) Act, 1981, substtute the expression (Amendment Act 1982"

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, திருத்தப்பெற்றப்படி பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றது.



982 பிப்ரவரி 16]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி ''முகப்புரை சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.''

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:
'In the preamble, for the exprssion "Thirty. Second" 'substitue the expression "Thirty-third".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

முகப்புரை, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

நெடுந்தலைப்பு பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ், டி. சோமசுந்தரம்: துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 63/1981), திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு, திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

### (ஆ) எதிர் பாராச் செலவு நிதி (திருத்த)சட்டமுன்வடிவு, 1982

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:
''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

திரு. துரைமுருகன்: துணைத் தலைவரவர்களே, இந்த ஃபினான்ஷியலைப் பொறுத்தவரை இது ஒரு ரொட்டீன் ஓர்க் என்றாலும் இதன்மீது நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கருத்துக்களைச் சொல்வதோடு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடமிருந்து சில விளக்கங்களைப்பெற ஆசைப்படுகிறேன்.

நம்முடைய இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி மத்திய, மாநில நிதிநிலை எப்படி இயங்க வேண்டுமென்று அரசியல் சட்டம் சில நெறிமுறைகளை வகுத்துக் கொடுத்திருக்கிறது. நிதியைப் பொறுத்தவரையில் கன்சாலிடேட்டட் ஃபன்ட்,

* 1982 பிப்ரவரி 5-ம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. துரைமுருகன்] [1982 பிப்ரவரி 16

கன்டின்ஜன்சி ஃபண்ட், பப்ளிக் அக்கவுண்ட் என்று மூன்று வகை களில் வைத்திருக்கிறார்கள். அதிலே ரெவின்யூ அக்கவுண்ட், காபிடல் அக்கவுண்ட், லோன் அக்கவுண்ட், ட்ரஷரி பில்ஸ் எல்லாம் கன்சாலிடேட்டட் ஃபன்டில் வருகிறது. கன்டிஜன்சி ஃபண்டை பொறுத்தவரையில் இன் நிநேச்சர் ஆஃப் இம்பிரஸ்ட் வசகெட்டத்தன் ம வாய்ந்த நிதி என்று சொல்வார்கள். இது இரண்டாவது வகை.

இது இரண்டாவது பகுதி. பப்ளிக்கு அக்கவுன்ட் ஒரு பேங்க் செய்கின்ற வேலையைச் செய்யும். யாராவது அபராதம் கட்டினால்—சர்க்காருக்குச் சேரவேண்டிய பணம் அல்ல— அக்கவுண்டிலே வைத்திருந்து பணத்தைத் திருப்பிக் கொடுக்கும் அதாவது பப்ளிக் அக்கவுண்ட் மணியை. ஆனால் இதிலே கன்சாலிடேட்டட் ஃபன்ட்தான் தொகு நிதி. அதிலேதான் பணம் வருவது, போவது, இவை எல்லாம் உள்ளடங்கும். சர்க்காருக்கு திடீரென்று ஒரு எதிர்பாராத செலவு ஏற்பட்டால் அல்லது புதிய திட்டங்கள் சிந்தனா சக்தியிலே உருவாகி அதை உடனடியாக அமல்படுத்தவேண்டும் என்றால், ஒரு புதிய திட்டத்தை ஆரம்பித்தனாலே சர்க்கருடைய நிதியாதாரம் பெருகும் என்று கருதினால், ஏற்கெனவே நம்முடைய பட்ஜெட்டிலே அதற்காக நிதி ஒதுக்கப்படாமல் இருக்குமே யானால் அப்போது எதிர்பாராத நிதியிலே இருந்து நாம் பணத்தை எடுத்துக் கொள்ளலாம். ஆனால் பணத்தை எப்போது வேண்டுமானாலும் எடுக்கக்கூடாது என்பதற்காகத்தான் அந்த அதிகாரத்தை நம்முடைய கவர்னரிடத்திலே ஒப்படைத்திருக் கிறார்கள். மத்தியிலே ராஷ்டிரபதியிடத்திலே அந்த அதிகாரத்தை ஒப்படைத்திருக்கிறார்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை)

அந்த அடிப்படையிலே நம்முடைய எதிர்பாராத நிதி 30 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இப்போதுகூட நடை முறையில் 30 கோடியாக இருந்தது என்று குறிப்பிட்டிருக் கிறார்கள். 1962–63–லே 15 இலட்சமாக இருந்தது. என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமேயானால் 65' 66–லே 500 இலட்சமாக அது உயர்த்தப்பட்டது. ஆனால் இப்போது வந்திருக்கின்ற இந்த மசோதாவிலே என்ன நிலைமை என்று சொன்னால்

By the Tamil Nadu Contingency Fund (Amendment) Act, 1981 (Tamil Nadu Act 28 of 198 ), a proviso has been added to the said sub-section (1), so as to increase the sum from thirty crores of rupees to one hundred and ten crores of rupees for a temporary period beginning on the 1st May of 198 and ending on the 31st December 1981 to meet the increase in expenditure towards drough relief operations.'



1982 பிப்ரவரி 16] [திரு. துரைமுருகன்]

இந்த இடைப்பட்ட ஒரு காலத்திற்காக அந்த எதிர்பாராத நிதியை உயர்த்தி இருக்கிறார்கள். எவ்வளவு? 30 கோடியிலிருந்து 110 கோடி ரூபாயாக உயர்த்தி இருக்கிறார்கள். இப்படி 30 கோடியிலிருந்து 110 கோடிக்கு டெம்பரரியாக ரெய்ஸ் பண்ணி இருக்கிறீர்களே, எதற்காக உயர்த்தி இருக்கிறீர்கள் என்று கேட்டால் நிதியமைச்சர் அவர்கள் ஒரு காரணத்தைச் சொல்லி இருக்கிறார்கள்.

"....As the State Government were incurring considerable expenditure towards drought relief operations and the time limit specified in the said proviso was insufficient to carry out such operations, and recoup the amount from consolidated Fund, it was considered necessary to extend the time limit specified in the said proviso....

அதாவது நம்முடைய மாநிலத்திலே வறட்சி வந்துவிட்டது. வறட்சிக்காக செலவு செய்யவேண்டிய நிலைமை உருவாகிவிட்ட காரணத்தால் கண்டின்ஜன்சி ஃபண்டிலே பணத்தை உயர்த்தி டெம்பரரியாக எடுத்துக்கொண்டோம், என்று சொல்கிறார். எவ்வளவு காலத்திற்கு டெம்பரரியாக? 1981-ஆம் ஆண்டு மே மாதம் 1-ஆம் தேதியிலிருந்து 1981-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ஆம் தேதி முடிய உள்ளதுதான் அந்த டெம்பரரி பீரியட். அப்படி அது முடிந்த உடனே என்ன பண்ணி இருக்க வேண்டும். நம்முடைய நிதியமைச்சர் அவர்கள். சப்ளிமென்டரி கிராண்டைக் கொண்டு வந்து இந்தச் சபையிலே வைத்து சபையினுடைய பெர்மிஷன் வாங்கி உடனே அந்தப் பணத்தை அந்த எதிர் பாராத செலவு நிதியிலே சேர்த்திருக்கவேண்டும். ஆனால் அதைச் செய்யவில்லை. ஏன் செய்யவில்லை என்று கேட்டால் சொல்கிறார் 'சட்டமன்றம் கூடவில்லை' என்று. சட்டமன்றம் கூடியிருந்தால் அந்த சப்ளிமென்டரி கிராண்டைக் கொண்டு வந்திருப்பார். ஆனால் அதையும் செய்யமுடியாமல் போய் விட்டது. நான் இந்த இடத்திலே ஒன்றைக் கேட்கிறேன். சட்ட மன்றத்தை நீங்கள் அடிக்கு ஒரு தரம் அமாவாசைக்கு ஒரு தரம் என்று கூட்டினால் என்ன நடக்கும்?

கண்டின்ஜென்சி ஃபண்டிலே போய் பணத்தை எடுக்கிறீர்கள். ஆனால் சட்டமன்றத்தைக் கூட்டவில்லை. கேட்டால் புள்ளி விவரம் தருகிறீர்கள். நாங்கள் சட்டமன்றத்தைக் கூட்ட வில்லையா என்று. 1974-லே எத்தனை நாள், இன்றைக்கு எத்தனை நாள், 1973-லே எத்தனை நாள் என்று சொன்னால் எத்தனை நாள் என்பதல்ல கணக்கு. பிஸ்னஸ் அட்வைசரி கமிட்டி போட்டு அதன்படி எப்போதாவது நடக்கிறீர்களா உதாரணமாக கவர்னர் உரையை எடுத்துக் கொள்ளுங்கள். அது எப்போது முடிந்திருக்க வேண்டும்? 7 ஆம் தேதியிலே 8 ஆம் தேதியிலே முடிந்திருக்க வேண்டும். எதிர்க்கட்சியிலே பேசி னார்கள், அதற்கு முதல்வர் பதில்சொன்னார் என்று முடித்திருக்க வேண்டும். இல்லை. இரண்டு நாள், 3 நாள், 4 நாள் என்று

எடுத்துக் கொண்டீர்கள். ஆகவே என்றைக்காவது பிஸ்னஸ் அட்வைசரி கமிட்டி ஒரு தீர்மானம் போட்டு அதன்படி இதுவரை கரெக்டாகப் பேசியிருக்கிறீர்களா? ஒரு நாளைக்கு ஆகவேண் டியதை 9 நாட்களுக்கு ஆக்கி இன்றைக்குக் கொஞ்சம் நாளைக்குக் கொஞ்சம் என்று கிருபானந்தவாரியாரின் கச்சேரி மாதிரி பண்ணி அதிலே மூன்று நாட்கள் இழுத்து விட்டீர்கள். ஆகவே டோட்டல் நம்பர் ஆஃப் டேஸ் உங்களுக்கு அதிகமாகச் சேர்ந்துபோய்விட்டது. (குறுக்கீடு) ஆகவே நாட்களை அதிகமாக்கி இருக்கிறீர்கள். இப்படி பெரிய ஃபண்டைத் தூக்கி செலவு பண்ணுகிறீர்கள். சப்ளிமென்டரி கிராண்ட் வைப்பதற்கு நிதி யமைச்சர் அவர்கள் என்ன பாடு பட்டிருப்பார்? பாவம் அவர் என்ன சொல்கிறார் தெரியுமா? இந்த மாதிரி எடுத்து விட்டோம், இதை மறுபடியும் போடவேண்டும் என்றால் அடுத்த 26 ஆம் தேதி பட்ஜெட், ஆகவே அதற்குள்ளே நடை முறையில் எல்லாம் முடிந்து பிரின்ட்டுக்குப் போய் இருக்கும். ஆகவே சப்ளிமென்டரி கிராண்ட் கொண்டு வந்து இந்த பணத்தைக் கொண்டுபோய் அதிலே தள்ள முடியாது, ஒரே அடியாக பட்ஜெட்டிலே இந்தப் பணத்தை மாற்றிவிடலாம் என்பதற் காகத்தான் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் தேதி யிலிருந்து மார்ச் மாதம் 31 ஆம் தேதி வரையிலும் இந்த டெம்பரரி பீரியடை இன்கிரீஸ் பண்ணிக் கொடுங்கள் என்று சபையிலே கேட்கிறார்.

(நண்பகல் 12.00)

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த நிலைமை தவிர்க்கப்பட வேண்டும். நிதியைப் பொருத்தவரையில் இதுவும் ஒரு டிரவுட் நிலைதான். வறட்சி நிலை என்றுதான் சொல்ல வேண்டும். நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு இது நன்றாகத் தெரியும். ஆனாலும் வேறு வழி இல்லையே என்ற நிலைமையிலேதான் அவர் இருக்கிறார் என்று நான் நினைக்கிறேன்.

30 கோடி ரூபாயிலிருந்து 110 கோடி ரூபாய் வரையில் டெம்பரரியாக நீங்கள் இந்த செலவு ஒதுக்கீட்டை ரெய்ஸ் பண்ணியதற்கு ஒரே காரணம் டிரவுட்—வறட்சி என்றுதான் சொல்கிறீர்கள். அந்த டிரவுட்லே எவ்வளவு நமக்கு செலவு வருகிறது? ஏற்கெனவே கிட்டத்தட்ட 30 கோடி. இப்போது டிரவுடிலே 55 கோடியை செலவு பண்ணியிருப்பதாகச் சொல்லு கிறீர்கள். ஆக மொத்தம் 85 கோடி ஆகிவிட்டது. 110 கோடியை நிர்ணயம் செய்தீர்கள். அதில் 85 கோடியை செலவு பண்ணிவிட்டீர்கள். மீதம் 25 கோடி பாக்கியிருக்கிறது. அதை எதற்காக செலவு செய்தீர்கள் என்று அறிய விரும்புகிறேன். 110 கோடி என்றாலும் மொத்தமே எடுத்து செலவு பண்ணப் போவதில்லை. ஒரு திட்டம்போட்டு, அந்த திட்டத்திற்கு எவ்வளவு தேவையோ, அதைமட்டும்தான் எடுத்து செலவு பண்ணப்போகிறீர்கள். அது ஒரு ரிவால்விங் பண்ட்தான்.



வறட்சிக்காக செலவு செய்தது 55 கோடி என்றாலும் மொத்தமும் எடுத்திருக்க மாட்டீர்கள். மத்திய சர்க்கார் நிவாரணம் கொடுக்கும். இடையிலே இதை கைமாத்தாக வாங்கி யிருக்கிறீர்கள் என்பதுதான் பொருள். அப்படி வாங்கிய பணம், மத்திய சர்க்காரிடமிருந்து வந்தவுடனே அது போய்ச் சேர வேண்டிய அந்த ரிவால்விங் பண்டிலே சேர்ந்திருக்கும். நான் கேட்க விரும்புவது, இந்த டிரவுட்டிற்காக 55 கோடியும் முழுமையாக செலவு செய்திருக்கிறீர்களா? ஏற்கெனவே இதற்காக 30 கோடி செலவாகியிருக்கிறது. ஆக, அதை 55 கோடிதான் என்று வைத்துக் கொண்டாலும், மொத்தம் 85 கோடி ரூபாய் போனால் மீதம் 25 கோடியை என்ன செய்தீர்கள். அதை வேறு எதற்காவது செலவு பண்ணியிருக்கிறீர்களா? அது எனக்குத் தெரியாது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்தான் அதை விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்பு கிறேன்.

அடுத்து இதிலே இன்னொரு முக்கியமான விஷயம் என்ன வென்றால்; எந்த திட்டமாக இருந்தாலும், இந்த மாமன்றத்தின் ஒப்புதல் இல்லாமல் பணம் செலவு பண்ணுவது என்பது ஜனநாயக முறைக்கு விரோதமானது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஒவ்வொரு அணா பைசாவும் மக்களுடைய வரிப்பணத்தைச் சேர்ந்தது. அதை செலவு பண்ணக்கூடிய அதிகாரம் மாண்புமிகு நிதியமைச்சருக்கு இருக்கிறது. அந்த அதிகாரத்தை அவருக்கு வழங்குவது இந்த மாமன்றம். ஆகவே, இந்த மாமன்றத்தைக் கேட்காமல் எந்தச் செலவும் பண்ணக் கூடாது. ஆனால் இந்த மாமன்றத்தைக் கேட்காமல் 110 கோடி ரூபாயை செலவு செய்திருக்கிறார்கள். ஆர்டிகல் 205, 206-வது பிரிவிலே அப்படி செலவு பண்ணக்கூடிய அதிகாரம் இருக்கிறது என்று சொல்லலாம். ஆனால் அதற்கு ஜனநாயகம் தேவை யில்லை. சட்ட சபையிலே அவற்றைக் கொண்டு வந்து பேசி யிருக்கலாம். உங்களிடம் மெஜாரிட்டியிருக்கிறது. 110 கோடி என்ன, 500 கோடியைக் கூட நீங்கள் செலவு செய்யலாம். இந்த மாமன்றத்தில் கொண்டு வந்து தீர்மானத்தை நிறை வேற்றுவதன் மூலம். ஏனெனில் உங்களிடம் மெஜாரிட்டி இருக் கிறது. இந்த பில்லில் நான் இவ்வளவு பேசுவதினாலேயே இந்த பில் பாஸ் ஆகாமல் நின்று விடுமா என்ன? துரைமுருகன் பேசுவதினாலேயே எதுவும் நின்றுவிடாது. அது எங்களுக்குத் தெரியும். அது ஜனநாயக மரபு. ஆனால் இப்படி மாமன்றத்தைக் கேட்காமல், அவசரச் சட்டத்தில் மூலம் செலவுகளைச் செய்து விட்டு, பின்னால் இந்த மாமன்றத்தில் கொண்டு வருவது என்பது ஒரு பேட் பிரிசிடென்ட், அது ஒரு கெட்ட முன்மாதிரி யாகும். ஆகவே இந்த மாமன்றம்தான் எந்த விஷயத்திற்கும் தலையானதாகும் என்று கூறிக் கொள்கிறேன்.

ஆகவே, நான் கேட்க விரும்புவது, 110 கோடி ரூபாயை வறட்சி நிவாரணத்திற்காக செலவு செய்திருக்கிறார்கள். அதிலே ரிவால்விங் பண்டிலிருந்து எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது?

31 ஆம் தேதி வரையில் அதிலே உள்ள தொகை எவ்வளவு? மீதி எவ்வளவு இருக்கிறது? வேறு எதற்காவது பணத்தை எடுத்து செலவு செய்திருக்கிறார்களா என்ற விவரங்களை நிதியமைச்சர் அவர்கள் அறிவிப்பார் என்று நம்பி, என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மதிப்பிற்குரிய மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த பில் மீது மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன். ஏற்கெனவே நிதியமைச்சர் அவர்கள் காரண– விளக்க நோக்கத்திலே சில விவரங்களைச் சொல்லியிருக்கிறார்கள். அத்தோடு நான் சொல்ல விரும்புவதெல்லாம், திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், இன்றைக்கு பருவ மழை பொய்த்ததின் காரணமாக பல குளங்கள், கால்வாய்கள் எல்லாம் வறண்டிருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் மானா வாரியை எதிர்பார்த்திருக்கிற நிலங்கள் எல்லாம் போதிய அளவு தண்ணீர் இல்லாத நிலைமையிலே பொதியும் கதிருமாக இருப்பது தீய்ந்துபோய், தீங்கு ஏற்பட்டிருக்கக்கூடிய நிலைமையை, எடுத்துச் சொல்லி திருநெல்வேலி மாவட்ட வளர்ச்சிக்கூட்டத்தில், எல்லாக் கட்சியைச் சேர்ந்த எம். எல். ஏ.க் களும் ஏகோபித்து திருநெல்வேலி மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்று வற்புறுத்தி, அந்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் தீர்மானம் போட்டு அதை நிறைவேற்றியிருக்கிறார்கள். வேறு பல மாவட்டங்களிலும் கூட இதே நிலைதான் இருக்கிறது என்று கருதுகிறேன், ஆகவே இந்த வறட்சி நிலை இன்னும் முடிந்ததாக என்னால் எண்ண முடியவில்லை—

ஆகவே, இந்த வறட்சிப் பணிகளை இன்னும் அதிக அளவு செய்ய வேண்டிய கடமை இருப்பதன் விளைவாக; 30 கோடியை 110 கோடியாக உயர்த்தி, அதை மார்ச் மாதம் 31 ஆம் தேதி வரையில் நீடிக்க வேண்டும் என்று கேட்டிருக்கும் இந்த பில்லி னுடைய தீர்மானத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன்.

இருக்கிறது ஒரு மாதந்தான். இதற்குள் இந்த வேலைகளை எல்லாம் முடிக்க முடியுமா என்பதைப் பற்றி நிதி அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். அவசரக்கோலத்தில் இந்த வேலை களைச் செய்வதற்குப் பதிலாக சிறிது காலம் நீடித்தால்கூட பரவாயில்லை. செய்கிற வேலைகள். பணிகள் நல்ல முறையில் செய்யப்பட வேண்டும்; அப்படி நிதானமாக வேலை செய்தால் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு வேலை கிடைக்கவும் அது உதவிகரமாக இருக்கும் என்ற முறையில் நல்ல முறையில் வேலைகள் நடைபெறவும் அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, இந்த சட்ட முன்வடிவை மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வரவேற்று அமர்கிறேன்.





திரு. செ. சிவசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 30 கோடி ரூபாய் இருந்த நிதியை கிட்டத்தட்ட 110 கோடியாக ஆக்கிவிட வேண்டுமென்று எட்டு மாதங் களில் கேட்கப்படுகிறது. இந்தளவிற்கு கேட்கப்பட்டும் கூட இன்றைக்கு குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சி நிவாரண வேலைகள் நடந்திருக்கின்றனவா என்றால் பெரும் பகுதிகளில வேலை நடக்கவில்லை. எங்கு பார்த்தாலும் சாலை வேலைகள், வறட்சி நிவாரண வேலைகள் முடிக்கப் படவில்லை. கண்மாய் வேலைகள் முடிக்கப்படவில்லை. கால்வாய்கள் ரிப்பேர் செய்யப்படவில்லை. எந்த வேலை களை எடுத்துக் கொண்டாலும் ஏன் இந்த வேலைகள் நடக்கவில்லை என்றால் இவை வறட்சி நிவாரண வேலைகள் என்ற காரணத்தால் செய்யப்படவில்லை, வறட்சி நிவாரண வேலைகள் என்றால் அப்படித்தானிருக்கும் என்று சொல்லக் கூடிய அளவிற்கு இன்று நிலைமைகள் இருக்கின்றன.

வட ஆற்காடு மாவட்டம் இராமநாதபுரம் மாவட்டம் இவை தான் வறட்சியால் அதிகப்படியாக பாதிக்கப்பட்ட மாவட்டங்கள். அந்த மாவட்டங்களில் கூட நான்கு ஆண்டுகளுக் குப் பிறகும் இன்னும் வறட்சி நிவாரண வேலைகள் சரிவர நடைபெறவில்லை. ஆனா[ல்] அ[ந்]த நேரத்தில் அதிகமாக நிதி கேட்கிறார்க[ள்] அமைச்சர் அவ[ர்]க[ள்]. ஆகவே நான் கேட்டுக் கொள்ள விரும்புவது இனிமேலா[வ]து வறட்சி நிவாரண வேலைகள் என்று எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் சரிவர நடைபெற வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள் அவை முடிக்கப் பெற வேண்டும். வறட்சி நிவாரணப் பணிகள் என்று வரும்போது குடிநீர் தான் அதிகமாக பா[தி]க்கப்படுகிறது. எங்கு பார்த்தாலும் குடிநீர் இல்லை என்ற நிலை தான். அதற்காக, குடிநீருக்காக பல கோடி ரூபாய் செலவழித்தாலும் அந்த ஆண்டே அது வீணாகப் போகக்கூடிய நிலைமையி[ல்] தான் பணம் செலவு செய்யப்படுகிறது. கு[டி] நீருக்கு என்று செலவு செய்யப்படு கின்ற வேலைக[ள் நி]ரந்தரமான வேலையாக இருக்க வேண்டும். வண்டியி[ல்] ஏற்றிக் கொண்டு போ[க] வேண்டிய உறைகள் உடைந்[து] சல்லிசல்லி[யா]கப் போய் கம்பு தான் வண்டியில் இருக்கிற[து]. ஆகவே குடிநீருக்காக செலவழிக்கப்படுகிற தொகை ப[ா]ழாகாது ந[ல்]ல முறையி[ல்] வேலைகள் நடைபெற வேண்டுமென்று கேட்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் இந்த சட்ட முன்வடிவை நான் வரவேற்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்; பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த திருத்தச் சட்ட முன்வடிவின் மீது உறுப்பினர்கள் சிலக் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு துரைமுருகன் அவர்களுக்கு இந்த மாமன்றத்திற்கு மிக்க மரியாதையும் மிக்க மதிப்பும் தருகிற அளவிற்கு உணர்வு

ஏற்பட்டிருப்பதில் எனக்கு பெரும் மகிழ்ச்சி. அந்த வாய்ப்பி லாவது இந்த மாமன்றம் மதிக்கப்பட வேண்டும், மரியாதை செலுத்த பட வேண்டும் என்ற கருத்தை அவர்கள் இந்த நேரத்திலாவது தெரிவித்தார்களே என்பதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி. ஆனால் இந்த மாமன்றம் முறைப்படி மதிக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதோடு செலவினங்களைப் பொறுத்த வரையில் அவசரப்படாமலும், நிதானமாகவும், எந்தெந்த வழிகளில், வகைகளில் செலவழிக்கப்பட வேண்டுமோ அந்த வகைகளில் தான் செலவழிக்கப்பட்டு வருகிறது என்பதை நான் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்-தலைமை)

சாதாரணமாக, நாம் எதிர்பாராத செலவினங்களுக்கு என்று ஒவ்வொரு ஆண்டும் 30 கோடி ரூபாய் அளவிற்கு நாம் ஒதுக்கி வைக்க எதிர்பாராத செலவுகள் ஏற்படுகிறபோது செலவு செய்வதும் பிறகு துணை மதிப்பீடுகளாக கொண்டு வருவதும் அதை நிரப்புவதாகவும் செய்து கொண்டிருந்தோம். சென்ற ஆண்டு எதிர்பாராத வகையில் 15 மாவட்டங்களில் 13 மாவட்டங்களில் இதற்கு முன்னால் என்றைக்கும் பாதிக்காத அளவிற்கு கடுமையான வறட்சி ஏற்பட்டதன் காரணமாக எதிர்பாராத செலவைத் தாங்க வேண்டி வந்தது. வறட்சி ஏற்பட்ட போதிலும் கூட ஆரம்பத்தில் இரண்டு மாவட்டங்கள் என்று இருந்தது 198) ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் இரண்டு, மூன்று என்றாகி ஜனவரியி ஏழு மாவட்டங்கள் என்று கணக்கிடப்பட்டு. பிற்பகல்12 10 பிறகு ஏப்ரல் மாதம் வருகிற போது, 13 மாவட்டங்கள் கடுமையான வறட்சியால் பாதிக்கப் படுகின்ற நிலைமை ஏற்பட்டபோது, நாம் எதிர்பாராத வகையில் வறட்சியை சமாளிக்க வேண்டிய நிலைமை வந்தது. அப்போது மத்திய அரசுக்கு அதன் தன்மைகளை எல்லாம் எடுத்துச் சொன்னோம். அப்போதுதான் 30 கோடியாக இருந்த எதிர்பாராத செலவினத்தை நாம் 110 கோடி ரூபாய்க்கு எதிர்பாராத செலவினமாக உயர்த்த வேண்டு மென்பதை. அதற்கான காரணகாரிய விளக்கத்தை இந்த மன்றத்திலே எடுத்துத் தெரிவித்து, இந்த மன்றத்தின் முழு ஒப்புதல், ஆதரவு பெற்று, 30 கோடி 110 கோடியானது. சென்ற சட்டமன்றத் தொடர் கூட்டத்திலே வைத்து நிறைவேற்றப்பட்டது. ஆகவே, புதியதாக 110 கோடிக்கு அனுமதி பெற வேண்டுமென்ற நிலையில் இப்போது நான் இதைக் கொண்டுவரவில்லை. ஏற்கனவே, இந்த சட்ட மன்றமே இதற்கு அனுமதி தந்திருக்கிறது ஏப்ரல் முதல் தேதியிலிருந்து டிசம்பர் 31 ஆம் வரையில் 30 கோடியை 110 கோடிக்கு உயர்த்தலாம் என்ற அனுமதியை ஏற்கனவே பெற்று விட்டேன். பெற்றுவிட்ட அந்த அடிப்படையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிற நிலையில் டிசம்பர் 31 ஆம் தேதி நிறுத்திவிட முடியும் என்று தான் நாம் எதிர்பார்த்தோம்





சட்டமன்றம் கூடியிருக்குமானால் துணை மதிப்பீடு நவம்பரிலோ டிசம்பரிலோ கொண்டுவரப்பட்டிருக்குமானால், டிசம்பர் 31 ஆம் தேதியோடு முடிந்திருக்கும். ஆனால் எதிர்பாராத வகையில் செலவினங்கள் வறட்சியைப் பொறுத்த மட்டும் ஏற்படவில்லை, வேறு பல இனங்களுக்கும் ஏற்பட்டதன் காரணமாக, 31 ஆம் தேதியோடு அந்த 110 கோடி இந்த அவை அனுமதித்தது அப்படியே இருக்கிறது. ஆனால் 31 ஆம் தேதி முடிந்திருந்தால், 31 ஆம் தேதியோடு அந்த அந்த 110 கோடிக்கும் தந்த அனுமதி நின்று, எப்போதும் போல் 30 கோடி என்ற நிலைக்கு நின்றிருக்கும். ஆனால், எதிர்பாராத வகையில், வறட்சியின் காரணமாக மட்டும் இந்த நிலை ஏற்படவில்லை ; தன்னிறைவுத் திட்டத்திற்கு ரூ. 29.4 கோடியும், பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு ரூ. 7.60 கோடியும், சென்னை மாநகராட்சிக்கு ரூ. 2.90 கோடியும், ஆதி திராவிடர் மேம்பாட்டு வீட்டு வசதி கழகத்திற்கு ரூ. 4,64 கோடியும் இப்படிப்பட்ட சில இனங்களுக்கு தர வேண்டிய தன்மை வந்தது. எதிர்பாராத செலவினத்திலே இருந்து தான் அதை எடுத்துத் தர வேண்டும்

திரு. துரைமுருகன் ; கடனாகவா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கடன் என்ற வகையிலும் போயிருக்கலாம் அல்லது மானியமாகவும் போயிருக்கலாம். இந்த நிதிநிலை அறிக்கை வெளிவரும்போது அதுபற்றிய மானிய கோரிக்கை மதிப்பீடு விரைவிலே இங்கே வருகின்றபோது முழு விவரங்களும் தரப்படும்.

திரு. துரைமுருகன் :ஏற்கனவே நாம் அவர்களுக்கு 20 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறோம். துணை மதிப்பீட்டிலே அதிகமாக டிரான்ஸ்போர்டிற்கும், எலக்ட்ரிசிடி போர்டுக்கும் தான் இந்த சர்க்கார் கொடுக்கிற . எலக்ட்ரிசிடி போர்டு இட்டுக்கட்ட 500 கோடி ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கும், அவர்களுக்கு போன முறையும் கொடுத்திருக்கிறோம். இப்போதும் டிரான்ஸ்போர்டிற்கு 7 கோடி கொடுத்திருக்கிறோம். இது கடனா? அல்லது வேறு என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விளக்கம் பின்னால் துணை மானிய மதிப்பீடு வருகின்றபோது, இதிலே எவ்வளவு கடன்? எவ்வளவு மானியம்? கடனாக இருந்தால், அதற்கு வட்டி எவ்வளவு? என்ற விவரங்களை எல்லாம் பின்னால் தருகிறேன்.

31 ஆம் தேதியோடு முடிந்தால் இந்த செலவினங்களுக் கெல்லாம் வழி இருக்காது என்பதற்காகத் தான், டிசம்பர் 31 ஆம் தேதியோடு முடிகின்ற ஒன்றை மார்ச் 31 ஆம்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 பிப்ரவரி 1

தேதிவரை நீட்டிப்பதற்காகத் தான் இந்த திருத்த சட்ட முன்வடிவே தவிர, வேறல்ல. மார்ச்சு 31 ஆம் தேதியோடு 110 கோடி ரூபாய் என்பதும் முடிந்துவிடும். மறுபடியும் பழையபடி 30 கோடியோடு நின்றுவிடும். செலவினத்தை சரிக்கட்ட வேண்டும். அப்படி சரிக்கட்டுவதற்காக, இது நீட்டிக்கப்படுகிறதே தவிர வேறல்ல. இல்லாவிட்டால் டிசம்பர் 31 ஆம் தேதியோடு நின்றுவிடும். செலவினங்களுக்கு வேறு வழியில்லாமல் போய்விடும். அதற்கு வழிவகை செய்வதற்கு அரசியல் சட்ட அமைப்பிலே அதற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதைத்தான் நாம் இங்கே செய்திருக்கிறோம். ஆகவே, மார்ச் 31 ஆம் தேதிவரையில் இது நீட்டிக்கப்படுகிறது. மார்ச்சு 31 ஆம் தேதி இந்த 110 கோடி ரூபாய் முடிந்துவிடும். அதற்குத் தான் இன்றைக்கு இந்த வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்; பல இடங்களில் இன்னும் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்று சொன்னார்கள். திட்டமிட்டு எந்தெந்தப் பணிகள் எந்தெந்த இடங்களில் எடுத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டதோ. அப்படி எந்தெந்தப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதோ, அது செப்டம்பர் 30க்குள் அல்லது அக்டோபர் மாதத்திற்குள் முடியாவிட்டாலும்கூட, தொடர்ந்து அவைகள் முடியும் வரையிலும் நிறைவேற்றப்படும். அப்படி நிறைவேற்றப்பட வேண்டுமென்று முதல்வர் அவர்கள் எல்லா மாவட்ட ஆட்சித்தலைவர்களையும் கேட்டுக் கொண்டிருக்கிறார். முன்கூட்டி எடுத்துக் கொண்ட திட்டங்கள் எல்லாம் முழுமையாக நிறைவேற்றப்படும்.

அவற்றை நிறைவேற்றும் முயற்சி அந்தந்த மாவட்டங்களில் எடுக்கப் பட்டிருக்கின்றன. எடுத்துக் கொள்ளப்பட்ட திட்டங்களைப் பொறுத்தவரை எந்தகுறைபாடும் ஏற்படாது என்பதை எடுத்து தெரிவித்து இந்தச் சட்ட திருத்தத்தை நிறைவேற்றித்தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி

"தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1982. ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று. சட்ட முன் வடிவுப் பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.



1982 பிப்ரவரி 16] [பேரவைத் தலைவர்]

பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1982) நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

சென்னைப்பல்கலைக் கழக, அண்ணாமலைப் பல்கலைக் கழக, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

திரு துரை முருகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். ஆளுநர் அவர்களால் 21-12-1981ஆம் தேதியன்று பிறப்பிக்கப் பெற்ற, 1981ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக, அண்ணாமலைப் பல்கலைக் கழக பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழக (திருத்த) அவசரச் சட்டத்தைத் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 18/1981) இப்பேரவை நிராகரிக்கின்றது.

திரு. ப. பொன்னுரங்கம் : இத் தீர்மானத்தை நான் வழி மொழிகிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் ; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்; 1982 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக, அண்ணாமலைப் பல்கலைக் கழக, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்ப பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்

---

பல்கலைக் கழக அதிகார மன்றங்களில் ஒரே நபர் நீண்ட காலமாக தொடர்ந்து உறுப்பினராக இருப்பது அப்பதவியின் அவருக்குச் சில தனிப்பற்றுக்கள் ஏற்படுவதற்கு இடம் அளிக்குமாதலால், தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களின் அதிகார மன்றங்களின் உறுப்பினர்களின் கால அளவு வரையறுத்துக் கட்டுப்படுத்த வேண்டும் என்று அரசு ஒரு கொள்கை முடிவு ஆக்கியது எனவே

[திரு சே அரங்கநாயகம்] [1982 பிப்ரவரி 16

இம் 1982 பிப்ரவரி 11-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது

மாநிலத்திலுள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களின் பேரவை, ஆட்சிக்குழு, கல்வி ஆணை ஆகியவற்றில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் 3 ஆண்டு காலத்திற்கு பதவி வகிக்க வேண்டும் என்றும் மூன்று ஆண்டு காலத்திற்கு மேற்படா மற்றொரு காலத்திற்கு அவர்கள் தேர்தலி நிற்கவோ நியமனம் செய்யப்படவோ தகுதி பெறுவார்கள் என்றும் அரசு முடிவு எடுத்தது.

இக்கொள்கையைப் பின்பற்றி மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திற்கு மட்டும் ஒரு அவசரச் சட்டத்தை 30-6-81 அன்று அரசு வெளியிட்டது. இந்த அவசரச் சட்டம் சட்டமுன்வடிவாக மாற்றப்பட்டு அது மாநிலச் சட்டப் பேரவை மற்றும் சட்ட மேலவையாலும் முறையே 31-8-81, 1-9-81 அன்று சட்டமாக நிறைவேற்றப்பட்டு பிறகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலும் பெற்று சட்டமாக்கப்பட்டது.

மற்ற பல்கலைக் கழகங்களுக்கும் மேற்கூறிய கொள்கையை அமுல்படுத்துவதற்காக சென்னைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை பல்கலைக் கழகம், மற்றும் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் ஆகிய மூன்று பல்கலைக் கழகங்களின் அதிகாரக் குழுக்களில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களின், அதாவது தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்களின் பதவிக் காலத்தையும் ஆறு ஆண்டுகளுக்கு மேல் போகக் கூடாது என்று வரையறுக்கும் நோக்கத்துடன், ஒரு அவசரச் சட்டம் மத்திய அரசின் முன் அனுமதி பெற்று மதுரை—காமராசர் பல்கலைக் கழக 1981 ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தைப் பின்பற்றி 21-12-81 அன்று வெளியிடப்பட்டது.

அந்த அவசரச் சட்டத்தில் காணப்படுகின்ற விதிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு அதனை ஒரு சட்டமுன்வடிவா மாற்றப்பட்டு இச்சபையின் முன் பரிசீலனைக்கு வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டமுன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளுமாறும், பின்பு நிறைவேற்றித் தருமாறும் அவைக்குப் பரிந்துரைக்கிறேன்.

(பிற்பகல் 12.20)

திரு துரைமுருகன்: துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் மாண்புமிகு கல்வி அமைச்சரால் வைக்கப்பட்டிருக்கின்ற இந்த மசோதாவின் மீது நான் சார்ந்திருக்கின்ற முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே சில கருத்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இது ஒரு தேவை இல்லாத மசோதா என்பதை நானும் என்னுடைய இயக்கத்தைச் சேர்ந்த



[1982 பிப்ரவரி 6 [திரு. துரைமுருகன்]

தோழர்களும் கொடுத்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தின் அடிப்
படையிலே பார்க்கிறபோது நன்றாகத் தெரியும். ஏற்கெனவே
இந்த மாமன்றத்திலே இந்தப் பொருள்குறித்து மதுரை-
காமராசர் பல்கலைக் கழகத்திற்கு இந்தச் சட்டம் வந்த
பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு ரகுமான்கான் அவர்கள்
இந்த அவையிலே விளக்கமாகப் பேசியிருக்கிறார்கள். எதிர்க்
கட்சியிலே உள்ளவர்களும் அப்போது பலர் பேசியிருக்கிறார்கள்.
அதற்குப் பிறகு அமைச்சர் பதில் சொல்லியிருக்கிறார்கள்,
தீர்மானமும் நிறைவேறி சட்டமாகிவிட்டது. இது இரண்டாவது
ரவுண்டு மாதிரி. குஸ்தியிலே ஒரு ரவுண்டு முடித்துவிட்டு மறு
படியும் இரண்டாவது ரவுண்டு வருவார்கள். அதைப்போல்
முதலிலே அதை விட்டுப் பார்த்தீர்கள். இப்போது இரண்
டாவது ரவுண்டிலே எல்லாப் பல்கலைக் கழகங்களுக்கும் கொண்டு
வந்திருக்கிறீர்கள். அன்றைக்கு மதுரை—காமராசர் பல்கலைக்
கழகத்திற்கு மட்டும் கொண்டுவந்து பார்த்தீர்கள் எப்படி
இருக்கும் என்று. எல்லாப் பல்கலைக் கழகங்களுக்கும் கொண்டு
வந்து ஒரேயடியாக ஒவ்வொன்றுக்கும் மல்லுக்கட்டி வைப்பதை
விட முதலில் சிறியதை விட்டு கையை நனைத்துப் பார்ப்போம்.
சுட்டால் இழுத்துக்கொள்வோம் என்ற மாதிரி மதுரை—காமராசர்
பல்கலைக் கழகத்திற்கு மட்டும் கொண்டுவந்தீர்கள். என்ன?
இரண்டு முறைக்கு மேலே செனட்டிலோ சிண்டிகேட்டிலோ
அக்கடமிக் கவுன்சிலோ ஒருவரும் தேர்தலில் நின்று வரக்
கூடாது, நாமினேஷனிலும் வரக்கூடாது என்று கொண்டு
வந்தீர்கள். ஒரு ஆளுக்கு இரண்டு முறைக்கு மேலே நாமினேஷன்
கிடையாது, சர்க்கார் அனுமதிக்காது என்றால் நாமினேஷன்
பண்ணுவது நீங்கள் பண்ணலாம் சபையில் பண்ணலாம்,
இல்லையென்றால் கவர்னர் பண்ணலாம, இப்போது புதிதாக
இணைவேந்தர் பண்ணலாம் என்று வந்து இருக்கிறது.
நம்முடைய கல்வியமைச்சர் தாழ்த்தப்பட்ட பிற்பட்ட மக்களில்
ஒரு பிரிவினரை அனுப்பலாம் என்று சட்டம் கொண்டு வந்
தார்கள். ஆகவே நாமினேஷன் கல்வி அமைச்சர் மூலமாக
வரலாம், சட்டமன்றத்தின் மூலமாக வரலாம், கவர்னர் மூலமாக
வரலாம், இந்த நாமினேஷனிலே இரண்டு முறைக்கு மேலே
அனுமதிக்கமாட்டோம் என்று சொன்னால் அதைக்கூட
ஓரளவுக்கு ஆர்குமென்டிற்காக பேசலாம். தேர்தலிலே ஒருவர்
இரண்டு முறைக்கு மேலே நிற்கக்கூடாது என்று சொன்னால்
அது என்ன சட்டம்? நல்ல காலம், ஜனநாயகம் தேர்தலில்
கமிஷனிலே மாட்டி இருக்கிறது, நம் தலை எழுத்து இல்லை.
யென்றால் இரண்டு முறைக்கு மேலே எம்.எல்.ஏ.குக் நிற்கக்
கூடாது என்று சொன்னாலும் சொல்வீர்கள். நல்ல காலம்,
பஞ்சாயத்து ஆக்ட் மாதிரி உங்களிடம் இது மாட்டவில்லை.
இது ஆல் இண்டியா பேஸிஸ் என்ற முறையிலே மாட்டி
இருக்கிறது. வேண்டுமானால் ஷக்தருக்கு ஒரு லெட்டர்
எழுதுங்கள். இதுமாதிரி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்
எம்.எல்.ஏ.யாக இரண்டு முறைக்கு மேலே யாரும் தேர்தலில்
நிற்கக்கூடாது என்று.

[திரு துரைமுருகன்] 1982 பிப்ரவரி 16]

ஒருவர் தேர்தலில்நிற்கிறார், ஜெயித்து வருகிறார் என்றால் என்ன அர்த்தம்? அவருக்கு அந்த மக்களிடத்திலே செல்வாக்கு இருக்கிறது என்றுதானே அர்த்தம். நாம் என்றால் தேர்தலிலே டிராமா, கச்சேரி போடுகிறோம் து பண்ணுகிறோம்' பண்ணுகிறோம், பிரச்சாரம் பண்ணுகிறோம் அப்புறம் இது வாங்கிக்கொண்டு வருகிறோம். நாயாவது வாஸ்ட் மெஜாரிட்டி படித்தவர்கள் படிக்காதவர்கள்—எல்லோரிடமும் ஓட்டு வாங்கு கிறோம் செனட்டிலே நின்று வருகிறவர் யாரிடம் வருகிறார்? பட்டதாரிகளைப் பதிவு செய்து வைத்து எக்னாமிக்ஸ் எம்.ஏ., பி.ஏ., பி.எஸ்ஸி. ஆர்கானிக் கெமிஸ்ட்ரி. இன் ஆர்கானிக் கெமிஸ்ட்ரி, ஜுவாலஜி எல்லாவற்றிலும் நுணுக்கி நுணுக்கிப் படித்து அரிஸ்டாட்டில், பிளாட்டோ படித்து ஜனநாயகத் தத்துவம் எல்லாம் படித்துவிட்டு வந்திருக்கிறார்கள் பாருங்கள், அவர்கள் தான் அங்கே வாக்காளர்கள். நமக்கு இருக்கிற வாக் காளர் மாதிரி அல்ல. ஊர் எப்படிச் சொல்கிறதோ அப்படி கடந்து கொள்கிறோம் என்னை மாத்திரம் கேட்டால் என்ன பிரயோஜனம் நம் ஊரிலே ஓட்டுக் கேட்டால் நான் எப்படிச் சொல்ல முடியும், ஊரை கன்வெஸ் பண்ணித்தான் சொல்ல முடியும் என்று சொல்கிற மாதிரி இல்லை. படித்து பல்கலைக் கழகத்திலே பட்டம் பெற்றவர்கள் இருக்கிறார்களே அவர்கள் தான் வாக்காளர்கள். காலையிலே எழுந்து இந்து, இண்டியன் எக்ஸ்பிரஸ் தினமணி படித்துவிட்டு அப்புறம் அகில உலக அரசியலைப் பேசிவிட்டு அப்புறம் ஐ.எம்.எப். லோன் என்ன ஆயிற்று என்று பார்த்துவிட்டு வாஷிங்டன் பற்றிப் பேசிவிட்டு ஈராக்கிற்கு வந்து பிறகு தன் ஊரிலே உள்ள குட்டை விவகாரத் திலே வந்து நிற்கிறார்களே அப்படிப்பட்ட படித்தவர்கள் தான் அங்கே வாக்காளர்கள். அவர்களிடம் ஒருவர் வோட்டு வாங்குவது என்றால் இலேசான காரியமா? நான் நின்று ஜெயித்த வாக்காளர் மத்தியில் இரண்டாவதுமுறைநான்நிற்கிறேன் எனக்கு வோட்டுப் போடுங்கள் என்று கேட்டால். ஏன் ஐயா, போன முறை செனட்டிலே போய் உட்கார்ந்து கையை தூக்கி விட்டு வந்தாய் எந்தப் பிரச்சினை பற்றியும் பேசவில்லை, ஆசிரியர் பிரச்சினை பற்றிப் பேசவில்லை ஸ்டூடன்ட்ஸ் பிரச்சினை பற்றிப் பேசவில்லை. யு ஹெவ் நோ ரைட் டு ஆஸ்க் வோட்டுப்போடமுடியாது என்று தான் சொல்வார்கள். அவர் களிடம் ஒன்றும் செல்லாது.

அப்படி நல்லது செய்திருந்தால் கல்விக்காகத் தொண்டாற்றி இருந்தால் இரண்டாவது முறையாகத் தேர்தலில் நின்று ஜெயிக்க முடியும். உள்ளபடியே பணியாற்றியிருந்தால் படித்த வாக்காளர் ஓட்டுப்போட்டு அனுப்புவார்கள். இல்லாவிட்டால் தோற்றுப்போவார்கள், அதனால் நமக்கு என்ன வந்தது? நாம் போய் எதற்காக இரண்டு முறைகளுக்கு மேல் நிற்கக்கூடாதுஎன்று சொல்லவேண்டும்? அப்படிச் சொல்வது ஜனநாயகத்தின் ஆணி



[1982 பிப்ரவரி 16] [திரு. துரைமுருகன்]

வேரையே கெல்லி எறிவதாக இருக்கிறதே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களே. ஏற்கெனவே நிறைவேற்றிவிட்டோம் என்பதற்காக இப்போது எல்லா பல்கலைக்கழகங்களுக்கும் கொண்டுவரவேண்டுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத்தலைவர்—தலைமை)

ஒரு நரி சொல்லியதாம், எனக்குக் கடவுள் தெரிகிறார் என்று. எப்படித் தெரிகிறார் என்றால் கண்ணுக்கு மட்டும் தெரிகிறார் என்று சொன்னதாம். ஏன் என்றால் அந்த நரிக்கு வால் மொட்டை. வால் பொட்டையாக இருந்தால் கடவுள் தெரிவார். ஆகவே எல்லோரும் வாலை நறுக்குங்கள் பார்க்கலாம் என்று சொல்ல ஓரேலடியாக வைத்தால் குடுமி, அடித்தால் மொட்டை என்ற மாதிரி ஏதோ ஒரு பல்கலைக் கழகத்திலே தப்போ ரைட்டோ கொண்டுவந்து விட்டோம், சில பேர்களை மனதிலே வைத்துக் கொண்டுவந்து விட்டோம், அவர்களே வருகிறார்கள் என்று. அதோடு நிறுத்தவேண்டும். மதுரைப் பல்கலைக் கழகத்திலே பழனிவேலராசன் கண்ணை உறுத்துகிறாரா என்று தி.மு.க.வினர் கேட்[illegible]ர்கள். ஆகவே அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சென்னை[illegible] பல்கலைக் கழகம், பேரறிஞர் அண்ணா தொழில் நுட்ப[illegible]பல்கலைக்கழகம் எல்லாவற்றிற்கும் அடித்துவிட்டு இப்போது என்ன செய்கிறீர்கள். புதிதாக வந்த பாரதிதாசன், பாரதியார் பல்கலைக்கழகங்களுக்கும் சும்மா போட்ட குட்டை எல்லாவற்றிற்கும் மாட்டிவிடுகிறார்கள். இது நியாயந்தானா? முறையா என்பதை நீங்கள் சொல்லுங்கள். இரண்டு முறைக்கு மேலே நிற்கக் கூடாது எம்.எல்.ஏ.வுக்கு என்று சொன்னால் நாம் ஏற்றுக்கொள்வோமா? ஏன் என்று குரல் எழுப்புவோம். இரண்டு முறைக்கு மேல் அமைச்சராக இருக்கக்கூடாது என்று உங்கள் கட்சியிலே தீர்மானம்போட்டு ஒரு வாதத்திற்காக வைத்துக் கொள்வோம். அப்பொழுது என்ன செய்வீர்கள்? என்ன சார், அதெல்லாம் எப்படிச் சரியாகும்? நான் எவ்வளவு பணிகள் செய்திருக்கிறேன்? எவ்வளவு பைல்களைப் பார்த்திருக்கிறேன் என்று கேட்பார்கள் அல்லவா? அது நேச்சுரல் சார். ஆகவே, இரண்டு தடவை களுக்கு மேல் நிற்கக் கூடாது என்று சொல்வதில் என்ன நியாயம் இருக்கிறது என்று கேட்கிறேன். கவர்ன்மெண்ட் நாமினேஷன் என்றால் இரண்டு தடவைகளுக்கு மேலே நாமினேஷன் மூலம் ஒருவருக்குக் கொடுக்க மாட்டோம் என்று சொன்னால் அது சரி. ஆனால் தேர்தல் முறையிலே வாக்காளர் கள் தேர்ந்தெடுக்கிறார்கள் என்ற நிலையில் ஒருவர் இரண்டு தடவைகளுக்கு மேலே நிற்கக் கூடாது என்று சொல்வதில் என்ன நியாயம் இருக்கிறது?

இன்னும் கூட லேட் ஆகிவிடவில்லை. இப்பொழுதும்கூட நீங்கள் இதைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறு செய்தால் எதிர்காலத்தில் நல்ல பாராட்டு கிடைக்கும். என்ன இருந்தாலும் உள்ள உறுதியோடு செய்தார் என்று நாடு பாராட்டும்.

எதற்காக இப்படிச் செய்திருக்கிறார்கள் என்றால், to give opportunity தேர்தலிலே நிற்பதற்கே to give equal opportunity to all the persons to contest in the elections. கொடுத்கிறார்களாம். ஏன் மற்றவர்களெல்லாம் ஜெயித்து வரக் கூடாதா? அவர்களும் தேர்தல் மூலம்தானே வருகிறார்கள், ஓட்டுப் போடுவதன் மூலம்தானே வருகிறார்கள்.

நான் ஒன்றைக் கேட்கிறேன். இரண்டு தடவைகளுக்கு மேலே செனட்டுக்குத் தேர்தலிலே நிற்கக் கூடாது என்று சொல்லி விட்டீர்கள். ஏனென்று கேட்டால் மற்றவர்களும் அந்த இடத்திற்கு வர வேண்டும் என்ற ஒரு சிறிய விளக்கத்தைக் கொடுக்கிறீர்கள். மெட்ராஸ் யூனிவர்சிட்டியைப் பொறுத்த வரையில் கிட்டத்தட்ட 60 டிபார்ட்மெண்டுகள் இருக்கின்றன. 20 டிபார்ட்மெண்டுகளில் யூனிவர்சிட்டி ப்ரொஃபசர் ரேங்கிலே வந்து ஹெட் ஆஃப் தி டிபார்ட்மெண்ட்டாக இருக்கிறார்கள். அவர்கள் அலுவல் காரணமாக செனட்டுக்கு வருகிறார்கள். அப்படி வந்தால் கிட்டத்தட்ட 15 வருடங்கள் செனட் போர்டிலே அவர்கள் உட்கார்ந்திருப்பார்கள். இன்னும் 5 வருடங்கள் சர்வீஸ் இருக்கிறது என்றால் 15 வருடங்கள் முடிந்து, இன்னும் கூடுதலாக 5 வருடங்கள் இருந்து 20 வருடங்கள் செனட் போர்டிலே உட்கார்ந்திருக்கின்ற நிலைமை ஏற்படும். அவர்கள் ஓட்டு வாங்கி வரவில்லை, நாமினேஷன் செய்யப்பட்டும் வரவில்லை. அலுவல் காரணமாக வந்து 20 வருட காலத்திற்கு உட்கார்ந்திருப்பார்கள் என்றால் அப்பொழுது வெஸ்டட் இன்டரஸ்ட் என்ற அந்தக் காரணம் வராதா? அந்த ப்ரஃபசருக்குக் கீழே உள்ள ஒரு அசிஸ்டெண்ட் புரஃபசர் இருக்கிறார் என்றால் அவருக்கு எப்பொழுது வாய்ப்பு கிடைக்கும். இந்த ப்ரஃபசரே உட்கார்ந்திருந்தால் அந்த அசிஸ்டென்ட் ப்ரஃபசருக்கு எப்பொழுது வாய்ப்பு கிடைக்கும்? அண்ணன் தொலைந்தால் தானே திண்ணை காலியாகும்? அந்த நிலைமை வருவதற்குள் அந்த அசிஸ்டென்ட் புரஃபசரே ரிட்டயரானாலும் ஆகிவிடுவார்.

எனவே, நான் கேட்கிறேன், இதிலே என்ன நியாயம் இருக்கிறது? தேர்தல் மூலம் இரண்டு முறைக்குமேலே செனட்டுக்கு வரக்கூடாது என்று தடுப்பதிலே என்ன நியாயம் இருக்கிறது? யூனிவர்சிட்டி ப்ரஃபசர் இருபதாண்டுக் காலம் தொடர்ந்து உட்கார்ந்திருந்தால் அதைத் தடுப்பதற்கு என்ன சட்டம் இருக்கிறது?

அடுத்து, இன்னொரு விளக்கத்தையும் அறிய விரும்புகிறேன். யூனிவர்சிட்டிலே ப்ரஃபசர் தேர்தலிலே நின்று செனட்டுக்கு வரலாம். அவர் தன்னுடைய 35 வயதில் தேர்தலுக்கு நின்று செனட்டுக்குத். தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்று வைத்துக்



கொள்வோம். 41 வயது வரையில் அதில் இருந்து விடுகிறார். பிறகு இரண்டு தடவைகளுக்கு மேல் நாமினேஷன் போடப் போகிறார். அவர் இரண்டு தடவை நின்று விட்டதால் அவருடைய நாமினேஷன் இன்வாலீட் ஆகிவிடும். பிறகு 41 வயது முடிந்து 42-வது வயது வரும்பொழுது அவர் ஹெட் ஆப் தி டிபார்ட்மெண்ட் ஆகி, யூனிவர்சிட்டி ப்ரஃபசர் ஆகி விடுகிறார். அப்படி ஆனவுடனே நேரே சபைக்குள்ளே வருகிறார். ஏற்கனவே 6 வருடங்கள் அனுபவித்து விட்டு, அதற்குப்பிறகு உங்களுடைய சட்டத்தின்படி உள்ள போக வேண்டாமென்று சொல்லிய பிறகு அவர் அங்கே வந்து உட்காருகின்ற நிலைமை உருவாகிறது.

அதுதான் போகட்டும். எலக்ஷனிலே நின்று ஜெயித்து வருகின்றவர்களுக்கும், இப்படி அலுவல் காரணமாக வருபவர்களுக்கும் பவரிலே ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா என்றால் எல்லோருக்கும் ஒரே பவர்தான். ரெசல்யூஷன் கொண்டு வரலாம், ஓட்டுப் போடலாம்; எல்லாம் செய்யலாம். ஆகவே, அவர்களுக்குள் எந்தவிதமான பாகுபாடும் கிடையாது. எலக்ஷன் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் இரண்டு முறைகளுக்கு மேல் இருக்கக்கூடாது என்று சொல்கிறீர்கள். ஆனால் இவரோ 35 வயதிலே நின்று இரண்டு டெர்ம்கள் வந்து விடுகிறார். பிறகு ப்ரஃபசராக ஆகி விட்ட காரணத்தால் 55 வயது வரை இருப்பார். இப்படி இருபதாண்டுகள் ஒருவர் இருந்தால் நீங்கள் சொல்லுகின்ற அந்த வெஸ்டட் இன்டரஸ்ட் தோன்றாதா? இதைப்பற்றிக் கல்வியமைச்சரவர்கள் தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Explanatian II: இலே சொல்லுகிறார்கள்.

Provided further that for the purpose of this sub section if a person was elected or nominated to one authority and such person became a member of another authority by virtue of the membership in he first mentioned authority the period for which he held office in the first mentioned authority alone shall be taken in to account. இதிலே என்ன விவகாரம் என்றால், இப்பொழுது ஒருவர் செனட்டுக்கு ஜெயித்துப் போகிறார் என்று வைத்துக் கொள்வோம், முதன்முறையாக ஜெயித்துச் செல்லுகின்ற அவர் மூன்று வருடங்கள் இருந்து விட்டார். பிறகு செகன்ட் டைம் போகிறார். நான் சொல்வதில் என்ன தப்பு இருந்தாலும் கல்வியமைச்சரவர்கள் திருத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். செகன்ட் முறையும் ஜெயித்துப் போகிறார்.

(பிற்பகல் 12.30)

இரண்டாவது வருஷம் செனட்டிலே 6 வருஷமாயிற்று. அரசாங்கம் பார்த்து, சிண்டி உட்கார்ந்திருக்கும் போது. நியமிக்கிறீர்கள். அவர் சிண்டிகேட் கேட்டிற்கு நியமிக்கலாம். [illegible] கொ[illegible]ங்கள், [illegible]விடுகிறார் என்று [illegible]த்துக்

அப்பொழுது என்ன சொல்கிறீர்கள் என்றால், இந்த செனட் போர்ட் பதவி முடிகிறபொழுதே, சின்டிகேட் பதவியும் முடிந்து விடுமா? அப்பொழுது அவர் வீட்டுக்கு வந்துவிடுவாரா என்று கேட்டால், அதற்கு என்ன சொல்கிறார்கள்? The first mentioned authority alone shall be taken into account. ஆகையினாலே, இந்த first authority எது? அந்த செனட்டிலே 6 வருஷம் மட்டும்தான் கணக்கிலே எடுத்துக்கொள்வோம். அடுத்து இருக்கிறது என்ன வென்றால், நாமினேஷனில் போகிறார், சின்டிகேட்டுக்கு. ஆகையால், இரண்டுதரம் நாமினேஷனுக்கு வரலாம். அங்கே 6 வருஷம் இருந்து விடுவார், இரண்டு சிக்கலான பாய்ன்ட். ஃபர்ஸ்ட் டைம் நிற்கிறார், சின்டிகேட்டுக்கு. 3 வருஷம் முடிகிறது. இரண்டாவது முறை செனட்டிலே நிற்கிறார். அப்பொழுது அரசாங்கத்தினுடைய தயவிலே சின்டிகேட்டுக்கு நாமினேஷனில் போகிறார். போனவுடனே, அவருக்கு 6-வது ஆண்டு செனட் முடிந்தவுடனே, சின்டிகேட் பதவியும் பறிபோய் விடுமா என்று கேட்டால், அதற்கு ஒரு விளக்கம் சொல்கிறார்கள் அமைச்சர் விளக்க வேண்டும்.

"the period which he held office in the first mentioned authority alone, shall be taken in to account.......”

ஆக இந்த முதல் அத்தாரிட்டி செனட். அதை மட்டும்தான் கணக்கில் எடுப்போம். அவர் இன்னொரு முறையும் சின்டி கேட்டுக்கு நாமினேஷனில் வர வாய்ப்பு உண்டு. ஆக சின்டி கேட்டில் 6 வருஷம், செனட்டில் 6 வருஷம். ஆகவே, அதிலே வந்து விடுகிறாரே, அந்த இடத்திலே இந்தச் சட்டம் தவறாதா என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னொன்று, லைஃப் மெம்பர்கள், பணம் கட்டி சேர் கிறார்கள். இதிலே அவர்களையும் சேர்த்து, எல்லாவற்றையும் எடுத்து விடுகிறேன் என்று முடிவு பண்ணிவிட்டீர்கள். நான் கேட்கிறேன், 10 வருஷம், 15 வருஷம் இருந்து விட்டுப் போய் விட்டார்கள். ஆனால், மறுபடியும் அவர்கள் நிற்க உரிமை உண்டா? நான் மெட்ராஸ் யூனிவர்சிட்டிக்கு ரூ. 50,000 பணம் கட்டினால் லைஃப் மெம்பர் ஆகிறேன். ஆனால், சட்டத்திலே அவர்களுக்கும் கிடையாது என்கிறீர்கள். நான் வீட்டுக்குப் போகிறேன். இப்பொழுது நான் லைஃப் மெம்பரகத்தான் இருந்து கொண்டிருக்கிறேன், பணம் கட்டி. ஆஸ் எ சிட்டிசன் நான் மறுபடியும் கன்டெஸ்ட் பண்ணி நீங்கள் சொல்கிற 6 வருஷ காலத்திற்காவது சின்டிகேட்டுக்குப் போக, எனக்கு அனுமதி உண்டா, இல்லையா? இதிலே தெளிவாக இல்லை. அமைச்சரவர்கள் குறிப்பிட வேண்டுமென்பதற்காகத்தான். இந்த இடத்திலேயும் நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.





அதே போல் நான் அமைச்சரிடத்திலே தெரிவித்து கொள்ள விரும்புவது எல்லாம், இப்படியெல்லாம் பல்கலைக் கழகங்களிலே செய்திருக்கிறீர்களே, சில பேர் ரொம்ப நாளாக இருக்கிறார்கள். பதவி ஆசை என்பது ஒரே இடத்திலே உட்கார்ந்திருந்தாலே, எல்லோருக்கும் வந்து விடும். அண்ணா சொன்னார், ஆளுங்கட்சி எதிர்கட்சியாக மாற வேண்டும். எதிர்க்கட்சி ஆளுங்கட்சியாக மாற வேண்டும். அப்பொழுதுதான் ஜனநாயகம் என்று. அதற்குச் சின்ன உதாரணம் சொன்னார். தோசையைத் திருப்பிப் போட்டால்தான் வேகும். ஒரே பக்கம் இருந்தால் அது கல்லோடு ஒட்டி விடும் என்று. எனவே ஆசை வந்து விட்டால், அதிலேயே அப்படியே உட்கார்ந்து விடுகிறார்கள். எனவே, 6 வருஷம் நான் —பார்ட்டியாக இருக்கிற நான் எலக்‌ஷனிலே நின்று ஓட்டு வாங்கி போவதற்கே, எனக்கு வெஸ்டட் இன்டரஸ்ட் வரும் என்று சொன்னால், மெட்ராஸ் யூனிவர்சிட்டியிலே ஆண்டுக் கணக்கிலே இன்றைக்குப் பல பேர் 20 வருஷமாக இருக்கிறார் களே, நியாயம்தானா? நான் கேட்கிறேன், இந்தத் திட்டத்தை நீங்கள் செய்வதாக இல்லை. எதிலே எடுத்தாலும் கொஞ்சம் கொஞ்சமாக எடுக்கிறீர்கள். அரைக்கிணறு தாண்டுகிற வேலை. மதுரை யூனிவர்சிட்டிக்குக் கொண்டு வந்தீர்கள். அப்பொழுதே தப்பு என்று சொன்னோம். தப்பு என்று சொன்னதைக் கேட்டுக் கொண்டு, அதுதான் எங்கள் வழக்கம் என்று சொல்லி, இந்த முறை கொண்டு வந்து விட்டீர்கள்.

போன வருஷம் உலகத் தமிழ் மாநாட்டிலே அனவுன்ஸ் பண்ணினீர்கள் தமிழ்ப் பல்கலைக் கழகம் என்று. அதை நான் பாராட்டுகிறேன், ஒரு பில்லை முழு வடிவம் கொடுத்துக் கொண்டு வந்து கொடுத்திருக்கிறீர்கள், டிஸகஷனுக்கு, பாரதியார் பல்கலை கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகங்களுக்கும் அதே மாதிரி செய்திருக்கிறீர்கள். ஆனால், 125 வருஷங்களாக இருக்கிற சென்னைப் பல்கழைக் கழகத்திற்கும் 100 ஆண்டு விழாக் கொண்டாடிய அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கும் கிட்டத் தட்ட 20 ஆண்டுகளாக இருக்கிற மதுரைப் பல்கலைக் கழகத் திற்கும் ஒரு திருத்தப்பட்ட சட்டம் கொண்டு வருவோம், கொண்டு வருவோம் என்றீர்களே, ஏன் வரவில்லை. அங்கேதான் இருக் கிறது. விவகாரம். ஏன் கொண்டு வர முடியவில்லை? கொண்டு வர முடியாமல் இருக்கிறது.

எவ்வளவு மோசமாக இன்றைக்குச் சென்னை பல்கலைக் கழகம் நடக்கிறது. இந்த கொடுமைகள் வேறு எங்காவது உண்டா? நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு ரொம்ப நன்றாகத் தெரியும். செமஸ்டர் எக்சாமினேஷன் நடத்துகிறார்கள். இந்த செமஸ்டர் 3 நடத்தி முடித்த உடனே——டிசம்பரிலே முடிகிறது ——அந்த மார்க்குகளை வைத்து, ஐ.டி.ஐ., கோடா, பண்ட மென்ட்டல் ரிசர்ச், இன்ஸ்டிடியூட் இம்மாதிரி இடங்களுக்கு எல்லாம் அப்ளை செய்கிறார்கள். 3 முடிந்தது, அந்த பிரிலிமினரி மார்க்கைப் பார்த்து அட்மிஷன் தந்திருக்கிறார்கள். 4-வது

செமஸ்டர் ரிசல்ட் வந்தால்தானே, அப்ருவ் செய்வார்கள் 4-வது செமஸ்டர் ரிசல்ட் வரவே இல்லை. அதனுடைய விளைவு என்ன ஆயிற்று? கிளாஸ்ஸ் ஆரம்பித்து விட்டார்கள்; ஜுனில். உடனே, 250 மாணவர்களுக்கு; பர்மிட் கிளாஸ் வாங்கியிருந்தும் அட்மிஷன் கிடைக்கவில்லை. ஏனென்றால், 4-வது செமஸ்ட்டர் ரிசல்ட் அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

இந்த நிலை உருவாகி இருப்பதற்கு யார் காரணம்? மெட்ராஸ் யுனிவர்சிடியினுடைய ரிஜிஸ்டிரார் இல்லையா? அந்த மெட்ராஸ் ரிஜிஸ்டிராரைப்பற்றி வந்திருக்கின்ற கோளாறுகள் கொஞ்சமா, நஞ்சமா? நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு நன்றாக ஞாபகம் இருக்கும். இந்த அவையிலே நம்முடைய செஞ்சி இராமச்சந்திரன் அவர்கள் பேசி இருக்கிறார்கள். இதே அவையிலே நம்முடைய உமாநாத் அவர்கள் பேசினார்கள். அவர் மீது எக்கச்சக்கமான அலிகேஷன்கள் வந்தன. அவரை ஏன் மாற்றவில்லை. அமைச்சர் உடனே சொல்வார் துரைமுருகனுக்குத் தெரியாதா? அது ஒரு அட்டானமஸ் பாடி. அதிலே போய் நாம் தலையிட முடியுமா? எனவே மாற்றுவதும், மாற்றாததும் அவர்கள் விருப்பம். அந்த அட்டானமஸ் பாடியிலே நீங்கள் எப்படி பைனான்சியல் ஆபிசரைப் போட்டிருக்கிறீர்கள். அந்த ரிஜிஸ்டிரார் என்ன சொல்லியிருக்கிறார் என்றால், இங்கே நம்முடைய உறுப்பினர்கள் கூட சொன்னார்கள். 'யார் அரசியல் வாதிகள் மாலை போடுகிறார்கள், பிறந்த நாள் கொண்டாடுகிறார்கள். போஸ்டர் ஒட்டுகிறார்கள், வெளிநாடுகளுக்குப் போனால் போஸ்டர் ஒட்டிக் கொள்கிறர்கள்.'' அது நமக்கு உடன் பிறந்த வியாதி நாம் அரசியல் வாதிகள் பண்ணுகிறோம். ஆனால் ஒரு ரிஜிஸ்டிரார், ஒரு பதிவாளர், ஒரு பெரிய மலர் வெளியிடுகிறார். ஒரு மலர் 100 ரூபாய் பெறும். அந்த மலரிலே யுனிவர்சிட்டி படம் போட்டார். அந்த யுனிவர்சிட்டிக்கு மேல் இவர் நிற்கிறார், ஏ. எல். முதலியார் கூட அப்படி போட்டுக்கொண்டது கிடையாது உடனே கவர்னர் பட்வாரிக்கு போட்டார்கள். அவர் சி.ஐ.டி.யைக் கூப்பிட்டு விசாரணை செய்யச் சொன்னார். இவை எல்லாம் அமைச்சருக்குத் தெரியும். அவர் சொன்னார் இதெல்லாம் கிடையாது 51—சவரன் நகை எல்லாம் கிடையாது. இவர் பெரிய ஆள். நேராக உம்மிடியார் சென்று 6 பவுனிலே ஒரு நகையை வாங்கி, இதுதான் கொடுத்தார்கள். இந்தக் காலத்திலே 51 சவரன் யார் கொடுப்பார்கள் என்று சொன்னார், நம்முடைய அமைச்சர் இந்த சட்டமன்றத்தில் பேசியதற்கு இங்கே பதில் சொல்லாமல், பக்கத்து சபைக்கு போய், இப்படி எல்லாம் பேசுகிறார்கள் அசெம்பிளியிலே கூட, ஆனால் இந்த நகைதான் கொடுத்தார்களாம், என்று பேசினார். லஞ்சத்திலே என்ன சார் பெரிய லஞ்சம், சின்ன லஞ்சம். ஒரு ரூபாய் வாங்கினாலும் லஞ்சம்தான், ஒரு கோடி வாங்கினாலும் லஞ்சம் தான். கற்பிலே போவது என்றால் கொத்துதான், இதிலே இவ்வளவு போகுமா கற்பு அதுலே அவ்வளவு போகுமா கற்பு.

ஆனல் உடனே என்ன ஆயிற்று நம்முடைய ஊர் மானம் மரியாதை இந்தப் பல்கலைக் கழகத்தின் மரியாதை. வடநாட்டு பத்திரிகையான இந்துஸ்தான் டைம்சிலே வெளு வெளுவென்று வெளுத்து வாங்கினான். நான் கூட பத்திரிகையிலே பார்த்தேன். இந்துஸ்தான் பத்திரிகையிலே எழுதியிருப்பதற்கு நமது ரிஜிஸ்டிரார் சும்மா இருப்பாரா என்று பார்த்தால், தினமணியிலே ஒரு நியுஸ். அந்தப் பத்திரிகையின் மீது மானநட்ட வழக்கு என்று செய்தி வந்தது. நானும் துருவித் துருவிப் பார்த்தேன். இந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகை மீது வழக்கு வரும் என்று. ஆனால் அமைச்சர் அவர்களே, இன்றுவரையிலும் ரிஜிஸ்டிரார் ஒரு வழக்கு கூட அந்த இந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகையின் மேல் போடவில்லை. தினமணியில் வந்ததோடு சரி. தினமணி உண்மையான செய்தி வரும் பத்திரிகை என்று பெயர். ஆனால் இவர்கள் கொடுத்திருப்பார்கள் அவர்கள் போட்டிருப்பார்கள். அதிலே சொல்லுகிறார். நம் சர்க்கார், கவர்னருக்கு ஒரு பெட்டிஷன் கொடுத்தார்கள். கவர்னர் என்ன பண்ணினார். சி.ஐ.டி போட்டு விசாரிக்க ஆரம்பித்தார்கள். சி.ஐ.டி. விசாரிக்க ஆரம்பித்து ஒரு ரிப்போர்ட் கொடுக்கிறது.

According to the C.I.D; Report, the Registrar has not enjoyed a good reputation and is reported to have received a commission from the building contractor of the University. This was decided as bribe taken for admission post graduate course. C.I.D. investigation was ordered by the Chanceller Thiru Patwari following allegations of corrupions against the Registrar. In may 1977. .......

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர்: (திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்) மாண்புமிகு உறுப்பினர் மசோதா மீது தொடர்ந்து பேசுமாறு கேட்டுக் கொள்கிறேன். தனிப்பட்ட முறையிலே யாரையும் குறிப்பிட்டுப் பேச வேண்டாம்,

திரு ரா. உமாநாத். தலைவர் அவர்களே, குற்றச்சாட்டுகள் என்கிறபோது அங்கே அபிசியல் கெப்பாசிடியிலே ஒரு அதிகாரியைப் பற்றி சொல்லுவதற்கு எங்களுக்கு உரிமை உண்டு.' நான்-அபிசியலாக இருந்தால் தான் டிஃபன்ட் பண்ணுவதற்கு இங்கே வாய்ப்பிருக்காது.

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர்:வெங்கடசுப்பிரமணியம்) மாண்புமிகு (திரு ப உறுப்பினர் மசோதாவின் மீது மட்டும் பேசும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே இதை நான் ஆட்சேபிக்கிறேன். எந்த விதியின்படி இங்கே பல்கலைக்கழகங்களைப் பற்றிப் பேசும்போது, சென்னைப் பல்கலைக் கழக ரிஜிஸ்டிராரைப்பற்றி இருக்கக்கூடிய பதிவாளரைப் பற்றி சில பல பிரச்சினைப் பற்றிப் பேசினால், அது எப்படி சபையினுடைய விதிகளை மீறியதாக ஆகும். அரசாங்கத்தின் சார்பில் அவர்கள் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

அப்படி முன்னாலேயே விவாதிக்கப்பட்டிருக்கிறது. அப்படி தாங்கள் ரூல் அவுட் பண்ணுவதற்கான விதிகள் இல்லை. ஆகவே அவர்கள் பேசினால் அரசாங்கம் பதில் சொல்வார்கள். அதுதான் முறை. அது தனிப்பட்ட விமர்சனம் இல்லை. அவரது பணித் துறை சம்பந்தப்பட்ட விமர்சனங்கள்.

[பிற்பகல் 12.40]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு ப. வெங்கடசுப்பிரமணியன்: தற்போது சட்டமன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள சென்னைப் பல்கலைக்கழக திருத்த சட்டமுன்வடிவை ஒட்டிப் பேச வேண்டும்.

திரு. என். சங்கரய்யா: சென்னைப் பல்கலைக் கழகம் பொறுத்து இந்த மசோதா இருப்பதால், அந்தக் கருத்துக்களை அவர் பேசுவதற்கு உரிமை உண்டு.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்-தலைமை)

திரு. துரை முருகன்: நான் பேசுவதில் ஒன்றும் தவறு இல்லை. இங்கே மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் அன்றைக்குப் பேசுகின்ற நேரத்தில் திரு. மணி சுந்தரம் அவர்களைப் பற்றி அவருடைய அபிசியல் கெபாசிடி குறித்து எவ்வளவு பேச வேண்டுமோ அவ்வளவும் பேசினார்கள். அதைப் போல் நானும் இந்த மசோதாவை ஒட்டித்தான் இந்தக் கருத்துக்களைப் பேசுகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இங்கே அவைமுன் கொண்டு வரப்பட்டுள்ள மசோதாவில் செனட், சின்டிகேட் ஆகியவற்றிலே இரண்டு டர்ம்க்கு மேல் ஒரு உறுப்பினர் இருக்கக் கூடாது என்று கொண்டு வந்து இருக்கிறோம். அதை எதிர்த்து மாண்புமிகு உறுப்பினர் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். அதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரிஜிஸ்டிராரைப் பற்றிப் பேசிக் கொண்டு இருக்கிறார்கள். மற்றவற்றிற்கு நான் பின்னால் பதில் சொல்கிறேன். ஆனால் நான் கேட்க விரும்புவது, இந்த ரிஜிஸ்டிரார் பதவிக் காலத்தையும் இது போன்ற கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும் என்று சொல்கிறீர்களா, அப்படிப் பேசினால் அதிலே அர்த்தம் இருக்கிறது. அதற்கு மாறாக அங்கே இரண்டு டர்ம்க்கு மேல் இருக்கக்கூடாது என்று கொண்டு வந்துள்ளதை எதிர்த்துவிட்டு, இங்கே ரிஜிஸ்டிராரைப்பற்றி பேசுவது குழப்பம் உண்டாக்குகிற கருத்தாக இருக்கிறது. அந்த மாதிரி இல்லாமல் தெளிவாகப் பேச வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன்: நான் அமைச்சரோடு ஒட்டித்தான் வருகிறேன். ஒரு தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்கள் கூட இரண்டு முறைக்கு மேல் வந்தால் 'வெஸ்டட் இண்டரஸ்ட்' வந்து விடும் என்று சொல்கிறபோது, இப்படிப்பட்ட ரிஜிஸ்டிரார்கள் 8 ஆண்டு காலம், 10 ஆண்டுகாலம் பதவியில் இருப்பதால் தான்

அவர்கள் பழைய பெருச்சாளிகளாக மாறி, அதன் விளைவாக எவ்வளவு பெரிய நிலைமைகள் உருவாகியிருக்கின்றன. ஆனால், 6 முறை இருந்த செனட் உறுப்பினர்கள் கூட இந்த மாதிரி அநியாயங்களைச் செய்தார்கள் என்று ரிப்போர்ட் கிடையாது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆகவே, இங்கே இரண்டு பருவங்கள் என்று அரசு கொண்டுவந்துள்ள திருத்தங்களை ஆதரிக்கிறேன் என்று சொன்னால் நியாயம் இருக்கிறது. அங்கே இரண்டு பருவங்கள் இருப்பதை எதிர்க்கிறேன் என்று பேசி விட்டு, இதைப்பேசுவது பொருத்தமாக இல்லை, முரண்பாடாக இருக்கிறது என்று தான் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்லமுறையில் நான் கொண்டு வந்து இருக்கிற கட்டுப்பாட்டை ஆதரித்து விட்டு, அதைப்போல் ரிஜிஸ்டிரர் பதவிக்கும் கொண்டு வரவேண்டும் என்று சொன்னால், அது அரசுக்கு உதவி செய்வதைப்போல் இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பதிவாளர் பற்றிய தனிப்பட்ட குற்றச்சாட்டு சொல்ல வேண்டாம். இந்தத் திருத்தம் பற்றி மட்டும் பேசவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இங்கே திரு. மணி சுந்தரம் அவர்களைப் பற்றி அன்றைக்கு திரு. உமாநாத் அவர்கள் பேசினார்கள். அன்றைக்கு இதை ஏன் சொல்லவில்லை. அவருக்கு அன்றைக்கு வாய்ப்புக்கொடுத்து விட்டு, இன்றைக்கு எனக்கு மட்டும் இதைச் சொல்வது சரியா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அன்றைக்கு ஒரு சிறிய தவறு நடந்து இருந்தால், அதையே நாம் இன்றைக்கும் 'ஃபாலோ' செய்யவேண்டும் என்பது அல்ல. தனிப்பட்ட முறையில் யார் மீதும் குற்றம் சொல்லவேண்டாம்.

திரு துரை முருகன்: அன்றைக்கு அந்த ஆள் செயின் வாங்கியது 50 சவரன் வாங்கவில்லை, ஒரு சின்ன செயின் தான் வாங்கினார் என்று எப்படி மேல்சபையில் காண்பித்தார்? எப்படி பேசினார்?

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: துணைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு அனுமதி அளித்ததுபோல் இன்றைக்கும் அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து இதற்குஒரு முற்றுப்புள்ளிவைக்காதீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திடீரென்று ஏதாவது குற்றச்சாட்டுகளை இங்கே தெரிவித்தால், அதைப்பற்றிய குறிப்புகள் அமைச்சர்களிடத்தில் இருக்காது. ஆகவே, திருத்தத்தைப் பற்றி மட்டும் பேச வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. துரை முருகன்: இந்தமன்றத்திலே இந்தக் குற்றச் சாட்டு பேசக்கூடாது என்று சொன்னால், திரு. மணிசுந்தரம அவர்களைப் பற்றி இங்கே பேசிய பிறகு சபை முடிந்ததன் காரணமாகத்தான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மேலவையில் அதற்கு விளக்கம் அளிக்க வேண்டி வந்தது. வெளியே உள்ள ஒருவரைப் பற்றி இங்கே ஒன்றுமே பேசக் கூடாது என்று சொன்னால். அப்புறம் இங்கேயுள்ளவர்களைப் பற்றி நீ நான் என்று தான் நாம் இங்கே பேசிக்கொண்டு இருக்கவேண்டிவரும் ஆகவே, நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

A C.I.D.report was made.

Thiru N.D. Sundaradivelu, Ex.Vice Chanceller, presided over the function. Dr.Rangaswami Ex. Vicechancellor, Tamil Nadu Agricultural University's released the Souvenir. It is learnt that Thiru Purushothaman, proprietor of New Bharat Electric company, the Building contractor of Madras University, presented to the Regitstar sovereign valued at about Rs.80,000/-.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் சொல்வதற்கு எல்லாம் மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்வதாக இருந்தால் சொல்லாம்; ஆனால் அமைச்சரிடம் அதற்கான பதில் இருக்காது. காரணம் இது ஒரு சிறிய திருத்த மசோதா தான்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இவற்றை எல்லாம் பேசுவார்கள் என்ற ஒரு நிலைமை எனக்குத் தெரியாது. அந்த விவரங்கள் தேவை என்றால் வேறொரு முறை அதற்கான வாய்ப்பு வருமானால் பதில் சொல்கிறேன். ஆனால் என்னுடைய கேள்வி அதுவல்ல. இரண்டுமுறை வரக்கூடாது என்று பேசிவிட்டு, ஒரு பதிவாளர் பற்றி இவ்வளவு நாள் இருக்கிறாரே என்று கேட்டால் அவர் களுக்கும் அந்த கட்டுப்பாட்டை கொண்டுவர வேண்டுமென்று சொல்கிறார்களா? அல்லது அவர்கள் செய்கிற தவறைப்போல சிண்டிகேட், செனட் உறுப்பினர்களும் செய்வதற்கு, எங்களுக்கு இந்த இரண்டுமுறை வேண்டாம் என்று சொல்கிறார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன். இதை மக்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

ஒவ்வொரு விதிமுறையிலும் ஒவ்வொரு மாதிரியான வாதத்தை எடுத்து வைத்து இங்கே பேசுவது முறையல்ல; சரியல்ல. மக்கள் ஒரு தெளிவை எதிர்பார்க்கிறார்கள் என்றால் இந்த மசோதாவின்மீது அவர்களுடைய கருத்து என்ன? திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்து என்ன? அதை அறிந்துகொள்ள மக்கள் விரும்புகிறார்கள்.

இப்போது இங்கே நேரிலே உட்கார்ந்து கேட்டுக்கொண்டி ருக்கிறஎனக்கே ஒரு குழப்பத்தை உண்டுபண்ணிக்கொண்டிருக் கிறார்கள். இரண்டுமுறை வரக்கூடாது, நாங்கள் எதிர்கிறோம்





என்பது ஒரு தீர்மானம். இங்கே பதிவாளர் எப்படி இவ்வளவு நாள் இருக்கலாம் என்பது பேச்சு. இதிலே உங்கள் கருத்து என்ன? குழப்பத்தை ஏற்படுத்தாமல் தெளிவாகச் சொல்லுங்கள், நேரில் கேட்டுக்கொண்டிருக்கிற எனக்கே குழப்பத்தை ஏற்படுத்து கிறீர்கள் என்றால் திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றி மக்கள் என்ன பேசுவார்கள்? எனவே, உங்கள் கருத்தை தெளிவாகச் சொல்ல வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற தீர்மானத்திற்கு முரண்பாடு இல்லாமல், அதற்கேற்ப தன்னு டைய கருத்தைச் சொல்ல வேண்டும். மற்றபடி விளக்கங் களுக்கு என்னால் முடிந்தால் பதில் சொல்கிறேன். இல்லை என்றால் மறுமுறை பார்த்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தத் திருத்தத்தின்மீது பேச வேண்டும். இதை ஒட்டியே பேச வேண்டும்; அமைச்சர் சொன்ன கருத்தை ஒட்டி கருத்தைச் சொல்ல வேண்டும்.

திரு. துரைமுருகன்: குழப்பமான ஒரு மசோதாவைக் கொண்டுவந்து, குழப்பமான நிலையில் சபையிலே அறிமுகப் படுத்தி இருக்கின்ற காரணத்தால் அவர்கள் குழம்பி இருக் கிறார்கள்; திராவிட முன்னேற்றக்கழகம் குழம்பவில்லை. நான் கேட்கிற கேள்வியை வெளிப்படையாகவே கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவரவர் களே, அரசு கொண்டுவந்திருக்கிற இந்த சட்ட முன்வடிவு குழப்பமாக இருக்கிறது என்றால் அந்தக் குழப்பத்தை எடுத்துச் சொல்லலாம். அதற்காக நானும் குழம்புகிறேன் என்று சொல்வது சரியல்ல.

திரு. துரைமுருகன்: நீங்கள் என்னை சொல்கிறீர்கள். 'டிட் ஃபார் டாட்'. அவ்வளவுதான். நீங்கள் தேர்தலிலே நிற்கிற ஜனநாயக உரிமைக்குக் கூட இரண்டு பருவங்கள் தான் என்று தடைவிதிக்கிறபோது, அதிகாரப் போதையிலே உட்கார்ந்து இருந்துகொண்டு அக்கிரமங்கள் செய்கிறவர்கள் ஏன் உங்கள் கண்ணிலே படவில்லை? அதற்காகச் சொல்கிறேன். "நீங்கள் சொல்லுங்கள், நாங்கள் செய்கிறோம்'' என்று சொல்கிறீர்கள் என்றால், ஏன் சார், நாங்களா சொன்னோம் தேர்தலுக்கு நிற்கிறவர்களுக்கு இரண்டு தடவை கொண்டு வாருங்கள் என்று நீங்கள்தான் சொன்னீர்கள்; நீங்களே கொண்டுவாருங்கள். ஆகவே, இது தேவையில்லை, இது ஜனநாயகத்தைப் பறிக்கிற ஒன்றாக இருக்கிறது.

I ask the sponsor of the motion in the name of democracy, in the name of Political doceney to kindly drop the motio . Thank ou

[1982 பிப்ரவரி 16

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்த சட்ட முன்வடிவை நாங்கள் ஆதரிக்கிறோம். காமராஜ பல்கலைக் கழகம் சம்பந்தமாக முதலிலே ஒரு சட்ட மதுரை முன்வடிவு கொண்டுவரப்பட்டு, அது சட்டமாக ஆக்கப்பட்டி ருக்கிறது. அது அரசாங்கம் கொண்டு வந்தது மட்டுமல்ல; அரசாங்கம் அப்படி கொண்டுவர வேண்டுமென்று மதுரை காமராஜ் பல்கலைக் கழகமும் மற்றும் பல பல்கலைக் கழகங் களைச் சேர்ந்திருக்கிற கல்லூரி ஆசிரியர்களும் அவர்களுடைய ஸ்தாபனங்களும் இப்படிப்பட்ட ஒரு சட்டம் வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். அதை ஏற்றுக்கொண்டு அரசாங்கம் போனதடவை அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தது. ஆகவே நாங்கள் இதை ஆதரிக்கிறோம். அப்படி ஆதரிக்கிறபோது 'எலக்டட் போஸ்டி'ல் ஆறு வருஷங்களுக்குமேல் கூடாது என்று சொல்லி, ஆனால் மூன்று அமைப்புகளிலே, இன்னொரு அமைப் பிலே அரசாங்கத்தினுடைய நாமினேஷனில் வரலாம் என்று அர்த்தம் இருந்தால் அது தவறாகும். கல்வி அமைச்சர் அதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி அர்த்தம் இருந்தால் அது தவறானது: பர்ப்பசே டிஃபீட்டாகும் என்பது என்னுடைய கருத்து.

மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்திற்கு இந்தத் திருத்தத்தை அரசாங்கம் கொண்டுவந்தபோது ஒரு சரியான காரணத்தை சொன்னார்கள். அந்தக் காரணத்தை மீண்டும் இப்போது கல்வி அமைச்சரவர்கள் வலியுறுத்தினார்கள்.

[பிற்பகல் 12-50]

அதாவது இந்த அமைப்புக்களில் ஒரு நபர் காலவரையின்றி இருக்க அனுமதிக்கப்பட்டால் தனிப்பற்று 'வேஸ்டட் இன்டரஸ்ட், உருவாகும் என்பது ஒரு பிரதான காரணம். அது உண்மை தான் என்பதை நாங்கள் ஒத்துக் கொள்கிறோம். அப்படி காலவரையின்றி இருந்து பல்கலைக் கழகத்தின் நிர்வாகத் ஒரு நபர் தையே தானே நடத்துவதாக நடைமுறையில் கொண்டுவந்திருக் கிறார் என்று ஊரே பேசுகிறது. இதிலே ஒரு ரகசியமும் இல்லை. இட் இஸ் எ ஃபேக்ட் என்பதை ஊரே பேசுகிறது. அப்படி ஆதிக்கம் செலுத்த வாய்ப்பு நாம் அளிக்கக்கூடாது. இல்லையே என்ற பிரச்சினை வருகிறது. இது அசெம்பிளி, வோட் பார்லிமென்ட் மாதிரி இருக்கக்கூடிய வோட் அல்ல. லிமிட்டட் வோட். குறைந்த எண்ணிக்கையிலே இருக்கக்கூடிய வோட். இந்த ஸ்தாபனத்திலே ஆதிக்கம் செலுத்தக்கூடிய பொசிஷனிலே இருக்கக்கூடிய ஒருவர் நிச்சயமாக அந்த ஆதிக்கத்தைப் பயன் படுத்தி அந்த வோட்டுக்களை மேனிப்புலேட் பண்ண முடியும் என்பதை நாம் நடைமுறையில் பார்த்துக்கொண்டு வருகிறோம். ஆகவே அந்த ஆதிக்கம் அப்படியே பயன்படுகின்றது என்பது மட்டுமல்லாமல் அந்த ஆதிக்கம் ஊழலினுடைய ஊற்றாகவும் அமைகின்றது என்பதை நம்முடைய வாழ்க்கையின் பல்வேறு இடங்களிலே பார்க்கிறோம்.



1982 பிப்வரரி 16] [திரு. ரா. உமாநாத்]

அன்று அந்த சட்ட முன்வடிவை ஆதரித்தோம். அதோடு நிற்காமல் இன்றைக்கு இந்த சட்டமுன்வடிவை மற்ற பல்கலைக் கழகங்களுக்கும் பொருந்துகின்ற வகையிலே கொண்டுவந் திருப்பதை நாங்கள் ஆதரிக்கிறோம். ஆனால் இதிலே இருக்கக் கூடிய கோட்பாட்டை மேற்கொள்வதில் அரசு கன்சிஸ்டன்டாக இல்லை என்பது எங்களுடைய குற்றச்சாட்டு. கன்சிஸ்டன்சி என்று சொன்னால் இப்படிப் பல்கலைக் கழகத்திலே இருக்கக் கூடிய போஸ்ட்களிலோ, இடங்களிலோ அந்த வெஸ்டட் இன்டரஸ்ட் என்ற தனிப்பற்று ஏற்படுவதைத் தடுப்பதற்குரிய நோக்கம் உங்கள் கோட்பாடு என்று நீங்கள் கூறுகின்றபோது அந்தக் கோட்பாட்டைப் பொருத்துவதில் முன்னுக்குப் பின் முரணாக இல்லாமல் இருக்கவேண்டும். அந்த கன்சிஸ்டன்சி இல்லை என்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டு.

நான் கேட்கிறேன், பல்கலைக் கழகத்திலே இருக்கக்கூடிய ரெஜிஸ்ட்ரார் போஸ்ட் என்பது கேந்திரமான நிர்வாகப் பதவியாச்சே, அதிலே ஒருவரை நீடிக்கவிட்டால் தனிப்பற்று உருவாகாதா? மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் சொன்ன வாதத்திற்கு உள்ளிட்டுத்தான் நான் பேசுகிறேன். அப்படிப்பட்ட ஒரு கேந்திரமான எக்ஸ்க்யூட்டிவ் போஸ்ட்டிலே ஒருவர் தொடர்ந்து நீடித்துக்கொண்டே இருந்தால் அதிலே வெஸ்டட் இன்டரஸ்ட் ஏற்படாதா? கோடிக்கணக்கான ரூபாய் சம்பந்தப் பட்ட பிரச்சினை. அதிகாரம் சம்பந்தப்பட்ட பிரச்சினை. அந்தப் பதவியிலே நீடித்து இருப்பவர் சிண்டிகேட்டையே ஆட்டிப் படைக்க முடியும் என்பதை பல அனுபவங்களிலே நாம் பார்க்கிறோம். ஆகவே தனிப்பற்று ஏற்படுவதைத் தடுக்க விரும்பக்கூடிய நம்முடைய அரசு இந்த சட்டத்தின் கோட் பாட்டை ஏன் ரிஜிஸ்ட்ரார் பதவிக்குப் பொருத்தவில்லை. இந்த சட்டத்தில் ஏன் பொருத்தவில்லை என்பதற்கு அதற்கு இடம் இருக்கிறதா இல்லையா என்பதை மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் சொல்லட்டும். இல்லை என்றால் நடைமுறையில் அரசாங்கம் தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்துகின்றபோது இந்த கோட்பாட்டை மனதில் வைத்து அதை ஏன் இந்தப் பதவிக்குப் பொருத்தவில்லை, நேர்மையாக எனக்குப் படுவதை ஃப்ராங்காகச் சொல்கிறேன். உங்களுக்கு வேண்டியவர் என்று இருப்பாரேயானால் அதிலே அவருக்கு வெஸ்டட் இன்டரஸ்ட் ஏற்பட்டாலும் நீங்கள் அந்த ரிஜிஸ்ட்ரார் பதவியிலே நீடிக்க அனுமதிக்கிறீர்கள், உங்களுடைய அதிகாரத்தை அதற்குப் பயன் படுத்தி இருக்கிறீர்கள் என்று தான் எனக்குப் பட்டதை ஃப்ராங் காக சொல்லித்தான் ஆகவேண்டும். இல்லை என்றால் அமைச்சர் அவர்கள் அதை மறுக்கட்டும். நவம்பர் மாதம் 10-ஆம் தேதி 1979-ஆம் ஆண்டு இந்தச் சட்டப்பேரவைக் கூட்டத்தில் நான் இந்த காரணங்களை விளக்கிச் சொன்னேன். சென்னைப் பல்கலைக் கழகத்தின் ரிஜிஸ்ட்ரார் பதவி முடியப் போகின்றது.

அரசாங்கத்தின் கையிலே இருக்கின்றது அவரை நீடிக்கவேண்டுமா
வேண்டாமா என்பது. நீடிக்க விடக்கூடாது என்று நான் அந்த
வாதத்தில் சொன்னேன். தவறு ஏற்பட்டிருக்கின்றது என்பதற்
காக உதாரணங்களைச் சுட்டிக்காட்டி பதவியை நீடிக்கக்
கூடாது என்று நான் வாதாடினேன். அப்படி வாதாடுகின்ற
போது அந்த 51-வது பிறந்தநாள் விழாவினைக் கொண்டாடு
கின்றபோது 50 சாவரின் பிரச்சினைகள் எல்லாம் கிளப்பப்
பட்டது. அன்று கல்வியமைச்சர் அவர்கள் பதில் கூறுகின்ற
போது இந்தமாதிரி சட்டப்பிரச்சினை வருகின்றபோது நான்
அதைப் பரிசீலனை செய்கிறேன், விசாரிக்கிறேன் என்று
கூறினார்கள்.

பிறகு மேலவையிலே கூறுகிறபோது அவர்கள் ஒரு சின்ன
சங்கிலியைக் காட்டி இதுதானே அந்தச் சாவரின் என்று கேலி
யாகக் கூறினார்கள். நான் கல்வியமைச்சரிடம் ஒன்று கேட்க
விரும்புகிறேன். தமிழக அரசு ஸ்பெஷல் சி.ஐ.டி. செல் இதைப்
பற்றி விசாரணை நடத்தியது அமைச்சரவர்களுக்குத் தெரியாதா?
அந்த செல் இந்த விஷயத்தைப் பொறுத்தவரை விசாரிக்க
வில்லையா? விசாரித்திருக்கிறது. ரிப்போர்ட்டை சர்க்காருக்கு
சமர்ப்பித்திருக்கிறது. அந்த ரிப்போர்ட்டிலே சர்க்காருடைய
செல் விசாரித்திருக்கக்கூடிய அதிலே தெளிவாக நவம்பர் ஈ/34
ஸ்பெஷல்/79 டேட்டட் 1-6-74. திரு. குமாரசாமி, ஈரோட்டு
கலைக் கல்லூரி 29-5-77 தேதியில் தன்னுடைய 51-வது பிறந்த
நாள் விழாவினைக் கொண்டாடினார். அந்த நிகழ்ச்சியின்போது
ரூபாய் 8 ஆயிரம் மதிப்புடைய 50 ¼ சாவரின்களை அவருக்குப்
பரிசாகக் கொடுத்தார் என்பது தெரிகிறது.

குவார்ட்டர் சாவரிங்ஸ் பரிசாக கொடுத்தார் என்றும் தெரி
கிறது. இது என்குயரியினுடைய ஃபைண்டிங்க்ஸ். கொடுத்த
வர்கள் சென்னை பல்கலைக் கழக டைரக்டரும், பாரத்
எலக்ட்டிரிகல்ஸ் கம்பெனியின் அதிபருமான புருஷோத்தமன்
அவர்கள் தான் என்று சொல்லுகிறார்கள். இதுவும் என்குயரி
ரிப்போர்ட் ஃபைண்டிங்க்ஸ். மேலும் ரொக்கப் பரிசாக 25
ஆயிரம் ரூபாய் வரை பலர் கொடுத்துள்ளார்கள். என்று
என்குயரி ரிப்போர்ட்டே சொல்கிறது. வெஸ்டட் இன்டிரஸ்ட்
டெவலப் ஆகியிருக்கிறது. ஆகவே அதை நீங்கள் எக்ஸ்டெண்ட்
பண்ணக் கூடாது; அந்த யூனிவர்சிட்டிக்கும் மற்ற போஸ்டுகளுக்
கும் அதை பண்ண வேண்டும் என்பதற்காக உதாரணம்
சொன்னேன்.

மேலும் அந்த ரிப்போர்ட்டிலே கடைசியாக குறிப்பிடுவது,
ஜெனரலாக திரு. குமாரசாமி அவர்களுக்கு நல்ல பெயர்
இல்லை என்று எங்கள் விசாரணையில் இருந்து தெரிகிறது.
எதனால்? பல்கலைக் கழகம் கட்டிடம் கட்டும் காண்டிராக்ட
ரிடமிருந்து அவர் கமிஷன் வாங்கினார் என்று தெரிகிறது. இது
என்குயரி ரிப்போர்ட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. போஸ்ட்





கிராஜுவேட் வகுப்பில் அட்மிஷனுக்கு அவர் பணம் வாங்கி
யிருப்பதாக தெரிகிறது. இவைகளெல்லாம் உங்களுடைய
செல்லினுடைய என்குயரி ரிப்போர்ட் முடிவுகள். கமிஷன்
என்றால் லஞ்சம் என்று நம் எல்லோருக்கும் தெரியும். அட்மிஷ
னுக்கு பணம் என்றாலும் லஞ்சம் என்பது நமக்குத் தெரியும்.
ஆகவே, வெஸ்டட் இன்டிரஸ்ட் லஞ்சம் வாங்குகிற அளவுக்கு
இருக்கிறது என்ற உங்களுடைய சி.ஐ.டி. செல் ரிப்போர்ட்
கூறுகிறபோது அந்தப்பதவிக்கு காலம் முடிந்தபிறகும் நீட்டிப்புக்
கொடுப்பது என்பது, "வெஸ்டட் இன்டிரஸ்ட்டை அதாவது
லஞ்சத்தை எதிர்த்துப் போராடுவதற்காகத்தான் நாங்கள் இருக்கி
றோம் என்று நீங்கள் சொல்வதை" பார்த்து மக்கள் இதை
முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறதே என்று கருத மாட்
டார்களா?

இன்னொன்றும் சொல்கிறேன். மெட்ராஸ் யூனிவர்சிட்டியில்
4½ கோடி ரூபாய் டெப்பாசிட் இருக்கிறது. அந்த பிக்சட்
பண்டை சர்க்காருக்கு சொந்தமானதை, நம்முடைய ஸ்டேட்
கோவாப்பிரேட்டிவ் வங்கிகளிலேதானே போட வேண்டும்
ஆனால் நம்முடைய ஸ்டேட் கோவாப்பிரேட்டிவ் வங்கியிடம் 93
லட்சம் தான் போடப்பட்டிருக்கிறது. மீதியுள்ள 3 கோடிக்கு
மேற்பட்ட பணம் தமிழ்நாடு கோவாப்பிரேட்டிவ் வங்கியிலே
போடாமல், தேசியமயமாக்கப்பட்ட, தேசியமயமாக்கப்படாத
வங்கிகளில் போடப்பட்டிருக்கிறது. நமக்கு நன்றாகத் தெரியும்.
தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலும், ஆக்கப்படாத வங்கிகளி
லும் கூட இது மாதிரியான ஒரு ஹியூஜ் அமொண்டுக்கு டிபாசிட்
கிடைக்கும்போது, அந்த பிரைவேட் அக்கவுண்டிலே எழுதி
வாங்குவதற்கு கமிஷன் கொடுக்கிறார்கள் என்பது that is actual
bribery to attract them.— தெரியாது என்று சொல்ல முடியாது—
இல்லையென்றால் நான் சொல்கிறேன் தெரிந்துக் கொள்ளுங்கள்.
அதேமாதிரி அந்த வங்கிகளில் சில கமிஷன்கள் கொடுக்கிறார்கள்.
அந்த சுயநலத்திற்காக இந்தப்பணம் பயன்படுத்தப்படுகிறது
என்று நான் சொல்கிறேன். ஆகவே, இதுமாதிரி டிஸ்பிரப்போர்ஷ
னேட்டாக அந்தப் பதவியில் இருப்பவர்களுக்கு இன்கம், வித்
இன் எ ஷார்ட் பீரியட் ஏராளமாக இருக்கிறது என்பதற்கு
எவிடன்ஸ் இருக்கிறது.

அடுத்து, யூனிவர்சிட்டியின் தேசிய சேவைத் திட்டத்தின் கீழ்
என். எஸ். எஸ். என்று சொல்வார்கள். அந்த திட்டத்தின் கீழ்
1969-1970 லிருந்து, 1978-79 ஆண்டுகள் வரை தணிக்கைப்
பரிசோதனை செய்ய சிண்டிகேட் ஒரு கமிட்டியை நியமித்தார்கள்.
அந்தக் கமிட்டி கணக்குகளைப் பரிசீலனை செய்து என்ன
கூறுகிறது என்றால், "ஆடிட் பேரா 11.5 அண்டு 11.6ல் என்.
எஸ்.எஸ்ஸின் கணக்குகளை முறையாக வைக்க வேண்டியது
அவசியம் என்றும் அது ரிஜஸ்திராரின் பொறுப்பு என்பதும் அரசு
ஆணையில் தெளிவாக இருக்கிறது. என்.எஸ்.எஸ்க்காக அலு
வலகம் தனியாக கணக்கு வைக்கவில்லை என்பது ஒரு சீரியஸ்

லேப்ஸ் ஆகும்'' இது ஆடிட் ரிப்போர்ட். ஆடிட் இந்த முறை கேடுகளை சுட்டிக் காட்டுகிறபோது, அலுவலகமும், குறிப்பாக ரிஜிஸ்திராரும் கோ–ஆர்டினேஷனில் அதிகக் கவனம் செலுத்தி யிருக்க வேண்டும் என்று அந்தக் கமிட்டி கூறுகிறது. அப்பொழுது கவனம் செலுத்தவில்லை என்றுதானே அர்த்தம்?

எதற்குச் சொல்கிறேன் என்றால், அப்படிப்பட்ட கீ-போஸ்ட் இது. ரிஜிஸ்டிரார் அதற்கு தனியாக கணக்கு வைக்கவில்லை. இதில் இரண்டு வித கணக்குகள் இருக்கிறது. யூனிவர்சிட்டியின் பணம் இருக்கிறது. என். எஸ். எஸ்ஸின் பணமும் இருக்கிறது. இவைகளுக்கு தனித்தனியாகக் கணக்கு இருக்க வேண்டும். கணக்குகளை பிரித்து வைக்க வேண்டும் என்று, மத்திய அரசின் உத்தரவு இருக்கிறது, ஆடிட்டின் உத்தரவு இருக்கிறது. சிண்டி கேட்டும் தீர்மானம் போட்டிருக்கிறது. ஆனால் கணக்குகள் பிரிக்கப்படவேயில்லை. ஏனென்றால் அதிலே தான் விஷயம் இருக்கிறது. இரண்டையும் சேர்த்தால் தான், ஆடிட் இதிலே குற்றங்குறைகளை கண்டுபிடிப்பது மிகச் சிரமமாக இருக்கும்.

[பிற்பகல் 1.00]

ஹ்யூஜ் எமௌண்ட், இரண்டு எமௌண்ட், அவற்றை மிக்ஸ் செய்து செல்வு செய்தால் தான் ஆடிட்டருக்கு அதைப் பிரித்துப் பார்த்து கண்டுபிடிப்பதில் கஷ்டம் ஏற்படும். ஆகவே பணத்தை ரெஜிஸ்ட்ரார் இஷ்டப்படி டைவர்ஷன் முடிகிறது. ஆகவே அப்படிப்பட்ட ஸீரியஸ் லாப்ஸஸ் இந்தப் போஸ்டில் இருக்கிறது. ஏராளமான டெலிபோன் பில்ஸ். யார் பண்ணினார்கள், யாருக்குப் பண்ணினார்கள், எப்போது பண்ணினார்கள் என்பவற்றிற்கு கணக்கு இல்லை. என்.எஸ்.எஸ்க்கான கார்களை பல ஆபீஸர்கள் பல கெஸ்ட்களுக்கு என்.எஸ்.எஸ அல்லாத காரியங்களுக்காக உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். இப்போது பெட்ரோல் விலை என்ன? மெயின்டனன்ஸ் சார்ஜஸ் என்ன? அதற்கு கணக்கு இல்லை. இதை அந்தக் கமிட்டி சொல்கிறது.

புத்தகம் வாங்க ரூ. 3000 சாங்க்ஷன் ஆகி ஸப்ஸிக்வன்ட்லி ரூ. 5,000 என்று. திருத்தப்பட்டிருக்கிறது என்று சிண்டிகேட் கமிட்டி பைன்டிங்க். பி. டப்ளியூ. டி. அஸிஸ்டென்ட் எக்ஸிக்யூட் டிவ் என்ஜினியர் ரூ. 23,560 செக் இஷ்யூ செய்தார்களாம். அந்த செக்-க்கு கணக்கு இல்லை. இது கமிட்டியின் பைன்டிங். இவ்வளவும் சிண்டிகேட் அமைத்திருக்கக் கூடிய கமிட்டி பைன்டிங்க்ஸ். அரசாங்கம் டிஸ்மிஸ் செய்யப்பட்டபோது கவர்னர் பட்வாரி அவர்கள் ரெவின்யூ போர்ட் முதல் மெம்பர், நிதி இலாகா காரியதரிசி, கல்வி இலாகா காரியதரிசி இவர்களைக் கொண்ட ஒரு கமிட்டி அந்த அலிகேஷன்ஸ், அந்த போஸ்டில் உள்ளவர்க்கு எதிராக உள்ள அலிகேஷன்ஸை விசாரிக்க ஒரு மூவர் கமிட்டி அமைக்கப்பட்டது. அந்தக் குழு ரிப்போர்ட் சமர்பித்தாகி விட்டது. அதில் தூசு படிந்திருக்கிறது. மக்களுக்கு சந்தேகம் வராதா? என்று கேட்கிறேன். வெஸ்டட் இன்டரஸ்ட் உருவான



ரு நபரின் காலத்தை நீட்டுவதற்கு அரசுக்கு என்ன வெஸ்டட் இன்டரஸ்ட் என்று நான் கேட்கிறேன். இந்த வெஸ்டட் இன்ட ஸ்ட்டுக்கு அந்த வெஸ்டட் இன்டரஸ்டா? அது ராங்க். ன்டிகேட் தப்பில்லை என்று சொல்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களானால், லஞ்ச ஊழல் தவறு அல்ல என்று ன்டிகேட் கூறினால், லஞ்சம் என்றால் லஞ்சம்தான், ஊழல் ன்றால் ஊழல்தான். லஞ்சம் தவறு இல்லை என்று அவர்களால் சொல்ல முடியாது. ஆக, இதில் இருந்து என்ன புரிகிறது ன்றால் சின்டிகேட்டில் இதிலே இந்த மாதிரி லைட் செய்கி றார்கள் என்று அர்த்தம். ஆனால் ஒன்று. இந்தச் சட்டம் வந்த தற்குப் பிறகு அநேகமாக பழைய சின்டிகேட் மெம்பர்கள் காலாவதியாகிவிடுவார்கள். அகவே அந்த சேஞ்ச் வரும். ஒரு பதவியில் நீடிக்கக்கூடாது என்ற இந்தச் சட்டத்தில் அடங்கி யிருக்கக்கூடிய கோட்பாட்டின்படி, சென்னை ரெஜிஸ்ட்ரார் பதவி யில் நிச்சயமாக இந்த குறிப்பிட்ட மதராஸ் ரெஜிஸ்ட்ரார் பதவி யில், இவ்வளவு விஷயங்கள் வெளியே வந்த பிறகு இருக்கக் கூடாது. அவருக்கு சுயநலம் இருக்கலாம். What about your position? அரசாங்கத்தின் நிலை என்னவாகும். ஆகவே அந்த ப்ரின்ஸிபில்படி மட்ராஸ் யூனிவர்ஸிட்டி ரெஜிஸ்ட்ரார் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும். அது மட்டுமல்ல. வந்திருக்கிற ஏராளமான சார்ஜஸ் பேரில் அவர் பேரில் சார்ஜ் ஷீட் கொடுக்க வேண்டும். க்ரிமினல் ப்ரொஸீடிங்க்ஸ்க்கான விஷயங்களில் அவர்கள் பேரில் க்ரிமினல் ப்ரொஸீடிங்க்ஸ் போட வேண்டும். அரசு சட்டப்படி ப்ரொபஸர் படிப்புடையவர்கள் தான் ரெஜிஸ்ட்ராராக இருக்க வேண்டும் என்ற அந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் ரெஜிஸ்ட்ராரை நியமிக்க வேண்டும். அந்த முறையில் இந்த ப்ரின்ஸிபிளே அப்ளை செய்ய வேண்டும். இந்தச் சட்டத்தை சென்னைக்கு அப்ளை செய்வதை வரவேற்கிறோம். எலக்டிவாக ஆறு ஆண்டுகள் இருந்துவிட்டு நாமினேஷன் போஸ்ட்டுக்கு வரலாம் என்ற ப்ரொவிஷன் இருக்கிறதா என்று தெரியவில்லை. அப்படியிருந்தால் அது தப்பு. அந்த முறையில் இந்தச் சட்ட முன்வடிவை முழு மனதோடு வரவேற்கிறோம்.

திரு. ப. நெடுமாறன் : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக் கழகங் களிலும் உள்ள ஆட்சிக் குழு, அதிகார மன்றம், ஆலோசனைக் குழு போன்ற அதிகார மன்றங்களில் உறுப்பினர் பதவி வகிப்ப வர்கள் இரண்டு முறைக்கு மேல் அதாவது ஆறு ஆண்டுகளுக்கு மேலாக நீடிக்கக் கூடாது என்பதற்காக பல்கலைக் கழகச் சட்டங் களுக்கு அரசாங்கம் கொண்டு வந்திருக்கிற திருத்தத்திற்கு எங்க ளுடைய இயக்கத்தின் ஆதரவை நான் முழு மனதாகத் தெரி வித்துக் கொள்கிறேன்.

ஏற்கனவே மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு இப்படிப்பட்ட ஒரு சட்டம் கொண்டு வரப்பட்ட நேரத்தில் நாங்கள் அன்றைக்கே வற்புறுத்தினோம். இந்தப் பல்கலைக் கழகத்தோடு இந்த அரசாங்கம் நிற்கக்கூடாது. தமிழ்நாட்டில் உள்ள எல்லாப்

பல்கலைக் கழகங்களுக்கும் இத்தகைய சட்டத்திருத்தம் அவசியம்
என்றும் உடனடியாக கொண்டு வரவேண்டும் என்றும் நாங்கள்
வற்புறுத்தியதை இந்த அரசு ஏற்றுக்கொண்டு இந்தத் திருத்தங்
களைக் கொண்டு வந்திருப்பதற்காக எனது இதயபூர்வமான
நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது ஏதோ அரசியல் கட்சிகளின் கோரிக்கைகளாக மட்டு
மல்லாமல், பல்கலைக் கழகங்களிலே நீண்ட நெடுங்காலமாக
பணியாற்றி வருகின்ற ஆசிரியர்கள் இந்த கோரிக்கைகளை முன்
வைத்து போராடி வந்திருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கை
களை இப்போதுதான் நிறைவேற்றுவதற்கான ஒரு வாய்ப்பு
வந்திருக்கிறது. ஆனால், என்ன காரணத்தினாலோ இந்த நல்ல
திருத்தத்தை எதிர்த்து சிலர் இங்கே பேசியிருப்பதைக் கண்டு
நான் வருத்தம் அடைகிறேன்.

பல்கலைக் கழகங்களிலே 6 ஆண்டுகளுக்கு மேல் யாரும் பதவி
வகிக்கக் கூடாது என்று சொல்வதன் மூலம், தேர்ந்தெடுக்கப்
படுகின்ற உரிமை பறிக்கப்படுவதாக மாண்புமிகு உறுப்பினர்
மதிப்பிற்குரிய துரைமுருகன் அவர்கள் இங்கே சுட்டிக் காட்டி
னார்கள். இது அவ்வளவு சத்தான வாதமல்ல என்பதை நான்
அவர்களுக்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பல்கலைக்கழக
துணைவேந்தர்கள் இரண்டு முறைகளுக்கு மேலும் அதாவது 6
ஆண்டுகளுக்கு மேலும் துணைவேந்தர்களாக பதவி வகிக்கக்
கூடாது என்ற சட்ட திருத்தம் பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே
தமிழகத்திலே அமுலுக்கு வந்தவிட்ட ஒரு நிலையில், பல்கலைக்
கழகங்களிலே துணை வேந்தர்கள் 6 ஆண்டுகளுக்கு மேலே பதவி
வகிக்கக்கூடாது என்று சொல்லிவிட்ட பின்னாலே, அவர்களுக்கு
கீழே இயங்குகின்ற ஆலோசனைக்குழு, ஆட்சிக்குழு, மற்ற
அமைப்புகள் 6 ஆண்டுகளுக்கு மேல் நீடித்திருக்குமானால்,
பல்கலைக்கழக துணைவேந்தர்களை ஆட்டிப் படைக்கும் நிலைமை
ஏற்படும் என்ற வாதத்திற்கு அவர்கள் தரப்பிலே இருந்து
சரியான பதில் சொல்லப்படவில்லை என்பதை நான் சுட்டிக்
காட்ட விரும்புகிறேன்.

மதிப்பிற்குரிய துரைமுருகன் அவர்கள் பேசும்போது, இங்கே
இன்னொன்றையும் சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள்
அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரண்டு முறைகளுக்கு
மேலே பதவி வகிக்கக் கூடாது என்று சொல்லத் தயாரா என்று
கேட்டார். அது வேறு; இது வேறு. சட்டமன்ற உறுப்பினர்கள்,
நாடாளுமன்ற உறுப்பினர்கள் வயது வந்த அனைவருக்கும்,
ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும், 21 வயதான
வர்களுக்கு ஓட்டுரிமை அளிக்கப்பட்டு, அந்த அடிப்படையிலே
அவர்கள் வாக்குகளைப் பெற்று பிரதிநிதிகள் சட்டமன்றத்திற்கு
வருகிறார்கள்; நாடாளுமன்றத்திற்கு வருகிறார்கள். ஆனால்,
பல்கலைக்கழக ஆலோசனைக் குழு, செனட் ஆகியவற்றிற்கு நடை
பெறுகின்ற தேர்தலும், சட்டமன்றத் தேர்தலும் ஒன்றல்ல.



செனட் வாக்காளர்கள்
அடிப்படையிலே வேறுபாடு இருக்கிறது. தங்கள் பெயர்களை
யார்? யார் 5 ரூபாய் கட்டி, அந்த பட்டதாரிகளே
பதிவு செய்து கொள்ளுகிறார்களோ, பெறுகிறார்கள். அந்த
செனட் தேர்தலுக்கு ஓட்டுரிமை பதிவு செய்து
வாக்காளர் பட்டியலிலே எல்லோரும் தேர்தலில்
கொள்ளப் போவதில்லை. யாருக்கு செனட் அவர்கள் 10,000
நிற்க வேண்டுமென்ற ஆர்வம் இருக்கிறதோ, ஆளுக்கு 5 ரூபாய்களைக் கட்டி,
ரூபாய் செலவழிப்பார்களானால், பட்டியலிலே சேர்த்து
2,000 பேர்களை செனட் வாக்காளர் சேர்க்கப்படும் வாக்
விட முடியும். அப்படி 5 ரூபாய் கட்டி பெயர்களை வாக்காளர்
காளர்கள் தார்மீக ரீதியாக தங்கள் வேண்டும் என்ற
பட்டியலிலே சேர்த்தவர்களுக்கு ஓட்டுப் போட அவர்கள் இங்கே
நிலை வருமே தவிர, மாண்புமிகு உறுப்பினர் படித்த பட்ட
சுட்டிக் காட்டியதுபோல், அவர்கள் எல்லாம் சொல்லுகின்ற
தாரிகள், அவர்கள் விவரம் அறிந்தவர்கள் என்று பணிவோடு
வாதம், இதற்குச் சரியாக வராது என்பதை நான் போதும்,
சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பணமிருந்தால் 5 ரூபாய்
யாருக்கு வசதி இருக்கிறதோ, அவர்கள் சேர்த்து,
கட்டி ஏராளமான பேர்களை வாக்காளர் பட்டியலிலே பெற்று,
அந்த வகைகளிலே ஆர்கனைஸ்டாக ஓட்டுக்களைப் விடுகின்ற
அவர்கள் செனட்டிற்கும், சிண்டிகேட்டிற்கும் வந்து வகையிலே
சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தடுத்து நிறுத்தும்
இந்தச் சட்டத் திருத்தம் வந்திருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள்
அது மட்டுமல்ல. இந்த வாக்காளர் பட்டியலிலே,
சுட்டிக் காட்டினார்கள். செய்வதற்கு சிண்டிகேட்டிலே
தேர்தலிலே தில்லுமுல்லுகள் அமைப்பிலே நீண்டகாலமாக
அல்லது இப்படிப்பட்ட அதிகார சொன்னார்கள். இதைப்
இருப்பவர்களால் முடிகின்றது என்று சொன்னேன்; இப்போதும்,
பற்றி நானும் சென்ற தடவையும் பல்கலைக்கழகத்திற்கு
இன்றைக்கும் சொல்கிறேன். மதுரைப் அந்த வாக்காளர்
செனட்டிற்கு தேர்தல் நடைபெற்றபோது, நீக்கப்பட்டிருக்கிறது.
பட்டியலிலே என்னுடைய பெயர் அடித்து, அந்த வாக்
சட்டமன்ற உறுப்பினராகிய என்னுடைய பெயரே, நீக்கப்பட்டிருக்கிறதென்றால்,
காளர் பட்டியலிலே இருந்து
அப்படி அகற்றியவர்கள் யார்?

(பிற்பகல் 1.10)

தங்களுக்கு வேண்டாதவர்கள், தங்களுக்கு ஓட்டளிக்க
மாட்டார்கள் என்று கருதக்கூடியவர்களின் பெயர்களை
அகற்றிவிட வாய்ப்பும் வசதியும் இருக்கிறது. இதை எதிர்த்து
அங்கே எதுவும் செய்ய முடியாத நிலைமை இருந்து கொண்டி
ருக்கிறது. ஆக, இந்தத் தேர்தலை சட்டமன்றத் தேர்தலோடு
ஒப்பிட முடியாது. எந்த வகையிலும் அது பொருத்தமானது
அல்ல. இது வேறு, அது வேறு. ஆகையால் அந்த வாதம்
சரியானது அல்ல என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன். இப்போது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் செனட் வாக்காளர் பட்டியலில் அவருடைய பெயர் எடுக்கப்பட்டு விட்டதாகச் சொல்லி குறைபட்டுக் கொண்டார்கள். அப்படியானால் ஏற்கனவே மாநகராட்சி தேர்தல் நடைபெற்றபோது அந்த ஊரைச் சார்ந்த முக்கியமான பெயர் விடுபட்டுப் போயிருந்தது. ஆகவே, இந்த பில் ஓட்டர் லிஸ்ட் பற்றியது அல்ல. இங்கும் தவறு நடந்திருக்கிறது. அங்கும் தவறு நடந்திருக்கிறது.

திரு. ப. நெடுமாறன். மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் சட்டம் பயின்றவர், வழக்கறிஞர். சட்ட மன்றத் தேர்தல் வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கப்படுமானால். வேறு வகையான தவறுகள் நடைபெறுமானால் அரசுக்குப் புகார் செய்து பிரயோசனம் இல்லை. தேர்தல் குழு இருக்கிறது, ஆணையாளர் இருக்கிறார். ஆனால் பல்கலைக்கழக வாக்காளர் பட்டியலில் யார் தில்லுமுல்லுகளைச் செய்கிறார் களோ அந்த ஆட்சிக் குழுவிடந்தான் நாம் மனுச் செய்ய வேண்டியிருக்கிறது, என்னுடைய பெயர் நீக்கப்பட்டது. ஏற்கனவே ஓட்டுப் போட்டவன் நான். மீண்டும் ரினியூ பண்ண ஐந்து ரூபாய் கட்டி விண்ணப்ப பாரத்தைப் பூர்த்தி செய்து யூனிவர்சிடிக்குக் கொடுத்தேன். ஏறத்தாழ மூவாயிரம் மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு எந்தக் சாரணமும் சொல்லப்படவில்லை என்பதையும் இந்த அவையின் கவனத்திற்கு வைக்க விரும்புகிறேன்.

இன்னொன்றையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்தச் சட்டத் திருத்தமானது தமிழகத்திலுள்ள எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் அமலுக்கு வருவதன் மூலம், முன்னால் பேசிய நண்பர்கள் சுட்டிக்காட்டியது போன்று பல்வேறு பல்கலைக் கழகங்களில் பல்லாண்டுக் காலமாக நடைபெற்று வருகிற ஊழல் களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், ஊழல் பேர்வழிகள் மீண்டும் பல்கலைக் கழக அமைப்புகளில் வந்து விடாமல் தடுக்கவும் இந்தத் திருத்தம் உதவியாக இருக்குமென்ற காரணத்தால் முழு மூச்சாக வரவேற்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

இதிலே அலுவல் காரணமாக இரண்டு முறைக்கு மேல் நியமனமாவது எப்படிச் சரியாகும் என்ற கேள்வி எழுப்பப் பட்டது. பல்கலைக் கழகத்தில் ஒரு துறையில் பேராசிரியராக இருப்பவர்கள் அலுவல் காரணமாக இந்த அமைப்புகளில் இடம் பெறுகிறார்கள். அவர்களையும், கல்வித் துறைக்கு வெளியே இருப்பவர்கள் இந்தக் குழுவுக்குள் வருவதையும் ஒப்பிட்டுப் பார்ப் பது மிகத் தவறாகும். முழுக்க முழுக்க பல்கலைக் கழக அதிகார அமைப்புகளிலே கூடுமான வரை கல்வித் துறையிலே ஈடுபட்டி ருப்பவர்கள் அல்லது அந்தத் துறைக்குத் தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டிருப்பவர்கள் வேறு துறையிலே வேறு





காரியங்களிலே ஈடுபடாதவர்கள் இவற்றில் இடம் பெறுவதன் மூலந்தான் பல்கலைக் கழகத்தில் கல்விப் பணி என்பது சீராக, அலுவல் செம்மையாக நடைபெறமுடியும். அந்த வகையில் காரணமாக இந்தக் குழுக்களில் இடம் பெறுபவர்கள் இரண்டு முறைக்கு மேல் நீடிக்கக்கூடாது என்று சொல்லுவது சீரான கல்விப் பணிக்கு உகந்ததாக இருக்காது. அதை அமைச்சர் அவர்கள் ஏற்கக் கூடாது என்று இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மொத்தத்திலே தமிழகத்திலே உள்ள சகல பல்கலைக் கழகங்களுக்கும் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருப்பதற்காக நான் இதை வரவேற்று என்னுடைய உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு ஐந்து மசோதாக் கள் எடுத்துக்கொள்ளப்படவேண்டும், ஆனால் இதுவரையில் மணி $1\frac{1}{4}$ ஆகிறது —3 மசோதாக்கள்தான் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன, ஆகவே இன்றைக்கு மாலை வைத்துக்கொள்ள லாமா?

திரு. என். சங்கரய்யா: மாலையில் முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடியாது என்றால் எப்படி மசோதாக்களை முடிக்கமுடியும்? மசோதாவின் மீது பேசுவதற்கு நேரம் வேண்டுமானால் மாலையில் வாருங்கள். இப்போதே முடித்து விடுவோம் என்றால் அதற்கு ஒத்துழையுங்கள். நாளைக்கு 6 மசோதாக்கள் வர இருக்கின்றன. இன்றைக்கு எடுத்துக் கொண்டிருக்கின்ற 5 மசோதாக்களையும் முடித்தாக வேண்டும்.

திரு. என். சங்கரய்யா: அலுவல் ஆய்வுக் குழுவிலே அதற்காகத் தான் 18 ஆம் தேதி மாலை சபை கூடவேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அன்று மாலை ஒதுக்கப் பட்டிருப்பது மின்சாரத் துறைபற்றி விவாதிப்பதற்காக, இதற் கல்ல; சீக்கிரமாக முடித்துக்கொள்ளவதென்றால் முடித்துக் கொள்ளலாம்.

திரு. என். சங்கரய்யா: நாளை என்ன செய்யலாம் என்று நாளைக்கு இருக்கின்ற நிலைமையை வைத்துப் பார்க்கலாம். அடுத்த கடைசி நேரம் வரையில் முடிக்கமுடியவில்லை என்றால் செஷனுக்கு மீதி இருக்கின்றவற்றை ஒத்திவைக்க வேண்டியது தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த மசோதாக்கள் எல்லாம் இந்தக் கூட்டத்திலே எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன.

திரு. துரைமுருகன்: அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவு எடுத்தபடி நடத்தப்படவில்லை....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அலுவல் ஆய்வுக்குழுவிலே நீங்கள் உறுப்பினர் இல்லை. ஆகவே தங்களுக்குத் தெரியாது. அங்கே எடுத்த முடிவுப்படிதான் நடத்தப்படுகிறது. இன்று மாலை வைத்துக்கொள்ளலாமா அல்லது நாளை மாலை வைத்துக்கொள்ளலாமா?

திரு. என். சங்கரய்யா: அதைப்பற்றி நாளைக்கு முடிவு செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் மசோதாக்கள் இருக்கின்றன. தாங்கள் வரவில்லையென்றாலும் உறுப்பினர்களை வரச் சொல்லுங்கள். தாங்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும்.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் மீது நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே கருத்துக்களை வைக்க விரும்புகிறேன். இந்த மசோதாவின் நோக்கத்தைப் பற்றி Object and Reasons இல் "To give equal opportunity for all persons" என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப் பார்க்கிறபோது மேல் எழுந்தவாரியாக ஏதோ இந்த மசோதா தூய எண்ணத்தோடு கொண்டுவரப்பட்டது என்றுதான் தோன்றும். பல்கலைக் கழகங்களிலே பல்வேறு பிரச்சினைகள் இருந்தபோதிலும் உதாரணமாக அண்ணாமலை பல்கலைக் கழகத்திலே டீச்சிங் ஸ்டாஃப், நான் டீச்சிங் ஸ்டாஃப் நூற்றுக்கணக்கானவர்கள் 10, 15 ஆண்டுக் காலம் வேலை செய்தும்கூட நிரந்தரமாக்கப்படவில்லை என்பது போன்ற கோரிக்கைகளை அவர்கள் வைத்துப் போராட்டம் நடத்தி சிறை சென்றார்கள், அமைச்சர் அதைப்பற்றி பேசியிருக்கிறார்கள்—அதைப்பற்றி எல்லாம் அக்கறை எடுத்துக்கொள்ளாமல், அதற்குப் பதிலாக அண்ணாமலை பல்கலைக் கழகத்திலே அவர்கள் இரண்டு டெர்ம் இருந்தால் போதும், மெட்ராஸ் யுனிவர்சிடியிலே அவர்கள் இரண்டு டெர்ம் இருந்தால் போதும், பேரறிஞர் அண்ணா பல்கலைக் கழகத்திலே இரண்டு டெர்ம் இருந்தால் போதும், என்று சொல்லப்படுகிறது. ஆனால் இந்தக் கொள்கை மீதுள்ள அத்தனை துறைகளுக்கும் கடைபிடிக்கப்படுமா? அரசு அனைத்துத் துறைகளுக்கும் இந்த முறையைக் கையாள விரும்புகிறதா என்று கேட்க விரும்புகிறேன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தத் துறையைப்பற்றிச் சொல்லுங்கள். அனைத்துத் துறைகளுக்கும் போகவேண்டாம்.

திரு. அ. ரகுமான்கான்: தங்கள் துறையைப்பற்றிச் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என் துறையைப்பற்றிச் சொல்லலாம், அதற்கு நேரம் இருக்கிறது. தற்போது அவையின் முன் உள்ள துறையைப்பற்றி மட்டும் உறுப்பினர் பேச வேண்டும்.



திரு. ப. பொன்னுரங்கம்: முதலிலே மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு கொண்டுவரப்பட்டது. அனைவருக்கும் வாய்ப்புத் தரவேண்டுமென்பதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அனைத்து மதங்களைச் சேர்ந்தவர்களுக்கும், கிறித்துவராக இருந்தாலும் சரி, முஸ்லீமாக இருந்தாலும் சரி, இந்து அரிசனாக இருந்தாலும் சரி, பிராமினாக இருந்தாலும் சரி, நல்ல நோக்கத்திலே காங்கிரஸ் ஆட்சியிலும், கழக ஆட்சியிலும் ஆண்டுக்கொருவர் மேயராக வரவேண்டுமென்ற முறை இருந்தது.

(பிற்பகல் 1.20)

அது மதுரை முனிசிபாலிட்டியாக இருந்தபொழுது, கார்ப்பரேஷனாக வருவதற்கு முன்பு மெட்ராஸ் கார்ப்பரேஷனிலே இருந்தது. எல்லோருக்கும் ஆப்பர்சுனட்டி கொடுப்பதாகச் சொல்லப்படுகின்ற இந்த ஆட்சியிலே அதை மட்டும் ஏனோ செய்யாமல் அதற்கான ஆப்பர்சுனிட்டியைக் குறைக்கிறீர்கள். வாய்ப்பைக் குறைக்கிறீர்கள். அதே மதுரையில் வேண்டுமென்பதற்காக, வேண்டியவர்களுக்குப் பதவி கொடுத்து வேண்டியவர்களுக்குக் கொடுக்க அவர்களைக் கன்வின்ஸ் செய்ய வேண்டுமென்பதற்காக, செய்தீர்கள். ஆனால் எந்த இடத்திலே உங்களுக்கு ஞாகபம் ஏற்பட்டது என்றால் யூனிவர்சிட்டிக்கு என்று வருகின்றபொழுது அங்கே பழனிவேல்ராஜன் காத்துக்கொண்டிருக்கிறார்; அவரைப்பார்த்தவுடனே ஏனோ தெரியவில்லை, இந்த ஆட்சியாளர்களுக்கு என்ன ஏற்பட்டதோ தெரியவில்லை; அவரை இந்த மனத்தில் வைத்துக்கொண்டு, இப்படிப்பட்ட மசோதா முன்பே கொண்டு வரப்பட்டது; அது மதுரை யூனிவர்சிட்டியைப் பொறுத்தவரைக்கும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆனால் நாங்கள் அப்பொழுதே அதை முதல் கோணல் என்று சுட்டிக் காட்டினோம். அந்த முதல் கோணல் இப்பொழுது முற்றும் கோணலாக ஆகிக்கொண்டிருக்கிறது. அவ்வாறின்றி இந்த அரசு தூய நோக்கத்தோடு இந்த மசோதாவைக் கொண்டு வந்திருந்தால் அனைவருடைய ஆதரவையும் பெற்றிருக்கும்; ஆனால் காழ்ப்புணர்ச்சியுடன் கொண்டு வந்து, அதற்கு நியாயம் கற்பிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் மெட்ராஸ் யூனிவர்சிட்டிக்கும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கும், பேரறிஞர் அண்ணா யூனிவர்சிட்டி ஆப் டெக்னாலஜிக்கும் கொண்டு வரப்படுகிறதே தவிர வேறல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் ஒரு கருத்தைச் சொன்னார். சிண்டிகேட் உறுப்பினராக வர வேண்டுமென்பதற்காக ஐந்து ரூபாய் கட்டி வசதி மிக்கவர்கள் உறுப்பினர்களாக்கிக்கொள்கிறார்கள்; பதிவு செய்து கொள்கிறார்கள் என்ற கருத்தைச் சொன்னார்கள். என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமேயானால்-டாக்டர் ஹண்டே அவர்கள் கோபித்துக் [illegible] கூடாது-மேலவைக்கு வரவேண்டுமென்பதற்காக அவர்

முன்னாலேயே வேலை செய்து, வாக்காளர்களைப் பதிவு
செய்தார் என்று நானே வாக்குக் கேட்கச் சென்றபொழுது ஒரு
வாக்காளர் என்னிடத்திலே சொன்னார். மதிப்புமிக்க ஹண்டே
அவர்கள் என்னை உறுப்பினராக்கியதன் காரணமாக அவருக்குத்
தான் நான் ஓட்டுப்போடுவேன் என்றும் அவர் சொன்னார்.
ஜெயிக்க வேண்டுமென்று நினைக்கின்ற யாரும் அந்த முயற்சியில்
தான் ஈடுபடுவார்கள். எனவே, இது ஒரு காரணமாகுமா என்று
தான் நான் கேட்கவிரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த மசோதாவைப்
பொறுத்தவரையில் இரண்டு டெர்ம்களுக்கு மேல் இருக்கலாமா,
இருக்கக் கூடாதா என்பது பற்றியதுதான். இருக்கலாம்
என்றால் இருக்கலாம் என்று சொல்லுங்கள், இல்லை, வேண்டா
மென்று நினைத்தால் வேண்டாம் என்று சொல்லுங்கள்.
இதிலே வேறு என்ன பிரச்னை இருக்கிறது?

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவரவர்களே; நாங்கள் அதற்கு
எங்களுடைய டிஸ்—அப்ருவலைக் கொடுத்திருக்கிறோம்.
மதுரை யூனிவர்சிட்டியைப் பொறுத்தவரைக்கும் முதலில் தவறு
செய்தார்கள். மீண்டும் அந்தத் தவறை மெட்ராஸ் யூனிவர்
சிட்டி, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், பேரறிஞர் அண்ணா
யூனிவர்சிட்டி ஆப் டெக்னாலஜி ஆகியவற்றைப் பொறுத்த
வரையிலும் தொடர்ந்து செய்கிறார்கள். ஆகவே, இது முதல்
கோணல் முற்றும் கோணல் என்ற வகையில் ஆகியிருக்கிறது
என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதுதானே
தவிர வேறல்ல. ஆகவே, காழ்ப்புணர்ச்சியுடன் கொண்டுவரப்
பட்டிருக்கின்ற இந்த மசோதாவை அமைச்சரவர்கள் தயவு
செய்து வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று கேட்டு முடிக்
கின்ற நேரத்தில், உங்களுக்கு எப்படி இந்த ஞானோதயம்
வந்தது என்றால், இந்தியாவில் மட்டும் அல்ல; நம்முடைய
மாநிலத்திலேயும் பிரஸ் செய்து சொல்லுகின்ற பாலிசி என்ன
வென்றால் இரண்டுக்கு மேல் கூடாது என்று குடும்பக் கட்டுப்
பாட்டுக்காகச் சொல்வோம், அதேமுறையில் இரண்டுக்குமேல்
வேண்டாமென்று யூனிவர்சிட்டியிலும் வைக்கிறீர்கள் என்று கூறி
முடிக்கிறேன்.

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்
களே, மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்
கின்ற இந்தத் திருத்த மசோதாவை இந்தியக் கம்யூனிஸ்ட்
கட்சியின் சார்பில் வரவேற்கிறேன். அப்படி வரவேற்கின்ற
அதேநேரத்தில் இன்றைக்கு மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்
திற்குக் கொண்டு வந்ததைப் போன்று சிண்டிகேட், செனட்
போன்ற அரங்குகளுக்கு ஒருவர் இரண்டு முறைகளுக்கு மேல்
தேர்வு செய்யப்படக் கூடாது, நியமிக்கப்படக் கூடாது என்ற
இந்தத் திருத்தத்தின் மீது எனக்கு முன்னால் பேசிய பல
மாண்புமிகு உறுப்பினர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தில்



டக்கும் தவறுகளை—அங்கே ரெஜிஸ்ட்ராராக இருக்கின்றவர்
செய்யக்கூடிய தவறுகளைப் பற்றிச் சொன்னார்கள். இந்த
மன்றத்தில அவ்வாறு மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னது
மட்டுமல்ல; நாம் எந்த நோக்கத்தோடு திருத்தங்களை கொண்டு
வந்து, பல்கலைக் கழகங்களுக்குப் பல கோடிக்கணக்கான
ரூபாய்களைச் செலவு செய்து, இந்த நாட்டிலே படிக்கின்ற
மாணவர்கள் நல்லமுறையில் இருப்பதற்காக இந்த
மாற்றங்களைக் கொண்டு வருகிறோம் என்று சொல்லும்
நேரத்தில், சென்னைப் பல்கலைக் கழகத்தில் நடைபெறுகின்ற
நிகழ்ச்சிகளைப்பற்றிச் சொல்லாமல் இருக்க முடியவில்லை.
சென்னைப் பல்கலைக் கழகத்தில் நடத்தப்படும் தேர்வுகளுக்
கான முடிவுகள்கூட குறிப்பிட்ட காலத்தில் வருவதில்லை
என்று மாண்புமிகு அமைச்சரவர்களேகூட ஒரு விழாவிலே
குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால்,
அங்கேயிருக்கின்ற ஒரு அலுவலர் சங்கம் கூட முறைகேடாக
நடைபெறுகின்றது; அந்த அலுவலர் சங்கத்திற்குக் கடந்த ஆறு
ஆண்டுக்காலமாகத் தேர்தல் நடைபெறவேயில்லை. என்ன
காரணம் என்று பார்த்தால், அங்கேயிருக்கக்கூடிய பதிவாளர்
தனக்கு வேண்டிய ஆட்கள் அதிலே அதிகாரத்திலும், பொறுப்பி
லும் இருக்கிறார்கள், அவர்களை வைத்துக்கொண்டு தவறுகளைச்
செய்ய இப்படிப்பட்ட நிலைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்.

அதுமட்டுமல்ல; பல இலட்சக்கணக்கானவர் தேர்வு எழுது
கின்ற ஹையர் செகன்டரி, எஸ். எஸ். எல். சி. போன்ற தேர்வு
களுக்குக்கூட குறிப்பிட்ட காலத்தில் தேர்வு முடிவுகள் வந்து
விடுகின்றன. ஆனால் சில ஆயிரம் பேர்கள் தேர்வு எழுதக்
கூடிய பல்கலைக் கழகத் தேர்வுகளுக்கான முடிவுகள் வருவதில்
காலதாமதம் ஆவதற்குக் காரணம் இப்படிப்பட்ட ரிஜிஸ்தார்
இருப்பதுதான் என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமல்லாமல், அந்தப் பதிவாளரைப் பொறுத்தமட்டில்
அவர் ஏற்கனவே, நம்முடைய பல்கலைக் கழகச் சட்டதிட்ட
விதிமுறைகளுக்குப் புறம்பான முறையில், அவர் ஒரு பேராசிரி
யராக இல்லாமல், சாதாரண ஒருவராக அந்தப் பதவிக்கு
நியமனம் செய்யப்பட்டிருக்கிறார் என்ற தகவல் இங்கே
வந்திருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்டவர்கள் தொடர்ந்து
அதிகாரத்திலே இருக்கிற காரணத்தினாலதான், பொறுப்பிலே
இருக்கிற காரணத்தினால்தான், இப்படிப்பட்ட தவறுகள் நடை
பெறுகின்றன என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட
பொறுப்புள்ள பதவிக்கு, தவறுகள் நிகழ்த்தக்கூடியவர்கள்
பொறுப்பாளராக இருக்கிறார்கள். குறிப்பாக, அந்த நிர்வாகப்
பொறுப்புக்கு, இன்றைக்கு நிதிப் பொறுப்பும்கூட அந்தப் ப
[illegible]ரர் கையிலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இப்படிப்
[illegible]ட பெரிய பொறுப்புகளை வகிக்கக்கூடியவர்களுக்கும் இந்தக்
[illegible]ட்டுப்பாடு வர வேண்டுமென்று நான் இந்திய கம்யூனிஸ்ட்
[illegible]யின் சார்பாகக் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல், இன்றைக்கு பல்கலைக் கழகங்களெல்லாம் ஜனநாயக முறைப்படுத்தப்படவேண்டும்; அதனுடைய ஆட்சிமுறைகள் செம்மையாக நடைபெற வேண்டுமென்று கேட்கின்ற நாம், அந்த ஆட்சிமன்றக் குழுவில், சிண்டிகேட்டில் மாணவர்களுக்கும் அதே போன்று அங்கேயிருக்கிற பல்கலைக் கழக பேராசிரியர்கள் சங்கத்திற்கும் ஒரு பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மசோதாவை ஆதரித்து முடித்துக்கொள்கிறேன்.

*திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை நான் ஒருபக்கம் வரவேற்றாலும், மறுபக்கத்திலே அதற்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டியிருக்கிறது. காரணம், நீங்கள் கொண்டு வருவது, அனைத்து அரசியல்வாதிகளுக்கோ அல்லது தனிப்பட்டவர்களுக்கோ என்ற நிலைமை இருக்கிறது. அதிகாரிகளாக இருப்பவர்கள், அதுவும் குறிப்பாக, ரிஜிஸ்திரரர் என்பவரிடம் எவ்வளவு குறைபாடுகள் இருக்கின்றன என்பதை 1979 ஆம் ஆண்டு முதல் சொல்லிவந்தாலும்கூட, பல கல்லூரிகளில், பல யூனிவர்சிட்டிகளில் அவர்களே தொடர்ந்து நிர்வாகத்தில் இருக்கிற நிலைமையை, முதலமைச்சருடைய ஸ்பெஷல் செல் மூலமாகத் தெரிவித்தும் இந்த அவல நிலை தொடர்ந்து வருவதற்கு நீங்கள் இடம் கொடுப்பீர்களானால், நீங்கள் நான்—அஃபிஷியலாக இருப்பவர்களை மட்டும் சொல்லி, அஃபிஷியலாக இருப்பவர்களை, முக்கியமாக, தவறுகள் நடக்கின்ற இடங்களுக்கு நீங்கள் ஆதரவாக இருந்தீர்கள் என்ற அவல நிலையை, அவப் பெயரை அடையக் கூடாது என்பதாலேயே அரசாங்கத்திற்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதை நான் வரவேற்கின்ற அதே சமயத்தில், இப்படித் தவறு செய்கின்றவர்கள் நீடித்து, அதிகாரத்தில், அதிலும் முக்கியமான பொறுப்புகளில் இருப்பார்களானால், நிச்சயமாகத் தொடர்ந்து தவறுகள் வரும். குறிப்பாக, ஒரு உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே பி.ஏ., பி.எஸ்.ஸி. மாணவர்கள், குறிப்பாக, தாழ்த்தப்பட்ட மக்கள், பின்தங்கிய மக்கள், மலைவாழ் மக்கள், கிட்டத்தட்ட 300 மாணவர்கள் இந்த ஆண்டு பாதிக்கப்படும் அவல நிலை ஏற்பட்டிருப்பது, நம்முடைய அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். இது சம்பந்தமாக நான் முதலமைச்சரிடம் சொன்னேன், கல்வி அமைச்சரிடம் சொன்னேன், அரசாங்கத்தில் தொடர்புடைய அதிகாரிகளிடம் சொன்னேன், நிர்வாகத்தில் உள்ளவர்களிடம் சொன்னேன். அது மட்டுமல்ல; இந்த மாமன்றத்தில் உறுப்பினராக இருந்தவரும், தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கல்விக் கண்ணைத் திறந்தவருமான சுவாமி சகஜானந்தா டிரஸ்ட் 80 ஏக்கர் நிலத்தைத் தர்மமாகக் கொடுக்கிறோம், அதற்கு வேண்டிய பணத்தைக் கொடுக்கிறோம், ஒன்று அரசாங்கம் அமைக்கட்டும் அல்லது எங்களுக்கு உத்தரவு கொடுங்கள் என்று நந்தனார் கல்விக் கழகம் அரசாங்கத்திற்குக் கோரிக்கை மனு அனுப்பியும் ஒன்றும் செய்யவில்லை. ஏழை, எளிய பின்தங்கிய



மக்கள், ஆதிதிராவிடமக்கள், மலைவாழ்மக்கள் பி.ஏ., பி.எஸ்.ஸி. வகுப்புகளில் சேரமுடியாத அவல நிலையில் இருக்கிறார்கள். அமைச்சரவர்களுக்கு நல்லது செய்ய வேண்டுமென்ற நல்லெண்ணம் நிச்சயமாக இருக்கிறது. என்ன காரணத்தினாலோ, அல்லது என்ன வெஸ்டட் இன்டரஸ்ட்டாலோ அது கைவிடப்பட்டது என்று புரியவில்லை. குறிப்பாக, என்ன சொல்கிறேன் என்றால், ஏழை எளிய மாணவர்களுக்கு நல்லது செய்ய வேண்டுமென்று எண்ணி அரசாங்கம், அதிகாரபூர்வமாக, நிச்சயமாக, அவர்களுடைய கல்விக்கு வாய்ப்பளிக்கும் என்றெல்லாம் உறுதி கூறினார்கள். மேலும், இந்த மாமன்றத்திலிருக்கிற சகோதரர் மாண்புமிகு உறுப்பினர் வி. வி. சுவாமிநாதன் கூட பத்திரிகைகளிலே ஒரு அறிக்கை வெளியிட்டார்கள், அரசாங்கம் அமைக்கப் போகிறது, நிச்சயமாக அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள் என்ற உறுதியை அளித்து. பத்திரிகையிலே பார்த்தேன், மிகச் சந்தோஷப்பட்டேன், அமைச்சரிடம் கேட்டேன், முதலமைச்சரிடம் கேட்டேன், ஒன்றும் நடைபெறவில்லை. ஏழை எளிய மக்கள், கல்வியற்ற மக்களுடைய சமுதாயத்தில் பிறந்த மக்கள், வழியில்லா நிலையில் விடப்பட்டார்கள். கடந்த 24 வருடங்களாக நான் அண்ணாமலை யூனிவர்சிட்டியில் மெம்பராக இருக்கிறேன். நான் இந்த பில்லை வரவேற்கின்ற காரணம் என்னவென்றால், நடக்கின்றவைகளிலே நல்லவை செய்கிறார்கள் என்ற மனத் திருப்தி இருந்தாலும், அதிகாரத்தில் உள்ளவர்கள், சென்னைப் பல்கலைக் கழகத்தில் 18 சதவீதம் உத்தியோகம் கொடுக்க வேண்டுமென்று இருந்தும், அங்கு அந்த மக்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அரசாங்கத் துக்கும் வழியில்லை அல்லது அவர்கள் தன்னிச்சையாக இருக்கலாம் என்று சொல்லலாம். இந்த அரசாங்க உத்தரவை அலட்சியம் செய்த அந்த ரிஜிஸ்டிரார் அல்லது அங்கே நிர்வாகப் பொறுப்பிலே இருக்கிறவர்கள் என்ன செய்தார்கள்? அந்த ரிஜிஸ்டிரார் வெஸ்டட் இன்ட்டரஸ்டால், இவர்களையெல்லாம் அமைச்சர் கவனிக்காமல் விட்டுவிட்டார்களா என்பதை எல்லாம் அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டு, இந்த பில்லை வரவேற்று முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

(பிற்பகல் 1.30)

திரு. இ. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற சென்னை, அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்ட திருத்த முன்வடிவின் மீது காந்தி-காமராஜ் காங்கிரஸ் கட்சியின் சார்பாக கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இங்கே பல்கலைக்கழகத்தில் உள்ள ஆலோசனைக் குழு, ஆட்சிக் குழு ஆகியவைகளில் தேர்தலில் போட்டியிட எல்லோருக்கும் சம வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு இந்த மசோதா கொண்டுவரப்பட்டாலும்கூட, ஜனநாயக முறைப்படி ஜனநாயக தேர்தலின் மூலம் போட்டியிட்டு வருவதைத் தடுப்பது

முறைக்கு மாறுபட்ட கருத்து என்பதை எடுத்துக் காட்டி, அந்தக் கருத்துக்களை மாண்புமிகு கல்வி அமைச்சர் மறு பரிசீலனை செய்யவேண்டும் என்ற கோரிக்கையினை வைக்க விரும்புகிறேன். மேலும் இங்கே எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு மாமன்ற உறுப்பினர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்திலே நடைபெற்ற பல்வேறு முறைகேடுகளைச் சுட்டிக்காட்டினார்கள், அதனையும் கருத்தில் கொண்டு நல்ல முடிவெடுக்க வேண்டும் என்று கேட்டு, இந்த மசோதாவை வரவேற்று முடிக்கிறேன், நன்றி.

*திரு. பி. முகமது இஸ்மாயில்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற மசோதாவுக்கு ஆதரவாக எடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற சிலவாதங்கள் தோற்றுவித்த சில சந்தேகங்களை இந்த மாமன்றத்தின் முன் வைக்க விரும்புகிறேன். சட்டத்திற்கு ஆதரவாகத் தரப்பட்டிருக்கின்ற விளக்கங்கள் பலருக்கும் பரவலாக சந்தர்ப்பம் அளிக்கவேண்டும்; பலகாலம் ஒரே பதவியில் நீடித்து இருக்கும்போது அது ஊழலுக்கு வழிகோலாக ஆகிவிடும், வெஸ்டட் இன்ட்ரஸ்ட் உருவாகிவிடும் என்ற வாதத்தை இங்கே எழுப்பியிருக்கிறார்கள். பல காலம் பதவியில் இருப்பது வெஸ்டட் இன்ட்ரஸ்ட் உருவாகிவிடும், ஊழலுக்கு இடம் தந்துவிடும் என்பது குற்றச்சாட்டாக இருந்தால், இந்த ஊழல் அல்லது வெஸ்டட் இன்ட்ரஸ்ட், 3 ஆண்டுகள் தந்து அதற்குப்பிறகு 6 ஆண்டுகளுக்குப் பிறகுதான் ஆரம்பிக்குமா என்று அரசாங்கம் எந்த அடிப்படையில் முடிவுக்கு வந்தது என்ற கேள்வியை எழுப்ப ஆசைப்படுகிறேன். பலகாலம் நீடித்திருப்பது ஊழலுக்கு ஊன்றுகோலாக இருக்கும் என்பது வாதமாக இருந்தால், ஏன் ஒரு டெர்மாக அதைக் குறைத்துவிடக்கூடாது. 3 ஆண்டுகள், அடுத்து 3 ஆண்டுகள் பதவி வகித்து அதற்குப் பின்னால்தான் ஊழல் புரிவார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இரண்டு முறை என்று நாம் வைத்திருக்கிறோம். ஏன் அதை ஓராண்டு வைத்து அதற்குள் முடித்துவிடக் கூடாது என்றால், ஒரு முறை என்று வைக்கலாம். ஒரு முறை என்றால் ஒவ்வொருவரும் செய்துகொண்டே போவார்கள் என்ற நிலை வந்துவிடும்.

திரு. பி. முகமது இஸ்மாயில்: தலைவர் அவர்களே, நான் சுருக்கமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அரசு தரப்பில் அதற்கு ஆதாரமாக எழுப்பிய வாதங்கள் ஏற்றுக் கொள்வதாக இல்லை என்பதற்காகத்தான் சொல்கிறேன். இன்னொன்றையும் சொன்னார்கள் பல காலம் பணியில் இருக்கிற காரணத்தால் தமது வாக்காளர்கள் மீது ஆதிக்கம் செலுத்துகின்ற நிலை ஏற்பட்டுவிடுகிறது என்று சொன்னார்கள். அது உண்மையாக இருந்தால் இங்கே இருக்கின்ற மேலவைக்குத் தேர்தல் நடைபெறுகிறது. பலர் எம்.எல்.சி. யாக வருகிறார்கள். அவர்களுக்கு வாக்களிக்கக் கூடியவர்கள் லிமிடெட் சர்க்கிளைச் சேர்ந்த



வாக்காளர்கள்தான். ஆசிரியர்கள் பிரதிநிதிகள் இங்கே வருகிறார்கள்; ஸ்தல ஸ்தாபன தொகுதி பிரதிநிதிகள் இங்கே வருகிறார்கள். அவர்களும் இதைப் போன்று ஆதிக்க சக்தியைப் பெறுகின்ற வாய்ப்பு ஏற்படுகிறது. அவர்களுடைய காலத்தைக் கட்டுப்படுத்துவதற்காக அரசு ஏதேனும் மசோதா கொண்டுவர உத்தேசித்திருக்கிறதா என்பதைக் கேட்க விரும்புகிறேன். இந்தச் சட்டம் கொண்டு வருவது மக்களுக்குக் கெடுதல். ஆற்றலும் அனுபவமும் பெறுவதும் அதன் காரணமாக ஏற்படுகின்ற நல்ல சீர்திருத்தங்களுக்கு இது முடக்கம் ஏற்படுத்துவதாகும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பலகாலமாக ஒரு பதவியில் இருக்கின்ற காரணத்தால் அனுபவம் பெறுகிறார். அனுபவத்தின் காரணமாக அறிவு முதிர்ச்சி பெறுகிறது. அந்த அறிவு முதிர்ச்சியின் காரணமாகத்தான் எல்லா நிறுவனங்களில் பலவிதமான சீர்திருத்தங்கள் தோன்றி இருக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. குறிப்பாக கல்வி அமைப்பு, சீர்திருத்தங்கள் பல வேண்டி நிற்கின்ற ஒரு அமைப்பு. அனுபவம் வாயிலாக ஏற்படுகின்ற வளர்ச்சி, அறிவு வளர்ச்சி, அத்தகைய சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு முன்மாதிரியாக இருக்கும். அந்த நிலையை மறுக்கின்ற வகையில் இந்தச் சட்டம் கொண்டு வந்திருக்கின்ற காரணத்தால் இதை ஜனதா கட்சி ஆதரிக்க முடியவில்லை என்று சொல்லி நான் அமைகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே அவை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு இருக்கிற பல்வேறு பல்கலைக்கழகங்களுடைய சட்டங்களைத் திருத்துகின்ற சட்டமுன்வடிவு மீது தங்களது கருத்துக்களைத் தெரிவித்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல்வேறு உறுப்பினர்கள் இங்கே பேசியிருந்தாலும், ஏறக்குறைய திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தவிர மற்ற கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் இந்த மசோதாவை ஆதரித்ததை நான் வரவேற்று, அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசிய உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திருத்த மசோதா கொண்டு வருவதற்கான காரணத்தை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்திற்காக ஒரு திருத்தத்தை நாம் கொண்டு வந்தபோது இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களும், மேலவையில் பேசிய உறுப்பினர்களும் அல்லது மத்திய அரசும், இதை ஒரு பல்கலைக் கழகத்திற்கு மட்டும் கொண்டு வருகிறீர்களே, மற்ற பல்கலைக் கழகங்களுக்கும் ஏன் கொண்டு வரக்கூடாது என்று கேள்வி கேட்ட போது, நாங்கள் அதற்கும் கொண்டு வருகிறோம் என்று

[திரு. செ. அரங்கநாயகம்] [1982 பிப்ரவரி 16

அப்போதே சொல்லி இருந்தேன். அது மட்டுமல்ல. மற்ற பல்கலைக் கழகங்களுக்கு நாங்கள் கொண்டு வரமாட்டோம் என்று கூட பலபேர் சொல்லிக்கொண்டு இருந்த நேரத்தில், இப்போது இந்த மசோதா கொண்டு வருகின்றபோது, அன்றைக்கு மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்திற்கு மட்டும் திருத்த மசோதா கொண்டு வருவது குறிப்பிட்ட ஒரு நபரின் மீது இருக்கும் விரோதத்தின் காரணமாக என்று குறிப்பிட்டு, நீங்கள் மற்ற பல்கலைக் கழகங்களுக்கு இதைக்கொண்டு வரமாட்டீர்கள் என்ற அடிப்படையில் விவாதங்களைப் பேசிய அருமை நண்பர்கள், இந்த மசோதா வருகின்ற நேரத்தில், நாங்கள் அப்படியில்லை என்று தெளிவாகத் தெரிந்து கொண்டு விட்டதால், நாங்கள் ஒருவரை மட்டும் மனதில் வைத்துக் கொண்டு ஒரு கொள்கையை உருவாக்கவில்லை என்று தெளிவாகப் புரிந்து கொண்டு விட்டதால், இந்த மசோதாவை வரவேற்று இருக்கவேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த மசோதாவின் மூலமாக குறிப்பிட்ட சில பேர் தொடர்ந்து ஒரு பொறுப்பை வகிப்பதன் மூலமாகப் பல்கலைக் கழகங்களில் தங்களது ஆதிக்கத்தை வளர்த்துக்கொள்கிறார்கள் என்ற ஒரு குற்றத்தின் மீது இங்கே கருத்துக்கள் பேசப்பட்டு இருக்கின்றன. இங்கே யார் வருகிறார்கள், யார் போகிறார்கள், யார் பாதிக்கப் படுகிறார்கள் என்ற அடிப்படையில் கருத்துக்களைப் பேசி யிருந்தாலும், பல்கலைக் கழகங்கள் இந்த 20—30 ஆண்டுகளில் எப்படி வளர்ந்து இருக்கின்றன, அது இந்தச் சமுதாயத்திற்கு என்ன செய்து கொண்டு இருக்கிறது என்பதை நாம் பார்ப்போ மானால், இதைவிட மிகவும் தீவிரமான பல்வேறு மாற்றங் களைச் செய்யவேண்டும் என்றுதான் மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கும். காரணம், பல்கலைக் கழகங்கள் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத் தினருக்கு மட்டுமே, அவர்களுடைய முன்னேற்றத்திற்கு மட்டுமே, அவர்களுடைய நலனுக்கு மட்டுமே இருக்கும் ஒரு நிலையில் வளர்க்கப்பட்டு இருக்கின்றன என்கிற கருத்தை நான் இங்கே வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தாழ்த்தப்பட்டவர்கள் எத்தனை பேர் அந்தப் பல்கலைக் கழகப் பதவிகளுக்கு வந்தார்கள் என்று பார்க்கிறபோது, நான் அந்தக் கணக்கை எடுத்துப் பார்க்கிறபோது, 1977-ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் எந்த ஒரு யூனிவர்சிடியிலும் ஓரிரண்டு பேர் வந்திருக்கிறார்கள். இப்போது மதிப்பிற்குரிய டாக்டர் சாந்தப்பா அவர்கள் இங்கே சென்னைப் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராக வந்திருக்கிறார்கள். இந்த நிலைமைகளைக் கவனிக்கிறபோது, என்னதான் சமுதாயத்தைப் பற்றி நம்மைப் போன்றவர்கள் அதிக அளவில் அக்கறை எடுத்து இங்கே பேசிக் கொண்டு இருந்தாலும் கூட, அங்கே உட்கார்ந்து இருக்கக் கூடியவர்களின் காதில், அவர்களுடைய உள்ளங்களில் இந்தக் கருத்துக்கள் போய்ச் சேருவது இல்லை என்பதைப் பார்க்கிறோம்.



1982 பிப்ரவரி 16] [திரு. செ. அரங்கநாயகம்]

மேலும், அந்தக் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள் தான் தொடர்ந்து அங்கே பதவியில் அமர்ந்து கொண்டு இருக் கிறார்கள். இதுபோன்ற நல்ல சமுதாய மாற்றத்திற்குத் தேவையான கருத்துக்களை அவர்கள் நிராகரிக்கின்ற நிலைமை இருக்குமானால், அவைகளைப் பற்றி எல்லாம் நாம் கவலைப் படாமல் இருக்க முடியாது. அது மட்டுமல்லாமல், சமுதாயத்தின் நலனுக்காக பல்கலைக் கழகங்கள் என்ன செய்கிறது என்பதை நாம் ஆராய்ந்து பார்க்கிறபோது, பல்கலைக் கழகங்கள் ஒரு கல்லூரியா என்று சந்தேகம் ஏற்படும் அளவிற்குப் பல்கலைக் கழகங்கள் வளர்ந்து வந்துவிட்டன. ஆகவே, அங்கே ஆராய்ச்சி நடைபெறவில்லை. இதுபோன்றவைகளைக் கூட அங்கே விவாத மாக்கி, இன்றைக்கு அதைப் பொதுப் பிரச்னையாக்கி, பல்வேறு கட்டங்களில் அதைப் பற்றிப் பேசக்கூடிய நிலைமையை நாம் இந்தச் சட்டமுன்வடிவின் மூலம் ஏற்படுத்தி இருக்கிறோம். அதை மாண்புமிகு உறுப்பினர்கள் கவனித்து தங்களுடைய கருத்துக்கள் ஆங்காங்கு பேசவேண்டும், கருத்துக்களை உருவாக்கவேண்டும், அபிப்பிராயங்களை உருவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கேயுள்ள ஒரு ப்ரொவிசோ பற்றி மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் எடுத்துச்சொன்னார்கள். ஏற்கனவே செனட்டில் ஒருவர் 3 வருஷம் இருந்து விட்டு, அதற்குப் பிறகு இரண்டாவதாக சின்டிகேட்டுக்கு வந்தால் அது ஒரு 3 வருஷம், இது ஒரு 3 வருஷம், 6 வருஷம் ஆகும். அதற்குப் பிறகு இன்னொரு அமைப்புக்கு அவர்கள் வரமுடியாது. ஆனால் முதல் தடவையிலேயே ஒருவர் வந்து விட்டால் சின்டிகேட் உறுப்பினர் என்ற முறையில் செனட் உறுப்பினர் ஆகும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, சின்டிகேட் உறுப்பினர் பதவி வந்த காரணத்தால் அதே சமயத்தில் சின்டிகேட் உறுப்பினர் பதவி வருகிறபோது அவருக்கு 3 பிளஸ் 3—6 என்று ஆகாது என்பதுதான் அந்தப் ப்ரொவிசோ. ஆகவே, அந்த விளக்கத்தைத்தான் நான் இதற்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 1.40)

மற்றபடி லைஃப் மெம்பர்ஸ் பற்றியெல்லாம் சொன்னார்கள். இப்போது நாம் கொண்டு வந்திருக்கிற இந்தக் கருத்துக்களின் அடிப்படையில் தேவையான மாறுதல்களை, இந்தச் சட்டத்தை மாற்றியமைக்கும்போது நிச்சயமாக நாம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளலாம். இப்போதே பரிசீலனை நடைபெற்றுக்கொண்டிருக் கிறது. ஏதோ இவர்களை மாத்திரம் தடுத்து நிறுத்திவிட்டு இன்னொரு வகையிலே அதைப்போலவே வளர்க்கின்ற முடிவு தவறானது. அந்தத் தவறை நாங்கள் நிச்சயமாகச் செய்ய மாட்டோம்.

சென்னை ரெஜிஸ்டிரார் பற்றிச் சொன்னார்கள். நாம் அப்போதும் விசாரித்தோம். விசாரித்ததில் அந்த அளவுக்குக் குற்றம் இல்லை என்ற கருத்து வந்த காரணத்தால் அவர் வைக்கப்பட்டிருக்கிறாரே அல்லாமல் குற்றம் செய்கின்றவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று நானும் இல்லை, இந்த அரசும் இல்லை. குற்றம் யார் செய்திருந்தாலும் அதை விசாரிக்க வேண்டியது அவசியம்; அந்த வாய்ப்பை இந்த அரசு நிச்சயம் ஏற்படுத்தும். ஆக, இந்தக் குற்றச்சாட்டைப் பொறுத்த வரையில்கூட அரசு என்ன முடிவு செய்திருக்கிறது என்றால் இலஞ்ச ஒழிப்புத் துறைக்கு அனுப்பி பரிசீலிக்கனாமா என்பதை நாங்கள் இப்போது பரிசிலனை செய்து கொண்டிருக்கிறோம். பொறுப்புள்ள ஒரு உறுப்பினர் சொல்லும்போது அதை நாம் ஏற்றுக்கொள்ளாமல் அவருக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்ற நிலையில் நாங்கள் இல்லை என்று சொல்லுகிற அதே நேரத்தில் இப்போது அரசு ஏற்றுக்கொண்டிருக்கிற கொள்கையின்படி இனிமேல் எந்தப் பல்கலைக் கழகத்திற்கும் பதிவாளராக வரக்கூடியவர் பேராசிரியராக இருக்க வேண்டும் அல்லது பிரின்சிபாலாக இருக்க வேண்டும்; அதன் பிறகு மூன்று ஆண்டுக் காலத்திற்குமேல் ஒருவர் பதிவாளராக இருக்கக்கூடாது என்ற அடிப்படையிலேதான் இப்போது நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம். இப்போது பாரதியார் பல்கலைக் கழகத்திற்கும், பாரதிதாசன் பல்கலைக் கழகத்திற்கும்கூட அந்த அடிப்படையில்தான் பதிவாளரை நாம் போட்டிருக்கிறோம். தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கும் அந்த அடிப்படையில்தான் போட்டிருக்கிறோம். ஆக இனி வருகிற காலகட்டத்தில் பதிவாளரை நியமிக்கும்போது பேராசிரியர் அல்லது பிரின்சிபால் பொறுப்பில் இருக்கிறவர்களைத்தான் போடுவோம். அவர்களும் மூன்று ஆண்டுகளுக்குமேல் பதவியில் இருக்கக்கூடாது என்பதை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். காரணம், வைஸ்—சான்ஸலருக்கே மூன்று ஆண்டுகள்தான் என்று சொல்லும்போது பதிவாளராக வருகிறவர் மூன்று ஆண்டுகளுக்குமேல் இருக்கலாம் என்று சொன்னால் அதிலே சங்கடம் ஏற்படும். இங்கே மட்டுமல்ல; வேறு பல்கலைக் கழகங்களிலும் இந்தக் கருத்தைத்தான் கொண்டிருக்கிறோம்.

பதிவாளராக யார் வந்தாலும் சரி, அவர் 3 ஆண்டுக் காலம் அந்தப் பதவியிலே இருப்பார்; 3 ஆண்டுக் காலத்திற்குப் பின்னால் அவர் பழைய பதவிக்கே போக வேண்டும். அந்த முடிவைத்தான் இப்போது நாம் ஏற்றிருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகள் மதிக்கப்பட்டு, ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பற்றி மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அங்கே இருக்கிறவர்கள் எல்லாம் படிக்க



வேண்டும் என்ற விருப்பம்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் இருக்கிறது; இந்த அரசுக்கும் இருக்கிறது. ஆனால் ஒரு பல்கலைக் கழகம் 'அண்டர் கிராஜுவேட் கோர்ஸ்' நடத்தக் கூடாது என்று திட்டவட்டமாக இருக்கிறது. பி.ஏ., பி.எஸ்ஸி. பட்டப் படிப்பு வகுப்புகளைப் பல்கலைக் கழகத்தில் வைப்பதன் மூலம் அது ஒரு கல்லூரி ஆகி, அது பல்கலைக்கழகமாகச் செயல்பட முடியாது என்ற ஒரு சூழ்நிலை ஏற்படும். அந்த மக்கள் படிக்க வேண்டும், அதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யலாம். இந்த மாணவர்களுக்கு இடம் இல்லை என்பதை இரண்டாவதாக வைத்து, சமுதாய நலனுக்கு அந்தப் பல்கலைக்கழகம் பயன்பட வேண்டும் என்பதை முதலாவதாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடம் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் சுவாமிநாதன் அவர்களும் சில முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் சுவாமிநாதன் அவர்களும் அந்த நிலத்தைத் தந்து, உறுதியான, இறுதியான ஒரு ப்ரொப்போசலையும் தந்தால் வருகிற ஜூன், ஜூலை மாதத்திற்குள் அங்கே அவர்கள் சொன்னமாதிரி இந்தக் கல்லூரியைத் திறப்பதில் எந்த விதமான தடையும் இல்லை. சிதம்பரத்திலே ஆண்களுக்கு ஒரு கல்லூரி, பெண்களுக்கு ஒரு கல்லூரி வேண்டும் என்பதில் இந்த அரசுக்குக் கருத்து மாறுபாடு இல்லை; அதை அரசு ஏற்றுக் கொள்கிறது. ஆகவே, இதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் மேற்கொண்டும் நல்ல ஒத்துழைப்பு தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். அதற்காக அவர்களுக்கெல்லாம் நன்றி கூறி, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. துரை முருகன் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"1982 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக, அண்ணாமலைப் பல்கலைக் கழக, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 முதல் 14 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, 1982 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழக, அண்ணாமலைப் பல்கலைக் கழக, பேரறிஞர் அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1982) நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(6) அறிவிப்பு.

தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

1982 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

(5) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே! நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1982 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 9/1982, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, விவாதத்தை நாளை வைத்துக் கொள்ளலாம்; பலரும் பேசவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ் பல்கலைக் கழகம் என்பதால் எல்லோரும் அனேகமாக ஏற்றுக்கொள்வார்கள் என்பதற்காகத்தான் இப்போதே முடித்து விடலாம் என்று எண்ணினேன்.

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, எல்லோரும் ஏற்றுக் கொண்டாலும் இது குறித்துக் கருத்துக்களைச் சொல்ல வேண்டி இருப்பதால் நாளை எடுத்துக் கொள்ளவேண்டும்.

*1982 பிப்ரவரி 11-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



திரு. என். சங்கரய்யா: தலைவரவர்களே, உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களைச் சொல்லவேண்டியிருக்கிறது. ஆகவே இதை இப்போது எடுத்துக்கொள்ளாமல் நாளைக்கு எடுத்துக் கொள்வதுதான் நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை (17-2-1982) காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-48 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(7) பேரவை முன்வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.
—எதுவுமில்லை—

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

23. 1982 ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டக் கோவைக் குற்றவியல் நடைமுறை விதிக்கோவை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 3/1982).

24. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 4/1982).

25. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன் வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 5/1982).

26. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 6/1982).

## இணைப்பு I

[125-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 188-க்கான விடையைக் காண்க].

### விவர அறிக்கை.

சணல் மற்றும் புளிச்சை சாகுபடி பற்றிய சோதனைகள் 1979-ம் ஆண்டு ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்திலும், கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையத்திலும் மேற்கொள்ளப் பட்டன.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகமும் கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையத்தில் சணல் மற்றும் புளிச்சை சாகுபடி பற்றிய சோதனைகள் மேற்கொண்டது.

**ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கொண்ட பரிசோதனைகள் பற்றிய விவரங்கள்:**

1979-ம் ஆண்டு சணல் பயிர் மற்றும் புளிச்சை பயிர் சாகுபடி பற்றி பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. சணல் பயிரில் ஜே.ஆர்.சி. 212 ரகமும், புளிச்சை பயிரில் எச்.சி. 583 ரகமும் பரிசோதனை செய்யப்பட்டன. இவ்விரு பயிர்களும் 1979-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் விதைக்கப்பட்டு 65 நாட்களில் அறுவடைக்கு வந்தன. சணல் ஹெக்டேருக்கு 26.4 டன்கள் செடிகளும் (ஈர செடிகள் எடையளவு) புளிச்சை பயிரில் 23.3 டன்கள் செடிகளும் (ஈர செடிகள் எடையளவு) கிடைத்தது. இதிலிருந்து கிடைத்த நாரின் அளவு சணல் பயிரில் 333 கிலோவாகவும் புளிச்சை பயிரில் 463 கிலோவாகவும் இருந்தது.

**கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கொண்ட பரிசோதனைகள் பற்றிய விவரங்கள்:**

இந்த நிலையத்திலும் சணல் பயிர் மற்றும் புளிச்சை பயிர் சாகுபடி பற்றிய சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. சணல் பயிரில் ஜே.ஆர்.சி. 212 ரகமும் புளிச்சை பயிரில் எச்.சி 583. ரகமும் சோதனை செய்யப்பட்டன. 1979-ம் ஆண்டு மே மாதம் விதைக்கப்பட்டு 120 நாட்கள் அளவில் அறுவடைக்கு வந்தது.

சணல் பயிரில் ஹெக்டேர் ஒன்றுக்கு 27.2 டன்கள் செடிகளும் (ஈர செடிகள் எடையளவு), புளிச்சை பயிரில் ஹெக்டேர் ஒன்றுக்கு 30.97 டன்கள் (ஈர செடிகள் எடையளவு) செடிகளும் கிடைத்தது. இதிலிருந்து கிடைத்த நாரின் அளவு சணல் பயிரில் 1.475 டன்களாகவும் புளிச்சை பயிரில் 1.142 டன்களாகவும் இருந்தது.

இது தவிர தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகமும் கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையத்தில் சோதனைகளை மேற் கொண்டது. இச்சோதனைகள் மூலம் பிப்ரவரி, மார்ச் மாதத்தில் விதைத்தால் உற்பத்தி 50 டன்வரை (ஈரச் செடிகள் எடையளவு) கிடைக்கும் எனவும், ஏப்ரல், மே மாதங்களில் விதைத்தால் உற்பத்தி 30 முதல் 35 டன்கள் அளவிற்குக் குறைந்து



விடுகிறது எனவும் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, உற்பத்தி விதைக்கும் பருவ காலத்திற்கு ஏற்ப மாறுபடுகிறது. நிகர லாபம் எந்தப் பருவ காலத்தில் பயிரிடப்படுகிறது என்பதைப் பொறுத்தும், சாகுபடி முறைகளைக் கையாள்வதைப் பொறுத்தும் ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ 62.50 முதல் ரூ. 625/-வரை கிடைக் கிறது. வணிக ரீதியில் பயிரிடுவது, செடிகளைப் பதப்படுத்தி நார் உரிப்பதற்குத் தேவையான நீர்வசதிகளை பொறுத்து இருக்கிறது. இந்தப் பயிர்கள் கோடை காலத்தில் அறுவடைக்கு வருவதால் அந்தசமய நீர் வசதிகள் நமது மாநிலத்தில் தேவையான அளவு இல்லை. எனவே வணிக ரீதியில் இப்பயிர்களைப பயிரிடுவதற் கான சாத்தியக் கூறுகள் மிகக் குறைந்த அளவே தற்போது உள்ளது.

## இணைப்பு II.

[—21ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 190-க்கான விடையைக் காண்க].

### விவர அறிக்கை.

1981-82 ஆம் ஆண்டில் நெல் உற்பத்தியைப் பெருக்குவதற் காகக் கையாளப்படும் வழிமுறைகள் பின்வருமாறு:—

1. இரக மாற்றம்.

(அ) 20.60 லட்சம் ஹெக்டேர்களில் ஐ.ஆர். வகை இரகங் களைப் பயிரிடுதல், மேலும் 2.60 லட்சம் ஹெக்டேர்களில் உயர் விளைச்சல் இரகங்களைப் பயிரிடுதல்.

(ஆ) சம்பா பட்டத்தில் உயர் விளைச்சல் இரகங்களின் உபயோகத்தைப் பிரபலப்படுத்துதலும், எல்லா மாவட்டங் களிலும் பயிரிடும் பரப்பை அதிகரிக்கத் தீவிர முயற்சி மேற் கொள்ளுதலும்.

(இ) ஏடிடீ, 23, ஏடிடீ, 34: ஏடிடீ, 35, ஐ ஆர். 34, என். எல். ஆர். 9672, ஏ.எஸ்.டி. 15 மற்றும் ஏடிடீ. 36 ஆகிய புதிதாக வெளியிடப்பட்டுள்ள உயர் விளைச்சல் இரகங்களை அறிமுகப்படுத்துதல்.

(ஈ) 9,500 டன்கள் சான்றிதழ் பெற்ற விதைகளை விநியோகித்தல்.

2. உர உபயோகம்.

ஒரு ஹெக்டேருக்கு உர உபயோகத்தை 85 கிலோ தழைச் சத்தாகவும், 36 கிலோ மணிச்சத்தாகவும், 36 கிலோ சாம்பல் சத்தாகவும் அதிகரித்தல்.

நிர்வாக நடைமுறைகள்:

1. விதை நேர்த்தி செய்தல்.

2. ''பாய் நாற்றங்கால்'' முறையைக் கடைப்பிடித்தல்.

3. நீலப் பச்சைப் பாசியை உபயோகித்து உரமிடுதல்.

4. துத்தநாக உப்பை உபயோகித்தல்.

5. உரிய இடத்தில் உரமிடுதல்.

6. உரிய இடத்தில் ''பூச்சிக் கொல்லி மருந்துக் குருணைகளை'' இடுதல்.

7. உரமிடவும், பூச்சிக்கொல்லி மருந்துகளை இடவும் ''உரமிடும் கருவியை'' (Gravitor Applicator) உபயோகிப்பதைப் பிரபலப்படுத்துதல்.

3. பயிர்ப் பாதுகாப்பு:

1. விதை நேர்த்தி செய்தல்.

2. நாற்றுக்களின் வேர் பாகங்களைப் பூச்சிக்கொல்லி மருந்து திரவத்தில் தோய்த்து எடுத்தல்.

3. ''புகையான்'' அதிசமாகத் தாக்கியுள்ள இடங்களில் அதிகக் கவனம் செலுத்தி ''புகையானை''க் கட்டுப்படுத்துதல்.

4. எலி ஒழிப்பு செய்தல்.

4. பெருமளவில் விவசாயிகளிடம் தொடர்பு கொள்ளுதல்.

பயிற்சி மற்றும் பார்வை முறையை (Training and Visit System) ஏழு மாவட்டங்களில் அறிமுகப்படுத்துதல், மற்றும் ஒரு ஏக்கர் ''ஒருங்கிணைப்பு விளக்கப் பண்ணைகளை (One acre composite demonstration) ஏற்படுத்துதல்'' பயிற்சி மற்றும் பார்வை முறை அறிமுகப்படுத்தப்படாத இடங்களில் பெருவிளக்கப் பண்ணைகளை ஏற்படுத்துதல்.



5. பயிற்சி:

எல்லா விரிவாக்கப் பணியாளர்களுக்கும், ''காரீப்'' மற்றும் ''ராபி'' பட்டங்கள் ஆரம்பமாகுமுன், ''முன்பருவ பயிற்சி'' அளித்தல் உழவர் பயிற்சி மையங்களின் மூலம் விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல்.

Y211.31 'N82
N83-29523
122223